கணக்காய்வாளர் தலைமை அதிபதியின்

ஆண்டறிக்கை

2017

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகபூர்வச் சின்னம்

இந்த உத்தியோகபூர்வச் சின்னத்திற்காக பயன்படுத்திய குறியீடுகளிலிருந்து பின்வரும் அர்த்தங்கள் நிருபனமாகின்றன.

- சின்னத்தில் மேலே காட்டப்பட்டுள்ள சிங்கத்தின் மூலம் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது
- அதன் நடுவிலுள்ள தராசு மூலம் சுகந்திரமும் பக்கச்சார்பற்ற தன்மையையும் பிரதிபலிக்கின்றது.
- அதனைச் சுற்றியுள்ள இரண்டு ஒலிவ் கிளை சமாதானத்தையும் சௌபாக்கியத்தையும் பிரதிபலிக்கின்றது.
- அதனைச் சுற்றியுள்ள தாவர இலை மூலம் தேசிய கலாச்சாரம் பிரதிபலிக்கின்றது.

எமது தூர நோக்கு

இலங்கை பிரசைகளின் நலனுக்காக பொதுக் கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகையை நோக்காகக் கொண்டு பொதுத் துறையின் வழிகாட்டியாக இருத்தல்.

எமது செயற்பணி

நிலைபேறான அபிவிருத்தியை பேணுவதற்காக சிறந்த நிதி முகாமைத்துவத்தினையும் உத்தம பொது வளப் பயன்பாட்டினையும் உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வில் ஈடுபடுவதன் மூலம் நல்லாளுகையையும் பொதுக் கணக்களிப் பொறுப்பையும் மேம்படுத்தல்

எமது குறிக்கோள்கள்

1. வளங்களை தம்வசம் வைத்துள்ள நிறுவனங்களின் முகாமைத்துவங்கள் அவர்களுக்குள்ள பொதுக கணக்களிப்பொறுப்பினை உறுதிப்படுத்தி பாராளுமன்றத்திற்கு அறிவிக்கின்றனவா என்பது தொடர்பில சுயாதீன பரிசோதனையொன்றை மேற்கொள்தல்

2. பொதுத்துறை நிறுவனங்களின் செயலாற்றலை பரிசோதிப்பதற்காக பொதுக் கணக்குகள் குழு (COPA) மற்றும் பொது முயற்சிகள் குழு (COPE) ஆகிய இரண்டு பாராளுமன்ற கண்காணிப்புக குழுக்களிற்கும் உதவுதல

3. முகாமைத்துவ அறிக்கைளினூடாக பரிந்துரைகளை வழங்குவதன் மூலம் அவர்களது கணக்களிப்பொறுப்பினை முன்னேற்றிக் கொள்வதற்கு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களிற்கு உதவுதல்

எமது விழுமியங்கள்

மேன்மை
புத்தாக்கம்
தலைமைத்துவம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் செய்தி

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு உரித்தாகவுள்ள பொது நிதி மீதான பாராளுமன்றக் கட்டுப்பாட்டினை பயனுள்ளதாகவும் வினைத்திறனாகவும் பேணிவருவதற்காக சுதந்திரமான பரிசோதனையினை நடாத்துதல் மற்றும் அது தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் என்பன அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான பணியாக உள்ளது. இப் பணியினை நிறைவேற்றுவதுடன் சம்பந்தப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்கான எனது அறிக்கையினை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன். பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற எனது அறிக்கைகளின் ஏழாவது தொகுதியாக இந்த ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்படுவதுடன் ஏனைய அறிக்கைகளை பின்வரும் ஏழு தொகுதிகளின் கீழ் வெவ்வேறாக சமர்ப்பிப்பதற்கான ஒழுங்குகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன.

முதலாம் தொகுதி	-	அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள்
இரண்டாம் தொகுதி	-	அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள், சபைகள் மற்றும் நியதிச்சட்ட நிதியங்கள்
மூன்றாம் தொகுதி	-	நியதிச்சட்டமற்ற நிதியங்கள்
நான்காம் தொகுதி	-	வெளிநாட்டு உதவியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்
ஐந்தாம் தொகுதி	-	மாகாண சபைகள்
ஆறாம் தொகுதி	-	உள்ளூராட்சி அதிகாரசபைகள்
எட்டாம் தொகுதி	-	விசேட கணக்காய்வு அறிக்கைகள்
ஒன்பதாம் தொகுதி	-	அரச கம்பனிகள்

அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டத்தினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அதனது பதவியணியினருக்கும் கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டு அவரது சுதந்திரத்தினை செயற்பாட்டுப் பரப்புகளில் மாத்திரமன்றி நிதி மற்றும் நிர்வாகத்திலும் பாதுகாக்க வேண்டும் என்பது அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட கணக்காய்வுச் சேவைகள் ஆணைக்குழு 2015 திசெம்பர் மாதத்தில் தாபிக்கப்பட்டது. இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையிலுள்ள பதவியணியினரின் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் மற்றும் பதவி நீக்கங்கள் இந்த ஆணைக்குழுவினால் இடம்பெற வேண்டியிருந்தது. இருப்பினும், தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படுவதற்காக

சமர்ப்பிக்கப்பட்டிராமை காரணமாக இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையினை தாபிக்க முடியாத நிலையேற்பட்டுள்ளது. ஆகையால் இலங்கை கணக்காய்வுச் சேவையினதும் கணக்காய்வுப் பரீட்சகர் சேவையினதும் நடவடிக்கைள் தொடர்ந்தும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இலங்கை கணக்காய்வுச் சேவையின் உறுப்பினர்களாலும் கணக்காய்வுப் பரீட்சகர் சேவையிலுள்ள உறுப்பினர்களாலும் நிறைவேற்றப்பட்ட சேவைகளின் பெறுமதியான பங்களிப்பு அமைச்சரவையால் இனங்கண்டு கொள்ளப்பட்டுள்ளமை மற்றும் இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவை என்ற பெயரில் புதிய சேவையொன்றை தாபிப்பதற்கும் புதிய இணைந்த சேவைக்கு மேற்குறித்த இரண்டு சேவையினைதும் உத்தியோகத்தர்களை உள்ளீர்ப்பதற்கும் அங்கீகாரம் வழங்கியிருந்தமை என்பன கணக்காய்வு சேவை ஆணைக்குழு அடைந்து கொண்ட பாரிய வெற்றிகளாகும். அரசாங்கத்தால் அல்லது கூட்டுத்தாபனமொன்றால் அல்லது உள்ளூராட்சி மன்றமொன்றால் 50 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட பங்குமூலதனத்துடன் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடயப் பரப்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளமை ஏனைய பிரதான மாற்றமாகும்.

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டிருந்த கணக்காய்வு சட்டமூலம் சட்டமா அதிபர், சட்ட வரையுனர் மற்றும் பல்வேறு துறைகளிலுள்ள ஏனைய உயர்தொழிலாளர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட தேசிய கணக்காய்வுச் சட்டம் 2018 யூலை 17 ஆந் திகதி 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் என்ற பெயரில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதுடன் அதிமேதகு ஜனாதிபதியினால் 2018 ஆகஸட் 01 ஆந் திகதியிலிருந்தே சட்டம் செல்லுபடியாகும் வகையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலால் பிரசித்தப்படுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் அதிகாரம் கடமை தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காகவும், தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் இலங்கை அரச கணக்காய்வு சேவையை தாபிப்பதற்கும் அரச நிதி தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமையை திட்டவட்டமாக்குவதற்கும் அது மற்றும் தொடர்புடைய அதற்கு அணுசரனையான விடயங்களுக்காக ஏற்பாடுகளை செய்வதும் அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு உயர்தொழில் புரிவோரிடமிருந்து ஏற்படுகின்ற அழுத்தங்கள் அடங்கலாக சூழலில் மேற்குறித்த சவால்களை எதிர்கொண்டு நிலையாக மாறுகின்ற சூழலில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தை ஸ்தாபிப்பது மிகவும் முக்கியம் வாயந்த ஒன்றாகும். நெருக்கமான கண்காணிப்பை உறுதிப்படுத்தி மீளாய்வு செய்வதற்கும் கணக்காய்வின் நோக்கெல்லையை விரிவாக்குவதற்கும் ஏற்ற வகையில் 59 பிரிவுகளின் கீழ் கணக்காய்வு மற்றும் உதவியாளர் சேவைகளை ஒழுங்கமைத்து நிறுவனக் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

முக்கியமான விடயங்களையும் அவ்வாறே பொதுத் துறை எதிர்நோக்கியுள்ள பிரதான சிக்கல்களையும் திணைக்களம் சிறப்பாக புரிந்துகொண்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்காக தேசிய கணக்காய்வு அலுவலகம் பல்வேறு செயற்பாடுகளை அமுல்படுத்தியுள்ளது.

கணக்காய்வு அறிக்கைகளை வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் வழங்குவதற்காக திணைக்களத்தின் செயற்திறனை தொடர்ச்சியாக அதிகரிப்பதிலும் மீளாய்வு செய்வதிலும் கணக்காய்வு அலுவலகம் ஈடுபட்டுள்ளது. இறுதியாக அரசியலமைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வுச் சுதந்திரம் திணைக்களத்தின் வினைத்திறனில் முக்கியத்துவம் வாய்ந்த காரணி என்பது தெளிவாக இனங்காணப்பட்டுள்ளது.

கணக்காய்வுத் திணைக்களத்தின் கடமைக்காக தம்மை அர்ப்பணித்துள்ள பதவியணியொன்றுடன் வேலை செய்தல் எனக்கு கிடைத்த கௌரவமாக உள்ளதுடன் அவர்களது கடமைகளை வினைத்திறனாக செயலாற்றலுடன் நிறைவேற்றுவதற்கு அவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமைக்காக எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன், பொது முயற்சிகள் குழுவினதும் பொதுக் கணக்குகள் குழுவினதும் தலைவர்கள் மற்றும் அதன் அங்கத்தவர்கள், துணையாக நின்று கணக்காய்வுப் பணிகளில் ஈடுபட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனங்கள், இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம், கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்கள், திணைக்களத்தின் நிர்வாக நடவடிக்கைகளிற்கு உதவியாக இருந்த சனாதிபதியின் செயலாளர் அடங்கலான சனாதிபதி செயலகத்தின் பதவியணியினர், நிதி அமைச்சின் செயலாளர் அடங்கலான பதவியணியினர், அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, சம்பளங்கள் மற்றும் ஊழியர்கோப்பு ஆணைக்குழு உள்ளிட்ட நிர்வாகத்திற்கு உதவிபுரிந்த ஏனைய அரசாங்க நிறுவனங்கள் ஆகியவற்றிற்கும் திணைக்களத்தின் பௌதீக மற்றும் மனித வள மேம்பாட்டிற்கு பங்களித்த சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாராளுமன்றத்தினதும் பொது மக்களினதும் தேவைகளிற்கு அமைவாக எனது கணக்காய்வுகள் காணப்படுவதனை உறுதிப்படுத்துவதில் நான் மிக்க ஆர்வத்துடன் செயற்படுகின்றேன்.

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2018 ஒக்தோபர்

உள்ளடக்கம்

	புக்கம்		புக்கம்
எமது ஒழுங்கமைப்பு	01	தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள்	175
சட்டரீதியான நிறைவேற்றுதல்கள்	04		
எமது நிறுவனக் கட்டமைப்பு	15	மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல	182
பதவியணியினர் பயிற்சி	19		
தகுதியுள்ள கணக்காய்வாளர்களை சேவையில் ஈடுபடுத்துதல்	23	வெளிநாட்டு அலுவல்கள்	185
பாராளுமன்றத்திற்கு உதவுதல்	24	வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்	187
கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விதிக்கப்படும் மிகை அறவீடு	26	கடற்றொழில் மற்றும் நீரியயல் வளங்கள் அபிவிருத்தி	195
கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்பபடும் செயலாற்றல் கணக்காய்வு	27	சுகாதாரமும் போசாக்கும்	201
புலனாய்வு கணக்காய்வு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவம் தொடர்பான கணக்காய்வு	37	பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் வெகுசன ஊடகம்	214
வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள்	55		
2017 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கை	68	சட்டம், சமாதானம் மற்றும் தென் மாகாண அபிவிருத்தி	219
கிங் நில்வளா திசை திருப்புதல் செயற்திட்டம் மீதான விசேட கணக்காய்வு அறிக்கை	69	துறைமுகம் மற்றும் கப்பற்துறை அலுவல்கள்	225
		நெடுஞ்சாலைகள	236
விலத்திக்குளம் சரணாலயம் தவறாகப் பயன்படுத்தப்படுவது தொடர்பாக மீதான விசேட கணக்காய்வு அறிக்கை	73	திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி	240
2016 ஆம் ஆண்டில் தேசிய லொத்தர் சபைக்கு கணனியின் ஊடான சீட்டிழுப்புக்களிற்காக லொத்தர் சீட்டுக்களை அச்சிட்டு கையளித்தல் சம்பந்தமான கொள்வனவுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கை.		அனர்த்த முகாமைத்துவம	245
		விளையாட்டு அலுவல்கள்	252
		மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு	256
		சுற்றுலாத்துறை அலுவல்கள்	261
		நகர அபிவிருத்தி	265
துறைரீதியாக கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு	84	கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள	
		வீடமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள்	282
திரட்டு நிதியம்	85	போக்குவரத்து	287
அரசாங்க பாதுகாப்பு	107	சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்பல்	294
அரசாங்க முயற்சிகள்	113		

உள்ளூராட்சி	121	விஞ்ஞான தொழில்நுட்பமும் ஆராய்ச்சிகளும்	297
வெளிநாட்டு நிதி உதவிச் செயற்திட்டங்கள்	126		
வங்கித்துறை	132	தொடர்பாடல்	302
பெருந்தோட்டக் கைத்தொழில்	151	உயர் கல்வி	305
காணி அலுவல்கள்	163	மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி	311
கல்வி	169	பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி	315
கிராமிய பொருளாதார அலுவல்கள்	323	மேல் மாகாண சபை	361
நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல்	329	மத்திய மாகாண சபை	363
நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள்	335	தென் மாகாண சபை	367
வனசீவராசிகள் பாதுகாப்பு	339	வட மாகாண சபை	371
மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி	345	வடமேல் மாகாண சபை	373
விவசாயம்	348	வடமத்திய மாகாண சபை	378
அரசாங்க சேவைகளிற்கான ஓய்வூதிய நலன்	355	ஊவா மாகாண சபை	382
மாகாண சபைகளுக்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள்	358	சப்ரகமுவ மாகாண சபை	387
மாகாண சபைகளால் சேகரிக்கப்பட்ட வருமானமும் செலவீனமும்	359	கிழக்கு மாகாண சபை	392

எமது ஒழுங்கமைப்பு

எமது வரலாறு

முன்னர் சிலோன் என அழைக்கப்பட்ட இலங்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் ஆரம்பத்தினை பிரித்தானியர் காலத்தின் ஆரம்பப்பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். 1776 இல் தீவினை கைப்பற்றி 3 ஆண்டுகளுக்கு பின்னர் அதாவது 1779 ஆம் ஆண்டின் போது ஆரம்ப பகுதியில் சிசில் ஸ்மித் என்பவர் கணக்காளர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக இருந்துள்ளமை ஆவணங்களின் மூலம் தெரியவந்துள்ளது. அன்று முதல் இலங்கையின் உயர் கணக்காய்வு நிறுவனமாக 40 கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளின் கீழ் சுதந்திர நிறுவனமொன்றாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் தொழிற்பட்டு வருகின்றது. தலைமை அதிபதி திணைக்களம், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 29 ஆவது பிரிவின் பிரகாரம் 2018 ஆக்ஸ்ட் 01 ஆந் திகதி முதல் தேசிய கணக்காய்வு அலுவலகமாக ஸ்தாபிக்கப்பட்டது.

கணக்காய்விற்காக எமக்குள்ள அதிகாரம்

இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையிலிருந்து பொதுத்துறை நிறுவனங்களின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கான அதிகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கு முதன்மையாக கிடைத்துள்ளது. அது 2018 ஆக்ஸ்ட் 01 ஆந் திகதி முதல் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் ஏற்பாடுகளில் மிகவும் விரிவாக உள்ளது.

கம்பனியொன்றின் பங்குகளில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை அரசாங்கம் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி மன்றமொன்று கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட வைத்திருக்குமாயின் அக் கம்பனிகளையும் உள்ளடக்கிய வகையில் இந்த அதிகாரம் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் கீழ் மேலும் விரிவுபடுத்தப்பட்டு கீழுள்ளவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

“கணக்காய்வாளர் தலைமை அதிபதி அரசாங்கத்தின் எல்லாத் திணைக்களங்கள், சனாதிபதிக்கான செயலாளர் அலுவலகம், பிரதம அமைச்சரின் செயலாளர் அலுவலகம், அமைச்சரவையின் அலுவலகங்கள், நீதித்துறைச் சேவை ஆணைக்குழு, அரசியலமைப்புப் பேரவை, 41 (ஆ) என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக்குழுக்கள், நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர், பாராளுமன்ற செயலாளர் நாயகம், உள்ளூராட்சி அதிகார சபைகள், பொதுக் கூட்டுத்தாபனங்கள், ஏதாவது ஏழுத்துமூல சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தொழில் மற்றும் வேறு பொறுப்பு முயற்சிகளும் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் அல்லது பதிவு செய்யப்பட்டதுமாக கருதப்பட்டுள்ள எந்தக் கம்பனிகளில் ஐம்பது சதவீதமான அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை அரசாங்கம் அல்லது பொதுக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி அதிகாரசபை வைத்திருக்கின்றதோ அக் கம்பனிகள் எவற்றையும் அவற்றின் கணக்குகளையும் கணக்காய்வு செய்தல் வேண்டும்.”

அரசியலமைப்பினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பொறுப்பளிக்கப் பட்டுள்ள அதிகாரம் கீழே காட்டப்பட்டுள்ள சட்ட விதிகளில் மேலும் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

- அரச கூட்டுத்தாபனங்களிற்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பகுதி II
- மாகாண சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்கும் 1987 இன் 42 ஆம் இலக்க

- மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23 ஆம் பிரிவு
- மாநகர சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்கும் மாநகர சபைகள் கட்டளைச்சட்டம் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு
- நகர சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்பாடுகளை வழங்கும் நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181 ஆம் பிரிவு
- பிரதேச சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்கும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 ஆம் பிரிவு
- கமநல அபிவிருத்திச் சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்பாடுகளை வழங்கும் 2000 இன் 46 ஆம் இலக்க கமத்தொழில் அபிவிருத்திச் சபைகள் அதிகாரச் சட்டத்தின் 58 ஆம் பிரிவு
- விளையாட்டுச் சங்கங்களைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்பாடுகளை வழங்கும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுச் சங்கங்கள் அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவு

தேவைப்படுமிடத்து பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வேறு எவையேனும் கடமைகளையும் புரிவதற்கு அரசியலமைப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் வழங்குகின்றது. தனது செயற்பாடுகளையும் கடமைகளையும் புரிகையில் தமது கடமையில் உதவி செய்வதற்கு தகைமை பெற்ற கணக்காய்வாளர்களை ஈடுபடுத்துவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அரசியலமைப்பு அதிகாரம் வழங்கியுள்ளது. அத்துடன் கணக்காய்வு தொடர்பான ஏனைய தொழில்நுட்ப, தொழில்சார், விஞ்ஞான ரீதியான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு விசேட நிபுணர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 154(5) ஆம் உறுப்புரையானது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது அவரின் கடமைகளை மேற்கொள்ளும் போதும் கையளிக்கும் போதும் சகல புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளையும் மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் அல்லது பொதுத் துறை நிறுவனங்களின் களஞ்சியங்கள் மற்றும் எனைய சொத்துக்கள் என்பவற்றை அணுகுவதற்கும், கணக்காய்வினை மேற்கொள்வதற்கும் தேவையான தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றைப் பெறுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எமது சேவை பெறுனர்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நோக்கெல்லை அரசியலமைப்பினால் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் அரசியலமைப்புக்கான பத்தொன்பாதாவது திருத்தச்சட்டத்தில் கம்பனிகளையும் உள்ளடக்கி அது மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தற்போதுள்ள எமது சேவை பெறுனர் அடிப்படை பின்வருமாறாகும்.

அமைச்சுக்கள்	51
திணைக்களங்கள்	95
மாவட்டச் செயலகங்கள்	25
கூட்டுத்தாபனங்கள்	204
அரசாங்க கம்பனிகள் (பத்தொன்பதாவது அரசியலமைப்பு திருத்தத்தினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடயப் பரப்பிற்குள் கொண்டுவரப்பட்டவை)	111
அரசாங்க வங்கிகள்	07
நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியங்கள்	62
வெளிநாட்டு நிதியளிப்புச் செயற்திட்டங்கள்	127
ஏனைய சுயாதீன நிறுவனங்கள்	19
மாகாண சபைகள்	09
உள்ளூராட்சி மன்றங்கள்	335
கமநல சேவை நிலையங்கள்	561
விளையாட்டுச் சங்கங்கள்	62
மொத்தம்	1,668

எமது நோக்கெல்லை

கணக்காய்வாளர் தலைமை அதிபதி தனது தற்றுணிபின் பிரகாரம், கணக்காய்வின் நோக்கெல்லையைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி தீர்மானிப்பதுடன், இது தொடர்பில் அவர் தற்போதுள்ள நியமங்கள் அதாவது 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் (ICASL), அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களது சர்வதேச அமைப்பு (INTOSAI), அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களது ஆசிய அமைப்பு (ASOSAI), தொடர்பான விதிகளும் சிறந்த செயல் முறைகளும் ஆகியவற்றாலும் பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குகள் குழு (COPA) மற்றும் பொது முயற்சிகள் குழு (COPE) ஆகியவற்றாலும் வழி காட்டப்படுகின்றார்.

இவற்றிற்கும் மேலாக, அரச கூட்டுத்தாபனங்களைப் பொறுத்தவரை 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச்சட்டத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கருதப்பட வேண்டிய கணக்காய்வின் நோக்கெல்லை மிகத் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்திற்கான விபரமான அறிக்கை, கூட்டுத்தாபனம் ஒன்றின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்படும் அறிக்கை, பாராளுமன்றத்திற்கான பிறிதொரு அறிக்கை என்ற வகையில் 03 முக்கிய நியதிச்சட்ட அறிக்கைகள் வழங்கப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தில் விபரிக்கப்பட்டவாறு அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள், சபைகள் மற்றும் நியதிச்சட்ட நிதியங்கள் தொடர்பிலான கணக்காய்வு நோக்கெல்லையில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

- தகவல் தெரிவிப்பதற்கான நோக்கில் கூட்டுத்தாபன செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பிடக்கூடிய வகையில் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் என்பன உரிய விதத்தில் போதியளவில் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதும் அவ்வாறான முறைமைகள் எநடைமுறைகள் புத்தகங்கள் பதிவுகள் ஏனைய ஆவணங்கள் யாவும் பயனுள்ள வகையில் செயற்படுத்தப்படுகின்றனவா என்பதும்,

- அரசாங்க கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் அக் கூட்டுத்தாபனச் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிற்கிணங்க உள்ளனவா மற்றும் கூட்டுத்தாபன நிர்வாகம் நியாயமாக நடைபெறுகின்றதா என்பதும்,

- நிதிகளின் கடப்பாடு மற்றும் நிதிகளின் பயன்பாடு சிக்கனமாகவும் வினைத் திறனுடனும் உள்ளனவா என்பதும்,

- பணம் வைத்திருத்தலும் சொத்துகளின் பாதுகாப்பு நடைமுறைகள் திருப்திகரமாக உள்ளனவா,

- கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் கூட்டுத்தாபனக் காலப் பகுதிக்குரிய விவகாரங்களது உண்மையானதும் நேர்மையானதுமான தன்மையை வெளிப்படுத்துமாறு கணக்கீடு, நிதியளிப்பு, பெறுமதியிடல் போன்ற அடிப்படைகளுக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதும்,

- கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தேவையெனக் கருதப்படுகின்ற அவ்வாறான ஏனைய விடயங்கள்

எமது சுதந்திரம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுதந்திரம் அரசியலமைப்பினால் விரிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மூலம் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச அமைப்பின் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுதந்திரம் மீதான அடிப்படைக் கோட்பாடுகளுடன் இணங்கும் விதத்தில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

“கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன்

அவர் தகைமைபெற்ற கணக்காளராக இருத்தலும் வேண்டும். அவர் அரசியலைப்புப் பேரவையின் பரிந்துரைக்கமைய சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் நன்னடத்தையுடையவராக இருக்கும் காலத்தில் பதவிவகித்தலும் வேண்டும்.”

நோய்வாய்ப்படல் அல்லது உடல் அல்லது உள ரீதியான இயலாமை காரணமாக மாத்திரம் சனாதிபதியினால் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டு அவரை பதவிநீக்கம் செய்யலாம்.

அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரை மேலும் தெரிவிப்பது யாதெனில், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சம்பளம் பாராளுமன்றத்தாலேயே நிர்ணயிக்கப்பட்டு அது திரட்டிய நிதிக்குச் சாட்டுப்படுவதுடன் அவரது பதவிக்காலத்தில் குறைக்கப்படவுமாகாது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி எந்தவொரு அமைச்சரினதும் அல்லது அரசாங்க அலுவலகத்தினதும் மேற்பார்வைக்கு உட்படுவதில்லை.

சட்டரீதியான நிறைவேற்றுதல்கள்

சட்டரீதியான நிறைவேற்றுதலுக்கான தேவைப்பாடுகள்

கணக்காய்வாய்வாளர் தலைமை அதிபதியின் பணியாற்றும் சுதந்திரம் இற்றை வரை அரசியலமைப்பின் வாயிலாகப் பாதுகாக்கப்பட்ட போதும், அவரது நிதிசார் மற்றும் நிர்வாகச் சுதந்திரம் என்பன இவ்விடயங்கள் மீதான அரசியலமைப்பு மற்றும் நீதித்துறை ஏற்பாடுகளின் மூலம் நிறைவேற்றுநர்களால் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் மூலம் மட்டுப்படுத்தல் இல்லாமலாக்கப்பட்டிருந்தது. மனிதவளம் மற்றும் நிதி ஆகிய மூலவளங்களுக்கு நிறைவேற்றுநர் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதி தங்கியிருப்பதானது பாராளுமன்றத்தின் பொருட்டு மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளது உண்மையான, சுதந்திரமான தன்மைக்கு ஊறுவிளைவிப்பதாகும். ஏனெனில் எந்தவொரு நிறுவனத்திற்கோ தனிநபருக்கோ முற்றாக கடப்பாடு இன்றியும் சர்ச்சைக்குரிய பழிவாங்கல்களுக்கு உட்படாதவராயும் அவர் இருத்தல் வேண்டும். பணிகளையும் நிதியையும் உள்ளடக்கியவாறான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது சுதந்திரத்தை உறுதி செய்வதற்கு சட்டங்களின் வாயிலாக பாராளுமன்றத்தால் விரிவான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டியுள்ளது. மீளாய்வாண்டு வரை கணக்காய்வு தலைமை அதிபதி அவரின் செலவினங்களுக்காக பொதுத் திறைசேரியிலேயே ஒத்துழைப்புடன் அவர் தங்கியிருக்க வேண்டியுள்ளதுடன், திணைக்களத்திற்கான மூலவள ஒதுக்கீடு திணைக்களம் எதிர்நோக்குகின்ற இடர்களுடன் பிணைந்தவையாக காணப்படவில்லை. ஏனைய முன்னேறிய பொதுநலவாய நாடுகள் போல் அல்லது இலங்கையின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது வரவு, செலவுத் திட்டம் நீதித்துறைக் குழு ஒன்றினால் பரிசீலிக்கப்படுவதோ அல்லது அங்கீகரிக்கப்படுவதோ இல்லை. அவரது வரவு, செலவுத் திட்டம் தொடர்பாக நிறைவேற்றுனர்களது கட்டுப்பாடுகளிலிருந்து விலகும் வகையில் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமைகளை நிறைவேற்றுவதன் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினதும் அவரது பதவியணியினரதும் நிர்வாகச் சுதந்திரத்தை பாதுகாத்தல், பதவியணியினரது நியமனம், பதவி உயர்வு இடமாற்றம், ஒழுக்காற்று விடயங்கள், சம்பளம் மற்றும் ஏனைய நிர்வாக விடயங்கள் தொடர்பாக விடயங்கள் தொடர்பிலான நிர்வாகம் தேசிய கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், அரசியலமைப்பின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி “அரசாங்க உத்தியோகத்தர் தொடர்பான விசேட பட்டியலில்” சேர்த்துக் கொள்ளப்படாதிருந்ததுடன், தாபன விதிக்கோவையில் விபரிக்கப்பட்டுள்ள சகல அரசாங்க நிர்வாகப் பிரமாணங்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அவரது

பதவியணியினருக்கும் ஏற்புடையனவாகும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நிர்வாகச் சுதந்திரம் இதனால் மேலும் கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகின்றது. இவ்வாறான நிர்வாகக் குறைபாடுகள் அவரது கணக்காய்வு பணிகளுக்கு பல சந்தர்ப்பங்களில் குறிப்பிடத்தக்க தடைகளாக இருந்துள்ளன.

ஐக்கிய இராச்சியத்தின் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களிற்கான சர்வதேச அமைப்பின் (“இன்டொசாய்”) 1977 இன் “லீமா பிரகடனத்தில்” அரசாங்க கணக்காய்வுச் சுதந்திரத்திற்கான மூலதத்துவங்கள், முறைகள் மற்றும் தொழில்சார் விதிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் 30 ஆண்டுகளிற்குப் பின்னர் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுதந்திரம் தொடர்பிலான XIX ஒன்றுகூடலின் போதான (2007 மெக்சிகோ) மெக்சிகோ பிரகடனத்தில் அரசாங்க நிறுவனங்களின் சிறந்த கணக்காய்விற்காக அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களிற்கான சுதந்திரம் தொடர்பாக நிரந்தரமான பின்வரும் 8 விடயங்கள் அத்தியாவசியமானது என இனங்காணப்பட்டுள்ளன.

கொள்கை 1

அர்த்தமுள்ளதும் பயனுள்ளதுமான அரசியல மைப்பிற்கு இணங்க / நியதிச்சட்டரீதியான / சட்டரீதியான கட்டமைப்பொன்று மற்றும் அந்த கட்டமைப்பினுள் நடைமுறையில் அமுல்படுத்தப்படும் ஏற்பாடுகள் காணப்படுகின்றமை.

அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்குரிய சுவாதீனத்தின் அளவினை விரிவாக காட்டும் வகையிலான சட்டங்களை இயற்றுதல் அவசியமாகின்றது.

கொள்கை 2

அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் (கல்வியியல் நிறுவனங்களின்) அங்கத்தவர்கள் தமது கடமைகளை சாதாரணமாண முறையில் நிறைவேற்றும் போது அவர்களின் பதவிகளின் பாதுகாப்பு மற்றும் சட்டச் சூழலின் சுவாதீனத்துவம்.

பின்வரும் நிலைமைகளுக்கு கட்டுப்படும் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் தலைவர்களினதும் கல்வியல் நிறுவனங்களின் அங்கத்தவர்களின் நியமனம், மீள் நியமனம், வேலை வாய்ப்பு, பதவி நீக்கம் மற்றும் ஓய்வூதியம் பெறல் தொடர்பான நிபந்தனைகள் குறித்த சட்டங்களை இயற்றுதல் மூலம் விசேடமாக காண்பிக்கப்பட வேண்டும்.

- அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்படும் நடைமுறையின் மூலம் சுவாதீனத்துவத்தை சான்றுறுதிப்படுத்தும் நியமனங்கள், மீள் நியமனங்கள் அல்லது பணி நீக்கம் (அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுவாதீனத்துவம் மற்றும் தொடர்புடைய ISSAI II வழிகாட்டி கோவை மற்றும் சிறந்த நடைமுறைகள்).
- தமது கட்டளைகளை (Mandate) எதிர்ப்புகளின் அடிப்படையில் முன்னிலைப்படுத்தும் அச்சமின்றி நடைமுறைப்படுத்துவதற்கு முடியுமான முறையில் போதியளவான நீண்ட மற்றும் குறித்துரைக்கப்பட்ட கால எல்லையுடன் மேற்கொள்ளப்படும் நியமனங்கள்;

மற்றும்

- தமது கடமைகளை உரிய முறையில் நியாயமான முறையில் நிறைவேற்றும் போது கடந்த காலத்தில் அல்லது தற்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனுமொரு பணியொன்றை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்படும் முறைப்பாடொன்றின் போதான தடைகாப்பு. (Immune)

கொள்கை 3

அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் பணிகளை நிறைவேற்றும் போது போதியளவில் பரவலாக்கப்பட்ட கட்டளை (Mandate) மற்றும் பூரணமான விருப்புரிமை.

பின்வரும் பணிகளை கணக்காய்வு செய்யும் அதிகாரம், அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட வேண்டும்.

- பொது நிதி, வளங்கள் அல்லது சொத்துக்களை பெற்றுக்கொண்ட நபரொருவர் அல்லது நலனாளியொருவரால் அவற்றை பாவனைக்கு உட்படுத்தல் தொடர்பான அதனது நாளாந்த தன்மை தொடர்பில் கவனம் செலுத்தாது கணக்காய்வுக்கு உட்படுத்துதல்.
- அரசாங்கத்திற்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு கிடைக்க வேண்டிய வருமானங்களை சேகரித்தல்.
- அரசின் அல்லது அரச நிறுவனங்களின் கணக்குகள் தொடர்பில் சட்டரீதியான மற்றும் நியாயத்தன்மை;
- நிதி முகாமைத்துவத்தின் மற்றும் அறிக்கையிடலின் தரம்; மற்றும்
- அரசின் அல்லது அரச நிறுவனங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான சிக்கனம், செயற்திறன் மற்றும் விளைதிறன்.

சட்டரீதியாக அவ்வாறு செயற்படுமாறு குறிப்பாக நிர்ணயிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களால் அரசினது அல்லது அரச நிறுவனங்களின் கொள்கைகளை கணக்காய்வுக்கு உட்படுத்த கூடாதெனினும், அவர்களது கணக்காய்வு நடவடிக்கையானது கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் பணிக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

தனது பொறுப்புக்களை நிறைவேற்றும் போது அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு பூரண விருப்பத்தின் பிரகாரம் செயற்படக்கூடியதாக இருத்தல் வேண்டும். அவர்கள் அரச நிதிய பயன்பாடு மற்றும் முகாமைத்துவம் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்கள் தொடர்பாக சர்வதேச அமைப்பினதும் சர்வதேச அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களால் அந்த நிறுவனங்களுக்குரிய முறையில் அரசியலமைப்பு ரீதியில் விதிக்கப்படும் சட்டங்களுக்கு மதிப்பளிக்க வேண்டியதுடன், பின்வரும் விடயங்கள் தொடர்பில் அரசியலமைப்பினூடாக அல்லது நிறைவேற்று ரீதியாக மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகளில் அல்லது தலையீடுகளில் இருந்து அந்த

கணக்காய்வு நிறுவனம் விடுதலையளிக்கப்படும்;

- கணக்காய்வு பிரச்சினைகளை தேர்ந்தெடுத்தல்;
- அவர்களது கணக்காய்வினை திட்டமிடல், நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உட்படுத்துதல், நடாத்துதல், அறிக்கையிடல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்;
- தமது அலுவலகங்களின் ஒழுங்கமைப்பு மற்றும் முகாமைத்துவம்;
- அங்கீகரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தமது கட்டளையின் (Mandate) ஒரு பகுதியாகும் சந்தர்ப்பங்களின் போது தமது தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல்;

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களால் தாம் கணக்காய்வு செய்யும் ஒழுங்கமைப்புக்களின் முகாமைத்துவத்தினுள் ஏதேனுமொரு விதத்திலான தலையீடொன்று அல்லது தலையீடொன்று இடம்பெறுவதாக தென்படும் வகையில் செயற்படலாகாது.

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்கள் தம்மால் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனங்களுடன் மிகவும் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள கூடாதென உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அதன் பிரகாரம் அவர்கள் நோக்கங்களுக்கமைய செயற்பட்டவாறு உள்ளனர் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

தமது கடமைகளை நிறைவேற்றும் போது அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் பூரணமான விருப்புரிமையின் அடிப்படையில் செயற்படக்கூடியதாக இருக்க வேண்டும். அவர்கள் அரசின் நிதியங்களின் பயன்பாடு மற்றும் முகாமைத்துவத்தினை முன்னேற்றுவதற்கு பாடுபடும் அரச அல்லது அரச நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.

சர்வதேச கணக்காளர் சம்மேளனத்தினாலும் ஏனைய ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களை விதிக்கும் நிறுவனங்களிலும் உத்தியோகபூர்வ ஆவணங்களை அடிப்படையாக கொண்ட பொருத்தமான பணிகள் மற்றும் கணக்காய்வு நியமங்களைப் போன்று ஒழுக்கநெறிக் கோட்பாடுகளும் அதி உயர் கணக்காய்வு நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட வேண்டும்.

அரசியலமைப்பின் சட்டங்கள் மூலம் அல்லது சட்டங்களை உருவாக்குவதன் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு வருடாந்த செயலாற்றல் அறிக்கையொன்றினை அல்லது அதி உயர் கணக்காய்வு நிறுவனத்தினால் சட்ட மன்றத்திற்கு மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அந்த நிறுவனத்தால் அந்த அறிக்கைகள் பொது மக்களுக்கு அறிந்து கொள்வதற்கு இடமளிக்க வேண்டும்.

கொள்கை 4

தடைகளின்றி தகவல்களை பெறக்கூடியதாக இருத்தல்.

அதி உயர் கணக்காய்வு நிறுவனத்திற்கு சொந்தமான சட்டரீதியான பொறுப்புகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு தேவையான அனைத்து ஆவணங்கள் மற்றும் தகவல்களை உரிய நேரத்தில், செம்மைத்தன்மையுடன், நேரடியாக மற்றும் சுதந்திரமாக பெற்றுக்கொள்வதற்கு போதியளவான அதிகாரங்கள் அந்த நிறுவனத்திடம் காணப்பட வேண்டும்.

கொள்கை 5

தமது பணிகள் தொடர்பில் அறிக்கையிடுவதற்கான உரிமையும் கடப்பாடும்

தமது கணக்காய்வு பணியின் பெறுபேறுகளை அறிக்கையிடல் தொடர்பில் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு வரையறைகளை விதிக்கக்கூடாது. தமது கணக்காய்வு பணிகளின் பெறுபேறின் கீழ் வருடத்திற்கு ஒரு தடவையாவது அறிக்கையிடுவதற்கு அவர்களுக்கு சட்டத்தினால் கட்டளையிடப்பட வேண்டும்.

கொள்கை 6

கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கம் மற்றும் கால நிர்ணயத்தினை தீர்மானிக்கும் சுதந்திரம் மற்றும் அவற்றை வெளியிட்டு பகிர்ந்தளித்தல்.

- தமது கணக்காய்வு அறிக்கைகளின் உள்ளடக்கத்தினை தீர்மானிக்கும் சுதந்திரம் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் காணப்படுகின்றது.
- கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனத்தின் கருத்துக்களை பொருத்தமான முறையில் கவனத்திற் கொண்டு தமது கணக்காய்வு அறிக்கைகளின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை உள்ளடக்கும் சுதந்திரம் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் காணப்படுகின்றது.
- கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட வேண்டிய ஆகக்குறைந்த தேவைப்பாடுகளை குறிப்பிடலும் பொருத்தமான சந்தர்ப்பங்களின் போது முறையான கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்காக அல்லது சான்றுறுதிப்படுத்துவதற்கான குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் அறிவித்தலொன்று சட்டரீதியான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- அறிக்கையிடுவதற்கு தேவையான விடயங்கள் குறிப்பாக சட்டத்தினால் நிரணயிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது தவிர்ந்த தமது கணக்காய்வு அறிக்கைகளின் கால நிர்ணயத்தை தீர்மானிக்கும் சுதந்திரம் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் காணப்படுகின்றது.
- ஒட்டுமொத்தமான முறையில் சட்டமன்றம், அதன் ஆணைக்குழுவொன்று அல்லது அரசினால் விசாரணையொன்று இல்லாத போது கணக்காய்விற்காக விசேட கோரிக்கையொன்று மேற்கொள்ளப்படும் போது அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு அவற்றை நிறைவேற்ற முடியும்.
- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் அறிக்கைகளை சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் உரிய அதிகாரிகளுக்கு

முறையாக சமர்ப்பிப்பதன் மூலம் கையளித்ததன் பின்னர் அவற்றை வெளியிட்டு பகிர்ந்தளிக்க வேண்டும்.

கொள்கை 7

அதி உயர் கணக்காய்வு நிறுவனத்தின் பரிந்துரை தொடர்பில் விளைவுடைய பின்தொடர் பொறிமுறையொன்று காணப்படுதல்.

- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்கள் தமது அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளினை மீளாய்வு செய்து பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு மீள்திருத்த படிமுறைகளை எடுப்பதற்கு உரிய முறையில் சட்ட மன்றங்களுக்கு அல்லது அதன் ஆணைக்குழுவிற்கு அல்லது கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களைப் போன்றே உரிய முறையில் சட்டமன்றம், அதன் ஆணைக்குழுவொன்று அல்லது கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபை போன்றவற்றின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் உரிய முறையில நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அந்த கணக்காய்வு நிறுவனங்களுக்கு உரித்தான உள்ளக பின் தொடர் முறைமையொன்று காணப்படுகின்றது.

- பின்தொடர் நடவடிக்கைகளை அங்கீகரிப்பதற்கு உரித்தான அரசியலமைப்பு அதிகாரங்கள் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் காணப்படும் போதும் அந்த கணக்காய்வு நிறுவனங்களுக்குரிய பின்தொடர் அறிக்கைகள் உரித்தாகும் வகையில் சட்டமன்றத்திற்கு அல்லது அதனது ஆணைக்குழுவொன்றிற்கு அல்லது கணக்காய்வினை மேற்கொண்ட நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபைக்கு கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும்.

கொள்கை 8

நிதி மற்றும் முகாமைத்துவம் / நிர்வாக தன்னுரிமை மற்றும் பொருத்தமான மனித, பௌதீக மற்றும் நிதி வளங்கள் காணப்படுதல்.

- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு தேவையான மற்றும் சராசரி மனித, பௌதீக மற்றும் நிதி வளங்கள் காணப்பட வேண்டும். இந்த வளங்களை பெற்றுக்கொள்வதனை கட்டுப்படுத்துவதற்கோ செயற்படுத்துவதற்கோ நிர்வாகிகள் முன்வரக்கூடாது. அதி உயர் கணக்காய்வு நிறுவனம் தனது பாதீட்டினை அவர்களாலேயே முகாமை செய்து பொருத்தமான முறையில் ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும்.
- சட்டமன்றம் அல்லது அதன் ஆணைக்குழுவொன்று அதி உயர் கணக்காய்வு நிறுவனம் தமது கட்டளையினை (Mandate) நிறைவேற்றுவதற்கு தேவையான உரிய வளங்களை கொண்டுள்ளதனை உறுதிப்படுத்தும் பொறுப்பினை ஏற்க வேண்டும்.
- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வளங்கள் அவரகளின் கட்டளைகளை (Mandate) நிறைவேற்றுவதற்கான படிமுறைகளை எடுப்பதற்குரிய

அளவில் இல்லாதிருப்பின் அது தொடர்பில் நேரடியாக சட்டமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமை அந்த கணக்காய்வு நிறுவனத்திற்கு காணப்படுகின்றது.

அரசியலமைப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதி மாத்திரம் தொடர்பில் குறிப்பிடுவதுடன் அவரது பதவியணியினரைக் குறித்துக் குறிப்பிடவில்லை. ஆகையால் ஏனைய நாடுகளிலுள்ளவாறு தனிப்பட்ட அதிகாரச்சட்டமொன்றினூடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பதவியணியனரது அதிகாரமும் பொறுப்பும் வரையறுத்துக் கூறப்படுதல் வேண்டும். அத்தேவைப்பாடு 2018 ஆக்ஸ்ட் 01 ஆந் திகதி முதல் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மூலம் கிடைத்து உள்ளது.

அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் ஊடாக அரசியலமைப்பின் 153 மற்றும் 154 ஆம் உறுப்புரைகளிற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எதிர்கொள்ளப்பட்ட நிர்வாக மற்றும் நிதிசார் சுதந்திரத்திலுள்ள குறைபாடுகளை நீக்கும் நோக்குடன் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகளிற்கு பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் தகைமைபெற்ற கணக்காளராக இருத்தலும் வேண்டும். அவர் அரசியலைப்புப் பேரவையின் பரிந்துரைக்கமைய சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் நன்னடத்தையுடையவராக இருக்கும் காலத்தில் பதவி வகித்தலும் வேண்டும்.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை தலைவராகக் கொண்ட கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினை தாபித்தல். பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக அல்லது அதற்கு மேற்பட்ட பதவியினை வகித்த கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் ஓய்வுபெற்ற இரண்டு அங்கத்தவர்கள் மற்றும் இலங்கை உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது மேல் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியொருவர் அத்துடன் இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற வகுப்பு I இன் அலுவலர் ஆகியோர் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் ஆவர். அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரைக்கமைய 3 ஆண்டுகள் நிரந்தர பதவிக்காலத்திற்காக சனாதிபதியினால் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர்.

- இலங்கை அரச கணக்காய்வு சேவையைச் சார்ந்த உறுப்பினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் உறுப்பினர்களின் பதவிநீக்கம் என்பவற்றிற்கான அதிகாரம் கணக்காய்வாளர் தலைமை திணைக்களத்தின் நிர்வாகச் சுதந்திரத்தை பாதுகாக்கும் நோக்குடன் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்படுகின்றது.

- அரசாங்கத்தினால், அரச கம்பனியொன்றினால் அல்லது உள்ளூராட்சி மன்ற நிறுவனமொன்றினால் கம்பனிச் சட்டத்தின் பதிவு செய்யப்பட்ட கம்னியொன்றின் பங்கு மூலதனத்தில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட உரித்துள்ள சகல அரச கம்பனிகளிலும் கணக்காய்வினை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடரயப்பரப்பின் கீழ் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களது சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக "பகிரங்க உத்தியோகத்தர்" *என்ற*

வரைவிலக்கணத்திலிருந்து நீக்கப்படுகின்றனர்.

- தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் வருடாந்த பாதீடு ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொழிற்பாடுகளை நிறைவேற்றுனர்களின் எவ்வித தலையீடுகளுமின்றி மேற்கொள்வதற்கு போதியளவு நிதிகள் வழங்கப்படுள்ளமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக பாராளுமன்றத்தினால் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் தேசிய பாதீட்டில் கூட்டிணைப்பதற்காக நிதி என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம்

கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளும் தேசிய கண கணக்காய்வு அலுவலகத்தையும் இலங்கை அரச கணக்காய்வுச் சேவையையும் தாபிப்பதற்கும், ஏற்பாடு செய்வதற்கும், பகிரங்க நிதி மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பங்களிப்பைக் குறித்துரைப்பதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நோக்கங்களாவன விடயங்களுக்கான ஏற்பாடுகளும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான ஏற்பாடுகள் பின்வருமாறு இருந்தது.

- கணக்குகள், நிதி, நிதி நிலைமை, அரச நிதியங்களின் நிதிக் கட்டுப்பாடு, கணக்காய்வு நிறுவனங்களின் ஆதனங்களின் பரிட்சிப்பு மற்றும் செயலாற்றல் கணக்காய்வு, சூழல் கணக்காய்வு, தொழில்நுட்பக் கணக்காய்வு மற்றும் ஏனைய விஷேட கணக்காய்வு என்பவற்றை மேற்கொள்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முடியுமான வகையில் விடயப்பரப்பெல்லை விரிவுபடுத்தப்பட்டமை.
- கணக்காய்வை மேற்கொள்கின்ற நிறுவனத்திற்குரிய எந்தவொரு விடயம் தொடர்பாகவும் அந்த விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான போதியளவான சான்றுகளுடன் பொது மக்ககளிடையே எவரேனும்மொருவர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எழுத்து மூலம் அறவிடுவில்லையாராயின் அந்த விடயங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பரீட்சிக்கப்பட முடியுமாக இருந்ததுடன் அது தொடர்பாக பாரளுமன்றத்திற்குப் அறிக்கையிடப்பட வேண்டும்.
- 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கணக்காய்வு நியமங்கள் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட இலங்கை கணக்காய்வு நியமங்கள் தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் பொறுப்பேற்கப்படுவதுடன் அது சகல கணக்காய்வாளர்களுக்கும் ஏற்புடையதாகும்.

- செயலாற்றல் கணகாய்வு, சூழல் கணக்காய்வு, தொழில்நுட்பக் கணக்காய்வு மற்றும் வேறு விசேட கணக்காய்வுகளுக்காக இலங்கை கணக்காய்வு நியமங்களின் எந்தவொரு கணக்காய்வு நியமத்தையும் குறித்துரைக்காத சந்தர்ப்பங்களின் போது உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கான சர்வதேச நியமங்களின் ஏற்பாடுகளை உள்ளூர்த் தேவைகளுக்கு ஏற்ப அவசியமான திருத்தங்களுடன் உள்ளடக்கிய வகையில் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் குறித்துரைக்கப்பட வேண்டும்.
- அரச கூட்டுத்தாபனம், அரச கம்பனிகள் தவிர ஏதாவது கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் அல்லது ஏதாவது கணக்குகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்கு ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்ததன் பின்னர் ஐந்து மாதங்களுக்குள் சுருக்கமான அறிக்கையொன்று விநியோகிக்கப்பட வேண்டியிருந்தமை.
- அரச கூட்டுத்தாபனமொன்று அல்லது அரசினால் அல்லது அரச கூட்டுத்தாபனத்தால் பங்குகளில் ஐப்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதத்தைக் கொண்டு இருக்கின்ற கம்பனியொன்றில் அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய உரிய பதிவேடுகள் மற்றும் தகவல்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைத்த மூன்று மாதங்களுக்குள் அதன் ஆண்டறிக்கையை பிரசுரிப்பதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை.
- உரிய கணக்காய்வை மேற்கொள்கின்ற நிறுவனம் கையளிக்கப்பட்டுள்ள அமைச்சருக்கும், நிதி விடயங்கள் கையளிக்கப்பட்டுள்ள அமைச்சருக்கும் பிரதியுடன் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து ஐந்து மாதங்களுக்குள் ஒவ்வொரு கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்ற நிறுவனங்களினதும் நிர்வாக சபைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வருடாந்தம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை.
- அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்கள் அரசாங்கத்தின் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து மூன்று மாதங்கள் கழிவதற்கு முன் திறைசேரி செயலாளரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை.
- கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்ற அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிதியங்கள் அல்லது சபைகள் ஏதாவது எழுத்து மூல சட்டத்தின் மூலம் அல்லது அதன் கீழ் அரசாங்கத்திற்கு கையளிக்கப்பட வியாபார முயற்சிகள் அல்லது

ஏனைய வியாபாரங்கள் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது என கருதப்படுகின்ற தனது பங்குகளில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதமொன்றை அரசாங்கம் அல்லது அரச கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்ற ஏதாவதொரு கம்பனியிலிருந்து கட்டணமொன்று அறவிட வேண்டியிருந்தமை.

- கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவினால் ஆட்சேர்ககப்படுகின்ற இலங்கை அரச கணக்காய்வுச் சேவைக்குரிய அங்கத்தவர்களை நியமித்தல், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் சேவையிலிருந்து நீக்குதல் என்பன ஆணைக்குழுவிற்கு உரியதாக இருந்தமை.
- ஆணைக்குழுவினால் ஆட்சேர்க்கப்படுகின்ற நபர்களின் சம்பளம் மற்றம் ஏனைய படிகளும் வேறு அதாவது நலன்களும், சம்பளம் மற்றும் ஊழியர் ஆணைக்குழுவின் கருத்துரைகளைப் பெற்றதன் பின்னர் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அந்த சம்பளம் திரண்ட நிதியத்திற்கு செலவினப் பொறுப்பாக உள்ளது.
- சகல கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறவனத்தாலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அவரால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஏதாவதொரு உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பைக் காண்பிக்க வேண்டியிருந்ததுடன் வினைத்திறனான கணக்காய்வை மேற்கொள்வதற்கான வசதிகளை வழங்குவதற்காக வேலை செய்வதற்கு தேவையான பாதுகாப்பு மற்றும் காப்பீட்டுடன் கூடிய சூழலொன்றை அமைத்து வழங்க வேண்டியுள்ளது.
- நிதி விடயங்கள் கையளிக்கப்பட்டுள்ள அமைச்சரால் குறித்துரைக்கப்படுகின்ற கால எல்லையில் தேசிய கண்ககாய்வு அலுவலகத்தின் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட வேண்டும். சபாநாயகரினால் தீர்மானிக்கப்படுகின்ற தினத்தின் போது அது சபாநாயகருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை.
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் ஒவ்வொரு நிதியாண்டும் ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது அறுபது நாட்களுக்கு முன்னர், எதிர்வரும் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உத்தேச செயல் நிகழ்ச்சித்திட்டங்களின் வரைவொன்று தயாரிக்கப்பட்டு சபாநாயகர்கருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை.
- தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் நிதியாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள், கணக்குகள் மற்றும் ஏனைய தகவல்களைக் கணக்காய்வு செய்வதற்காக சபாநாயரால் தகைமை பெற்ற சுதந்திரமான கணக்காய்வாளர் நியமிக்கப்பட வேண்டியிருந்ததுடன் இந்த பணிகளுக்காக கணக்காய்வு அலுவலகம், தேசிய கணக்காய்வுச்

எமது ஒழுங்கமைப்பு

சட்டத்தின் கீழ் கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனமொன்றாக கருதப்பட வேண்டியிருந்தமை.

- கணக்காய்வு கட்டணங்களில் 15 சதவீதம், பாராளுமன்றத்தின் இணக்கப்பாட்டுடன் அரசாங்கத்தால் நிதியத்திற்கு செலவு செய்யப்படுகின்ற சகல கொடுப்பனவுகள் மற்றும் சிவில் அல்லது குற்ற வழக்குகளிலிருந்து அறவிடப்படுகின்ற ஏதாவது கிரயமொன்று வருமான மூலமாகக் கொண்டு கணக்காய்வு நிதியமொன்றை ஏற்படுத்த வேண்டியிருந்தமை.
- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள் குறிப்பிடப்பட்டிருந்தமை.
- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது உரிய நிர்வாக சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டியிருந்தமை.
- கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபருக்கு ஒத்துழைப்பு வழங்குதலை புறக்கணித்தல் குற்றமாக இருந்தமை.
- தேசிய கணக்காய்வு ஆணைக்குழுவின் அல்லது இலங்கை அரச கணக்காய்வுச் சேவை என்பவற்றில் ஏதோ ஒரு உத்தியோகத்தரின் தீர்மானத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்துவதற்கு துணிதல் குற்றமாக இருந்தமை.
- சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் விதியொன்றை மீறுகின்ற ஏதோ ஒரு நபர் குற்றமொன்றை புரிவாராயின் நீதிபதியின் முன் ஆஜர்படுத்தப்பட்டு வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியின் மீது ரூபா ஒரு இலச்சத்தை விஞ்சாத தண்டப் பணம் அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாத காலத்திற்காக சிறையிலிடுவதற்கு அல்லது அந்த தண்டப் பணம் மற்றும் சிறையிலிடுதல் என்ற இரண்டு தண்டணைகளுக்கும் கட்டுப்படுதல்.
- அரச நிதி மற்றும் கணக்காய்வு தொடர்பான துறையில் மனிதவள இயலுமையை விருத்தி செய்யும் எண்ணத்துடன் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கீழ் அரச கணக்காய்வு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிலையமொன்று தாபிக்கப்பட வேண்டியிருந்தமை

எமது நிறுவனக் கட்டமைப்பு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் தலைவர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக

காணப்படுவதுடன், திணைக்களத்தின் நிதிநடவடிக்கைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராகவும் தொழிற்படுகின்றார். திணைக்களத்தின் தற்போதைய நிறுவகக் கட்டமைப்பு பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு இணையாக ஒவ்வொரு மட்டத்திலும் குறித்தளவு எண்ணிக்கையான உத்தியோகத்தர்களுடன் அதன் அமைப்பில் 04 மட்டங்களைக் கொண்டதாகும்.

முதலாம் மட்டம் மூன்று மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளை உள்ளடக்குவதுடன் அவர்களால் மத்திய அரசாங்கமற்றும் மாகாண சபைகளின் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இரண்டாம் மட்டம் 15 பிரதிக் கணக்காய்வாளர் தலைமைஅதிபதிகளின் கீழ் 60 பிரிவுகளை கொண்டுள்ளன. அந்த 60 பிரிவுகளுக்கு பொறுப்பாக 44 உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள் பொறுப்பாக செயற்படுகின்றனர். இப் பிரிவுத் தலைவர்களிற்கு ஒப்படைக்கப்படுகின்ற கணக்காய்வு கிளைகளின் தலைமை ‘‘கிளைத் தலைவாக’’ கணக்காய்வு அத்தியட்சகர்கள் அல்லது கணக்காய்வுப் பரீட்சகர் சேவையிலுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரால் நிறைவேற்றப்படுவதுடன் அவர்களிற்கு குறிப்பிட்டளவு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர்கள் மூன்றாவது மட்டத்தில் உள்ளனர். அதற்கமைய குறித்துரைக்கப்பட்ட விதத்தில் தங்களது கண்காணிப்பில் கொண்டுவரப்பட்டுள்ள கணக்காய்வுக் கிளைகள் செயற்படவேண்டிய முறையினை முகாமைத்துவம் செய்தல் மற்றும் கண்காணித்தல் தொடர்பான முழுமையான பொறுப்பு பிரிவுத் தலைவருக்கு ஒப்படைக்கப்படுகின்றது. கிளைத் தலைவர்களிற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள கணக்காய்வுப் பரிசோதகர் சேவையிலுள்ள உதவி உத்தியோகத்தர்களை வினைத்திறனாகவும் பயனுள்ள விதத்திலும் சேவையில் ஈடுபடுத்தி அவர்களிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களில் கணக்காய்வை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் படிகிளைத் தலைவர்களுக்கு உதவி வழங்கும் அந்த உத்தியோகத்தர்கள் நான்காம் மட்டத்தில் உள்ளனர். இலங்கை கணக்காய்வு நியமங்கள், நியதிச்சட்டங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்டத் தேவைப்பாடுகளிற்கு இணங்க பரிசோதனைகள், அவதானிப்புக்கள் மற்றும் தமது அங்கீகரிக்கப்பட்டநிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணங்ககளப் பரிசோதனைகளை நிறைவேற்றுவதன் ஊடாகஅவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களில் கணக்காய்வினை மேற்கொண்டு தமது கிளைத் தலைவர்களுக்கு உதவுகின்றனர். மேற்குறிப்பிட்ட இரண்டாம் மட்டத்திற்கு உரித்தான பிரதான 60 பிரிவுத் தலைவர்களிலிருந்து 18 பிரிவுகளின் 18 தலைவர்கள் மாகாணமட்டத்தில் பிராந்திய அலுவலகங்களிற்கு பொறுப்பாக செயற்படுவதுடன் அவர்களின் கண்காணித்தல் மூன்று பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளால் மேற்கொள்ளப்படுகின்றது.

திணைக்களத்தின் நிர்வாக நடவடிக்கைகள் பணிப்பாளர் (நிர்வாகம்) இன் கீழ் வரும் தாபனக் கிளையாலும் நிதி நடவடிக்கைகளும் பிரதான கணக்காளரின் கீழுள்ள கணக்குகள் பிரிவினாலும் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வினை செயற்படுத்துவதற்குரிய ஒழுங்கமைப்பு கட்டமைப்பும் கீழே காட்டப்பட்டுள்ளது

எமது நிறுவனம்


Auditor General
Add.AG(CGSE)
Add.AG(CGMD)
Add.AG(PZIA)
DAG(PEN)
AAG(PER)
AAG(JPA)
AAG(HSM)
AAG(TIP)
AAG(FLS)
DAG(TQC)
AAG(TRD)
AAG(RQC)
AAG(ITE)
AAG(CMU)
AAG(LEG)
DAG(FBD)
AAG(BAF)
AAG(POS)
AAG((AVA)
DAG(CGL)
AAG(WSS)
AAG(EDU)
AAGHED)
AAG(LOR)
DAG(SBE)
AAG(SUR)
AAG(TCM)
DAG(OPE)
AAG(IEN)
AAG(HUD)
AAG(RCT)
DAG(SOF)
AAG(MED)
AAG(CAS)
AAG(POE)
AAG(VTY)
DAG(ADM)
DAG(FFP)
AAG(FFP)
AAG(EGN)
AAG(DEF)
AAG(DMG)
DAG(JPC)
AAG(TRE)
AAG(LEW)
AAG(AGL)
AAG(PLA)
DAG(SIN)
AAG(SIN)
AAG(CTP)
AAG(CEN)
DAG(MDP)
AAG(IMU)
AAG(EHA)
AAG(PUR)
Chief Accountan
Accountan
MAS
Director(Admin)
AD(Admin)
MAS
DAG(WNS)
AAG(WNP1)
AAG(WNP2)
AAGN(WP)
AAG(NWL)
AAG(SNP)
AAG(SNL)
DAG(NNE)
AAG(NNP)
AAG(NCL)
AAG(NNL)
AAG(NCP)
AAG(ENP)
AAG(ENL)
DAG(USC)
AAG(UVP)
AAG(UVL)
AAG(CLP)
AAG(CLL)
AAG(SGP)
AAG(SGL)
SA'S
AE'S
'AES
AE's

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் வகிபாகம் தொடர்பில் மதிப்பாய்வொன்றை மேற்கொண்ட பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2011 நவம்பர் 14 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட புதிய ஊழியர்கோப்பின் பிரகாரம், இலங்கை கணக்காய்வுச் சேவை உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கை 350 ஆக உயர்த்தப்பட்டதுடன் கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் உத்தியோகத்தர்கள் 1,200 ஆக காணப்பட்டனர். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவினை செயற்படுத்துவதற்காக தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்காமையால் அந்த ஆணைக்குழு செயற்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக திணைக்களத்தின் பதவியணிக்காக வரையப்பட்டுள்ள சேவை பிரமாணக் குறிப்பினை நிறைவேற்றிக்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளதுடன், ஏற்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புதல் பழையசேவைபிரமாணக் குறிப்பின் பிரகாரம் அரசாங்கசேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்படிநிலமையின் கீழ், ஆண்டின் 2017 இன் ஆரம்பத்திலும் 2017 ஆம் ஆண்டின் இறுதியிலும் 2018 மே 31 ஆந் திகதியிலும் உள்ளவாறான திணைக்களத்தின் ஒவ்வொரு பதவியிலும் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணை 01 இல் தரப்பட்டுள்ளன.

புதவி	2017சனவரி 01 இல் உள்ளவாறு			2017திசெம்பர் 31 இல் உள்ளவாறு			2018 மே 30 இல் உள்ளவாறு		
	அங்கீகரிக்கப்பட்டபதவியணி	உள்ளபடியானபதவியணி	வெற்றிடம்	அங்கீகரிக்கப்பட்டபதவியணி	உள்ளபடியானபதவியணி	வெற்றிடம்	அங்கீகரிக்கப்பட்டபதவியணி	உள்ளபடியானபதவியணி	வெற்றிடம்
கணக்காய்வுபதவியணி									
மேலதிககணக்காய்வாளர் தலைமைஅதிபதி	3	2	1	3	1	2	3	1	2
பிரதிக் கணக்காய்வாளர் தலைமைஅதிபதி	15	4	11	15	11	4	15	11	4
உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி	44	29	15	44	22	22	44	22	22
கணக்காய்வுஅத்தியட்சகர்	288	227	61	288	223	65	288	223	65
கணக்காய்வுபரிசோதகர்	1200	922	278	1200	1137	63	1200	1126	74
கணக்காய்வுசாராதபதவியணி									
பணிப்பாளர் - நிர்வாகம்	1	1	-	1	1	-	1	1	-
பிரதானகணக்காளர்	1	1	-	1	1	-	1	1	-
ஏனைய பதவிநிலைஉத்தியோகத்தர்கள்	16	10	6	16	10	6	16	11	5
அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் இணைந்ததரங்கள்	127	94	33	128	98	30	128	115	13
தட்டெழுத்தாளர்	48	48	-	48	48	-	43	43	-
கனிஷ்ட ஊழியர்கள்	188	154	34	213	184	29	213	187	26
மொத்தம்	**1931**	**1492**	**439**	**1957**	**1736**	**221**	**1952**	**1741**	**211**

அட்டவணை 2017 ஆம் ஆண்டின் இறுதியிலும் 2018 மே 31 ஆந் திகதியிலும் உள்ளவாறுமான பதவியணி நிலைமை

மேலே குறிப்பிட்டவாறு, 2017 ஜனவரி 01 முதல் 2017 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 439 பேரில் 221 பேர் வரைான வீச்சில் காணப்பட்ட பதவியணியினர் வெற்றிடங்கள் காரணமாக திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் பாரிய தடைகள் காணப்பட்டன. 2018 மே 31 ஆந் திகதி வரையில் அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை 211 வரை குறைப்பதற்கு முடியுமாக இருந்தது. மேலும் வெற்றிடங்களாக காணப்படும் 04 பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிபதவிகள், 11 உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிகள், 59 கணக்காய்வு அத்தியட்சகர்கள் பதவிகள் 69 கணக்காய்வு பரிசோதகர் பதவிகள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்காக தேவையான நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டுள்ளது.

சேவைப் பிரமாணக் குறிப்பை அங்கீகரித்துக்கொள்ளல்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பதவியணி, இலங்கை கணக்காய்வுச் சேவை மற்றும் கணக்காய்வுப் பரிசோதகர் சேவை உத்தியோகத்தர்களை உள்ளடக்குகின்றது. அப்போது காணப்பட்ட நிலமையின் கீழ், 6/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த இரு சேவைகளிற்காகவும் தனித்தனியான சேவைப் பிரமாணக் குறிப்புகள் உருவாக்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பில் பதவியணியினரால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பிரேரணைகள் மற்றும் கோரிக்கைகளை ஆராய்வதற்காக சனாதிபதியின் செயலாளரால் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக்குழு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை தலைவராகக் கொண்டு இரண்டு முன்னாள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளையும் சனாதிபதியின் மேலதிகச் செயலாளர் ஒருவரையும் உள்ளடக்கியிருந்தது. குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளைக் கவனத்திற்கொண்ட பின்னர், இலங்கை கணக்காய்வுச் சேவையினையும் கணக்காய்வு பரிசோதகர் சேவையினையும் ஒன்றிணைத்து "இலங்கை பொதுக் கணக்காய்வுச் சேவை" என்ற பெயரில் புதிய சேவையொன்றை தாபிப்பதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2014 திசெம்பர் 23 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது.

மேற்படி அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை கணக்காய்வுச் சேவையினையும் கணக்காய்வு பரிசோதகர் சேவையினையும் ஒன்றிணைத்து தாபிப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ள "இலங்கை பொதுக் கணக்காய்வுச் சேவை" அரசாங்கத்தினால் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி புதிய சேவைக்கான சேவைப்பிரமாணக் குறிப்பு தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அரசாங்க கணக்காய்வு ஆணைக்குழு அதனை அங்கீகரித்துக் கொள்ளும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. புதிய சேவை பிரமாணக் குறிப்பை அங்கீகரித்துக் கொள்வதன் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளையும் தொழிற்பாடுகளையும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் நிறைவேற்றுவதற்காக மிக உயர்தொழில் தரத்தில் பதவியணியினரை பேணுவதற்கான வாய்ப்பினை இது வழங்கும். அத்துடன், புதிய சேவையின் நியமன மற்றும் ஒழுக்காற்று அதிகாரி கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவாக உள்ளமையால் அத்தொழிற் பாடுகளை தாமதமின்றி நிறைவேற்றுவதற்கான இயலுமை, திணைக்களத்தின் செயலாற்றலை உயர்த்துவதற்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

பதவியணியினர் பயிற்சி

அரச வளங்கள் பொருளாதார, வினைத்திறன் மற்றும் பயனுறுதியான பாவனையை சக்தியூட்டுவதற்கு தேவையான பங்களிப்பு மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதன் மூலம் இலங்கை மக்களுக்கு தரமான மற்றும் நம்பிக்கையூட்டுகின்ற அரச சேவையை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் அரச நிறுவனங்களின் நிதி மற்றும் செயலாற்றல் கடமைகளை நிறைவேற்றல் சம்பந்தமாக கணக்களிக்கும் பொறுப்பு சரியான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை பரீசீலித்து பாராளுமன்றத்திற்கு அறிக்கைப்படுத்தப்படுகிறது.

இந்த நியதிச்சட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக, 1397 கணக்காய்வு உத்தியோகத்தர்களையும் மற்றும் 344 உதவிச் சேவைகளிற்கான உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய பதவியிணரை தற்போது கணக்காய்வாளர் திணைக்களத்தினால் பெறப்பட்டது.

நியதிச்சட்ட கடமைகளை வினைத்திறன் மற்றும் பயனுறுதியாக நிறைவேற்றுவதற்காக திணைக்களத்தின் பதவியணியினர்களை தற்காலத்திற்கு பொறுத்தமான அறிவு மற்றும் திறன்களை பலப்படுத்தல் அத்தியவசியமான காரணியாகும். இந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்கான எதிர்பார்ப்புடன் திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திக்காக (Continuous Professional Development CPD) வருடத்திற்கு 80 மணித்தியாலங்களை விட குறையாத உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பயிற்சி பாட நெறியை பூரணப்படுத்தும் அத்தியாவசியத்தன்மை திணைக்களத்தினால் வலியுறுத்தப்பட்டது.

அதற்கிணங்க உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் தேவைப்பாடுகளுடன் பொருந்தும் வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி வேலைத்திட்டங்களை திணைக்களத்தின் பயிற்சி பிரிவினால் ஏற்பாடு செய்வதற்கும் அதற்காக அவர்களுக்கு அவசியமான உதவியை வழங்குவதன் மூலம் அவர்களை ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதற்காக வளப் பங்களிப்பாக திணைக்களத்திலே சேவையாற்றிக்கொண்டிருக்கும் தகுதியான, திறமையான உத்தியோகத்தர்களின் உதவியையும் வெளிவாரி விரிவுரையாளர்களின் உதவியையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக விரிவுரைகள், கலந்துரையாடல்கள் நடைமுறை பயிற்சி மற்றும் களச் சுற்றுலாக்கள் போன்ற பயிற்சி முறைகளை பயன்படுத்தி நடாத்துவதன் மூலம் பின்வரும் நோக்கங்களை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் தொழில்நுட்பத் திறன்களை அபிவிருத்தி செய்தல்.
- உத்தியோத்தர்களின் வினைத்திறனையும் செயலாற்றலையும் உயர்த்துதல்.
- உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ ஆற்றல்களை விருத்தி செய்தல்.
- கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான அறிவு ஆற்றல் மற்றும் விவேகத்தை வழங்குதல்.
- நிதிசார்ந்த மற்றும் சேவை சட்டங்கள் தொடர்பான அறிவை வழங்குதல்.
- குழு ஆற்றலை அபிவிருத்தி செய்தல்.
- உத்தியோக்த்தர்களின் நல்ல மனோபாவத்தை அபிவிருத்தி செய்தல்

உள்நாட்டு பயிற்சியை வழங்குதல்

மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைவதற்காக 2017 ஆம் வருடத்திலே திணைக்களத்தின் பயிற்சி பிரிவினால் அனைத்து கணக்காய்வு உத்தயோகத்தர்களையும் உள்ளடக்கும் வகையில் II தலைப்புகளின் கீழ் 48

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு அல்லாத பதவியணியினரையுடைய உத்தியோகத்தர்களுக்காக பயிற்சி வசதிகள் வழங்கப்பட்டிருந்தது.

வெளிநாட்டு பயிற்சிப் பெறல்

அனைத்து கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்காக செயலாற்றல் கணக்காய்வு சம்பந்தமாக வெளிநாட்டு பயிற்சிகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட மலேசிய செயலாற்றல் கணக்காய்வு பயிற்சி வேலைத்திட்டத்திற்காக மீளாய்வாண்டிலே 560 உத்தியோகத்தர்கள் பங்கேற்றிருந்ததுடன் வேறு 10 தலைப்புக்கள் உள்ளடக்கப்படும் வகையில் 39 கணக்காய்வு உத்தயோகத்தர்கள் 27 வெளிநாட்டுப் பயிற்சி வேலைத்திட்டங்களுக்கு பங்கேற்றிருந்தனர்.

மீளாய்வாண்டிலே திணைக்கள உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான விபரங்கள் அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

	நிகழ்ச்சித்திட்டங்களின் விபரம்	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றிய உத்தியோகத்தர்கள்					பயிற்சி மணித்தியால எண்ணிக்கை
			பகுதித்தலைவர்கள்	கணக்காய்வு அத்தியட்சகர்	கணக்காய்வு பரீட்சகர்	கணக்காய்வற்ற உத்தியோகத்தர்	மொத்தம்	
	உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்							
1	நிதிசார் கணக்காய்வு பயிற்சிகள்	1	-	19	11		30	310
2	செயலாற்றல் கணக்காய்வு பயிற்சிகள்	7	2	45	213		260	5,616
3	புதிய உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல்	3	-	6	248		254	21,091
4	பெறுகை மற்றும் நிர்மானக் கணக்காய்வு	8	13	157	823		993	28,240
5	விசாரணைக் கணக்காய்வு பயிற்சிகள்	3	3	37	146		186	4,228
6	மிகை அறவீடு செய்முறை மற்றும் உள்ளூராட்சி கணக்காய்வு	3	4	28	86		118	4,046
7	இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு	6	6	51	392		449	12,374

	நியமங்கள் தொடர்பான பயிற்சிகள்							
8	கணனி தொடர்பான பயிற்சிகள்	2	1	13	37		51	1,071
9	வரி தொடர்பான பயிற்சிகள்	6	4	48	286		338	2,280
10	நேரான யோசனை அபிவிருத்திக்கான கருத்தரங்கு	8	37	221	891		1149	31,599
11	ஏனைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	1				1	1	7
	மொத்தம்	**48**					**3,826**	**110,862**
	உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்							
1	செயலாற்றல் கணக்காய்வு	9	28	114	421		563	47,292
2	தூதரகங்களின் கணக்காய்வு	6	4	6	5		15	1,029
3	தகவல் தொழில்நுட்ப பயிற்சிகள்	1		1			1	84
4	ASSOSAI/ SAI பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் i. ASSOSAI - workshop on Performance Audit ii. ASOSAI - Seminar on Improvement and Innovation of Audit Process- iii. SAIS - Workshop for Engaging with Stakeholders iv. SAI PMF Training Course	4	2	3			5	180
5	அரச கணக்காய்வு முகாமைத்துவம்	2		1	1		2	315
6	அரச கணக்கீட்டு மற்றும் நிதி	4	2	3			5	448

	முகாமைத்துவம்					
7	ஊழலற்ற தந்திரோபாயங்கள்	2	1		1	126
9	பட்டப்பின் படிப்பு	1	1		1	
10	சுற்றாடல் கணக்காய்வு	1	1		1	35
11	ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்	4	4	2	6	1,372
	மொத்தம்	**34**			**599**	**50,981**

அட்டவணை 02…. மீளாய்வாண்டில் திணைக்கள உத்தியோகத்தர்கள் பங்கேற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள்

தகுதியுள்ள கணக்காய்வாளர்களை சேவையில் ஈடுபடுத்துதல்

தற்போது நிலவும் வெற்றிடங்கள் காரணமாக உருவாகியுள்ள வளப் பற்றாக்குறைக்கான இடைவெளியை நிரப்பும் நோக்கிலும் நிபுணத்துவ சேவையின் தேவைப்பாட்டை குறிப்பாக அரச வங்கிகளின் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கும் தகைமை பெற்ற கணக்காய்வாளர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு தேவைப்படுகின்றனர். இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசு அரசியலமைபின் 154 ஆம் உறுப்புரை மூலம் தகமை பெற்ற கணக்காய்வாளர்களை ஈடுபடுத்துவதற்கான அதிகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சு மற்றும் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம், தொடர்புடைய அமைச்சு, மற்றும் கணக்காய்வு கம்பனிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய விதத்தில் திணைக்களத்தின் கணக்காய்வு கட்டண குழுவின் அங்கீகாரத்தின் மீது குறித்த கணக்காய்வு கம்பனிகளுக்கு அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சேவைகளுக்காக 2017 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 58.38 மில்லியன் மற்றும் ரூபா 61.24 மில்லியன் என செலுத்தப்பட வேண்டியுள்ளது. தகமை பெற்ற கணக்காய்வாளர்களின் சேவையினைப் பெற்றுக் கொள்கையில் அவர்களால் முன்னர் மேற்கொள்ளப்பட்ட சேவைகளின் தரம், கம்பனியில் உள்ள பங்காளர்களின் எண்ணிக்கை, அவர்களுடன் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள கணக்காய்வுப் பயிலுனர்களின் எண்ணிக்கை போன்ற காரணிகள் கருத்திற் கொள்ளப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக கம்பனியின், நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயமொன்றான அவர்களின் சர்வதேச தொடர்புகள் மற்றும் அவர்களால் வழங்கப்படுகின்ற தொழில்சார் சேவைகளின் தரம் என்பன அவர்களை தெரிவு செய்யும் தேர்வுகளுககு உள்ளடக்கப்பட்டிருந்தன.

பொதுவாக, ஓர் குறித்த கம்பனிக்கு ஆகக் கூடிய அளவில் 05 ஆண்டுகளுக்காக ஓர் குறித்த கணக்காய்வு ஒப்படை தொடர்ந்து வழங்கப்படும்.

பிரதான 03 அரச வர்த்தக வங்கிகள் மற்றும் பத்தொன்பதாம் அரசியலமைப்பு திருத்தத்தினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடயப் பரப்பிற்கு உள்ளடக்கப்படட 50 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட அரச உரித்தினைக் காண்டுள்ள கம்பனிகள் உட்பட 2017 மற்றும் 2016 ஆண்டுகளில் முறையே 72 மற்றும் 180 நிறுவனங்களைக் கணக்காய்வு செய்வதற்காக பொதுத் தொழிலில் துறையில் ஈடுபட்டுள்ள

முறையே 27 மற்றும் 87 கணக்காய்வுக் கம்பனிகள் எனக்கு உதவி வழங்கின. மேலும் கணக்காய்வு பரீட்சகர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டமையால் திணைக்களத்தினால் குறித்த கம்பனிகள் நேரடிக் கணக்காய்விற்கு உட்படுத்துவதற்கும் பிரதான இரண்டு வர்த்தக வங்கிகளின் கிளைகளை கணக்காய்வு செய்வதற்காகவும் தகைமை பெற்ற கணக்காய்வாளர்களை நியமிக்காமல் இருப்பதற்கு எடுத்த தீர்மானம் காரணமாக 2016 ஆம் ஆண்டினை விட 2017 ஆம் ஆண்டின் போது ஈடுபடுத்தப்பட்ட ஒத்துழைப்பு பெற்றுக்கொண்ட கணக்காய்வு கம்பனிகளின் அளவு குறைவடைந்திருந்தன.

பாராளுமன்றத்திற்கு உதவுதல்

அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம், பொது நிதி மீதான முழுமையான கட்டுப்பாட்டினை பாராளுமன்றம் கொண்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களமானது, பொது முயற்சிகளின் நிதிப் பராமரிப்பும் சிக்கனமும், செயற்பாட்டு வினைத்திறனமும் செயற்திறனும் மீது பாராளுமன்றத்துக்கு நேரடியாக அறிக்கை சமர்ப்பிக்கும் கடமைப்பொறுப்புடன் அரசாங்கத்தின் வெளிவாரிக் கணக்காய்வாளராக செயற்பட்டு பொதுக் கணக்களிப்பொறுப்பு முறைமைக்கு பிரதான பங்களிப்பினை மேற்கொள்கின்றது. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள், பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் 125 மற்றும் 126 இன் கீழ் தாபிக்கப்பட்டுள்ளன முறையே அரசாங்க கணக்குகள் குழு மற்றும் பொது முயற்சிகள் குழு என்பவற்றின் கவனத்திற்கு எடுக்கப்படுகின்றன. பொதுக் கணக்குகளை பரிசோதிப்பதன் ஊடாக பொது நிதிகள் மற்றும் வளங்களினது பயன்படுத்தலைக் கருத்திற்கொண்டு சட்டமியற்றுவோருக்கு உதவுவதே இந்த இரண்டு குழுக்களினதும் வகிபாகமாகும். ஆகையால், பொதுத்துறையின் கணக்களிப்பொறுப்பு மற்றும் பயனுள்ள நல்லாளுகையினை உறுதிப்படுத்துதல் தொடர்பில் சிக்கலான வகிபாகமொன்று இந்த இரண்டு குழுக்களிற்கும் உள்ளன. இலகுவாக கூறுவதாயின், கூட்டுத்தாபனம் அல்லது பொது முயற்சியொன்றிலுள்ள கணக்காய்வுக் குழுவிற்குரிய ஒத்த சில பண்புகளை அரசாங்க கணக்குகள் குழு மற்றும் பொது முயற்சிகள் குழு கொண்டுள்ளன.

நிலையியல் கட்டளை 125 இன் படி, பொதுச் செலவினத்தை சமாளிப்பதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட பணத் தொகைகளின் பகிர்வினைக் காட்டுகின்ற கணக்குகள் மற்றும் குழு தேவையெனக் கருதி பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்பட்ட ஏனைய கணக்குகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளுடன் சேர்த்து பரிசோதித்தில் அரசாங்க கணக்குகள் குழுவின் கடமைப்பொறுப்பாக உள்ளது. பொதுவாக எந்தவொரு திணைக்களம், உள்ளூராட்சி அதிகாரசபை மற்றும் அவற்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் விடயம் தொடர்பில் பரிசோதிக்கப்பட்ட கணக்குகள், நிதியியல், நிதிசார் நடைமுறைகள், செயலாற்றல் மற்றும் முகாமைத்துவம் மீது அவ்வப்போது பாராளுமன்றத்திற்கு அரசாங்க கணக்குகள் குழுவினால் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் எவையேனும் எழுத்திலமைந்த அதிகாரச்சட்டத்தினால் அரசாங்கம் கையேற்ற வணிக முயற்சிகளின் கணக்குகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளுடன் சேர்த்து பரிசோதித்தில் நிலையியல் கட்டளை 126 இன் கீழ் தாபிக்கப்பட்டுள்ள பொது முயற்சிகள் குழுவின் கடமையாகும். அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் எவையேனும்

எழுத்திலமைந்த அதிகாரச்சட்டத்தினால் அரசாங்கம் கையேற்ற வணிக முயற்சிகளினதும் குழுவினால் பணிப்புரை வழங்கப்பட முடிந்த அவ்வாறான நிறுவனங்களினதும் பரிசோதிக்கப்பட்ட கணக்குகள், பாதீடுகளும் வருடாந்த மதிப்பீடுகளும், நிதியிடுதல்களும் முகாமைத்துவமும் மீது குழுவானது அவ்வப்போது பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். இரண்டு குழுக்களிற்கும் உரித்தான அங்கத்தவர்களின் உப குழுக்களை நியமிப்பதற்கு அரச கணக்குகள் குழு மற்றும் அரச முயற்சிகள் மீதான குழுவிற்கு அதிகாரமுள்ளதுடன் எந்தவொரு நபரையும் அழைத்து வினவுவதற்கும் அதிகாரமுள்ளது. அத்துடன், எந்தவொரு ஆவணத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது ஏனைய ஆவணத்தினை பரிசோதிப்பதற்கும் களஞ்சியங்கள் மற்றும் ஆதனங்களிற்கு பிரவேசிப்பதற்குமான அதிகாரம் அவற்றுக்கு உள்ளது.

பாராளுமன்றத்திலுள்ள ஆளும் தரப்பு மற்றும் எதிர்க்கட்சியினை பொருத்தமான விதத்தில் பிரதிநிதித்துவம் செய்வதற்கு ஏற்றவாறு அவற்றினை போதியளவில் உருவாக்குவதற்காக தெரிவுக் குழுவினால் பெயரிடப்படும் 26 அங்கத்தவர்களை மீளாய்வாண்டில் கொண்டிருந்தன. அரசாங்க கணக்குகள் குழு மற்றும் அரசாங்க பொது முயற்சிகள் குழு ஆகிய இரண்டு குழுக்களினதும் பரிசோதனைகளின் பின்னர் அவற்றின் பரிந்துரைகளை நிறைவேற்றுத் தரப்பினர் ஏற்றுக் கொள்கின்றனரா என்பது மாத்திரமன்றி அந்த பரிந்துரைகள் பயனுள்ள விதத்திலும் முழுமையாகவும் அமுல்படுத்தப்பட்டு, மிக முக்கியமாக நிதி செயற்திறன் மற்றும் சேவைகளின் தர நிலைமை தொடர்பில் நேர்சிந்தனையான மாற்றம் இடம்பெற்றுள்ளதா என்பதனை பரிசோதித்து, அமுலாக்கப்படுகின்ற செயன்முறை குறித்து குழுக்களிற்கு மீண்டும் அறிக்கை சமர்ப்பித்தல் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமைப்பொறுப்பிற்குள் உள்ளடங்குகின்றது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது அவரது பிரதிநிதிகளால் விசேடமாக கணக்காய்வில் நேரடியாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் உதவியுடன் குழுக்களிற்கு ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது. குழுக்களின் செயற்பாடுகளிற்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி முக்கியமான பணியொன்றை மேற்கொள்வதுடன் மீளாய்வுக்குரிய விடயம் தொடர்பில் தேவைப்படுகின்ற அனைத்து தகவல்களையும் அபிப்பிராயத்தையும் வெளிப்படுத்தி குழுக்களிற்கு ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

பின்புலத்திலுள்ள தகவல்களை வழங்குதல் மற்றும் விவாதிக்கப்படுகின்ற விடயத்துடன் தொடர்புடைய கருத்துக்களை தெரிவிப்பதன் மூலம் குழுக்களிற்கு உதவுதலே கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பணியாகும். கணக்குகள் குழுக்களின் விசாரணையின் போது தகவல்களை வழங்குதல், குழுக்களிற்கு கருத்துரை தெரிவித்தல் மற்றும் குழுக்களின் உறுப்பினர்களால் கேட்கப்படுகின்ற வினாக்களிற்கு விடையளித்தலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. வினவப்பட வேண்டிய வினாக்கள் தொடர்பில் நடைமுறையொன்றை அல்லது எவையேனும் கலந்துரையாடப்பட வேண்டிய பிரச்சினை தொடர்பான பின்புலத் தகவல்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதி முன்மொழிகின்றார்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு தொடர்புடைய அரசாங்க நிறுவனத்தின் செயற்பாட்டுச் செயலாற்றலை பரிசோதிப்பதற்காக குறித்த அரசாங்க நிறுவனத்திற்கு ஏறத்தாழ ஒரு மாதகால அவகாசம் குழுவினால் வழங்கப்படுகின்றது. கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் நாளதுவரையாக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் குறித்துரைக்கப்பட்ட

காலத்தில் குழுவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். குழுவில் கலந்துரையாடப்படுவதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சிறு குறிப்பொன்றை தயாரித்துக்கொள்வதற்கு ஏற்றவிதத்தில் பதிலளித்தலொன்றை கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனம் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடங்கியுள்ள பரிந்துரைகளை கணக்காய்விற்கு உட்படுத்தப்படுகின்ற நிறுவனத்தினால் அமுல்படுத்தப்பட்டமை கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் கருத்திலெடுக்கப்பட்டு கணக்காய்வு அறிக்கை மூலம் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்களைக் கொண்டு சிறியளவிலான கலந்துரையாடல் குறிப்பொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தயாரிக்கப்படுகின்றது. ஆகையால். குழுவின் உறுப்பினர்களிற்கு அந்த கணக்காய்வு அவதானிப்புக்களிலிருந்து கணக்காய்வுக்கு உட்பட்டுத்தப்பட்ட நிறுவனத்தின் தற்போதைய நிலைமையினை தெளிவாக புரிந்துகொள்ள முடியும். மேலும், முன்னர் நடாத்தப்பட்ட கூட்டங்களில் வழங்கப்பட்ட பணிப்புரைகளை அமுல்படுத்தலின் செயன்முன்னேற்றம் அந்த கலந்துரையாடல் குறிப்பில் வேறாக உள்ளடக்கப்படுகின்றது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விதிக்கப்படும் மிகை அறவீடு

இலங்கையில் 335 உள்ளூராட்சி நிறுவனங்களில் காணப்படுவதுடன், 23 மாநகர சபைகள், 41 நகரசபைகள் மற்றும் 271 பிரதேச சபைகள் அவற்றுள் உள்ளடங்கும் இந்த உள்ளூராட்சி நிறுவனங்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் தொடர்பான செயன்முன்னேற்றம் மீதான தகவல்கள் நியாயமானவை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தின் அனைத்துப் பதில்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தினால் மீளாய்விற்கு உட்படுத்தப்படுகின்றன. மீளாய்வின் நிறைவின் பின்னர் தொடர்புடைய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது ஆளுகைச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற

154(1) ஆம் உறுப்புரை மற்றும் உரிய கட்டளைச் சட்டங்கள் மற்றும் அதிகாரச்சட்டங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்விற்கு உட்படுத்தப்படும்.

அந்த கட்டளைச் சட்டங்கள் மற்றும் அதிகாரச் சட்டங்களில் சட்டத்திற்கு முரணாக கொடுப்பனவு விடயங்கள், கவனயீனம் அல்லது மோசடியினால் ஏற்பட்ட நட்டம் மற்றும் கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், குறிப்பிடப்படாத விடயங்களை மிகை அறவீடு செய்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அந்த அதிகாரத்தின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான 11 வருட காலப்பகுதியினுள் உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான 843 சார்பினருக்கு ரூபா 69.36 மில்லியன் தொகையான 122 மிகை அறவீட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. 2018 யூலை 15 ஆந் திகதி வரையிலும் அவற்றுள் ரூபா 3.93 மில்லியன் அல்லது 5.66 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களால் மிகை அறவீட்டினை அறவீடு செய்யும் நடைமுறை தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்படும் செயலாற்றல் கணக்காய்வு

அரச நிறுவனமொன்றில், நிகழ்ச்சித்திட்டமொன்றில், வியாபாரமொன்றில் மற்றும் செலவின விடயமொன்றின் தெரிவு செய்யப்பட்ட துறைகள் தொடர்பாக அரச நிறுவனங்களின் செயற்பாடுகளில் சிக்கனம், செயற்திறன், வினைத்திறன் மற்றும் சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு உரிய கணக்காய்வு அவதானிப்புக்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய மேம்படுத்தல் தொடர்பான பரிந்துரைகள் உட்பட அறிக்கையிடல் செயலாற்றல் கணக்காய்வின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

அரச நிறுவனங்களில் வெவ்வேறு துறைகள் தொடர்பாக ஏனைய கணக்காய்வு கிளைகளிலிருந்து சமர்ப்பிக்கப்படும். முன்மொழிவுகள் மற்றும் இந்த செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு பிரிவின் மூலம் தெரிவு செய்யப்படுகின்ற பொருளாதார சமூக மற்றும் சுற்றாடல் தாக்கம் போன்ற விஷேட துறை ஊடாக சுற்றாடல் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் நிதிக் கணக்காய்வு அறிக்கைகளுக்கு மேலதிகமாக சமர்ப்பிக்கப்படுகின்ற செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு அறிக்கைகளும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்றன. இத்துறைக்குரிய திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பயிற்சியளித்தலும் மேற்கொள்ளப்படுகின்றது.

செயலாற்றல் கணக்காய்வு செயற்பாடுகள் தொடர்பில் அலுவலக மயப்படுத்தப்பட்ட பாதீட்டு முறைமையொன்றை செயற்படுத்தல் மற்றும் ஒவ்வொரு அலுவலகத்திற்கும் பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் (Key Performance Indicators) நிர்ணயித்தல் மிகவும் முக்கியமானதாக இருந்த போதிலும் இலங்கையில் தற்போது அலுவலகத்தை அடிப்படையாகக் கொண்டு பாதீட்டு முறைமையும் செயலாற்றல் குறிகாட்டி நிச்சயிக்கப்பட்டு செயற்படுத்தப்பவில்லை. இதன் காரணமாக ஒவ்வொரு துறைக்குரிய செயலாற்றல் குறிகாட்டிகள் எம்மால் தீர்மானிக்கப்பட்டு செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இக்காலப்பகுதிக்குரித்தாக மேற்கொள்ளப்படுகின்ற செயலாற்றல் கணக்காய்வு அறிக்கைகளின் அவதானிப்புக்கள் பொறிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான இலங்கையின் தயார்படுத்தல்

2015 ஆம் ஆண்டிள் போது ஐக்கிய அமெரிக்க குடியரசின் நிவ்யோர்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுக் கூட்டத்தின் போது நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் வெளியிடப்பட்டது. எதிர்கால பரம்பரைக்கு தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு உள்ள இயலுமைக்கு தடையொன்று இல்லாத வகையில் தற்போதைய தேவைகளை நிறைவேற்று நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக குறிப்பிடப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் அமைப்பு நிலைபேறான அபிவிருத்தியின் போது பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் கன மூன்று பிரிவுகளை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் அப்பிரிவுகள் 17 நோக்கங்களின் கீழும் 169 இலக்குகளின் கீழும் குறிப்பிடப்பட்டுள்ளன. அவ்வாறே நிலைபேறான அபிவிருத்தியின் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக 244 குறிகாட்டிகள் அறிமுப்படுத்தப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகளின் அங்கத்துவ நாடென்ற வகையில் இலங்கை 2030 ஆம் ஆண்டளவில் அந்நோக்ககங்களை நிறைவேற்றுவதற்காக கட்டுப்பட்டுள்ளது. இலங்கை நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பான பின்வரும் படிமுறைகளை எடுத்துள்ளது.

- நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இலங்கைக்கு உரித்தாக்க 2015 ஆம் ஆண்டின் போது நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு தாபிக்கப்பட்டமை.
- நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கையொன்றையும் தந்திரோபாயமொன்றையும் தயாரித்தல், அபிவிருத்தி செய்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றிற்காக 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தை நிறைவேற்றியமை.
- நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான பாராளுமன்றத்தில் விஷேட குழுவொன்றை அமைத்தல்
- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக தற்போதைய நிலைமையை தெளிவுபடுத்திக் கொள்வதற்காக துரித ஒன்றிணைந்த மதிப்பீட்டினை (Rapid Intergrated Assessment) மேற்கொள்ளல்.
- நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி விஷேட குழுவொன்று (Presidential Export Committee) தவிர்த்தல்.
- நிலைபேறான அபிவிருத்திக்குரிய “2030 தொடராக்கு” வரைபினை தயாரித்தல்.
- நிலைபேறான அபிவிருத்தி அமைச்சினால் நிலைபேறான அபிவிருத்தி பொறுப்புக்களை செயற்படுத்துவதற்குரிய 425 அரச நிறுவனங்கள் தொடர்பாக வரைபடமாக்களை வரைவாக்குதல்.
- குடிசன மற்றும் புள்ளிவிபரங்கள் திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்தி குறிகாட்டிகள் தொடர்பாக அறிக்கையை வெளியிடல்.
- இலங்கையின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் பிரதான செயற்பாடுகளை மேற்கொள்ளும் பிரதான நிறுவனங்களாக நிலைபேறான அபிவிருத்தி வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சு, தேசிய கொள்கைள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு, தேசிய பெறுகை திணைக்களம், தேசிய பாதீட்டு திணைக்களம், குடிசன மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் செயற்திட்ட ஒழுங்குபடுத்தல் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம் என்பவற்றிற்கு பொறுப்பு கையளிக்கப்பட்டமை.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் கீழே காட்டப்பட்டுள்ள பின்னடைவு நிலைமைகள் காரணமாக நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய துறைகள் இருப்பது கண்டறியப்பட்டன.

- 2018 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்த "2025 தொலைநோக்கு" அல்லாவிடில் நீண்டகால அபிவிருத்திட்டத்தினுள் நிலைபேறான அபிவிருத்திப் பொருளாதார சமூக மற்றும் சுற்றாடல் ஆகிய மூன்று துறைகளுக்கு இடையே பொருளாதார மற்றும் சமூக துறைகள் தொடர்பாக மாத்திரம் கூடிய நிறையளித்தல் இடப்பெற்றுள்ளது.
- நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களைத் தயாரிப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.
- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களுடன் சீராக்குவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட துரித சமத்துவத்துடனான மதிப்பீட்டின் பிரகாரம் 169 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கிடையே 64 இலக்குகள் மாத்திரம் முழுமையாகவும் 45 இலக்குகள் அரைப்பங்கிலும் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. இலங்கைக்கு உரித்தல்லாத 16 இலக்குகளும் அரச முதலீட்டு நடவடிக்கைகளுடன் இணங்காத 44 செயற்திட்டங்கள் காணப்பட்டன.
- நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் செயற்படுத்துவதற்கு போதியளவான நிதி ஏற்பாடு 2017 பாதீடு மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
- நிலைபேறான அபிவிருத்தியின் போது மிகவும் முக்கியமான அனைவரினதும் பங்களிப்பு மற்றும் எந்தவொருவராலும் கைவிடாமை என்ற எண்ணக்கருக்களை செயற்படுத்துவதற்கு முக்கியம் வாய்ந்த அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் போதியளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- தனியார் துறையின் செயற்பாடு பங்களிப்பினை பெற்றுக்கொள்வது தொடர்பாக நடைமுறையொன்று கட்டியெழுப்பப்பட்டிருக்கவில்லை.
- நிலைபேறான அபிவிருத்தியை அளவிடுவதற்காக தேவையான 244 குறிகாட்டிகளில் 46 குறிகாட்டிகளுக்காக மாத்திரம் குடிசன மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தரவுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. மேலும் 29 குறிகாட்டிகள் மற்றும் 131 இற்காக தரவுகள் முறையே குடிசன மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் ஏனைய நிறுவனங்களினாலும் தயாரிக்கப்பட வேண்டியிருந்தது.
- நிலைபேறான அபிவிருத்தி செயன்முன்னேற்றத்தை மதிப்பிடல், ஒழுங்குபடுத்தல் மற்றும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தேசிய ரீதியாக கட்டியெழுப்புவதற்கு முடியாதிருந்தது.

மேலே குறிப்பிடப்பட்ட பின்னடைவு நிலைமைகளை சீராக்குவதற்கும் நிலைபேறான அபிவிருத்தி செயற்பாடுகள் சரியான வழிக்கு கொண்டுவருவதற்கும் பின்வரும் படிமுறைகள் எடுக்கப்பட வேண்டியிருந்தன.

- இலங்கையில் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களை தயாரித்தல் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் இணக்கம் செய்தல்
- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக சகல தரப்பினரையும் அறிவூட்டுதல் மற்றும் நிதி மற்றும் பௌதீக வசதிகளை அதிகரித்தல்.
- இயலளவு அபிவிருத்தி.

- குறிகாட்டிகளை தயாரித்தல் மற்றும் தரவு அமைத்தல் தொடர்பாக வரிசை அமைச்சிற்கும் அதன் கீழ் காணப்படும் ஏனைய நிறுவனங்களுக்கு வழிகாட்டல் வழங்கல்.

- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை ஒழுங்குபடுத்துதல், மீளாய்வு, பின்தொடர் நடவடிக்கை மற்றும் அறிக்கையிடல் பிரிவினால் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.

புற்றுநோயாளர்களுக்காக உயர்தரத்திலான அதிசக்தி வாய்ந்த கதிர்வீச்சு உபகரணங்களை ஸ்தாபித்தல்

புற்றுநோயாளர்களில் 80% இற்கு அண்மித்த அளவில் கதிர்வீச்சு சிகிச்சை வழங்கப்படுகின்றது. இலங்கையில் தற்போது பயன்படுத்தப்படும் பழைய கதிர்வீச்சு சிகிச்சைக்குப் பதிலாக அதி கச்தி வாய்ந்த கதிர்வீச்சு சிகிச்சை வழங்குவதற்கான செயற்திட்டம் 2010 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டு 31 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு ஸ்தாபிப்பதற்கு தேவையான பங்கர் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையின் சகல மாகாணங்களும் மேவுகை செய்யப்படக்கூடிய வகையில் 10 மவட்டங்களில் 10 வைத்தியசாலைகளுக்காக அதி கச்தி வாய்ந்த கதிர்வீச்சு சிகிச்சை உபகரணங்களை தாபிக்கம் செயற்திட்டம் 2 ஆம் கட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்தன. முதலாவது கட்டத்தின் கீழ் 04 வைத்தியசாலைகளுக்காக 4 தேவையான உபகரணங்கள் ரூபா 1,087.6 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2014 ஆம் ஆண்டின் போது அதில் உபகரணமொன்று மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் ஸ்தாபிக்கப்பட்டு நோயாளர்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்தது. ஏனைய உபகரணங்கள் 2016 ஆம் ஆண்டின் போது வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2017 மே மாதம் வரையிலும் பொருத்துதல் நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. இவ்வுபகரணத்தைப் பயன்படுத்துவதற்காக உதவிபுரியும் சீரீ சிமியுலேடர் உபகரணத்தை கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படாமையால் உபகரணம் பொருத்தப்பட்டிருந்தும் அவற்றிலிருந்து சிகிச்சையளிக்க முடியாத சிக்கல்கள் காணப்பட்டது. அந்த உபகரணங்களை ஸ்தாபிப்பதற்காக தேவையான பதுங்கு குழிகளின் நிர்மாண நடவடிக்கைகள் பொறியியல்சார் செயற்பாடுகள் தொடர்பான உசாத்துணை பணியகத்திற்கு கையளிக்கப்பட்டு அதற்காக ரூபா 813.7 மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு கையளிகப்பட்டிருந்தது. 2017 மே 31 ஆந் திகதி வரை குறித்த நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

பட இலக்கம் 01 -------- புற்றுநோயாளர்களைப் பரிசோதிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற உயர்வலு கொண்ட கதிர்வீச்சு இயந்திரம் (Linear Accelerator)

புற்றுநோயாளர்கள் காத்திருக்கும் பட்டியலில் இருக்கும் காலத்தை குறைப்பது இத்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு செய்யப்பட்ட 04 உபகரணங்களில் 03 உபகரணங்கள் பொருத்தப்பட்டு சிகிச்சை வழங்குவதற்கு முடியாமையால் செயற்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் காத்திருக்கும் பட்டியலில் தரித்திருக்கும் காலத்தை குறைப்பதற்காக அவ்வாறான 05 உபகரணங்கள் நோயாளிகளுக்காக தேவையாக இருந்தன. அவ்வாறே 2020 ஆண்டளவில் அத்தேவைப்பாடு 09 உபகரணங்கள் வரை அதிகரிக்குமென வைத்தியர்களின் பரிந்துரைத்திருந்தனர். அரசு இந்த இயந்திரங்களை புற்றுநோய் வைத்தியசாலைகளுக்கு வழங்குவதால் உரிய தரமான நாளதுவயொக்கப்பட்ட அதிசக்தி கதிர்வீச்சு சிகிச்சையை புற்றுநோயாளர்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அவ்வியந்திரங்களை உரிய காலத்தில் ஸ்தாபித்து நோயாளர்களின் எதிர்பார்ப்பினை நிறைவேற்ற முடியுமென பரிந்துரைக்கப்படுகின்றது.

புகை பரிசோதனை நிகழ்ச்சித்திட்டம்

தொழில்நுட்ப புரட்சியின் பின்னர் எரிபொருள் பயன்பாட்டினால் காபனீரொக்சைட் (CO). நைதசன் டயயொக்சைட் (NO_2) சல்பர் டயொக்சைட் (SO_2) ஹைட்ரோகாபன் (HC) மற்றும் நுண்துணிக்கை (Pm_{10}) உட்பட பாதகமான வாயு வகைகள் வளிமண்டலத்திற்கு விடுவிக்கப்படுவது அதிகரிப்பதால் வளிமண்டலத்தின் வெப்பம் அதிகரிப்பதில் தாக்கமளித்துள்ளது மோட்டார் வாகனங்களின் பாவனை அதிகரித்தமை காரணமாக எரிபொருள் பயன்பாடு அதிகரித்திருந்ததுடன் அந்நிலைமை சுற்றாடல் மாற்றங்களுக்கும் தாக்கமளித்திருந்தது. இதற்கு தீர்வொன்றாக அரசினால் புகை பரிசோதனை நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

படம் 02 -------- புகை பரிசோதனை நிலையம்

இலங்கையின் வளி மாசடைவதுடன் மோட்டார் வாகனங்களிலிருந்து வெளியேறும் விஷப் புகையும் காணப்படுவதால் உரிய நியமங்களின் பிரகாரம் வாகனங்களை பராமரிப்பதாலும் எரிபொருள் பயன்பாட்டை செயற்திறனான

மட்டத்தில் பேணுவதாலும் எரிபொருள் எரிவினால் சேரும் விஷ வாயு அளவினைக் குறைப்பதற்காக புகை பரிசோதனை நிகழ்ச்சித்திட்டம் 2008 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. புகை பரிசோதனை நடவடிக்கைகளை 02 கம்பனிகள் மூலம் நிறைவேற்றுவதற்காக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரால் அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. மேல் மாகாணத்தில் தாபிக்கப்பட்டுள்ள சில புகை பரிசோதனை நிலையங்களுக்காக சுற்றாடல் இணக்கச்சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. வளிமண்டலத்தில் காணப்பட வேண்டிய ஆகக் கூடிய பாதகமான வாயு அளவு தொடர்பான நியமங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய பாதகமான வாயு உள்ளவாறாக காணப்படும் அளவு நியமத்துடன் ஒப்பீட்டு நாளதுவரையான தகவல் வழங்கும் தொழில்நுட்ப வசதிகள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடம் காணப்படவில்லை. அதற்காக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளை ஆக்கபூர்வமாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்தாமையால் புகை பரிசோதனை நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தியதால் சுற்றோட்டத்தில் வளி நிலைமையில் இடம்பெறும் தரமான மாற்றத்தை அளவிடுவதற்கு முடியாதிருந்தது. 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை திசெம்பர் மாதங்களில் மேல்மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 19 நிலையங்களில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் மெற்கொள்ளப்பட்ட வளி நிலைமை பரிசோதனையில் (கந்தகம்) சல்பர் அளவு படிப்படியாக அதிகரித்திருந்தமை கண்டறியப்பட்டிருந்தது.

புகைப்பட இல. 03 …….. வீதிகளில் ஓட்டத்தில் பின்வரும் அதிக புகையுடனான மோட்டார் வாகனங்கள்

2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை மருந்துவ தரவு பகுப்பாய்வின் போது சுவாச நோயளர்கள் மற்றும் சுவாச நோய் காரணமாக இடம்பெற்ற மரணங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பொன்று தென்பட்டது. வளி மாசடைதல் சுவாச நோய் தொடர்பில் வளி மாசடைதல் மூலமும் ஏற்படலாம். அரச நிறுவனங்களுக்கு சொந்தமான மோட்டார் வாகனங்களுக்காக புகை பரிசோதனை சான்றிதழ் கட்டாயமாக பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென 2011 திசெம்பர் 02 ஆந் திகதி 454 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை போக்குவரத்துச் சபை உட்பட அரசின் வாகனங்களுக்காக அந்த அறிவுறுத்தல் பின்பற்றப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் கண்டறியப்பட்டன.

2009 ஆம் ஆண்டின் போது புகை பரிசோதனை நிதியம் தாபிக்கப்பட்டிருந்ததுடன் நிதியத்திற்கு சொந்தமான நிதியங்களிலிருந்து கருத்திற் கொள்ளப்பட வேண்டிய அளவொன்று

நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்படாமல் திறைசேரியில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிதியத்திற்கு இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் முகவர் நிறுவனத்தினால் உரிய காலத்தில் தரவுகள் சமர்ப்பிக்கபடப்டிருந்ததுடன். உரிய காலத்தில் அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டோ அல்லது தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டோர் இருக்கவில்லை.

புகை பரிசோதனை நிலையங்களில் முறையான பயிற்சி பெற்ற தொழில்நுட்பவியலாளர் குறைவாக இருத்தல். பயிற்சி பெற்ற ஊழியர்கள் குறுங்காலத்தில் சேவை புரிதல் மற்றும் அவர்களின் நலன்புரி விடயங்கள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் அந்நிலையங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் குறைவாக இருந்தன. இதனால் புகை பரிசோதனை நிலையங்களில் நடவடிக்கைகள் முறையாக கண்காணிப்பதன் மூலம் புகை பரிசோதனை நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வளி மாசடைதல் இன்றிய சுற்றாடலொன்று ஏற்படுத்த வேண்டியிருந்தது நாளதுவரையாக்கப்பட்ட வளி நிலைமையொன்று தொடர்பான தகவல்கள் புகை பரிசோதனை நிலையங்களில் காட்சிப்படுத்துவதற்கும் பொது மக்கள் தாம் செலுத்தும் பணத்திலிருந்து வளி மாசடைதலிருந்து கட்டுப்படுத்துவதாக அறிந்து கொள்வதால் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான சாதகமான எண்ணக்கருவொன்றை ஏற்படுத்த முடியுமென பரிந்துரைக்கப்படுகின்றது.

இலங்கையின் வீதிப்பாதுகாப்பு

2010 மார்ச் மாதத்தின் போது நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுக் கூட்டத்தின் போது 64/255 ஆம் முன்மொழிவாக வீதிப் பாதுகாப்பிற்கான செயற்பாடு பத்தாண்டாக 2011–2020 வரையான காலப்பகுதி பெயரிடப்பட்டிருந்தது. இலங்கையும் இந்த பிரேரணையில் கையொப்பமிட்ட போது தரப்பினரினராக இருந்தது. வீதிப்பாதுகாப்பு தொடர்பான தேசிய மன்றம் இலங்கை வீதிப் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் நிறுவனமொன்றாகும். அரச மற்றும் அரச சார்பற்ற 17 நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய இத் தேசிய சபை தனது கடமைகளை நிறைவேற்றி வருகின்றது. வீதிப் பாதுகாப்பிற்காக நடவடிக்கை எடுக்கும் பத்தாண்டு சட்டகம் பிரதான பத்து பிரிவுகளுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. அதாவது வீதிப்பாதுகாப்பு இலக்குகளினை கட்டியெழுப்புதல் பாதுகாப்பான வீதி நிர்மாணம் மற்றும் முறைமை முகாமைத்துவ தொடர்பான தாக்கம், பாதுகாப்பான வாகன ஓட்டம் தொடர்பில் தாக்கம், வீதிகளைப் பயன்படுத்துவோரின் நடத்தை முறையில் தாக்கம் மற்றும் விபத்துகளின் பின்னர் ஆதரவளிப்பதாகும்.

நிழற்படம் 04....வீதிகளில் இடம்பெறும் விபத்துக்கள

நிழற்படம் 05..... வீதிகளில் இடம்பெறும் விபத்துக்கள்

அப்பிரதான ஐந்து பிரிவுகள் தொடர்பாக ஒவ்வொரு அரச நிறுவனங்களும் வீதி பாதுகாப்பு பத்தாண்டின் முன்னைய ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

- வீதிப்பாதுகாப்பு தொடர்பான தேசிய மன்றத்திற்குரிய அதிகாரங்கள் உட்பட பௌதீக மற்றும் மனித வளங்கள் போதியளவில் இல்லாமை
- பொலிஸ் திணைக்களத்தின் மோட்டார் வாகன பிரிவிற்கு இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களில் 72 சதவீதம் மோட்டார் வாகன முகாமைத்துவ பாடநெறி பின்பற்றப்படாமை. அவ்வாறே அப்பயிற்சி பிரிவில் இடவசதிகள் போதியளவில் இல்லாமை.
- வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய மன்றத்தில் வீதி விபத்துக்கள் தொடர்பான தரவு முறைமையொன்று ஸ்தாபிக்கப்படாமை மற்றும் மோட்டார் வாகன பொலிஸ் தலைமையகத்தின் மூலம் அவ்வாறான தரவு முறைமையொன்று பேணப்பட்டிருந்த போதிலும் அதற்காக வீதிப்பாதுகாப்பு தொடர்பான தேசிய மன்றம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம், சுகாதார அமைச்சு மற்றும காப்புறுதி நிறுவனங்கள் அந்த தரவு முறைமையுடன் தொடர்புபடுத்தப்படாமை.
- பாதுகாப்பான வீதி வடிவமைப்பின் போது வீதிப்பாதுகாப்பு கணக்காய்வு நடாத்தப்பட வேண்டியிருந்தது. அது தொடர்பாக நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் சமூகமளித்த பொறியியலாளர்களின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்திருந்த போதிலும் வீதிப் பாதுகாப்பு கணக்காய்வு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பொறியியலாளர் தவறுகள் காரணமாக வீதி விபத்துக்கள் இடம் பெற்றிருந்த போதிலும் அத்தவறுகளை அகற்றுதல் உரிய நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- பாடசாலை வேண் வண்டிகளில் தரம் மற்றும் ஓட்ட நிலைமை தொடர்பாக மோட்டார் வாகனப் பிரிவில் மேற்கொள்ளல் பரிசோதனைகள் போதியதாக இருக்கவில்லை. A1, A8 மற்றும் A33 வீதிகள் போதியளவில் வெளிச்ச மூட்டப்படாமை, பாதுகாப்பற்ற புகையிரத குறுக்கு வீதிகள் இருந்தமையால் வீதி விபத்துக்கள் இடம்பெற்றிருந்தது.
- பயன்பாட்டில் இல்லாத மோட்டர் வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்யாத சந்தர்ப்பங்கள் கண்டறியப்பட்டன. பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் மோட்டார் வாகன பரிசோதகர்களால் ஓட்டத்திற்கு பொருத்தமற்ற வாகனங்களை இனங்கண்டு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அக்குறைபாடுகளை திருத்தி தடை கட்டளை அகற்றாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

- சாரதிப் பாடசாலைகளின் பதிவுகள் புதுப்பிக்கப்படாமை மற்றும் வாகன ஓட்டத்தின் போது இடம்பெறும் குறைபாடுகளை இனங்காணப்பதற்காக மோட்டார் வாகன பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு போதியளவு உபகரணங்கள் வழங்கப்படாமை.

- விபத்துக்களின் பின்னர் ஆதரவினை பயன்படுத்தவதற்கு தேவையான வளங்கள் போதியளவில் காணப்படவில்லை. அதன் பிரகாரம் அவசர விபத்துக்கள் சேவைக்கான தேவையான சுகாதார மனித வளங்கள் போதியளவில் காணப்படாமை, சிகிச்சைக்கள் தேவையான வீதிகள் போதியளவில் காணப்படாமை மற்றும வசதிகள் போதியளவில் காணப்படாவில்லை.

  அதன் பிரகாரம் வீதிப் பாதுகாப்பிற்காக தொடர்புபடும் சகல நிறுவனங்களில் கடமைகள் குறிப்பாக இனங்காணப்படாமை. அவற்றை கையளித்தல் மற்றும் கண்காணிப்பு மூலம் வீதி விபத்துக்களை குறைத்துக் கொள்வதற்கும் அதற்கு மேலதிகமாக சாரதிகளினதும் பயணிகளின் தேர்வு மற்றும் பங்களிப்பும் வீதி விபத்துக்களை குறைப்பதற்காக அத்தியாவசிய குறிகாட்டியாக இருந்தது.

இலங்கை தூர சேவைகளில் ஈடுபடுத்தப்படும் அரைச் சொகுசு பேருந்து சேவை

இலங்கையின் செயற்திறனான பேருந்து சேவையொன்றை செயற்படுத்துவது தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கடமை பொறுப்பாக உள்ளது. அதற்காக செயற்படுத்தப்படும் பேருந்து சேவையொன்றான அரைச் சொகுசு பேருந்து சேவையின் நோக்கம் சாதாரண பேருந்து கட்டணத்தின் ஒன்றரை மடங்கு (1.5) பேருந்து கட்டணமொன்றை அறவிட்டு ஆசனங்களின் எண்ணிக்கைக்கு மாத்திரம் பிரயாணிகளை கொண்டு செல்லல், பிரயாணிகளுக்கு வசதியான முறையில் பிரயாணம் செய்யக்கூடியதாக இருத்தல் மற்றும் அனுமதிக்கப்பட்ட பேருந்து தரிப்பிடங்களில் மாத்திரம் நிறுத்துதல் போன்ற நிபந்தனைகளை கடைப்பிடித்து தூர சேவை பிரயாணிகளுக்கு வசதியாக பிரயாணத்தின் இறுதியை நோக்கி செல்வதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.

1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழ் நடாத்தப்படும் அரைச் சொகுசு பேருந்து சேவையிலிருந்து பயணிகளுக்கு செயற்திறனான மற்றும் ஆக்கபூர்வமான சேவையொன்று நடைபெறுகின்றதா என்பதை மதிப்பீடு செய்வதே கணக்காய்வின் நோக்கமாகும். அரைச் சொகுசு தனியார் பேருந்துகளுக்கு சேவை அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அந்த அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் மீறும் தன்மையின் பிரகாரம் அனுமதிப்பத்திர உரிமையாளர்களிடம் நிர்வாகக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது. அதற்காக மேற்கூறிய சட்டத்தில் ஏற்பாடுகள் காணப்படவில்லை. இதனால் அந்த ஏற்பாடுகளை உள்ளடக்கி சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்தது. செல்லுபடியான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் இல்லாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்திய 08 தனியார் பேருந்துகளுக்கு நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நடமாடும் பரிசோதனை அறிக்கை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. தொடர்புபடுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகள் மீறப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அநேகமானவை ஒரே தவறினை மீண்டும் மீண்டும் பல தடவைகளில் மேற்கொள்ளப்பட்ட

சந்தர்ப்பங்களில் அனுமதிப்பத்திர உடமையாளர்கள், சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் தாமதமாக வருகை தருவதால் தவறுகளுக்காக நடவடிக்கை எடுத்தலில் தாமதமான சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

புலனாய்வு கணக்காய்வு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவம் தொடர்பான கணக்காய்வு நடவடிக்கைகள்

ஆளொருவர் அல்லது குழுவொன்றினால் முறைகேடாகவோ அல்லது சட்டத்திற்கு முரணான வகைக்கு சாதகமான அல்லது நலனொன்றையோ பெற்றுக்கொள்வதற்கு உள்ள இடர் தொடர்பான அது தொடர்பான அடிப்படையை பரீட்சித்தல் புலனாய்வுக் கணக்காய்விலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பத்தின் போது மோசடிகள் கண்டுபிடித்தல் மற்றும் அவற்றைத் தவிர்ப்பதற்கு கட்டுப்பாட்டு முறைமையைப் பலப்படுத்துவது தொடர்பில் புலனாய்வு கணக்காய்வின் போது கருத்திற் கொள்ளப்படுகின்றன.

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதினெட்டாவது உறுப்புரை திருத்தத்தின் மூலம் அரச நிதியளித்தலை முறையாக முகாமை செய்வதற்காக அரச கணக்காய்வு பலப்படுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வு நிறுவனங்களின் கடமைகளுக்குரிய கோவைகளைப் பரீட்சிப்பதற்கு மேலதிகமாக புலனாய்வை விரிவுபடுத்தும் நோக்கில் பொது மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஆணைக்குழுக்களின் வேண்டுகோள்கள், அரசாங்க கணக்கு குழு, பொது முயற்சிகள் தொடர்பான குழுக்களின் பிரதிநிதி, நிறுவனத் தலைவர்களின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகங்களின் மூலம் வெளிப்படுத்தப்படும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதிலிருந்தும் அரச நிதி முகாமைத்துவத்தை செயற்திறனாக மேற்கொள்வது தொடர்பிலும் புலனாய்வுக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதனுடன் அண்மித்ததாக திணைக்களத்தினால் உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் திறமையை வளர்த்துக் கொள்வதற்கான நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கும், பௌதீக வளங்கள் துரித அழைப்பு இலக்கங்கள், மின்னஞ்சல் போன்றவற்றை மேம்படுத்துவதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

விஷேட புலனாய்வு பிரிவினால் மீளாய்வாண்டின் போது முக்கியமானதும் துரிதமாக கவனத்தை செலுத்த வேண்டிய பிரதிநிதித்துவம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 35 பிரதிநிதித்துவங்கள் தொடர்பாக ரூபா 17.38 மில்லியன் செலவினங்களைப் பரீட்சித்த போது அரசிற்கு ஏற்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட நட்டம் ரூபா 14.44 பில்லியனாக இருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளுக்குரிய முக்கியமான அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

தகைமைகளை பூர்த்தி செய்யாதிருந்த ஒருவர் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டமை.

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் பணிப்பாளர் பதவிக்காக பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அதற்காக நேர்முக பரீட்சை குழுவொன்று நியமிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அப்பதவிக்காக ஆகக்குறைந்த தகைமையாக கலாநிதி பட்டத்திற்கு பின்னர் 05 வருடங்கள் அல்லது பட்டபின் படிப்பின் பிரகாரம் 20 ஆண்டுகளோ பட்டப்பின் சேவை அனுபவமொன்று தேவையென முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆகக் குறைந்த தகைமைகளுக்கு இடையே கலாநிதி பட்டத்தின் பின்னர் 05 வருடங்களோ பட்டபின் படிப்பு பட்டத்தின் பின்னர் 20 வருடங்கள் பட்டபின் சேவை அனுபவமொன்று இல்லாமை என்ற காரணங்களின் பேரில் தகைமையில்லாத விண்ணப்பதாரியொருவராக

இனங்காணப்படாதிருந்த விண்ணப்பதாரியொருவர் 2017 மார்ச் 06 ஆந் திகதி முதல் பணிப்பாளர் நாயகப் பதவிக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

கட்டிடங்களை வாடகை எடுத்தலின் பெறுகை

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் தலைவர் 2016 ஒக்தோபர் 31 ஆந் திகதி முதல் 2017 மே 20 ஆந் திகதி வரை நிறுவன பணிப்பாளர் பதவியில் பதில் கடமை புரிவதற்கும் நியமிக்கப்பட்டிருந்தார். அக்காலப்பகுதியில் ரூபா 178.25 மில்லியன் நிதி பெறுமதியுடைய 22 பெறுகை தீர்மானங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதற்கு இடையே கொழும்பு 05 அல்விட்டிகல மாவத்தையில் அமைந்துள்ள 22,000 சதுர அடி அளவிலான ஏழு மாடிக் கட்டிடமொன்றை 2 ½ வருடங்களாக மாதமொன்றுக்கு ரூபா 2.50 மில்லியன் வீதம் வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்காக 2017 பெப்ரவரி 21 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதற்காக வருடாந்தம் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கீழே காட்டப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் பெறுகை செயற்பாடு முறையற்ற வகையில் நிறைவேற்றப்பட்டிருந்ததாக கண்டறியப்பட்டது.

- கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்காக வெளியிடப்பட்டிருந்த பத்திரிகை அறிவித்தல் மற்றும் பெறுகை ஆவணங்கள் பெறுகை குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.
- கட்டிட வாடகை தீர்மானிக்கும் போது வாடகை கால எல்லை பிரதான காரணியாக இருந்த போதிலும் அதற்குரிய பத்திரிகை விளம்பரத்தின் மூலம் வாடகைக்கு பெற்றுக் கொள்ளவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கால எல்லை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.
- அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.1 (அ) பிரிவின் பிரகாரம் பெறுகை குழுவின் எந்தவொரு அங்கத்தவரும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் அங்கத்தவராக இருக்க கூடாது எனினும் அதற்கு முரணாக பணிப்பாளர் பதவியில் பதில் கடமை புரிந்த நிறுவனத்தின் தலைவர் கட்டிடத்தை வாடகைக்காக பெற்றுக் கொள்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிலும் பெறுகை குழுவின் தலைவராக செயற்பட்டு இருந்தார்.
- இக்கட்டிடத்தை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்குரிய 2017 பெப்ரவரி 01 ஆந் திகதி இலக்கமற்ற பெறுகை குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வகையில் 05 ஆண்டு காலப்பகுதிக்காக வாடகைக்கு பெற்றுகொண்ட அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஓராண்டு வாடகைப் பணத்தை முற்பணமாக வழங்குவதற்கும் அந்த முற்பணத் தொகையினை 05 ஆண்டுகளில் தவணை அடிப்படையில் அறவிடுவதற்கும் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. 2017 பெப்ரவரி 21 ஆந் திகதி கட்டிட உடமையாளருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2 ½ வருடங்களுக்காக கட்டிடங்களை வாடகைக்கு எடுப்பதற்கு நிபந்தகையொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்காக பெற்றுக் கொண்ட அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை
- உரிய உடன்படிக்கையின் பிரகாம் ரூபா 30 மில்லியன் முற்பணத்தை கொடுப்பனவு செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2017 பெப்ரவரி 21 ஆந் திகதி அம் முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுகை குழுவின் தீர்மானத்திற்கு

முரணாக மற்றும் அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.4 வழிகாட்டலுக்கு முரணாக உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதியில் 40 சதவீதம் முற்பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- மேற்படி கட்டிடம் 05 ஆண்டு காலப்பகுதிக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு உட்பட்டு உரிய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 05 ஆண்டு காலப்பகுதி திட்டமிடப்படும் போது பெறுகையின் பெறுமதி ரூபா 150 மில்லியனாக இருந்தது. அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.4 வழிகாட்டல் ஏற்பாடுகளுக்கு முரணாக அப்பெறுகையின் நடவடிக்கைகள் திணைக்கள குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.
- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கட்டிடத்திற்கான மாதாந்த வாடகை ரூபா 2,500,000 அதனுடன் பெறுமதி சேர் வரியாக 05 ஆண்டு காலப்பகுதிக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை இல்லாமல் மேற்படி கட்டிடத்தினை வாடகைக்கு எடுக்கும் போதும் உடன்படிக்கை செய்யும் போதும் 2019 மே 01 ஆந் திகதி முதல் ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை 06 மாதங்களுக்கான வாடகை ரூபா 2.75 மில்லியனான கட்டணத்தை தீர்மானித்து உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 1.50 மில்லியன் மேலதிக கொடுப்பனவு நிபந்தனைகள் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் சிக்கனமற்றதாக மற்றும் அரசின் உரித்துக்கள் போதியளவில் பாதுகாக்கப்படும் வகையில் நிறுவகத்தினால் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கைக்காக சட்டமா அதிபரின் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

மஹாவலி காணிகளில் மண் வெட்டுவதற்காக தனியார் துறைக்கு வழங்குதல்

தெற்கு அதிவேக வீதி நீடிப்பு செயற்திட்டத்திற்காக இலங்கை மஹாவலி அதிகாரசபையின் வலய விஷேட வலயத்தின் மயுரபுர பிரதேசத்தில் மஹாவலி காணிகளில் மண் வெட்டுவதற்காக தனியார் துறைக்கு வழங்குவது தொடர்பாக விஷேட புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. 1979 இன் 23 ஆம் இலக்க மஹாவலி அதிகார சபைச் சட்டத்தின் 3(1) பிரிவின் பிரகாரம் காணி அபிவிருத்தி மற்றும் மஹாவலி அபிவிருத்தி அமைச்சரால் 1981 ஏப்ரல் 16 ஆந் திகதிய 137 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம் வளவ விஷேட பிரதேச மயுரபுர பிரதேசத்தில் இலங்கை மஹாவலி அதிகாரசபையின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்தது. வளவ விஷேட பிரதேச அதிகாரப் பிரதேசத்திற்குரிய 671 ஏக்கர் காணி அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மண் வெட்டுவதற்கு 29 தனி நபர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு 2015 மற்றும் 2016 காலப்பகுதிகளில் திட்டமிப்பட்டிருந்தது. அவ்வாறு இனங்காணப்பட்ட சில இடங்கள் முதுனாகல வெந்நீர் ஊற்று மற்றும் அம்பாந்தோட்டை உத்தேச யானை முகாமைத்துவ பிரதேசத்தில் அமைந்திருந்தது. மஹாவலி அதிகார சபைக்குரிய காணிகளில் கணிப்பொருட்களை அப்புறப்படுத்துவதற்கு உரிய உள்ளக அறிவுறுத்தல்களுக்கு முரணானதாகவும் முறையான சுற்றாடல் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு காணி இனங்காணப்பட்டு முறையான திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு பதிலாக மயுரபுர பிரிவின் முகாமையாளரால் தனது விருப்பின் பேரில் மண் வெட்டுவதற்காக காணி இனங்காணப்பட்டிருந்தது. அக்காணிகளில் மண் வெட்டப்பட்டால் வனவிலங்குகளுக்கும் சுற்றாடலின்

நிலைபேறான உறுதிக்குமான தாக்கம், வனவிலங்கு வாழக்கூடிய இடம் இல்லாமல் போதல், நிலக்கீழ் நீர் மட்டத்திற்கு தாக்கம் ஏற்படுதல் போன்ற பல சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படக்கூடுமென கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டதன் பின்னரும் இவ்வாறு முறையற்ற வகையில் இனங்காணப்பட்ட இடங்களுக்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குவது நிறுத்தப்பட்டிருந்தன. இவ்வாறு மண் வெட்டுவது கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்களின் பிரகாரம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களும் அதற்குச் சமமாக வழங்கப்பட்டிருந்த வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

- 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தில் 23 பீ 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் அமைச்சரால் 1993 யூன் 24 ஆந் திகதிய 772/22 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் ஒன்று மூலம் 01 ஹெக்டயருக்கு மேற்பட்ட காணிப் பிரதேசத்தில் காட்டை அண்டியல்லாத பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தும் செயற்திட்டமொன்று மற்றும் 10 ஏக்கருக்கு மேற்பட்ட மொத்த நில அளவொன்று உள்ள பிரதேசங்களில் சுற்றுபுற கணிப்பொருள்களை பெற்றுக் கொள்ளும் செயற்திட்டமொன்றுக்காக சுற்றாடல் சட்டத்தின் IV இ பிரிவின் கீழ் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்மென நிர்ணயிக்கப்பட்டிருந்தது. சுற்றாடல் சட்டத்தின் IV (ஈ) பிரிவின் 23 ஆ (1) மற்றும் (2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கையொன்று அல்லது சுற்றாடல் தாக்கத்தை மதிப்பீடு செய்யும் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு அதனை மக்கள் கருத்திற்கு விடுவதற்கு அழைப்பு விட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இக்காணி விடுவிப்பின் போது அந்த ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

படம் 06 ..... அனுமதிப்பத்திர உடமையான நிறுவனமொன்றினால் நிபந்தனைகளை மீறி மண்வெட்டப்பட்டிருந்த இடமொன்று

- அச்செயற்திட்டங்களுக்குரிய இரண்டு இடங்களில் நிலை அளவைத் திணைக்களத்தின் அளவீட்டு விஷேட நிபுணர்களின் ஒத்துழைப்புடன் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக பெற்றுக்கொண்ட அளவீட்டு அறிக்கையின் பிரகாரம் 20 ஏக்கர் அனுமதியின்றி அகழ்ந்து எடுக்கப்பட்டிருந்தது. காணி பயன்பாட்டுக் கட்டணமாக இலங்கை மஹாவலி அதிகாரசபைக்கு ரூபா 95.08 மில்லியனும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்திற்கு அரசிறையாக ரூபா

2.71 மில்லியன் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தது. இது தொடர்பாக 1982 இன் 12 ஆம் இலக்க பொது ஆதனங்கள்சட்டத்தின் கீழ் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எனினும், அந்த இரண்டு நிறுவனங்களிடமிருந்து மண்ணை வெட்டிய வீதி அபிவிருத்தி அதிகாசைபையிடமிருந்து ரூபா 95.08 மில்லியனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக இலங்கை மஹாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளரால் 2017 ஏப்ரல் 07 ஆந் திகதி கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 யூன் மாதம் வரையிலும் பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2009 இன் 66 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்க மற்றும் கணிப்பொருள் சட்டத்தின் 61(1) பிரிவின் பிரகாரம் அனுமதிப்பத்திரத்தை உடையவரால் அகழ்வு பூமியை நல்ல நிலையிலும் புனரமைப்புச் செய்யப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அச்சட்டத்தின் 63(3)(அ) பிரிவின் பிரகாரம் நீதவானுக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் "அந்த அகழ்வு மேற்கொள்ளப்பட்ட காணியை இருந்த நிலைமையில் மீளமைப்பு செய்தோ அல்லது புனரமைக்க வேண்டுமென கட்டளையிடப்படலாம்" என குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த இடத்தில் மிருகங்களின் பயன்பாட்டிற்காக தடாகமொன்று வடிவமைக்கும் வகையில் புனரமைப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இத்தடாகத்தை வடிவமைக்கும் போது காணப்பட வேண்டிய ஆழம், கொள்ளளவு பரப்பளவு, போன்ற தொடர்பாக நியதிகள் பரிந்துரைக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக வழங்கப்பட்ட கணக்காய்வு விசாரணைக்காக புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்தின் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட பதிலின் பிரகாரம் அந்த அனுமதிப்பத்திரத்திற்குரிய மீளமைப்பு திட்டம் இலங்கை மஹாவலி அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்பட்டிருந்த வகையில் தடாகமொன்றாக மேற்பார்வை செய்தல் மற்றும் அதற்கு மேலதிக நிபந்தனைகளை விதித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல் பணியகத்தின் செயற்பாட்டிற்கு உரித்தாகவில்லையென குறிப்பிடப்பட்டிருந்தது. அனுமதிப்பத்திரத்தை வழங்கும் செயற்திட்டத்திற்காக இலங்கை மஹாவலி அதிகார சபை, வனசீவராசிகள் திணைக்களம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த எந்தவொரு நிறுவனத்தாலும் அந்த மீளமைப்பு நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டிய முறை குறிப்பாக கூறப்பட்டிருக்கவில்லை.

படம் 07 : அனுமதிப்பத்திர உடமையாளரால் நிபந்தனை மீறப்பட்டு மண் வெட்டப்பட்டிருந்த இடமொன்று

- வழங்கப்பட்டிருந்த ஒரு அனுமதிப்பத்திரத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட நிலத்தை மிகைத்து 05 ஏக்கர் மற்றும் அனுமதிக்கப்பட்ட ஆழத்தை மிகைத்து அகழ்வு இடம்பெற்றிருந்தது. அவ்வாறே அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட 36 நிபந்தனைகளில் 14 நிபந்தனைகள் மீறப்பட்டிருந்தன. அந்த இடத்தை அண்மித்த மேலும், 05 ஏக்கர்களும் அனுமதியின்றி அகழ்வு செய்யப்பட்டிருந்தது. வழங்கப்பட்டிருந்த இன்னுமொரு அனுமதிப்பத்திரத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட காணி எல்லையை மிகைத்து 18 ஏக்கர் அகழப்பட்டிருந்தது. அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட 33 நிபந்தனைகளில் 7 நிபந்தனைகள் மீறப்பட்டு அகழ்வு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்திற்கு விநியோகிக்கப்பட்ட கணக்காய்வு விசாரணைக்குரிய 2017 நவம்பர் 22 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த பதிலின் பிரகாரம் குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், 2018 யூன் மாதம் வரை அப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அனுமதிப்பத்திர நிபந்தனைகள் மீறப்படுவது தொடர்பாக 1992 இன் 33 ஆம் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியக சட்டத்தின் 63 ஆம் பிரிவின் பிரகாரமும் எடுக்க கூடியதாக இருந்த சட்ட நடவடிக்கைகள் 2018 ஆகஸ்ட் 01 அந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

படம் 08 ..... அனுமதிப்பத்திர உடமையாளரால் நிபந்தனை மீறப்பட்டு மண் வெட்டப்பட்டிருந்த இடமொன்று

- 1988 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 12(அ) பிரிவின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் காலம் 12 மாதங்களுக்கு மேற்படக் கூடாதென குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த இடத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் 2014 செப்தம்பர் 01 ஆந் திகதி சுற்றாடல் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. அதன் செல்லுபடிக்காலம் முடிடைந்திருந்தமையால் அகழ்வு நடவடிக்கைகளுக்காக அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டாம் என மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் 2016 செப்தெம்பர் 18 ஆந் திகதி புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்திற்கு அறிவித்திருந்தது. அதன் பிரகாரம் குறித்த அகழ்வு அனுமதிப்பத்திரத்தை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு

நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக அனுமதிப்பத்திர உடமையாளரால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. அதன் போது மத்திய சுற்றாடல் அதிகார சபையினாலும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தினாலும் இடைநிறுத்தப்பட்ட அகழ்வு அனுமதிப்பத்திரத்தை 2017 பெப்ரவரி 18 ஆந் திகதி வரை மீண்டும் செல்லுபடியாகுவதற்கு நீதிமன்றத்திற்கு இணக்கப்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2 வருடங்கள் 5 மாதங்கள் செல்லுபடியாகும் வகையில் சுற்றாடல் பரிந்துரையை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. சுற்றாடல் பரிந்துரைகளின் நிபந்தனைகளை மீறி அகழ்வது தொடர்பாக 1988 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

படம் 09 - அனுமதிப்பத்திர உடமையாளரால் நிபந்தனை மீறப்பட்டு மண் வெட்டப்பட்டிருந்த இடமொன்று

- அம்பாந்தோட்டை வனபரிபாலன பாதுகாப்பினால் உரிய அதிகாரமின்றி உத்தேச யானை முகாமைத்துவ காட்டினுள் மண் வெட்டுவதற்காக பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. அப்பிரதேசத்தின் 18 ஏக்கர் அளவில் 15 மீற்றர் ஆழத்தில் தோண்டி மண் அகற்றப்பட்டிருந்தது. அதன் மூலம் வனவிலங்குகளின் உயிர்களுக்கு பாதுகாப்பற்ற நிலைமையொன்று உருவாகியிருந்ததுடன் கருத்திற்கொள்ளக் வேண்டிய சுற்றாடல் சேதமொன்றும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2017 திசெம்பர் 28 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட கணக்காய்வு விசாரணைக்காக வனசீவராசிகள் திணைக்களத்தினால் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

அரசாங்க காணியொன்றில் அனுமதியின்றி மண் வெட்டுதல்

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அங்குனுபெலஸ்ஸ பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள இலங்கை மஹாவலி அதிகாரசபைக்குரிய அரசின் காணியொன்றில் அனுமதியின்றி மண் வெட்டுவது தொடர்பாக 2016 ஆம் ஆண்டின் போது பிரதேச வாசிகளால் அவ்வவ்போது அங்குனுபெலஸ்ஸ பொலிஸிற்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அவ்வாறே அவ்வாண்டின் போது பிரதேச வாசிகளால் இலங்கை மஹாவலி அதிகாரசபையின் பிராந்திய முகாமையாளர் மற்றும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியத்தின் பிராந்திய அரசாங்க பொறியியலாளருக்கு அவ்வவ்போது 05 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அந்நிறுவனத்தினால் இது தொடர்பாக முறையான புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு பொறுப்பானவர்கள் நீதிமன்றத்திற்கு முன் வரப்பட்டிருக்கவில்லை. அங்கு அகழ்வு அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறுதல் 1992 இன் 33 ஆம் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியக சட்டத்தின் ஏற்பாடுகள் மீறியமை மற்றும் 1982 இன் 12 ஆம் இலக்க பெதுச் சொத்துக்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் மீற்ப்பட்டமை தொடர்பாக போதியளவில் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கையில் உரிய அனுமதிப்பத்திர உடமையாளரை நீதிமன்றத்திற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 6 ஏக்கர் அளவிலான பிரதேசமொன்று 30 அடி அளவிலான ஆழத்திற்கு அனுமதியற்ற அகழ்வு காரணமாக கருத்திற் கொள்ளக் கூடிய சுற்றாடல் பாதிப்பொன்று இடம்பெற்றிருந்தது. அதன் போது அரசிற்கு ரூபா 23 மில்லியன் அளவிலான நிதி நட்டமொன்று இடம்பெற்றிருந்தது. இது தொடர்பாக 2017 திசெம்பர் 13 ஆந் திகதி பொலிஸ் மா அதிபருக்கு வழங்கப்பட்ட கணக்காய்வு விசாரணைக்காக 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

குள புனரமைப்பின் போது அப்புறப்படுத்தப்பட்ட மண் போக்குவரத்து

2009 இன் 66 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1992 இன் 33 ஆம் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியக சட்டத்தின் 30(1)(எ) பிரிவின் "அமைச்சரின் மற்றும் காணி தொடர்பான விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் இல்லாமல் அரசின் காணி சட்டத்தின் (454 ஆவது அதிகாரம்) பிரகாரம் அர்த்தமுள்ள நீர்த்தேக்கமொன்றில்" அருவியொன்றில், குளமொன்றில் அல்லது துண்டொன்றில் இருந்து விதிக்கப்படக் கூடிய ஏதேனுமொன்று தூரத்திற்குள்ளே அமைந்து ஏதேனும் காணியொன்றின் பேரில் அகழ்விற்காக அனுமதிப்பத்திரமொன்றை வழங்க முடியாதென குறிப்பிடப்பட்டுள்ளது. புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் (ப.க) பணிப்பாளர் அம்பாந்தோட்டை உதவி கமநல சேவைகள் ஆணையாளருக்கு 2016 நவம்பர் 09 ஆந் திகதி கடிதமொன்றை சமர்ப்பித்து குளத்தை அகழும் நடவடிக்கைகளுக்காக அனுமதிப்பத்திரம் ஒன்று தேவையில்லையென குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பேரில் அம்பாந்தோட்டை உதவி கமநல சேவைகள் ஆணையாளரால் விவசாய அமைப்பிற்கு 14 குளங்களை புனரமைக்கும் நடவடிக்கைகளுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 14 குளங்களை புனரமைக்கப்பட்டு 2,72,299 கியூப் மண்ணை அகற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அம்மண் அதிவேக வீதி நிர்மாணத்திற்காக விற்பனை செய்வதற்கு விவசாய அமைப்பிற்கு போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு கடிதமொன்று அம்பாந்தோட்டை பிரதேச அகழ்வு பொறியியலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

கற்குழிகளுக்காக வெடிபொருள் வழங்கலும் காணி பயன்பாட்டுக் கட்டணங்களின் அறவீடும்

1956 இன் 21 ஆம் இலக்க வெடிபொருட்கள் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலாளருக்கு அம்மாவட்டத்தின் வெடிபொருள் வழங்கும் அனுமதிப்பத்திர அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் 52 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த அதிகாரம் வெடிபொருள் கட்டுப்பாட்டாளரின் கட்டளைகளுக்கு உட்பட்டே செயற்படுத்தப்பட வேண்டும். 2010 ஆகஸ்ட் 25 ஆந் திகதிய CS/7/EX/1/38 ஆம் இலக்க அரச பாதுகாப்பு செயலாளரின் வெடிபொருட்கள் தொடர்பான சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் வெடிபொருட்களுக்காக நுழைவுப்பத்திரம் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாடு உதவி வெடிபொருள்

கட்டுப்பாட்டாளரால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது. அச்சுற்றறிக்கை மூலம் வெடிபொருள் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குரிய செயற்பாட்டு விதிகள் விபரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் பிரகாரம் வழங்கப்படுகின்ற வெடிப்பொருட்களில் உடையக்கூடிய கல் அளவு தொடர்பாக சான்றிதழொன்றை வழங்கும் தேவைப்பாடு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக கருத்திற்கொள்ளாமல் அம்பாந்தோட்டை உதவி வெடிபொருள் கட்டுப்பாட்டாளரால் வழங்கப்படும் வெடிபொருட்கள் அளவினால் உடையக்கூடிய கல் அளவு கணக்கிடப்பட்டு காணி உரித்தான அரச நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அங்கு கல் வெடிமருந்து மற்றும் அமோனியம் நைட்ரேற்று என்பன கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. புவிச்சரிதவியல் அளவு மற்றும் சுரங்க பணியகத்தினால் வெடிபொருட்களைக் கொண்டு உடையக்கூடிய கற்களின் அளவினை கணக்கிடுவதற்காக நியதிகள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2010 – 2016 ஆகிய 07 ஆண்டு காலப்பகுதியில் அம்பாந்தோட்டை அரச நிறுவனங்களால் கற்களை உடைப்பதற்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 95 ஏக்கர் காணியிலிருந்து ரூபா 2,152.36 மில்லியனான மதிப்பிடப்பட்ட வருமானமொன்று அறவிடப்பட வேண்யிருந்தது.

முப்படைகளுக்காக சமைக்காத மற்றும் உலர் உணவு வழங்கல்

முப்படைக்காக சமைக்காத மற்றும் உலர் உணவு கோட்டாவை வழங்குவதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகை குழு மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட கூறுவிலை அடிப்படையில் 2014 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட 119,934 கிலோ கிராம பாலுக்காக ஒரு கிலோ ரூபா 152 வீதம் விலை அதிகரிப்பொன்றுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 18.23 மில்லியன் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அத்தீர்மானத்திற்கு அடிப்படையாக இருந்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உள்ளடக்கம் மற்றும் அப்பரிந்துரையில் பின்வரும் முறையற்ற தன்மைகள் அவதானிக்கப்பட்டன.

- பொருள் வழங்குனருடன் மேற்கொண்டுள்ள உடன்படிக்கையின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் “சந்தையில் பொருள் விலை அதிகரித்தமை கருத்திற் கொள்ளாமல் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக்கே இணங்கி பங்கீட்டுப் பொருட்கள் கட்டளையிடப்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் கொள்வனவாளருக்கு சமர்ப்பிப்பதற்கு ஒப்பந்தகாரர் இதனுடன் இணங்கியுள்ளார்” என குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கை செய்யப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் உரிய விலை அதிகரிப்பு கொடுப்பனவு நிராகரிக்கும் இயலளவு தொடர்பாக கருத்திற் கொள்ளப்படாமல் தொழில்நட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விலை அதிகரிப்பு கொடுப்பனவிற்கு பரிந்துரைக்கப்பட்டிந்தது. அதன் பிரகாரம் ரூபா 18.23 மில்லியன் ஆன மேலதிக செலவினமொன்று மேற்கொள்ள நேர்ந்திருந்தது.

- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக அரச நிதி திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டிருந்த தலைவர் மற்றும் உறுப்பினர் ஒருவர் அகற்றப்பட்டு பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டதன் பின்னர் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- வழங்குனரின் வேண்டுகோளின் பேரிலான அடிப்படையில் அவருக்கே

உரித்தான வகையில் உரிய தீர்மானத்தை செயற்படுத்தியமையால் பெறுகை செயற்பாட்டின் வெளிப்படையான தன்மை மற்றும் பக்கச்சார்பற்ற தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

முதலாம் வகுப்பிற்காக சமமான வகுப்பொன்றை ஆரம்பித்து பிள்ளைகளை அனுமதித்தல்

2016 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்படும் வகையில் மேல் மாகாணத்தின் 19 பாடசாலைகளில் முதலாம் தரத்திற்காக புதிய சமமான வகுப்பொன்றை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்காக மேல் மாகாண கல்வி, கலாச்சார மற்றும் கலை அலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அமைச்சரின் தனிப்பட்ட செயலாளரினதும் கூட்டிணைந்த செயலாளரினதும் கையொப்பத்துடன் மேல் மாகாண கல்வி பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணையின் அடிப்படையில் 342 மாணவர்களை அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்களின் பிரகாரம் மாணவர்களை அனுமதித்தலில் முறையற்ற தன்மை கண்டறியப்பட்டது.

- 2016 ஆம் ஆண்டிற்காக பாடசாலைகளுக்கு 156 பிள்ளைகளினால் விண்ணப்பமொன்றோ சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- புதிய வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதற்கு தேவையான பௌதீக மற்றும் மனித வளங்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்காமல் அத்தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக 12 பாடசாலைகளில் அதிபர்களால் புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படாமல் இருக்கும் வகுப்புக்களில் இருக்க வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையை கருத்திற் கொள்ளாமல் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

- முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிப்பதற்குரியதாக வழங்கப்பட்டிருந்த சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் அதிபர்களுக்கு மாணவர்களை அனுமதிக்கக்கூடிய வகையில் மேல்மாகாண கல்விப் பணிப்பாளரால் அதிபர்களுக்கு கடிதமொன்று மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

- 235/2011 மற்றும் 232/2011 ஆம் இலக்க உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த வழக்குத் தீர்ப்புக்கள் மற்றும் அமைச்சரவைத் தீர்மானங்களின் பிரகாரம் முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

- மாகாண கல்விப் பணிப்பாளருக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் வழங்கப்பட்டிருந்த ஆலோசனைகளை கருத்திற் கொள்ளாமல் இந்த மாணவர்களை அனுமதிப்பதற்கு கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன.

- இவ்வாறு மாணவர்களை அனுமதித்த காரணத்தினால் காத்திருக்கும் பட்டியலில் உள்ள மாணவர்களுக்கு அசாதாரணம் ஒன்று இடம்பெற்றிருந்தது.

முறைகேடுகள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படாமை

கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்களின் பிரகாரம் அதிபர்களால் முறைகேடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக கண்டறியப்பட்டிருந்த போதிலும், அவை தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதி

வரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலையொன்றுக்காக 2 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தும் போது முன்னுரிமை வழங்க வேண்டிய அத்தியவசிய சிறிய திருத்தங்கள் தொடர்பில் கவணம் செலுத்தாமல் ஆய்வுகூடத்தின் யன்னல் மூடிகள் மீண்டும் பொருத்துதல் மற்றும் பூச்சு பூசப்பட்டிருந்தது.

- அந்தக் நிர்மாண வேலை பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினால் 2013 நவம்பர் 28 ஆந் திகதிய 07/2013 ஆம் இலக்க கல்வி அமைச்சு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக உபஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. அதற்காக சந்தையில் காணப்படும் சாதாரண விலையிலும் இரண்டு மடங்கிற்கு மேற்பட்ட விலை விபரங்களுக்கு மூலப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

- தேவையான பொருட்கள் மற்றும் உழைப்பு தொடர்பாக எதிர்வுகூறாமல் தேவையான அளவினை மிகைத்து மூலப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் தேவைக்கு மேலதிகமாக உழைப்புக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- பௌதீக பரிசோதனையின் பிரகாரம் கட்டிடத் திருத்தங்கள் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

படம் 10 ……. அங்கீகரிக்கப்பட்ட நியமங்களுக்கு இணங்காத வகையில் நிறைவேற்றப்பட்டிருந்த வித்தியாலயத்தின் திருத்த வேலைகள்

- 2015 சனவரி 29 ஆந் திகதிய 5/2015 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் பாடசாலைகளில் முறையற்ற விதத்தில் பணம் சேகரிப்பதனை நிறுத்துவதற்குரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக மேசைகள் மற்றும் கதிரைகள் திருத்தியமைத்தல் மற்றும் அன்னதானம் வழங்குவதற்காக பாடசாலைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு அதன் மூலம் மொத்தம் ரூபா 1.49 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது.

- பாடசாலையின் பொருளிருப்பு பதிவேடுகள் முறையாக

பேணப்படாதிருந்ததுடன் பொருளிருப்பு பொருட்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படவில்லை.

- 2013 நவம்பர் 28 ஆந் திகதிய 7/2013 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக பாடசாலை அபிவிருத்தி சங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சம்ர்ப்பிக்கப்பட்ட பதில் கடிதத்தின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பொறுப்பு வாய்ந்த அதிபர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் 2 ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

தேசிய பாடசாலைகளுக்காக கிடைக்கப் பெற்றிருந்த பிரதிநிதித்துவங்களை புலனாய்வு செய்தல்

மீளாய்வாண்டின் போது தேசிய பாடசாலைகளில் முறையற்ற தன்மை தொடர்பாக கிடைத்த பிரதிநிதித்துவங்களை பரீட்சிக்கும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

- **முதலாம் ஆண்டிற்காக மாணவர்களை அனுமதித்தல்**

  இரண்டு தேசிய பாடசாலைகளுக்காக முதலாம் ஆண்டிற்காக மாணவர்களை அனுமதிக்கும் போது இடம்பெற்றிருந்த முறைப்பாடுகள் தொடர்பாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரதிநிதித்துவம் தொடர்பாக புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. அப்புலனாய்வின் பிரகாரம் ஒரு தேசிய பாடசாலையில் 2016 மே 16 ஆந் திகதிய 17/2017 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் 202 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். மேலும், தேசிய பாடசாலையொன்றில் 2002 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பாடசாலையிலிருந்து குடியிருக்கும் இடத்திற்கு அண்மித்ததாக பாடசாலை கேந்திரமாக கொண்டு விண்ணப்பதாரர் குடியிருப்பதாக வீச்சிற்குள் குறிப்பிட்டு அந்த எல்லையில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கான புள்ளிகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த அடிப்படைக்கு முரணாக நடவடிக்கை எடுத்து 419 பிள்ளைகள் பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

- **இடைநிலை வகுப்புக்களுக்காக மாணவர்களை அனுமதித்தல்**

  இரண்டு அடிப்படை உரிமை வழக்குகளுக்குரிய உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் வெற்றிடங்கள் கல்விச் செயலாளரின் இணக்கப்பாட்டின் பேரில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஒரு வகுப்பிற்கு 40 மாணவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், இரண்டு தேசிய பாடசாலைகளால் அந்த எல்லையை மிகைத்து மாணவர்கள் 78 மற்றும் 104 பேர் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

- **தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை செயற்படுத்தாமை**

  2007 திசெம்பர் 13 ஆந் திகதிய 2007/20 ஆம் இலக்க கல்வி அமைச்சு சுற்றறிக்கையின் பிரகாரம் மிகவும்

இலகுவான வகைக்குரிய பாடசாலையொன்றில் சேவை பூர்த்தி செய்வதற்கான ஆகக்கூடிய காலம் 06 வருடங்கள் என தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், மாத்திறை சுஜாதா வித்தியாலயத்தினதும் ராஹுல வித்தியாலயத்திலும் முறையே 134 மற்றும் 130 ஆசிரியர்கள் 6 ஆண்டுகள் சேவைக்காலத்தை விஞ்சி சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

ஊவா மாகாண தலைமை அமைச்சரின் மதியுரையாளர்களை நியமித்தல்.

2015 செப்தெம்பர் 23 ஆந் திகதி 15/பொது(79) ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ஏதேனும், விடயத்துறையொன்று தொடர்பாக தேவையான எந்தவொரு விஷேட சேவையொன்றை வழங்குவதற்கு தேவையான அனுபவத்துடன் கூடிய மாகாணங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள துறை தொடர்பாக முன்னுரிமை பெற்றுள்ள வரிசை அமைச்சுக்களில் அல்லது அரச நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விடுவிடுப்பு அடிப்படையில் அச்சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருப்பதால் மாகாண தலைமை அமைச்சர்களுக்கு மதியுரையாளர்களை நியமிக்கும் தேவைப்பாடு ஒன்று இல்லையென குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த அமைச்சரவை தீர்மானம் தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் ஊவா மாகாண தலைமை அமைச்சருக்காக 06 மதியுரையாளர்கள் நியமிக்கப்பட்டு உரிய மதியுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்ட திகதி முதல் 2017 பெப்ரவரி மாதம் வரை ரூபா 4.19 மில்லியன் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், அவ்வாறு நியமிக்கப்பட்ட மதியுரையாளர்கள் அவர்கள் நியமிக்கப்பட்ட துறைகள் தொடர்பாக விஷேட அறிவினை கொண்டவர்கள் அல்ல எனவும் அவதானிக்கப்பட்டது.

தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு கல்விச் சுற்றுலாவில் பங்குபெறச் செய்தல்

ஊவா மாகாண சபையின் மக்கள பிரதிநிதிகளினதும் நாடளாவிய பதவியணியின் தர உத்தியோகத்தர்களுக்காகவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வெளிநாட்டுக் கல்விச் சுற்றுலாவிற்காக பிரதம அமைச்சரின் வேண்டுகோளின் பேரில் நாடளாவிய பதவியணியின் தர உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 04 உத்தியோகத்தர்கள் பங்குபெறச் செய்யப்பட்டிருந்தனர். அந்த நான்கு உத்தியோகத்தர்களுக்காக விமான பயணச்சீட்டுக்கள் விசா மற்றும் அமையப் படிகளாக ரூபா 2.13 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

முன்பள்ளி பாடசாலைகளுக்கு புத்தகங்களை வழங்குவதற்கான நிதி அனுசரணை பெற்றுக் கொள்ளல்

ஊவா மாகாண சபைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகள் போதியளவில் இல்லாமையால் முன்பள்ளி பாடசாலை மாணவர்களுக்காக சுகாதார பாதுகாப்புடன் கூடிய பாடசாலைப் புத்தகப் பையொன்று வழங்குவதற்காக அனுசரணை பங்களிப்பினை வழங்குமாறு ஊவா மாகாண பிரதம அமைச்சரின் அலுவலக கடிதத் தலைப்புக்களை பயன்படுத்தி ஊவா மாகாண பிரதம அமைச்சர் என கையொப்பமிட்டு 2015 நவம்பர் 10 ஆந் திகதிய கடிதங்கள் மூலம் அரசின் 03 வங்கிகளுக்கு வேண்டுகோள் விடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இரண்டு அரச வங்கிகளால் ரூபா 3.50 மில்லியன் பெறுமதியான

இரண்டு காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன. அந்த இரண்டு காசோலைகளையும் மாகாண சபையின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யாமல் நபரொருவரின் பெயரிலான அமைப்பிற்காக திறக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்தன. ஒரு வங்கியால் பணம் அனுப்பும் போது அப்பணத்தை கொண்டு கொள்வனவு செய்யப்படுகின்ற புத்தகப் பைகளில் அவ்வங்கியின் கணக்கொன்றின் பெயர் அச்சிடப்பட்டு பாடசாலை மாணவர்களுக்கு வழங்குமாறு வேண்டுகோள் விடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு கணக்கின் பெயர் பொறிக்கப்பட்ட பைகள் பிள்ளைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது ஊவா மாகாணத்தில் உள்ள முன்பள்ளி பாடசாலைகளின் மாணவர்களுக்கு 17 உள்ளூராட்சி மன்றங்களால் வழங்கப்பட்டிருந்த பணத்திலிருந்து ரூபா 3.06 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட பாடசாலை பைகள் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் வங்கியினால் வழங்கப்பட்ட பணம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தாமல் தனியார் அமைப்பொன்றுக்குரிய கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

அளவீட்டு அலகுகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் மின்மானி பரிசோதனை பிரிவு

மின்மானிக்கு மாதிரி அங்கீகாரம் வழங்குதல் மற்றும் தனியார் பிரிவின் மின்மானிகளை குறைக்கும் நோக்கில் 2007 ஆம் ஆண்டின் போது அளவீட்டு அலகுகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் ரூபா 25.7 மில்லியன் செலவிடப்பட்டு மின்மானி பரிசோதனை பிரிவொன்று கம்பஹா மாவட்ட செயலகத்தில் தாபிக்கப்பட்டிருந்தது. அம்மின்மானி பரிசோதனை பிரிவு தொழில்நுட்பத் தவறொன்றால் 2009 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாடற்று காணப்பட்டது. அத்தவறுடைய நிலையை அந்த உபகணரங்களின் உத்தரவாதக் காலத்தில் இடம்பெற்றிருந்த போதிலும் உரிய வழங்குனரைக் கொண்டு செய்து கொள்வதற்கு 2017 ஒக்தோபர் மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.



படம் 11 ……. செயற்படாத நிலைமையில் உள்ள மின்மானி பரிசோதனை பிரிவு

Simdzu புகை பரிசோதனை உபகரணம்

வாகன புகை பரிசோதனை நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பிரதான நகரங்களில் புகை நிலைமையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைப் பரீட்சிப்பதற்காக Simdzu புகை பரிசோதனை உபகரணமொன்றை அளவை அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் ரூபா 5.86 மில்லியன் செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. புகை மாதிரிகளைப் பரீட்சித்தல், வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் புகையின் உள்ளடக்கத்தை பரிசோதித்தல் என்பவற்றுக்காக பயன்படுத்தப்படும் உபகரணங்களின் சரியான தன்மை பரீட்சித்தல், நியமங்களின் சுத்தமான வாயு அளவினை பரீட்சித்தல் மற்றும் கைத்தொழில் துறையில் பயன்படுத்தப்படும் எரிபொருள் மற்றும் வெவ்வேறு பரவக்கூடிய திரவ வகைகளின் உள்ளடக்கத்தைப் பரீட்சிப்பதற்காக தேவையான அளவுகளை பெற்றுக்கொள்வதற்காக இந்த உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த உபகரணத்தை கொள்வனவு செய்வதற்கு முன்னர் முதலில் ஸ்தாபிக்கும் இயலுமை தொடர்பாக முறையான மதிப்பீடொன்றை மேற்கொள்ளாமையால் அந்த உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டு 05 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அதனை நிறுவி ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தமை.

தேசிய அளவைக் கூறுகள், ஆய்வு கூடத்திற்காக கட்டிடமொன்றை நிர்மாணித்தல்.

அளவைக்கூறுகள், நியமங்கள் சேவைகள், திணைக்களத்தினால் சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளாமல் கொழும்பு தலைமை அலுவலக வளவில் ஆராய்ச்சி கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்று செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நியமங்கள் சேவைகள் பணிப்பாளரின் 2009 நவம்பர் 24 ஆந் திகதி கடிதத்தின் மூலம் அவ்விடத்தில் ஆய்வுகூடத்தை நிர்மாணிப்பது பொருத்தமற்றதென குறிப்பிட்டு நிர்மாணம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. இதனால் அச்சந்தர்ப்பம் வரையிலும் செலவிடப்பட்ட ரூபா 15.33 மில்லியன் சிக்கனமற்ற செலவினமொன்றாக இருந்தது.

இந்த கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகளை பொறியியலாளர்கள் செயற்பாடுகள் தொடர்பான மத்திய உசாத்துணை பணியத்தினால் நிறைவேற்றுவதற்காக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், அந்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அதுவரையில் அப்பணியகத்திற்கு 2014 திசெம்பர் 10 ஆந் திகதி மற்றும் 2015 ஏப்ரல் 27 ஆந் திகதிகளில் மொத்தம் ரூபா 12.48 மில்லியன் முற்பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அம்முற்பணம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

பின்னர் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த ஹோமாகமவில் அமைந்துள்ள 06 ஏக்கர் அளவிலான காணியொன்றில் கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அதற்காக ரூபா 329.16 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஆராய்ச்சி கூடத்துடன் தொடர்புடைய ஆய்வுகூட வளவில் பகுதிகள் தொடர்பாக தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பொன்றினால் (NBRO) மேற்கொள்ளப்பட்டிருந்த பரிசோதனைகளின் போது அந்த ஆராய்ச்சி கூடத்தில் காணப்பட வேண்டிய உயர்ந்த அளவு காற்று அமுக்க நிலைமையை விட கூடிய பெறுமதியொன்றை கொண்டிருப்பதாகவும் அதன் காரணமாக ஆய்வுகூடத்தில் பரிசோதனை மேற்கொள்ளக்கூடிய விஞ்ஞான ரீதியான மற்றும் மனித சுற்றாடல் நிலைமையொன்று இல்லையென சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன்

காரணமாக ஆராய்ச்சி கூடத்தின் 66 அறைகள் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தாமல் கைவிடப்பட்டிருந்தன.

இது தொடர்பாக ஜேர்மனியின் FRAVNHOFER WKI, MATERIAL ANALYSIS & INDOOR CHEMISTRY (MAIC), BIENRODER WEG 54E நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த 2017 பெப்ரவரி 17 ஆந் திகதிய அறிக்கையின் பிரகாரம் ஆய்வுகூடங்களில் பொருத்தப்பட்டிருந்த தரமில்லாத HPL போட் காரணமாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டிருந்தது. உரிய ஒப்பந்த கம்பனியைக் கொண்டு அந்நிலைமையை சரிசெய்வதற்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

ஆராய்ச்சி கூடத்தினுள் காற்றின் நிலைமை பொருத்தமான மட்டத்தில் (indoor air quality Level) வைத்துக் கொள்வதற்கும் அங்கு பொருத்தப்பட்டுள்ள உபகரணங்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் உள்ள சரியான காற்றுச்சீராக்கி முறைமையொன்றை பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்காக திணைக்களத்தால் முறையான பிரகாரம் பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்படாததன் காரணமாக வழங்குனரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதன் காரணமாக நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.

வாழ்வாதார மானிய வழங்கல் - முசலி பிரதேச செயலகம்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் மீள்குடியேற்ற செயற்பாடுகளை துரிதப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் முசலி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தின் மக்களுக்கு வாழ்வாதார மானியம் வழங்கல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புலனாய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- நலனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக மாடுகள், ஆடுகள் மற்றும் கோழிகள் கொள்வனவு செய்வதற்காக பெறுகை செயற்பாட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்ட தரகர் கம்பனிக்கு பிரதேச செயலகத்தினால் ரூபா 10.53 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அத்தொகையில் ஒரு மாட்டிற்காக ரூபா 500 வீதமும் ஆடொன்றிற்காக ஒரு நலனாளி குடும்பத்திற்கு ரூபா 500 வீதமும் வரும் வகையில் தரகுப் பணமொன்றை கழித்துக்கொண்டு எஞ்சிய ரூபா 9.10 மில்லியன் பிரதேச செயலகத்தின் விடயத்திற்கு பொறுப்பான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இவ்வாறே ரூபா 765,000 தொகையொன்று அப்போதிருந்த கால்நடை வைத்தியரின் சொந்த வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு கிடைத்த பணத்திலிருந்து மாடுகளும் ஆடுகளும் கொள்வனவு செய்யப்பட்டு நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

- சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு செயலாளரின் 2016 பெப்ரவரி 09 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் நலனாளிகளுக்கு கால்நடைகள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறு கால்நடைகள் கொள்வனவு செய்யப்படாமல் 08 நலனாலிகளில் 3 நலனாளிகளுக்கு ரூபா 90,000 வீதம் மொத்தம் ரூபா 270,000 உம் 05 நலனாளிகளுக்கு ஒருவருக்கு ரூபா 100,000 வீதம் மொத்தம் ரூபா 500,000 உமாக ரூபா 770,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- பசு மாடுகள் வழங்கப்பட்ட 05 நலனாளிகள் தமக்கு வழங்கப்பட்ட மாடுகள் உரிய தரமான மாடுகள் அல்ல என கூறி பிரதேச செயலகத்திற்கு ஒப்படைத்திருந்தனர். அதில் 03 நலனாளிகளுக்காக ரூபா 175,000 விடயத்திற்கு பொறுப்பான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரினால் அவரின் சொந்தப்பணத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நலனாளிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபா 325,000 தொகை விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

- வரிசை அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஒரு நலனாளிகளுக்கு ரூபா 100,000 பெறுமதியான மீன் வலை மாத்திரம் வழங்கப்பட வேண்டிய போதிலும், 69 நலனாளிகளில் 64 நலனாளிகளுக்கு ரூபா 100,000 வீதம் ரூபா 6.40 மில்லியன் பெறுமதியான மீன்வலை வழங்கியதாக பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டு ரூபா 5.81 மில்லியன் பெறுமதியான மீன் வலைகள் வழங்கப்பட்டிருந்தன.

- கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளின் பிரகாரம் நலனாளிகளிற்கு பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 13.01 மில்லியன் பெறுமதியான விவசாய உபகரணங்கள், சிறுகைத்தொழில் மற்றும் சுய தொழில்களுக்காக 6448 உபகரண உருப்படிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஒவ்வொரு கிராம சேவை பிரிவுக்கும் பொறுப்பான கிராம உத்தியோகத்தர்களால் அந்த உபகரணங்களை பௌதீக ரீதியாக பரீட்சித்து பெற்றுக்கொண்ட அறிக்கைகளின் பிரகாரம் நலனாளிகளுக்கு ரூபா 11.66 மில்லியன் பெறுமதியான 3834 உருப்படிகள் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ரூபா 1.35 மில்லியன் பெறுமதியான 2614 உருப்படிகள் நலனாளிகளுக்கு இடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

- 3 நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த ரூபா 282,833 பெறுமதியான விவசாய உபகரணங்கள் 2017 யூன் 15 ஆந் திகதி வரையிலும் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. நலனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 111,413 பெறுமதியான உபகரணங்கள் பௌதீக பரிசோதனைகளின் போது அவர்களிடம் காணப்படவில்லை. மேலும், கிராம சேவை பிரிவினுள் வதிவில்லாத நலனாளி ஒருவருக்கு ரூபா 74,274 பெறுமதியான அதிகுளிரூட்டியொன்றும் கண்ணாடி இறாக்கையொன்றும் வழங்கப்பட்டிருந்தன. இப்பொருட்கள் பௌதீக பரிசோதனைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்திய 64 நலனாளி குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருந்த பொருட்கள் மற்றும் கால்நடைகள் தொடர்பாக கேட்டபோது அவர்களால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட எழுத்து மூல உறுதிகளின் பிரகாரம் குறைந்த பாரத்துடனான ஆடுகள் வழங்குதல், கால்நடைகள் விற்றல், நல்ல தேகாரோக்கியமான நிலையிலுள்ள கால்நடைகளை வழங்காமை, தங்களால் தெரிவு செய்யப்பட்ட கால்நடை வழங்காமை, குறைவாக உபகரணங்களை வழங்கியமை மற்றும் வழங்கிய உபகரணங்களிற்காக அப்பொருட்களை வாங்கிய நிறுவனங்களிலிருந்து தமது விரும்பிய வேறு பொருட்களை பெற்றுக் கொள்ளல் போன்ற முறையற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

நலனாளியால் பௌதீக பரிசோதனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பயன்படுத்தப்படாத USAID செயற்திட்டத்தின் கீழ் கிடைத்த இலத்திரனியல் தராசு

தேசிய வைத்தியசாலைக்கு மேலதிக போசனை வழங்கல்

தேசிய வைத்தியசாலைக்கு Impact என்ற பெயரிலான மேலதிக போசனைக் கூறுக்காக கூறுவிலை கோரும் போது ஒரு டின்னிற்காக விலையை சமர்ப்பிக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதற்காக குறித்துரைக்கப்பட்ட அளவொன்று குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. வழங்குனரால் ஒரு டின்னிற்காக ரூபா 1,390 என கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், 74 அளவிலான 05 சபே பைக்கற்றுக்கள் உள்ளடக்கப்பட்ட பொதிகளில் மேலதிக போசனை கூறுகள் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டுகளிலும் சபே பைக்கற்றுக்கள் மேலதிகம் வழங்கப்பட்டிருந்த போதிலும், பணக் கொடுப்பனவின் போது ஒரு பொதிக்காக (05 சபே பைக்கற்றுக்களுக்காக) இணங்கப்பட்ட விலை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2016/2017 ஆம் ஆண்டுகளுக்காக தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களால் 74 கிராமான 23304 சபே பைக்கற்றுக்களுக்காக ஒன்று ரூபா 1,390 வீதம் பணக் கொடுப்பனவு செய்தமையால் அரசிற்கு ரூபா 25.91 மில்லியனான நட்டம் இடம்பெற்றிருந்தது.

ஏற்பாடுகளுக்கு முரணாக படிகள் கொடுப்பனவு

1978 இன் 4 ஆம் இலக்க முதலீட்டு சபை சட்டத்தின் 13(2)(ஆ) பிரிவின் பிரகாரம் பதவியணியினருக்காக சம்பளம், வேதனம் மற்றும் ஏனைய ஊதியங்களுக்குரிய அமைச்சரின் சாதாரண அல்லது விஷேட கண்காணிப்பின் கீழ் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். அவ்வாறே 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபனம் மற்றும் சட்டரீதியான சபைகளின் ஊழியர்களுக்காக செலுத்தப்படும் நலன்கள் அந்நிறுவனங்களின் நிர்வாக சபையின் அங்கீகாரத்துடன் அமைச்சரவை, பொது நிர்வாக அமைச்சு அல்லது பொது திறைசேரியின் அங்கீகாரத்தின் பேரில் மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும். எனினும், இலங்கை முதலீட்டு சபையினால் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் போக்குவரத்து படிகள், பிரதான செயலாற்றல் படிகள் பெற்றுக்கொள்ளாத விடுமுறைகளுக்கான கொடுப்பனவுகள், கஷ்டப் பிரதேச படிகள், சபைக்கு 40 வருட நிறைவு தொடர்பிலான படிகள் மற்றும் விஷேட படிகளாக மொத்தம் ரூபா 512.54 மில்லியன் மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்

வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

வருடாந்த மதிப்பீடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட சொத்துக்களை வருடாந்த நிதிக்கூற்றுக்களின் அறிமுகப்படுத்தலின் ஊடாக நிதிக்கூற்றுக்களில் கூட்டிணைத்தலின் மூலம் அவற்றின் கட்டுப்பாடு, நாட்டின் சார்பாக அரசாங்கத்தினால் வைத்திருக்கப்படும் சொத்துக்களை கணிப்பிடுதல் மற்றும் பொறுப்புக்களை ஒப்படைப்பதன் மூலம் அவற்றின் பாதுகாப்புக்கு உறுதிப்படுத்தலை வழங்குகின்றமையை குறிப்பிட்டாக வேண்டும். அத்துடன் இம்முறைமையில் வருமானம் மற்றும் செலவினம் அட்டுறு அடிப்படையில் கணிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் காட்டப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பீடு செய்யப்படுவதனால் வருமானங்களை சேகரிப்பதற்கும் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

வருடாந்த ஒதுக்கீடுகள்

2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,390 மில்லியன் ஏற்பாட்டுடன் ஒப்பிடுகையில் திணைக்களத்திற்கான நிதி ஏற்பாடு ரூபா 1,593 மில்லியன் ஆகும்.

அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டச் சபைகள், உள்ளூராட்சி அதிகாரசபைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் நியதிச்சட்ட நிதியங்கள் என்பவற்றிலிருந்து கணக்காய்வுக் கட்டணங்களாக ரூபா 145 மில்லியன் சேகரிக்கப்பட்டு போது திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்காக சேகரிப்பதற்காக எதிர்பார்க்கப்பட்ட கணக்காய்வுக் கட்டணம் ரூபா 125 மில்லியனாக இருந்த போதிலும் ரூபா 20 மில்லியன் மீளாய்வாண்டில் மேலதிகமாக சேகரிக்கப்பட்டிருந்தது.

திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

சொத்துக்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் செயற்பாடுகளின் வினைத்திறன் என்பவற்றை அளவிடுவதற்கான கருவியொன்றாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான ஆரம்பப் நடவடிக்கைகள் 2010 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. காலணித்துவக் காலம் முதல் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு வந்திருந்த நிறுவனம் என்ற வகையில் முதல் முறையாக திணைக்களங்களுக்கு இக் கணக்கீட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் அரசாங்கக் கணக்குகள் திணைக்களத்தின் அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 2013 ஜனவரி 24 ஆந் திகதிய எஸ்ஏ/ஏஎஸ்/ஏஏ சுற்றறிக்கையின் மூலம் இம்முறைமை சகல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் 2013 ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையின் அறிமுகத்தினைத் தொடர்ந்து திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதன் அரம்பப் படியாக திணைக்களம் அரசாங்கத் துறைக்கு முன்னுதாரணமொன்றை வழங்கியுள்ளது.

கணக்கீட்டுக் கொள்கைகள்

1. அறிக்கையிடல் நிறுவகம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் ஸ்தாபிப்பு தொடர்பாக எவ்வித குறித்துரைக்கப்பட்ட சட்டமும் இல்லை. எவ்வாறெனினும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவர் இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 154(1) மற்றும் (3) ஆம் உறுப்புரைகளில் விதந்துரைக்கப்பட்டவாறு அரசாங்க நிறுவகங்களிற்கு கணக்காய்வுச் சேவைகளை வழங்குவதே கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பிரதான பணியாகும். இந்த நிதிக்கூற்றுக்கள் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானதாகும்.

2. அறிக்கையிடல் காலப்பகுதி

அறிக்கையிடல் காலப்பகுதி சனவரி 01 இல் தொடங்கி திசெம்பர் 31 இல் முடிவடையும் தினக்குறிப்பேட்டு ஆண்டாகும்.

3. தயாரிப்பிற்கான அடிப்படை

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக்கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சகல பெறுமதிகளும் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சகல பெறுமதிகளும் கிட்டிய ஆயிரம் ரூபாவிற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

4. வருமானம்

திணைக்கள வருமானத்தின் பிரதான மூலங்களாக திறைசேரியிடமிருந்து கிடைத்த மீண்டெழும் செலவினத்திற்கான மானியம், கணக்காய்வுக் கட்டணங்கள், கடன்களின் வட்டி, கட்டிட வாடகை, சுற்றுலா விடுதிக் கட்டணங்கள், சொத்துக்களின் விற்பனையிலிருந்தான இலாபம், தண்டப்பணங்கள் மற்றும் கட்டணங்களைக் கருத முடிவதுடன் இவை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. வருமானங்கள் அவற்றின் பெறுவனவைக் கருத்திற்கொண்டு நியாய அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளன.

அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள், உள்ளூராட்சி அதிகாரசபைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் நியதிச் சட்ட நிதியங்களிலிருந்து கணக்காய்வுக் கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. கட்டணமானது அவை உரித்தான காலப்பகுதிக்குரிய வருமானமாக இனங்காணப்படுகின்றன. கணக்காய்வுக் கட்டணப் பெறுமதியானது கணக்காய்விற்காகச் செலவிடப்பட்ட காலத்தையும் குறித்த கணக்காய்விற்காக செலவிடப்பட்ட ஏனைய நேரடிக் கிரயத்தையும் சார்ந்து தீர்மானிக்கப்படுகின்றது.

கடன்கள் மீதான வட்டி, கட்டிட வாடகைகள், சுற்றுலா விடுதிக் கட்டணங்கள், சொத்துக்களின் விற்பனையிலிருந்தான இலாபம், தண்டப்பணங்கள் மற்றும் கட்டணங்களிற்கான வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஏனைய திணைக்களங்களின் தலைவர்களாக உள்ள போதிலும், திணைக்களத்துடன் தொடர்புபட்ட அந்த வருமானங்கள் சேகரிக்கின்ற உத்தியோகத்தர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாவதனாலும் அவ்வாறு சேகரிக்கப்பட்ட வருமானங்கள் மொத்த வருமானத்தில் சிறிய சதவீதமொன்றாக காணப்படுவதனாலும் அந்த வருமானங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன. காசு அடிப்படையில் திறைசேரியின் மீண்டெழும் செலவினத்திற்கான மானியங்கள் கணக்கீடு செய்யப்படுகின்ற போதிலும், நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு பெறவேண்டிய மீண்டெழும் செலவினத்திற்கான மானியமாக கணக்கீடு செய்யப்படுகின்றது.

5. செலவினம்

சகல மீண்டெழும் செலவினங்களும் அட்டுறு அடிப்படையில் கணக்கிற்கு கொண்டுவரப்படுகின்றன.

6. வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள்

வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள் அவை இடம் பெற்ற திகதியில் நிலவிய செலாவணி விகிதத்தைப் பயன்படுத்தி இலங்கை ரூபாவிற்கு பரிமாற்றப்படுகின்றது. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவில் இருந்து விளையும் அந்நிய செலவாணி இலாபங்களும் நட்டங்களும் நிதிச் செயலாற்றல் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

7. காசும் காசுக்குச் சமமானவைகளும்

காசும் காசுக்குச் சமமானவைகளும் கைகளில் உள்ள காசையும் உயர் திரவத் தன்மையுடைய வங்கியுடனான குறுங்கால வைப்புக்களையும் உள்ளடக்குகின்றது.

8. கடன்பட்டோரும் ஏனைய பெறவேண்டியவைகளும்

கடன்பட்டோரும் பெறவேண்டியவைகளும் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் கணிப்பிடப்படுகின்றன. அவைகளுடன் இணைக்கப்பட்டுள்ள அடிப்படை நிபந்தனைகளின் படி

காசினை அல்லது பெறவேண்டிய மீதியினை திணைக்களம் அறவிட முடியாதுள்ளமைக்கு சான்றுகள் காணப்படமாயின் பெறவெண்டிய தொகைகள் நட்டமாக கருதப்படுகின்றன.

9. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்கள் என்பதில் காணி, கட்டிடம், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள், கனணி உள்ளடங்கலான அலுவல உபகரணங்கள், மோட்டார் வாகனங்கள், சிறு அச்சகம், மின்சார பாரந்தூக்கி என்பன உள்ளடங்கியுள்ளன. ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்கள் திரண்ட பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன. மீதிகள் முன் கொண்டுவரப்பட்டு முதற் தடவையாக 2009 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 2010 சனவரி 01 அன்று நிலவிய காணிகளும் கட்டிடங்களும் நில அளவைத் திணைக்களத்தின் திட்டங்களின் படியும் மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மதிப்பிடப்பட்ட பெறுமதியிலும் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டன. அரசாங்க மதிப்பீட்டாளரினால் மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு சகல மோட்டார் வாகனங்களும் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டதுடன் தளபாடங்கள், கணனிகள் மற்றும் ஏனைய விடயங்கள் மதிப்பீட்டாளர்களின் சுதந்திரமான ஓர் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டன.

திணைக்களத்திற்கு எதிர்கால பொருளாதார நலனை வழங்கக்கூடிய அல்லது எதிர்காலத்தில் சேவைகளை திணைக்களத்திற்கு உட்பாய்ச்சக் கூடியதாக இருப்பின் அவை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் என நிச்சயிக்கப்படுவதோடு அவ்விடயங்களின் கிரயம் நம்பகமான முறையில் அளவிடப்படுகின்றது. அநேக சந்தர்ப்பங்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் இனங்காணப்படுகின்றன. கிரயம் இன்றி கையேற்கப்பட்ட அல்லது பெயரளவுக் கிரயத்தில் கையேற்கப்பட்ட சொத்தின் கிரயம் அச் சொத்து கையேற்பட்ட திகதியில் உள்ளவாறான சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

9.1 கைதவிர்ப்புக்கள்

சொத்துக்களின் முன்கொண்டுசென்ற தொகையினை விற்பனை வருமானத்துடன் ஒப்பிடுவதன் மூலமே கைதவிர்ப்பின் மீதான இலாபம் அல்லது நட்டம் தீர்மானிக்கப்படுகிறது. கைதவிர்ப்பின் மீதான இலாபமும் நட்டமும் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

9.2 பிந்திய நிகழ்வுக் கிரயம்

திணைக்களத்திற்கு எதிர்கால பொருளாதார நலனை வழங்கக்கூடியதாக அல்லது எதிர்காலத்தில் சேவைகளை உட்பாய்ச்சக் கூடியதாக இருப்பதுடன் அவ்விடயங்களின் கிரயத்தினை நம்பகரமான முறையில் அளவிட முடியுமாயின் மாத்திரமே ஆரம்பக் கொள்வனவை அடுத்து ஏற்பட்ட கிரயங்கள் மூலதனமாக்கப்படுகின்றன.

9.3 பெறுமானத்தேய்வு

சகல பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு நேர்கோட்டு முறையின் அடிப்படையில் அவற்றின் கிரயத்திலிருந்து தேறத்தக்க பெறுமதியினைக் கழித்து வரும் தொகைக்கு பொறிகள் மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதற்கும் பகிர்ந்தளிக்கக்கூடிய விதத்தில் பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்படுகின்றது. சொத்துக்களின் பிரதான வகுதிகளிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரக்கூடிய ஆயுட்காலமும் பெறுமானத் தேய்வு வீதங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன.

சொத்துக்கள்	ஆயுட்காலம் (ஆண்டுகள்)	பெறுமானத்தேய்வு வீதம் (சதவீதம்)
கட்டிடங்கள்	50	2.0
சிறிய அளவான அச்சகம்	20	5.0
மின்சாரத் தூக்கி	20	5.0
மோட்டார் வாகனங்கள்	8	12.5
தளபாடங்களும் உபகரணங்களும்	5	20.0
கணனிகள் மற்றும் வன்பொருட்கள்	4	25.0

10. செலுத்த வேண்டியவைகள்

ஐந்தொகைத் திகதியில் உள்ள பெறுமதியில் செலுத்த வேண்டியவைகள் கணக்கிற்குக் கொண்டுவரப்படுகின்றன. செலுத்த வேண்டியவைகள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

11. வருடாந்த மதிப்பீடுகள்

வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப் பட்ட வருடாந்த மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டிருப்பவையே பிரதான மதிப்பீட்டுத் தொகைகளாகும். குறைநிரப்பு மதிப்பீடுகள் அல்லது நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 இன் கீழான மாற்றங்களுக்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரான தொகைகளே இறுதித் தொகைகளாக காட்டப்பட்டுள்ளன.

12. தீர்ப்புகளும் மதிப்பீடுகளும்

கொள்கைகள் பிரயோகிக்கப்படுவதனையும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களினதும் வருமானங் கள் மற்றும் செலவினங்களினதும் தொகைகளை அறிக்கையிடுவதனையும் பாதிக்கின்ற தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் இந்த நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படுகின்றன. இந்த மதிப்பீடு களும் ஒருங்கிணைந்த எதிர்வுகூறல்களும் வரலாற்று அனுபவங்கள் மற்றும் சந்தர்ப்பங்களின் கீழ் நியாயமானவையாக நம்பப்படுகின்ற ஏனைய பல்வேறு காரணிகளின் அடிப்படையில் அமைந்ததாகும்

2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று

மதிப்பீடு 2017		குறிப்பு	2017	2016
ரூபா.000			ரூபா.000	ரூபா.000
	வருமானம்			
125,000	கணக்காய்வுக் கட்டணங்கள்	1	127,780	136,504
661	வாடகை		661	493
9,000	வட்டி		9,258	8,957
-	தண்டப்பணமும் அரச மயமாக்கப்பட்டன		666	21
7,000	ஏனையவை	2	4,777	8,152
-	கைதவிர்க்கப்பட்ட சொத்துக்களின் மீதான இலாபம்		19	20,808
141,661	**மொத்த செயற்பாடு வருமானம்**		143,161	174,935
1,399,704	மீண்டெழும் செலவினத்திற்கான திறைசேரி மானியம்	3	1,394,119	1,025,749
1,541,365	**மொத்த வருமானம்**		1,537,280	1,200,684
	செலவினம்			
1,129,600	தனியாள் ஊதியங்கள்	4	1,062,212	960,036
90,500	பிரயாணச் செலவினம்	5	90,496	29,935
27,691	வழங்கல்கள்	6	19,601	28,154
12,000	பராமரிப்பு செலவினம்	7	32,313	12,081
182,250	சேவைகள்	8	168,456	80,326
13,300	மாற்றீடுகள்	9	12,664	11,384
85,500	பயிற்சியும் இயலளவு கட்டியெழுப்புதலும்		85,347	26,022
524	பதிவழிப்பு		524	-
-	பெறுமானத்தேய்வு	10	51,400	56,050
	மீண்டெழும் செலவினம் - இயலளவைக் கட்டியெழுப்புதல் செயற்திட்டம்			
-	கணக்காய்வு நடைமுறை அபிவிருத்தி செய்யும் கிரயம் காலக்கழிவு	11	24,904	24,904
1,541,365	**மொத்த செலவினம்**		1,547,917	1,228,892
	செலவினத்தை மிகைத்த வருமானம்/(பற்றாக்குறை)		(10,637)	(28,208)

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்

	குறிப்பு	2017 திசெம்பர் 31		2017 திசெம்பர் 31	
		ரூபா.000	ரூபா.000	ரூபா.000	ரூபா.000
நடைமுறைச்சொத்துக்கள்					
காசு மீதி		-		-	
பதிவேட்டுப் பொருட்கள்	12	13,788		6,007	
அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணம்	13	221,300		214,319	
பெற வேண்டிய கணக்காய்வு கட்டணம்	14	167,554		184,299	
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்			402,642		404,625
கணக்காய்வு முறைமைகளின் அபிவிருத்தி	11		101,572		126,476
நடைமுறையல்லாச் சொத்துக்கள					
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	10		1,057,551		1,080,367
மொத்தச் சொத்துக்கள			1,561,765		1,611,468
நடைமுறைப் பொறுப்புக்கள்					
செலுத்தவேண்டியவைகள்	15	2,765		1,092	
செலுத்தவேண்டிய வைப்புக்கள்		11,358		19,473	
மொத்தப் பொறுப்புக்கள்			14,123		20,565
திரண்ட நிதி					
சனவரி 01 இல் உள்ளவாறான மீதி		189,214		217,422	
(பற்றாக்குறை)		(10,637)		(28,208)	
திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி			178,577		189,214
பங்களிப்பு					
திறைசேரி	16	643,282		629,448	
பொதுத்துறை இயலுமை கட்டியெழுப்பல் செயற்திட்டம்	17	725,783	1,369,065	772,241	1401,689
மொத்த வரி செலுத்துவோர் உரிமையாண்மை			1,561,767		1,611,468

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எஸ்.எம்.சீ.லக்சிமி
பிரதான கணக்காளார்

2018 ஒக்தோபர் 25 ஆந் திகதி

நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகள்

குறிப்பு இல. 1 கணக்காய்வுக் கட்டணம்

மதிப்பீடு 2017	விபரம்	2017	2016
ரூபா.000		ரூபா.000	ரூபா.000
	பெறுவனவுகள்		
125,000	அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள்	54,738	63,256
-	உள்ளூராட்சி மன்றங்கள்	27,459	20,985
-	கமநல சேவை நிலையங்கள்	1,240	1,160
125,000	**மொத்தம்**	**83,437**	**85,401**
	பெறப்பட வேண்டியவை		
-	அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள்	12,229	34,661
-	உள்ளூராட்சி மன்றங்கள்	30,058	15,334
-	கமநல சேவை நிலையங்கள்	2,056	1,108
-	**மொத்தம்**	**44,343**	**51,103**
125,000	**முழு மொத்தம்**	**127,780**	**136,504**

குறிப்பு இல. 02 சொத்துக்களின் கைதவிர்ப்பு

மதிப்பீடு 2017	விபரம்	2017	2016
ரூபா "000"		ரூபா "000"	ரூபா "000"
-	**தளபாட உபகரணங்களின் கைதவிர்ப்பு**		
-	தளபாட உபகரணங்களின் விற்பனைப் பெறுமதி	6	18,558
-	முன்கொண்டு சென்ற தொகை	-	0
-	தளபாட உபகரணங்களின் கைதவிர்ப்பு இலாபம்/(நட்டம்)	**6**	**18,558**
	கனணிகள் மற்றும் வன் பாகங்களின் கைதவிர்ப்பு		
-	கனணிகள் மற்றும் வன் பாகங்களின்விற்பனைப் பெறுமதி	**13**	2,250
	முன்கொண்டு சென்ற தொகை	-	0
-	தளபாட உபகரணங்களின் கைதவிர்ப்பு இலாபம்/(நட்டம்)	13	**2,250**
-	சொத்துக்களின் கைதவிர்ப்பு இலாபம்	19	**20,808**

குறிப்பு இல. 03 மீண்டெழும் செலவினத்திற்கான திறைசேரி மானியம்

மதிப்பீடு	விபரம்	2017	2016

2017 ரூபா.000		ரூபா.000 ரூபா.000	
1,399,704	திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டுநிதி	1,317,815	944,795
-	பெறுமானத்தேய்விற்காக பெறவேண்டிய கட்டுநிதி	51,400	56,050
-	கணக்காய்வு முறை அபிவிருத்திக் கிரயம்	24,904	24,904
1,399,704	**மீண்டெழும் செலவினத்திற்கான திறைசேரிப் பங்களிப்பு**	**1,394,119**	**1,025,749**

குறிப்பு இல.04 ஆளணி வேதனங்கள்

மதிப்பீடு 2017 ரூபா.000	விபரம்	2017 ரூபா.000	2016 ரூபா.000
641,500	சம்பளங்களும் கூலிகளும்	590,968	447,334
8,000	மேலதிக நேர மற்றும் விடுமுறைதினக் கொடுப்பனவுகள்	7,606	4,619
480,100	ஏனைய படிகள்	463,638	508,083
1,129,600	**மொத்தம்**	**1,062,212**	960,036

குறிப்பு இல.05 பிரயாணச் செலவினம்

மதிப்பீடு 2017 ரூபா.000	விபரம்	2017 ரூபா.000	2016 ரூபா.000
13,500	உள்நாடு	13,498	10,488
77,000	வெளிநாடு	76,998	19,447
90,500	**மொத்தம்**	**90,496**	**29,935**

குறிப்பு இல.06 வழங்கல்கள்

மதிப்பீடு 2017 ரூபா.000	விபரம்	2017 ரூபா.000	2016 ரூபா.000
13,091	எழுதுகருவிகள் மற்றும் அலுவலகத் தேவைகள்	5,439	16,989
14,000	எரிபொருள்	13,562	10,665
600	உணவுகள் மற்றும் சீருடைகள்	600	500
27,691	**மொத்தம்**	**19,601**	**28,154**

குறிப்பு இல.07 பராமரிப்புச் செலவினம்

மதிப்பீடு 2017 ரூபா.000	விபரம்	2016 ரூபா.000	2015 ரூபா.000

5,000	மோட்டார் வாகனங்கள்	5,368	5,970
6,000	பொறிகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்	6,275	5,114
1,000	கட்டிடங்களும் கட்டமைப்புகளும்	20,670	997
12,000	மொத்தம்	32,313	12,081

குறிப்பு இல.08 சேவைகள்

மதிப்பீடு 2017	விபரம்	2017	2016
ரூபா.000		ரூபா.000	ரூபா.000
21,000	போக்குவரத்து	20,504	18,707
20,000	தபால் மற்றும் தொடர்பாடல்	20,018	16,806
15,500	மின்சாரம் மற்றும் நீர்	16,444	13,410
17,500	வாடகைகள் மற்றும் உள்ளூர் வரிகள்	17,099	608
62,250		48,817	
182,250	மொத்தம்	168,456	80,326

குறிப்பு இல. 09 மாற்றல்கள்

மதிப்பீடு 2016	விபரம்	2017	2016
ரூபா.000		ரூபா.000	ரூபா.000
800	சந்தாக்கள் மற்றும் உதவு தொகைகள்	556	650
12,500	அரசாங்க உத்தியோகத்தர் கடன்களிற்கான வட்டி	12,108	10,734
13,300	மொத்தம்	12,664	11,384

குறிப்பு இல. 10 பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்கள்

	காணி	கட்டிடம்	வாகனங் கள்	கணனிகள் மற்றும் மென்பொருட்கள்	தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்	சிற்றளவு அச்சகம்	மின் தூக்கியும் மின் பிறப்பாக்கியும்	மொத்தம்
	ரூபா.000	ரூபா.000	ரூபா.000	ரூபா.000	ரூபா.000	ரூபா.000	ரூபா.000	ரூபா.000
கிரயம்								
2017 ஜனவரி 01 இல் மீதி	256,147	781,203	119,919	133,787	112,477	26,023	15,830	1,445,386
சேர்த்தல்கள்	-	-	-	16,647	11,937	-	-	28,584

கைதவிர்ப்புகள்	-	-	-	(32)	(477)	-	-	(509)
2017 திசெம்பர் 31 இல் மீதி	**256,147**	**781,203**	**119,919**	**150,402**	**123,937**	**26,023**	**15,830**	**1,473,461**
பெறுமானத் தேய்வு								
2017 ஜனவரி 01 இல் மீதி	-	**70,999**	**68,521**	**126,680**	**89,850**	**6,506**	**2,463**	**365,019**
கைதவிர்க்கப்பட்ட சொத்துக்களின் தேய்வு	-	-	-	(32)	(477)	-	-	(509)
ஆண்டிற்கான தேய்வு	-	15,624	14,990	**5,033**	**13,660**	1,301	792	**51,400**
2017திசெம்பர் 31 இல் மீதி	-	**86,623**	**83,511**	**131,681**	**103,033**	**7,807**	**3,255**	**415,910**
2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய தொகை	**256,147**	**694,580**	**36,408**	**18,721**	**20,904**	**18,216**	**12,575**	**1,057,551**

குறிப்பு இல. 11 கணக்காய்வு முறையினை அபிவிருத்தி செய்தல் கிரயம்

விபரம்	2016 ரூபா.000	2015 ரூபா.000
2017 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி	126,476	151,380
2017 ஆம் ஆண்டிற்கான காலக்கழிவு (மொத்தக் கிரயத்தில் 10 சதவீதப் படி)	(24,904)	(24,904)
2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி	**101,572**	**126,476**

குறிப்பு இல. 12 பதிவேட்டுப் பொருட்கள்

விபரம்	2017 ரூபா.000	2016 ரூபா.000
ரோனர்	1,903	3,397
எழுதுகருவிகளும் அலுவலக தேவைகளும்	10,706	1,560
டயர்களும் டியூப்களும்	844	856
சுத்திகரிப்புப் பொருட்கள்	335	194
மொத்தம்	**13,788**	**6,007**

குறிப்பு இல. 13 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணங்கள்

விபரம்	2017	2016
	ரூபா.000	ரூபா.000
திணைக்களத்தில் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய மொத்தத் தொகை	218,917	211,655
திணைக்களத்திலிருந்து இடமாற்றத்தில் சென்றஉத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய மொத்தத் தொகை	149	330
ஓய்வுபெற்ற மற்றும் மரணித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டியவை	1,342	1,339
பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோர்கத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டியவை	304	662
பதவி நீக்கம் செய்யப்பட்ட உத்தியோர்கத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டியவை	588	333
மொத்தம்	**221,300**	**214,319**

குறிப்பு இல. 14 பெறவேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள்

விபரம்	2017	2016
	ரூபா.000	ரூபா.000
அபிவிருத்தி மன்றங்கள்	30	30
மாநகர சபைகள்	19,641	20,229
நகர சபைகள்	27,418	34,087
பிரதேச சபைகள்	22,081	17,454
அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள்	88,458	101,583
கமநல சேவை நிலையங்கள்	9,926	10,852
மொத்தம்	**167,554**	**184,299**

குறிப்பு இல.15 – செலுத்தவேண்டிய செலவினங்கள்

விபரம்	2017	2016
	ரூபா.000	ரூபா.000
புகையிரத ஆணைச்சீட்டு – விடுமுறை	750	301
புகையிரத ஆணைச்சீட்ட – பயணச் செலவினம்	-	2
ஏனைய செலவினம்	45	270
தபால் கட்டணங்கள்	11	23
தொலைபேசிச் சிட்டைகள்	632	330
நீர்ச் சிட்டைகள்	1,327	112
வாகன பராமரிப்பு	-	3
பதவியணியினர் பயிற்சி	-	51
மொத்தம்	**2,765**	**1,092**

குறிப்பு இல. 16 மூலதன செலவினம் மற்றும் பொது வைப்புக் கணக்கிற்கான அரசாங்க மானியம்

விபரம்	2017	2016
	ரூபா.000	ரூபா.000
அரசாங்க உத்தியோகத்தர் முற்பணங்களிற்காக	221,300	214,319
வைப்புக் கணக்கிற்காக	(11,358)	(19,473)
நிலையான சொத்துக்களிற்காக	433,340	434,602
மொத்தம்	**643,282**	**629,448**

குறிப்பு இல. 17 அரசாங்கத் துறை இயலளவு கட்டியெழுப்புதல் செயற்திட்டம்

விபரம்	2017	2016
	ரூபா.000	ரூபா.000
நிலையான சொத்துக்களிற்காக	624,211	645,765
கணக்காய்வு முறைக்காக	101,572	126,476
மொத்தம்	**725,783**	**772,241**

2017 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கையின் கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு

நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சின் கிங் நில்வளா திசை திருப்புதல் செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கை.

நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட கிங் நில்வளா திசை திருப்பல் செயற்திட்டத்தின் அறிக்கையொன்றை முன்வைக்குமாறு பொது கணக்குகள் மீதான குழு என்னிடம் கேட்டுக்கொண்டதன் பேரில் இந்த அறிக்கை விநியோகிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கிய அவதாணிப்புக்களின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

2009 ஒக்தோபர் 31 ஆந் திகதி சீனாவில் பதிவு செய்யப்பட்ட சீன நிர்மாணக் கம்பனியொன்றான China CAMC Engineering Co. Ltd. (CAMCE) கம்பனியுடன் கிங் நில்வளா செயற்திட்டத்துக்கு உட்பட்ட யான் ஓயா மறறும் மல்வத்து ஓயா ஆகிய 03 செயற்திட்டங்களுக்காக உரிய புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று நீர்ப்பாசன மறறும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சு செயலாளரினால் கைச்சாத்திடப்பட்டிருந்தது. பின்னர் அந்த புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக குறிப்பிட்டு 2009 நவம்பர் 05 இல் நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சரால் அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு பின்வரும் விடயங்களுக்காக அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், கிங் நில்வளா செயற்திட்டத்திற்கான அனுமதியானது அமைச்சரவை விஞ்ஞாபனத்திலிருந்து முன் கொண்டுவரப்பட்டிருக்காததுடன் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் சிபாரிசுகள் யான் ஓயா செயற்திட்டத்தின் அமுல்படுத்தலிற்காக அனுமதியை விஞ்ஞாபனத்தின் மீது வெளிப்படுத்தியிருந்தது. பின்னர் மேற்கூறப்பட்ட அனுமதி தொடர்பில் 2009 நவம்பர் 18 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் China CAMC Engineering Co. ltd ஆல் நிறைவான சாத்திய வள ஆய்வொன்று சமர்ப்பித்த பின்னர், 2014 செப்தெம்பர் 02 இல் அனுமதியானது "கிங் நில்வளா திசைதிரும்பல் செயற்திட்டத்தை அமுல்படுத்தல்" என்ற தலைப்பில் கீழ் கொண்டுவரப்பட்டது.

அதன் பிரகாரம், அமைச்சரவையானது நிதி அமைச்சின் செயலாளரின் இறுதி சிபாரிசுகளை கவனத்திற் கொண்டதன் மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு கட்டளையிட்டு 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது மேற்குறித்த வேண்டுகோள்களுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்குறித்த திருத்தத்தின் இரண்டாவது முன்மொழிவின் பிரகாரம் அங்கு CAMCE கம்பனி EPC ஒப்பந்தமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானித்து 2014 நவம்பர் 05 ஆந் திகதி உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.

இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- இந்தச் செயற்திட்டம் தொடர்பிலான உடன்படிக்கையின் உட்பிரிவு 5 இல் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து

விடயங்களும் பூர்த்தியடைந்த பின்னர், உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் இரு தரப்பினரின் அங்கீகாரமில்லாமல் அமுல்படுத்தல் கட்டத்தை அடைவதற்கு செயற்திட்டம் தவறினால் அந்த உடன்படிக்கையானது இல்லாது போய்விடும். இந்த நிபந்தனைகளிற்கிணங்க உடன்படிக்கையானது இப்போதிலிருந்து சட்டரீதியாக இல்லாதிருந்தது.

- ஜின் கிங் நில்வளா, ஜான் ஓயா மற்றும் மல்வத்து ஓயா போன்ற 03 செயற்திட்டங்கள் தொடர்பில் 2009 ஒக்தோபர் 31 இல் ஊயுஆஊநு கம்பனியுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை அடிப்படையாகவிருந்த விடயங்களானது ஈடுபடுத்தப்பட உடன்படிக்கையின் வெளிப்படுத்தல் தன்மை சந்தேகத்திற்குரியதாக இருந்தமை போன்றவற்றால் ஆவணப்படுத்தல் சான்றுகளினூடாக போதியளவில் நிரூபிக்கப்பட்டிருக்கவில்லை.
- ஜின் நில்வளா செயற்திட்டத்தின் விடயங்களானது செயற்திட்டத்துடன் தொடர்புடைய அதிக ஆவணங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தினை அமுல்படுத்துவது தொடர்பான எதிர்கால நடவடிக்கை தொடர்பிலான விஷேட புள்ளிவிபரங்கள், சிபாரிசுகள் அல்லது அனுமதிகள் அத்தகைய ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.
- 2009 நவம்பர் 08 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம், சீனாவின் வரையறுக்கப்பட்ட ஊயுஆஊநு கம்பனியால் இந்த செயற்திட்டத்துடன் தொடர்புடையதாக நிறைவான சாத்தியவள ஆய்வொன்று மேறகொள்ளப்பட்டது. அதன் இறுதி சாத்தியவள அறிக்கை 2011 ஏப்ரல் மாதம் இந்த அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக 2014 செப்தெம்பர் 02 ஆந் திகதிய அமைச்சரவைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், செயற்திட்டத்திற்காக அவ்வாறானதொரு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதும், அவ்வாறு ஒப்பந்தகாரரிடமிருந்து சாத்தியவள கற்கையொன்றினை வருவித்தல் அல்லது பெற்றுக்கொள்ளல் ஆகியவற்றுக்கிடையே சிக்கலான நிலமையொன்று அவதானிக்கப்பட்டது.
- ஊயுஆஊநு நிறுவனத்தினால் அமைச்சிற்கு வழங்கப்பட்ட சாத்தியவளக்கற்கை அறிக்கை மீளாய்வு செய்யப்பட்டு 04 மாதங்களினுள் இறுதி அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு மஹாவலி மதியுரை பணியகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த இறுதி அறிக்கை 2017 ஒக்தோபர் மாதம் வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.
- 2014 செப்தெம்பர் 02 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது வேண்டுகோள்களுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்திற்கு தேவையான வெளிநாட்டு நிதி சீன அரசின் மூலம் சலுகை நிபந்தனையின் பேரில் பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான வகையில் நடவடிக்கை எடுப்பதை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு கையளித்தலிற்கான் மேற்கூறப்பட்ட திணைக்களமானது சீனா அரசாங்கத்துடன் அதற்கான எதிர்கால நடவடிக்கையை எடுத்திருந்தது என்பதற்கு சான்றுகளிருக்கவில்லை.
- நிதி அமைச்சின் செயலாளரின் இறுதி சிபாரிசுகளை கருத்திற்கொள்வதன் மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு

கட்டளையிடுவதன் மூலம் 2014 செப்தெம்பர் 30 இல் கொடுக்கப்பட்ட அனுமதி தொடர்பில் நிதி அமைச்சின் இறுதி சிபாரிசு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதென்பதற்கான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- மேற்படி உடன்படிக்கையில் 05(ர) இன் பிரகாரம் செயற்திட்டத்துக்குரிய நிலக்கீழ் புலனாய்வு நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்காக செயற்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகையில் 15மூ ஆன வேலை ஆரம்பிப்பு முற்பணம் ஒப்பந்தகாரருக்கு வழங்கல் உட்பட பின்வரும் நிபந்தனை உள்ளடக்கப்பட்டுள்ளன.

- இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினதும் சீன மக்கள் குடியரசினதும் நிறுவனங்களிலிருந்து தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல்.

- இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினதும் (ருளநச ஊசநனவை) சீனக் குடியரசினதும் கடன் வழங்கும் நிறுவனங்களினதும் (டுநனெநச) கடன் உடன்படிக்கையை பூர்த்தி செய்தல்.

எனினும் மேற்கூறப்பட்ட வேண்டுகோள் 2017 நவம்பர் 15 இலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

- கம்பனியால் ஆரம்ப முற்பணங்களை பெற்றதன் பின்னரும் இறுதி நிலக்கீழ் விசாரணைகளை தொடங்குவதற்காக இலங்கையில் தொழில்நுட்ப நிபுணர்களை வேலைக்கமர்த்துவதற்கு நீர்ப்பாசன மற்றும் மூல வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் செயளாலரிடமிருந்து அறிவுத்தல்கள் வேண்டப்பட்டிருந்ததும் கம்பனியால் செயற்திட்டம் தொடங்கப்பட்டது எனவும் குறிப்பிடப்பட்ட கம்பனி குறிப்பிடப்பட்ட போதிலும், அத்தகைய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

- செயற்திட்டத்திற்கான 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் ரூபா 1.5 மில்லியன் மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டில் ரூபா 40.0 மில்லியன் இந்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், நிதிப்பிரமாணம் 94 இற்கு முரணாக அதனை விஞ்சி செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- செயற்திட்டத்திலான வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளிற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளை விஞ்சி ரூபா 4,011.05 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும், அதிலிருந்து 2017 நவம்பர் 15 அளவிலும் எந்தவொரு நலன்களும் பெறப்பட்டிருக்கவில்லை. ரூபா 4,011.05 மில்லியன் பெறுமதியான அரச வளங்கள் சுமார் 18 மாத காலமாக வெளிவாரி வெளிநாட்டுத் தரப்பினருக்கு பாவனைக்காக வழங்கப்பட்டிருந்தமை, அரச வளங்களின் முறையற்ற பாவனைக்கு உட்படுவதற்கான இடமளித்தலாக அவதானிக்கப்பட்டது.

- செயற்திட்டதிலிருந்து எழுகின்ற சமூக விளைவுகளின் நிச்சயமற்ற தன்மையால் செயற்திட்டத்தை நிறுத்துவதனால் முறையான புலனாய்வுகளை மேற்கொள்வதற்கும், செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டு இருப்பதும் பயன்படுத்தப்பட்டதுமான அது மீண்டும் அரசாங்கத்தின் தீர்பணவின் பின்னர் பெறுகை தொடர்பாக செயற்திட்டதிற்காக வழங்கப்படுவதுமான ஆரம்ப முற்பணங்களை திருப்புவதற்கும் தீர்மானிக்கப்பட்டமையால் செயற்திட்ட வேலைகளை இடைநிறுத்துவதற்கு

ஊயுஆஊநு கம்பனிக்கு நீர்பாசன மற்றும் நீர் மூல வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் அறிவித்திருந்த போதிலும், மேற்கூறப்பட்ட முற்பணமானது இலங்கை குடியரசிற்கு திருப்பப்பட்டிருக்கவில்லை.

- இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதி அமைச்சரைவயின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதனை நடைமுறைப்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டின் போது போதியளவான நிதியேற்பாடுகளை ஒதுக்கிக் கொள்வதற்கும் அமைச்சரவை தவறியிருந்தது.

- ஒப்பந்தக் கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முற்பண பிணையானது 2017 திசெம்பர் 08 ஆந் திகதி முடிவடைய உள்ளமையால், அதனை நீடிப்பு செய்வதற்கோ அல்லது அதனை காசாக்குவதற்கோ இது வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- பொருளாதார முகாமைத்துவம் மீதான அலுவலகக் குழுவின் உறுப்பினராகவுள்ள பெருநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சரவை மேற்கூறப்பட்ட குழுவின் அறிக்கைக்கு கையொப்பமிட்டிருக்கவில்லை.

தீர்வுகள்

- இந்த செயற்திட்டத்துக்குரிய செயற்திட்டத்தினை இனங்காணல், ஒப்பந்தகாரரொருவரை தெரிவு செய்தல், முற்பணங்களை வழங்குதல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பின்தொடர்தல் போன்ற விடயங்களின் போது பொருத்தமான திட்டங்களை தயாரித்தல், வெளிப்படைத் தன்மையை பாதுகாத்தல், பிரமாணங்களுக்கு இணங்கி நடத்தல் போன்றன பொறுப்புகூற வேண்டிய தரப்பினரால் கவனத்திற் கொள்ளக்கூடிய அளவில் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தீர்மானிக்கப்படுகின்றது.

- இந்த நடைமுறையின் போது அரசு செலவிட்டுள்ள தொகைக்கு ஒப்பாக எந்த விதமான கருத்தில் கொள்ளக்கூடிய பிரதிபலனொன்றும் கிடைத்திருக்கவில்லை என்பதால், அவ்வாறு அரச வளங்களை பாதுகாப்பற்ற முறையில் பாவனைக்கு உட்படுவதற்கான சந்தர்ப்பத்தினை வழங்கியுள்ள அதிகாரிகள் அதற்கு பொறுப்பு கூற வேண்டும் என தீர்மானிக்கப்படுகின்றது.

- உரிய முற்பணத் தொகையினை செலுத்துவதற்காக போதியளவான நிதியேற்பாடுகள் இல்லாதிருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ள போதும், அது தொடர்பில் உரிய கவனம் செலுத்தாது நிதியங்களை விடுவித்தல் தொடர்பில் முன்னாள் நீர்ப்பாசன மறறும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சரின் செயலாளர் நேரடியாக பொறுப்பு கூற வேண்டும் என முடிவு செய்யப்படுகின்றது.

விலத்திக்குளம் சரணாலயம் தவறாகப் பயன்படுத்தப்படுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வு

மேற்கூறப்பட்ட அறிக்கையானது 2017 திசெம்பர் 13 இல் மதிப்பிற்குரிய சபாநாயகருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதில் உள்ளடக்கப்பட்ட முக்கிய அவதானிப்புக்களின் பொழிப்பு கீழே அவதானிக்கப்பட்டது.

வனப்பாதுகாப்பாளர் நாயகத்திற்கு சரணாலயம் என்ற வகையில் வழங்கப்பட்ட காணியின் பகுதியொன்றை வெளியாக்கப்பட்டு வீடமைப்பு நிர்மாணிப்பது தொடர்பாக மக்களுக்கிடையில் எற்பட்ட வேறுபட்ட கருத்து முரண்பாடுகளிற்கான விசாரணைக்காகவும் இது தொடர்பில் பாராளுமன்றத்தில் ஏற்பட்ட விவாதங்களின் மூலம் வெளியாகிய விடயங்களை ஆழமாக பரீட்சித்தும் இந்த அறிக்கை வழங்கப்பட்டது.

சனாதிபதி அவர்களால் வட மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கான செயலாற்றல் அணி 2009 மே 07 ஆம் திகதிய உருவாக்கப்பட்டது. இவ் அணியின் முக்கிய நோக்கங்களில் இடம் பெயர்ந்த நபர்களை மீள் குடியேற்றுவதற்காகவும் அவர்களிற்கு புனர்வாழ்வளிப்பது, வட மாகாண அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி என்பனவும் அடங்கும். மேற்குறித்த சனாதிபதி செயலாற்றல் அணியால் 2012 நவம்பர் 12 ஆம் திகதி தமது நடவடிக்கைகளை மேறகொள்வதற்காக ஓர் குழு நியமிக்கப்பட்டு அறிக்கை கோரப்பட்டிருந்தது. குழுவின் முன்னுரிமைக் கூற்று (Term of Preference) பின்வருமாறாக காணப்பட்டது.

- கிராம சேவை உத்தியோகத்தரின் படி இடம் பெயர்ந்த குடும்பங்கள் மற்றும் நபர்கள் தொடர்பாக மதிப்பிடல்.
- 2009 ஆம் ஆண்டின் முன்னரும் பின்னரும் மீள அவர்களின் கிராமங்களிற்கு வருகை தந்து குடும்பங்கள் மற்றும் நபர்களை இனங்காணல்.
- மீள் குடியேற்றத்திற்கு வருகை தரக்கூடிய நபர்களினதும் குடும்பங்களினதும் எண்ணிக்கை தொடர்பாக மதிப்பிடல்.
- ஒவ்வொரு கிராமங்களிலும் தற்போதுள்ள காணிகளின் இடப்பரப்பு.
- ஒவ்வொரு வகைபப்டுத்தலின் படி காணிகளை இழப்பதற்கான காரணம் இனங்காணப்படல்.
- சரணாலயங்கள் அல்லது வன சீவராசிகள் சரணாலயங்களிற்கு வெளியே உள்ள காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவால் அல்லது அரசாங்க காணிகள் தொடர்பாக மதிப்பிடல்.
- விடுவிக்கப்படுவதற்குளள் காணிகளின் தன்மை மற்றும் தற்போதைய நிலை தொடர்பாக அறிக்கையிடல்
- கிராமப் புறங்களில் உள்ள காணி உரித்தற்ற நபர்களைக் குறைப்பதற்காக வேறு பொருத்தமான தீர்வுகளை பரிந்துரை செய்தல்.

- குழுவால் 2012 ஒக்டோபர் 15 ஆம் திகதி ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதன் பட்டோலை 04 இல் 4.2.1 (எ) ஆம் பந்தியில் முசலி பிரதேச செயலகப் பிரிவில் 1045 ஏக்கர் அளவில் இடம்பெயர்ந்த குடும்பங்களிற்காக வழங்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், வன சரணாலயக் காணிகளை வழங்குவதற்கு முடியாதென பரிந்துரைக்கப்பட்டிருந்தது. வனப் பாதுகாப்புத் திணைக்களம் அல்லது வன சீவராசிகள் திணைக்களம் அல்லது கட்டுப்படுத்தப்படாத காடுகள் " ஏனைய அரசாங்கக் காடுகள்" ஆக பிரதேச செயலாளர்களின் கீழ் கடடுப்படுத்தப்படுகின்றது. இவ் ஏனைய காடுகள் வேறு பயன்பாட்டு நடவடிக்கைகளிற்காகப் பயன்படுத்தப்படுவதற்குத் தேவைப்படின் இடைக்கால அமைச்சுக் குழுவிற்குத் தொடர்புபடுத்தப்பட்டு தீர்மானம் அங்கீகரிக்கப்படின் சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் கீழ் சுற்றாடல் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு ஏற்ற நிபந்தனைகளின் படி, காணிகளை வழங்குவதற்காக காணிகள் ஆணையாளரிற்கு விடுவிக்கப்படும். 2013 ஏப்ரல் 30 ஆம் திகதிய சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சின் செயலாளரின் தலைமையில் இடைக்கால அமைச்சுக் குழுக் கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டிருந்ததுடன் அங்கு காணிகள் ஆணையாளர் நாயகத்திற்கு மன்னார் மாவட்டத்தின் 1080 ஏக்கர் காணிகளை விடுவிக்கப்படுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. "பிச்சை வன்னிக்குளம்" வீதிக்கு அருகாமையில் உள்ள விலத்திக் குளம் வன சரணாலயத்தின் 650 ஏக்கர் உட்பட 1420 ஏக்கர் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்படுவதற்காக மாவட்ட வன உத்தியோகத்தர்களுக்கு வன சரணாலய நாயகத்தினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.

2012 ஒக்தோபர் 10 ஆம் திகதிய கைத்தொழில் மற்றும் வாணிப அலுவலகள் அமைச்சரின் தலைமையில் சனாதிபதி செயலாற்றல் அணிச் செயலாளர் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்கள் கூட்டம் நடாத்தி காணிகள் அற்றவர்களாக இனங்காணப்பட்டிருந்த 1371 முஸ்லிம் குடும்பங்களிற்கு 80 பேர்ச் படி தேவையான காணிகளின் அளவை விலத்திக் குளம் வன சரணாலயத்தில் இருந்து பெற்றுக்கொள்வதற்காக வனப் பாதுகாப்பு ஆணையாளர் நாயகத்திடம் கோரப்பட்டு அப் பகுதியை விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது. மேலும் சூழ உள்ள கிராமங்களில் உள்ள காணிகள் நெற்பயிர்ச்செய்கைக்கு ஏற்ற காணி எனவும் அக் காணிகளில் வீடுகளை நிர்மாணிப்பதற்கு உகந்ததல்ல என்பதற்கான

காரணங்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. 2012 மே 21 ஆம் திகதிய 1759∴2 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 2,108 ஹெக்டேயர் விசாலமான விலத்திக் குளம் வனப்பகுதி 2012 யூன் 10 ஆம் திகதி முதல் சரணாலப் பகுதியாக அறிவிக்கப்பட்டிருந்தது. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் காணிப் பகிர்வு நடவடிக்கைகளைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு அமைச்சரவைத் தீர்மானித்துள்ளதாக முகுடுவாற்ற பத்துவ பிரதேச செயலாளரிறகு 2012 சனவரி 06 ஆம் திகதி காணி ஆணையாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறிருக்கையில் முசலி பிரதேச செயலாளரால் காணிப் பகிர்ந்தளிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- விலத்திக் குளம் வனப் பகுதியை சரணாலயமாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியிருக்கையில் வனப் பாதுகாப்பாளர் நாயகத்தால் அச் சரணாலயத்தில் 650 ஏக்கர் நிலப்பரப்பை மன்னார் மாவட்டச் செயலாளரிற்கு இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீள் குடியமர்த்துவதற்காக விடுவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு விடுவிப்பதற்கு வனப் பாதுகாப்பாளர் நாயகத்திற்கு அதிகாரப்பொறுப்போ அல்லது சட்டரீதியான அதிகாரமோ இருக்கவில்லை.

- 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23(யூ) ஆம் பிரிவின் விதப்புரைகளின் படி, 1993 யூன் 24 ஆம் திகதிய 772∴22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஏற்பாடுகளின் படி, 650 சரணாலயப் பிரதேசத்தை வெளியாக்குவதற்கு முன்னர் சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை ஒன்றைப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும். எனினும், அத்தகைய அறிக்கைகள் பெறப்பட்டிருக்கவில்லை.

- கைத்தொழில் மறறும் வாணிப அலுவல்கள் அமைச்சின் தலைமையில் 2012 ஒக்டோபர் 05 ஆம் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில் விலத்திக் குளம் சரணாலயத்தில் மீள்குடியேற்றப்படுவதற்காக தேவையான காணியை விடுவிக்குமாறு வனப் பாதுகாப்பாளர் நாயகத்திற்கு அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு தீர்மானிப்பதற்கு குறித்த அமைச்சருக்கு அதிகாரப் பொறுப்பு இருக்கவில்லை.

- முசலி - பிரதேச செயலாளரால் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தியவாறு 2017 சனவரி 04 ஆம் திகதி வரையில் வெளியாக்கப்பட்ட 650 ஏக்கர் சரணாலயத்தின் குடியமர்த்தல் நிலை பின்வருமாறாகும்.

- 160 குடும்பங்களிற்காக வீடமைப்பு பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும் 33 குடும்பங்கள் குடியேறியிருக்கவில்லை. பகுதியளவில் நிர்மாணிகக் ப்பட்டிருந்த வீடுகளின் எண்ணிக்கை 131 ஆகவும், வீடுகள் நிர்மாணிக்கப்படாது வெளியாக்கப்பட்டிருந்த காணித்

துண்டுகளின் எண்ணிக்கை 706 ஆகவும் காணப்பட்டது. எவ்வாறெனினும், 2017 சனவரி 23 ஆம் திகதி மேறகொள்ளப்பட்ட கள ஆய்வின் படி, நிர்மாணிக்கப்பட்டிருந்த 160 வீடுகளில் 10 சதவீதமான வீடுகளில் மாத்திரமே குடியிருப்புகள் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

- 2013 ஆம் ஆண்டின் போது பிரித்து ஒதுக்கப்பட்டிருந்த இக் காணித்துண்டுகளில் குடியிருப்பு மிகவும் திருப்தியற்ற நிலையில் காணப்பட்டதுடன் இதன் படி, உண்மையில் காணிகளை இழந்தவர்களுக்கு இக் காணித்துண்டுகள் வழங்கப்பட்டனவா என்பது கேள்விக்குரிய விடயமாகக் காணப்பட்டது.

- கிராம உத்தியோகத்தர்களுடன் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் 2017 பெப்ரவரி 28 ஆம் திகதி மார்ச் 01 ஆம் 02 ஆம் திகதிகளில் மீண்டும் கள ஆய்வை மேற்கொண்டிருந்ததுடன் மீளக்குடியேற்றப்பட்டவர்களில் 44 குடும்பங்களின் வீடுகள் மூடப்பட்டிருந்தன. இவற்றில் 41 வீடுகளில் நீண்டகாலமாக மக்கள் குடியேறியிருக்கவில்லை.

- போரால் காணிகளை இழந்த குடும்பங்களுக்கே மீள் குடியேற்றம் மேற்கொள்ளப்படவேண்டிய போதிலும், காணிகள் வழங்கப்பட்டிருந்த நபர்களுக்கு போரால் காணி இழப்பு நேர்ந்திருக்கவில்லை.

- காணித் துண்டுகள் வழங்கப்படுகையில் ஒருவருக்கு 80 பேர்ச் காணி அளவில் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இதற்கு அடிப்படை ஒன்று இருக்கவில்லை. முசலி பிரதேசச் செயலகப் பிரிவிற்கு அண்மையில் உள்ள நானாட்டான் பிரதேசச் செயலகப் பிரிவில் 56 குடும்பங்கள் குடியேறி இருந்ததுடன் ஒரு குடும்பத்திற்கு 20 பேர்ச் படி வழங்கப்பட்டிருந்தது.

- இடம்பெயர்ந்தவர்களைக் குடியமர்த்துவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது இச் சரணாலயத்தால் ஒதுக்கப்பட்டிருந்த பகுதியில் 2017 ஆம் ஆண்டு வரையிலும் 706 காணித் துண்டுகளில் வீடமைப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதாவது இது மொத்த காணித் துண்டளவில் 68 சதவீதமாகக் காணப்பட்டது. இதன் படி, உண்மையான மக்கள் தேவைக்காக இக் காணி ஒதுக்கப்பட்டிராமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

- வடக்குக் கிழக்கு மாகாணங்களில் போருக்குப் பின்னர் அரசாங்கக் காணிகளிற்கு உரிய பிரச்சனைகளைத் தீர்க்கும் துரித நிகழ்ச்சித்திட்டம் எனும் பெயரில் காணி ஆணையாளர் நாயகத்தின் 2013.'.01 ஆம் இலக்க 2013 சனவரி மாதச் சுற்றறிக்கையின் 2.2.1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு பாதிப்பிற்கு உட்பட்ட நபர்களின் காணிகளிற்கு உரித்தாக நிலவும் பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் வரை காணிகள் அற்றவர்களுக்கு காணிகளைப் பகிர்ந்தளித்தலாகாது என அமைச்சரவையால் கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது.'' எவ்வாறெனினும், சரணாலயக் காணிகள் வழங்கப்படுகையில் இதற்கு மாறாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அரசாங்கத்திற்கு உரித்தான காணிகளை அத்துமீறி பெறப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்காக 2008 மார்ச் 12 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, காணிகள் கச்சேரியில் ஒரு நபருக்கு அல்லது ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் காணி அளவைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவ்வாறிருக்கையில் அத்தகைய ஓர் அலகிற்காக 80 பேர்ச் காணி வழங்கப்பட்டிருந்தது.

- பிரதேச செயலாளர் பிரிவொன்றில் உண்மையாகக் காணியற்ற நபர்களை இனங்கண்டு இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய விதம் காணி ஆணையாளர் நாயகத்தின் 2008 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய 2008/4 ஆம் இலக்க சுற்றறிக்கையில் உறுதியாகக் குறிப்பிடப்பட்டிருக்கையில் இப் பிரச்சனைக்குரிய காணிப் பகிர்வு தொடர்பில் மேற்குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.
- 1030 காணித்துண்டுகள் வழங்கப்பட்ட நபர்களில் பெரும்பாலானோர் புத்தளம் மாவட்டக் குடியிருப்பாளர்கள் என்பது தேர்தல் பெயர்ப் பதிவேட்டின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதுடன், அவர்களுக்கு அப் பிரதேசத்தில் காணிகள் இல்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன் உண்மைத் தன்மை குறித்து ஆய்விற்கு உட்படுத்தப்படவில்லை.

- சரணாலயத்தில் குடியமர்த்துவதற்காக வீடுகளும் வீதிகளும் "ழுஅநபய ஊழளெவசயஉவழைெ உழஅியலெ (எவ) டவன" ஆல் அமைக்கப்பட்டிருந்ததுடன் இதற்கான அரசாங்கத்தின் நிதிப் பங்களிப்பின்மை உறுதிப்படுத்தப்பட்டது.

- சரணாலயத்தில் குடும்பங்களைக் குடியமர்த்துவதற்காக சரணாலயத்தை அழிக்கையில் அகற்றப்பட்ட மரங்கள் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறெனினும், மரக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த மரங்களின் கன மீற்றர் 12.5 அளவிலான பாளை, முதிரை மாத்திரமேயானதுடன் சரணாயலத்தில் அழிக்கப்படாத பிரதேசத்தைப் பரீட்சிக்கையில் இவ்வாறு இருந்திருக்க முடியாத நிலை என்பது அவதானிக்கப்பட்டது.

முடிவு

- 2012 மே 21 ஆம் திகதிய 1759.:.2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் விலத்திக் குளம் சரணாலயம்" என பிரகடனப்படுத்தப்பட்ட வனப் பகுதியில் 650 ஏக்கர் பகுதி மக்களைக் குடியமர்த்துவதற்காக வனப் பாதுப்பாளரால் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், இது நடைமுறையில் உள்ள சட்டத்திற்கு முரணானது எனும் முடிவிற்கு வரப்பட்டுள்ளது.

- சரணாலயத்தின் ஓர் பகுதி வெளியாக்கப்பட்டமையால் ஏற்படக்கூடிய சுற்றாடல் தாக்கம் தொடர்பாக நிலவும் சட்டத்தின் படி சுற்றாடல் தாக்கம் தொடர்பான மதிப்பீடு ஒன்று (நுஎெசைழஅெநவெயட ஐஅியஉவ யுளளநளளஅநவெ) மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிராமையால் சரணாலயத்திற்கு நேர்ந்த மற்றும் எதிர்காலத்தில் நேரக்கூடிய சுற்றாடல் தாக்கம் தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது முடிவாகியுள்ளது.

- சரணாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் குடியிருப்பு நிலையும் குடும்பங்களிற்காக ஒதுக்கப்பட்டிருந்த காணித்துண்டுகள் நீண்ட காலமாக வீடுகள் நிர்மாணிக்கப்படாதிருந்தமை கருத்திற்கொள்கையில் காணிகள் இன்றி இடம்பெயர்ந்த குடும்பங்களிற்காக இச் செயற்திட்டம் செயற்பட்டிராமை முடிவாகியுள்ளது.
- வடக்குக் கிழக்கு போரினால் இடம்பெயர்ந்து தமது காணிகளை இழந்த குடும்பங்களிற்கு தாம் முன்னர் குடியிருந்த பூர்வீகக் காணிகளை வழங்குவது சனாதிபதி செயலாற்றல் படையணியின் பிரதான நோக்காக இருந்த போதிலும் இதற்கு முரணாக காணிகளை இழந்திராத எனினும் அவர்களின் இரண்டாம் மற்றும் மூன்றாம் பரம்பரையினரின் குடும்பங்களுக்கு போதிய காணிகள் இல்லாததாகக் கருத்துத் தெரிவித்து இச் சரணாலயத்தின் காணிகள் வழங்கப்பட்டிருந்தமை அந் நோக்கத்திற்கு முரணானதென்பது முடிவாகியுள்ளது.
- இவ் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அதிகாரம், வளங்கள் மற்றும் காலம் போன்ற விடயப் பரப்பெல்லைக்குள் மேறகொள்ளப்பட்டமையால் அதன் விடயப் பரப்பிற்கு மேலாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முடிவிற்கு வர இயலாத நிலையில் சட்ட விரோதமான அல்லது மோசடியான நடவடிக்கைகள் நேர்ந்துள்ளதா என்பது குறித்து என்னால் பரீட்சிப்பிற்கு உட்படுத்த முடியாதிருந்தது. ஆகையால் அத்தகைய பரீட்சிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கருதப்பட்டால் இதற்காக விசேட நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக்கொள்வது உகந்ததென முடிவு செய்யப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டில் தேசிய லொத்தர் சபைக்கு கணனியின் ஊடான சீட்டிழுப்புக்களிற்காக லொத்தர் சீட்டுக்களை அச்சிட்டு கையளித்தல் சம்பந்தமான கொள்வனவுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கை.

2016 திசெம்பர் 05 ஆந் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற பொது முயற்சிகள் குழுவினால் தேசிய லொத்தர் சபையின் கணனியின் ஊடான சீட்டிழுப்புக்களிற்காக லொத்தர் சீட்டுக்களை அச்சிடுதல் சம்பந்தமான கொள்வனவுகள் தொடர்பில் விசேட கணக்காய்வொன்றை மேற்கொள்ளுமாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் கோரப்பட்டமைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைக்கு இணங்க 2017 ஏப்ரல் 17 இல் இந்த அறிக்கை வழங்கப்பட்டது. இந்த அறிக்கையில் தேசிய லொத்தர் சபையின் 2017 சனவரி மாதத்தின் முடிவில் கணனியின் ஊடாக சீட்டிழுப்புக்கள் நடாத்தப்படுகின்ற லொத்தர்களின் எண்ணிக்கை 09 ஆகக் காணப்பட்டதுடன், உடனடி பரிசு லொத்தர்களின் எண்ணிக்கை 02 ஆக இருந்தது. இதற்காக 06 லொத்தர் சீட்டு அச்சகர்கள் சம்பந்தப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு லொத்தர் சீட்டும் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு, ஒவ்வொரு லொத்தர் சீட்டினதும் கிரயம், குறித்த நிறுவனத்திற்கு அச்சடுதல் நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்ட திகதிகள், ஒப்படைக்கப்பட்டுள்ள முறை, லொத்தர் சீட்டிழுப்புக்கள் நடாத்தப்படுகின்ற நாட்கள் மற்றும் ஒவ்வொரு லொத்தர் அரசாங்கத்திற்கு அல்லது அரசாங்க நிறுவனங்களிற்காக கிடைக்கின்ற பங்களிப்புக்கள் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. சபையால் வழங்கப்பட்ட சீட்டிழுப்புக்களில் மகாஜன சம்பத மற்றும் வாசன சம்பத போன்ற சீட்டிழுப்பினூடாக உழைக்கப்பட்ட வருமானம் 16.5 சதவீதம் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். அதற்கு மேலதிகமாக, மெஹா பவர், சம்பத றெகா மற்றும் சுப்பிரி டெலகஸ்பதி போன்ற ஏனைய சீட்டிழுப்புக்களிலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் 10 சதவீதம் மாத்திரம் திரட்டுநிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். ஏனைய நிறுவகங்களின் சார்பில் நடாத்தப்பட்ட சீட்டிழுப்புக்களிலிருந்தான வருமானத்தின் பத்து சதவீதம் உரிய நிதியங்கள் மற்றும் அமைச்சுக்களிற்கு வழங்கப்பட வேண்டும். 12 சீட்டிழுப்புக்களில், 2016 ஆம் ஆண்டில் 1,007,169,000 சீட்டுக்கள் மாத்திரம் அச்சிடப்பட்டது. அதில் 915,657,869 சீட்டுக்கள் அதற்கிணங்க விற்கப்பட்டதுடன், 91,511,131 லொத்தர் சீட்டுக்கள் மீதமாகவிருந்தது. 06 முன்னைய ஆண்டுகளின் போது லொத்தர் சீட்டுக்களின் அச்சிடலுக்காக தேசிய லொத்தர் சபையால் ரூபா 2,808.83 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வின் போது வெளியிடப்பட்ட கணக்கு அவதானிப்புக்களின் பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

- 02 ஆண்டுகளிற்கு லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்காக ஏறத்தாழ ரூபா 338 மில்லியன் செலவாகுமென மதிப்பிடப்பட்டிருந்ததுடன், அந்த கிரய மதிப்பீட்டிற்கமைய கொள்வனவு நடவடிக்கைளிற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழுவினால் தீர்மானம் எடுக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், 2016 ஆம் ஆண்டிற்காக அச்சகர்களை தெரிவுசெய்கையில் குறித்த ஒப்பந்தத்தம் ஒவ்வொரு லொத்தர் வகைக்காகவும் வெவ்வேறாக பிரிக்கப்பட்டிருந்ததுடன்,

ஒப்பந்த காலமும் 01 ஆண்டு வரை குறைக்கப்பட்டிருந்தது. இந்த கொள்வனவுகளின் ஆரம்பத்திலிருந்தே திணைக்கள மட்டத்திலான கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- முன்னைய ஆண்டுகளில் லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்கான ஒப்பந்தங்கள் 03 ஆண்டு காலத்திற்காக கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டில் பொது நிதி திணைக்களத்தின் ஒத்திசைவுடன் அந்த ஒப்பந்த காலத்தினை 02 ஆண்டுகள் வரை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமை பதிவேடுகளிற்கமைய அவதானிக்கப்பட்டது. எனினும், 2016 ஆம் ஆண்டிற்காக லொத்தர் சீட்டுக்களை அச்சிடும் ஒப்பந்தம் 01 ஆண்டிற்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட திடமான அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
- அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 7.8.6 மற்றும் 7.8.7 ஆம் வழிகாட்டல்களிற்கமைய, முறைப்படியாக சமர்ப்பிக்கப்படுகின்ற அனைத்து கேள்விமனுக்களும் மற்றும் அந்த வேலைகளின் செயலாற்றகைக்கு போதியளவில் கருத்திலெடுக்கப்பட்டதாக கருதப்படுகின்ற அனைத்து கேள்விமனுக்களும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், மேற்படி பந்தியில் குறிப்பிடப்பட்ட அச்சக நிறுவனங்களிடையே குறித்துரைப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தேவைப்பாடுகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த ஆடீயு Systems அச்சகக் கம்பனி மற்றும் Aqua Flex அச்சக கம்பனி ஆகிய சமர்ப்பித்திருந்த கூறுவிலைகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீட்டுச் செயன்முறையிலிருந்து நீக்கப்பட்டிருந்தன. அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலைகள் கூடிய பெறுமதியைக் கொண்டிருந்தமையே அதற்கான காரணமாகும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய, குறித்த நிறுவனங்கள் ஆரம்ப கட்டத்திலேயே நீக்கப்பட்டிருந்தமை அரசாங்க கொள்வனவு நடைமுறைகளிறக் முரணானதாகும்.
- அச்சிடல் நிறுவனற்களின் குழுவை உருவாக்குவதற்கான முதலாந்தர கொள்கை 03 ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் உதுக்கப்பட்ட சீட்டுக்களின் எண்ணிக்கைக வரையறுத்தல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது இந்த விடயத்திற்கு கவனஞ்செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக, அச்சிடும் வேலைகளை மேற்கொள்ளும் 02 நிறுவனங்களில் ஒன்று அதந்கு தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்யப்பட்டிருந்தமை உறுதிப்படுத்துவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது சிபாரிசுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.
- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் Print Solution அச்சகம் வேறொறு நிறுவனத்தின் துணைக் கம்பனியாக காணப்பட்டமையால் நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும், கொள்வனவு நடவடிக்கைகளிற்காக தயாரிக்கப்பட்டிருந்த கேள்விமனு ஆவணங்களில் அவ்வாறு துணைக்கம்பனினதாக இருப்பதால்

தகைமையற்றது என குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

- உரிய குறித்துரைத்தல்களுடன் இணங்காத மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிராத வுாயசயதெநந Prints என்ற அச்சக நிறுவனத்திற்கு இரண்டு லொத்தர்களின் அச்சிடல் நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. மேலும், அச்சக நிறுவனத்திடம் Inline Printing இயந்திரமென்று இல்லை என்பதாக கேள்விமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அவ்வாறான இயந்திரமொன்று களப் பரிசோதனையின் போதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2016 ஒக்தோபர் 10 ஆந் திகதி சபையினால் தொழில்நுட்ப குறித்துரைத்தல்களினால் கோரப்பட்டிருந்த Inline Printing அச்சிடல் இயந்திரத்திற்குப் பதிலாக இந்த நிறுவனத்தினால் டுயளநச அச்சிடல் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன்படி, அந்த நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்விமனு முறையாக சமர்ப்பிக்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருத்தல் கொள்வனவு நடைமுறைகளுடன் இணங்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.
- கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 7.12.4 ஆம் வழிகாட்டலின்படி கேள்விமனுதாரருடன் இணக்கப்பாட்டு கலந்துரையாடலை மேறகொள்கையில் இணங்கிய விடயங்கள் தொடர்பிலான அறிக்கையொன்றை கொள்வனவுக் குழு வைத்திருக்க வேண்டுமென்பதுடன், இணக்கப்பாட்டிற்கு வந்த மற்றும் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மறறும் நிபந்தனைகள் தொடர்பில் குறித்த கேள்விமனுதாரருடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்படுதலும் வேண்டும். இந்த கொள்வனவு அந்த வேண்டுகோளுக்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.
- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் ஆகக்குறைந்த கிரயத்தினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்த 04 நிறுவனங்களிடையே ஒரு நிறுவனத்திற்கு மாத்திரம் லொத்தர் சீட்டுக்களை அச்சிடும் நடவடிக்கைகளை ஒப்படைப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பரிந்துரையினைக் கருத்திற்கொள்ளாது தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவினால் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்த 04 நிறுவனங்களிடையே 03 நிறுவனங்களை மாத்திரம் அச்சகர்கள் என நியாயமான அடிப்படையொன்றின்றி தெரிவு செய்வதற்கு கொள்வனவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்களும் மேலும் மேற்கொள்ளப்பட்டன.

Tharanjee Prints நிறுவனத்திற்கு 02 லொத்தர்களை அச்சிடுவதற்கான நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக னூீதுர் அச்சக நிறுவனமே ஆகக் குறைந்த விலையினை சமர்ப்பித்திருந்தது. இருப்பினும், அந்த நிறுவனத்தின் கூறுவிலைகள் கொள்வனவுக் குழுவினால் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- கொவிசெத லொத்தர் சீட்டிற்கான ஆகக்குறைந்த விலை வுாயசயதெநந ீசவைௌ நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த அச்சிடல் நடவடிக்கைகள் னீதுர் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.
- சுபிரி வாசனா சம்பத லொத்தர் சீட்டினை அச்சிடுவதற்காக வுழீயசெ குழசஅள நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக ஆகக் குறைந்த விலையினை சமர்ப்பித்திருந்த முதல் இரு நிறுவனங்களையும் கருத்திற்கொள்ளாது மூன்றாவதாக குறைந்த விலையினைச் சமர்ப்பித்திருந்த நிறுவனத்துடன் கலந்துரையாடி சமர்ப்பிக்கப்பட்டிருந்த இரண்டாவது குறைந்த விலையில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.
- கேள்விமனுக்களை கோருகையில் தேசிய லொத்தர் சபையினால் வழங்கப்பட்டிருந்த தொழில்நுட்ப குறித்துரைத்தல்களிற்கமைய, ஏற்றுக்கொள்ளப்பட்ட 29.8 உஅ நீளமுடைய யு4 தாளில் 10 லொத்தர் சீட்டுக்கள் அச்சிடப்படுதல் வேண்டும். அவ்வாறே, லொத்தர் சீட்டொன்றின் பருமன் (size) 10.5 உஅ ஒ 5.6உஅ அளவில் காணப்படுதல் வேண்டும். இருப்பினும், னீதுர் அச்சகத்தினால் 10 கொவிசெ லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற தாளின் நீளம் 27.6 உஅ ஆக காணப்பட்டதுடன், அச்சிடப்பட்டு கையளிக்கப்படுகின்ற லொத்தர் சீட்டொன்றின் பருமண் 10.5 உஅ ஒ 5.5உஅ ஆகக் காணப்பட்டது. அதற்கமைய, யு4 தாளின் மூலம் கிடைக்கின்ற 2.2 உஅ அனுகூலம் காரணமாக குறித்த நிறுவனத்திற்கு அச்சிடும் தாளிற்காக ஏற்படுகின்ற கிரயத்தினை குறைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்புக் காணப்பட்டது. இருப்பினும், இதன் காரணமாக லொத்தர் சீட்டில் காணப்பட வேண்டிய மாறுபட்ட தரவு நீரலைத் தரவுகள் மற்றும் டீயச ஊழனந போன்றன பிழையாக அச்சிடப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.
- 2016 நவம்பர் முதல் 2016 திசெம்பர் 31 வரைக்குமான 02 மாத காலத்தில் னீதுர் அச்சக நிறுவனத்தினால் 34 சீட்டிழுப்புக்களிற்காக அச்சிடப்பட்டிருந்த லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கை 39,970,000 ஆனதுடன், அதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த யு4 தாள்களின் அளவு 3,997,000 ஆகும். அதற்கமைய, எஞ்சியிருந்த யு4 தாளக் ளின் எண்ணிக்கை 295,081 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 354,097 கிரய அனுகூலத்தினை அந்த நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.
- கொள்வனவுக் குழுவினால் தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்களிற்கு 03 மாதகால தகுதியான காலத்திற்கு உட்பட்டு குறித்த அச்சிடுதல் ஒப்பந்தம் 2016 ஒக்தோபர் 31 ஆந் திகதியிலிருந்து வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் கம்பனியுடன் எழுத்துமூலமான உடன்படிக்கையொன்றில் 2016 நவம்பர் 25 ஆந் திகதியன்றே கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்தக் கேள்வியைக் கையளிக்கையில் அச்சகத் தொழிலில் காணப்பட்ட அனுபவம் தொடர்பில் கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன், பொருத்தமான நடைமுறை ஒன்றும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறிருக்கையில், உடன்படிக்கையற்ற காலப்பகுதியொன்று காணப்பட்டிருந்தமை மற்றும் அக்காலப்பகுதியில் இடம்பெறச்சாத்தியமாகவுளள் இழப்புக்கள் தொடர்பில் பொறுப்புவாய்ந்த தரப்பினர் சம்பந்தமாக நடவடிக்கையினை மேறகொள்வதற்கு காணப்பட்ட இயலுமை என்பன கணக்காய்வில் வினாவிற்குரியதாக காணப்பட்டன.
- இந்த நிலைமை 2016 யூலை 23 ஆந் திகதி இடம்பெறற் பொது முயற்சிகள் குழுவின் கவனத்திற்குக்

கொண்டுவரப்பட்டிருந்துடன் கேள்வி நிபந்தனைகளில் அல்லது உடன்படிக்கை நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டிருக்காத 03 மாத கால தகுதிகாண் காலத்திற்கு தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிற்கு

முடிவுரைகள்

- கொள்வனவு நடைமுறைகள் வழிகாட்டல்களின் முக்கிய குறிக்கோள்களாகவுள்ளன, உயர்தரத்துடன் குறைந்த கிரயத்தில் அதிகூடிய பொருளாதார அனுகூலத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் காலதாமதமின்றி வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெறக்கூடிய விதத்தில் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் உரிய தரங்கள், குறித்துரைத்தல்கள், சட்டவிதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கி செயற்படுதல். தகைமைகொண்ட ஆர்வமுடைய தரப்பினர்களிற்கு கொள்வனவுகளில் பங்குபற்றுவதற்காக நியாயமான, சமத்துவமான மற்றும் அதியுயர்ந்த சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொடுத்தல். மதிப்பிடுதல் மற்றும் தெரிவுசெய்தல் நடைமுறையின் வெளிப்படையான தன்மையினையும் நிரந்தரத் தன்மையினையும் உறுதிப்படுத்துதல். போன்ற தேவைப்பாடுகளை நிறைவேற்றும் விதத்தில் 2016 ஆம் ஆண்டினுள் மேறகொள்ளப்பட்ட கொவிசெத, வாசனா சம்பத, சுபிரி வாசனா சம்பத, ஜாதிக சம்பத மறறும் சுபிரி தெலக்ஷபதி லொத்தர் சீட்டுக்களை அச்சிடுதல் மற்றும் கையளித்தல் போன்ற கொள்வனவு நடைமுறைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை என முடிவுசெய்யப்படுகின்றது.
- லொத்தர் சீட்டுக்களை அச்சிடுதல் அவற்றின் தரத்தினை பரிசோதித்தல் தொடர்பில் அச்சகர்களிற்கு பொறுப்பினை கையளிப்பதன் மூலம் மாத்திரம் அவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஒப்பந்தத்தினைக் கையளிப்பதற்கு அடிப்படையாக அமைந்த காரணிகள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

  முற்பட்டமையால் லொத்தர் சீட்டுக்களில் காணப்பட வேண்டிய அடிப்படைப் பண்புகள் மற்றும் அச்சிடல் குறைபாடுகளுடைய லொத்தர் சீட்டுக்களை அழித்தல் நடைமுறை என்பன குறித்து போதியளவு கவனம் செலுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என முடிவு செய்யப்படுகின்றது.
- சபையின் பிரசித்தத்தினை பாதிக்கும் நிகழ்வுகள் சம்பந்தமாக முறையான விசாரணைகளை துரிதமாக மேற்கொண்டு உரிய முடிவுகளிற்கு வந்திருக்கவில்லை என முடிவு செய்யப்படுகின்றது.
- அச்சகர்களால் உப ஒப்பந்த்கள் வழங்கப்படுதல் மற்றும் உடன்படிக்கை மீறல் சம்ப்தமாக தாமதமின்றி சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லையென முடிவு செய்யப்படுகின்றது.

- இந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குள்ள அதிகாரங்கள், வளங்கள் மற்றும் காலநேரம் போன்ற வரையறைகளிற்கு உட்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளமையால் அதன் நோக்கெல்லைக்கு அப்பால் சென்று கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முடிவிற்கு வரமுடியாத மட்டத்தில் சட்டவிரோத மற்றும் குற்றச்செயல்கள் இடம்பெற்றுள்ளனவா என்பதனை எனத பரிசோதனை உட்படுத்தியிருக்கவில்லை. ஆகையால் அவ்வாறான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென கருதப்படும் பட்சத்தில் அதற்காக விசேட நிறுவனமொன்றின் உதவினைப் பெற்றுக்கொள்ளல் பொருத்தமானது என முடிவுசெய்யப்படுகின்றது.

துறைரீதியாக கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு

திரட்டு நிதியம்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாட்டினையும் பாராளுமன்றம் கொண்டுள்ளது. அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசினால் சேகரிக்கப்படுகின்ற வருமானம் திரட்டு நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டியிருந்ததுடன் அரசியலமைப்பின் 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகளின் பிரகாரம் திரண்ட நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

மீளாய்வாண்டிற்கான அரச செலவினத்திற்கு தேவையான நிதிஏற்பாடு 2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) அதிகாரச்சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த மேலதிக நிதிஏற்பாடுகளும் உட்பட ரூபா 3,860,318 மில்லியன் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விபரங்கள் அட்டவணை 03 இல் காண்பிக்கப்படுகின்றது.

நிதி	மூலதன நிதி ஏற்பாடு	மீண்டெழும் நிதிஏற்பாடு	மொத்த நிதிஏற்பாடு
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்தின் மூலம் வழங்கல் மற்றும் சேவைகளுக்கான ஏற்பாடு	879,681	1,233,229	2,112,910
காணப்படும் சட்டங்கள் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ள திரட்டு நிதியத்திற்கு செலவினப் பொறுப்பாக விஷேட சட்ட சேவைகளுக்கான நிதிஏற்பாடு	801,402	713,798	1,515,200
வழங்கல் மற்றும் சேவைகளுக்கான மேலதிகமாக வழங்கப்படும் நிதிஏற்பாடு	53,000	-	53,000
விசேட சட்ட சேவை செலவினங்களுக்கான மேலதிகமாக வழங்கப்படும் நிதிஏற்பாடு	97,919	81,289	179,208
மொத்தம்	1,832,002	2,028,316	3,860,318

அட்டவணை 03….. 2017 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட நிதிஏற்பாடு
மூலம்:- அரச கணக்குகள் திணைக்களம்

2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் 6(1) உப பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் 2.2.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட 08 செயற்பாடுகளுக்காக தேசிய பாதீட்டு திணைக்களத்தின் அபிவிருத்தி

நிகழ்ச்சித்தின் கீழ்வரும் குறைநிரப்பு உதவி சேவைகள் மற்றும் அவசர பொறுப்பு செயற்திட்டத்தின் கீழ் மேகொள்ளப்பட்ட நிதிஏற்பாடு அத்திணைக்களத்தினால் தேவைப்பாடு மதிப்பீடொன்று மேற்கொள்ளாமல் உரிய செலின் பிரிவுகளுக்கு நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அச்செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த மீண்டெழும் மற்றும் மூலதன செலவின நிதிஏற்பாடு மற்றும் பயன்பாடு தொடர்பான விபரங்கள் அட்டவணை 04 இல் காண்பிக்கப்படுகின்றது.

செலவினத்தின் தன்மை	தேறிய நிதிஏற்பாடு	வேறு தலைப்புகளுக்கு நிதிஏற்பாடு வழங்கல்	சேமிப்புக்கள்	சேமிப்புக்கள் தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	
மீண்டெழுபவை	193,592.53	192,978.76	613.77	0.32
மூலதனம்	294,485.00	292,267.49	2,217.51	0.75
மொத்தம்	**488,077.53**	**485,246.25**	**2,831.28**	**0.58**

அட்டவணை ….. குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் நிதிஏற்பாடு வழங்கல்

மூலம்:- தேசிய வரவு செலவுதிட்ட திணைக்களம்

மீளாய்வாண்டிற்கான திருத்தம் செய்யப்பட்ட வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 3,860 பில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் போது ரூபா 3,899 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி ஏற்பாடு ரூபா 39 பில்லியனால் குறைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதிஏற்பாட்டில் ரூபா 3,471 பில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் ரூபா 389 பில்லியன் அதாவது ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 10.07 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

மீண்டெழும் செலவினத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த நிதிஏற்பாடு ரூபா 2,028,316 மில்லியனாக இருந்ததுடன், அதில் ரூபா 1,945,575 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 82,741 அதாவது ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 4.08 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. மூலதனச் செலவினத்திற்காக ரூபா 1,832,002 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,525,014 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 16.76 சதவீதம் அதாவது ரூபா 306,988 நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

- 55 தலைப்புகளுக்குரிய 140 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ரூபா 1,567 மில்லியன் ஆன நிதிஏற்பாடும் 91 தலைப்புகளுக்குரிய 337 மூலதனச் செலவின விடயங்களுக்காக ரூபா 54,528 மில்லியன் என மொத்தம் ரூபா 56,095 மில்லியனான நிதிஏற்பாடு எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

- மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 18,223 மில்லியனும் மூலதன செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 136,816 மில்லியனுமாக மொத்தம் ரூபா 155,039 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டில் 50 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சளவினை எடுத்திருந்தது.

- மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 5,069 மில்லியனும் மூலதன செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 51,065 மில்லியனுமாக மொத்தம் ரூபா 56,134 மில்லியன் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த நிதிஏற்பாட்டில் 25 சதவீதம் முதல் 49 சதவீதம் வரையான வீச்சளவிலான அளவினை எடுத்திருந்தது.

மீளாய்வாண்டின் போது ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டை பயன்படுத்துவதற்காக ரூபா 2,198,023 மில்லியனான கட்டுநிதி திறைசேரியிடமிருந்து கோரப்பட்டிருந்த போதிலும் திறைசேரி அச்சசெலவின விடயங்களுக்கு கட்டுநிதியை வழங்குவதை ரூபா 1,785,494 மில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் திறைசேரியால் கட்டுநிதி வரையரைக்குள் செலவின விடயங்களுக்கு விடுவிக்ககூடியதாக இருந்த ரூபா 253,335 மில்லியனை விடுவித்திருக்கவில்லை. விபரம் அட்டவணை 05 இல் காண்பிக்கப்படுகின்றது.

	மீண்டெழும் செலவினங்களுக்காக	மூலதன செலவினங்களுக்காக	மொத்த நிதிஏற்பாடு
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
மீளாய்வாண்டில் விண்ணப்பித்த கட்டுநிதி பெறுமதி	1,334,466	863,557	2,198,023
வருடாந்த கட்டுநிதி எல்லை	1,201,380	584,114	1,785,494
ஆண்டில் விடுவிக்கப்பட்ட கட்டுநிதி பெறுமதி	1,131,340	400,819	1,532,159
வருடாந்த கட்டுநிதி எல்லையை விட குறைவாக கட்டுநிதி விடுவித்தல்	70,040	183,295	253,335

அட்டவணை 05 - செலவின பிரிவுகளினால் திறைசேரியிடமிருந்து கட்டுநிதி விண்ணப்பித்தல் மற்றும் திறைசேரி கட்டுநிதி விடுவித்தல்
மூலம் : திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம்

மீளாய்வாண்டிற்குரிய கடன் கொடுப்பனவுகள் தவிர, மொத்த செலவினம் மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் 19.59 சதவீதமாக இருந்தது. அது 2010 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட 23.17 சதவீதமான அவ்விகிதத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் இறுதி வரையில் 3.58 சதவீதமாக குறைக்க கூடியதாக இருந்தது. முன்னைய ஆண்டில் 19.98 சதவீதத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது சிறிய குறைவொன்று இடம்பெற்றிருந்தது. கடன் கொடுப்பனவுகள் தவிர, மொத்த செலவினம் மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக படிப்படியாக குறைவடைந்த முறை அட்டவணை 01 தரப்பட்டுள்ளன.



அட்டவணை .. கடன் கொடுப்பனவுகள் தவிர, மொத்த செலவினம் மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக

மூலம் : குடியரசின் நிதிக்கூற்றுகள்

மீளாய்வாண்டின் போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடனுக்கான வட்டி மற்றும் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மீதான கழிவுகளை கொடுப்பனவு செய்வதற்காக ரூபா 736 பில்லியன் அதாவது மொத்த மீண்டெழும் செலவினத்தில் 37.84 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 125 பில்லியனால் அதாவது 20.45 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதற்கு மேலதிகமாக ஆளணி வேதனங்களுக்காக ரூபா 464 பில்லியன் தொகையும் மானியம் மற்றும் நிதியுதவிகளுக்காக ரூபா 581 பில்லியன் தொகையும் ஏனைய பொருட்கள் மற்றும் சேவைச் செலவினங்களுக்காக ரூபா 164 பில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தன. மொத்த மீண்டெழும் செலவினம் தொடர்பாக மேற்கூறப்பட்ட செலவினங்கள் உயர்ந்த பங்களிப்பைக் கொண்டுள்ளதுடன் ஒட்டு மொத்த மீண்டெழும் செலவினங்களையும் தீர்ப்பதற்காக ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் போதியளவாக இருக்கவில்லை. அவ்வாறே மூலதன செலவினங்களுக்காகவும் மீளாய்வாண்டின் போது ரூபா 658 பில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், மீண்டெழும் செலவினத்தின் ஒரு பகுதி, அரச முதலீடு (மூலதனச் செலவினம்) மற்றும் கடன் தவணைப் பணம் செலுத்துவதற்கான உள்நாட்டுக்கடன், வெளிநாட்டுக்கடன் மற்றும் உதவிகள் பெறவேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருடாந்த கடன் தவணைப் பணம் மற்றும் வட்டியாக கணிசமான தொகையொன்றைச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் அது வருடாந்தம் அதிகரித்து செல்கின்ற கிரயமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

மீளாய்வாண்டின் போது மீண்டெழும், மூலதனச் செலவினம் மற்றும் கடன் மீளச் செலுத்துதல் என்பவற்றின் கூட்டுமொத்தம் ரூபா 3,471 பில்லியனாக இருந்ததுடன் ஒட்டுமொத்த செலவினத்தில் 24.97 சதவீதம் கடன் செலுத்துவதற்காகவும், 21.20 சதவீதம் கடன் வட்டி மற்றும் கழிவினை செலுத்துவதற்காகவும் செலவிடப்பட்டிருந்தது. இனங்காணப்பட்ட 16 பிரிவுகளுக்கிடையே மொத்தச் செலவினம் மேற்கொள்ளப்பட்ட முறை உரு02 இல் காண்பிக்கப்படுகின்றது.



உரு. 02 ஒட்டுமொத்த செலவினங்களும் இனங்காணப்பட்ட 16 துறைகளின் பங்களிப்பு.
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள் 2017

அரசாங்க வருமானம்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட 2017 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வரி வருமானம், வரியல்லாத மற்றும் ஏனைய வருமானங்களாக வகைப்படுத்தப்பட்டு மொத்த அரச வருமானம் ரூபா 1,914 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டில் மதிப்பிடப்பட்ட வருமானமான ரூபா 1,668 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 246 பில்லியன் அதாவது 14.75 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 1,845 பில்லியனாக இருந்ததுடன் அது மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட ரூபா 69 பில்லியனால் அதாவது 3.6 சதவீத குறைவொன்றாகும். முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட ரூபா 1,699 பில்லயன் வருமானத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 146 பில்லியன் அதாவது 8.6 சதவீத அதிகரிப்பொன்று பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட அரசின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13.88 சதவீதமாக இருந்த போதிலும் போது முன்னைய ஆண்டின் போது 14.35 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது அரசின் வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக

குறைவடைந்திருந்தது. கடந்த 07 ஆண்டுகளில் அச்சதவீதம் விலகல் உரு 03 இல் தரப்பட்டுள்ளது.



வரைபு இல 03 :- அரசாங்க வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக,

மூலம் :- இலங்கை குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

அரசாங்க வருமானம் "வரி வருமானம் மற்றும் வரியல்லாத வருமானம்" பிரதான இரண்டு வகையின் கீழ் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், வரி வருமானம் மீண்டும் வருமான வரி, உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி மற்றும் சர்வதேச வியாபார அடிப்படையிலான வரி என வகைப்படுத்தப்பட்டு இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளன.

மீளாய்வாண்டிற்கான வருமான வரியாகச் சேகரிப்பதற்கு ரூபா 308 பில்லியன் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 275 பில்லியன் தொகையை மாத்திரம் சேகரிக்கக் கூடியதாக இருந்தது. அவ்வாறே உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற வரிகளில் ரூபா 1,052 பில்லியன் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 1,024 பில்லியன் மாத்திரம் சேகரிக்கக் கூடியதாக மாத்திரம் இருந்தது. சர்வதேச வியாபாரத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற வரிகளில் ரூபா 390 பில்லியன் சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீயாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 371 பில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வரி வருமானங்களில் ரூபா 1,750 பில்லியன் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அதில் 95.43 சதவீதம் அதாவது ரூபா 1,670 பில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது வரியல்லா ஏனைய வருமானங்களில் ரூபா 164 பில்லியன் சேகரிப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்ததுடன் அதில் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 11 பில்லியனால் விஞ்சி ரூபா 175 பில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் வருமான மதிப்பீடு மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானத்தை காண்பிக்கின்ற விபரம் உரு 04 இல் காண்பிக்கப்படுகின்றது.



உரு 04…. 2017 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள் 2017

பாதீட்டு பற்றாக்குறை

2006 ஆம் ஆண்டின் பாதீட்டு நிலுவை அவ்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியில் ஐந்து சதவீதத்தை மிகைக்காத மற்றும் அம்மட்டத்தை அதன் பின்னர் தொடர்ந்தும் பேணும் பொறுப்பாக இருப்பதாகவும் அரசின் கடன் சுமை மட்டத்தை குறைத்தல்" அரசினால் பின்பற்றப்பட வேண்டிய பொறுப்புடன் நிதி முகாமைத்துவதற்கு அடிப்படையாக இலக்கொன்றாக 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் 3(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டிலும் முன்னைய ஐந்து ஆண்டுகளிலும் அந்த ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் பாதீட்டு நிலுவை அந்த ஆண்டுகளின் மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தை மிகைக்காத வகையில் பேணிச் செல்வதற்கு தவறியிருந்தது, மீளாய்வாண்டின் குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட பாதீட்டு நிலுவை ரூபா 1,049 பில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டில் மதிப்பிடப்பட்ட பாதீட்டு நிலுவையை விட ரூபா 439 பில்லியன் அதாவது 29.50 சதவீத குறைவொன்றாகும். மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ளபடியான பாதீட்டு நிலுவை ரூபா 758 பில்லியனாக இருந்ததுடன் அது மதிப்பீடு செய்யப்பட்ட பாதீட்டு நிலுவையை விட ரூபா 291 பில்லியன் அதாவது 27.74 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. மீளாண்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட பாதீட்டு நிலுவை மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.89 சதவீதமாக இருத்தது. 2010 ஆம் ஆண்டின் போது அந்த சதவீதம் 9.78 சதவீதம் முதல் 2013 ஆம் ஆண்டு வரையில் அது 7.65 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. எனினும், 2014 ஆம் ஆண்டு முதல் அந்த சதவீதம் 2016 ஆம் ஆண்டு வரையில் 12.57 சதவீதம் வரை மீண்டும். அதிகரித்து மீளாய்வாண்டின் போது 7.89 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. விபரங்கள் உரு 05 இல் காண்பிக்கப்படுகின்றது.





உரு 05 ….. உள்ளபடியான பாதீட்டு பற்றாக்குறை
மூலம்: குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

இதன் பிரகாரம் 08 ஆண்டு காலஎல்லைக்குள் எந்த வருடமொன்றுக்காக உரிய மதிப்பீடு மொத்த தேசிய உற்பத்தியில் 5 சதவீதத்தை மிகைக்காத வகையில் மதிப்பிடப்பட்ட பாதீட்டு பற்றாக்குறையை பேணிச் செல்வதற்கு தவறியிருந்தது.

அவ்வாறே 2010 ஆம் ஆண்டில் உள்ளபடியான பாதீட்டு பற்றாக்குறை ரூபா 473 பில்லியனாக இருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டு வரையில் அது ரூபா 962 பில்லியன் வரை அதிகரித்திருந்ததுடன், 2016 ஆம் ஆண்டின் அது ரூபா 666 பில்லியன் வரை குறைவடைந்து மீளாய்வாண்டின் போது ரூபா 758 வரை அதிகரித்திருந்தது. விபரங்கள் உரு 06 இல் காண்பிக்கப்பட்டுள்ளது



உரு 06. மதிப்பிடப்பட்ட பாதீட்டு பற்றாக்குறை பாதிடப்பட்ட உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக
மூலம்: குடியரசின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கி

பாதீட்டு பற்றாக்குறை நிதியீட்டம்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பாதீட்டு பற்றாக்குறை ரூபா 92 பில்லியனால் அதாவது 13.81 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், தேறிய வெளிநாட்டுக் கடன் பெறுவனவுகள் ரூபா 429 பில்லியன் முதல் ரூபா 382 பில்லியன் வரை ரூபா 47 பில்லியனால் அதாவது 10.95 சதவீதத்தாலும் அவ்வாறே, தேறிய உள்நாட்டுக் கடன் பெறுவனவு முன்னைய ஆண்டில் ரூபா 445 பில்லியன் முதல் மீளாய்வாண்டின் போது ரூபா 209 பில்லியன் வரை ரூபா 236 பில்லியனால்

அதாவது 53.037 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. இதன் பிரகாரம் பாதீட்டு பற்றாக்குறையை நிதியளிப்பதற்காக வைப்புக் கணக்குகள் மற்றும் பொறுப்புக்களின் தேறிய மாற்றங்கள் முன்னைய ஆண்டில் ரூபா 203 பில்லியனான பாதகமான மீதியிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 113 பில்லியனான சாதகமான மீதியொன்று வரை ரூபா 316 மில்லியனால் அதிகரித்திருந்தது.

மீண்டெழும் செலவினத்தைத் ஈடுசெய்து கொள்வதற்கு வருமானம் போதியளவில் காணப்படாமை.

குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினம் ரூபா 1,946 பில்லியனாகவும் அரசாங்கத்தின் மூலதனச் செலவினம் ரூபா 657 பில்லியனாகவும் மொத்தச் செலவினம் ரூபா 2,603 பில்லியனாக இருந்தது. எனினும், அரசாங்கத்தினால் உழைக்கப்பட்ட ஒட்டுமொத்த வருமானம் ரூபா 1,845 பில்லியனாக இருந்ததன் காரணமாக அந்த வருமானம் மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினத்தை ஈடுசெய்து கொள்வதற்கும் போதியளவினதாக இருக்கவில்லை. அதன் பிரகாரம், ஒட்டு மொத்த அரசாங்க வருமானத்தை விஞ்சி ரூபா 101 பில்லியன் மீண்டெழும் செலவினம் ஏற்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை அரசாங்க வருமானம் மீண்டெழும் செலவினத்தை தீர்த்து கொள்வதற்கு போதியளவில் இல்லாதிருந்தமை வரைபடம் 07 இல் காண்பிக்கப்படுகின்றது.



உரு 07…. அரசாங்க வருமானம் மற்றும் மீண்டெழும் செலவினம்.
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

அரசாங்கக் கடன்கள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148 ஆவது உறுப்புரையின் பிரகாரம் கடனை உள்ளடக்கிய முழுமையான நிதிக் கட்டுப்பாடும் பாராளுமன்றத்திற்கு உரித்தாக வருவதுடன் குடியரசின் சகல கடன்களுக்காகவும் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறவேண்டும். அதன் பிரகாரம் 2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் 2.1(அ) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத்திற்காகவும் அரசாங்கம் சார்பாகவும் இலங்கையிலோ அல்லது அதற்கு வெளியிலோ கடன் பெற்றுக் கொள்வதற்காக பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியிருந்தது.

குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது வெளிநாட்டுக் கடன் ரூபா 601 பில்லியன் தொகையும், உள்நாட்டு வங்கியல்லாக் கடன் ரூபா 2,549 பில்லியன் தொகையுமாக ரூபா 3,150 பில்லியனாக இருந்தது. அது முன்னைய ஆண்டில் பெறப்பட்டிருந்த ரூபா 3,091 பில்லியன் கடன் அளவுடன் ஒப்பிடும் போது ரூபா 59 பில்லியனால் அதாவது 1.90 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அரசாங்கம் உள்நாட்டுக் கடன் தொடர்பில் கூடிய

கவனமொன்று காண்பித்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது, பெற்றுக்கொண்ட உள்நாட்டுக் கடன் அளவை முன்னைய ஆண்டின் போது பெறப்பட்டிருந்த ரூபா 2,517 பில்லியன் கடன் அளவுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 32 பில்லியனால் அதாவது 1.27 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை அரசினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடன் தொடர்பான விபரங்கள் வருமானம் வரைபடம் 08 இல் காண்பிக்கப்படுகின்றது.



அட்டவணை 08 - உள்நாட்டு வெளிநாட்டு கடன் பெறுவனவு
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தினால் செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 9,588 பில்லியனாக இருந்ததுடன் அது 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 8,794 பில்லியன் கடன் மீதியுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 794 பில்லியனால் அதாவது 9.02 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் பெறப்பட்டிருந்த அரசாங்கக் கடன் தொடர்பான விபரம் அட்டவணை 05 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

விடயம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி	
	2016 ரூபா பில்லியன்	2017 ரூபா பில்லியன்
திறைசேரி உண்டியல்	792	725
திறைசேரி பிணை முறி	3,567	3,754
ரூபாய்க் கடன்	24	24
இலங்கை அபிவிருத்தி பிணை முறி	572	638
வெளிநாட்டு மீண்டெழும் நிதியில் உள்நாட்டு கடன்	42	65
வெளிநாட்டு மீண்டெழும் நிதியில் வங்கிப் பிரிவு	-	14

(செயற்திட்டம்)		
குத்தகைக் கடன்கொடுத்தோர்	16	12
மொத்த உள்நாட்டுக் கடன்	**5,013**	**5,232**
வெளிநாட்டு (செயற்திட்டம்)	**3,676**	**2,664**
வெளிநாட்டுத் தொகையில் காலரீதியான கடன் வசதிகள்	**105**	**217**
சர்வதேச பிணை முறி	-	1,475
மொத்த அரச கடன் மீதி	8,794	9,588
மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி	11,839	13,289
மொத்த அரச கடன் மீது மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக	74.28	72.14

அட்டவணை 05 ..... :- செலுத்த வேண்டிய மொத்த அரச கடன் உள்ளடக்கம் மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் தீர்க்கப்படாத அரசாங்கக் கடன் மீதி ரூபா 9,588 பில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை அரசாங்கத்தினால் உடன்படிக்கை செய்யப்பட்டு பெறப்பட்டிருந்த மூன்று அரச நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்ட மற்றும் ஐந்தொகைக்கு வெளியே கணக்கு வைக்கப்பட்ட 08 வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைக்குரிய 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் மீதி ரூபா 330 பில்லியனாக இருந்ததுடன் திறைசேரி பிணைமுறி மீதி ரூபா 433 பில்லியன் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத மொத்த அரசாங்கக் கடனின் அளவு ரூபா 10,351 பில்லியனாக இருந்தது. அந்த அளவு மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியில் 77.89 சதவீதமாக இருந்தது.

மீளாய்வாண்டிலும் முன்னைய 04 ஆண்டுகளிலும் மொத்த கடன் அளவு வருடாந்த சனத்தொகை மற்றும் தனிநபர் கடன் அளவு தொடர்பான விபரங்கள் அட்டவணையில் 05 காட்டப்பட்டுள்ளது.

விபரம்	2012	2013	2014	2015	2016	2017
திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரச கடன்கள் மீதி (ரூபா பில்லியன்)	5,520	6,106	6,721	7,830	8,860	9,776
சராசரி ஆண்டு சனத்தொகை('000)	20,425	20,585	20,771	20,966	21,203	21,444

அட்டவணை 06..... இலங்கையின் மத்திய வருடாந்த சனத்தொகை மற்றும் தனிநபர் கடன் அளவு

மூலம்..... திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரச கடன் மீதி கணக்கீடு செய்யும் போது மத்திய வங்கி முற்பணம் உள்ளடக்கப்பட்ட குத்தகை கடன்கொடுத்தோர் அகற்றப்பட்டுள்ளது.

அட்டவணை 06 இல் குறிப்பிடப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த அரசாங்கக் கடன், மத்திய வருடாந்த சனத்தொகையுடன் ஒப்பிடும் போது ஒரு தனிநபரின் கடன் அளவு ரூபா 455,885 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் ஒரு தனிநபரின் கடன் அளவான ரூபா 417,865 உடன் ஒப்பிடும் போது ரூபா 38,020 இனால் அதிகரித்திருந்தது. அவ்வாறே அரச கடன் மீதிகளில் 45 வெளிநாட்டுக் கடனாக இருந்தமை மற்றும் பெறுமதி இறக்கம் தாக்கம் காரணமாக தனிநபர் கடன் அளவின் உள்ளவாறான பெறுமதி தொடர்ந்தும் உயர்ந்த பெறுமதியொன்றாக இருந்தது. மீளாய்வாண்டின் போது கடன் தவணை மற்றும் வட்டிக் கொடுப்பனவின் போது ரூபாயின் பெறுமதி மாற்றத்தின் பேரில் ரூபா 5,291 மில்லியனான மேலதிக செலவினமொன்று செலவிட நேர்ந்திருந்தது.

அரச கடன் தவணை மற்றும் ஆண்டிற்குரிய வட்டி கொடுப்பனவிற்கு அரசின் வருமானம் போதியதாக இல்லாமை

மீளாய்வாண்டின் அரசின் வருமானம் ரூபா 1,845 மில்லியனாக இருந்த போதிலும் ஆண்டின் கடன் தவணை மற்றும் வட்டியாக ரூபா 3,294 பில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் கடன் தவணை மற்றும் வட்டி கொடுப்பனவு செய்வதற்கு அரசின் வருமானத்தை மிகைத்து மேலும் ரூபா 1,449 பில்லியன் தேவையாக இருந்தது. அத்தேவைப்பாடு மற்றும் அரசின் செலவினத்தை மேற்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது உள்நாட்டுக் கடனாக ரூபா 2,549 பில்லியன் மற்றும் வெளிநாட்டு கடனாக ரூபா 601 பில்லியனாக மொத்தம் ரூபா 3,150 பில்லியன் கடன் பெற்றுக்கொள்ள நேர்ந்திருந்தது. இந்நிலைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

விபரம்	2012	2013	2014	2015	2016	2017
	ரூபா.பில்லியன்	ரூபா.பில்லியன்	ரூபா.பில்லியன்	ரூபா.பில்லியன்	ரூபா.பில்லியன்	ரூபா.பில்லியன்
ஆண்டில் பெற்றுக் கொண்ட உள்நாட்டுக் கடன்	2,256	2,178	2,020	2,793	2,517	2,549
ஆண்டில் பெற்றுக் கொண்ட வெளிநாட்டுக் கடன்	366	183	423	556	574	601
பெற்றுக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்	**2,622**	**2,361**	**2,443**	**3,349**	**3,091**	**3,150**

உள்நாட்டுக் கடன் தவணை கொடுப்பனவு	1,980	1,696	1,583	2,265	2,072	2,340
வெளிநாட்டுக் கடன் தவணை கொடுப்பனவு	153	93	107	187	145	219
உள்நாட்டு கடனுக்காக வட்டி கொடுப்பனவு	351	401	376	450	510	597
வெளிநாட்டுக் கடனுக்கான வட்டிக் கொடுப்பனவு	158	63	69	77	101	138
கடன் தவணை மற்றும் வட்டிக் கொ-- கூட்டுத்தொகை	**2,642**	**2,255**	**2,135**	**2,979**	**2,828**	**3,294**
அரச வருமானம்	997	1,066	1,128	1,394	1,699	1,845
அரச வருமானத்தை விஞ்சிய கடன் தவணை மாற்று வட்டிக் கொடுப்பன அளவு	**1,545**	**1,189**	**1,007**	**1,585**	**1,129**	**1,449**
திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் மீதி	**5,520**	**6,106**	**6,721**	**7,830**	**8,860**	**9,776**

அட்டவணை 07 ...அரசின் வருமானத்தை மிகைத்து கடன் தவணை மற்றும் வட்டிக் கொடுப்பனவு
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

பொறுப்புக்கள்

அரசாங்கத்தின் மொத்த தீர்க்கப்படாத மீதிகள் உட்பட மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த பொறுப்புக்களின் அளவு ரூபா 10,702 பில்லியனாக இருந்ததுடன், அது 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 13,289 பில்லியனான மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியில் 80.53 ஆக இருந்தது. அது முன்னைய ஆண்டில் 83.32 உடன் ஒப்பிடும் போது 2.79 ஆல் குறைவாக இருந்தது. 2013 இன் 15 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2003 இன் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) அதிகாரச்சட்டத்தின் 2(ஆ) பிரிவின் பிரகாரம் அச்சதவீதம் 80 சதவீதத்தை மிகைக்க கூடாது. எனினும் மீளாய்வாண்டின் போதும் அந்த எல்லை 0.53 ஆல் மிகைத்திருந்தது. மீளாய்வாண்டின் பொறுப்புக்களில் உள்ளடக்கம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு அட்டவணை 08 இல் காண்பிக்கப்படுகின்றது.

	2016 ரூபா.மில்லியன்	2017 ரூபா.மில்லியன்
வங்கி மேலதிகப் பற்று	165	151
மத்திய வங்கி முற்பணம்	83	200
அரசாங்கக் கடன்	8,794	9,588
நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படாத பொறுப்புக்கள் :-		
- ஐந்தொகைக்கு வெளியே கணக்கு வைக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்	332	330
- திறைசேரி பிணைமுறி மீதி குறைத்து கணக்கீடு செய்தல்	487	433
மொத்த பொறுப்புக்கள்	**9,864**	**10,702**
மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி	**11,839**	**13,289**
மொத்த பொறுப்புக்கள், மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக	**83.32**	**80.53**

அட்டவணை 08 ..... :- குடியரசின் பொறுப்புக்கள்

மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

(பொது திறைசேரியின் பிணை அடிப்படையில் பொது முயற்சிகளால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடனுக்காக வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த பிணை மற்றும் சலுகைகளின் பெறுமதி ரூபா 652,214 மில்லியனாகவும் ஒதுக்கீட்டுக் கணக்குகுளில் காண்பிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களின் பெறுமதியும் மேற்குறித்த பொறுப்புக்களில் உள்ளடக்கப்படவில்லை.)

அரசின் வருமானம் மற்றும் அரச கடன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் இறுதி வரையில் இலங்கை சுங்கத்தினால் அறவிடப்பட்ட வேண்டியிருந்த நிலுவை வருமானம் ரூபா 19,484 மில்லியனாக இருந்தது. அந்நிலுவை வருமானத்தில் 80 சதவீதம் அளவில் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவையாக இருந்த வரி வருமானமாக இருந்தது. இறக்குமதி வரி பெற்றோலிய உற்பத்தி வரி, விஷேட வியாபார வரி மற்றும் சுங்க மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி ஆகிய வரி வகைகளில் ரூபா 16,864 நிலுவை வரி அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அது மொத்த நிலுவை வரியில் 86 சதவீதமான அளவினை கொண்டிருந்தது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வரியிருப்பாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்படும் நிலுவை வரி மற்றும் தண்டப்பணம் உரிய காலத்தில் தீர்வு செய்வதற்காக முறையான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. இதனால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை வரி வருமானம் ரூபா 323,732 மில்லியனாக இருந்தது. கணக்காய்விற்கு

வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் இந்நிலுவை வருமானத்தில் ரூபா 32,070 மில்லியன் அதாவது 10 சதவீதத்தை அறவிட முடியாதிருந்ததுடன் எஞ்சிய ரூபா 291,662 மில்லியன் அதாவது 90 சதவீதமான நிலுவை வருமானத்தை அறவிடுவதை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்தது.

பெறுமதி சேர்வரி, தேசத்தை கட்டியெழுப்புதல் வரி தொடர்பாக குத்தகையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பேரில் பணம் செலுத்தப்படாத சந்தர்ப்பங்களில் கணனி முறையினூடாக சுயமாக வரி மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்பட்டு நிலுவை வரியாக அறிக்கையிடப்படுவதால் தண்டப்பணத்தை கணக்கிடும் நடைமுறையொன்று 2012 மார்ச் 31 ஆந் திகதி வரை திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், 2012 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் அம்முறைமை இடைநிறுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரிக்குரிய 2012 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காலப்பகுதி வரை வரியிறுப்பாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 15,283 பில்லியன் கூட்டுத்தொகையான வரி அறிக்கைகளுக்காக பணம் செலுத்தப்படாதிருந்ததுடன் அதற்குரிய மதிப்பீட்டறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நிலுவை வரித்தொகை அதன் அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய தண்டப்பணமாக ரூபா 9,237 மில்லியன் என மொத்தம் 24,521 ஆன நிலுவை மீதியொன்று 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அறவிடப்படாதிருந்ததுடன், அவற்றை நிலுவை வரியாக அறிக்கையிடுவதற்கோ திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மதுவரி திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் அத்திகதியில் அறவிடப்பட வேண்டிய தாமத கட்டணத்துடன் மொத்த நிலுவை வருமானம் ரூபா 2,123 மில்லியனாக இருந்தது. அந்த நிலுவை வருமானத்திலிருந்து 68 சதவீதம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை வருமானமாக இருந்தது.

மதுவரி பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட தவறுகள் தொடர்பாக ரூபா 50.62 வரித்தொகையொன்று 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னர் செலுத்துமாறு மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் நிறுவனமொன்றுக்கு அறிவித்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த வரித் தொகையை 2018 யூன் மாதம் வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

நிலுவையான தண்டப்பணம்

வெவ்வேறு சுங்கத் தவறுகள் காரணமாக இலங்கை சுங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த தண்டப்பணத்திலிருந்து மீளாய்வாண்டு இறுதி வரையிலும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்தது. தண்டப்பணம் உட்பட்ட ரூபா 570 மில்லியனாக இருந்தது.

அரசிற்குரிய வருமானம் இழக்கப்படல்

2016 இன் 20 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி திருத்த சட்டத்தினால் திருத்தப்பட்ட 2002 இன் 24 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி சட்டதின் பிரகாரம் 2016 நவம்பர் 01 ஆந் திகதி முதல் இலங்கை முதலீட்டு சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆடை உற்பத்தி கம்பனியால் உள்நாட்டு சந்தைக்கு வழங்கப்படும் ஆடைகளில் அலகின் அடிப்படையில் பெறுமதி சேர் வரி, ஆடை அலகொன்றின் கீழ் காணப்பட்ட ரூபா 25 ஆன வரி அளவு ரூபா 75 என திருத்தம் செய்யப்பட்டு வரி அறவிடப்பட வேண்டியிருந்தது. இலங்கை சுங்கத்தினால் திருத்த அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வரி 2017 யூன் 14 ஆந் திகதி முதல் செயற்படுத்தப்படும் வகையில் அறவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 08 மாதங்களுக்கு அண்மித்த

காலமாக ஒரு அலகிற்கு ரூபா 25 வீதம் பழைய விகிதத்தின் பிரகாரம் இலங்கை சுங்கத்தினால் வரி அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அக்காலப்பகுதியில் அரசினால் இழக்கப்பட்ட வரியின் பெறுமதி ரூபா 166.58 மில்லியனாக இருந்தது.

2017 இன் 7 ஆம் இலக்க பொருளாதார சேவைகள் கட்டணங்கள் (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவை கட்டணங்கள் சட்டத்தின் பிரகாரம் 2017 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களில் இருந்து 0.5 சதவீதம் பொருளாதார சேவைக் கட்டணமொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. எனினும் அரச நிதிக் கொள்கை திணைக்களத்தினால் 2017 யூன் 15 ஆந் திகதி அந்த பொருளாதார சேவைகள் கட்டணம் அறவிடப்படுமாறு இலங்கை சுங்கத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வரி அறவிடப்பட வேண்டிய திகதி முதல் வரி அறவிடப்பட்டதாக குறிப்பிட்டு அதிலிருந்து அனுப்பிய திகதி வரை 70 நாட்கள் தாமதமாக இருந்தது. அத்தாமத காலப்பகுதியில் 17,142 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் ரூபா 153.48 மில்லியன் வருமானமொன்று அரசிற்கு இழக்கப்பட்டிருந்தது.

8703.22.69 ஆம் இலக்க சுங்க வகைப்படுத்தலின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டு 03 ஆண்டுகளுக்கு மேல் பழமையான 33 Mazda RX8 பெற்றோலிய மோட்டார் வண்டிகள் (CC1300) 8703.90.99 இலக்க ஆம் சுங்க வகைப்படுத்தலின் இறக்குமதி செய்யப்பட்ட காரணத்தினால் ரூபா 114.6 மில்லியன் சுங்க வரி இரக்கப்பட்டிருந்தது.

பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்த சில சட்டங்களின் ஏற்பாடுகள் செயற்படுத்துவதற்காக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்படாமையால் அரசிற்கு காலரீதியாக கிடைக்க வேண்டிய வரி இழப்பானது அல்லது தாமதமாகி அறவிடும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. 2015 இன் 10 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் கசினோ வியாபாரத்திற்காக அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 3,215 மில்லியனான வரி வருமானமொன்று அறவிடப்படாதிருந்ததுடன் சுங்கவரி நிலுவை வரியாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டணங்கள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் அதற்குரித்தாக வழங்கப்பட்டுள்ள வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் மதுபானம் விற்பனை செய்வதற்கான ஏதேனும் வியாபாரமொன்று அல்லது வர்த்தகமொன்றை செய்வதற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் பேரில் 2008 சனவரி மாதத்திலிருந்து ரூபா 10,000 மற்றும் 2013 சனவரியிலிருந்து ரூபா 20,000 வீதம் முத்திரைக் கட்டணமொன்று அறவிடப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. முத்திரைக் கட்டண (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் ஏதேனும் முத்திரைக் கட்டணமொன்றை விடுவிப்பதற்காக அட்டவணையை தயாரித்து விஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்படல் வேண்டும். எனினும் அவ்வாறு விடுவிப்பு வழங்கப்படாமல் 04 மதுபான அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கள்ளு போத்தல் வியாபாரமொன்று நடாத்திச் செல்வதற்கு வழங்கும் அனுமதிப்பத்திரமொன்றுக்காக 2008 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை முத்திரை வரி அறவிடுவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக 10 ஆண்டு காலப்பகுதியில் பாரியளவு வரி வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது 19 பிராந்திய அலுவலகங்களால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்காக 2017 ஆம் ஆண்டின் போது மாத்திரம் ரூபா 2.74 மில்லியன் முத்திரை வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

கொள்கலன் பரிசோதனை

மீளாய்வாண்டின் போது இலங்கை சுங்கத்தினால் இலகுவாக, ஆழமான கூடிய இடருள்ள மற்றும் ரேட் பரிசோதனைகளின் கீழ் 221,503 கொள்கலன்கள் பரீட்சிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தன. 2,268 கொள்கலன்கள் பரீட்சிக்கப்படாமல் விடுவிக்கப்பட்டிருந்தன. அவ்வாறான 9,262 கொள்கலன் ஸ்கேன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் முதலீட்டு சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த நிறுவனத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ள கொள்கலன்களின் எண்ணிக்கை 18,689 ஆக இருந்தது. அதன் பிரகாரம் சுங்கத்தின் பொருள் விடுவிப்பு செயற்பாட்டிற்குரிய பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்கள் குறித்த நியமங்களுக்கு இணங்க காணப்பட்டதா என உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இலங்கை சுங்கத்தினால் அதற்காக பொறுப்புவாய்ந்த நிறுவனத்தின் உதவிகளைப் பெறவேண்டியிருந்தது. அவ்வாறே அந்த நிறுவனங்களிடமிருந்து சான்றிதழ் கிடைக்கும் வரை உரிய பொருட்கள் தனிப்பட்ட பிணைகளின் அடிப்படையில் இறக்குமதியாளரின் கட்டிடத் தொகுதிக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதும், அந்த பொருட்களை சந்தைக்கு விநியோகிக்கப்பட முடியாதிருந்தது. எனினும் அவ்வாறு தனிப்பட்ட பிணையின் அடிப்படையில் விடுவிக்கப்படுகின்ற பொருட்கள் தொடர்பாக இலங்கை சுங்கத்தின் மேற்பார்வை திருப்திகரமான நிலையில் காணப்படவில்லை.

- இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களை உள்ளடக்கிய கொள்கலன்கள் முறையாக ஆழமான பரிசோதனைக்கு உட்படுத்தப்படாமை காரணமாக சட்டவிரோத போதைப் பொருட்கள் போன்றவை இறக்குமதி செய்யப்படுகின்றமை, வெளிப்படுத்தப்படாத பொருட்கள் இறக்குமதி செய்வதன் மூலம் வரி மோசடி ஏற்படுகின்றமை, பிழையான வகைப்படுத்தல் குறியீட்டின் கீழ் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு வரி மோசடிகளில் ஈடுபடுகின்றமை, வெளிப்படுத்தப்பட்ட பொருட்களுக்குப் பதிலாக வேறு பொருட்களை இறக்குமதி செய்தல், குறித்த நியமத்திற்குப் புறம்பாக பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு வரி மோசடிகளில் ஈடுபடுகின்றமை, பொருட்களில் காணப்பட வேண்டிய உப பாகங்கள் குறைவாக அல்லது அதிகரித்து பயன்படுத்தப்பட்டு பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றமை, வெளிப்படுத்தப்பட்ட அளவினை விட அதிகரித்த அளவில் பொருட்கள் இறக்குமதி செய்து சுங்கவரி மோசடி செய்தமை போன்ற பல எண்ணிக்கையிலான சுங்க பிழைகள் ஏற்படுகின்றமை சுங்க உத்தியோகத்தர்களின் புலனாய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

- விமான நிலையத்தில் அமைந்துள்ள சுங்கத் தீர்வையற்ற விற்பனைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்ற பொருட்களின் விலைகளைத் தீர்மானிப்பதற்கான பொருத்தமான திட்டமுறையொன்று பொறுப்புவாய்ந்த தரப்பினரால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக விற்பனைக் கடைகளின் உரிமையாளர்களின் விருப்பத்தின் பேரில் பொருட்களின் விலை தீர்மானிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இந்த விற்பனைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்ற பொருட்களுக்காக சுங்கவரி அறவிடுதல் கைவிடப்பட்டமையின் காரணமாக அரசினால் கணிசமான அளவில் வரி நட்டமொன்று பெறப்பட்டிருந்த

போதும், அந்த சலுகைகள் விமானப் பயணிகளுக்கு கிடைத்தமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான முறையான திட்டமொன்றும் காணப்படவில்லை.

- கொழும்புத் துறைமுகம், கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் அரச வாணிப பல்நோக்குக் கூட்டுத்தாபனம் ஆகிய இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சுங்கத்தீர்வையற்ற வெளிநாட்டு மதுபான விற்பனைக் கடைகளின் செயற்பாடுகள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரின் போதியளவான மேற்பார்வையொன்று இடம்பெறாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதன் காரணமாக, சுங்கத் தீர்வையற்ற வெளிநாட்டு மதுபானங்கள் சந்தைக்கு வருவதுடன் அதன் மூலம் உள்நாட்டு மதுபானத்தின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு அறவிடவேண்டிய வரி வருமானத்திற்கு ஏற்படுகின்ற தாக்கங்கள் தொடர்பாக கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிலைமையை சரிசெய்வதற்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல்கள் முறைமை (RAMIS)

வருமான நிர்வாக நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொள்வதற்காக ரூபா 4 பில்லியனுக்கு மேற்பட்ட தொகையொன்று செலவு வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல்கள் முறைமை (RAMIS) ஸ்தாபிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்துவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. முறைமையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் காலரீதியாக மேற்கொள்ளப்படாமையால் உத்தியோகத்தரால் முறைமைக்கு இணங்க காலரீதீயாக வேலைகள் நிறைவேற்றப்படாமையால் வரி நிர்வாகத்திற்குரிய பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

- 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டம், 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் மற்றும் 2009 இன் 9 ஆம் இலக்க வரி அதிகாரச் சட்டங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம், வரியிறுப்பாளர்களினால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகக் காணப்பட்ட பெறுமதிசேர் வரி, வருமான வரி, உழைக்கும் போதே செலுத்தும் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி போன்ற வரி வகைகளுக்குரிய 312,507 வரி அறிக்கைகள் அளவில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லையொன வரி நிர்வாக முறைமையின் தகவல்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அது வழங்கப்பட்ட அறிக்கைகளில் 30 சதவீதமாக இருந்தன. உரிய அறிக்கைகளை உரிய காலத்தில் பெற்றுக்கொள்வதற்கும் அதன் அடிப்படையில் வரியை அறவிடுவதற்கும் திணைக்களம் செயற்திறனாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சமர்ப்பிக்கப்படாத அறிக்கைகளுக்கு இடையே பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரிகளுக்குரிய 222,069 வரி அறிக்கைகள் காணப்பட்டன.

- வரி நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) இன் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற வரி வகைகளுக்காக வரியிறுப்பாளர்கள் சமர்ப்பித்த தகவல்கள் மற்றும் அறிக்கைகள் தொடர்பாக முறைமையினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் மேலும் பரீட்சிக்கப்பட வேண்டிய

விடயங்களுக்குரிய வேலை விடயங்கள் முறைமையினால் உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. எனினும், மீளாய்வாண்டிவ் அவ்வாறு உத்தியோகத்தர்களுக்கு அனுப்பப்பட்ட 346,645 வேலை விடயங்கள் அதாவது மொத்த வேலை விடங்களில் 34 சதவீதம் நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக கணனி முறைமை தாபிக்கப்பட்டதால் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்தது. அவ்வாறு பூர்த்த செய்யப்படாத வேலை விடயங்களுக்கிடையே 144,337 பெறுமதிசேர் வரி விடயங்களாகவும் இருந்தன. அவ்வாறு வேலை விடயங்கள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக கணனி முறைமையின் நடவடிக்கைகளில் காலரீதியில் இடம்பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- புதிய வரி நிர்வாக முறைமையின் கீழ் நிர்வகிக்கப்படும் வரிகளுக்குரிய 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது முறைமையின் மூலம் மதிப்பீட்டு அறிக்கை ழங்கப்படாதிருந்ததுடன் அந்த ஆண்டுகளில் உரிய மதிப்பீட்டு அறிக்கை 2018 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரிய காலத்தில் மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படாமையால் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 17,805 மில்லியன் நிலுவை வரி மற்றும் தண்டப்பணம் 2017 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட வேண்டியிருந்தது.

மதிப்பிழந்த காசோலைகளுக்கான பண அறவீடு மந்த நிலைமையில் காணப்படல்.

வரியிறுப்பாளர்களினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வழங்கப்படுகின்ற காசோலைகள் மதிப்பிழக்கும் போக்கு வருடாந்தம் உயர்வடைந்து சென்று காணப்பட்டது. அதனை சீரமைப்பதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மதிப்பிழந்த காசோலைக்காக பணத்தை அறவீடு செய்தலும் மந்த நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு இவ்வாறு மொத்தம் ரூபா 2,255 மில்லியன் பெறுமதியான 7,175 மதிப்பிழந்த காசோலைகள் இருந்தன.

அரசாங்க நிறுவனங்களினால் செலுத்தப்படுகின்ற பெறுமதி சேர் வரி

2013 ஆம் ஆண்டில் பெறுமதி சேர் வரி அறவிடமுடியுமான எல்லை உயர்த்தி வைக்கப்பட்டதுடன், 17,000 வரியிறுப்பாளர்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கையொன்று வரித் தொகுதியிலிருந்து நீக்குவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் உரிய அந்த வரிக் கோவைகளும் தற்காலிகமாக வலுவிழக்கச் செய்யப்பட்டிருந்தது. எனினும், அந்த வரியிறுப்பாளர்களின் பதிவினை இரத்துச் செய்து அதுவரையில் விநியோகிக்கப்பட்ட பெறுமதி சேர் வரி பதிவுச் சான்றிதழ் மீண்டும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கடந்த சில வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் அவ்வாறு வலுவிலக்கச் செய்யப்பட்ட 77 வரியிறுப்பாளர்கள் அரசாங்க நிறுவனங்களிடமிருந்தும் ரூபா 63.6 மில்லியன் அளவிலான பெறுமதி சேர் வரித்தொகை சேகரித்திருந்தனர். சில வரியிறுப்பாளர்களால் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து சேகரித்த பெறுமதி சேர் வரியினை வரி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்படாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. அரசாங்க நிறுவனங்களால் செலுத்தப்படுகின்ற வரி வரியிறுப்பாளர்களால் முறைப்படி வரி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்தும்

முறைமையொன்று வரி முறைமையில் காணப்படவில்லை.

சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்தல்

மதுவரி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் பரிசோதனையொன்றில் சட்டவிரோதமாக மதுசாரம் இறக்குமதி செய்த கம்பனியொன்றிடமிருந்து ரூபா 588.90 மில்லின் வரித்தொகையொன்று அறவிடுவதற்கு 2016 ஆம் ஆண்டின் போது அத்தொகையில் ரூபா 127.16 மில்லியன் அறவிடப்பட்டிருந்தத, எஞ்சிய தொகை 1912 இன் 8 ஆம் இலக்க மதுவரி கட்டளை(திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்ட மதுவரி கட்டளைச் சட்டத்தின் 7 மற்றும் 32(2) பிரிவுகளுக்கு முரணாக ரூபா 15.39 மில்லியன் வீதம் மாதாந்தம் 30 தவணைகளில் அறவிடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற ஒவ்வொரு சிகரட், சுருட்டு, பீடி மற்றும் குழாய் புகையிலை கிலோகிராமொன்றுக்காக வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற நிதிகள் மூலம் அமைச்சரால் நிர்ணயிக்கப்படும் அந்தந்த அளவுகளின் பிரகாரம் வரியொன்று அறவிடப்பட வேண்டும். எனினும் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாமல் மதுவரி திணைக்களத்தினால் சிகரட்டிற்கு மாத்திரம் புகையிலை வரி அறவிடப்பட்டிருந்தது.

பாதுகாப்பு ஸ்டிகர் வழங்கலுக்கான பெறுகை

மதுபான போத்தல்கள் மற்றும் மதுபான போத்தல்களுடன் அண்மித்த உற்பத்திகளுக்காக பாதுகாப்பு ஸ்டிகர் வழங்கல், பாதுகாப்பு ஸ்டிகர் முகாமைத்துவ முறையினை வழங்கல், ஸ்தாபித்தல் மற்றும் பேணிச் செல்லல் போன்றவைகளுக்காக பெறுகைகள் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு திணைக்களத்தால் 1000 ஸ்டிகர்களுக்காக சமர்ப்பித்த விலை ஐ.அ.டொலர் 3.19 இற்கு வழங்குவதற்காக வழங்குனர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். இவ்வழங்குனர் ஏற்றுக்கொள்ளப்பட்ட பங்குடைமை வியாபாரமொன்றாக கருதுவதற்கு தேவையான சட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யப்படாமையால் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அப்பெறுகை நிராகரித்து அமைச்சினால் மீண்டும் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் போது 1000 ஸ்டிக்கரிகளுக் ஐ.அ.டொலர் 5.99 இற்கு வழங்குவதற்காக மேற்படி நிராகரிக்கப்பட்ட வழங்குனரே தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அது முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட விலையை விட ஐ.அ.டொலர் 2.8 மேலதிகமாக விலையாக இருப்பதால் முதலாவது வருடத்திற்காக வழங்கப்பட்ட 384 மில்லியன் ஸ்டிக்கர்களுக்காக ஐ.அ.டொலர் 1,075,200 கூடுதலாக செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது.

புகை பரிசோதனை நியமங்கள் இல்லாமல் வாகன ஓட்டத்தில் ஈடுபடல்

2008 ஆம் ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 2 தனியார் கம்பனிகளால் 31,329,486 புகை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் 5,802,365 புகை பரிசோதனைகள் அதாவது 19 சதவீதம் புகை பரிசோதனையின் முதலாவது சந்தர்ப்பத்தில் சித்தியடையவில்லை. அவ்வாறே 2008 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம ஆண்டு வரை மேற்கொண்ட புகை பரிசோதனைகளின் பெறுபேறுகளின் பிரகாரமும் அச்சித்தியடையாத சதவீதம் 13 முதல் 26 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. இதன் பிரகாரம் இலங்கையில் ஓட்டத்தில் ஈடுபடும் வாகனங்களுக்கு இடையே 13 சதவீதம்

முதல் 26 சதவீதம் வரை வீச்சில் வாகனங்கள் நிர்ணயிக்கப்பட்ட புகை பரிசோதனை நியமங்களில்லாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

திறைசேரி முறிகளில் பெறுமதி குறைத்து கணக்கீடு செய்தல்

குடியரசின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கபட்ட திறைசேரி பிணை முறிகள் தொடர்பான பொது திறைசேரியின் கணக்கீட்டு கொள்கை 2016 ஆம் ஆண்டு முதல் சீராக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் விநியோக்கப்பட்டுள்ள திறைசேரி முறிகளில் தேறிய பெறுமதிக்குப்பதிலாக முகப்பு பெறுமதி கணக்கீடு செய்தல் ஆரம்பிக்கபட்டிருந்தது. எவ்வாறாயினும் 2016 ஆம் ஆண்டிற்கு முன் வழங்கப்பட்ட திறைசேரி பிணை முறிகளில் முகப்புப் பெறுமதி தொடர்ந்தும் கணக்குகளில் சீராக்காமை காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் திறைசேரி பிணை முறிகளுக்குரிய மொத்தப் பெறுமதி ரூபா 433 மில்லியன் குறைத்து காணப்பட்டிருந்தது.

உடன்படிக்கையின் கடப்பாடுகளின் கீழ் கடன் மீதிகள் குறைத்துக் கணக்கீடு செய்தல்

அரசினால் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் கீழான 08 உடன்படிக்கைகளுக்குரித்தாக பெற்றுக் கொண்ட கடன்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 330 மில்லியன்கள் கடன் மீதி குடியரசின நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கடன்மீதிகளில் ரூபா 151 மில்லியன் அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்கு அரசினால் வழங்கப்பட்டிருந்த கடன்களில் செலுத்த வேண்டியிருந்த மீதியாக இருந்தது. இது தொடர்பாக துறைமுகங்கள் மற்றும் கப்பல் அலுவல்கள் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட MPS/SEC/2017/32 மற்றும் 2017 யூலை 20 ஆம் திகதிய "அம்பந்தோட்டை துறைமுக சலுகை உடன்படிக்கை" என்ற அமைச்சரவை விஞ்ஞானத்திற்கு 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் "அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்காக இலங்கை துறைமுக அதிகார சபையினால் எடுக்கப்பட்ட கடன்களில் செலுத்த வேண்டிய மீதி, அந்த சலுகை உடன்படிக்கை அமுலாகும் திகதி முதல் செல்லுபடியாகும் வகையில் திருப்பி செலுத்தும் பொறுப்பு பொது திறைசேரியால் பொறுப்பேற்றல்" மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டிருக்கையில் அக்கடன் மீதிகளை குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 65 வெளிநாட்டு கடன் உடன்படிக்கைகளுக்குரிய 2017 ஆம் ஆண்டின் போது தீர்வையாகாத ரூபா 40 மில்லியனான வெளிநாட்டுக் கடன் குடியரசு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

ஆட்பதிவு செயலத்தின் நிர்மாணம்

பாதுகாப்பு அமைச்சினால் ஆட்பதிவு செயலகத்தை நிர்மாணிப்பதற்காக 04 வர்த்தக வங்கிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 7.55 பில்லியன் கடன் தொகையிலிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் செலுத்த வேண்டிய கடன் மற்றும் பெறுமதி ரூபா 7.39 பில்லியனாக இருந்ததுடன் அம்மீதி குடியரசின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவிற்காக வங்கி கடன் பெற்றுக்கொள்ளல்

ஓய்வூதியத் திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டிலிருந்து ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவு செய்வதற்கு 03 அரச வங்கிகள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூ கடன் தொகையில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதி ரூபா 45.7

மில்லியனாக இருந்தது. அக்கடன் மீதி குடியரசின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

அரச கடனாக கணக்கீடு செய்யப்படாமல் நிகழத்தக்க பொறுப்புகளாக குறிப்பிடல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அரச நிறுவனங்கள் மற்றும் பொது முயற்சிகளால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடன் பொதுத் திறைசேரியால் வங்கிகளுக்கு வழங்கப்பட்டிருந்த பிணை முறிகள் மற்றும் சலுகை கடிதங்களின் பெறுமதி ரூபா 652 மில்லியனாக இருந்தது. அதில் அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடனுக்காக வழங்கப்பட்டிருந்த 04 பிணை முறிகளுக்கும் இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக்கொண்ட கடனுக்காக வழங்கப்பட்டிருந்த 02 பிணை முறிகளுக்கும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பெற்றுக் கொண்ட கடனுக்காக வழங்கப்பட்டிருந்த 90 பிணை முறிகளுக்கும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் பெற்றுக்கொண்ட கடனுக்காக வழங்கப்பட்டிருந்த 04 பிணை முறிகளுக்குரிய ரூபா 185 பில்லியனான கடன்பெறுமதி மீள்கொடுப்பனவு பொது திறைசேரி மேற்கொண்டிருந்தமையால் அக்கடன் பெறுமதி அரச கடனின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அப்பெறுமதி நிகழத்தக்க பொறுப்பாக குடியரசின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

அரசாங்க பாதுகாப்பு

இலங்கையின் சுய நிர்ணய எல்லை தொடர்ந்திருத்தலை உறுதிப்படுத்துதல் மற்றும் ஆகாயம், கடல், நிலம் என்பவற்றில் பாதுகாப்பை பேணிவருதல் இத்துறையின் குறிக்கோளாக உள்ளது. அக்குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக பின்வரும் கடமைப் பொறுப்புக்கள் பாதுகாப்பு அமைச்சு, அதன் கீழுள்ள ஐந்து திணைக்களங்கள் மற்றும் எட்டு

நியதிச்சட்ட நிறுவனங்களால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

- இலங்கையின் சுய நிர்ணய எல்லை தொடர்ந்திருத்தலையும் தேசிய பாதுகாப்பையும் உறுதிப்படுத்தல்.
- ஆகாயம், கடல் மற்றும் நீர் வலயங்களில் பாதுகாப்பை பேணுதல்.
- தேசிய பாதுகாப்பு சம்பந்தமான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை செயற்படுத்துதல்.
- இலங்கையின் நற்பெயரையும் புகழையும் பேணுவதற்காக உதவியளித்தல்.
- பாதுகாப்பு நடவடிக்கைகள் சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்.
- சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாப்பதற்காக தேவையான சந்தர்ப்பங்களில் பொலிசுக்கு உதவி வழங்குதல்.
- உயிர்களையும் ஆதனங்களையும் பாதுகாப்பதனை உறுதிப்படுத்தல்.
- சிறிய அளவு ஆயுதங்களை ஒழுங்குபடுத்துதல்.

பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கமாக கீழே தரப்படுகின்றன.

செயல்நடவடிக்கைத் திட்டத்துக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமை.

2017 ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு அமைச்சின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 1998 இன் 45 ஆம் இலக்க தனியார் பாதுகாப்புச் சேவைகளை ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரச்சட்டம் மற்றும் 1996 இன் 22 ஆம் இலக்க துவக்குகள் (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டணங்களைத் திருத்தம் செய்யும் நடவடிக்கை நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் அதன் கீழ் அறவிடப்படுகின்ற துவக்கு உத்தரவுப்பத்திரக் கட்டணங்களுக்கான வருமானம் கணக்குகளின் பிரகாரம் ஆயுத உத்தரவுப் பத்திரம் சம்பந்தமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1.50 மில்லியன் வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது. மேலும் ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்கள் சம்பந்தமான சட்டங்களில் காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் பாதுகாப்பு அமைச்சால் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படுகின்ற 22 செயற்பாடுகள் சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட உள்ளக செயற்பாட்டு நடைமுறைக் கோவை அல்லது உள்ளக சுற்றறிக்கையின் மூலம் விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்புகொள்வதற்காக முறையான நடைமுறைகள் உரிய பிரிவிற்குள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

உள்ளக நிதியங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள்

முப்படைகளால் அவற்றின் பல்வேறு முகாம்கள் மற்றும் பிரிவுகளின் மூலம் உள்ளக நிதியங்கள் பேணப்பட்டு வருவதாகவும் அந்நிதியங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காகவும் நிதியத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற பல்வேறு இலாபம் உழைக்கின்ற செய்ற்திட்டங்களுக்காக முப்படைகளுக்குச் சொந்தமான பௌதீக மற்றும் மானிட வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன எனவும் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 170 இன் பிரகாரம் உள்ளக நிதியத்தை நியதிச் சட்ட நிதிய தோற்றுவிக்காமையின் காரணமாக அவற்றில் நடவடிக்கைகள் பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாது காணப்பட்டது. இது சம்பந்தமாக அரசாங்க கணக்குகள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழுவால் மீளாய்வு செய்து முப்படைகளால் செயற்படுத்தப்படுகின்ற நிதியம் பொதுக் கொள்கையின் அடிப்படையில் கணக்காய்விற்குரிய வகையில் தொடர்ந்தும் பேணக்கூடிய முறை சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சு தீர்மானம் எடுக்க வேண்டுமென கட்டளை வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் 2009 நவம்பர் 11 ஆந் திகதிய ஈடீ/ஐஏ/05/03(02) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் உரிய ஆலோசணை வழங்கப்பட்டிருந்த போதிலும் நியதிச்சட்ட நிதியமாக தோற்றுவிப்பதற்காக அது தொடர்பாக மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சமாதானத்தை ஏற்படுத்தும் செயற்பாட்டிற்காக முப்படை உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துதல்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயற்பாடுகளின் அடிப்படையில் மாலி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளுக்காக இலங்கை இராணுவப் படையின் மற்றும் இலங்கை விமானப்படையின் உத்தியோகத்தர்க்கள் மீளாய்வாண்டின் போது ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இது சம்பந்தமாக திறைசேரி செயலாளரால் 2016 ஏப்ரல் 26 ஆந் திகதிய எஸ்ஏ/எம்ஏ/ஏஏ/-2/2016 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் உரிய செயற்பாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் தனியார் வருமானக் குறியீட்டின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பொதுத் திறைசேரிக்கு அறிக்கையிடப்பட வேண்டுமென பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இலங்கை விமானப்படையால் மாத்திரம் தனியான வருமானக் குறியீட்டின் கீழ் வருமானம் கணக்கீடு செய்யப்பட்டு பொதுத் திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

யுத்தத்தால் மரணமடைந்த மற்றும் ஊனமுற்ற இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்காக நலன்புரி வசதிகளை வழங்குதல்

யுத்தத்தில் மரணமடைந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு ஊனமுற்ற இராணுவ வீரர்கள் மற்றும் இவர்களின் குடுப்பங்களுக்கு நலன்புரி வசதிகளை வழங்கும் குறிக்கோளுடன் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இலங்கை ரணவிரு சேவக அதிகாரசபை பாதுகாப்பு நிதியம், அபிவெனுவன் அபி நிதியம் ஆகிய பிரதான 03 நிறுவனங்கள் பேணப்பட்டு வந்தன. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாதுகாப்பு நிதியம் மற்றும் அபிவெனுவன் அபி நிதியத்தில் முறையே ரூபா 997.3 மில்லியன் மற்றும் ரூபா 1,116.47 மில்லியன் காசு மீதி காணப்பட்டது. எவ்வாறாயினும், 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான காலத்தில் தேசிய பாதுகாப்பு நிதியததின் மூலம் பாதுகாப்புச் சேவைகளுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களின் 05 ஆம் ஆண்டு புலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களுக்கு நலன்களை வழங்குதல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. அபிவெனுவன் அபி நிதியத்தின் நடவடிக்கைகளானது

இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு வீடமைப்பு கடன்களை வழங்குவதுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் 1999 இன் 54 ஆம் இலக்க ரணவிரு சேவா அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின் பிரகாரம் மரணமடைந்த அல்லது காணாமல் போன இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களின் தங்கி வாழ்பவர்கள் தொடர்பான தகலல்களை உள்ளடக்கிய பெயர் பதிவேட்டைத் தயாரித்து தொடர்ச்சியாக

பாதுகாப்பு தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம்

அகுரேகொட பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற பாதுகாப்புப்படை தலைமையகக் கட்டிடத் தொகுதியின் நிர்மாணம் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

- 2011 சனவரி 25 ஆந் திகதி அமைச்சரவையால் முப்படைகளின் தலைமையகக் கட்டிடத்தை 211,500 சதுர மீற்றர்களுடன் ரூபா 25 பில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் இரண்டு கட்டங்களில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பின்னர் நிர்மாணத்தின் நோக்கெல்லையை மாற்றியதன் காரணமாக கட்டிட தொகுதியின் அளவு 411,915 சதுர மீற்றர் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக கிரய மதிப்பீடு ரூபா 55.60 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதற்காக ரூபா 19 பில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

- முன்னுரிமையின் அடிப்படையில் இனங்காணப்பட்ட மூன்று கட்டிடங்களின் நிர்மாண நடவடிக்கைகளின் பௌதீக செயல் முன்னேற்றம் 60 சதவீதத்தை மிகைத்திருந்த போதிலும் நிர்மாணங்களின் ஒட்டுமொத்த செயல் நாளதுவரையாக்கப்பட வேண்டியிருந்தது. எனினும் அது தொடர்பான முழுமையான பதிவேடு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இச் செயற்பாட்டிற்காக 2.69 ரணவிரு சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 12.98 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

  முன்னேற்றம் 2018 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 48 சதவீதமாகக் காணப்பட்டது. மேலும் திருத்திய நிர்மாண நிகழ்ச்சித் திட்டங்களின் பிரகாரம் கட்டிடங்களின் நிர்மாண நடவடிக்கைகள் 2020 யூன் 30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

- இலங்கை இராணுவப் படையின் பிரதான அலுவலகக் கட்டிடம் காலிமுகத்திடல் பிரதேசத்திலிருந்து அகற்றப்பட்டதன் பின்னர் அக்கட்டிடங்களில் அமைந்துள்ள இலங்கை இராணுவப் படையின் பல்வேறு அலுவலகங்கள் கொழும்பு நகரம் மற்றும் அருகாமையிலுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள அரசாங்க மற்றும் தனியார் பிரிவுகளுக்கு சொந்தமான கட்டிடங்களில் ஸ்தாபிப்பதற்கு 2011 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படடிருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 20 இடங்களில் 555,036 சதுர அடியான கட்டிட நிலப் பரப்பு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வாடகையாக ரூபா 1,293 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

ஆள் அடையாள செயலகக் கட்டிடம்

20 மாடிகளைக் கொண்ட ஆள் அடையாள செயலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 02 தனியார் வங்கிகள் மற்றும் 02 அரசாங்க

வங்கிகளின் மூலம் 2015 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் அடிப்படையில் ரூபா 7,550 மில்லியன் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மூலதனமாக்கப்பட்ட ரூபா 1,272 மில்லியன் வட்டியையும் உள்ளடக்கி 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த கடன் மீதி ரூபா 7,395 மில்லியனாக இருந்தது. அக்கடன் 2030 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவில் தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். மேலும் குடியகழ்வு குடிவரவுத் திணைக்களம், ஆட்களைப் பதிவு செய்தல் திணைக்களம், பதிவாளர் நாயகத்தின் திணைக்களம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தூதுவராலயப் பிரிவு மற்றும் அந்த நிறுவனங்களுக்கான மத்திய தரவு நிலையம் ஆகிய பிரவுகளுக்காக இடவசதிகளை வழங்குவதே கட்டிடத்தை நிர்மாணிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோளாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் அக்குறிக்கோள்களுக்கு முரணாக அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்களுக்காக அலுவலக இட வசதிகளை வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன.

தந்திரோபாய வழியிலான பாதுகாப்பு தொடர்பாடல் வலையமைப்பு

முப்படைகளுக்கு மத்தியில் வலயத்திற்குள் காணப்படுகின்ற நவீன தொடர்பான முறைமைக்குச் சமாந்திரமான வகையில் தொடர் பாதுகாப்புத் தன்மையான மற்றும் மாற்று தொடர்பாடல் வலையமைப்பை வழங்குவதனை குறிக்கோளாகக் கொண்டு நாட்டின் 22 இடங்களில் வானொலி அலைவரிசை கோபுரங்களை நிர்மாணித்து 37 உயர் அலைவரிசை வானொலி சமிக்ஞைகளுடன் வலையமைப்பு முகாமைத்துவ முறைமையை ஸ்தாபிக்கும் செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை மத்திய கால செலவுக் கட்டமைப்பின் கீழ் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதன் காலம் 2018 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டிருந்தது. மேலும் ரூபா 1192 மில்லியன் தொகையான தொடக்க கிரய மதிப்பீடு ரூபா 1,854 மில்லியனாக திருத்தம் செய்யப்பட்டிருந்தும் அதற்குரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேற்கூறிய விடயத்திற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 15.70 மில்லியனுக்கு கொள்வனவு செய்து பொருத்தப்பட்டிருந்த 10 மின்பிறப்பாக்கி இயற்திரங்கள் மற்றும் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 10.80 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட 12 மின்பிறப்பாக்கி இயந்திரங்களை உள்ளடக்கி 22 மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் உரிய சுற்றாடலுக்கும் பொருத்தமான நோக்கத்திற்கு முரணாக உத்தரவாத காலத்தையும் மிகைத்து 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை விளைவற்றுக் காணப்பட்டது.

உடன்படிக்கை செய்துகொண்ட பணத்தை மிகைத்து கொடுப்பனவு செய்தல்

2017 ஆம் ஆண்டிற்காக இலங்கை இராணுவப் படையின் 92 முகாம்கள், இலங்கை கடற்படையின் 19 முகாம்கள் மற்றும் இலங்கை விமானப்படையின் 25 முகாம்களுக்காக தேங்காய்களை வழங்குவதற்கான பெறுகை சம்பந்தமாக 2017 யூன் 16 ஆந் திகதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் தேங்காய் ஒரு கிலோகிராமின் உடன்படிக்கை செய்து கொண்ட விலையை ரூபா 65 ஆக அதிகரித்ததன் காரணமாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தேங்காய்க்கான உடன்படிக்கை செய்து கொண்ட பணத்தை மிகைத்து ரூபா 171.73 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற இந்த விலை அதிகரிப்பிற்காக 2018 ஆம ஆண்டிற்கான பெறுகைகளுக்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட

நிரந்தர பெறுகைக் குழுவால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

இராணுவத்தின் தேவைக்காக சப்பாத்து கொள்வனவு செய்தல்

இலங்கை இராணுவப்படையின் தேவைக்காக கறுப்பு நிற உயரமான 75,000 ஜோடி சப்பாத்துக்களை கொள்வனவு செய்வது சம்பந்தமான பெறுகை நடைமுறை 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் முதலாவது சந்தர்ப்பத்தின் போது சர்வதேச போட்டி அடிப்படையிலான கேள்விகள் கோரப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் கேள்விதாரர்கள் சமர்ப்பித்த மாதிரிகள் அங்கீகரித்த மாதிரிகளுடன் இணங்கியிருக்காததன் காரணமாக அக்கேள்வி கோரல்கள் இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் கேள்விகள் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன. இரண்டாவது தடவை கேள்வி கோருதாவது தேசிய போட்டி அடிப்படையில் இடம்பெற்றிருந்ததுடன் அதற்காக 2017 சனவரி 08 ஆந் திகதி இரண்டு தேசிய பத்திரிகைகளில் அறிவித்தல்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. கேள்விகள் கோரும் இறுதித் திகதியான 2017 சனவரி 31 ஆந் திகதி வரை இரண்டு கேள்வி தாரர்கள் மாத்திரம் கேள்விகளைச் சமர்ப்பித்திரந்ததுடன் அதிக விலையைச் சமர்ப்பித்த கேள்விதாரருக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு பெறுகைக் குழு தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும் ஆகக் குறைந்த விலையைச் சமர்ப்பித்த கேள்விதாரரால் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மேன்முறையீட்டை கவனத்தில் கொண்டு மேன்முறையீட்டுச் சபையால் அந்த கேள்விதாரருக்கு ஒப்பந்தத்தை வழங்க வேண்டுமென சிபாரிசு செய்திருந்தது. கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் அக்கேள்விதாரரால் 2017 சனவரி 25 ஆந் திகதி தனது கம்பனி நியதிச்சட்ட திருத்தப்பட்டடிருந்ததுடன் அதற்கிணங்க அத்திகதிக்கு முன்னர் இக்கம்பனி சப்பாத்து தயாரித்தல் மற்றும் அது தொடர்பான ஏனைய எதுவித செயற்பாட்டிலும் தொடர்புபட்டிருக்காத ஒரு நிறுவனம் என்பது வெளிப்படுத்தப்பட்டது.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்குதல்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் போதனா வைத்தியசாலையை நிர்மாணிக்கும் நடவடிக்கை 04 கட்டங்களின் கீழ் பூர்த்திசெய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் தேவையான வைத்திய உபகரணங்களை ஒவ்வொரு கட்டத்திலும் வழங்கி பொருத்துவதற்காக ஐ.அ டொலர் 39,629,000 மதிப்பீடு செய்யப்பட்டடிருந்தது. எவ்வாறாயினும் ஒவ்வொரு கட்டத்திற்கும் தேவையான வைத்திய உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் அல்லது நிறுவுவதற்கு இனங்காணப்பட்ட 51 வகையான உபகரணங்கள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே போதனா வைத்தியசாலையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சேவைகளை நிறைவேற்றுவதற்காக 13 பிரிவுகள் இனங்காணப்பட்டிருந்ததுடன் உரிய பதவியணியினர் இல்லாமை தேவையான மருத்துவ உபகரணங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்காமை முதலிய உபகரணங்களின் அடிப்படையில் அப்பிரிவு குறைந்த பாவனைக்கு உட்பட்டிருந்தது.

உயர் பயிற்சி நிலையம் மற்றும் பயிற்சிக் கப்பல்களுக்காக வதிவிடக் கட்டிடத்தை நிர்மாணித்தல்

இலங்கை கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தால் ரூபா 87.70 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் மிரிஸ்சை பிரிதேசத்தில் எயர் பயிற்சி நிலையத்தையும் பயிற்சிக் கப்பல்களுக்கான வதிவிடக்

கட்டிடத்தையும் நிர்மாணிக்கும் நடவடிக்கை 2017 சனவரி மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த நிர்மானச் செயற்பாடுகள் 2017 ஒக்தோபர் 09 ஆந் திகதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் எழுத்து மூல கட்டளையின் பேரில் நிறுத்தப்பட்டிருந்தது. அத்திகதி வரை இலங்கை கரையோரப்பாதுகாப்பு திணைக்களத்தால் இந்நிர்மாணத்திற்காக ரூபா 34.19 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

ஒரு ரேடார் ரிசீவர் (LRU 02) மற்றும் ஒரு அன்டனா ஸ்கேனர் காணாமல் போயுள்ளமை

கட்டுநாயக்கா ஆரம்ப விமான படை முகாமில் விமானங்களின் உதிரிப்பாக பிரிவில் ரேடர் ரிசீவர் (LRU 02) மற்றும் அன்டனா ஸ்கேனர் (LRU 01) 2014 ஏப்ரல் 25 ஆந் திகதி பழுதுபார்ப்பதற்காக சீனாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் எடுத்து வரும் வேளையில் மேற்கூறப்பட்ட பொருட்கள் காணாமல் போயுள்ளமையின் காரணமாக இலங்கை விமானப்படைக்கு ரூபா 74.46 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. அந்நட்டம் சம்பந்தமான தொடக்க அறிக்கை 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் நட்டம் சம்பந்தமாக பொறுப்புக் கூறக்கூடிய நபரை இனங்கண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுப்கப்பட்டிருக்கவில்லை.

02 கடற்படை படகுகள் கொள்வனவு செய்தல்

2013 மே 13 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இந்தியா கடன்முறைமையின் கீழான நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் இலங்கை கடற்படை முகாமையின் தேவைக்கு இணங்கிய வகையில் இந்திய கடற்படையில் இயந்திர உற்பத்திப் பிரிவில் தயாரிக்கப்பட்ட ஐ.அ.டொலர் 133 மில்லியனுக்குச் சமமான ரூபா 19,950 மில்லியன் பெறுமதியான 02 கடற்படை படகுகள் மீளாய்வாண்டின் போது இலங்கை கடற்படை முகாமிற்குக் கிடைத்திருந்தது. இந்த ரோந்துப் படகுகளில் சிறிய அளவிலான சிறிய அளவிலான 02 கெலிகோப்டர்களை நிறுத்தி வைப்பதற்கான இடப்பரப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான அதற்கு ஒத்த வகையிலான சிறிய அளவு ஹெலிகோப்டர்கள் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் தொடக்க திட்டமிடல் சட்டத்தின் போது இது சம்பந்தமாக இலங்கை விமானப்படையின் கருத்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

ரக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனியின் வணிக கடன்பட்டோர்

2016 மார்ச் 31 இல் உள்ளவாறு வரையறுக்கப்பட்ட ரக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனியின் வணிக கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் ரூபா 2,289.58 மில்லியனாக இருந்தது. அவற்றில் 77 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 1,770.6 மில்லியன் வரையறுக்கப்பட்ட எவன்கார்ட் மெரிடைம் சேவியஸ் (தனியார்) கம்பனியிடமிருந்து பெறவேண்டியிருந்தது. எவ்வாறாயினும் அப்பணம் செலுத்த வேண்டியவை என்பது எரிய கம்பனியால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் எவன்காட் மெரிடைம் சேர்விசஸ் (தனியார்) கம்பனியால் ரக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனிக்கு எதிராக சிங்கப்பூர் நீதிமன்றத்தில் தாக்கஞ் செய்யப்பட்ட இணக்கச் சபையாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இணக்க சபையாளர் வழக்கின் தீர்ப்பாக ஐ.அ.டொலர் 5,000,000 மற்றும் சிங்கப்பூர் டொலர் 826,000 எவன்காட் மெரிடைம் சேவிசஸ் (தனியார்) கம்பனிக்குச் செலுத்துமாறு ரக்னா பாதுகாப்பு இலங்கை கம்பனிக்கு கட்டளையிடப்பட்டிருந்தது.

அரசாங்க முயற்சிகள்

அரசாங்க முயற்சிகள் என்பது தமது பெயரில் உடன்படிக்கை செய்வதற்கு அதிகாரமுள்ள, வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி மற்றும் செயற்பாட்டு அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள, இலாபமீட்டுதல் அல்லது கிரயத்தை ஈடுசெய்யும் விதத்தில் சாதாரண வணிகச் செயற்பாடுகளில் ஏனைய தரப்பினர்களிற்கு பொருட்கள் சேவைகளை விற்பனை செய்கின்ற மற்றும் அரசாங்கத் துறையிலுள்ள தரப்பினால் கட்டுப்படுத்தப்படுகின்ற நிறுவனமொன்றாகும் என அறிமுகப்படுத்தலாம். பயன்பாட்டுச் சேவைகளை வழங்குகின்ற வர்த்தக முயற்சிகளும் நிதி நிறுவனங்களும் பொது முயற்சிகளில் உள்ளடங்குகின்றன. சில அரசாங்க முயற்சிகள் சமூக சேவைகளை வழங்குவதற்கான பொறுப்புடன் குறித்த தரப்பினருக்கும் சமூகப் பிரிவினருக்கும் விலையினை அறவிடாது அல்லது குறிப்பிடத்தக்க குறைந்த கட்டணத்தின் கீழ் பொருட்கள் சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் செயற்பட்ட போதிலும், சாதாரணமாக இலாபமீட்டும் செயற்பாடாகவே உள்ளது. அதற்கமைய, அவற்றின் சொத்துக்களின் மீது திரும்பலொன்றை உழைத்தல் எதிர்கால அபிவிருத்திக்கு தேவையாக உள்ளது. ஒழுங்குபடுத்தல், மேம்படுத்தல் மற்றும் கல்விசார் அரசாங்க முயற்சிகள் பாரம்பரியமாக வர்த்தகத் துறையில் உள்ளடங்குவதில்லை என்பதுடன், அந்த முயற்சிகள் இலாபமீட்டாத அமைப்புக்கள் எனக் கருதப்படுவதுடன், இலாபத்தன்மை நீங்கலான ஏனைய நியதிகளைப் பயன்படுத்தி அவற்றின் செயலாற்றல்களை பரீட்சித்தல் வேண்டும். பின்வரும் தலைப்புக்களின் கீழ் இலங்கையிலுள்ள அரசாங்க முயற்சிகளை விரிவாக வகைப்படுத்த முடியும்.

- விசேடவகை வணிக முயற்சிகள்
- நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்ட ரீதியற்ற நிதியங்கள்
- அரசுக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட கம்பனிகள்
- ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணித்தல் நிறுவனங்கள்
- பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் ஏனைய பயிற்சியளித்தல் நிறுவனங்கள்
- ஏனைய அபிவிருத்தி மற்றும் இலாப நோக்கமற்ற நிறுவனங்கள்

மின்சாரம், நீர், பெற்றொலிய உற்பத்திகள், தொலைத் தொடர்பு மற்றும் விமான சேவைகள் போன்ற பொருளாதாரத்தின் முக்கியமான பகுதிகள் பொது முயற்சிகளால் தந்திரோபாய ரீதியில் செயற்படுத்தப்படுகின்றன. பொருளாதாரத்தின் ஒட்டு மொத்த உரிமைத்துவம் மற்றும் போட்டித்தன்மை என்பன தொடர்பில் சகல அரசாங்க முயற்சிகளினதும் நிறுவன ரீதியான கட்டுப்பாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அரசாங்க கம்பனிகள் தவிர்த்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 291 பொது முயற்சிகளின் மொத்த சொத்துக்களின் தொகுப்பு முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவற்றுடன் ஒப்பிட்டு வரைபடம் 10 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



உருவம் 10- 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2017 இல் பொது முயற்சிகளின் மொத்தச் சொத்துக்கள்

2017 ஆம் ஆண்டில் பொது முயற்சிகளிற்கு ஏறத்தாழ ரூபா 55.4 பில்லியன் அரசாங்க மீண்டெழும் மானியங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அது அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினத்தில் 2.85 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டதுடன், ரோத்த முன்னைய ஆண்டில் அவை முறையே ரூபா 52.4 பில்லியன் மற்றும் 2.96 சதவீதமாகக் காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக மூலதனச் செலவினத்திற்காக மீளாய்வாண்டில் ஏறத்தாழ ரூபா 29.26 பில்லியன் மூலதன மானியங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அது அரசாங்கத்தின் மொதத் மூலதன செலவினத்தில் 4.45 சதவீதமாக காணப்பட்டது. நேரொத்த முன்னைய ஆண்டில் அவை முறையே ரூபா 36.25 பில்லியன் மற்றும் 6.1 சதவீதமாகக் காணப்பட்டன.

செயலாற்றல் மதிப்பீடு

பொது முயற்சிகளின் கணக்காய்வு நிதிசார் மற்றும் இணங்கியொழுகுதல் கணக்காய்வுகளுடன் மட்டும் வரையறுக்கப்பட்டவையல்ல ஆனால் அவற்றின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான வினைத்திறன், சிக்கனம் மற்றும் பயனுறுதி என்பவற்றையும் கருத்திற் கொண்டதாகும்.

பொது முயற்சிகளின் வினைத்திறன் மற்றும் பயனுறுதி மீதான கணக்காய்வு சில நியமங்கள் மற்றும் பிரமாணங்களின் அடிப்படையில் நடாத்தப்படுகின்றன. இலாபமே செயலாற்றலின் பிரதானமான பிரமாணம் அல்ல என்பதுடன் பொது நிதிகளின் சிக்கனமான மற்றும் வினைத்திறனான பயன்பாடு மற்றும் குறிக்கோள்களை அடைதல் என்பன மீது முகாமைத்துவத்தின் செயலாற்றல் மிக முக்கியமானதாகும். குறிக்கோள்களில் பொது முயற்சிக்குப் பொது முயற்சி வேறுபடுகின்றது. எந்தக் குறிக்கோள்களிற்காக ஒருபொது முயற்சி

நிறுவப்பட்டதோ அதன் அளவுக்குக் கொண்டுவருவதற்காக பொது முயற்சியின் நிதி மதிப்பீட்டுப் பகுப்பாய்வு செயற்படுத்தப்படுகின்றது. கணக்காய்வின் முதற்தர கடமைகளில் ஒன்று, ஒரு முயற்சியின் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கான பிரமாணத்தை இனங்காணுவதாகும். உதாரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற உற்பத்தி முயற்சியின் விடயத்தில குறிக்கோள் மற்றும் முதலீட்டு இயலளவு, கிரயங்கள் மற்றும் காலப்பட்டியல்கள், நுகர்ச்சியின் சாதாரண அளவுகள், விளைவு, உற்பத்தித்திறன், கிரமான வருவாயின் வீதம் போன்றன செயலாற்றலை அளவிடுவதற்கான அளவுகோலாக காணப்படுகின்றன. பொது முயற்சிகளிடமுள்ள நீண்டகால மற்றும் குறுங்கால மூலதனத்தினதும் செயற்பாட்டு திட்டங்களினதும் செயலாற்றலை மதிப்பீடு செய்தல் ஏனைய முக்கியமான பண்புகளாகும்.

பௌதீக செயலாற்றலை மதிப்பாய்வு செய்கையில் பொருத்தமான சூழ்நிலையில் நிறுவனத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட இயலளவு ஒரு ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுகோலாக உள்ளது. எவ்வாறிருந்த போதிலும், தரப்படுத்தப்பட்ட இயலளவைப் பயன்படுத்துவது, மூலப்பொருட்கள், மற்றும் பயன்பாட்டுச் சேவைகள், விளைவுகள் மற்றும் நிராகரித்தல் அதேபோல பேணுதல் என்பவற்றுக்கான பொருத்தமான பராமரிப்பு மற்றும் நுகர்ச்சியுடன் சேர்த்து மதிப்பிடப்படுகின்றது. செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கான இன்னொரு முக்கிய பயன்பாடு, நுகர்வுகள், உற்பத்தித் திறன், விளைவுகள் முதலியவற்றின் நியமான அளவின் அடைப்படையில் நியம அல்லது இலக்குக் கிரயத்தை தீர்மானிப்பதாகும். நிறுவனக் கட்டுப்பாடு, பொது முகாமைத்துவம், நிதிமுகாமைத்துவம், கொள்வனவு முகாமைத்துவம், நிர்மாண முகாமைத்துவம் போன்றவை தொடர்பாக பொது முயற்சிகளால் பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டல்கள் திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ளதுடன், இந்த வழிகாட்டல்கள் முயற்சியின் செயலாற்றல் மற்றும் முறைமைகளை மதிப்பீடு செய்வதற்கான இன்னொரு அடிப்படையை வழங்குகின்றது. உள்ளக மற்றும் புறநிலை நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய தொழில்நுட்பக் கற்கைகள் மற்றும் நியமங்கள் இந்த வழிகாட்டல்களிற்கு அடிப்படையிலமைந்த ஏனைய நியதிகளாக உள்ளன.

செயலாற்றல் கணக்காய்வு நடைமுறைத் தேவையாக உள்ளது. நிதிக் கணக்காய்வில் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்குகளின் சரியான தன்மை தொடர்பில் சான்றுறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இருப்பினும் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சித்தல் செயலாற்றல் கணக்காய்வின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த மூன்று காரணிகளிற்கும் மேலாக தற்போது சுற்றாடல் தாக்கம் தொடர்பாகவும் பரிசோதிக்கப்படுகின்றது. செயலாற்றல் கணக்காய்வுக்காக பல்வேறு பெயர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

- பணப்பெறுமதிக் கணக்காய்வு
- முகாமைத்துவக் கணக்காய்வு
- செயற்பாட்டுக் கணக்காய்வு
- 3 “Es” கணக்காய்வு

கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தின் தற்கால கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக நிதிக் கணக்காய்விற்கு நிகரான இடமொன்று செயலாற்றல் கணக்காய்விற்கும் வழங்கப்பட்டு அதன் மூலம் பொது முயற்சிகளிற்கு வழங்கப்படுகின்ற நிதிகளும் ஏனைய வளங்களும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் விரிவாக பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டில் பொது முயற்சிகள் தொடர்பில் வழங்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் செயாலற்றல் கணக்காய்விற்கு முக்கிய இடம் வழங்கப்பட்டிருந்தது. அத்துடன், தற்போது சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பாரிய சிக்கலை ஏற்படுத்தியுள்ள மற்றும் பொது மக்களின் கவனம் திரும்பியுள்ள சர்ச்சைக்குரிய சில சம்பவங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றினால் நாட்டிற்கும், பொதுமக்களிற்கும், சுற்றாடலுக்கும் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் தொடர்பில் சில செயலாற்றல் கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

பொது முயற்சிகளின் முகாமைத்துவம், அவற்றின் வினைத்திறன் மற்றும் பயனுறுதி என்பவற்றை முன்னேற்றுவதற்கு உதவுவதே பொது முயற்சிக் கணக்காய்வின் முக்கியமான நோக்கமாகும். நிதி மற்றும் தொழிற்பாட்டுக் குறைபாடுகள், முறைமைகளின் போதாத தன்மை அல்லது வினைத்திறனின்மை, குறைவான செயலாற்றல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இனங்காமை, என்பவற்றை வெளிப்படுத்துவதன் மூலமும் செயலாற்றலின் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியமங்களை அடைய முடியாமைக்குரிய காரணங்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலமும் இது எய்தப்படுகின்றது. நிதிச் செயலாற்றல் பௌதீக செயலாற்றலுடன் சம்பந்தப்பட்டுள்ளதுடன் விளைத்திறன் மற்றும் சிக்கன செயற்பாடுகள் மற்றும் வளங்களின் முகாமைத்துவம் போன்ற விடயங்கள் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்படுகின்றன. நிறுவனங்களின் முகாமைத்துவத்துடன் எனது உத்தியோகத்தர்களினால் நடாத்தப்பட்ட முறையான கூட்டங்களில் அவசியமாகவுள்ள முறைமைகள் மற்றும் செயற்பாடுகளை முன்னேற்ற வேண்டிய தேவை குறித்து கலந்துரையாடப்படுகின்றது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பாதகமான கண்டுபிடிப்புகளிற்கு பொதுமுயற்சிகளின் முகாமைத்துவமும் பணிப்பாளர் சபையும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்தல் முக்கியமானதாகும்.

நிதிச் செயலாற்றல்

கிடைக்கக்கூடியதாகவுள்ள தகவல்களின் படி 446 பொது முயற்சிகளிற்குரிய தகவல்கள் கீழே அட்டவணை 10 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

	நிறுவனத்தின் விபரம்	நிறுவன எண்ணிக்கை	நட்டத்தில் இயங்கிய நிறுவனங்கள்	இலாபத்தில் இயங்கிய நிறுவனங்கள்	தகவல்கள் சமர்ப்பிக்காத நிறுவனங்கள்
(i)	ஏனைய அபிவிருத்தி மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள்	61	20	23	18
(ii)	நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியங்கள்	62	6	24	32
(iii)	ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணிப்பு நிறுவனங்கள்	25	3	11	11
(iv)	விசேட வணிக முயற்சிகள்	55	8	24	23
(v)	பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் ஏனைய பயிற்சி நிறுவனங்கள்	70	25	26	19
(vi)	அரசாங்கத்திற்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட கம்பனிகள்	111	27	59	25
(vii)	விளையாட்டு சங்கங்கள்	62	-	-	-
	மொத்தம்	**446**	**89**	**167**	**128**

அட்டவணை 10 - 446 பொது முயற்சிகள் தொடர்பான தகவல்கள்

அட்டவணை 09 - 386 பொது மேற்படி தகவல்களின் படி, 2017 ஆம் ஆண்டின் 89 பொது முயற்சிகளின் நிதி விளைவுகள் பற்றாக்குறையை காண்பிப்பதுடன், அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 57,158 மில்லியனாகும். குறிப்பிடத்தக்களவு நிதிப்பற்றாக்குறையுடைய நிறுவனங்களாக இலங்கை மின்சார சபை, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை மற்றும் 12 பல்கலைக்கழகங்கள் ஆகியன காணப்பட்டன. முன்னைய ஆண்டின் நிதி விளைவுகளுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவனம், தேசிய விளையாட்டுக்கள் நிதியம், இலங்கை தொழில்நுட்ப அபிவிருத்தி சபை போன்றன நிதிப் பற்றாக்குறையினை குறைத்துக்கொள்வதில் வெற்றிகண்டிருந்தன.

அத்துடன், 167 நிறுவனங்கள் ரூபா 453,936 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி மகையினை ஈட்டியிருந்தன. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மற்றும் சுற்றுலாத்துறை மேம்படுத்தல் பணியகத்தின் நிதி மிகையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சியினைக் காண்பித்தது. அதேநேரம் தேசிய இரத்தினக்கல் தங்கநகைகள் அதிகாரசபை இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவகம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை நிதி விளைவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்திருந்தன.

நிலைபேறான அபிவிருத்தி

இயற்கை வளங்களின் விரைவான நுகர்வானது எதிர்கால சந்ததியினர் வளங்களின் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் அளவிற்கு இட்டுச் செல்லுகின்றது. கழிவுகளானது வளங்களின் நுகர்வின் உப உற்பத்தியாக சுற்றாடலின் சமநிலைக்கு அச்சுறுத்தலாக உருவாகின்றது. கட்டாய பொருளாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடலின் முயற்சிகள் தொடர்பான தகவல்கள் நிலைபேறான தன்மை நிலைபேறான அபிவிருத்தி என்ற கருத்தில் மையப்படுத்தப்படுகின்றது. பொருளாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு பரஸ்பர ரீதியில் இருக்க வேண்டும். என்பதுடன் அதற்காக முழு உலகமும் கவனஞ்செலுத்த வேண்டும் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

சுற்றாடல் அபிவிருத்தி மீது உலக அமைப்பால் குறிப்பிடப்பட்டவாறு அடிப்படை மனித தேவைகளை பூர்த்திசெய்தல், மனித வாழ்க்கைத்தரத்தை உயர்த்தல், சுற்றாடலைப் பாதுகாத்தல், உற்பத்திதிறனை உயர்த்தல் நிலைபேறான அபிவிருத்தியின் முதல் தர நோக்கங்களாக உள்ளடக்கப்படுகின்றது. அதனால், நிலைபேறான அபிவிருத்தியின் எண்ணக்கருவானது எதிர்கால சந்ததியினர் அவர்களுடைய தேவைப்பாடுகளை எதிர்கொள்ளும் வகையில் சாத்தியங்களை பேணுவதோடு மனிதர்களால் உயிர்கோணத்தை பயன்படுத்தல் மற்றும் முகாமை செய்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளானது, 2030 ஆம் ஆண்டளவில் சமமான கால வரையறையை எடுத்து வருவதாக வித்தியாசமான பொருளாதார, சமூக மற்றும் சூழல் கால வரையறைகளின் ஐக்கிய தேசத்தின் (யூன்) உறுப்பினர் நாடுகளிற்கான பார்வையுடன் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. 2015 செப்தெம்பரில் முன்னெடுக்கப்பட்ட ஐக்கிய தேசத்தின் நிலைபேறான அபிவிருத்தி உச்சிமாநாட்டில் பங்கெடுத்த அரச தலைவர்கள் அதற்கான உடன்படிக்கையை வெளிப்படுத்தியிருந்தனர். நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சித்திட்டமானது இது தொடர்பில் அடிப்படையாகவிருந்ததுடன், இது மனித இரக்கம், உலக மற்றும் செழுமை போன்றவற்றை இலக்கிட்டு அனைத்து

உறுப்பினர் நாடுகளால் அமுல்படுத்த வேண்டிய பொதுவான வெளிப்பாடாகவுள்ளது. ஐக்கிய தேசத்தின் (யூன்) உறுப்பினராகவுள்ள இலங்கையானது இந்த பொதுவாக வெளிப்பாட்டில் உறுதியாக இருந்தது. இதனால் 2017 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வு செய்யும் நிறுவனங்கள் தொடர்பில் இந்த பொது வெளிப்பாட்டின் அமுலாக்கலின் செயல்முன்னேற்றம் பரீட்சிக்கப்பட்டது. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அதற்கான செயல்முன்னேற்றம் போன்றவற்றை அடைந்து கொள்வதற்காக அரச நிறுவனங்களின் தயார்நிலை தொடர்பில் அரச கணக்காய்வுகள் மற்றும் அறிக்கையிடல் மேற்கொள்கையின் கவனமானது செலுத்தப்பட வேண்டுமென்பது விஷேட அவதானிப்பாக நிலைபேறான அபிவிருத்தி இனங்காணப்பட்டிருந்தது.

நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

பொது முயற்சிகளின் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசோட்டக் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தகவல்களின் பொழிப்பு என்பவற்றை உள்ளடக்கியதாக பொது முயற்சிகளால் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. நிறுவனங்களின் நிலைவரத்தினை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக்கூற்றுக்கள் தருகின்றனவா என்பது பற்றி கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுதந்திரமான உறுதிப்படுத்தலை வழங்குகின்றார். நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் வடிவில் இந்த உறுதிமொழி வழங்கப்படுகின்றது. பொது முயற்சிகளின் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றல் நிதிக்கூற்றுக்கள் ஊடாக நியாயாபூர்வமாக பிரதிநிதித்துவப்படுகின்றனவா அல்லது இல்லையா என்பது பற்றியும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் அல்லது தற்போது சம்பந்தப்பட்ட சர்வதேச கணக்கீட்டு நியாயங்களுடன் இணங்கியதாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் அல்லது நிதி அறிக்கையிடும் நியமங்களுடன் இணங்கிய வகையில் அவை உள்ளனவா அல்லது இல்லையா என்பதைபற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முடிவு அபிப்பிராயத்தினால் வெளிப்படுத்தப்படுகின்றது.

பொருட்படுத்தக்கூடிய தவறுகள் அல்லது இணக்கமின்மை மற்றும் நோக்கெல்லை வரையறைகளும் கணக்காய்வின் போது எழுகின்ற சட்டரீதியான தன்மைகளை கருத்திற்கொண்ட பின்னர் நான்கு வகையான கணக்காய்வு அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவையாவன

முனைப்பழியற்ற அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அல்லது இனக்கமின்மைகள் காணப்படாதவிடத்து வழங்கப்படுகின்றது.

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் (தவிர்த்த அபிப்பிராயம்)

நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அல்லது இனக்கமின்மைகள் காணப்படுமிடத்தும் அவை நிறுவனத்தின் நிதி விளைவினை திரிவுபடுத்தப்படுமளவிற்கு தாக்கம் செலுத்தாதிருப்பின் வழங்கப்படுகின்றது.

பாதகமான அபிப்பிராயம்

தெரிவிசெய்யப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள், அவை கையாளப்பட்ட முறை அல்லது நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களின் போதுமான தன்மை போன்ற விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கும் கணக்காய்விற்கும் இடையே பொருண்மையான / புரூடத்துவ இனக்கமின்மை மற்றும் தவறான கூற்றுக்கள் காணப்படுமிடத்து இந்த அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது.

மறுப்பு அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு முடியாதவாறு நோக்கெல்லை வரையறுக்கப்பட்டிருப்பின் இந்த அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கையில் அது மிகவும் நியாயமானதாக காணப்படுவதற்காக கணக்காய்வின் போது பயன்படுத்த முடியுமான கணனிமுறைக் கணக்காய்வு மென்பொருளினதும் உதவி பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

கணக்குகளை பரிசோதித்து பெற்றுக்கொள்ளடுகின்ற மாதிரிகளின் அடிப்படையிலும் ஒட்டுமொத்த பொருண்மையான விடயங்களின் சதவீதமாக திருத்தப்படாதுள்ள தவறான கூற்றுக்களின் கூட்டுத்தொகை சீராக்கப்பட்டு அதன் விளைவின் அடிப்படையிலும் கணக்காய்வு அபிப்பிராயம் தீர்மானிக்கப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டிற்காக 386 பொது முயற்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் மீது வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு கீழேயுள்ள அட்டவணை10 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு அபிப்பிராயத்தின் வகை	2017	2016
முனைப்பழியற்ற	80	70
முனைப்பழியுள்ள	113	108
மறுப்பு	20	06
பாதகமான	05	09
தீர்மானிக்கப்படாதவை	**228**	**144**

அட்டவணை 11 - பொது முயற்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முன்வைக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயங்கள்

நிலையான சொத்துக்களின் பதிவேடுகளின் பேணுகை

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் எனப்படுவது உற்பத்தியின் போது அல்லது சேவை வழங்கலின் போது பயன்படுத்தப்படுகின்ற மற்றும் ஏனைய தரப்பினருக்கு வாடகைக்கு விடுவதற்காக அல்லது நிர்வாக நடவடிக்கைகளிற்காக வைத்திருக்கப்பட்டுள்ள சொத்துக்களாவதுடன் அச் சொத்துக்கள் ஒரு அறிக்கையிடல் காலத்திற்கும் மேற்பட்ட காலப்பகுதிக்கு பயன்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்படுகின்ற நிலையான சொத்துக்களாகும். அத்துடன், நடைமுறைச் சொத்துக்கள் எனப்படுபவை செயற்பாட்டுச் சுற்றோட்டத்தில் விற்பனை செய்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அல்லது அறிக்கையிடல் காலப்பகுதியின் பின்னர் பன்னிரண்டு மாத காலத்தில் தேறுமென எதிர்பார்க்கப்படுகின்ற சொத்துக்களாகும். சகல நிலையான சொத்துக்களிற்கும் திருத்தமாக இலக்கமிட்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை உரியவாறு பேணாதிருப்பின் சொத்துக்களை சரிவர இனங்காண்பதற்கு முடியாது போவதுடன், அவை தொடர்பான பௌதீக மெய்மையாய்வும் தோல்வியில் முடியவடைகின்றமை அவதானிக்கப்பட்டது. ஒவ்வொரு நிலையான சொத்து தொடர்பான விபரங்களை வைத்திருக்கும் நடைமுறையால் சொத்துக்களின் கட்டுப்பாடு உறுதிப்படுத்தப்படுவதுடன் சொத்துக்கள் தவறாக பயன்படுத்தப்படுவதனை தடுப்பதற்கும் நிறுவனத்திற்கு உதவியாக அமைகின்றது. பெறுமானத்தேய்வை கணிப்பீடு செய்தல், குத்தகை மற்றும் காப்புறுதி நடவடிக்கைகளிற்காக வசதியளித்து சொத்துக்களின் சரியான பெறுமதியினை வைத்திருக்கும் செயற்பாடாகவும் உள்ளது. நிலையான சொத்துப் பதிவேடு முகாமைத்துவத்தின் தேவைகளுக்கு உகந்த வகையில் சரியான பூரணமான மற்றும் விளக்கமான அறிக்கைகளை

உருவாக்குகின்றது. கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் அரசாங்கத்திற்கு உரித்தாக அல்லது அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள பணங்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக பேணப்படுவதற்கு போதியளவில் முறைப்படியான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனையும் அவை அவ்வப்போது மெய்மையாய்வு செய்யப்படுவதனையும் உரிய பிரமாணங்கள் மற்றும் அறிவுறுத்தல்களிற்கு இணங்குகின்றன என்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். இருப்பினும் அநேக நிறுவனங்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை பேணாதிருப்பதுடன், நிதிப்பிரமாணம் 756 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வினையும் மேற்கொள்ளாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

வருடாந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்துச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்காக 215 பொது முயற்சிகள் தமது நிதிக்கூற்றுக்களை 2017 செப்தெம்பர் 30 அளவில் கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருந்தன. எனினும் 2017 திசெம்பர் 31 இல் நிதி ஆண்டு முடிவடைந்தது 09 மாதங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட 61 நிறுவனங்களால் அந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2002 ஆம் ஆண்டின் அமைச்சரவைத் தீர்மானத்திற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் கிடைத்த திகதியிலிருந்து 30 நாட்களிற்குள் குறித்த பொது முயற்சிக்கு கணக்காய்வு அறிக்கையினை சமர்ப்பிக்கக் கூடிய விதத்தில் பொது முயற்சிகளினால் அவற்றின் வருடாந்த நிதிக்கூற்றுக்களும் வரைவு ஆண்டறிக்கையும் குறித்த நிதி ஆண்டு முடிவுற்று 60 நாட்களிற்கிடையில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்க வேண்டுமென்றும் அவற்றின் வருடாந்த அறிக்கைகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் உரிய நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களிற்குகிடையில் பாராளுமன்றத்தில் முன்வைத்தல் வேண்டுமென்றும் திறைசேரிச் செயலாளரின் 2002 மே 24 ஆம் திகதிய பீஎவ்/பீஈ./21 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையினால் வலியுறுத்தப்பட்டிருந்தது.

தொழில்சார் பதவியணியினரை சேர்த்தல் மற்றும் தக்க வைப்பதற்கான சுய அதிகாரமின்மை

வர்த்தக தீர்மானங்களை மேற்கொள்கையிலும் பயிற்சிபெற்ற பதவியணியினரை சேர்த்துக்கொள்ளல் மற்றும் தக்கவைத்துக் கொள்கையிலும் தாக்கம் செலுத்துகின்ற பல்வேறு அங்கீகார தேவைப்பாடுகள் பணிப்பாளர் சபையின் செயற்பாடுகளிற்கும் பாதகமாக தாக்கம் செலுத்துகின்றன. இந்த வரையறைகள் காரணமாக அதிகமான முயற்சிகள் உயர்ந்த சம்பளங்ளுடன் ஒப்பந்த அடிப்படையில் உயர் தொழிலாளர்களை சேர்த்துக்கொள்கின்றமை அவதானிக்கப்பட்டது. தனியார் துறையுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த சம்பள அளவுத்திட்டம் காரணமாக விசேடமாக கணக்காளர்கள், பொறியியலாளர்கள் விலைமதிப்பீட்டாளர்கள் போன்ற பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கும் தொழில்சார் தகுதி வாய்ந்தவர்களை தக்கவைத்துக் கொள்வதற்கும் பொது முயற்சிகள் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன.

உள்ளூராட்சி

இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் 335 இல் 23 மாநகர சபைகள் நகர சபை கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 252) ஏற்பாடுகள் மூலமும், 41 நகர சபைகள் நகரசபை கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) ஏற்பாடுகள் மூலமும், 271 பிரதேச சபைகள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் ஏற்பாடுகள் மூலமும் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்படுவதுடன், இந்த உள்ளூராட்சி நிறுவனங்களினது 2017 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளைச் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் மற்றும் அந்த கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயங்கள் தொடர்பான பொழிப்பொன்று கீழே அட்டவணை 11 இல் காண்பிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சி நிறுவனங்களின் வகை	கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சபைகளின் எண்ணிக்கை	2018.09.30 இல் உள்ளவாறான கணக்குகளைச் சமர்ப்பித்த சபைகளின் எண்ணிக்கை	கணக்காய்வு அறிக்கை சமர்ப்பித்த சபைகளின் எண்ணிக்கை	2018.09.30 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு அபிப்பிராயம்			
				முனைப்பழியுள்ள	முனைப்பழியற்ற	மறுப்பு	பாதகம்
மாநகர சபை	23	23	18	17	-	01	-
நகர சபை	41	41	35	34	-	01	-
பிரதேச சபை	271	271	249	246	-	01	02
மொத்தம்	335	335	302	297	-	03	02

அட்டவணை 11 – உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் மற்றும் கணக்காய்வு அபிப்பிராயம

உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்ட சில முக்கியமான அவதானிப்புக்கள் பொழிப்பழிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்படுகின்றது.

- அம்பலாங்கொடை நகர சபையின் தலகாங்கொட சின்னப்பாலம் அருகில் இருந்து பெரிய பாலம் வரையான வீதி ஒரு பகுதி உடற்பயிற்சி ஒரு பாதையொன்று நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் வீதியை விரிவாக்கும் போது இதனை அகற்ற வேண்டியிருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அது தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் 2014 ஆம் ஆண்டின் போது உடற்பயிற்சி ஒரு பாதையொன்று நிர்மாணிப்பதற்கு ரூபா 2.10 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2018 மே 23 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் போது அந்த உடற்பயிற்சி ஒரு பாதை கீழிறங்கி இனங்காண முடியாத வகையில் புற்கள் வளர்ந்திருந்ததுடன் சில இடங்களில் மண் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிளிசறு செயற்திட்ட உதவியின் கீழ் கற்பிட்டிய பிரதேச சபையினால் இங்கலகந்த காணியின் 02 ஏக்கர் பயன்படுத்தப்பட்டு ரூபா 2.06 மில்லியன் செலவு செய்து கழிவுப்பொருள் முகாமைத்துவ கட்டிட தொகுதியின் நிர்மாண

நடவடிக்கைகள் 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும், 2018 மார்ச் 05 ஆந் திகதி வரையிலும் 10 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

- மாத்தறை பிரதேச சபையின் கேகந்துர சந்திக்கு அண்மையில் பிரதான பஸ்தரப்பிடம் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் ரூபா 7.20 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதற்காக மாத்தறை பிரதேச சபையின் நிதியத்திலிருந்து ரூபா 1.00 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் எவ்வித பயனுள்ள நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியிருக்கவில்லை.

- 2015 மார்ச் 17 ஆந் திகதி திஹகொட பிரதேச சபைக்கு ரூபா 4.50 மில்லியன் பெறுமதியான டிபர் வண்டியொன்று கிடைத்திருந்தது. அந்த டிபர் வண்டி 2017 யூன் 23 ஆந் திகதி சபையின் அங்கீகாரமின்றி அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே நட்டத்தில் ஈடுபட்டிருந்த போது விபத்திற்குட்பட்டிருந்தது. அவ்விடத்தினால் டிபர் வண்டிக்கு ரூபா 3.00 மில்லியனான நட்டமொன்று ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்டிருந்தது. எனினும் இடம்பெற்றிருந்த சேதத்தின் காப்புறுதியிலிருந்த மீளாய்வு செய்யவோ அல்லது விபத்திற்கு பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கோ பிரதேச சபையால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் டிபர் வண்டி திருத்தம் செய்யப்படாமல் பிரதேச சபையின் கராஜில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நிதி ஏற்பாடுகளின் கீழ் மாத்தறை மாநகர சபையால் 2016 ஆம் ஆண்டின்போது கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக உயிரியால் வாயு பிரிவொன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 6.44 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் 2018 யூன் 12 ஆந் திகதி வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்களை அடைந்து கொள்ளாமல் அப்பிரிவு கைவிடப்பட்டிருந்தது.

- 2016 ஆம் ஆண்டின் போது புறநெகும செயற்திட்டத்தின் மூலம் ரூபா 15.42 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட கடவைச்சாலை விலசுருவ பிரதேச செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அந்த கடவைச்சாலையில் 2017 திசெம்பர் மாதம் வரை 06 பிரதேசங்கள் மாத்திரம் தகனம் செய்யப்பட்டிருந்ததுடன் அத்திகதியின் பின்னர் கடவைச்சாலை செயற்பாடற்று காணப்பட்டது.

- 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1.16 மில்லியன் செலவிட்டு சியம்பலாண்டுவ பிரதேச சபையில் வாகன சேவை பிரிவொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பிரிவு எதிர்பார்த்த செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- வெலிகபொல பிரதேச சபையினால் செயற்படுத்தப்பட்டிருந்த 05 நீர்ச்செயற்திட்டங்கள் மூலம் வழங்கப்படும் செயற்திட்டத்தில் பாதகமான கொலிபோம் பக்டிரியா காணப்படுவதாக நீர் மாதிரி பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. ஆதலால் அச்செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் நீர் நாளாந்தம் சுத்திகரிக்கப்பட வேண்டியிருப்பதாகவும் சுகாதார வைத்திய அதிகாரியால் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், சபையின் உத்தியோகத்தர்களுக்கு சுத்திகரிப்பு தொடர்பான பயிற்சியொன்றும் வழங்கப்பட்டிருந்தது. எனினும் நீர் சுத்திகரிப்பு முறையாகவும் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- இரத்தினபுரி நகரில் அமைந்துள்ள மாநகர சபைக்குச் சொந்தமான சினிமா கொட்டகை குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2001 மே 01 ஆந் திகதி முதல் 2010 ஏப்ரல் மாதம் வரை ரூபா 1.95 மில்லியன் குத்தகைப்பணம் நிலுவையாக இருந்தது. மாநகர சபையினால் அந்நிலுவை குத்தகையை 2018 மே மாதம் வரையிலும் அறவிடுதவற்கு தவறியமை.

- புத்தளம் மாவட்டத்தின் 04 பிரதேச சபைகளில் மாத்திரம் ரூபா 7.40 மில்லியன் பெறுமதியான வாகனங்கள் மற்றும் நீர் பம்பிக்கூட உபகரணங்கள் வருடக் கணக்கில் விளைவற்றுக் காணப்பட்டன. அவ்வாறே வனாத்துவில்லு சபை அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 75 குழாய் கிணறுகள் நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் பராமரிப்பின்றி கைவிடப்பட்டிருந்தது.

- இப்பாகமுவ பிரதேச சபையினால் திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக 2017 மே 16 ஆந் திகதி ரூபா 6 மில்லியன் செலவிடப்பட்டு காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்நிலையத்தை நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்ததுடன் உக்கும் கழிவுகள் தனியார் காணியொன்றில் குழிகள் தோண்டி வெளியேற்றப்பட்டிருந்தது காணப்பட்டது.

- வயம்ப அபிவிருத்தி அமைச்சிடமிருந்து வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 4.42 மில்லியன் செலவிடப்பட்டு இப்பாகமுவ பிரதேச சபைக்குரிய கனேவத்தா நேலவ நிதியின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அந்நிர்மாணங்கள் பூர்த்தி ஒரு மாத காலம் கடந்திருக்கையில் 2017 ஆகஸ்ட் 29 ஆந் திகதி மற்றும் 2017 செப்தெம்பர் 25 ஆந் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வீதிக்கு இடப்பட்டிருந்த கல் மற்றும் மண் தோண்டியிருந்ததுடன் வீதியின் கொங்கிரிட் உடைத்து பரீட்சித்த போது கல் மற்றும் மணல் இலகுவாக வேறுபடுத்தக் கூடிய நிலையொன்று காணப்பட்டது.

- புத்தளம் மாவட்டத்தின் இரண்டு நகர சபைகள் மற்றும் 09 பிரதேச சபைகளில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வீதவரி மற்றும் வரிமுறையே ரூபா 198.06 மில்லியன் மற்றும் ரூபா 87.25 மில்லியன் நிலுவையாக காணப்பட்டது. அந்த சபைகளினால் நிறுவை வருமான சேகரிப்பு மந்த கெதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- கொழும்பு மாநகர சபையினால் சத்துட்டு உயனவிற்காக 2018 ஏப்ரல் 18 ஆந் திகதி ரூபா 27.24 மில்லியன் செலவு 15 டொம் கார் கங்காரு ரைடர் விளையாட்டு உபகரணமொன்று மற்றும் சிறுவர் புகையிரதம் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் கங்காரு ரைடர் மற்றும் சிறுவர் புகையிரதம் உரிய விதந்துரைகளுக்கு இணங்காமையால் பொருத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் கங்காரு ரைடர் விளையாட்டு இயந்திரம் செயற்பாடற்று ஒட்டப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. எனினும் மாநகர சபையினால் அதற்காக தரச் சான்றிதழ் வழங்கி மொத்தப் பெறுமதியும் வழங்குனருக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே கங்காரு ரைடர் விளையாட்டு உபகரணம் பொருத்தப்பட்டதன் பின்னர் ஒரு மாதமளவிலான குறுகிய காலமொன்றினுள் பொது மக்கள் பயன்பாட்டின் போது ஒரு விளையாட்டு தொகுதி மற்றும் சில ஆசனங்கள் உடைந்து அபாயகரமான நிலைமையில் காணப்பட்டது.

- கொழும்பு மாநகர சபையினால் நகரில் காணப்பட்ட 100 ஆண்டுகளுக்கு மேல் பழமையான மரங்களின் தண்டுகளையும் வேர்களையும் அளப்பதற்கும் பரீட்சிப்பதற்கும் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 7.4 மில்லியன் செலவு செய்யப்பட்டு இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டது. அவ்வியந்திரத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் தரவுகளை பகுப்பாய்வு செய்து தீர்மானிப்பதற்காக அனுபவம் வாய்நத உத்தியோகத்தர்கள் (தாவர வைத்திய - Arborists) போன்ற சபை இல்லாமையால் புதிய இயந்திரம் 2018 யூன் 13 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விஹாரமஹாதேவி பூங்கா அலுவலகத்தில் காணப்பட்டது.
- பொரலஸ்கமுவ நகர சபையின் 2017 ஆம் ஆண்டின் போது வேறாக்கப்பட்ட 493.62 தொன் கழிவுப் பொருள் மற்றும் வேறாக்கப்படாத 9,653.27தொன் கலப்பு கழிவுப்பொருள் கரதியனாறு கழிவுப்பொருள் பிரிவிற்கு கையளிக்கப்பட்டிருந்தது.அவ்வேறாக்கப்பட்ட அளவு வேறாக்கப்பட்ட கழிவு பொருள் அளவில் 5.1 சதவீதமாக இருந்தது. கழிவுப்பொருள் வேறாக்கல் உயர்மட்டத்தில் இல்லாதிருந்ததுடன் கழிவுப்பொருள் சேகரிப்பு முறைப்படி முகாமை செய்யப்படாமையால் ரூபா 7.24 மில்லியன் கூடுதலாக செலுத்துவதற்கு சபைக்கு நேர்ந்திருந்தது.
- இணையத்தளத்திலிருந்து பெற்றுக் கொண்டு தகவல்கள் பட்டியல்களின் பிரகாரம் நீர்கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் சுற்றுலா சபையின் அங்கீகரிக்கப்பட்ட 153 ஹொட்டெல்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் தங்குமிட விடுதிகள் காணப்பட்டன. அந்த ஹொட்டெல்கள் சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் தங்குமிட விடுதிகள் 81 இற்காக அனுமதிப்பத்திரங்கள் மாநகர

- செயற்திட்டம் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டுமென உள்ளூராட்சி மன்ற ஆணையாளரினால் ஆலோசணை

- கட்டான பிரதேச சபையினால் வளிசிங்க ஹரிச்சந்திர விளையாட்டரங்கு அமைந்தள்ள காணி, 2002 நவம்பர் 01 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் கம்பஹா மாவட்ட சங்கத்திற்கு 30 ஆண்டு காலப்பகுதிக்கு கிடைக்க வேண்டிய பகுதி செலுத்தப்பட்டிருந்தமை. விளையாட்டுப் போட்டிகளுக்காக வழங்குவதன் மூலம் கிடைக்கும் பணத்தில் சபைக்கு கிடைக்க வேண்டிய பகுதியை செலுத்தாமை. உப குத்தகை வழங்கவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமை, மற்றும் ஆரம்பத்தில் செலுத்திய ரூபா 180,000 மாத்திரம் கிடைத்ததன் பேரில் 2007 ஒக்தோபர் 27 ஆந் திகதி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உரிய விளையாட்டு கழகத்தினால் உடன்படிக்கை இரத்து செய்யப்பட்ட திகதி முதல் 10 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக சபைக்கு எவ்வித தொகையொன்று செலுத்தப்படாமல் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததுடன் அதற்கு எதிராக சபையினால் எவ்வித செயற்பாடொன்று இருக்கப்பட்டிருக்கவில்லை மேலும் 5.5840 ஹெக்டேயரான விளையாட்டரங்குடன் 8.8527 ஹெக்டேயர் அளவிலான மொத்தக் காணியும் 2002 ஆம் ஆண்டு 2018 யூலை மாதம் வரையில் எவ்வித அபிவிருத்தியும் செய்யப்படாமல் இருந்ததுடன் இதனால் சபைக்கு பாரியளவு வருமானமொன்று உழைக்க கூடிய சந்தர்ப்பமொன்று இல்லாதிருந்தது.

  சபையினால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

- வத்தளை நகரசபையினால் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 9.48 மில்லியன் செலவு செய்து 01 ஏக்கர் 31.90 பேர்ச் காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அக்கணியில் கழிவுப் பொருட்களை வேறாக்கும் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டு கழிவுகளை முறையாக வெளியேற்றும் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக 2016 ஏப்ரல் 02 ஆந் திகதி மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சிலிருந்து ரூபா 1.00

மில்லியன் வழங்கப்பட்டிருந்த போதிலும் காணியைச் சுற்றி சுவரொன்று மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

- அம்பாறை மாவட்டத்தின் 12 உள்ளூராட்சி மன்றங்களில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 18.73 மில்லியன் கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வருமானத்திற்கு எடுப்பதற்கு மீளாய்வாண்டின் இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
- திம்புலாகல பிரதேச சபையினால் புறநெகுட்டு செயற்திட்டத்தின் கீழ் ரூபா 8.18 மில்லியன் செலவு செய்து 2015 ஆம் ஆண்டில் திரிபுர நீர் செயற்திட்டத்தின் நீர் தாங்கியொன்று நிர்மாணிக்க்ப்பட்டிருந்தது. அந்நீர்த்தாங்கி உரிய தரத்தின் பிரகாரம் தீர்மானிக்கப்படாமையால் தாங்கியின் மூடியை பொருத்தும் கொங்ரீட் தளம் 2018 பெப்ரவரி மாதத்தின் போது உடைந்து வீழ்ந்திருந்தது. இதனால் நீர் செயற்திட்ட பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டத்திற்கு பொருத்தியிருந்த மோட்டாரின் கன்டரின் வேல்வி செயற்படாமையால் பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்பட்டது.
- புறநெகும செயற்திட்டத்தின் மூலம் ரூபா 14.80 மில்லியன் செலவு செய்து 2014 ஆம் ஆண்டின் போது கல்நேவ பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த கல்நேவ வாரச்சந்தை கட்டிடம் மற்றும் மலசலகூடம் உத்தேச செயற்பாடுகளுக்காக எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. மேலும் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 28.50 மில்லியன் செலவிடப்பட்டு கல்நேவ நகரில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பொது கேட்போர்கூடம் 2018 யூன் 20 ஆந் திகதி வரையிலும் பொது நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.
- வடக்கு கிழக்கு உள்ளூராட்சி மன்ற சேவைகளை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 21.22 மில்லியன் செலவு செய்து தம்மன்கட்டுவ பிரதேச சபையின் கிசிபதன சிறுவர் பூங்கா 2017 பெப்ரவரி 17 ஆந் திகதி நிர்மான வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்காக வடமத்திய மாகாண சபை நிதியத்திலிருந்து ரூபா 4.00 மில்லியன் செலவு செய்து விளையாட்டு உபகரணங்கள் (Play Item) கொள்வனவு செய்யப்பட்டு 2018 ஏப்ரல் 10 ஆந் திகதி வரை ஓராண்டிற்கு மேற்பட்ட அமைச்சு கடந்திருந்த போதிலும் அப் பூங்கா பொது மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.
- 2011 ஆம் ஆண்டின் தேசிய கல்நேகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வேலை ஆரம்பிக்கப்பட்ட ஹெரகுப் பொத்தான பிரதேச சபையின் வாகல்கட தேசிய நீர் முன்னேற்றத் திட்டத்திற்காக ரூபா 3.54 மில்லியன் செலவு செய்யப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் பிரதேச மக்களின் நிர் தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 3.95 மில்லியன் செலவு செய்து பிளிசறு செயற்திட்ட வேலைகள் 2017 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கு மின்சாரம் மற்றும் நிதி வழங்காமை காரணமாக 2018 ஏப்ரல் 20 ஆந் திகதி வரையிலும் பொது மக்கள் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருக்கவில்லை.

வெளிநாட்டு நிதி உதவிச் செயற்திட்டங்கள்

2017 ஆம் ஆண்டிற்கான நிதி அமைச்சின் ஆண்டறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் திரட்டிய பாதீட்டு நட்டம் ரூபா 733.4 பில்லியனைத் தீர்ப்பதற்காக அரச உள்நாட்டு நிதி மூலங்களிலிருந்து ரூபா 294.3 பில்லியன் வெளிநாட்டு மூலங்களிலிருந்து ரூபா 439.2 பில்லியன் அரச கடனாக பெறப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் போது வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட கடன் தொகையில் ரூபா 391.9 பில்லியன் தேறிய கடன் அளவுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு கடன் எடுப்பனவுகளில் 12 சதவீத அதிகரிப்பொன்றைக் காணலாம்.

மீளாய்வாண்டின் போது அரச வெளிநாட்டு அபிவிருத்தி தரப்பினரிடமிருந்து மற்றும் கடன் வழங்கும் முகவர் நிறுவனத்துடன் 52 புதிய வெளிநாட்டு நிதியீட்ட இணக்கப்பாட்டு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், அதனூடாக எதிர்வரும் வருடங்களில் ஐ.அ.டொ 5,022.1 மில்லியன் தொகை பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. 28 நிதிய உதவி உடன்படிக்கைகள் மூலம் எதிர்வரும் வருடங்களில் பெற்றுக்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த ஐ.அ.டொ 2,281.40 மில்லியன் தொகையும் மற்றும் 24 மானிய உதவி உடன்படிக்கைகள் மூலம் எதிர்வரும் வருடங்களில் பெற்றுக் கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த ஐ.அ.டொ 240.7 மில்லியனைக் கொண்டிருந்தது. இக்கடன் மற்றும் மானியங்களாக கிடைக்கும் பணத்தில் 29 சதவீதம் நீர் வழங்கல் மற்றும் ஆரோக்கிய வசதிகள் மேம்படுத்துவதற்காகவும் பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்திக்காக 18 சதவீதத்தினை முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டின் இறுதியளவில் 153 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டவாறு இருந்ததுடன், அவற்றில் 123 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் வருடாந்த நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் வெளிநாட்டு அபிவிருத்தி தரப்பினரிடமிருந்து மற்றும் கடன் வழங்கல் பிரதிநித்துவ நிறுவனங்கள் மூலம் அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களினூடாக கிடைத்திருந்த ஐ.அ.டொ 1,638.2 மில்லியன் தொகையான கடன் மற்றும் ஐ.அ.டொ 30.5 மில்லியன் மானியங்கள் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இந்திய கடன் முறைமை, சீன அரசின் உதவிகள் மற்றும் ஏனைய இரு தரப்பினர் கடன் முன்மொழிவு முறைமைகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டவாறு இருந்த செயற்திட்டங்களுக்குரிய கடன் உடன்படிக்கைகளில், வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த நிபந்தனைகள் அத்தியாவசியாமானதொரு தேவைப்பாடாக குறிப்பிடப்பட்டிராமையால் அந்த செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டில் வெளிநாட்டு அபிவிருத்தி தரப்பினரிடமிருந்தும் கடன் வழங்கும் முகவர் நிறுவனங்கள் மூலமும் செயற்படுத்தப்பட்டிருந்த வெளிநாட்டு

செயற்திட்டங்கள் மற்றும் அவற்றின் நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் தொடர்பான நிலைமை பின்வரும் வரைபடம் 13 இல் காட்டப்பட்டுள்ளது.



வரைபு 11….. ஆண்டில் வெளிநாட்டு அபிவிருத்தி தரப்பினரிடமிருந்து மற்றும் கடன் வழங்கல் முகாமைத்துவ நிறுவனங்கள் மூலம் செயற்படுத்தப்பட்டிருந்த வெளிநாட்டு செயற்திட்டங்கள் மற்றும் அவற்றின் நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்காக சமர்ப்பித்தல்

வெளிநாட்டு உதவி செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் தனது நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக ஒரே மாதிரி கணக்கு கொள்கைகள் பின்பற்றப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட பிரதான குறைபாடொன்றாக இருந்தது. வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களாக ஆண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு செயற்திட்டங்களின் நிதி நிலைமைக் கூற்றுக்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்படுவது அவதானிக்கப்பட்டது. வெளிநாட்டு முகவர் நிறுவனங்களிலிருந்தும் இலங்கை அரசிடமிருந்து செயற்திட்டங்களுக்காக முதலீடு செய்யப்படும் தொகை மூலதனம் மற்றும் மீண்டெழும் மானியங்களாக வெவ்வேறாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்படாமல் ஆண்டில் முதலீடாக கிடைத்திருந்த முழுத்தொகையையும் மூலதன மானியமாக நடவடிக்கை எடுத்ததன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் அதில் பிரதிநிதித்துவப்படுத்திய சொத்துக்களின் பெறுமதி மிகை கணிப்பிடப்பட்டிருந்தது.

வெளிநாட்டு மானிய செயற்திட்டங்களில் செயற்திட்ட காலப்பகுதி எல்லைக்குள் முடிவடைந்ததன் பின்னரும் சில செயற்திட்டங்கள் முகாமைத்துவ

அலகினால் தொடர்ந்து இயங்குதல் என்ற எண்ணக்கருவினை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. நிதி மற்றும் ஊடக அமைச்சினால் செயற்திட்டத்தின் இறுதி நிதியாண்டின் போது நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய முறை தொடர்பாக முறையான ஆலோசணைகள் வழங்கப்படாமைஇ காரணமாக இந்நிலைமை உருவாகியிருந்தது. வெளிநாட்டு நிதியம் பயன்படுத்தப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் போன்ற சொத்துக்கள் செயற்திட்டத்தின் செயற்பாடு கால எல்லை முடிவடைந்ததன் பின்னர் உரிய செயற்படுத்தும் நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டதன் பின்னர் அவை எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கான பரிசோதனைகள் வரிசை அமைச்சு மேற்கொள்ளப்படாமை பிரதான குறைபாடொன்றாக இருந்தது.

செயற்திட்டங்களை செயற்படுத்தும் வெவ்வேறு நிறுவனங்களுக்கு இடையே முறையான கூட்டிணைப்பு இல்லாமை.

மீளாய்வாண்டின் போது ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் நிதியுதவி அளிக்கப்படுகின்ற 11 செயற்திட்டங்களின் அமுலாக்கும் முகவர் நிறுவனங்களாக இலங்கை மின்சார சபை செயற்பாட்டு வருவதுடன் அச் செயற்திட்டத்தின் ஆக்ககூறுகள் சபையின் வெவ்வேறு பிரிவுகள் மூலம் செயற்படுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும் இந்த துறைகளுக்கு இடையே எவ்வித கூட்டிணைப்பு இடம் பெறாமை காரணமாக செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதில் தாமதம் இடம் பெற்றிருந்ததுடன் அவற்றின் முன்னேற்றமும் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை அடைந்திராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

இலங்கையின் தொழில் கல்வித் துறையின் தரம், சர்வதேச அங்கீகாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் என்பவற்றின் கடன் உதவியின் அடிப்படையில் தொழில் பயிற்சி அமைச்சின் கீழான 09 நிறுவனங்கள் ஊடாக திறன் துறை அபிவிருத்தி செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வந்தது. எவ்வாறாயினும் இச் செயற்திட்டங்களை செயற்படுத்துகின்ற பல்வேறு அரச நிறுவனங்களுக்கிடையே முறையான கூட்டிணைப்பொன்று இல்லாமை காரணமாக செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவச் செயற்திட்டம் தொடர்பாக நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு, கொழும்பு மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகிய நிறுவனங்களுக்கு இடையே முறையான கூட்டிணைப்பொன்று இடம் பெறாமை காரணமாக செயற்திட்டத்தின் கீழான செயற்பாடுகளை இடை நிறுவத்துவதற்கு அல்லது மாற்றுவதற்கு நேர்ந்திருந்தது. கொழும்பு துறைமுக நகர

நிர்மாணம் மற்றும் கொழும்பு கோட்டை பிரதேசத்தின் அதன் காலரீதியான அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை செயற்படுத்துவதில் தாமதம் ஏற்பாட்டிருந்தது.

வெளிநாட்டுதவி குறைப்பயன்பாடு

கடன் வழங்கும் வெளிநாட்டு முகவர் நிறுவனங்களினால் வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியத்தின் பயன்பாடு கீழ் மட்டத்தில் காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்தப்படாத நிதியத்திற்காக மேலதிக வட்டிக் கொடுப்பனவொன்றை கொடுப்பனவு செய்வதற்கு நேர்ந்திருந்ததுடன் செயற்திட்டத்தின் கால நீடிப்பு ஆபத்தொன்றும் காணப்பட்டமை, பணவீக்க தாக்கம் காரணமாக மதிப்பிடப்பட்ட கிரயத்தின் அடிப்படையில் செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு முடியாமல் போன்றவை காரணமாக பாதகமான விளைவுகள் உருவாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. நிதியப் பயன்பாடு குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை சில பிரதான செயற்திட்டங்கள் தொடர்பாக அட்டவணை 12 இல் தரப்பட்டுள்ளது.

செயற்திட்டத்தின் பெயர்	வெளிநாட்டு முகவர் நிறுவனம்	கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியிடலுக்கு இணங்கிய தொகை	2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான	
			பயன்படுத்தப்பட்டிருந்த தொகை	செயற்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு எடுத்திருந்த காலம்
		ஐ.அ.டொலர்	ஐ.அ.டொலர்	வருடங்கள்
காலநிலை தாக்கங்களை குறைக்கும் செயற்திட்டம்	ச.அ.ச	110.00	49.52	3
யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் ஆரோக்கிய திட்டம்	ஆ.அ.வ	76.45	28.55	7
நீர் வடிகாலமைப்பு மற்றும் ஆரோக்கிய மேம்படுத்தல் செயற்திட்டம்	ச.அ.ச	165	23.70	2
ஒன்றிணைந்த வீதி முதலீட்டு வலையமைப்பு	ஆ.ச.வ	800	291.42	3½

நிகழ்ச்சித்திட்டம்				
கொழும்பு தலைநகரை அண்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்டம்	ச.அ.ச	213	87.70	5½
கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டம்	ஜ.ச.அ.நி	14,087 (ஜப்பான் ஜென்)	3,414.52 (ஜப்பான் ஜென்)	7

அட்டவணை 12..... நிதியப் பயன்பாடு குறைந்த மட்டத்தில் காணப்படுகின்ற செயற்திட்டங்கள்

பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் மந்தகதியில் காணப்பட்ட பல வெளிநாட்டு செயற்திட்டங்கள் காணப்பட்டதுடன் திட்டமிடலில் பலவீனங்கள், செயற்திட்டங்கள் விடயப்பரப்பு பிற்காலத்தில் திருத்தம் செய்யப்படல், பொதுமக்கள் எதிர்ப்பு, காணி கையேற்றலில் தாமதம் நிர்மாண ஒப்பந்தகாரர்களின் இயலாத் தன்மை, பெறுகை நடைமுறையின் பலவீனங்கள், போதியளவு மேற்பார்வை காணப்படாமை மற்றும் தொழில்நுட்ப அறிவுடன் கூடிய நபர்கள் செயற்திட்ட முகாமைத்துவத்திற்காக ஆட்சேர்ப்பு செய்வதில் உள்ள சிக்கல்கள் போன்ற காரணங்கள் அதற்கு காரணமாக இருந்தன.

வெளிநாட்டுதவி செயற்திட்டங்களில் நிதிக்கட்டுப்பாடு முறைமையின் பலவீனங்கள்

2016 மார்ச் 24 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 2.2.4 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்திட்ட பணிப்பாளர் உள்ளடங்களாக வெளிநாட்டுதவி செயற்திட்ட செயற்பாட்டு பிரிவிக்கான பதவியணியினருக்கு வெளிநபர்கள் ஆட்சேர்க்கப்பட வேண்டிய போதிலும், அதற்காக முடியுமான அளவு திறந்த அறிவித்தலின் பேரில் விண்ணப்பங்கள் கோருவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எனினும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபை இலங்கை மின்சார சபையின் மூலம் செயற்படுத்தபட்டிருந்த செயற்திட்டங்களின் செயற்திட்ட பணிப்பாளர்கள் அந்நிறுவனங்களின் உள்ளக பதவியணியிலிருந்து விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களாக இருந்தனர். இதன் காரணமாக செயற்திட்டங்கள் செயற்பாடுகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்காக தேவையான புதிய தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ அறிவு உரிய செயற்திட்டங்களுக்கு வருவதில் பலவீனங்கள் காணப்பட்டமை.

2016 யூன் 10 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மொத்த செயற்திட்டக் கிரயம் ஐ.அ.டொலர் 10 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட வெளிநாட்டு செயற்திட்டங்களுக்காக உள்ளக

கணக்காய்வு நடவடிக்கைகளை செயற்திறனாக நிறைவேற்றுவதன் ஊடாக நிதிக்கட்டுப்பாட்டு முறைமையை பலப்படுத்தப்பட வேண்டிய போதிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபை இலங்கை மின்சார சபை என்பவற்றினால் செயற்படுத்தப்பட்ட 89 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களுக்காக வேறாக உள்ளகக் கணக்காய்வாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்குறித்த நிறுவனங்களின் உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலமும் உரிய வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் செயற்பாடுகள் கணக்காய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் நிதிக்கட்டுப்பாடுகள் தொடர்பாக குறைபாடுகள் சீர்செய்யப்படாமல் காணப்பட்டன.

செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினால் செயற்திட்டங்களின் நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டோ அல்லது பொருள் மெய்மையாய்வுகள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்படாதிருந்தமை பொது இலட்சணமாக காணப்பட்டன. இதன் காரணமாக செயற்திட்டங்களின் சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் செயற்திட்டத்தின் காலம் முடிவடைந்ததன் பின்னர் உரிய சொத்துக்கள் மற்றும் செயற்திட்டத்தை செயற்படுத்தும் நிறுவனங்களுக்கு கையளிப்பதில் சிக்கல்கள் தோன்றியிருந்தன.

செயற்திட்ட முகாமைத்துவ கண்காணிப்பு திணைக்களத்தின் செயலாற்றல்

நிதி அமைச்சின் கீழான திணைக்களமொன்றான செயற்திட்ட முகாமைத்துவ கண்காணிப்பு திணைக்களம் 2016 ஆம் ஆண்டிலிருந்து அபிவிருத்தி கடமைகள் தொடர்பாக அமைச்சின் கீழ் கையளிக்கப்பட்டிருந்ததுடன் இது காரணமாக திணைக்களத்தின் கடமைக்குரிய கடன் வழங்கும் முகவர் நிறுவனம் மற்றும் செயற்திட்ட முகாமையாளர்கள் கூட்டிணைப்பு நடவடிக்கைகளுக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே வெளிநாட்டு வள திணைக்களம் தேசிய பாதீட்டு திணைக்களம் போன்ற நிதி மற்றும் ஊடக அமைச்சின் கீழான ஏனைய திணைக்களுங்களுடன் மேற்குறித்த திணைக்களத்தின் கூட்டிணைப்பு விலகியதன் காரணமாக செயற்திட்ட மேற்பார்வை நடவடிக்கைகள் பலவீனமாக காணப்பட்டன. மேலும் செயற்திட்டங்களின் கண்காணிப்பு அமைச்சில் செயற்படுத்தப்படும் உள்ளகக் கணக்காய்வு பதவியணியினருடன் செயற்திட்ட நடவடிக்கைகள் தொடர்பாக இத் திணைக்களம் போதியளவு கூட்டிணைப்பொன்று பேணப்படாதிருந்தமை கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

வங்கித்துறை

வங்கித்துறை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் (LCBs) மற்றும் உரிமம் பெற்ற விசேட வங்கிகள் (LSBs) என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் வங்கித் துறையில் 25 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் 7 உரிமம் பெற்ற விசேட வங்கிகளும் காணப்பட்டன. மொத்த உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடையே 12 வெளிநாட்டு வங்கிகளும் காணப்பட்டன. வங்கிச் சேவைகளை முன்னேற்றுதல் மற்றும் நாடு முழுவதற்கும் தமது வலைப்பின்னலையும் நுழைவினையும் விரிவுபடுத்துவதன் மூலம் வங்கித் துறையினால் தொடர்ச்சியான பொருளாதாரச் செயற்பாடுகளிற்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்யப்பட்டது. அதற்கமைய, 2017 ஆம் ஆண்டில் புதிதாக 43 கிளைகள் திறக்கப்பட்டிருந்ததுடன் 684 தன்னியக்க ரெலர் இயந்திரங்களும் தாபிக்கப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான வங்கிகளினதும் கிளைகளினதும் பரம்பல் அட்டவணை 13 இல்

வகுதி		வங்கிகள்	கிளைகள்	மாணவர் அலகுகள்	சேமிப்பு	தன்னியக்க ரெலர் இயந்திரங்கள்
LCBs	உள்நாட்டு வங்கிகள்	12	2816	2639		4083
	வெளிநாட்டு வங்கிகள்	12	53			
LSBs	தேசிய மட்டத்திலான பிரதேச அபிவிருத்தி வங்கிகள்	1	265	28		333
	தேசிய மட்டத்திலான சேமிப்பு வங்கிகள்	1	259			
	வீடமைப்பு நிதி நிறுவனங்கள்	2	64			
	தனியார் சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகள்	3	103			

அட்டவணை 13 ..... - 2017 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான வங்கிகளினதும் கிளைகளினதும் பரம்பல்.

மூலம் - இலங்கை மத்திய வங்கி (திருத்தியமைக்கப்பட்ட அல்லது தற்காலிகமான)

சொத்துக்கள்

வங்கித்துறையின் சொத்துக்கட்டமைப்பு 2016 ஆம் ஆண்டளவில் 12 சதவீதத்திலிருந்து 2017 ஆம் ஆண்டளவில் ஆண்டுக்காண்டு வளர்ச்சியடைந்து 13.8 சதவீதத்தினை அடைந்திருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 10 ரில்லியன் ஆக காணப்பட்டது. ஒட்டுமொத்த சொத்துக்களின் கட்டமைப்பு பிரதானமாக கடன்கள் மற்றும் முற்பணங்களை உள்ளடக்கியிருந்ததுடன், அது வங்கித்துறையின் சொத்துக்களில் 62.5 சதவீதப் பெறுமதியினைக் கொண்டிருந்தது. பிரதான இரண்டு அரசாங்க வங்கிகளான இலங்கை வங்கியினதும் மக்கள் வங்கியினதும் சொத்துக்கள் முறையே ரூபா 1952 பில்லியன் மற்றும் ரூபா 1467 பில்லியனாக காணப்பட்டதுடன், அது வங்கித் துறையின் மொத்தச் சொத்துக்களில் 33.2 சதவீதமாகக் காணப்பட்டது.



அட்டவணை 12..... - வங்கித்துறையின் செயற்பாடற்ற முற்பணங்கள்

மூலம் - இலங்கை மத்திய வங்கி (திருத்தியமைக்கப்பட்ட அல்லது தற்காலிகமான)

செயற்பாடற்ற முற்பணங்கள்

வங்கித்துறையின் ஒட்டுமொத்த செயற்பாடற்ற முற்பணங்களின் விகிதம் 2017 ஆம் ஆண்டின் போது செயற்பாடற்ற முற்பணங்கள் ரூபா 18.3 பில்லியன் இனால் அதிகரிப்பொன்று காணப்பட்ட போதிலும், 2016 ஆம் ஆண்டின் 2.6 சதவீதத்திலிருந்து 2017 ஆம் ஆண்டளவில் 2.5 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. பிரதான இரண்டு அரச வங்கிகளான இலங்கை வங்கியினதும் மக்கள் வங்கியினதும் செயற்பாடற்ற முற்பணங்கள் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் முறையே ரூபா 34 பில்லியன் மற்றும் ரூபா 19.5 பில்லியன் ஆகக் காணப்பட்டதுடன், அதற்கமைய செயற்பாடற்ற முற்பணங்களின் விகதங்கள் முறையே 2.8 மற்றும் 1.9 சதவீதமாகக் காணப்பட்டன. அட்டவணை 13 வங்கித்துறையின் பொறுப்புக்கள் மற்றும் மூலதனம் விபரமாக தரப்பட்டுள்ளன.



அட்டவணை 13..... - வங்கித்துறையின் செயற்பாடற்ற முற்பணங்கள்

மூலம் - இலங்கை மத்திய வங்கி (திருத்தியமைக்கப்பட்ட அல்லது தற்காலிகமான)

பொறுப்புக்கள் மற்றும் மூலதனம்

வாடிக்கையாளர்களின் வைப்புக்கள் தொடர்ந்தும் பொறுப்புக்கள் என்ற வகையில் பிரதான நிதி மூலமாக அமைந்திருந்ததுடன் அது வங்கித் துறையின் மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் மூலதனத்தில் 71.9 சதவீத பெறுமதியாகக் காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் இரண்டு பிரதான அரச வங்கிகளான இலங்கை வங்கியினதும் மக்கள் வங்கியினதும் வைப்புக்கள் முறையே ரூபா 1,511 பில்லியன் மற்றும் ரூபா 1,244 பில்லியனாக காணப்பட்டதுடன் அது வங்கித் துறையின் மொத்த வைப்புக்களில் 37.2 சதவீத பெறுமதியாக காணப்பட்டது.

வெளிநாட்டுக் கடன் பெறுதல்கள் ரூபா 290.7 பில்லியனாலும் ரூபா கடன் பெறுதல்கள் ரூபா 66 பில்லியனாலும் குறைவடைந்திருந்தமை காரணமாக வங்கித்துறையின் ஒட்டுமொத்த கடன் பெறுதல்கள் 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் 5.3 சதவீத பாதகமான வளர்ச்சியினைக் காண்பித்திருந்தது. இருப்பினும், ஒட்டுமொத்த கடன் பெறுதல்களிற்கான உயர் பெறுமதியாகிய 62.6 சதவீதத்தினை வெளிநாட்டுக் கடன் பெறுதல்கள் வழங்கியிருந்தன. இரண்டு பிரதான அரச வங்கிகளின் கடன் பெறுதல்கள் ரூபா 370 பில்லியனாகக் காணப்பட்டது. அது 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் பெறப்பட்டிருந்த ரூபா 254.3 பில்லியன் வெளிநாட்டுக் கடன் பெறுதல்களையும் ரூபா 114.76 பில்லியன் ரூபா கடன் பெறுதல்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.



அட்டவணை 14 ..... - வங்கித்துறையின் பொறுப்புக்கள் மற்றும் மூலதனம்

வங்கித்துறையின் செயற்பாடற்ற முற்பணங்கள்

வைப்புக்கள்

இலங்கை ரூபாவில் பெயரிடப்பட்டு வைப்புச் செய்யப்பட்ட கால வைப்புக்களில் அதிகரிப்பு காரணமாக முக்கியமான ஆண்டின்போது வங்கித்துறையின் வைப்புக்களின் அடிப்படை அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டின் 23.8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் கால வைப்புக்களில் 23.3 சதவீத அதிகரிப்பொன்று அறிக்கையிடப்பட்டது. இரண்டு பிரதான அரச வங்கிகளின் கால வைப்புக்கள் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,683 பில்லியனாகக் காணப்பட்டது. அதன் விளைவாக, மொத்த வைப்புக்களின் சதவீதமொன்றாக கால வைப்புக்களின் பங்கு 2016 ஆம் ஆண்டில் 60.6 சதவீதத்திலிருந்து 2017 ஆம் ஆண்டில் 63.6 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. விபரம் அட்டவணையில் 15 இல் தரப்பட்டுள்ளது.



அட்டவணை 15..... - வங்கித்துறையின் வைப்புக்கள்

மூலம் - இலங்கை மத்திய வங்கி (திருத்தியமைக்கப்பட்ட அல்லது தற்காலிகமான)

இலங்கை மத்திய வங்கி

இலங்கை பணத்தின் நிர்வாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்கமைப்பு, நிதிசார் மற்றும் செலுத்துகை முறைமைக்கு பொறுப்புக்கூறவேண்டிய அதிகார அமைப்பாக, இலங்கை மத்திய வங்கி (சீபீஎஸ்எல்), திருத்தியமைக்கப்பட்ட இலங்கை 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க பணச் சட்ட அதிகாரச்சட்டத்தின் நிறுவகமொன்றாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு பண உறுதிப்பாட்டிற்காக நாணயக் கொள்கையினை நிச்சயிப்பதற்கு நாணயச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் மூலம் பணத்தின் விநியோகம், கிடைப்பனவு, மற்றும் கிரயம் என்பவற்றை பாதுகாக்க இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை முயற்சித்தல் வேண்டும். பண நிரம்பலில் ஏற்படும் மாற்றங்கள் விலை உறுதிப்பாட்டில் தாக்கம் செலுத்துகின்ற பிரதான காரணியாக உள்ளது. பணவீக்கத்தின் ஊடாக காசு ஒதுக்கத்துடன் சம்பந்தப்படுகின்ற விரிந்த பண நிரம்பலின் மாற்றங்களிற்கு தாக்கத்தினை ஏற்படுத்துவதன் மூலம் விலை உறுதிப்பாட்டினை பெற்றுக்கொள்ள முடியும். காசு ஒதுக்கம் என்பது நாணயக் கொள்கையின் செயற்பாட்டு இலக்காகும். கொள்கை ரீதியான வட்டி விகிதம், திறந்த சந்தை நடவடிக்கைகள் (OMO) மற்றும் வர்த்தக வங்கிகளின் வைப்புக்களின் அடிப்படையிலமைந்த நியதிச்சட்ட ஒதுக்குத் தேவைகளே (SRR) தற்போது பயன்படுத்தப்படுகின்ற பிரதான நாணயக் கட்டுப்பாட்டு முறைகளாகும்.

நிலையான வைப்புக்கள் விகிதம் மற்றும் நிலையான கடன் விகிதம் போன்ற கொள்கை விகிதங்கள் 2017 ஆம் ஆண்டின் போது முறையே 7 சதவீதம் மற்றும் 8.5 சதவீதத்திலிருந்து 7.25 சதவீதம் மற்றும் 8.75 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 182.7 பில்லியன் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில், 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 83.6 பில்லியனால் மாத்திரம் ஒதுக்கு பணம் விரிவாக்கப்பட்டதுடன் ஆண்டின் இறுதியில் ரூபா 939.8 பில்லியனை அடைந்தது. காசு ஒதுக்கத்தில் உள்ளடங்கியுள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புக்களானது நியதிச்சட்ட ஒதுக்குத்தேவையிலேற்பட்ட அதிகரிப்பின் விளைவினால் 2016 ஆம் ஆண்டில் ரூபா 121.5 பில்லியன் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூபா 38.5 பில்லியன் அதிகரிப்பின் மூலம் ரூபா 341.73 பில்லியனாகக் காணப்பட்டது. அத்துடன் காசு ஒதுக்கத்தில் உள்ளடக்கியுள்ள சுற்றோட்டத்திலுள்ள காசு 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 598.1 பில்லியன் வரை ரூபா 45.3 பில்லியனினால் அதிகரித்திருந்தது.

மத்திய வங்கியின் நிதிநிலைமைக்கூற்றின் சொத்துக்கள் பக்கத்தின் அடிப்படையில், 2017 ஆம் ஆண்டின் போது காசு ஒதுக்கத்திலுள்ள விரிவாக்கம் இலங்கை மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் (NFA) அதிகரிப்பின் மூலம் முழுமையாகத் தாக்கமளித்திருந்தது. 2016 ஆம் ஆண்டின் அபிவிருத்திகளுக்கான ஒப்பந்தங்களில், 2016 ஆம் ஆண்டில் ரூபா 17.6 பில்லியன் சரிவுடன் ஒப்பிடுகையில், 2017 ஆம் ஆண்டில் காசு ஒதுக்கு விரிவாக்கம் மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டு சொத்துக்கள் (NDA), தேறிய வெளிநாட்டு சொத்துக்களில் (NFA) அதிகரிப்பின் மூலம் முழுமையாக தாக்கமளித்திருந்ததுடன் ரூபா 287.5 பில்லியன் அதிகரிப்பின் மூலம் ரூபா 846.1 பில்லியன் வரை கணிசமாக அதிகரித்திருந்தது. இது பிரதானமாக வெளிநாட்டு பிணையங்களிலுள்ள முதலீடுகளின் பிரகாரம் மத்திய வங்கியின் ஒதுக்கச் சொத்துக்களில் அதிகரிப்பு மற்றும் மத்திய வங்கியினால் பேணப்பட்ட காசு மற்றும் மீதிகள் அதிகரித்தமையின் விளைவாக காணப்படுகின்றது.

இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியும் 2017 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக தேய்வடைந்திருந்தது. ரூபாவின் பெறுமதி அமெரிக்க டொலருக்கு எதிராக 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் காணப்பட்ட ரூபா 149.8 இலிருந்து 2017 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 152.85 வரை 2 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியானது 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 144.1 இலிருந்து ரூபா 149.8 வரையிலான 3.8 சதவீதமாக காணப்பட்டது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் அனைத்து ஏனைய பாரிய நாணயங்களுக்கு எதிராக குறிப்பிடும்படியாக ரூபா தேய்வடைந்திருந்தமை, சர்வதேச சந்தைகளில் ஐக்கிய அமெரிக்க டொலர்க்கு எதிராக நாணயமாற்று விகிதங்களுக்கிடையில் பிரதிபலிக்கும் நகர்வுகளாகக் காணப்பட்டது.

இலங்கை வங்கி

1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் கீழ் 1939 ஆகஸ்ட் 01 இல் முறையாக கூட்டிணைக்கப்பட்டதுடன் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றாக இலங்கை வங்கி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

பங்குதாரர்களுக்கு உலக நுழைவு, ஊழியர்களின் மேம்படுத்தல் மற்றும் பெறுமதி அதிகரிப்புடன் நாட்டிற்கு உயர் வினைத்திறன்மிக்க, வாடிக்கையாளர் நோக்காகக் கொண்ட, தொழில்நுட்ப ரீதியில் அதிநவீனமயப்படுத்தப்பட்ட, நெகிழ்திறன் மற்றும் புதுமையான நிதிசார் சேவைகளினை வழங்குவது வங்கியின் தொலைநோக்காக காணப்படுகின்றது.

மேற்குறித்த நோக்கங்களினை அடைவதற்கு, 2017 ஆம் ஆண்டின் போது 578 கிளைகள், 168 CDM இயந்திரங்கள் மற்றும் 764 ATM இயந்திரங்களினூடாக வங்கி அவர்களின் சேவைகளினை பகிர்ந்தளித்துள்ளது. மேலும் 7,581 எண்ணிக்கையான ஊழியர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர்.

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டின் போது வங்கியின் மொத்த வட்டி வருமானம் ரூபா 134,685 மில்லியனிலிருந்து ரூபா 171,343 மில்லியனுக்கு அல்லது 27.2 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 1,047,190 மில்லியனிலிருந்து ரூபா 1,219,914 மில்லியன் வரை அல்லது 16.5 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும், ஆண்டின் இறுதியில் வங்கியின் மொத்த வைப்புத்தளம் ரூபா 1,256,589 மில்லியனிலிருந்து ரூபா 1,546,832 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது.

முன்னைய ஆண்டிற்கான ரூபா 31,189 மில்லியன் வரிக்கு முன்னராக தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கு ரூபா 30,343 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபமொன்றை வங்கியின் செயற்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தமையினால், நிதிசார் விளைவுகளில் ரூபா 846 மில்லியன் அல்லது 2.7 சதவீதக் குறைவொன்றை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் (ROAA) மற்றும் சராசரி உரிமை மீதான திரும்பல் (ROAE) என்பன முறையே 0.2 மற்றும் 7.5 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

மேலும், உள்ளூர் வங்கித்துறையில், 2017 ஆம் ஆண்டின் போது, பிட்ஸ் ரேட்டிங் லங்கா லிமிட்டட் வங்கியின் தேசிய நீண்ட கால தரப்படுத்தலானது "ஸ்திரமான கண்ணோட்டத்துடன் AA^{+} (1ka)" மீண்டும் உறுதிப்படுத்தியதுடன் ICRA லங்கா லிமிட்டட் கடன் தரப்படுத்தலாக "ஸ்திரமான கண்ணோட்டத்துடன் (SL) AAA" ஆக விருது வழங்கியது.

மக்கள் வங்கி

கிராமிய பொருளாதாரத்திற்குள் வங்கிச் சேவைகளினை ஊடுருவச்செய்யும் நோக்குடன் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றாக, 1961 ஆம் ஆண்டு 29 ஆம் இலக்க மக்கள் வங்கி அதிகாரச்சட்டத்தின் மூலம் மக்கள் வங்கி ஸ்தாபிக்கப்பட்டதுடன் பீப்பிள்ஸ் லீசிங் என்ட் பைனாஸ் பீஎல்சி, பீப்பிள்ஸ் டரவல்ஸ் (பிறைவட்) லிமிட்டட் மற்றும் பீப்பிள்ஸ் மேர்சன்ட் பைனாஸ் பீஎல்சி ஆகிய மூன்று துணைக்கம்பனிகளினையும் கொண்டுள்ளது.

வங்கி

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த 21.7 சதவீதமொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 2017 ஆம் ஆண்டிற்கான ரூபா 18.2 பில்லியன் இலாபமொன்றை வங்கி அறிக்கையிட்டதுடன் 2017 ஆம் ஆண்டில் ROE ஆனது 26.6 சதவீதத்தில் அறிக்கையிடப்பட்டது. ஆண்டின் இறுதியில் உள்ளவாறு வங்கியின் மொத்தச் சொத்துக்கள் தளம் ரூபா 1,467 பில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. 2016 ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் மொத்த வைப்புக்கள் முறையே 13 சதவீதம் மற்றும் 15.4 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தது. 1.9 சதவீத விகிதமொன்றில் செயற்பாடற்ற கடன்கள் விகிதத்தினை வங்கியினால் பேணமுடியுமாக இருந்தது. வங்கி ஆரோக்கியமான மற்றும் நன்கு பல்வகைப்படுத்தப்பட்ட நிதியளிப்பு முகப்பொன்றை பேணுகின்றதுடன் 2017 திசெம்பர் இன் இறுதியில் ரூபா 1.0 ரில்லியன் வைப்புத்தளமொன்றை அடைந்திருந்தது.

குழுமம்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த 14.2 சதவீதமொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 2017 ஆம் ஆண்டிற்கான ரூபா 20.5 பில்லியன் இலாபமொன்றை குழுமம் அறிக்கையிட்டது. முன்னர் முடிவடைந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த 12.1 சதவீதமொன்றை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஆண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 1,619 பில்லியன் வரை குழுமத்தின் மொத்த சொத்துக்கள் தளம் அதிகரித்திருந்தது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் மொத்த வைப்புக்கள் முறையே 12 சதவீதம் மற்றும் 16.6 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் 2.0 சதவீத விகிதமொன்றில் செயற்பாடற்ற கடன்கள் விகிதத்தினை குழுமம் பேணமுடியுமாகவிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது வாடிக்கையாளர் கடன்கள் மற்றும் முற்பணங்களின் குழுமத்தினால் கூட ரூபா 1 ரில்லியன் மைல்கல்லினை கடக்க கூடியதாகவிருந்தது. 2017 திசெம்பர் இறுதியில் 69 சதவீத பங்கொன்றுடன் சொத்து தளத்தை ஆதிக்கம் செலுத்துகின்ற கடன் சொத்துக்களுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குழுமத்தின் சொத்து கலவை ஒப்பீட்டளவில் மாற்றமடையாது காணப்பட்டது

தேசிய சேமிப்பு வங்கி

தேசிய சேமிப்பு வங்கி 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி அதிகாரச்சட்டத்தினால் இலங்கையிலுள்ள அரசுடையமான வங்கியாக தாபிக்கப்பட்டிருந்ததுடன் 1988 இன் 36 ஆம் இலக்க வங்கிகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உரிமம்பெற்ற விசேட வங்கி என்ற அந்தஸ்த்து வழங்கப்பட்டிருந்தது. அதிகாரச்சட்டத்தின் 2(அ) பிரிவு மற்றும் அதற்கான திருத்தங்களிற்கு அமைய, விசேடமாக மட்டுப்படுத்திய ஆற்றல்களைக் கொண்ட இலங்கை மக்களிடையே சேமிப்பினை மேம்படுத்தி அதன் மூலம் சேகரிக்கப்படுகின்ற சேமிப்புக்களை இலாபகரமாக முதலீடு செய்தலே வங்கியின் குறிக்கோளாக காணப்பட்டது.

தேசிய சேமிப்பு வங்கி 2017 ஆம் ஆண்டில் புதிய மூன்று கிளைகளை ஸ்தாபித்திருந்ததுடன் அதற்கமைய 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் காணப்பட்ட மொத்த கிளைகளின் எண்ணிக்கை 253 ஆகக் குறிப்பிடப்பட்டது. மேலும், 2016 ஆம் ஆண்டில் காணப்பட்ட மொத்த பாடசாலை வங்கி அலகுகள் 2,858 இல், ஆண்டின் போது 619 கிளைகள் மூடப்பட்டிருந்தது. ஆண்டின் போது வங்கியின் மொத்த வைப்புத் தளம் ரூபா 79.9 பில்லியனால் அல்லது 12 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் அது ரூபா 737.2 பில்லியனை அடைந்திருந்தது.

வங்கியின் மொத்த சொத்துத் தளம் ரூபா 101 பில்லியனால் அல்லது 11 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருந்ததுடன், 2017 திசெம்பர் அளவில் ரூபா 1,012 பில்லியனை தாண்டியிருந்தது. ஆண்டின் போது 12 சதவீத வைப்பின் வளர்ச்சியொன்றின் மூலம் முதன்மையாக நிதியளிக்கப்பட்டுக் காணப்பட்ட ரூபா 64 பில்லியன் வங்கிகள் மற்றும் ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் அதிகரித்தமை சொத்துக்கள் அதிகரிப்பதற்கு பிரதான காரணிகளாக தாக்கமளித்திருந்தது. 2016 இல் அறிக்கையிடப்பட்ட 17 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் செயற்பாடற்ற கடன்களின் விகிதம் 1.6 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டதுடன் ஆண்டின் போது வங்கியின் சொத்துக்களின் தரம் (Asset Quality) முன்னேற்றமடைந்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு எதிராக 5.5 சதவீதம் அதிகரித்து காணப்பட்ட ரூபா 14 பில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தினை வங்கி அறிக்கையிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வங்கியின் தேறிய வட்டி வருமானம் ரூபா 0.5 பில்லியன் அல்லது 6 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

வங்கியின் மூலதனப் போதுமை விகிதங்கள் அதிகுறைந்த ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளினை விட உயர் பெறுமதியொன்றில் தொடரப்படல் வேண்டும். ஆரம்ப மூலதனப் போதுமை விகிதமும் (சீஏஆர்) ஒட்டுமொத்த மூலதனப் போதுமை விகிதமும் முறையே 11.93 சதவீதம் (குறைந்தது 7.75 சதவீதம்) மற்றும் 15.31 சதவீதம் (குறைந்தது 11.75 சதவீதம்) ஆகக் காணப்பட்டன.

அரச ஈட்டு முதலீட்டு வங்கி

அரச ஈட்டு முதலீட்டு வங்கி 1975 இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு முதலீட்டு வங்கி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன், தொடர்புடைய திருத்தங்கள் மற்றும் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம், அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க நிதிசார் மற்றும் ஏனைய உதவிகளை வழங்குவதன் மூலம் விவசாயம், கைத்தொழில் மற்றும் வீடமைப்பு அபிவிருத்திக்கு உதவுதல் வங்கியின் பணியாக உள்ளது.

2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் வங்கியின் மொத்த வைப்புக்களின் பெறுமதி ரூபா 33 பில்லியனை தாண்டியிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 16.5 சதவீத அதிகரிப்பொன்றாக காணப்பட்டது.

2017 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 7 பில்லியனால் அல்லது 18.9 சதவீதத்தினால் விரிவாக்கமடைந்திருந்த வங்கியின் மொத்தச் சொத்துக்கள் ரூபா 42 பில்லியனை தாண்டியிருந்தது. வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் பெறவேண்டியவை ரூபா 4.8 பில்லியனாகக் காணப்பட்டமை சொத்துக்கள் அதிகரிப்பதற்கு பிரதான காரணியாக அமைந்திருந்தது.

முன்னைய ஆண்டிற்கு எதிராக 46.3 சதவீத பற்றாக்குறையாகக் காணப்பட்ட ரூபா 379 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தை வங்கி அறிக்கையிட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வங்கியின் தேறிய வட்டி வருமானம் ரூபா 172 மில்லியனால் அல்லது 9.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி 1997 இன் 07 ஆம் இலக்க (2003 இன் 15 ஆம் இலக்க மற்றும் 2011 இன் 45 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களால் திருத்தப்பட்ட) இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி அதிகாரச்சட்டத்தின் கீழ் அரச உரிமையைக்கொண்ட வங்கியொன்றாக வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி கூட்டிணைக்கப்பட்டதுடன், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உரிமம் பெற்ற விசேட வங்கி என்ற அந்தஸ்த்தும் அளிக்கப்பட்டது. அதிகாரச்சட்டத்தின் 12(அ) மற்றும் திருத்தங்களின் பிரகாரம் அனைத்து இலங்கையர்களினதும் வீடமைக்கும் கனவை நனவாக்குவதற்காக வீடமைப்பு நோக்கத்திற்கான நிதி வசதிகளை வழங்குவதில் சந்தையில் தலைவராக உருவாகுவதே வங்கியின் குறிக்கோளாக உள்ளது.

2017 ஆம் ஆண்டில் புதிய கிளைகள் எதனையும் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி ஸ்தாபித்திருக்காததுடன் அதற்கமைய 2017 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்த கிளைகள் 39 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், 2016 ஆம் ஆண்டில் ரூபா 30.26 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2017 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட கடன்கள் ரூபா 34.97 பில்லியன் வரை விரிவாக்கப்பட்டிருந்ததுடன் அது 15.5 சதவீத அதிகரிப்பாகக் காணப்பட்டது. ஆகையினால், ஆண்டின் போது வட்டி வருமானம் முன்னைய நிதியாண்டில் ரூபா 5.4 பில்லியனிலிருந்து ரூபா 6.6 பில்லியனை அடைந்து, 21 சதவீதத்தினால் முன்னேற்றமடைந்திருந்தது. மேலும், ஆண்டின் போது ரூபா 32.12 பில்லியனிலிருந்து ரூபா 36.65 பில்லியன் வரை வங்கி அதன் வைப்புத் தளத்தை வெற்றிகரமாக விரிவாக்கியிருந்ததுடன் அது 14.1 சதவீத அதிகரிப்பாக காணப்பட்டது. வங்கியின் மொத்த சொத்துத் தளம் ரூபா 4 பில்லியனால் அல்லது 8.78 சதவீதத்தினால் விரிவாக்கமடைந்திருந்ததுடன் 2017 திசெம்பர் இறுதியில் ரூபா 49.7 பில்லியனை மிகைத்திருந்தது. சொத்துக்களின் அதிகரிப்பிற்கு கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் பெறவேண்டியவைகள் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்ததுடன் அது 15.5 சதவீத வளர்ச்சியாக காணப்பட்டது. வங்கியின் செயற்பாடற்ற கடன்கள் விகிதம் 2016 ஆம் ஆண்டில் 17.58 சதவீதத்திலிருந்து 2017 ஆம் ஆண்டில் 18.7 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. 2017 ஆம் ஆண்டில் ரூபா 557 மில்லியன் வரிக்கு முன் இலாபத்தினை வங்கி அறிக்கையிட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டிற்கு எதிராக 15.6 சதவீத பற்றாக்குறையாகக் காணப்பட்டது. மேலும், வங்கியின் தேறிய வட்டி வருமானம் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 91 மில்லியன் அல்லது 4.7 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

மூலதனப் போதுமைத்தன்மை மற்றும் குறைந்தபட்ச மூலதனத் தேவை, பங்குதாரர்களிற்கு பெறுமதியை உருவாக்குதல் முதலாந்தர முன்னுரிமையாக காணப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டில் பங்குதார்களின் நிதியம் 9.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. பங்கொன்றுக்கான சொத்தின் பெறுமதி ரூபா 59.05 இலிருந்து 2017 ஆம் ஆண்டில் ரூபா 64.30 வரை 10 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. இருப்பினும், பலவீனமான உழைப்பாற்றல் காரணமாக 2017 ஆம் ஆண்டில் பங்கொன்றுக்கான உழைப்பு ரூபா 7.47 இலிருந்து ரூபா 6.31 வரை குறைவடைந்திருந்தது. பிரதான மூலதன விகிதம் (Tier 1) மற்றும் மொத்த மூலதன விகிதம் (Tier 2) என்பன குறைந்தபட்ச நியதிச்சட்ட தேவைப்பாடான 7.25 சதவீதம் மற்றும் 11.25 சதவீதத்திற்கு எதிராக 13.52 சதவீதத்தில் அதிகரித்திருந்த தேவைப்பாட்டிற்கு மிகைத்து தொடர்ந்தும் காணப்பட்டது. எவ்வாறாயினும், 2014 சனவரி 17 ஆந் திகதிய நிதித்துறை நிறுவனங்களை ஒன்றிணைப்பதற்கான பிரதான திட்டத்திற்கமைய வெளியிடப்பட்ட மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) வழிகாட்டல்கள் இல. 02/17/402/0073/002 இன் பிரகாரம் 2018 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான

அதன் பிரதான மூலதனம் ரூபா 5,000 மில்லியனாக வங்கி பேணுதல் வேண்டும்.

அடிப்படை 111 வழிகாட்டலின் கீழ் பிரதான மூலதன தகுதியினை நீண்டகால மூலதன மூலமாக முன்மொழிவதற்கான அரச அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் நடந்துகொண்டிருப்பதை கருத்திற்கொண்டு இந்த வழிகாட்டலுடன் இணங்குவதற்கு மேலும் ஆறு மாதங்கள் நீடிப்பொன்றை மத்திய வங்கி அளித்திருந்தது.

பிராந்திய அபிவிருத்தி வங்கி

பிரதானமாக நுண்பாக நிதி நிறுவனங்களிற்கும் சிறிய மற்றும் நடுத்தரளவு முயற்சியாண்மைகளிற்கும் நிதியுதவிகளை வழங்கி அபிவிருத்திப் பணியின் மேம்படுத்துதல் மற்றும் பெண்களின் முன்னேற்றத்தின் ஊடாக இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கான வசதிகளை வழங்குதல் என்ற குறிக்கோள்களுடன் 2010 ஆம் ஆண்டில் ஆறு மாகாண அபிவிருத்தி வங்கிகளை ஒன்றிணைத்து பிராந்திய அபிவிருத்தி வங்கி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி

வரையறுக்கப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி, இலங்கை அரசினால் முழுமையான உரிமையைக்கொண்ட உரிமம் பெற்ற விசேட வங்கியாகக் காணப்படுகின்றதுடன் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது.

பிரதான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள்

இலங்கை மத்திய வங்கி

நிதிக் கம்பனிகளை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்தல

இலங்கை நாணயச் சபையால் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதியியல் வணிக அதிகாரச்சட்டத்தின் கீழ் நிதிக் கம்பனிகள் ஒழுங்குபடுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்றன. நிதியியல் வணிக அதிகாரச்சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் பிரகாரம், மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தகைய நிதிக் கம்பனிகளின் வணிக மற்றும் கூட்டிணைந்த விவகாரங்களின் ஏதாவது அம்சங்கள் தொடர்பாக நாணயச் சபையானது நிதிக் கம்பனிகளிற்கு நெறிப்படுத்தல்களை வழங்கலாம். நிதியியல் வணிக அதிகாரச்சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் உட்பிரிவுகள் அட்டவணை 14 தொடர்பாக 2018 ஏப்ரல் மாத இறுதி வரையிலும் எந்தவொரு நெறிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

உட்பிரிவு இல.	உட்பிரிவு
ஆ	- கடன்கள், கடன் வசதிகள் அல்லது அத்தகைய கம்பனிகளால் வழங்கப்பட்ட நிதிசார் வசதிகளின் (accommodation) ஏனைய வகைகள் மீது விதிக்கப்படக்கூடிய ஆகக் கூடிய வட்டி வீதங்கள். - ஏதாவது அத்தகைய கடன்கள், கடன் வசதிகள் அல்லது நிதிசார் வசதிகளின் ஏனைய வகைக்கான ஆகக்கூடிய காலப்பகுதிகள்.
ஒ	- வைப்புக்களின் வைப்பாளர்களால் முதிர்வடைவதற்கு முன்னர் பணத்தை மீளப்பெறுவதற்காக பிரயோகிக்கப்படக்கூடிய நிபந்தனைகள்.
ஔ	- குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிகளினுள் அதிகரிக்கப்படக்கூடிய அத்தகைய கம்பனிகளால் மேற்கொள்ளப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதாவது கடன்கள், முதலீடுகள் அல்லது நிதிசார் வசதிகளின்

		தொகையில் விலைவீதத்திற்கான எல்லைகளை நிர்ணயித்தல்.
கா	-	இந்த உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நபர்களால் நடாத்தப்படக்கூடிய நிதிக் கம்பனியொன்றில் உள்ள பங்கு மூலதனத்தின் ஆகக்கூடிய சதவீதம்.
கி	-	பகாதுகாப்பான ஒதுக்கீடுகள் தொடர்பில் அத்தகைய கம்பனிகளால் பேணப்பட வேண்டிய எல்லைகள்.
கு	-	சம்பளம், படி, கட்டணங்கள் (perquisites), செலவினங்களின் மீளளிப்பு, இறுதி நலன்கள், பணிக்கொடைகள் மற்றும் ஏனைய ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மூலமான அத்தகைய கம்பனிகளின் பணிப்பாளர்கள் அல்லது ஊழியர்களிற்கான கொடுப்பனவு.
கோ	-	காணிகளின் (real estate) கொள்வனவு மற்றும் அவற்றின் விலையை நிர்ணயித்தல் என்பவற்றில் அத்தகைய கம்பனிகளால் பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் நடைமுறைகள்.
ச	-	இவ் அதிகாரச்சட்டத்தின் கீழ் சபையால் விதிக்கப்படக்கூடிய ஏதாவது தண்டப்பணக் கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்கு சபையால் நிர்ணயிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பெறுமதிக்காகவும் அத்தகைய விதிமுறைகள் மீதும் நிதிக் கம்பனியொன்றால் வங்கி உத்தரவாதமொன்றைச் சமர்ப்பித்தல்.

"இது பொதுவான அணுகுமுறையை பின்பற்றுவதன் மூலம் நிதிக் கம்பனிகளின் வணிக நடவடிக்கைகள் மீது நெறிப்படுத்தல்களை வழங்குவதற்காக விவேகமற்றிருக்கின்ற நிலைமைகள் காணப்படுகின்றன. உரிய கம்பனிகளின் பணிப்பாளர் சபை வெவ்வேறு இடர் முகாமைத்துவ கட்டமைப்புக்கள் மற்றும் வணிக மாதிரிகளுடன் செயற்படுவதால் அவர்களிற்கு தீர்மானம் எடுத்தல் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது." என வங்கியின் நாணயச் சபை செயலாளர் இது தொடர்பில் எனக்கு அறிவித்திருந்தார்.

குறைபாடுகளுடன் கூடிய செயற்பாடுகள்

வங்கியானது அதன் நிதிகளை முதலாந்தர வணிகருடன் வர்த்தகம் செய்யக்கூடிய பின்னோக்கிய மீள்கொள்வனவு (tradable reverse Repo) முதலீடுகளில் முதலீடு செய்திருந்தது. மீளப் பெறப்பட்ட பிணையங்கள் தொடர்பில் எவ்வித பிணைகளையும் மீண்டும் ஒப்படைக்காது கருதுகோளான பிணையங்களை முதலாந்தர வணிகர் மீளப் பெற்றிருந்ததன் காரணமாக இந்த முதலீடுகள் தொடர்பில் லங்கா செக்கியூரிட்டி சிஸ்ரம் (Lanka Security System) பூச்சிய மீதியை காண்பித்திருந்தது. 2015 திசெம்பர் 04 இல் மேற்கொள்ளப்பட்ட நாணயச் சபைத் தீர்மானத்தின் பிரகாரம், உத்தரவாதமளிக்கப்பட்ட பிணைகள் (collaterals) இன்றி மேற்படி முதலீடுகளில் மீண்டும் மீண்டும் முதலீடு செய்வதற்கு வங்கியின் நாணயச் சபை தீர்மானித்திருந்தது. இந்த முதலாந்தர வணிகருடன் வங்கியின் நிதிகள் மற்றும் வங்கியால் முகாமை செய்யப்பட்ட நிதிகள் என்பவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த உத்தரவாதமளிக்கப்பட்ட பிணைகள் இன்றி மீள்கொள்வனவு செய்யப்பட்டிருந்த முதலீட்டு நிலுவை ரூபா 2.4 பில்லியனாகும்.

2012 திசெம்பர் 10 மற்றும் 2012 திசெம்பர் 14 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த முன்னைய பரிசோதனைகளில்

வெளிப்படுத்தப்பட்டிருந்த குறித்த வணிகரின் வரம்பு மீறுதல்கள் தொடர்பில் (சில

வாடிக்கையாளர்களிற்கு போதியளவு பிணையங்கள் ஒதுக்கப்படாமை மற்றும் நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதிகளை (Intra-day Liquidity Facilities (ILF)) பெற்றுக்கொள்வதற்காக வாடிக்கையாளர் பிணையங்களை பயன்படுத்துதல்) அவருக்கு எச்சரிக்கை கடிதங்களையும் 2013 யூன் 06 ஆம் திகதிய நெறிப்படுத்தலையும் வங்கி வழங்கியிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. வங்கியால் சீராக்கல் நடவடிக்கைகள் எடுக்கப்படாமை காரணமாக குறித்த முதலாந்தர வணிகரினால் மேற்கொள்ளப்பட்ட அதே முறையற்ற செயற்பாடுகள் 2015 ஆம் ஆண்டில் மீண்டும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அத்துடன், வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்தின் (பிடிடி) மேற்பார்வைப் பிரிவு 2015 மே 31 இல் உள்ளவாறு 2015 மே 20 மற்றும் 2015 மே 21 ஆம் திகதிகளில் குறித்த முதலாந்தர வணிகர் தொடர்பாக களப் பரிசோதனையை (on-site examination) மேற்கொண்டிருந்தது. மேற்குறிப்பிட்ட வரம்பு மீறுதல்கள் உள்ளடங்கலாக வெவ்வேறு பிரமாணங்கள் மற்றும் நெறிப்படுத்தல்களின் வரம்பு மீறுதல்கள் மேற்படி களப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டிருந்தன.

பின்னர் ஆளுநர் 2017 சனவரி 30 இல் நடைபெற்ற 3/2017 ஆம் இலக்க நாணயச் சபையின் கூட்டத்தில் அதனால் தீர்மானிக்கப்பட்டவாறு குறிப்பிட்ட முதலாந்தர வணிகர் தொடர்பிலான வங்கியின் நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளை பரிசோதனை செய்து அதன் மீதான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு குழுவொன்றை நியமித்திருந்தார். பரிசோதனையின் பின்னர், காலப்பகுதிக்கு மேலான பொறுமையான மேற்பார்வை காணப்பட்டமை மற்றும் சில சந்தர்ப்பங்களில் அறிக்கையிடல் வரிசையின் அனைத்து மட்டங்களிலும் விவேகமான முதலீட்டுத் தீர்மானங்கள் தொடர்ந்து எடுக்கப்பட்டிருக்கவில்லை என்கின்ற முடிவுகளிற்கு குழு வந்திருந்தது.

மத்திய கொடுக்கல் வாங்கல் பொறிமுறை (Central Counter Party Mechanism)

தீர்ப்பனவு செய்தல் இடரைக் குறைப்பதற்கும் தீர்வை செய்தல் மற்றும் தீர்ப்பனவு செயன்முறை என்பவற்றை வலுப்படுத்துவதற்கும் நிதிச் சந்தைகளிற்காக மத்திய கொடுக்கல் வாங்கல் பொறிமுறையொன்றை (சீசீபி) அமுல்ப்படுத்துவதற்காக, ஆலோசனைக் கட்டணங்கள் உள்ளடங்கலாக செயற்திட்டத்தின் 1/3 கிரயங்களை இணைந்து பங்கிட்ட வங்கி, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு என்பவற்றுடன் 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ஏற்படுத்தப்பட்ட முத்தரப்பு உடன்படிக்கையொன்றில் முன்மொழியப்பட்ட சீசீபி ஐ ஸ்தாபிப்பதற்கான ஐந்து கட்டங்கள் தொடர்பான மதியுரைகள் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளை பெறுவதற்காக மதியுரை நிறுவனமொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ரூபா 22.2 மில்லியன் தொகையான கட்டம் I (வணிகத் தேவைப்பாட்டு பகுப்பாய்வு மற்றும் ஆரம்ப அறிக்கை) தொடர்பான ஆலோசனைக் கட்டணத்தின் பங்கு வங்கியால் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வங்கியானது 2015 ஆம் ஆண்டில் இவ் முத்தரப்பு உடன்படிக்கையை மீளப்பெற்றிருந்ததுடன் முன்மொழியப்பட்ட சீசீபி ஐ அமுலப்படுத்துவதற்காக ஏனைய நான்கு கட்டங்களும் பூர்த்தி செய்யப்படாமல் முத்தரப்பு உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்தது. வேறு வகையில் கூறுகையில், முன்மொழியப்பட்ட சீசீபி ஐ அமுலப்படுத்துவதற்காக கட்டம் I இன் மதியுரைக் கட்டணங்கள் மீதான செலவினங்களை மேற்கொண்ட பின்னர் முத்தரப்பு உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்தது.

2016 ஆம் ஆண்டிற்கான குற்றி நாணயங்களை அச்சிடுவதற்கான கட்டளைகளை இடுதல்

12/0863/504/073 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு 2012 யூன் 27 இல் நடைபெற்ற கூட்டத்தின் அமைச்சரவைத் தீர்மானம் குற்றி நாணயங்களை அச்சிடுவதற்கு சர்வதேச

ரீதியான கேள்வியை கோருவதற்கோ அல்லது ஏற்கனவேயுள்ள விநியோகஸ்தர்களிற்கு கட்டளை இடுவதற்கோ இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரத்தை வழங்கியிருந்தது.

2015 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறான இருப்பு மட்டங்கள் மற்றும் குற்றி நாணயங்களின் உயர் கேள்வியை எதிர்நோக்குவதற்காக நிலையாகவுள்ள முதன்மைக் காலம் என்பவற்றை கருத்தில் கொள்ளும் போது நாணயச் சபையானது 2015 நவம்பர் 24 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் 255 மில்லியன் கூட்டுமொத்தமான குற்றி நாணயத் துண்டுகளிற்காக ஏற்கனவேயுள்ள விநியோகஸ்தர்கள்/ நாணயமானவர்களிடம் (mints) கட்டளைகளை இடுவதற்காகவும் பொருட்களின் விலைகள் 2013 ஆம் ஆண்டில் நிலவிய விலை மட்டங்களிலிருந்து கணிசமானளவு வீழ்ச்சியடைந்திருந்தமையை கருத்தில் கொண்டு கலந்துரையாடி முடிவுசெய்யப்பட்ட விலைகளில் இடப்பட வேண்டிய கட்டளைகளை இடுவதற்காகவும் அங்கீகரித்திருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2013 – 2015 காலப்பகுதிக்காக வங்கிக்கான 550 மில்லியன் குற்றி நாணயத் துண்டுகளை அச்சிட்டு வழங்குவதற்காக 2012 இல் சர்வதேச ரீதியான கேள்வி கோரப்பட்டு மூன்று நாணமானவர்களிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட ஒப்பந்தம் 2013 – 2015 காலப்பகுதிக்காக மாத்திரம் காணப்பட்டமையால் 2016 மற்றும் 2016 முதல் குற்றி நாணய தேவைப்பாட்டிற்காக சர்வதேச கேள்விகளை கோருவதற்கான பெறுகை செயன்முறை சாத்தியமான நேரத்தில் ஆரம்பிக்கப்பட முடிந்திருந்தது. எவ்வாறாயினும், 2013 சர்வதேச ரீதியான கேள்வியில் கோரப்பட்ட விலைகளை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடி முடிவுசெய்யப்பட்ட விலைகளில் ஏற்கனவேயுள்ள விநியோகஸ்தர்களுடன் 2016 ஆம் ஆண்டிற்காக குற்றி நாணயங்களை அச்சிடும் கட்டளைகளை இடுவதற்காக நாணயச் சபை அங்கீகாரம் 2015 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறான இருப்பு மட்டங்கள் மற்றும் குற்றி நாணயங்களின் உயர் கேள்வியை எதிர்நோக்குவதற்காக நிலையாகவுள்ள முதன்மைக் காலம் என்பவற்றை சுட்டிக்காட்டி 2015 நவம்பர் 11 இல் கோரப்பட்டிருந்தது.

- 2016 ஆம் ஆண்டிற்காக குற்றி நாணயங்களை அச்சிடுவதற்கான விலைகள் ஏற்கனவேயுள்ள விநியோகஸ்தர்களிடமிருந்து 2015 திசெம்பர் 02 இல் கோரப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் விலைகள் மற்றும் 2016 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் விலைகளின் ஒப்பீடு அட்டவணை 15 இல் காணப்படுகின்றது.

விநியோகஸ்தர்	வகை	2013 இல் விலைகள் (1000 துண்டுகளிற்காக)	2016 இற்கான விலைகள் (1000 துண்டுகளிற்காக)	வேறுபாடு சாதகம்/ (பாதகம்)	2016 இற்கான எண்ணிக்கை (மில்லியன் துண்டுகள்)	மொத்த வேறுபாடு சாதகம்/ (பாதகம்)
	ரூபா	ஐ.அ.டொலர்	ஐ.அ.டொலர்	ஐ.அ.டொலர்		ஐ.அ.டொலர்
ஏ	10	34.47	33.50	0.97	115	111,550
பீ	5	32.77	38.02	(5.25)	40	(210,000)
சீ	2	31.19	31.08 (யூரோ 28.32)	0.11	25	2,750
மொத்தம்					**180**	**(95,700)**

அட்டவணை 15 ..... வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் விலைகள்

2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 5 குற்றி நாணயங்களை அச்சிடுவதற்கான விலைகள் 2013 இன் விலைகளுடன் ஒப்பிடும் போது கணிசமானளவு அதிகரித்திருந்ததை மேற்படி தகவல்கள் வெளிப்படுத்தியிருந்தன.

- ரூபா 1 மற்றும் ரூபா 5 குற்றி நாணயங்களிற்காக ஏற்கனவேயுள்ள விநியோகஸ்தரால் ஆகக் கூடிய விலைகள் கோரப்பட்டமையால் நாணயச் சபையானது ரூபா 1 குற்றி நாணயத்திற்காக கட்டளைகளை இடாதிருப்பதற்கும் ரூபா 5 குற்றி நாணயத்திற்காக கட்டளைகளை குறைப்பதற்கும் தீர்மானித்திருந்தது.

- 2015 நவம்பர் 24 ஆம் திகதிய நாணயச் சபைத் தீர்மானத்தில் குறிப்பிட்டவாறு, பொருட்களின் விலைகள் 2013 ஆம் ஆண்டில் நிலவிய விலை மட்டங்களிலிருந்து கணிசமானளவு வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும், ஏற்கனவேயுள்ள விநியோகஸ்தர்களிடமிருந்து மாத்திரம் குற்றி நாணயங்களை அச்சிடுவதற்கான விலைகள் கோரப்பட்டமையால் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைவதிலிருந்து அதிகமான இலாபம் பெறப்பட்டிருக்கவில்லை. மறுபுறம், மேற்குறிப்பிட்ட காரணத்தினாலேயே விநியோகஸ்தர்களிற்கிடையே போட்டியை ஏற்படுத்தும் வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது. குற்றி நாணயத்தின் கிரயமானது பொதுவாக 42 சதவீதம் தொடக்கம் 68 சதவீதம் வரையான வீச்சிலான உலோகக் கிரயத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றமை மேலும் அவதானிக்கப்பட்டது.

- 2016 மார்ச் 08 இல் 2016 இன் குற்றி நாணயத் தேவைப்பாட்டின் மிகுதிப் பகுதிக்காக ஏற்கனவேயுள்ள அனைத்து விநியோகஸ்தர்களிடமிருந்தும் கோரப்பட்ட புதிய கூறுவிலை மீது தெரிவுசெய்யப்பட்ட விலைமனுதாரரால் ரூபா 2 மற்றும் ரூபா 10 குற்றி நாணயங்களிற்காக கோரப்பட்ட விலைகள் மேலே காட்டப்பட்டவாறு 2015 திசெம்பர் 02 இல் கோரப்பட்ட விலை மீது ஏற்கனவேயுள்ள விநியோகஸ்தரால் கோரப்பட்ட விலைகளுடன் ஒப்பிடும் போது குறைவடைந்திருந்தது. ரூபா 2 மற்றும் ரூபா 10 குற்றி நாணயங்களிற்கான விலைகளில் ஏற்பட்ட குறைவுகள் முறையே ஐ.அ.டொலர் 5.21 மற்றும் ஐ.அ.டொலர் 1.13 ஆகும்.

இலங்கை வங்கி

2017 ஆம் ஆண்டில் பதிவளிக்கப்பட்ட மொத்த மூலதனம் ரூபா 1,169 மில்லியனாக இருந்ததுடன் இது வங்கியின் 12,014 வாடிக்கையாளர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேற்படி நிலுவை தொடர்பான வட்டி ரூபா 830 மில்லியனாகும். பதிவளிக்கப்பட்ட மூலதனம் மற்றும் விட்டுவிடப்பட்ட வட்டி என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2,387 மற்றும் 756 ஆன மிகப்பெரிய சதவீதங்களால் அதிகரித்திருந்தன. பதிவளிக்கப்பட்ட மேற்படி மூலதனத் தொகையில் 8358 கடன்களுடன் தொடர்புடைய ரூபா 936 மில்லியன் தொகை அச்சுவேலி, சுன்னாகம் மற்றும் கிளிநொச்சி போன்ற வட மாகாணக் கிளைகளால் வழங்கப்பட்டிருந்தன. இக் கடன்கள் 2009 ஆம் ஆண்டில் இடம்பெற்ற போரின் பின்னர் ஐடிபி முகாம்களில் உள்ள அகதிகளிற்கு வீடமைப்புக் கடன்கள், சுயதொழில் கடன்கள், விவசாயக் கடன்கள் மற்றும் கொள்வனவுக் கடன்களாகவும் வழங்கப்பட்டிருந்தன. மேற்படி கடன்களை வழங்கும் போது முறையான அடையாளப்படுத்தல்கள், முகவரிகளைச் சரிபார்த்தல் மற்றும் ஏனைய வழமையான கடன் பரீட்சிப்புக்கள் போன்றன வங்கியால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வங்கியின் பணிப்பாளர் சபை (பீஓடி) 2015 மே மாதத்தில் அறுனூறு பயிலுநர் பதவியணி உதவியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. ஆட்சேர்ப்பு செயன்முறையானது மூன்று ஆண்டுகளிற்கு மேலான நீண்ட காலப்பகுதியை எடுத்திருந்தது. சரியான ஆட்சேர்ப்புத் திட்டம் (எஸ்ஓஆர்) அங்கீகரிக்கப்படாமல், ஒவ்வொரு ஆட்சேர்ப்பு விடயத்திலும் ஆட்சேர்ப்பு அடிப்படை மற்றும் முறைகள் தொடர்பாக சபை அங்கீகாரங்களை பெறுதல் வங்கியின் வழமையான நடைமுறையொன்றாகும். மேற்படி ஆட்சேர்ப்பு செயன்முறையில் வங்கியானது சபைக் கூட்டங்களில் காலத்திற்குக் காலம் வெற்றிடங்களின் எண்ணிக்கையை 600 தொடக்கம் 1500 வரை மாற்றியிருந்தது. எவ்வாறாயினும், போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் குறுகிய

பட்டியல் இல்லாமல் வங்கியானது 1800 ஊழியர்களின் ஆட்சேர்ப்பிற்காக 1:6.5 நேர்முகப்பரீட்சை விகிதத்தின் கீழ் 11,520 பேருக்கு நேர்முகப்பரீட்சையை நடாத்தியிருந்தது. நேர்முகப்பரீட்சைக் குழுவின் உறுப்பினர்களிற்கான அமர்வுப் படிகளாக ரூபா 4.10 மில்லியனையும் ஏனைய செலவினங்களிற்காக ரூபா 3.39 மில்லியனையும் வங்கி செலவிட்டிருந்தது.

மக்கள் வங்கி

1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமானது 20,000,000 சாதாரண பங்குகளிற்கு வரையறுக்கப்பட்டிருந்தது. வங்கி 999,960 பங்குகளை மாத்திரம் வழங்கியிருந்த போதிலும், ரூபா 12,202 மில்லியன் தொகையான நிலுவை மூலதன ஒதுக்கீடானது அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்தை விஞ்சிய 143,040,000 பங்குகளிற்கு சமமானதாக இருந்தது. எவ்வாறாயினும், நிலுவை மூலதன ஒதுக்கீட்டுக் கணக்கில் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 12,202 மில்லியன் தொகையை மக்கள் வங்கி அதிகாரச்சட்டத்தை திருத்துவதன் மூலம் இன்னும் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது.

பேராதனை பல்கலைக்கழக விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் நிலையான வைப்புக்களிலிருந்து காசை மீளப்பெற்ற நிதி மோசடி

381/76 ஆம் இலக்க பொது அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் பிரகாரம், அறக்கட்டளையில் அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளரால் நிறுதிவைக்கப்பட்டுள்ள வைப்புக்கள் உள்ளடங்கலாக கூட்டுறவுச் சங்கங்கள், கம்பனிகள், நிறுவனங்கள், கழகங்கள், மன்றங்கள் மற்றும் அதே மாதிரியான நிறுவனங்கள் அல்லது அமைப்புக்களின் வைப்புக்களை மீளக் கொடுப்பனவு செய்தல் வைப்பு பெறுகைச் சீட்டில் குறிப்பிடப்பட்டவாறு வைப்பாளரின் பெயரில் கணக்குப் பெறுநர் மாத்திரம் காசோலையூடாக மேற்கொள்ளப்பட வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பங்களின் கீழும் அத்தகைய வைப்புக்கள் மீது காசு செலுத்தப்படக்கூடாது அல்லது பிராந்திய முகாமையாளரின் அனுமதியின்றி இரத்துச் செய்யப்பட்ட அத்தகைய வைப்புக் கணக்குகள் மீதான காசோலைகள் தொடர்பான அறிவுறுத்தல்களை கணக்குப் பெறுநரிற்கு வழங்கப்படக்கூடாது. எவ்வாறாயினும், ரூபா 93.29 மில்லியன் தொகையான பிஜீஐஎஸ் (பேராதனை பல்கலைக்கழக விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம்) இன் 14 நிலையான வைப்புச் சான்றிதழ்கள் 381/76 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அறிவுறுத்தல்களை மீறி காசால் அதிகரிக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது.

தேசிய சேமிப்பு வங்கி

ரூபா 94.7 மில்லியன் தொகையான மோசடியான மீளப்பெறல்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக காணப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 0.7 மில்லியன் அல்லது 0.81 சதவீதத்தை சுட்டிக்காட்டுகின்றது. மேற்படி மொத்த மீதி ஓராண்டிற்கு மேலாக நிலுவையாக காணப்பட்டதுடன் ரூபா 11.2 மில்லியன் தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக காணப்பட்டது.

1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி அதிகாரச்சட்டத்தின் 47(4) ஆம் பிரிவின் பிரகாரம், உரிமை கோரப்படாத வைப்பு ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்ட வைப்புக்களிலிருந்து வாடிக்கையாளர்களிற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் வங்கிக்கான திரட்டிய நிதியத்திலிருந்து திறைசேரிச் செயலாளரால் கூடிய விரைவில் செலுத்தப்பட வேண்டும். 2012 – 2017 காலப்பகுதியின் போது ரூபா 275.42 மில்லியனை வங்கி செலுத்தியிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்குறிப்பிட்ட தொகையை திறைசேரிச் செயலாளர் மீளளித்திருக்கவில்லை.

வங்கித் துறையின் மொத்த வைப்பு அடிப்படை 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை 141 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. ஏழு ஆண்டு காலப்பகுதியின் போது என்எஸ்பீ இன் சந்தைப் பங்கு 13.4 சதவீதத்திலிருந்து 9.9 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்த போது விளைந்த 79 சதவீத வளர்ச்சியை மாத்திரமே குறித்த காலப்பகுதியின் போது என்எஸ்பீ அடைந்திருந்தது. மேலும், வங்கித் துறையிலுள்ள மொத்தச் சொத்துக்களின்

பிரகாரம் வங்கியின் சந்தைப் பங்கு 2014 ஆம் ஆண்டில் 11 சதவீதத்திற்கு அதிகமாக இருந்த போதிலும் அதன் பின்னர் 11 சதவீதத்தை விடக் குறைவாக காணப்பட்டு குறையும் போக்கை காட்டுகின்றது. எவ்வாறாயினும், வங்கியானது 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் உரிமம் பெற்ற விசேட வங்கித் துறையில் 75 சதவீத சந்தைப் பங்கிற்கு கூடுதலாக பேணியிருந்ததுடன் இது 2017 ஆம் ஆண்டில் 74 சதவீதத்திற்கு குறைவடைந்திருந்தது.

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 43 விலை கூறப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் உள்ள ஒட்டுமொத்த முதலீடுகள் ரூபா 6,249,271,030 தொகையாகும். 32 கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 4,350.50 மில்லியன் தொகையான முதலீடுகளின் சந்தைப் பெறுமதி 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,449.08 மில்லியன் பெறுமதியால் அல்லது 31 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

மேற்படி பிணைமுறிப் பெறுகை தொடர்பாக, சலுகை குறிப்பாணையின் (Offering Memorandum) பிரகாரம் உட்கட்டமைப்புத் துறையிலுள்ள அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில்முயற்சிகள் அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது கட்டுப்பாட்டிலுள்ள ஆரம்ப செயற்திட்டங்களிற்கான கடன்களின் பணவளிப்பு தேவைப்பாட்டுடன் இணங்காமல் பெறுகைகளின் மொத்த தொகை பிணைமுறி பெறுகை பெறப்பட்ட திகதியிலிருந்து திறைசேரிப் பிணைமுறிகளிலும் நிலையான வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன.

வங்கியானது ரூபா 299,304 மில்லியன் தொகையான கடன் வசதிகளை வழங்கியிருந்ததுடன் அதில் ரூபா 4,987 மில்லியன் அல்லது 1.7 சதவீதம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடற்ற கடன் மீதிகளாக காணப்பட்டன. மேலும், மொத்த தங்க நகை அடகுக் கடனில் ரூபா 410 மில்லியன் அல்லது 1.88 சதவீதம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடற்றவையாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

வங்கியின் தலைமை அலுவலகத்திற்கான 18 மாடிக் கட்டிடத்தை அமைப்பதற்காக 2008 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 35.23 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்தப் பகுதி உயர் பாதுகாப்பு வலயத்தின் கீழ் காணப்படுவதனால் முன்னைய ஆண்டுகளின் போது நிர்மாண வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படாமல் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இது நடைமுறை வேலையாக காட்டப்பட்டிருந்தது.

அரச ஈட்டு முதலீட்டு வங்கி

2017 சனவரி 01 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ஏனைய சொத்துக்களின் கீழ் கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு என ரூபா 24.23 மில்லியன் தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டின் போது ரூபா 5.66 மில்லியன் மற்றும் ரூபா 7.54 மில்லியன் தொகைகள் இக் கணக்கிற்கு முறையே வரவு வைக்கப்பட்டும் செலவு வைக்கப்பட்டும் காணப்பட்டன.

அதற்கிணங்க, ரூபா 22.35 மில்லியன் வரவு மீதி நிதிக்கூற்றுக்களில் ஏனைய சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன் இத் தொகைக்கான அறவிடும் தன்மை போதிய தகவல்கள் காணப்படாமையால் நிச்சயமற்றதாக காணப்பட்டது.

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணையின் பிரகாரம், 2017 திசெம்பர் மாத இறுதியில் செலுத்த வேண்டிய பிடித்து வைத்தல் வரி (தலைமை அலுவலகம்) ரூபா 1.15 மில்லியனாக காணப்பட்டது. எவ்வாறாயினும், இது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் ரூபா 2.80 மில்லியன் அசாதாரண வரவு மீதியாக காட்டப்பட்டிருந்தது. மேலும், கிளைகளின் பிடித்து வைத்தல் வரியில் ரூபா 204,488 அசாதாரண வரவு மீதி அவதானிக்கப்பட்டிருந்தது.

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறப்படுவதற்கான காசோலைகள் கணக்கில் ரூபா 14.26 மில்லியன் அசாதாரண வரவு மீதி காணப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஏனைய கடன்பட்டோர் பெறுமதி அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகள் இரண்டிலும் வங்கியின் திரவத்தன்மையானது

உரிமம் பெற்ற விசேட வங்கித் துறையுடன் அட்டவணை 16 இல் காணப்படுகின்றது.

	2017		2016	
திரவத்தன்மை விகிதங்கள்	**எஸ்எம்ஐபீ**	**எல்எஸ்பீ துறை**	**எஸ்எம்ஐபீ**	**எல்எஸ்பீ துறை**
திரவத்தன்மை சொத்துக்கள்/ வைப்புக்கள்	22.10	61.6	22.82	61

அட்டவணை 16 – வங்கியின் திரவத்தன்மை உரிமம் பெற்ற விசேட வங்கித்துறையுடன் காணப்படுகின்றது

2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை உரிமம் பெற்ற விசேட வங்கித் துறையினை அடிப்படையாகக் கொண்ட வங்கியின் வைப்புக்களை அடிப்படையாகக் கொண்ட சந்தைப் பங்கு 2 அடிப்படை புள்ளிகளால் (basis points) அதிகரித்திருந்தது. மேலும், 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை உரிமம் பெற்ற விசேட வங்கித் துறையினை அடிப்படையாகக் கொண்ட வங்கியின் சொத்துக்களை அடிப்படையாகக் கொண்ட சந்தைப் பங்கு 17 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரித்திருந்தது.

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைக் கடன்கள் ரூபா 33,577 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 7,469 மில்லியன் தொகை செயற்பாடற்ற கடன்களாக இனங்காணப்பட்டிருந்ததுடன் அது மொத்த நிலுவைக் கடன்களில் 22 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

வங்கியால் பேணப்பட்ட கணக்கீட்டு முறையின் பிரகாரம், கிளை அறிவுரைக் கணக்கில் (branch advice account) செலவு மீதி காணப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிளை அறிவுரைக் கணக்கில் ரூபா 7,529,740 அசாதாரண வரவு மீதி அவதானிக்கப்பட்டது.

வங்கிக் கணக்கிணக்கத்திலுள்ள ரூபா 1.79 மில்லியன் நீண்டகால நிலுவை மீதி சமர்ப்பிக்கப்படாத காசோலைகளாக காணப்பட்டதுடன் 0001630270 மற்றும் 0001630478 ஆம் இலக்க காசோலைகள் தெளிவாக்கப்படாமல் முன்கொண்டுவரப்படுகின்றன.

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிளைகளில் ரூபா 23.59 மில்லியன் அசாதாரண செலவு மீதி கோரிக்கை உறுதிச்சீட்டுக்களாக காணப்படுகின்றன. இதனால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்கொடுத்தோர் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

1997 இன் 7 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் IV ஆம் பகுதியின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம், வங்கியின் வழங்கப்பட்ட மூலதனம் ரூபா 1,000 மில்லியனாக இருக்க வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் கூறப்பட்ட மூலதனம் ரூபா 962.09 மில்லியனாக இருந்தது.

2014 சனவரி 17 ஆம் திகதிய நிதித்துறைகளின் ஒன்றிணைப்பு தொடர்பான பிரதான திட்டத்துடன் சேர்த்து வழங்கப்பட்ட 02/17/402/0073/002 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கி (சீபீஎஸ்எல்) நெறிப்படுத்தலின் பிரகாரம், வங்கியானது 2018 சனவரி 01 இல் உள்ளவாறு அதன் உள்ளக மூலதன மீதியாக ரூபா 5,000 மில்லியனை பேண வேண்டிய போதிலும் இதனுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

வங்கியின் மனித வளங்கள் செயன்முறையை தரமுயர்த்தும் நோக்கத்திற்காக 2016 செப்தெம்பர் தொடக்கம் 2018 மார்ச் வரை மதியுரைஞர் – மனித வள அபிவிருத்தி மற்றும் நிர்வாகத்திற்காக ரூபா 3.83 மில்லியனை வங்கி செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், அவரால் தேவைப்பட்ட கடமைகளை நிறைவேற்ற முடியாதிருந்ததுடன் தேவையற்ற கிரயம் அக் காலப்பகுதியின் போது ஏற்படுத்தப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் போது சாதாரண விலைவீதத்தை விடக் கூடுதலான வீதத்தில் வழங்கப்பட்டிருந்த 15,404 நிலையான வைப்புக்களிற்காக ரூபா 110.23 மில்லியன் மேலதிக வட்டிச் செலவினம் ஏற்பட்டிருந்தது.

வங்கி உயர் கிரய நிலையான வைப்புக்கள் மீது உயர்ந்தளவு தங்கியிருப்பதுடன் 84 சதவீத வைப்பு அடிப்படை நிலையான வைப்புக்களை கொண்டிருந்தது. மேலும், குறுங்கால வைப்பு அடிப்படை மீது வங்கி உயர்ந்தளவு தங்கியிருக்கின்றமையை இது சுட்டிக்காட்டுகின்றது.

வங்கியின் வெளிவாரியான தரப்படுத்தல் கணிசமானளவு வீழ்ச்சியடைந்திருந்ததுடன் பிற்ச் (Fitch) தரப்படுத்தல் அறிக்கையின் பிரகாரம், அவை BBB(lka) Stable இலிருந்து BBB(lka) Negative ஆக தேசிய நீண்ட கால தரப்படுத்தலை உறுதிப்படுத்தியிருந்தன.

வங்கி கூட்டுரிமை கடன்களை விளம்பரப்படுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக ரூபா 1,069,505 விளம்பரப்படுத்தல் செலவினம் ஏற்பட்டிருந்தது. மேலும், இது தொடர்பில் கிரய நன்மை பகுப்பாய்வு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் செயன்முன்னேற்றம் எதுவும் அடையப்பட்டிருக்கவில்லை.

பிராந்திய அபிவிருத்தி வங்கி

2017 இல் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 1,255.60 மில்லியன் வரிக்கு முன்னரான தேறியலாபத்துடன் ஒப்பிடும் போது ஒப்பிடும் போது ரூபா 2,190,725,745 ஆன வரிக்கு முன்னரான தேறியலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 935.12 மில்லியன் அல்லது 74 சதவீத முன்னேற்றத்தை சுட்டிக்காட்டுகின்றது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வருமானம் ரூபா 4,573 மில்லியனால் அதிகரித்தமை கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 22,222 மில்லியனால் அதிகரித்ததன் மூலம் தொடரப்பட்டிருந்ததுடன் நிலையான

2016 ஒக்தோபர் 27 ஆம் திகதிய 1/2015(i) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவின் பிரகாரம், உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரித்துடைய உத்தியோகத்தரொருவர் அலுவலக வாகனத்தை பயன்படுத்துவதற்கோ அல்லது ரூபா 50,000 மாதாந்த போக்குவரத்துப் படியினையும் உரிய பதவிக்கு பிரயோகிக்கக்கூடிய மாதாந்த எரிபொருள் படியினையும் பெறுவதற்கோ உரித்துடையவராவர். இதற்கு முரணாக, 2016 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 15/47/எச்ஆர்/2016 ஆம் இலக்க மனித வளம் மற்றும் வேதனங்கள் குழு எச்.ஆர்.எஸ்.சீ.பி இன் பிரகாரம் அத்தகைய படியினை செலுத்துவதற்கு வங்கி அங்கீகரித்திருந்தது. மேலும், வங்கியானது 04 உத்தியோகத்தர்கள் சார்பாக 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 300,000 மேலதிக வாகனப் படியினை செலுத்தியிருந்தது.

வங்கி அரசாங்க கடன் வட்டி கட்டுப்பாட்டு பெயரளவுக் (பொ/பே கணக்கு 1420100004) கணக்கு மீதி ஆண்டின் இறுதியிலுள்ளவாறு பூச்சியமாக இருக்க வேண்டும். ஆண்டின் போது 1% மாத்திரம் தீர்வைசெய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 9,238,545 மீதி தீர்வைசெய்யப்படாதிருந்தது.

வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் ரூபா 2,179 மில்லியனால் அதிகரித்தமை நிலையான வைப்புக்கள் ரூபா 7,844 மில்லியனால் அதிகரித்ததன் மூலம் தொடரப்பட்டிருந்தது என்பன இவ் முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

எவ்வாறாயினும், வங்கியானது 2017 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டிற்காக 10 சதவீத ஆகக் குறைந்த மூலதன போதுமை விகிதத்தை பேணுவதற்கு தவறியிருந்ததுடன் 2017 யூன் 30 இல் உள்ளவாறு 9.26 சதவீதத்தில் காணப்பட்டது. மூலதன போதுமை விகிதமானது 11.25 சதவீதமாகவுள்ள ஆகக் குறைந்த தேவைப்பாட்டினூடாக 2017 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் 8.67 சதவீதத்தில் காணப்பட்டது. 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் இறுதியில் விகிதமானது 11.27 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் இது 11.25 சதவீத ஆகக் குறைந்த நியதிச் சட்டத் தேவைப்பாட்டை மிகவும் அண்மித்திருந்தது.

3.2 சதவீத சராசரி உரிமம் பெற்ற விசேட வங்கி விகிதத்துடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டிற்காக 6.45 சதவீத உயர் தேறிய வட்டி எல்லை அவதானிக்கப்பட்டது.

54.4 துறை விகிதத்துடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டிற்கான வங்கியின் செயற்பாட்டுச் செலவினங்களிற்கான பதவியணிக் கிரயம் 72.70 சதவீதமாக காணப்பட்டது.

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 130,325 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 4,191 மில்லியன் அல்லது 3.22 சதவீதக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு செயற்பாடற்ற வகைப்படுத்தலில் காணப்பட்டது. வங்கியின் செயற்பாடற்ற கடன் விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் 2.86 சதவீதத்திலிருந்து 3.22 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

2008 இன் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், விவசாயம், கைத்தொழில், வியாபாரம், வர்த்தகம், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் என்பவற்றின் அபிவிருத்தியை மேம்படுத்துதல் மற்றும் பெண்களை வலுவூட்டுதல் மற்றும் நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளிற்கு நிதி உதவிகளை வழங்குதல் என்பவற்றின் மூலம் இலங்கையின் ஒட்டுமொத்த பிராந்திய பொருளாதார அபிவிருத்திக்கு வசதியளித்தல் வங்கியின் பிரதான குறிக்கோள்களாகும். எவ்வாறாயினும், பிரதேச அபிவிருத்தி வங்கி அதிகாரச்சட்டத்தின் மூலம் விசேடமாக அங்கீகரிக்கப்பட்ட பகுதிகள் மீது 2017 ஆம் ஆண்டிற்கான மொத்த கடன் இலக்கிலிருந்து 50 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மிகுதி 50 சதவீதம் வீடமைப்பு, நுகர்வு, வைப்புக்களுக்கெதிரான கடன்கள், குத்தகை, தங்க நகை அடகு முற்பணங்கள் மற்றும் பதவியணியினர் கடன் போன்ற பரப்புக்களிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி

வங்கியின் நிலையான வைப்பு முதலீடுகள் வங்கியின் மொத்தச் சொத்துக்களின் 56 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. கடன்கள் மற்றும் முற்பணங்கள் மொத்தச் சொத்துக்களின் 44 சதவீதத்தை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. வங்கியானது அதன் வாடிக்கையாளர்களிற்கு கடன்களை வழங்காமல் ஆபத்தற்ற வட்டி வீதத்தில் நிலையான வைப்புக்களில் அதன் பணத்தின் பெரும்பகுதியை முதலீடு செய்திருந்தது. கைத்தொழில், விவசாயம், வணிக ரீதியான, நிர்மாணம் மற்றும் ஏனைய தொழில்முயற்சிகளை மேம்படுத்தல், ஸ்தாபித்தல், விரிவுபடுத்துதல், நவீனமயப்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தலில் உதவி செய்யும் வங்கியின் ஆரம்ப நோக்கத்துடன் இது முரண்பட்டுள்ளது.

ரூபா 834 மில்லியன் மொத்த வட்டி வருமானத்தில், 2017 ஆம் ஆண்டிற்காக கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்குவதன் ஊடாக உழைக்கப்பட்ட வட்டி வருமானம் 49 சதவீதம் அல்லது ரூபா 405 மில்லியன் மாத்திரமேயாகும். அதே போல் ஐ.அ.டொலர் கடன் மற்றும் வைப்புக்களை மீள்பெறுமதியிடுவதன் ஊடாக உழைக்கப்பட்ட வெளிநாட்டு நாணய இலாபம் ரூபா 12 மில்லியனாகும். மேற்படி வருமானமின்றி ரூபா 62 மில்லியன் செயற்பாட்டு நட்டமொன்று வங்கியில் நீடித்திருக்கக்கூடும்.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான வங்கியின் வைப்பு அடிப்படை ரூபா 22 மில்லியனால் அல்லது 6 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. வங்கியின் வைப்பு அடிப்படை மிகவும் எல்லையிலுள்ளதுடன் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களில் 9 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 4,037 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 1,502 மில்லியன் அல்லது 37.2 சதவீதம் செயற்பாடற்றவையாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. 37.2 சதவீத செயற்பாடற்ற விகிதம் 3.22 சதவீத சாராசரி உரிமம் பெற்ற விசேட வங்கி விதத்தை விட மிகவும் அதிகமாகவிருந்தது.
8.51 சதவீத உயர் தேறிய வட்டி எல்லை மற்றும் 35.74 சதவீத தேறியலாப விகிதம் என்பன முறையே 3.76 சதவீதம் மற்றும் 9.3 சதவீத சராசரி உரிமம் பெற்ற விசேட வங்கி (எல்எஸ்பீ) விகிதத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அறிக்கையிடப்பட்டிருந்தன.

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியின் மொத்த மூலதனப் போதுமை விகிதம் 83.96 சதவீதமாக இருந்ததுடன் இது 11.25 சதவீத ஆகக் குறைந்த தேவைப்பாட்டை விட உயர் மட்டத்தில் மிகையாக காணப்பட்டது.

வங்கியின் திரவச் சொத்துக்கள் விகிதம் 20 சதவீத ஆகக் குறைந்த தேவைப்பாட்டுடன் ஒப்பிடும் போது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1,429.62 சதவீதத்திற்கு மேலும் அதிகரித்திருந்தது.

பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைந்துகொள்ளும் எதிர்பார்ப்பின் காரணமாக சபை அங்கீகரித்த வங்கியின் தந்திரோபாய நோக்கங்கள் மற்றும் கூட்டிணைந்த பெறுமதிகள் என்பன காணப்படவில்லை.

கடன்கள் மற்றும் முற்பணங்கள், தங்க நகை அடகு, நிலையான வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள், கல்வி நிறுவனங்களுடனான ஸ்தாபித்தல் தொடர்பு மற்றும் கல்விசார் கடன் திட்டங்களை மேம்படுத்துவதற்காக எம்ஓயூஎஸ் ஐ கைச்சாத்திடுதல், புதிய கண்டுபிடிப்பு முதலீடாக நுண் நிதி நிறுவனங்களிற்கான கடன்கள், மரக்கறிகள் மற்றும் பழங்களை அறுவடை செய்வதற்காக பால் பண்ணை விவசாயிகளிற்கான கடன் வசதிகளை வழங்குதல், கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துதல் போன்ற பரப்புக்களிற்காக 2017 ஆம் ஆண்டில் வணிகத் திட்டத்தின் ஊடாக வருடாந்த இலக்குகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் மேற்படி பரப்புக்களின் உள்ளபடியான செயலாற்றல் முறையே ரூபா 163 மில்லியன், ரூபா 31 மில்லியன், ரூபா 319 மில்லியன், ரூபா 24 மில்லியன், ரூபா 45 மில்லியன், ரூபா 950 மில்லியன், ரூபா 28.58 மில்லியன் மற்றும் ரூபா 390.4 மில்லியனால் இலக்குகளை விட மிகவும் குறைவாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

பெருந்தோட்டக் கைத்தொழில்

நாட்டின் துரித அபிவிருத்திக்காக ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்டு பிரதான பெரும்போகப் பயிர்களின் விளைச்சல், இலாபமீட்டும் தன்மை மற்றும் நிலைத்து நிலைக்கும் தன்மை ஆகியவற்றை மேம்படுத்துதல் ஆகியன இப்பிரிவிலிருந்து எதிர்பார்க்கப்படும் விளைவாகக் காணப்பட்டது. இந்த எதில்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்காக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலனைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு மற்றும் சட்டரீதியான 14 நிறுவனங்கள் மூலம் பின்வரும் தொழிற்பாடுகள் ஆற்றப்பட வேண்டியிருந்தன.

- பெரும்போக கைத்தொழில் விடயங்களுக்குரிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல் பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- பெரும்போகப் பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கு தேவையான மண்வள மற்றும் ஏனைய வசதிகளை பெற்றுக்கொடுத்தல்.
- பெருந்தோட்டத் துறையின் விளைச்சலுக்காக சர்வதேச போட்டியினை அதிகரித்தல்.
- பெரும்போகப் பயிர்களின் அடிப்படையில் அமைந்துள்ள ஒன்றுதிரட்டிய பெறுமதியை அதிகரித்தல் சம்பந்தமான தொழில்களை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தேயிலை மற்றும் இறப்பர் தொடர்பான அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல்.
- தேயிலை ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல்.
- தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களை துண்டாக்குதல் தொடர்பான அனுமதிப்பத்திரம் வழங்குதலும் கட்டுப்படுத்தலும்.
- பல்லினப் பயிர் நாற்று மற்றும் பண்ணை முறைமையினூடாக பெருந்தோட்ட நிலங்களை உச்ச அளவில் பயன்படுத்துதலும் அதன் மூலம் உற்பத்தி மற்றும் சேவை வாய்ப்புகளை அதிகரித்தலும்.
- தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு தொழில்களின் அபிவிருத்தி மற்றும் அதன்மூலம் ஆராய்ச்சிகள் தொடர்பான நடவடிக்கைகள்.
- அமைச்சுடன் இணைந்த முயற்சிகளுக்கு முதலீட்டு மற்றும் கட்டமைப்பு ரீதியிலான மாற்றங்களை அறிமுகப்படுத்தல்.

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களினால் மேற்குறிப்பிட்ட தொழிற்பாடுகளை மேற்கொள்ளல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் சுருக்கம் வருமாறு

பிரதான மூன்று பெருந்தோட்டப் பயிர்களினது உற்பத்தி

இலங்கையின் பெருந்தோட்டத் துறைக்குச் சொந்தமான தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை தொடர்பான 2017ஆம் வருடத்தின் உற்பத்திகளை 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேயிலை மற்றும் இறப்பர் முறையே 5.16 வீதத்தினாலும் 5.06 வீதத்தினாலும் அதிகரித்திருந்ததுடன், தென்னை உற்பத்தி 18.63 வீதத்தினால் குறைவடைந்திருந்தது. விபரம் அட்டவணை 17 இல் உள்ளது. அதேபோன்று முன்னைய ஆண்டில் தென்னை உற்பத்தியானது மொத்தத் தேசிய உற்பத்தியில் 0.7 வீதமாகக் காணப்பட்டாலும், மீளாய்வாண்டின் அது 0.6 வீதமாகக் குறைவடைந்திருந்தது.

	2016	2017		
தேயிலை கி.கிராம். மில்லியன்	292.6	307.7	15.1	5.16
இறப்பர் கி.கிராம். மில்லியன்	79.1	83.1	4	5.06
தென்னை கி.கிராம். மில்லியன்	3,011	2450	(561)	(18.63)

அட்டவணை 17 .....பிரதான பெரும்போக பயிர் உற்பத்தி குறைவடைதல் மூலம்..... இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2016

குத்தகை வாடகை அறவிடாமை

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்துக்கும் சொந்தமான 571 தோட்டங்கள் 1995 ஆம் ஆண்டு 23 பிரதேசப் பெருந்தோட்ட கம்பனிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தன. அவற்றில் மூன்று பெருந்தோட்ட கம்பனிகளில், 1994 திசெம்பர் 31 ஆம் திகதியன்று தேறிய சொத்தின் பெறுமதி ரூபா. 200 மில்லியனைத் தாண்டாததன் காரணமாக குத்தகை வாடகை ஒப்பந்தத்தின் படி அக்கம்பனிகளிலிருந்து 1995 ஆம் ஆண்டு முதல் குத்தகை வாடகை அறவிட முடியாமல் போயுள்ளது. எனினும் 2011 ஆம் வருடமாகும் பொழுது அக்கம்பனிகளின் தேறிய சொத்தின் பெறுமதி ரூபா. 200 மில்லியனைத் தாண்டியிருப்பது இனங்காணப்பட்ட போதும், ஒப்பந்தங்களில் குத்தகை வாடகை தொடர்பான தேவையான திருத்தங்களைச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததன் காரணமாக அக்கம்பனகளின் மூன்றின் கீழுள்ள 45 தோட்டங்களின் மூலம் அரசுக்கு எந்தவித குத்தகை வாடகையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. குருனாகல் பெருந்தோட்ட சபையிடமிருந்து 2017 திசெம்பர் 31 ஆம் திகதியன்று அறவிடப்பட வேண்டிய மொத்தக் குத்தகை வாடகையான ரூபா. 175,481,744 தொகையில் ரூபா. 129,760,612 குத்தகை வாடகை 2009 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், அவ் வாடகையினை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மந்த கதியிலேயே காணப்பட்டன.

வெளிநாட்டு நிதியுதவித் திட்டங்களின் முன்னேற்றம்

சிறு தேயிலை மற்றும் இறப்பர் தோட்ட புத்தூக்கத் திட்டத்தின் கீழ் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கான சந்தை பன்முகப்படுத்தல், சந்தையை இலக்காகக் கொண்ட உற்பத்தித் துணைச் சேவைகளை மேற்கொள்ளல் மற்றும் சிறு தேயிலை மற்றும் இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் என்பவற்றுக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா. 810.89 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை அது தொடர்பான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம் பெறப்பட்டிருக்கவில்லை.

வெலிகம தென்னை இலை வாடுதல் மற்றும் சிதைவடைதல் நோய்த் தடுப்பு வேலைத்திட்டம்

வெலிகம தென்னை இலை வாடுதல் மற்றும் சிதைவடைதல் நோய்த் தடுப்பு வேலைத்திட்டத்திற்காக 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களுக்குமாக மொத்தமாக ரூபா. 475.36 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந் நோய்த் தொற்றினால் நீக்கப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 293,306

ஆகவிருந்ததுடன் அதற்கான நட்டஈடாக ரூபா. 327.73 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் இந்நோய்க்கு எதிராகத் தாக்குப் பிடிக்கக்கூடிய சிறந்த தென்னை இனமொன்று கண்டுபிடிக்கப்பட்டிருந்த போதும், முற்றாக நோயினைத் தடுக்க முடியாமல் போயிருந்தது.

இலங்கை இறப்பர் பிரதான திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

2016 ஜூலை 26 ஆம் திகதி அமைச்சரவையினால் இலங்கை இறப்பர் பிரதான திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் இலக்கில் இறப்பர் செயலகத்தினை ஆரம்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இச்செயலகத்திற்கு தேவையான பணிக்குழுவிற்காக அனுமதிக்கப்பட்ட 05 ஊழியர்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால், இலங்கை இறப்பர் பிரதான திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் ஒரு வருடத்திற்கும் மேலான காலத்தினால் தாமதமடைந்திருந்தது.

வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டடங்கள்

2016 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2017 திசெம்பர் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அமைச்சின் கீழிருந்த இரண்டு நிறுவனங்களுக்காக வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடங்கள் பாவிக்கப்படாது ரூபா. 2.49 மில்லியன் வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. பத்தரமுல்ல பிரதேசத்தில் 2009 பெப்ரவரி 27 ஆம் திகதி ரூபா 59.3 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 75 பேர்ச் பரப்புள்ள காணி பாவனையற்ற நிலையில் காணப்படும் நிலையில், அங்கு இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதான காரியாலயத்தினை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்காது அப்பிரதேசத்திலேயே 13,157 சதுர அடி பரப்புள்ள ஒரு கட்டிடம் 2017 பெப்ரவரி மாதம் தொடக்கம் ரூபா. 2.65 மில்லியன் மாதாந்த வாடகை அடிப்படையில் மூன்று வருடங்களுக்காக ரூபா. 95.32 மில்லியன் வாடகை ஒப்பந்தத்திற்கிணங்க பெறப்பட்டிருந்தது.

தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை தோட்டங்கள் துண்டாக்கப்படல்

உள்ளூராட்சி மன்றங்களில் காணிகளை துண்டாக்குவதற்கான அனுமதி வழங்கப்படுகையில், தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை தோட்டங்கள் (துண்டாக்கலைக் கட்டுப்படுத்தல்) சபையின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. 2005 இன் 20 ஆம் இலக்க தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை (துண்டாக்கலைக் கட்டுப்படுத்தல்) (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1958 இன் 2 ஆம் இலக்க தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை தோட்டங்கள் (துண்டாக்கலைக் கட்டுப்படுத்தல்) சட்டத்தின் 12(8) மற்றும் 24 பிரிவுகளுக்கிணங்க தேயிலை, இறப்பர் (துண்டாக்கலைக் கட்டுப்படுத்தல்) சபையினால் குறித்த செயற்பாடுகளை மேற்கொள்ளும் சட்டங்கள் தொடர்பில் வர்த்தமானியில் அறிவித்து பாராளுமன்றத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

உள்நாட்டுத் தேயிலையின் ஏற்றுமதி குறைவடைந்தமை

மீளாய்வாண்டின் மொத்தத் தேயிலை ஏற்றுமதி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்திருந்த போதும், உள்நாட்டு உற்பத்தித் தேயிலை ஏற்றுமதி 2,679,128 கிலோவினால் குறைவடைந்திருந்தது. மறு ஏற்றுமதி தேயிலையின் அளவு 2,892,715 கிலோவினால் அதாவது 36 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மறு ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு கடந்த வருடத்தை விட 65 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை இதில் தாக்கம் செலுத்தியிருந்தது. மீளாய்வு வருடத்திலும் மற்றும் கடந்த இரண்டு வருடங்களிலும் உள்நாட்டு தேயிலையின் ஏற்றுமதியுடன்

ஒப்பிடுகையில் இறக்குமதி செய்யப்பட்ட தேயிலையின் ஏற்றுமதி அளவு அதிகரித்திருந்தமை அட்டவணை 16 இல் காட்டப்பட்டுள்ளது.



அட்டவணை... உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட தேயிலை ஏற்றுமதி

தேயிலை விற்பனை ஊக்குவிப்பு

"இலங்கை தேயிலை உலகலாவிய ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தின்" கீழ் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கான உற்பத்தி மற்றும் புத்தூக்கச் செயற்பாடுகளுக்காக தனியார் நிறுவனமொன்றுடன் அ.டொ. 2.26 மில்லியன் அதாவது ரூபா. 328.42 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதியின் மீது இலங்கை தேயிலை சபை 2015 நவம்பர் 06 ஆம் திகதி ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் அதற்காக ரூபா. 195.52 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இச்செயன்முறைக்குச் சமாந்தரமாக ஊடக நடவடிக்கைகளுக்கான நிறுவனமொன்றினைத் தெரிவு செய்ய முடியாது போனதன் காரணமாக, எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவு பெற்றிருக்கவில்லை. இதன் காரணமாக குறித்த நிறுவனத்தினால் தொலைக்காட்சி விளம்பர புத்தூக்கச் செயற்பாடுகளை 2016 ஏப்ரல் மாதமளவில் நிறைவு செய்திருந்த போதும், 2018 ஆகஸ்ட் 31 ஆம் திகதியாகும் வரை அவ்விளம்பரங்களை ஒளிபரப்ப முடியாமல் போயிருந்தது.

தொழிற்பாட்டு செயற்பாடுகள்

2013 ஆம் ஆண்டு ரூபா. 58.37 மில்லியன் செலவில் கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் அமைக்கப்பட்ட தேயிலை விற்பனை நிலையத்தின் நடவடிக்கைகள் மீளாய்வாண்டில் இடைநிறுத்தப்பட்டு மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. தேயிலை ஊக்குவிப்பு உபாயமொன்றாக ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டமானது ஆரம்பத்திலிருந்தே இலக்கு வைக்கப்பட்ட விற்பனை நிலையங்கள் மற்றும் எதிர்கால திட்டங்கள் என்பனவற்றைக் கருத்தில் கொண்டு உயர் பலன் தரும் வகையில் செயற்படுத்தக்கூடிய எதிர்கால வேலைத்திட்டமொன்று சபையிடம் காணப்படாததன் காரணமாக இத்திட்டத்தினை பலனுள்ளதாக செயற்படுத்துவதற்கு முடியாமல் போயுள்ளது. இந்நிலையத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதியாகும் பொழுது ரூபா. 42.99 மில்லியன் நட்டத்தினை ஏற்க

வேண்டிய நிலை சபைக்கு ஏற்பட்டிருந்தது.

மீள்நடுகை உதவித்தொகை வழங்குதல்

மீளாய்வாண்டின் 1040 ஹெக்டேயார் தேயிலை மீள் பயிரிடும் இலக்கில் 748 ஹெக்டேயர் மாத்திரமே மீள் பயிரிடப்பட்டிருந்தது. 2015 ஆண்டு முதல் தேயிலை மீள்நடுகை உதவித்தொகை பெற்றுக்கொள்வதற்கு அதிகார சபை வழங்கிய அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்திருந்தாலும், அதிகார சபையினால் உதவித்தொகை பெறுபவர்களை அதற்காக வழிநடாத்துவதற்குப் போதுமான நடவடிக்கை எடுக்காததனால், தேயிலை பயிர்ச்செய்கையாளர்களால் நிலப்பதனிடல் மற்றும் மண் பாதுகாப்பின் பின்னர் மீள் நடுகை மேற்கொள்ளப்படுவது குறைவடைந்திருந்தது.

பயிர் புனரமைப்பிற்காக உதவித்தொகை வழங்குதல்

மீளாய்வாண்டின் பயிர் புனரமைப்பிற்காக உதவித்தொகையாக ரூபா. 11.70 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன், சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 40 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எனினும், மீளாய்வாண்டிற்காக 912,500 கன்றுகள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட போதும், இதில் 564,145 கன்றுகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. இதனடிப்படையில், செயலாற்றல் 62 சதவீதமாகக் காணப்பட்டது.

டொலமைட் பாவனைக்கான உதவித்தொகை

மீளாய்வாண்டின் விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டிய டொலமைட்டின் அளவு 1035 மெட்ரிக் தொன் என திட்டமிடப்பட்டிருந்த போதும், இதில் 25.3 மெட்ரிக் தொன் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தது. இது திட்டமிடப்பட்ட அளவில் 2.4 சதவீதமாக இருந்தது. இதனடிப்படையில், வெற்றிகரமான பயிரிடலுக்காக டொலமைட்டின் பாவனை எந்தளவு முக்கியமாக இருந்தாலும், சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் டொலமைட் பாவனையை ஊக்கப்படுத்துவதற்கு அதிகாரசபையினால் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

விரிவாக்கல் வேலைத்திட்டம்

விரிவாக்கல் மற்றும் ஆலோசனை சேவை வேலைத்திட்டங்கள் மற்றும் மண் முகாமைத்துவ வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் ரூபா. 16.56 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது ரூபா. 9.77 மில்லியனால் அதாவது 143 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் அதிகாரசபையின் முன்னேற்ற அறிக்கைக்கமைய நடாத்தப்பட்டிருந்த பயிற்சி நிகழ்ச்சிகளின் செயலாற்றல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 4 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

விவசாய உபகரணங்கள் விநியோகித்தல்

2017 ஆம் ஆண்டில் நுவரெலியா மாவட்டத்தில் விவசாயிகளுக்கு ரூபா. 100.39 மில்லியன் பெறுமதியான விவசாய உபகரணங்கள் விநியோகிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 5000 லீற்றர் நீர்த் தாங்கிகள் 20 விநியோகிக்கப்படாது 2018 மார்ச் 13 ஆம் திகதி வரை பிரதேச காரியாலயத்திற்கு சொந்தமான மத்திய நிலையங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

தேயிலைத் தொழிலைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்கள்

2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியுடன் தொடர்பான ஒன்றிணைந்த திட்டத்திற்கமைய 185 ஆய்வுகளை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

இவ்விலக்கில் 16 சதவீதம் அதாவது 27 ஆய்வுகள் பல்வேறு வரையறைகளுக்குட்பட்ட காரணங்களால் இடைநடுவில் கைவிடப்பட்டு அல்லது பிற்போடப்பட்டிருந்தன. மேலும், திரைசேரியிலிருந்து வருடாந்தம் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பெறப்பட்டிருந்த ஒதுக்கீட்டில் ரூபா. 12.47 மில்லியன் செலவில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 12 ஆய்வுகள் இடையில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், மேலும் ரூபா. 24.35 மில்லியன் செலவில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 15 ஆய்வுகள் பிற்போடப்பட்டிருந்தன. இவ்வாய்வுகளை கைவிடுவது அல்லது பிற்போடுவது நடைபெற்று 3 வருடங்கள் வரை கடந்திருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதியாகும் வரை மீண்டும் தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

உயிர் இரசாயனப் பிரிவினால் முடிக்கப்பட்டிருந்த இணைந்த பெறுமதி மீதான 10 தேயிலை உற்பத்திகள் (Tea wine, instant black tea, carbonated tea, scented tea, instant milk tea, tea sauce, tea baby soap, tea seed oil, tea protein catching extract) வணிகமயப்படுத்தப்படுவதற்காக மேம்படுத்தல் நடவடிக்கை எடுக்காது இருந்ததனால் ஆய்வுகளின் பெறுபேறுகளை இத்துறைக்கு பயன்படுத்த முடியாமல் போயிருந்தது.

இலங்கையின் C.T.C.மற்றும் சம்பிரதாயபூர்வமான தேயிலை உற்பத்தி மற்றும் விற்பனை

கலுபோவிடியான தேயிலைத் தொழிற்சாலை நிறுவனத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற கலுபோவிடியான C.T.C தேயிலைத் தொழிற்சாலை, தேரங்கல தேயிலைத் தொழிற்சாலை, ஹினிதுவ ஹில்ஸ் தேயிலைத் தொழிற்சாலை மற்றும் மெனிக்திவெல தேயிலைத் தொழிற்சாலை ஆகிய அனைத்து தொழிற்சாலைகளும் மீளாய்வாண்டின் குறைந்த கொள்ளளவுடன் இயங்கியிருந்த அதேவேளை கலுபோவிடியான தேயிலைத் தொழிற்சாலை மாத்திரம் இலாபமடைந்திருந்தது. தேயிலை சபையின் நியதிகளின் அடிப்படையில் உள்ளீர்க்கப்பட்ட 100 கிலோ கொழுந்தின் மூலம் குறைந்த பட்சம் 21.5 கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட வேண்டியிருந்த போதும், மீளாய்வாண்டின் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற 04 தொழிற்சாலைகளினதும் உற்பத்தி மெச்சத்தகு மட்டத்தினை அடைந்திருக்கவில்லை.

தேயிலை சக்தி நிதியம்

நிதியத்திற்குச் சொந்தமான 14 தொழிற்சாலைகள் மற்றும் உரம் மற்றும் உள்நாட்டுத் தேயிலை விற்பனை ஆகிய அனைத்து பிரிவுகளும் நட்டமடைந்ததன் காரணமாக கடுமையான நிதிச் பிரச்சியொன்று எழுந்திருந்தது. நிதியத்தினை மீள் ஒழுங்குபடுத்துவதற்காக 2016 ஆகஸ்ட் 9 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்திற்கிணங்க 09 ஆலோசனைகள் அடங்கிய செயற்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய தொழிற்சாலைகள் குத்தகைக்கு விடப்பட்டிருந்தன.

தேயிலைத் தொழிற்சாலைகளை குத்தகைக்கு விடல்

தொழிற்சாலைகள் மற்றும் சொத்துக்கள் குத்தகைக்கு விடப்படுவதற்கு முன்னர் அந்தந்த தொழிற்சாலைகளின் சொத்துக்களை இனங்கண்டு மதிப்பிடல் மற்றும் குத்தகை வருமானத்திற்கான உத்தேசிக்கப்பட்ட நிதிப் பாய்ச்சல் உள்ளடங்கிய கொள்வனவுக் கால எல்லையொன்றினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 12 தொழிற்சாலைகளின் முகாமைத்துவங்களினால் குத்தகை அடிப்படையில் வெளி நபர்களுக்கு ஒப்படைப்பதற்கான அமைச்சரவை அனுமதியைப் பெற்றிருந்த போதும், தொழிற்சாலைகளை குத்தகைக்கு

விடுகையில் கைச்சாத்திடப்பட்டிருந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் அத் தொழிற்சாலைகள் சாதாரண சொத்துகளுக்கான நடைமுறையிலேயே குத்தகைக்கு விடப்பட்டிருந்தன. தொழிற்சாலைகளை குத்தகைக்கு விடுகையில் கைச்சாத்திடப்பட்டிருந்த குத்தகை ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய முகாமைத்துவக் கட்டணம் / மாதாந்தக் குத்தகைத் தொகை அவ்வொப்பந்தத்தின் இரண்டாவது நிபந்தனைக்கமைய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினத்திலிருந்து கணக்கிடப்பட்டு குறிக்கப்பட்டிருந்ததுடன், தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பமாவது தாமதமாகும் சந்தர்ப்பங்களில் குத்தகைப் பணம் செலுத்துவதற்கு இரண்டு மாத கால அவகாசம் அளிக்கப்படுமென மூன்றாவது நிபந்தனையில் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவகாச காலத்திற்கான குத்தகைப் பணம் அறவிடப்பட மாட்டாதெனக் குறிப்பிடப்படவில்லையெனினும், எந்தவொரு தொழிற்சாலையினாலும் குத்தகையாளர்களால் அவகாச காலத்திற்கான குத்தகைப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வடிப்படையில், அவகாச காலத்திற்காக 11 தொழிற்சாலைகள் மற்றும் உரக் களஞ்சியசாலை தொடர்பான ரூபா. 10.85 மில்லியன் மாதாந்த குத்தகைப் பணம் தேயிலை சக்தி நிதியத்திற்கு கிடைக்காது போயுள்ளது. தொழிற்சாலைகளை குத்தகைக்கு விடல் தொடர்பில் கைச்சாத்திடப்பட்டிருந்த குத்தகை ஒப்பந்தத்தின் 7 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாதாந்த தேயிலைக் கொழுந்தின் அளவிற்கு ஈடான பெறுமதிக்கு தேயிலை சக்தி நிதியம் எனும் பெயரில் வங்கிப் பிணைமுறியொன்று அல்லது காப்புறுதியொன்று பெற்றுக்கொடுக்கப்பட வேண்டியிருந்த போதும், 11 தொழிற்சாலைகள் குத்தகைக்கு விடப்படும் சந்தர்ப்பத்தில் இப் பிரமாணங்களுக்கு அமைவாக கொடுபட வேண்டிய ரூபா. 156.61 மில்லியன் பெறுமதியான பிணைமுறி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

தென்னை விளைச்சல்

தென்னை தொழில் மொத்தத் தேசிய உற்பத்திக்காக பெருந்தோட்டத் துறையில் அதிகூடிய பங்களிப்பினை வழங்கும் பங்காளியாயிருத்தல் மற்றும் உற்பத்தி விற்பனை பல்வகைப்படுத்தலில் உலகலாவிய தலைமைப்பதவிக்காக பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் தென்னை விளைச்சல் 2016 ஆம் ஆண்டில் 3,011 மில்லியன் தேங்காய்களாகவிருந்த போதும், 2017ஆம் ஆண்டில் 2,450 மில்லியன் தேங்காய்களாக குறைந்திருந்தது. விபரம் அட்டவணை 17 இல் பார்க்கவும்.



அட்டவணை....தென்னை விளைச்சல் குறைவடைதல்

மூலம் ... தென்னை ஆராய்ச்சி நிலையம்

ஊக்குவிப்புக் கொடுப்பனவு மேலதிகமாகச் செலுத்தல்

2017 திசெம்பர் 11 ஆந் திகதிய பீஈடீ 03/2017 இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிரூபத்தின் படி ஊக்குவிப்புக்

கொடுப்பனவாக தென்னை ஆராய்ச்சி சபையுடன் இணைந்த தோட்ட முகாமைத்துவப் பிரிவின் 36 நிரந்தர அதிகாரிகளுக்கு ரூபா. 10,000 வீதம் ரூபா. 360,000 செலுத்தப்பட வேண்டியிருந்தது. எனினும் அவர்களது அடிப்படைச் சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்பட்டமையினால் ரூபா. 523,272 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

புதிய தென்னை இனங்களை அறிமுகப்படுத்தல்

தென்னை ஆராய்ச்சி சபையின் பரம்பரை மற்றும் பயிர் இனவிருத்திப் பிரிவினால் புதிய தென்னை இனங்களை அறிமுகப்படுத்தல் தொடர்பாக தொடர்ச்சியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் 2012 ஆண்டின் பின்னர் புதிய தென்னை இனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அறிமுகப்படுத்தப்பட்டிருந்த 06 தென்னை இனங்களில் கப்ருவன, கப்செத மற்றும் கப்சுவய ஆகிய இனங்கள் மக்கள் மத்தியில் பிரபலமடைந்திருக்கவில்லை.

வெப்பப் பாதுகாப்புப் பிரிவொன்றினை அமைத்தல்

சிரட்டைக் கரி உற்பத்தியின் போது வெளியாகும் வெப்பத்தினை சூழலுக்கு விடாமல் அவ்வெப்பத்தினைப் பயன்படுத்தி கொப்பரா காய்ப்பதனை இலக்காகக் கொண்டு ரூபா. 1.72 மில்லியன் செலவில் பண்டிரிப்பு ஆராய்ச்சி நிலையத்தில் வெப்பப் பாதுகாப்புப் பிரிவொன்று 2008 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அது 2012 ஆண்டிலிருந்து பாவிக்கப்படாமல் செயலிழந்திருந்தது.

விதைத் தேங்காய் பிரிவில் புதிய கட்டிடமொன்றினை நிர்மாணித்தல்

நீர்கொழும்பு விதைத் தேங்காய் பிரிவில் புதிய காரியாலய கட்டிடமொன்றினை நிர்மாணிப்பதற்காக ரூபா. 55 மில்லியன் பெறுமதியான செலவு விபரத்தினைத் தயாரிப்பதற்காக ஆலோசனை நிறுவனமொன்றிற்கு ரூபா 2.15 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு தகுதியான ஒரு ஒப்பந்தக்காரரை தெரிவு செய்துகொள்ள முடியாமல் போனதால் மீளாய்வாண்டின் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா. 5 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் செலுத்தப்பட்ட ஆலோசனைக் கொடுப்பனவு பயனற்ற செலவாக இருந்தது.

கரும்பு உற்பத்தி

1986 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 40 வகையான கரும்பு இனங்கள் 15,743 ஹெக்டேயர் நிலப்பரப்பில் ஆய்வுக்காக நடப்பட்டிருந்தது. அவற்றில் 23 வகை கரும்பு இனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் 16 வகை இனங்கள் 304 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் வரையில் கரும்பு பயிரிடப்பட்டிருந்த நிலப்பரப்பில் 2012 இல் அறிமுகப்படுத்தப்பட்ட SL 96128 எனும் இனம் 58 சதவீத நிலப்பரப்பில் விரிவுபடுத்தப்பட்டிருந்தது. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த கரும்பு இனங்கள் தொடர்பில் விவசாயிகளின் மனப்பாங்கு, நோய்கள் மற்றும் கிருமிநாசினிகளுக்கு தாக்குப் பிடிக்கும் திறன் குறைவடைவதனால் அதன் விரிவாக்கம் குறைவாகக் காணப்பட்டது. 1981 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி சட்டத்தின் 18 ஆவது பிரிவிற்கமைய தேசிய சீனி உற்பத்தி நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட சீனி அளவின் மீது ஒரு கிலோவிற்காக 10 சதம் செஸ் வரி நிறுவனத்தினால் அறவிடப்படுகின்ற அதேவேளை, செவனகல மற்றும் கல்ஓயா சீனி உற்பத்தி நிலையங்கள் இந்த செஸ் வரியினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்காததனால் 2017 ஆம் ஆண்டில் ரூபா. 2.79 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது.

மனித வள முகாமைத்துவம்

2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிரூபத்தின் 9.12 பிரிவிற்கமைய நலன்புரி வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முன்னர் திறைசேரியின் அனுமதியினைப் பெற வேண்டியிருந்தது. தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தினால் அவ்வாறான அனுமதியினைப் பெறாது அதிகாரிகளுக்கான மருத்துவ உதவி ஆலோசனைத் திட்டமொன்றினை செயற்படுத்தி மீளாய்வாண்டின் ரூபா. 1.81 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

இறப்பர் ஆராய்ச்சி சபையினால் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதி சட்டத்தின் 47 ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு என்பவற்றுக்கமைவாக 2006 முதல் 2011 ஒக்டோபர் மாதம் வரை அந்நிதியத்திற்கான பங்களிப்பு மற்றும் மிகையூதியக் கொடுப்பனவு ஆகியவற்றைக் கணக்கிடும் போது வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு உள்ளடக்கப்படாததனால் ரூபா. 933,567 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

இறப்பர் உற்பத்தி

இறப்பர் நடுகை நிலத்தின் அளவை அதிகரிப்பதற்காகவும் இறப்பர் நடுகை நிலங்களின் பலன் தரு நிலையினை மேம்படுத்துவதற்காகவும் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினால் உதவித்தொகை திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. 2014 முதல் 2016 வரை மொத்த இறப்பர் உற்பத்தி தொடர்ச்சியாகக் குறைந்து வந்துள்ளதுடன் 2016 ஆம் ஆண்டில் 79,100 மெற்றிக் தொன்னாகவிருந்த இறப்பர் உற்பத்தியானது, சம்பிரதாயபூர்வமாக இறப்பர் உற்பத்தி செய்யப்படும் பிரதேசங்களில் ஏற்பட்ட கடுமையான வெள்ளப்பெருக்கு உள்ளிட்ட மோசமான காலநிலைக்கு மத்தியிலும், மீளாய்வாண்டின் 83,070 மெற்றரிக் தொன் வரை 5 சதவீதத்தினால் அதிகரித்துக்கொள்ள முடிந்திருந்தது.

2017 ஆம் ஆண்டில் சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களினதும் பெருந்தோட்ட நிறுவனங்களின் முறையே 2,700 மற்றும் 1,500 ஹெக்டேயர் பரப்புள்ள நிலத்தில் இறப்பர் மீள் நடுகை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது. இதில் முறையே 787 மற்றும் 59.52 ஹெக்டேயர் நிலத்தில் மாத்திரம் மீள் நடுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனடிப்படையில், நடுகை மேற்கொள்ளப்படாத நிலம் திட்டமிடப்பட்ட நிலத்தின் 70 மற்றும் 96 சதவீதமாகக் காணப்பட்டது.

2017 ஆம் ஆண்டில் வழமையான மற்றும் வழமைக்கு மாறான பிரதேசங்களில் 2,760 ஹெக்டேயர் பரப்புள்ள புதிய நிலத்தில் புதிய இறப்பர் நடுகையும் 460 ஹெக்டேயர் பரப்புள்ள நிலத்தில் துணைப் பயிர்களை பயிரிடுவதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதும், முறையே 327.8 ஹெக்டேயர் நிலத்தில் இறப்பர்ம் 240.71 ஹெக்டேயர் நிலத்தில் துணைப் பயிர்களும் பயிரிடப்பட்டிருந்தன. இதனடிப்படையில் நடுகை மேற்கொள்ளப்படாத நிலம் திட்டமிடப்பட்ட நிலத்தின் 88 மற்றும் 47 சதவீதமாகக் காணப்பட்டது.

வரகு இறப்பர் ஏற்றுமதி

2016 ஆம் ஆண்டில் 16,167 மெட்ரிக் தொன்னாகக் காணப்பட்ட இறப்பர் ஏற்றுமதி 2017 ஆம் ஆண்டில் 17,230 மெட்ரிக் தொன் வரை 7 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எனினும், 2016ஆம் ஆண்டில் ரூபா. 4,758 மில்லியனாகக் காணப்பட்ட இறப்பர் ஏற்றுமதி வருமானம் 2017ஆம் ஆண்டில் ரூபா. 5,920 மில்லியன் வரை 19 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

வரகு இறப்பர் ஏற்றுமதி

2016 ஆம் ஆண்டில் 16,167 மெட்ரிக் தொன்னாகக் காணப்பட்ட இறப்பர் ஏற்றுமதி 2017 ஆம் ஆண்டில் 17,230 மெட்ரிக் தொன் வரை 7 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எனினும், 2016ஆம் ஆண்டில் ரூபா. 4,758 மில்லியனாகக் காணப்பட்ட இறப்பர் ஏற்றுமதி வருமானம் 2017ஆம் ஆண்டில் ரூபா. 5,920 மில்லியன் வரை 19 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.



அட்டவணை ..... வரகு இறப்பர் ஏற்றுமதி

மூலம் ...இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் புள்ளிவபரப் பிரிவின் தகவல்கள்

இறப்பர் இறக்குமதி

இலங்கைக்கான இயற்கை மற்றும் செயற்கை இறப்பர் இறக்குமதி தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றுள்ளதுடன் 2016 ஆம் ஆண்டில் 72,985 மெட்ரிக் தொன்னாகக் காணப்பட்ட இறப்பர் இறக்குமதி 2017 ஆம் ஆண்டில் 61,802 மெட்ரிக் தொன்னாக குறைவடைந்திருந்தது.

இறப்பர் மீள் நடுகை / புதிய நடுகை நிலத்தின் அளவு

இறப்பர் மீள் நடுகையினை முழு இறப்பர் நடுகையில் 3 சதவீதமாக பேணி வர

வேண்டியிருந்த போதும், 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுளில் முறையே 0.43 மற்றும் 0.63 சதவீதமாகக் காணப்பட்டதனால் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையப்பெற்றிருக்கவில்லை. விபரம் அட்டவணை 18 இல் காட்டப்பட்டுள்ளது.

ஆண்டு	மீள்பயிரிடல் / புதிய பயிரிடல் நில அளவு ஹெக்டேயர்	மீள்பயிரிடல் நில அளவு ஹெக்டேயர்	மொத்த பயிரிடல் நிலஅளவு ஹெக்டேயர்	மீள்பயிரிடக்கூடிய மொத்த நில அளவு சதவீதம்
2017	1,519	866	136,632	0.63
2016	1,183	538	136,274	0.43
2015	4,241	3,251	136,641	2.3
2014	4,458	2,897	134,137	2.15

அட்டவணை 18 ..... இறப்பர் மீள்பயிரிடல் / புதிய பயிரிடல் நில அளவு

மூலம் ...இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் புள்ளிவபரப் பிரிவின் தகவல்கள்

தகவல் முகாமைத்துவத் தொகுதியொன்றினை வடிவமைத்தல்

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், தனியார் நிறுவனமொன்றுடன் 2016 மார்ச் 02 ஆம் திகதி தகவல் முகாமைத்துவத் தொகுதியொன்றின் வடிவமைத்தலுக்காக ரூபா. 25.43 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தது. அவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் குறித்த செயற்பாடு 2016 திசெம்பர் மாதமளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதும் 2018 ஆகஸ்ட் மாதம் வரை பூர்த்தி செய்யப்படாமலிருந்தது.

செஸ் வரி அறவிடல்

2006 இன் 20ஆம் இலக்க இறப்பர் மீள் நடுகை உதவித்தொகை நிதியச் சட்டத்தின் 7 ஆவது பிரிவிற்கமைவாக செஸ் வரி தொடர்பான கட்டளைகளின் 2(1)(D) மற்றும் 2(3)(E) பிரிவுகளின் அடிப்படையில், ஏற்றுமதி செய்வதற்காக அல்லது உள்நாட்டுப் பாவனைக்காக உற்பத்தி செய்யப்படுகின்ற இயற்கை இறப்பருடன் தொடர்பான உற்பத்திகளுக்குத் தேவையான வரகு இறப்பர் ஒரு கிலோவிற்கு ரூபா. 4.00 செஸ் வரி அவ்வரகு இறப்பர் கொள்வனவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் விநியோகஸ்தர்களிடமிருந்து அறவிடப்பட்டு தொழிற்சாலை சொந்தக்காரர்களினால் திணைக்களத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறாயினும், ஆய்வுக்குட்படுத்திய இறப்பர் சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்கின்ற தொழிற்சாலை உரிமையாளர் ஒருவர் அக்கட்டளையின் அடிப்படையில் விநியோகஸ்தர்களிடமிருந்து கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில் அறவிடப்பட்ட செஸ் வரியினை திணைக்களத்திற்குச் செலுத்துகையில் அத் தொழிற்சாலை உரிமையாளர் ஏற்றுமதியின் போது ஒரு கிலோவிற்காக ரூபா. 4.00 வீதம் சுங்கத்திற்கு செஸ் வரியினை குறைவாகச் செலுத்தியிருந்தது. இதனடிப்படையில், 2011 முதல் 2016 வரை அவ்வாறு குறைக்கப்பட்ட செஸ் வரித்தொகை ரூபா. 195.80 மில்லியனாகக் காணப்பட்டது.

மழை மேவுகைப் பாவனைக்கான உதவித்தொகை வழங்குதல்

2017 ஆம் ஆண்டில் சிறு தோட்ட உரிமையாளர்கள் மற்றும் தோட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான 3,750 ஹெக்டேயர் காணியில் மழை மேவுகை அமைப்பதற்காக உதவித்தொகை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த

போதும் 1,235.41 ஹெக்டேயர் காணியில் மாத்திரம் மழை மேவுகை அமைக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் மழை மேவுகை அமைக்கப்படாத பிரதேசம் திட்டமிடப்பட்ட பிரதேசத்தின் 67 சதவீதமாகக் காணப்பட்டது.

இறப்பர் கன்றுகளின் உற்பத்தி மற்றும் விநியோகம்

மீளாய்வாண்டின் செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் 1,650,000 இறப்பர் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதும், 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 1,045,956 இறப்பர் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு இதில் 664,651 கன்றுகள் அதாவது இலக்கு வைக்கப்பட்ட தொகையின் 40 சதவீதம் விநியோகிக்கப்பட்டிருந்தது.

இறப்பர் துறையில் வெளிநாட்டு பயிற்சி மேற்கொள்ளல்

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் இறப்பர் துறையில் வெளிநாட்டு பயிற்சியொன்றிற்காக பெருந்தோட்டத்துறை அமைச்சின் செயலாளரின் அனுமதியின்றி இறப்பர் துறையுடன் சம்பந்தமில்லாத அதிகாரியொருவர் கலந்துகொண்டிருந்ததுடன் அவருக்காக திணைக்களத்தினால் ரூபா. 493,883 செலவிடப்பட்டிருந்தது.

.

வருடாந்த இறப்பர் விளைச்சல்

வருடாந்த இறப்பர் விளைச்சல் ஒரு ஹெக்டேயர் நிலத்திற்கு 3,000 கிலோ கிடைக்கும் வகையிலான உயர்ரக ஒட்டு முறையொன்றினை இறப்பர் ஆராய்ச்சி சபையினால் 2009 ஆண்டளவில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், தற்போதைய விளைச்சல் ஒரு ஹெக்டேயர் நிலத்திற்கு 800 கிலோவாகக் காணப்படுகிறது.

உற்பத்தி நடவடிக்கைகளுக்காக புது ரக கண்டுபிடிப்புக்களை பயன்படுத்தாமை

ஆராய்ச்சிகளின் மூலம் இனங்காணப்பட்ட 2 புதுரக கண்டுபிடிப்புகளுக்கான ஆக்கஉரிமை பத்திரம் பெறப்பட்டு 3 தொடக்கம் 8 வருடங்கள் வரை கடந்திருந்த போதும், அவற்றை புதிய உற்பத்திகளுக்காக பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பாவிக்கப்படாத சொத்துக்கள்

2017 ஏப்ரல் மாதத்தில் ரூபா. 10.96 மில்லியன் செலவில் இறப்பர் ஆராய்ச்சி சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட Rubber Process Analyzer உபகரணம் மற்றும் உதிரிப்பாகங்கள், 2018 ஜுன் மாதம் வரையிலும் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

துருசவிய நிதியம்

சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளை முன்னேற்றும் இலக்கினை அடையும் பொருட்டு 2017 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் 14 மாவட்டங்களில் 712 துருசவிய சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தன. இவற்றில் 329 சங்கங்கள் செயலிழந்திருந்தன. அச்சங்கங்களை செயற்படும் நிலைக்கு மாற்றுவதற்காக அல்லது பதிவினை இரத்துச்செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிதியம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

காணி அலுவல்கள்

நிலைபேறான அபிவிருத்தியினை நோக்கி நில வளத்தினை உச்சமாக பயன்படுத்தல் இந்த துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேராக இருந்தது. அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்று காணி அமைச்சு மற்றும் 4 திணைக்களங்கள் மற்றும் 4 நியதிச்சட்ட சபைகளால் பின்வரும் பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- நில விடயங்களுக்குரிய கொள்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
- நிலைபேறான அபிவிருத்தியினை முன்னிட்டு நிலப் பாவனை கொள்கைகளுக்கமைய மேற்கொள்ளப்படுகின்ற கற்கைகளின் அடிப்படையில் உரிய துறைக்கு ஆலோசனை வழங்குதல்.
- அரச காணிகளின் நிர்வாகமும் முகாமைத்துவமும்.
- சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு காணிகளை கைப்பற்றல்.
- தேசிய தேவைப்பாட்டிற்காக காணிகளைக் கைப்பற்றல்.
- அரசாங்க காணிகளின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்காக கொடுப்பனவு பத்திரங்களை வழங்குதல்.
- அபிவிருத்தி மற்றும் தங்குமிட வசதிகளுக்காக அரச காணிகளை நீண்டகால மற்றும் குறுங்கால அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்.
- காணிகளின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்கான உரித்துறுதிச் சான்றிதழைப் பதிவு செய்தல்.
- தேசிய திட்டமிடலை இலக்காகக் கொண்டு காணிகளை அளத்தல், வரைபடங்கள் தயாரித்தல் மற்றும்,
- நாட்டின் அனைத்து காணிகள் தொடர்பிலும் தரவுக் கட்டமைப்பொன்றினைத் தயாரித்தல்.

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களால் தமது செயற்பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பில் இடம்பெற்ற தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

காணி வங்கி செயற்திட்டம்

காணி அமைச்சினால் செயற்திறனான காணி முகாமைத்துவமொன்றை ஏற்படுத்துவதற்காக தற்போது காணப்படும் காணி தொடர்பாக ஆவணமய தகவல்களை கணணி மயப்படுத்தி காணி தகவல் முறைமைக்கு உட்படுத்துதல் காணி வங்கி செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதன் மூலம் அரச காணிகளின் உரித்து உட்பட திட்டமிடப்படாத காணிகளின் பயன்பாடு மற்றும் பொருளாதார ரீதியாக சிக்கனமற்ற காணிகளை பயன்படுத்துவது தொடர்பாக இனங்காண்பதும் நோக்கமாக இருந்தது. இந்நோக்கங்களை முன்னுரிமையாககொண்டு காணி வங்கி செயற்திட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 195 மில்லியன் நிதி ஏற்பாடும் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 395 மில்லியன் நிதி ஏற்பாடும் பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் ரூபா 116 மில்லியன் அதாவது ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 29 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இச் செயற்திட்டத்திற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 22 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் பிரித்தெடுப்பு பதிவேடு (E - Land Registry) காணி பிரிவிற்காக தரவு முறைமையொன்று வடிவமைத்தல், அரசின் காணி தகவல் முகாமைத்துவ முறையை இனங்காணல் (E-Slims) மற்றும் காணி தகவல் கேந்திரம் (E-Land Hub) ஏற்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புக்கள் காரணமாக செயற்திட்டத்தின் மூலம் எதிர்ப்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு மீளாய்வாண்டின் போது முடியவில்லை.

- மீளாய்வாண்டின் போது தரவுகளை கணணிமயப்படுத்தும் நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படாத காரணத்தினால் திட்டமிடப்பட்ட 07 அலுவலக நடவடிக்கைகளை நடாத்திச் செல்ல முடியாத கட்டத்தில் காணப்பட்ட 06 அலுவலகங்களில் மென்பொருட்கள் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.
- காணி கையேற்றல் பிரிவிற்காக தரவு முறைமையொன்று வடிவமைக்கப்பட்டிருக்கவில்லை.
- E-Land Hub நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காணி உரித்து தீர்வு செய்தல் திணைக்களம் மற்றும் காணிப் பயன்பாடு மற்றும் கொள்கைகள் திட்ட திணைக்களத்தில் கணணி முறைமை வடிவமைக்கப்பட்டிருக்கவில்லை. கொள்கை திட்டமிடல் திணைக்களத்தினால் கணணி மென்பொருள் முறையொன்று தயாரித்தல் மாத்திரம் இடம் பெற்றிருந்தது.

பிம்சவிவ நிகழ்ச்சித்திட்டம்

2017 ஆம் ஆண்டின் பிம்சவிய செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 48,000 உரித்துச் சான்றிதழ்கள் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 48,240 உரித்துச் சான்றிதழ்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. எனினும் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் பத்திரங்களில் 42 சதவீதம் அதாவது 20,151 சான்றிதழ்கள் ஆட்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 57 பிரதேச செயலகங்களின் கீழ் வரும் 3,695 கிராம சேவை பிரிவுகளில் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும் 1,374 கிராம சேவையாளர் பிரிவுகள் அதாவது அளவீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த கிராமிய சேவை பிரிவுகளில் 37 சதவீதமான அளவில் மாத்திரம் அந்நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

அரச காணி கொள்கை தகவல்களை கணணி முறைமைக்கு உள்ளடக்குதல்

காணி ஆணையாளர் திணைக்களத்தினால் அரசின் முகாமைத்துவ நடவடிக்கைகளை செயற்திறனாக்குவதற்காக காணி தகவல் முறைமையை வடிவமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அரச காணி தகவல் முகாமைத்துவ முறைமை 332 பிரதேச செயலக பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் E-Slims செயற்திட்டத்தின் கீழ் 920,141 காணித் துண்டுகளின் தரவுகள் கணணி மயப்படுத்தப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 300,000 காணித் துண்டுகளின் தகவல்கள் முறைமைக்கு உள்ளடக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதில் 231,021 காணித்துண்டுகள் அதாவது

இலக்கிடப்பட்ட அளவில் 77 சதவீதமான அளவில் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

குறைப்பயன்பாட்டிற்கான வளங்கள்

காணி ஆணையாளர் திணைக்களத்தினால் அரச காணி தகவல்கள் முகாமைத்துவ முறைமைக்கு தகவல்களை உட்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் செயற்பாட்டிற்காக கேட்போர் கூடமொன்றும் கணணி ஆய்வு கூடமொன்றையும் நிர்மாணிப்பதற்கும் பூங்கா அலங்கார நடவடிக்கைகளுக்கான 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை பல சந்தர்ப்பங்களில் ரூபா 14.44 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த ஆய்வு கூடங்களுக்காக தளபாடங்கள், மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 5.52 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அது பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது உத்தியோகத்தர்களின் பயிற்சியளித்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 3.96 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்ட போதிலும் அதன் பாதுகாப்பு செலவினம் மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக 2017 ஆகஸ்ட் மாதம் வரை ரூபா 4.74 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

காணி ஆணையாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ விடுதியினை கையேற்காமை.

காணி ஆணையாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ விடுதினை நிர்மாணிப்பதற்காக ரூபா 36.40 மில்லியன் மதிப்பிடொன்றின் பேரில் 2016 சனவரி 12 ஆந் திகதி திணைக்களத்துபுரிந்துணர்வு உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் மொத்த மதிப்பிட்டு பெறுமதியில் 50 சதவீதம் முற்பணத்தை கொடுப்பனவு செய்வதற்கு இணங்கப்பட்டிருந்தது. புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு முன்னர் ரூபா 10 மில்லியன் முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. சீரான காணி உரித்து காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திடம் இல்லாதிருந்ததுடன், நிலத்தில் நீர் நிறைந்து காணப்பட்டமையால் நிரப்பாமல் பயன்படுத்த முடியாமல் இருந்தது. காணியை நிரப்புவதற்காக காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் அனுமதி கோரப்பட்டிருந்த போதிலும் 2018 மே 01 ஆந் திகதி வரையில் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. அதன் காரணமாக கட்டிடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் 2017 மார்ச் 01 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் கட்டிடம் கையேற்கப்படாதிருந்ததுடன் ஒரு வருடத்திற்கு மேலாக அக்கட்டிடம் பயன்படுத்தாமை காணப்பட்டது.

பூர்த்தி செய்யப்படாத கட்டிடத்திற்காக மொத்த மதிப்பிட்டு பெறுமதி கொடுப்பனவு செய்தல்

காணி உரித்து தீர்வு செய்யும் திணைக்களத்தினால் ஆணையாளர் உத்தியோகபூர்வ விடுதியை நிர்மாணிப்பதற்காக ரூபா 36.4 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 273 நாட்களில் பூர்த்தி செய்யும் இணக்கத்துடன் பேரில் 2016 பெப்ரவரி 02 ஆந் திகதி கட்டிட திணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் 50 பிரகாரம் 50 சதவீத முற்பணமொன்று வழங்க முடியுமான போதிலும், புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொள்வதற்கு முன்னர் ரூபா 10 மில்லியன் முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. கட்டிடம் பூர்த்தி

செய்யப்பட்டு பூர்த்தி செய்தல் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் முழுத்தொகையும் கொடுப்பனவு செய்ய முடியுமான போதிலும் 2016 திசெம்பர் 08 ஆந் திகதி அளவில் இக் கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் 2018 மே 01 ஆந் திகதி வரையிலும் அது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. பூர்த்தி செய்யப்படாத கட்டிடத்திற்கான 2016 நவம்பர் 30 ஆந் திகதி மொத்த கிரய மதிப்பிட்டு பெறுமதியான ரூபா 36.4 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

அளவிட்டு கட்டளைகள் நிறைவேற்றும் செயலாற்றல் குறைவடைந்தமை

நில அளவை திணைக்களத்தினால் கடந்த 10 வருடகாலப்பகுதியில் ரூபா 323 மில்லியன் செலவிடப்பட்டு அளவிட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தும் வெவ்வேறுபட்ட நவீன உபகரணங்கள் மற்றும் அளவீட்டு மென்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது நில அளவை உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. எனினும் மீளாய்வாண்டின் போது நில அளவைத் திணைக்களத்தின் அளவீட்டு கட்டளைகளின் நிறைவேற்றும் மொத்த செயலாற்றல் 39 சதவீதம் என்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

காணி பயன்பாட்டு திட்டம் மற்றும் கொள்கைகளுக்காக சட்டப் பின்னணியை தயாரித்தல்

2010 மே 20 ஆந் திகதிய 1654/21 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலொன்றின் மூலம் தேசிய காணிப் பயன்பாட்டுத் திட்டமொன்றை தயாரித்தல் மற்றும் காணிப் பயன்பாட்டுக் கொள்கைகளை

- 1995 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை 200 காணித் துண்டுகள் அளவில் சுவீகரிப்பு நடைமுறைப்படுத்துதல் அடிப்படை நோக்கமாகக் கொண்டு காணிப் பயன்பாட்டுக் கொள்கை திட்டம் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தின் காணி திட்டத்தை தயாரிப்பதற்கும் காணி பயன்பாட்டு கொள்கைகளை செயற்படுத்துவதற்காக தேவையான சட்ட ரீதியான பின்னணி மீளாய்வாண்டின் இறுதி வரையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

நில அளவையாளர்களின் முறைகேடுகளை பரீட்சித்தல்.

2002 இன் 17 ஆம் இலக்க அளவை சட்டத்தின் பிரகாரம் அளவை தொழில்துறை மற்றும் பிரயோகித்தல் முறையாக பேணிச் செல்லப்படுவதாகவும் துறைசார் துறையில் ஈடுபடுவர்களால் தொழில் துறையில் நிலைத்திரு தன்மை உயர்ந்த தரத்தில் பேணிச் செல்லப்படுவதை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு காணி அளவை சபை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது நில அளவையாளர்களின் தொழில் துறை முறைகேடுகள் தொடர்பாக பொதுமக்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மொத்த முறைபாடுகளின் எண்ணிக்கை 125 ஆக இருந்த போதிலும் சபையினால் அம் முறைபாடுகளில் 77 சதவீதம் அதாவது 96 முறைப்பாடுகள் மாத்திரம் தீர்வு செய்யப்பட்டிருந்தன.

அரசாங்கத்தின் கையேற்கப்பட்ட காணிக்காக இழப்பீடு அறவிடல்

காணி சுவீகரிப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணி அரச துறைக்காக சுவீகரிப்பு செயற்பாடு தொடர்பாக முறையான கவனமொன்று செலுத்தப்பட்டிருக்கவில்லை. கீழே காட்டப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் அச்செயற்பாடு மந்த கெதியில் காணப்பட்டன.

செயற்பாடுகளுக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்த போதிலும் அதில் 16

காணித்துண்டுகளுக்காக மாத்திரம் இழப்பீடு அறவிடப்பட்டிருந்தது.

- வெவ்வேறு நோக்கங்களுக்காக அரச நிறுவனங்களினால் 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை கையேற்கப்பட்டிருந்த காணி தொடர்பாக ஆணைக்குழுவின் உரித்தினை உறுதிப்படுத்த முடியாமை காரணமாக காணிகளுக்குரிய இழப்பீட்டுப் பணம் நீதிமன்றத்தில் வைப்பு செய்யப்பட்ட 14 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

- 1972-1974 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட 230 வெளியீடுகள் தொடர்பாக 40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அவற்றில் 27 சதவீதம் காணி வரிபடம் சமர்ப்பிக்கப்படாமை அடிப்படையிலும் 52 சதவீதம் உரித்தாளர்கள் முன்வராமை காரணமாகவும் சட்டரீதியான உறுதிப்படுத்தல்கள் வழங்க முடியாதிருந்தன.

- 1972 இன் 1 ஆம் இலக்க மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 2(அ) மற்றும் 3(1) பிரிவுகளிற்கு முரணாக 50 ஏக்கர்களுக்கு மேற்படாத நபர்களுடைய காணியும் ஆணைக்குழுவினால் கையேற்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் 45 ஆண்டுகள் அளவில் கடந்திருந்த போதிலும் அவ்வாறு கையேற்கப்பட்ட காணி அல்லது மாற்றுக்காணி வழங்குவதற்கோ ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- 1974 முதல் 1984 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இருந்து 6 தோட்டங்கள் தென்னைப் பயிர்ச்செய்கை சபைக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. தோட்டங்களை குத்தகைக்கு வழங்குவதற்குரிய நடைமுறைகள் 6 தோட்டங்களை குத்தகைக்கு வழங்கும் போது பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அதற்குரிய அளவீட்டு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல், ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெறுதல், குத்தகை வாடகை மதிப்பீட்டினை பெற்றுக்கொள்ளல், குத்தகை உடன்படிக்கைகளுக்கு வராமல் இருந்ததுடன் 40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக குத்தகை செலுத்தப்படாமல் 1310 ஏக்கர் காணி அளவில் பயன்படுத்தப்பட்டு வந்தன.

- காணி குத்தகைக்கு வழங்கும் போது சாதாரண நடைமுறையின் கீழ் 5 ஆண்டுகளுக்கான வாடகை ஒரே தடவையில் அறவிடப்பட்டு பின்னர் உடமை கையளித்தல், 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை கத்துதகைப் பணத்தை திருத்தம் செய்தல்உரிய அங்கீகாரத்தைபெற்றுக்கொள்ளாமல் காணி குத்தகைக்கு வழங்கப்படாமையால் 09 காணிகளுக்குரிய மாத்திரம் வருடக் கணக்காக ரூபா 52.91 மில்லியன் தொகையான வரி நிலுவையாக இருந்தது.

கந்தளாய் சீனிக் கம்பனி

கந்தளாய் சீனிக் கைத்தொழிற்சாலையை மீளமைப்பதற்குரித்தான நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் இரண்டு கம்பனிகளுக்கு இடையே பங்குதாரர்கள் உடன்படிக்கையொன்று 2016 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் தொழிற்சாலையின் வளவில் காணப்படும் அதிக பெறுமதி கூடிய கைதவிர்க்கப்பட வேண்டிய எனவும் இரும்பு உட்பட ஆதனங்கள் தொடர்பாக முதலீட்டாளரின் விருப்பின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பது தொடர்பாக சட்டமா அதிபரிடம் விசாரிக்கப்பட்டதன் பின்னர் முதலீட்டாளரின் விருப்பத்தின் பேரில் நடவடிக்கை எடுக்கும் ஏற்பாடுகளை திருத்தம் செய்ய வேண்டிய போதிலும் திறந்த கேள்வி கோரல் மூலம் சொத்துக்கள் கைதவிர்ப்பு

மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் 2017 மார்ச் 20 ஆந் திகதி சட்டமா அதிபரால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கைதவிர்ப்பதற்காக கூடிய கூறுவிலை சமர்ப்பித்த கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். கேள்விதாரால் உரிய காலப்பகுதியில் பணத்தை கட்டுவதில் தாமதத்தின் பேரில் இரண்டாவது கூடிய விலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கையில் கைதவிர்ப்பு நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்காக அவசர உதவி சலுகையொன்று சிங்கப்பூர் சர்வதேச இணக்கப்பாட்டு நிலையத்தின் மூலம் முதலீட்டாளரால் விதிக்கப்பட்டது. இதன் காரணமாக கைதவிர்ப்பு நடவடிக்கைகள் தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கு சட்டமா அதிபர் அனுமதி வழங்கியிருந்தார். 1994 ஆம் ஆண்டின் பின்னர் கம்பனியால் எந்த உற்பத்தி நடவடிக்கையொன்றும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

கல்வி

தரமான கல்வியை நோக்காகக் கொண்டு பாடசாலை பாடத்திட்டத்தில் அறிவு, ஒழுக்கநெறி, ஆளுமை மற்றும் சிறந்த வாழ்வு ஆகியவற்றை முழுமையாகக் கொண்டமைந்த மனிதவளத்தினை உருவாக்குவதே இத்துறையின் குறிக்கோளாக உள்ளது. இக் குறிக்கோளை அடைவதற்காக அமைச்சின் கீழ் 04 திணைக்களங்களும் 09 நியதிச்சட்ட சபைகள்/ நிறுவனங்களாலும் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்டன.

- உலக போட்டித்தன்மைக்கு சுய நம்பிக்கையுடனும் வெற்றி தொடர்பான நம்பிக்கையுடன் பிரவேசிப்பதற்கு இலங்கையின் சிறுவர் மற்றும் இளைஞர் சமூகத்திற்கு இயலுமையை ஏற்படுத்துகின்ற விதத்தில் தேசிய கல்வி முறைமையை வடிவமைத்தல்
- கல்வி விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் மேவுகை செய்தல்.
- தேசிய பாடசாலைகளுக்கு பௌதீக மற்றும் மனிதவளங்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்
- இலவச பாடபுத்தகங்கள், சீருடைகள் பாதணிகள் மற்றும் மதிய உணவு ஆகியவற்றை வழங்குதல்
- ஒட்டுமொத்த கல்விக் கட்டமைப்பினுள் மற்றும் மாணவரிடையே கல்வியின் தரம் மற்றும் ஒழுக்கத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளல்
- இலங்கை கல்வி நிருவாக சேவையின் நிருவாகம் மற்றும் மனிதவள முகாமைத்துவ நடவடிக்கைகள்
- பௌத்த மற்றும் பாளி கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துதுல் மற்றும் பிரிவெனாக்கல்வியை மேம்படுத்தல்.
- வரலாற்று சிறப்புமிக்க தொல்பொருளியல் கலாசார மரபுரிமைகளை பாதுகாப்பதற்கு தேவையன நடவடிக்கை எடுத்தல்
- அரச பதிவேடுகளின் முறையான முகாமைத்துவம் மற்றும் பாதுகாத்தல்
- விசேட தேவையுடைய மாணவர்களுக்காக கல்வி வாய்ப்புக்களை உறுதிப்படுத்துதல்

மேற்குறிப்பிட்ட பணிகள் குறித்த நிறுவனங்களால் நிறைவேற்றப்படுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

நிதிஏற்பாடு குறைவாகப் பயன்படுத்துதல்

மீளாய்வாண்டிற்காக கல்வி அமைச்சின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 15 மூலதன செலவின விடயங்களுக்கும் 10 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் முறையே ரூபா 5,957.21 மில்லியன் மற்றும் ரூபா 206.35 மில்லியனுமாக மொத்தம் ரூபா 6,163.56 மில்லியனான நிதிஏற்பாடு எவ்வித செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தன.

உயர்தர மாணவர்களுக்கு டப் கணனி வழங்குதல்

கல்வியமைச்சினால் குறித்த வருடத்தில் உயர்தர மாணவர்களுக்கு டப் கணினிகள் கொள்வனவு செய்வதற்கான ஆரம்ப வரவு செலவு ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 5,000 மில்லியன் பணிக்குழுப் பயிற்றுவிப்புக்காக ரூபா 6 மில்லியனும் வாடகை அடிப்படையில் கணினிகள் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 5,000 மில்லியனுமாக மொத்தமாக ரூபா 10,006 மில்லியன் ஒதுக்கீடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் அத்தேவைகள் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக இவ்வொதுக்கீடு மொத்தமாக எஞ்சியிருந்தது.

தரம் ஒன்றிற்கு மாணவர்களை உள்வாங்குதல்

2008 செப்டம்பர் 19 திகதிய 37 ஆம் இலக்க கல்வியமைச்சின் சுற்றுநிருபம் மற்றும் 2015 ஒக்டோபர் 14 திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் தேசியப் பாடசாலையொன்றில் ஆரம்பப் பிரிவிலுள்ள வகுப்புகளில் சமாந்தர வகுப்பொன்றில் இருக்கக்கூடிய ஆகக்கூடிய மாணவர்களது எண்ணிக்கை 40 எனவும் இடைநிலை வகுப்புகளில் சமாந்தர வகுப்பொன்றில் இருக்கக்கூடிய ஆகக்கூடிய மாணவர்களது எண்ணிக்கை 45 எனவும் தரம் ஒன்றிற்கு மாணவர்களை உள்வாங்குதலின் போது ஒரு வகுப்பிற்காக தெரிவு செய்யப்படக்கூடிய ஆகக்கூடிய மாணவர்களது எண்ணிக்கை 39 எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் இவ்வெண்ணிக்கைகளை மீறி 89 தேசியப் பாடசாலைகளில் 5,504 மாணவர்கள் மேலதிகமாக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

கடமை மேவுகைக்கான அதிகாரிகளை நியமித்தல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கமைவாக நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரை தற்காலிக அடிப்படையில் பதிற்கடமைக்கான அதிகாரியொருவரை நியமிக்க முடியுமாகவிருந்தது. எனினும் 2018 ஜுன் மாதம் வரை அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படாது நாட்டிலுள்ள 353 தேசியப் பாடசாலைகளில் 259 பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்களுக்கான பதிற்கடமை மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

தொழில்நுட்பத் துறைக்கான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றமை.

மீளாய்வாண்டின் இறுதியில் நாடு முழுவதும் தொழில்நுட்பத் துறை ஆசிரியர்களுக்கான 257 வெற்றிடங்கள் காணப்பட்டன. இவற்றில் பொறியியல் தொழில்நுட்ப பாட ஆசிரியர்களுக்கான 85 வெற்றிடங்களும் தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான 142 வெற்றிடங்களும் உயிரியல் தொகுதி தொழில்நுட்ப பாட ஆசிரியர்களுக்கான 30 வெற்றிடங்களும் காணப்பட்டன. மீளாய்வாண்டின் இறுதி வரை குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

ஒழுக்காற்று விசாரணைகள் முடிக்கப்படாமை

கல்வியமைச்சு, தேசியப் பாடசாலைகள், கல்வியியல் கல்லூரிகள் மற்றும் அமைச்சுடன் தொடர்பான ஏனைய நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட 554 ஒழுக்காற்றுப் பிரச்சினைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்க்கப்படாமலிருந்தன. அவ்வொழுக்காற்றுப் பிரச்சினைகளில் அதிபர் பதவிகளோடு தொடர்பான 110 பிரச்சினைகளும் ஏனைய கல்விசார் மற்றும் கல்விசாரா பதவிகளுடன் தொடர்பான 444 பிரச்சினைகளும் காணப்பட்டன. தீர்க்கப்படாத ஒழுக்காற்றுப் பிரச்சினைகளுள் 2 தொடக்கம் 5 வருட கால இடைவெளியுள்ள 101 பிரச்சினைகளும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட 9 வருடங்களுக்குக் கீழான 4 பிரச்சினைகளும் 9 வருடங்களையும் தாண்டிய 2 பிரச்சினைகளும் காணப்பட்டன. 2012 வருடம் தொடக்கம் காணப்படுகின்ற பாடசாலைகளுக்கு மாணவர்களை உள்வாங்குதல் தொடர்பான 107 முறைப்பாடுகளில் 16 முறைப்பாடுகள் மாத்திரம் மீளாய்வு ஆண்டின் இறுதியில் தீர்த்து வைக்கப்பட்டிருந்தன.

முன் அனுமதியற்ற விடுமுறை பெறல்

2017 ஆம் ஆண்டு 27 தேசியப் பாடசாலைகளில் 107 கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் முன் அனுமதியின்றி 3,428 நாட்கள் கடமைக்கு சமூகமளித்திருக்கவில்லை. தாபனக் கோவையின் பிரமாணங்களுக்கமைவாக மீளாய்வு ஆண்டின் இறுதி வரை இது

தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சம்பளமற்ற விடுமுறை பெறப்பட்ட போதும் அதற்கான சம்பளம் வழங்கப்பட்டிருந்தமை

மீளாய்வாண்டில் 111 தேசியப் பாடசாலைகளில் 536 கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களினால் 11,938 சம்பளமற்ற விடுமுறைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. எனினும் அந்த நாட்களுக்கான சம்பளம் அவ்வூழியர்களின் மாதாந்தச் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை.

ஒரே பாடசாலையில் நீண்ட காலம் ஆசிரியர்களை சேவைக்கமர்த்தல்

கல்விச் செயற்பாடுகள் வினைத்திறன் மிக்கதாக அமையும் வகையிலும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களது நலன்கள் உச்ச அளவில் பேணப்படும் வகையிலும் பாடசாலைகளில் ஆசிரியர் இடமாற்றக் கொள்கையினை தயாரித்துச் செயற்படுத்தும் நோக்கில், 2007 திசம்பர் 13 திகதிய 2007/20 ஆம் இலக்க சுற்றுநிரூபத்தை கல்வியமைச்சு வெளியிட்டிருந்தது. இச் சுற்றுநிரூபத்தின் பிரமாணங்களை பின்பற்றாமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் 127 தேசியப் பாட்சாலைகளில் 4,123 ஆசிரியர்கள் 8 வருடங்கள் தொடக்கம் 32 வருட காலப்பகுதியினுள் இடமாற்றம் பெறாமல் ஒரே பாடசாலையில் நீண்ட காலமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பயிற்றப்பட்ட பாடத்துறையில் கற்பித்தல் இடம்பெறாமை

118 தேசியப் பாட்சாலைகளில் 786 ஆசிரியர்கள் தாம் நியமனம் பெற்ற பாடங்களுக்குப் புறம்பான பாடங்களைக் கற்பிப்பதற்காக இணைக்கப்பட்டிருந்தனர். குறிப்பாக 40 தேசியப் பாட்சாலைகளில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர் பயிற்சியினை பெறாத 163 ஆசிரியர்கள் ஆரம்பப்பிரிவு வகுப்புகளில் கற்பிப்பதற்காக இணைக்கப்பட்டிருந்தனர்.

கற்றல் நடவடிக்கைகளில் குறைவாக ஈடுபடல்

தேசியப் பாடசாலைகளின் பிரதி அதிபர்கள் ஒரு வாரத்தில் குறைந்தது 10 பாடவேளைகள் கற்பித்தலில் ஈடுபடுத்தப்பட வேண்டியிருந்த போதும், 71 தேசியப் பாடசாலைகளில் 146 பிரதி அதிபர்கள் ஒரு பாட வேளையாவது கற்பித்தலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. 3 தேசியப் பாடசாலைகளில் 5 பிரதி அதிபர்களுக்கு 2 தொடக்கம் 6 பாட வேளைகள் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்தன. உதவி அதிபர்கள் ஒரு வாரத்தில் குறைந்தது 12 பாடவேளைகள் கற்பித்தலில் ஈடுபடுத்தப்பட வேண்டியிருந்த போதும், 29 தேசியப் பாடசாலைகளில் 58 உதவி அதிபர்கள் கற்பித்தலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஒரு வாரத்தில் குறைந்தது 40 நிமிடங்களைக் கொண்ட 35 பாடவேளைகள் ஒதுக்கப்பட வேண்டும். எனினும் 94 தேசிய பாடசாலைகளில் 811 ஆசிரியர்களுக்கு அவ்வாறு பாட வேளைகள் ஒதுக்கப்படவில்லை. 95 தேசியப் பாட்சாலைகளில் 699 ஆசிரியர்களுக்கு 16 பாடவேளைகளை விடவும் குறைவாகவே ஒதுக்கப்பட்டிருந்தது. நாட்டின் 9 மாகாணங்களிலும் காணப்பட்ட விசேட கல்வி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் 114 ஆக காணப்பட்ட போதும் விசேட கல்வி பயிற்சியினைப் பெற்ற 150 ஆசிரியர்கள் வேறு பாடசாலைகளில் அல்லது வகுப்பறைகறில் கற்பித்தலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் மேலதிகத்தினை சமப்படுத்தாமை

2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 123 தேசியப் பாடசாலைகளில் 1,775 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 93 தேசியப் பாட்சாலைகளில் 874 ஆசிரியர்கள் மேலதிகமாகக்

காணப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. எனவே, மேலதிக ஆசிரியர்கள் உள்ள பாடசாலைகளிலிருந்து வெற்றிடமுள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை இடமாற்றும் கொள்கை அமைச்சினால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

பாடசாலை நூலகங்களிலிருந்து ஆசிரியர்கள் பெற்றுக்கொண்ட புத்தகங்களை மீளளிக்காமை

இடமாற்றம் பெற்றுச் சென்ற, வெளிநாடுகளுக்குச் சென்ற, ஓய்வு பெற்ற மற்றும் சேவையிலிருந்து இடைவிலகிய 18 தேசியப் பாடசாலைகளைச் சேர்ந்த 73 ஆசிரியர்கள் தாம் இறுதியாகக் கடமை புரிந்த பாடசாலைகளின் நூலகங்களிலிருந்து பெற்றுக்கொண்ட ரூபா 26,768 பெறுமதியான 175 புத்தகங்களை மீளக் கையளித்திருக்கவில்லை. குறித்த பாடசாலையிலிருந்து ஆசிரியர்களை விடுவிக்கும் முன்னர், அப்புத்தகங்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை அதிபர்கள் மேற்கொண்டிருக்கவில்லை.

சட்டப்பிரமாணங்களுக்குப் புறம்பான வகையில் தனியார் பாடசாலைகளை நடாத்துதல்

1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உப பிரிவு பாடசாலை பயிற்சிக் கல்லூரி (மேலதிக பிரமாண) சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் 5 தொடக்கம் 14 வயதெல்லைக்குட்பட்ட மாணவர்களுக்கான கல்வியை வழங்குவதற்காக எவரும் தனியார் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாதென குறிப்பிடப்பட்டுள்ளது. அப் பிரமாணங்களுக்கு முறணாக அதிக எண்ணிக்கையான சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக தேசியக் கல்விக் கொள்கைக்கமைவாக சர்வதேச பாடசாலைகளை மேற்பார்வை செய்தல் கல்வியமைச்சின் ஒரு பிரதான குறிக்கோளாக இருந்தது. அப்பாடசாலைகள் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் அல்லது முதலீட்டு சபையின் கீழ் அல்லது தனியார் நிறுவனங்களாக பதிவு செய்திருந்த போதும், இலங்கையினுள் அடிப்படைக் கல்வியை வழங்கும் பாடசாலைகளாக கல்வியமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அப்பாடசாலைகள் சம்பந்தமான தகவல்களை அமைச்சுக்குப் பெற்றுக்கொள்வதற்கான முறையான திட்டமொன்று வகுக்கப்பட்டிருக்கவில்லை.

இலாபத்தினை அடிப்படையாகக் கொண்ட வியாபாரங்களை பதிவுசெய்யும் முறையில் இப்பாடசாலைகளும் உள்ளடக்கப்பட்டிருப்பதால், அப்பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களது அடிப்படை உரிமைகள் எந்தளவு பாதுகாக்கப்படுகின்றன என்பது குறித்து முறையான பின்னூட்டலொன்று எந்தவொரு அரச நிறுவனத்தினாலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

அரச பாடசாலையொன்றில் காணப்பட வேண்டிய குறைந்தபட்ச பண்புசார் மற்றும் அளவுசார் தரத்தினையாவது இப்பாடசாலைகள் கொண்டுள்ளனவா, ஒவ்வொரு தரத்திற்கும் அமைவாக மாணவர்களுக்கான பண்புசார் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்கான தகைமையும் அனுபவமும் கொண்ட ஆசிரியர்கள் காணப்படுகின்றனரா மற்றும் கல்விப் புலத்தினுள் அன்றாடம் நிகழும் மாற்றங்கள் தொடர்பில் இற்றைப்படுத்தப்படுகின்றனரா போன்ற விடயங்களை மேற்பார்வை செய்யும் முறையொன்று அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

சிசு அருண கல்வி நிதியம்

2001 ஆம் ஆண்டு சிசு அருண கல்வி நிதியம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2003 ஏப்ரல் 29 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்ட அறிக்கைக்கமைவாக நிதியத்தில் காணப்படும் நிலையான வைப்புத் தொகை ரூபா 2.5 மில்லியனை எட்டியதும் புலமைப்பரிசில் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை

எடுக்கப்படல் வேண்டுமென தீர்மாணிக்கப்பட்டிருந்தது. 2015 ஆம் வருட இறுதியில் குறித்த நிலையான வைப்புத் தொகையின் பெறுமதி ரூபா 2.6 மில்லியன் கடந்திருந்ததுடன், 2017 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் அது ரூபா 3.9 மில்லியனனாக இருந்தது. சபையினால் தீர்மாணிக்கப்பட்டிருந்த தொகை 2015 ஆம் வருட இறுதியில் அடையப்பெற்றிருந்த போதும், மீளாய்வு ஆண்டின் இறுதி வரை புலமைப்பரிசில் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

வள மற்றும் தகவல் நிலையத்தினை ஆரம்பிப்பதில் தாமதம்.

9 மாகாணங்களிலும் விசேட தேவையுடைய பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திக்காக தேசிய மற்றும் மாகாண ரீதியில் வள மற்றும் தகவல் நிலையங்களை ஆரம்பிப்பதற்காக 2017 ஆம் வருடம் வெனிவல்கொல தெரிவு செய்யப்பட்டிருந்தது. அதற்காகப் பெறப்பட்டிருந்த காணியின் உரிமத்தினை மீளாய்வு ஆண்டின் இறுதி வரை கல்வியமைச்சு பெற்றுக்கொண்டிருக்கவில்லை. மீளாய்வு ஆண்டின் இறுதி வரை வள நிலையத்தின் வைத்திய ஓய்வறை மற்றும் நிர்வாக மற்றும் மதிப்பீட்டுக் கட்டடம் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், கேட்போர் கூடம், வகுப்பறைகள், நூலகம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கட்டடம், விடுதிகள் மற்றும் உணவகம் ஆகியன பாதியளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. விடுதிகள், உத்தியோகபூர்வ வீடுகள், தொழிற்பயிற்சிக் கட்டிடங்கள், விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டு சபைகளின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவுமில்லை. 2007 ஆம் ஆண்டு தொடக்கம் இந் நிலையத்தினை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதும், 10 வருடங்களுக்கு மேல் கடந்திருந்த நிலையிலும், மீளாய்வு ஆண்டின் இறுதி வரை அதனை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண்டிருக்கவில்லை.

கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமை

ஆசிரியர்களின் தகவல்கள் அடங்கிய தரவுத் தளமொன்றினை (Data Base) தயாரித்தல் மற்றும் அதனுடன் இணைந்த ஆசிரியர் சேவை முகாமைத்துவம் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் காரியாலயத் தொகுதிக்கு தேவையான சேவைகளை வழங்குவதனை குறிக்கோளாகக் கொண்டு மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் உதவியுடன் கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமையொன்றினை (EMIS) நிறுவியிருந்தது. அதற்காக 2011 மார்ச் மாதம் தொடக்கம் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியினுள் அறிவுள்ள சமூகத்திற்கான கல்வி திட்டத்தின் (EKSP) நிதியத்திலிருந்து ரூபா 64.06 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2012 பெப்ரவரி 27 ஆம் திகதி முதல் கட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கான தரவுத் தளத்தினை அமைப்பதற்கு ரூபா 900,000 (வரி விலக்குடன்) 2013 ஜுன் 27 ஆம் திகதி இரண்டாம் கட்டத்தின் கீழ் முதல் கட்டத்தில் குறிப்பிடப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 9 மொடியூல்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 13.88 மில்லியனும் (வரி விலக்குடன்) மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதி வரை இம்முறைமையினை ஒழுங்காக செயற்படுத்துவதற்கு முடியாமல் போயிருந்தது. தேசிய கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமையினை 2018 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் நிறைவு செய்வதற்கு திட்டமிட்டதன் பின்னர், அமைச்சின் தகவல் தொழில்நுட்பக் கிளையினால் நிழல் தரவுத் தளமொன்றினை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆசிரியர்களின் மனித வள முகாமைத்துவத்துடன் தொடர்பான தரவுகளை அவர்களது தனிப்பட்ட கோவைகள் பராமரிக்கப்படுகின்ற வலயக்

கல்விப் பணிமனைகளினூடாக திரட்டுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் பயன்படுத்தப்பட்ட தகவல் வழங்கி (Server) இயந்திரத்திற்குப் பதிலாக புதிய தகவல் வழங்கி (Server) இயந்திரமொன்று பெறப்பட்டிருந்ததுடன், பயன்படுத்தப்பட்ட தகவல் வழங்கி (Server) இயந்திரத்தின் தரவுகள் புதிய தகவல் வழங்கி (Server) இயந்திரத்திற்கு மாற்றுகின்ற செயற்பாடு நடைபெற்று வருகின்றது. எனினும், தரவுகளை உட்செலுத்துவதில் காணப்படும் தாமதம் மற்றும் போதியளவு கணனிகள் மற்றும் இணையத்தள வசதிகள் காணப்படாமை காரணமாக இச்செயற்பாட்டினை நினைத்த வேகத்தில் செயற்படுத்துவது இயலாத காரியமாகவுள்ளது.

வெளித்தரப்பினர்களினால் அரச காணிகள் பயன்படுத்தப்படல்

கல்வியமைச்சுக்குச் சொந்தமான 20 தொடக்கம் 939 பேர்ஸ் வரையிலான காணி வெளித்தரப்பினர்களினால் அனுமதியின்றி பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. கல்வியமைச்சினால் இக் காணிகள் தொடர்பான தகவல்களைச் சேகரித்து தேவையான நட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மீளாய்வு ஆண்டின் இறுதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள்

செயற்திறனான மற்றும் கைத்தொழில் சிக்கல்களின்றி தொழில் உறவுகளை ஏற்படுத்தும் நோக்கில் தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சு மற்றும் அதன் கீழான இரண்டு திணைக்களங்களாலும் 03 நியதிச்சட்ட / நிறுவனங்களாலும் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் விடயத்திற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல்
- ஊழியர் நலன்புரி நிதியம், தனியார் நலன்புரி நிதியம் மற்றும் தனியார் ஓய்வூதிய வழங்கல் முறைகளை நிர்வகித்தல்
- சர்வதேச தொழிலாளர் நியமங்கள் ஊழியர் நிர்வாகம் மற்றும் நலன்புரி தொடர்பில் கொள்கைகள் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
- சர்வதேச தொழிலாளர் அமைப்புக்கள் மற்றும் சர்வதேச சமூக பாதுகாப்பு அமைப்புக்களுடன் பரஸ்பர ஒத்துழைப்பை பேணுதல்
- தொழிற்சங்கங்களை பதிவு செய்தல் மற்றும் அரச மற்றும் தனியார் துறைகளின் அனைத்து தொழிற்சங்கங்களினதும் நடவடிக்கைகளை நாட்டின் அபிவிருத்திக்காக ஈடுபடுத்துவதற்குரிய திடமான படிமுறைகளை அறிமுகப்படுத்தல் அமுல்படுத்துதல்
- தேசிய ஆளணி தொழில் பாதுகாப்பு கொள்கைகள் அமுல்படுத்துதல்
- தொழில் வழிகாட்டி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- தொழிலாளர் உறவுகள் மற்றும் தொழிலாளர் முரண்பாடுகளை தீர்த்து வைத்தல்
- தொழிலாளர் உறவுகளுக்குரிய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குபடுத்தலுக்குரிய நடவடிக்கை எடுத்தல்

அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களால் மேற்படி செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் கீழே காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

ஊழியர் படையணியின் பங்களிப்பு விகிதம் அதிகரித்தல்

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் 53.8 ஆக காணப்பட்ட ஊழியப்படை விகிதம் மீளாய்வாண்டின் போது 54.1 சதவீதமாக உயர் விகிதமொன்றை எடுத்திருந்தது. எனினும் முன்னைய ஆண்டின் போது காணப்பட்ட ஆண் உழைப்பு பங்களிப்பு விகிதம் மீளாய்வாண்டின் போது 74.5 சதவீதமாக குறைவடைந்திருந்தது. ஊழியப்படை படை பங்களிப்பு பெண்கள் விகிதம் முன்னைய ஆண்டின் போது 35.9 சதவீதமாக காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது அது 36.6 சதவீதமாக அதிகரித்திருந்தது. இலங்கைக்குரிய ஊழியர் படையணியின் பிரதான அம்சங்கள் சில பின்வரும் அட்டவணை 19 இல் தரப்பட்டுள்ளன.

	2015	2016	2017
குடும்பங்களின் சனத்தொகை			
ஊழியப்படை			
நபர்கள்	8,214,000	8,311,000	8,567,000
வேலை செய்வோர்	7,831,000	7,948,000	8,209,000
தொழிலற்றோர்	383,000	363,000	358,000
ஊழியப் படை பங்குபற்றல் விகிதம்	53.8	53.8	54.1
ஆண்	74.7	75.1	74.5
பெண்	35.9	35.9	36.6
	2015	2016	2017

அட்டவணை 19 ---- ஊழியப்படையின் பிரதான அம்சங்கள் மூலம் :- இலங்கை மத்திய வங்கி அறிக்கை

தேசிய மனித வலு மற்றும் தொழில்துறைக் கொள்கைகளைச் செயற்படுத்துதல்

2010 பெப்ரவரி 12 ஆந் திகதிய 1640/31 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி பத்திரத்தில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் தாபிக்கப்பட்ட மனிதவலு மற்றும் தொழில்துறை திணைக்களத்தின் பிரதான செயற்பணியாக தேசிய மனித வளங்கள் மற்றும் தொழிலதுறைக் கொள்கையை செயற்படுத்தப்படுதல் கையளிக்கப்பட்டிருந்தது. அக்கொள்கையை செயற்படுத்துவதற்காக முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு முறையொன்று (NHREP Implementation Management and Monitoring System) ஸ்தாபிப்பதற்கு ரூபா 8.34 மில்லியன் பெறுமதியான வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்கள் 2015 செப்தெம்பர் 08 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும் அம் முறைமை ஸ்தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சொத்துக்கள் 2 வருடங்களும் 10 மாதங்களும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. மேலும் முறைமையை செயற்படுத்துவதவற்கு நேரடியாக தொடர்புடைய அமைச்சுக்களின் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 162,600 செலவிடப்பட்டு முறைமையை செயற்படுத்துவது தொடர்பான செய்முறை பயிற்சியொன்றும் வழங்கப்பட்டிருந்தது. இம்முறைமை ஊடாக கொள்கையை செயற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்யும் 25 அமைச்சுக்களை ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்துவது நோக்கமாக இருந்த போதிலும் அந்த 25 அமைச்சுக்களில் 16 மாத்திரம் 2017 ஆம் ஆண்டிற்குரிய கொள்கை செயற்படுத்தும் செயல்நடவடிக்கைத் திட்டம் எழுத்துமூலமாக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் கொள்கை செயற்படுத்தும் முன்னேற்றம் எந்தவொரு அமைச்சினாலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்

1942 இன் 45 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் மூலம் இலங்கையின் தொழிற்சாலைகளில் சேவை புரியும் ஊழியர்களுக்கு ஏற்படக்கூடிய விபத்துக்களை தவிர்க்கும் நியதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. 2012 ஆம் ஆண்டின் போது தொழிலாளர் திணைக்களத்தின் செயலாற்றலை மேம்படுத்துவதற்காக சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப ஞாபனத்தில் (Technical Memorandum) 06 பரிந்துரையின் கீழ் தொழில் விபத்து தொடர்பான தேசிய தரவு

முறைமையொன்றை பேணும் தேவைபாடடொன்று குறிப்பிடப்பட்டிருந்தது.

தொழிற்சாலைகளில் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஏற்படும் விபத்து தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட முறையான தரவு முறைமையொன்று தொழில் திணைக்களத்தின் தொழில் துறை பிரிவில் ஸ்தாபிக்கப்பட்டமையால் வருடாந்தம் இடம் பெறும் தொழிற்சாலை விபத்துக்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் முறைமையொன்று காணப்படவில்லை. மேலும் சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் பட்டயம் தொடர்பாக வழங்கப்பட்ட 155 ஆம் இலக்க நியதி உள்நாட்டு கட்டணங்கள் திருத்தம் செய்யப்பட்டு தொழில் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கு தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

தொழிலாளர் அலுவலகங்களில் செயற்பாடற்ற வழக்குகள்

தொழில் திணைக்களத்தின் கீழ் காணப்படும் மாவட்ட மற்றும் உப அலுவலகங்கள் 57 இல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செயற்பாடற்ற 3750 வழக்குகள் காணப்பட்டதுடன் அதன் பெறுமதி 1,844.46 மில்லியனாக இருந்தன. தொழில் கொள்வோர் உரிய முகவர்களில் இல்லாமை, வெளிநாடு செல்லல், மரணித்தல், நிறுவனத்தை மூடிவிடுதல் போன்ற காரணங்களினால் இவ்வாறு வழக்குகள் செயற்பாடற்றுக் காணப்பட்டன. அந்த செயற்பாடற்ற வழக்கு கோவைகளை செயற்படுத்துவதற்கு முறையான நடவடிக்கைகள் திணைக்களத்தினால் செயற்படுத்துவதில் காணப்பட்ட பலவீனம் காரணமாக செயற்படாதிருந்த வழக்குகளை செயற்படுத்துவதற்கு 16 முதல் 22 வருடங்களுக்கு இடைப்பட்ட காலதாமதம் இடம்பெற்றிருந்தது. மேலும் தொழிலாளர் அலுவலகங்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை பரீட்சித்த போது அறிவிடப்பட வேண்டிய ரூபா 3.05 மில்லியனை 17 வழக்குகளுக்கு கோவைகள் காணாமல் போயிருந்தன.

மெஹெவர செயற்பணி இல்ல கட்டிட நிர்மாணம்

வேலை செய்யும் மக்களுக்கு செயற்திறனான சேவையொன்றை வழங்கும் நோக்கில் ஒரு கூரையின் கீழ் அனைத்து வேலைகளை செய்து கொள்ளும் எண்ணக்கருவின் பிரகாரம் ரூபா 7,169 மில்லியன் மதிப்பிட்டின் அடிப்படையில் செயற்பணி இல்ல கட்டிடம் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகள் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதிஏற்பாடு மூலம் ஆரம்ப சந்தர்ப்பத்தின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் அசையாத ஆதன நிர்மாணத்திற்காக பணத்தை ஈடுபடுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தில் காணப்படவில்லை. இதனால் நிர்மாண நடவடிக்கைகளுக்காக தேவையான நிதி ஏற்பாடுகளை பொது திறைசேரி வழங்குவதற்கு 2015 மே 31 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அத்திகதி வரை நிர்மாண நடவடிக்கைகளுக்காக ஊழியர் சேமலாப நிதியத்தின் மூலம் செலவிடப்பட்ட பணத்தை மீண்டும் நிரப்புவதற்கு திறைசேரிக்கு நேர்ந்திருந்தது. 2017 ஆம் ஆண்டின் வருடாந்த பாதீட்டில் அப்பணத்தை தீர்வு செய்வதற்காக ரூபா 200 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 50 மில்லியன் மாத்திரம் மீளளிக்கப்பட்டிருந்ததுடன் 2018 யூன் 25 ஆந் திகதி வரையிலும் ரூபா 377.15 மில்லியன் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மீள்நிரப்ப வேண்டியிருந்தது.

தொழிலாளர் மேற்பார்வை அறிக்கைகளை கணினி மயப்படுத்தல்

தொழில் திணைக்களத்தின் கீழ் காண்ப்படும் மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களின் மாதாந்த செயலாற்றல் செயன்முன்னேற்றம் தொடர்பாக மாதிரி படிவத்தின் மூலம் கிடைக்கும் தரவுகளை பகுப்பாய்வு செய்தவற்கு 2015 ஆம் ஆண்டின்போது கணினி நிகழ்ச்சித் திட்டமொன்று தொழில் திணைக்களத்தின் புள்ளி விபரவியல் பிரிவினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தத. அத் தரவுகளை கணனி மயப்படுத்துவதற்கு பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் இல்லாமை மற்றும் தேவையான தரவுகளை சரியாக மாதிரிப்படிவங்களில் தொழிலாளர் அலுவலகங்களினால் நிரப்பி அனுப்பாமையால் அந்த தரவு முறையை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் 2012 ஆம் ஆண்டின் போது தொழிலாளர் திணைக்களத்தின் செயலாற்றலை அறிவிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட தொழில் நுட்ப ஞாபனத்தில் தொழிலாளர் பரிசோதனைகளை முறைப்படுத்துவதற்காக பல பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அதில் பிரதானமாக தொழிலாளர் பரிசோதனை தொடர்பாக கொள்கையொன்று தயாரிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. 2010 ஆம் ஆண்டின் போது தொழில் உத்தியோகத்தர்களின் தொழிலாளர் பரிசோதனை மற்றும் வழக்கு கணனி மயப்படுத்தும் செயற்பாடு (LISA) முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந் நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. மொத்த தொழிலாளர் பரிசோதனை வழக்குகள் எண்ணிக்கை 78,769 ஆக இருந்த போதிலும், முறைமைக்கு 22,375 வழக்குகள் உட்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் முறைமைக்கு உட்படுத்தப்பட வேண்டிய வழக்குகள் எண்ணிக்கையின் 71.59 சதவீதம் அல்லது 56,394 வழக்குகள் முறைமைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வரும் அட்டவணை காண்பிக்கப்பட்டுள்ளது.

விபரம்	பௌதீக அளவு	முறைமைக்குள் உள்ளடக்கப்பட்ட அளவு	முறைமைக்குள் உள்ளடக்கப்படாத அளவு
சட்டரீதியான தகவல்கள்	4,225	2,016	2,209
முறைப்பாடுகள்	15,353	14,308	1,045
பரிசோதனை அறிக்கை	59,191	6,051	53,140
மொத்தம்	78,769	22,375	56,394

அட்டவணை 20 :---முறைமையில் உள்ளடக்கப்படாத வழக்கு எண்ணிக்கை

மூலம் : தொழில் திணைக்களத்தின் LISA கணினி முறைமை

மேலும் மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளரின் அலுவலக உதவியாளர்களின் சுற்றுலா நிகழ்ச்சித்திட்டங்கள், அவசர விபத்து அறிக்கைகள் உள்ளடக்குவதற்கு பொறியியலாளர் பரிசோதனை மொடியுலொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. போதிலும் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட 4835 பரிசோதனைகளில் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் 38 அறிக்கைகள் மாத்திரம் முறைமைக்கு உள்ளடக்கப்பட்டிருந்தது.

ஊழியர் சேமலாப நிதியம் தொழில் திணைக்களத்தின் தேவைப்பாட்டிற்காக பயன்படுத்துதல்

மீளாய்வாண்டிற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் தொழில் திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளுக்கான தேவையான கட்டுநிதி போதியளவில் திறைசேரியால் வழங்கப்பட்டிருக்கவில்லை இதனால் தேவைப்பாட்டிற்காக ரூபா 32 மில்லியன் தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பணத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட பணம் திணைக்களத்தினால் 2017 திசெம்பர் 28 ஆந் திகதி தீர்க்கப்பட்டிருந்தது.

தொழில் சங்க பிரிவு

தொழிற்சங்கங்களை பதிவு செய்தல், நிர்வாகம், பதிவின் பின்னர் தொழிற்சங்க சம்மேளத்திற்கான கட்டளைச் சட்டம் மற்றும் அதன் கட்டளைகளின் பிரகாரம் செயற்படுத்துதல் மற்றும் அது தொடர்பான ஒழுங்குபடுத்தல் தொழிற்சங்கங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. தொழில் சங்க கட்டளைச்சட்டம் அமுலாகிய திகதி முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பதிவு செய்யப்பட்ட மொத்த சங்கங்கள் சம்மேளனங்களின் எண்ணிக்கை 1,668 ஆக இருந்தது. அதில் பதிவினை புதுப்பிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டு சங்கங்களினால் “N” அறிக்கை அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மீளாய்வாண்டிற்காக 1,437 சங்கங்கள் மாத்திரம் “N” அறிக்கையை சமர்ப்பித்திருந்தமை.

வயது பூரணமடைந்தவர் நலனாளிகளுக்கு தொழிலாளர் இழப்பீடு வழங்குதல்

தொழிலில் ஈடுபட்டிருக்கையில் பயங்கரமான விபத்துக்கள் காரணமாக இறந்த ஊழியர்களின் பராயமடைந்த பிள்ளைகளுக்குரிய இழப்பீட்டுத் தொகை வங்கிகளில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டு காலம் பூர்த்தியடைந்ததன் பின்னர் அப்பணம் நலனாளிகளுக்கு வழங்குதல் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்றது. வயது பூர்த்தியான நலனாளிகளுக்காக 329 நிலையான வைப்புக் கணக்குகளில் காணப்பட்ட ரூபா 10.48 மில்லியனான நலனாளிகளுக்கு விடுவிப்பதற்கு 1 ஆண்டு முதல் 25 ஆண்டுகள் வரையான காலதாமதமொன்று இடம் பெற்றிருந்தது.

இழப்பீட்டு பணத்தை நலனாளிகளுக்கு கொடுப்பனவு செய்தவதில் தாமதம்

2005 இன் 10 ஆம் இலக்க தொழிலாளர் இலக்க தொழிலாளர் இழப்பீட்டு திருத்தச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொழிலில் ஈடுபட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது ஆபத்திற்கோ அல்லது மரணிக்கும் ஊழியர்களுக்கு தொழில் கொள்வோரிடமிருந்து இழப்பீட்டினை அறவிட்டு வழங்குவதன் மூலம் ஊழியர் திருப்தியை பெற்றுக் கொடுத்து மற்றும் அந் நட்ட ஈட்டுத் தொகை உரித்துக் காணப்படும் நபர்களுக்கு பகிர்ந்தளித்தலை இந்த இழப்பீட்டு ஆணையாளரை அலுவலகத்தினால் மேற்கொள்ள வேண்டியிருந்தது. 54 நலனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக தொழில் கொள்வோரிடமிருந்து இழப்பீடாக அறவிடப்பட்ட ரூபா 7.76 மில்லியன் 3 மாதங்கள் முதல் 5 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலான கால தாமதத்தின் பின்னர் நலனாளிகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

வழக்கு தொடர்ந்து அறவிடப்பட்ட பணத்தை தீர்வு செய்யாமை

தொழில் திணைக்களத்தினால் ஊழியர் சேமலாபநிதியத்திற்கு பங்களிப்புத் தொகை அனுப்பி வைக்காத தொழில் கொள்வோருக்கு வழக்கு தொடர்ந்து 2011 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட்ட மொத்தம் ரூபா 256.27 மில்லியன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்படாமல் தொழில் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

நிழற்படங்கள் மற்றும் கைவிரலடையாளங்களை பெற்றுக் கொள்ளல்

நிழற்படங்கள் மற்றும் கைவிரலடையாளம் மூலம் சரியாக இவை காணப்பட்டதன் மூலம் அங்கத்தவர்களுக்கு செயற்திறனான மற்றும் நம்பிக்கையான சேவையொன்றை வழங்குவது நோக்கத்துடன் ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களின் நிழற்படங்கள் மற்றும் கைவிரலடையாளங்கள் பெற்றுக் கொள்ளும் செயற்த்திட்டத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களில் முறையே 2008/2009 மற்றும் 2010/2011 ஆம் ஆண்டுகளின் போது செயற்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டம் தொடர்பான கிரய நலன் பகுப்பாய்வு (Cost - Benefit Analysis) மற்றும் சாத்திய வள ஆய்வொன்று மேற்கொண்டு முறையான திட்டமொன்றுடன் செயற்திட்டத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது சட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2015/2016 ஆம் ஆண்டுகளின் போது செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்த செயற்திட்டத்தின் 3 ஆம் கட்டமும் முறையான திட்டமொன்றுடன் ஆரம்பிக்கப்பட்டமையால் செயற்திட்ட அறிக்கையொன்றும் செயற்திட்ட திட்டமொன்றும் கணக்காய்விற்கு சமர்பிக்க தவறியிருந்தது. செயற்திட்டத்தின் 3 ஆவது கட்டத்தை இரண்டாவது சட்டங்களின் செயன்முன்னேற்றத்தை மீளாய்வு செய்ய இடம் பெற்றதை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பக்கப்படவில்லை.

உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டமை

நிழற்படங்கள் மற்றும் கைவிரலடையாளம் பெற்றுக் கொள்ளும் செயற்திட்டத்தின் மூன்றாவது சட்டத்தின கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 16.56 மில்லியன் செலவிடப்பட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. செயற்திட்டத்தின் மூன்றாவது கட்டத்தை செயற்படுத்தாமையால் அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்கள் 2018 மே 31 ஆந் திகதி வரையிலும் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமை

நிழற்படங்கள் மற்றும் கைவிரலடையாளம் 2015 ஆம் ஆண்டிலிருந்து நிதித் தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டு முறையாக திட்டமிடப்படாமையால் வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு முழுமையாக பயன்படுத்த முடியாதிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது 2 செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் 85 சதவீதம் மற்றும் 46 சதவீதமாக சேமிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டின் போது செலவின விடயமொன்றின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 100 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய விடயத்திலிருந்த 85 சதவீதம் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டு 15 சதவீதமான அளவு

சேமிக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது செலவின விடயமொன்றிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த நிதி ஏற்பாடும் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

அச்சிடல் இயந்திரத்தின் இயலளவை பயன்பாட்டிற்கு எடுக்காமை.

2007 நவம்பர் மாதத்தின் போது ரூபா 21.88 மில்லியன் செலவு செய்து ஊழியர்க சேமலாப நிதித்தினால் அச்சிடல் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த அச்சிடல் இயந்திரத்தின் உச்ச இயலளவு பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் வருடாந்தம் அதிக கிரயமொன்றின் கீழ் வெளிநிறுவனங்கள் மூலம் நிதியத்தின் அச்சிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ABH மாதிரிப் படிவம் அச்சீட்டிற்காக மொத்தம் ரூபா 32.32 மில்லியன் செலவு செய்து வெளிநிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல்

நிலைபேறான சுற்றடால் மற்றும் மஹாவலி வலயத்தின் ஜீவனோபாயத்தை மேம்படுத்துதலை நோக்கி செயற்படுதல் இத்துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறொன்றாக இருந்தது. இப்பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, 02 திணைக்களங்கள் 08 நியதிச்சட்ட நிறுவனங்களாலும் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- சுற்றாடல் மற்றும் மஹாவலி துறைக்கான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தினைச் தயாரித்தலும் செயற்படுத்தலும்
- மஹாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்.
- மஹாவலி விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குதல்.
- மஹாவலி அதிகாரசபைச் சட்டத்தினைச் செயற்படுத்தல்.
- தற்கால மற்றும் எதிர்கால சந்ததியினருக்காக சுற்றாடலை பாதுகாத்தல்
- சுற்றாடல் மாசடைவதைத் தடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் பயனுறுதி வாய்ந்த செயற்படுத்துகையும்
- கடல் மாசடைதலைத் தடுத்தல் மற்றும் நகர் திண்மக் கழிவுப் பொருள் முகாமைததுவம்
- காடுகள், வனவிலங்குகள், தாவர, விலங்கினங்கள் ஆகியவற்றின் பாதுகாப்பும் பேணுகையும்
- நாட்டின் மரப்பலகைத் தேவையை நிறைவேற்றும் பொருட்டு வர்த்தக வனச் செய்கையை ஊக்குவித்தல்
- இரத்தினக்கல், ஆபரணக் கைத்தொழிலையும் வர்த்தகத்தையும் ஊக்குவித்தலும் ஒழுங்குறுத்துகையும்
- கரையோரப் பாதுகாப்பும் பேணுகையும்

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களால் மேற்படி செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் கீழே காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டம்

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 62,060.31 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் செயற்பாடுகள் மற்றும் திடீரென ஏற்பட்ட நீர்க் கசிவு காரணமாக பொதுமக்களுக்கு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்திருந்தது. அந்த பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்த மக்களுக்காக மீளாய்வாண்டின் போது உள்நாட்டு நிதியத்திலிருந்து ரூபா 896.72 மில்லியன் செலவிடப்பட்டது. அச்செலவினத்தில் ரூபா 744.54 மில்லியன் ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும், ரூபா 152.19 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது. மேலும், நீர்க்கசிவு காரணமாக பாதிப்படைந்த வீடுகளின் சேதத்தை மதிப்பீடு செய்வதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 3.85 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், அச்செலவினம் ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

செயலாற்றல் குறைவடைதல்

மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மற்றும் உலக உணவு நிகழ்ச்சிற்கு இடையே 03 வருட காலப்பகுதிக்காக இலங்கையின் மஹாவலி கங்கை ஓரத்தை அண்மித்ததாக மெதிரிகிய, லங்காபுர மற்றும் வலப்பனே பிரதேசங்களில்

விவசாய குடியிருப்புக்களின் விவசாய சமூகத்தை காலநிலை பாதிப்புக்களின் பாதகமான தாக்கங்களுக்கு பழக்கப்படுத்தும் நோக்கில் 2014 ஆகஸ்ட் 11 ஆந் திகதி இலங்கையில் மஹாவலி கங்கை கரையை அண்மித்த பிரதேசங்களில் விவசாய குடியிருப்புக்களின் விவசாய சமூகத்தை காலநிலை பாதிப்புக்களின் பாதகமான தாக்கங்களுக்கு பழக்கப்படுத்தும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டம் ஐ.அ.டொலர் 7.99 மில்லியன் விசேட மானியமொன்றின் கீழ் ஆரம்பிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்தின் நிதிச் செயலாற்றல் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 33 சதவீதத்தை விட குறைநத அளவினை கொண்டிருந்தது. மேலும், செயற்திட்டத்தின் எதிர்பார்த்த காலப்பகுதியில் 02 வருடங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் கருத்திற் கொள்ளக்கூடிய மட்டத்தில் பௌதீக செயன் முன்னேற்றமொன்றை அடையத் தவறியிருந்தது.

திண்மக் கழிவுப் பொருள் வெளியேற்றல் வசதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம்

பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கொரிய கடன் வசதியின் அடிப்படையில் திண்டக் கழிவுப் பொருள் வெளியேற்றல் வசதிகள் நிர்மாண செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ஐ.அ.டொ 41.89 மில்லியனாக இருந்தது. அதில் கொரிய கடன் உதவியான வருடாந்தம் 0.15 சதவீத வட்டி சதவீதத்தின் பேரில் ஐ.அ.டொ. 33.54 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் 10 வருட சலுகைக் காலத்திற்குள் 40 வருடங்களில் செலுத்த வேண்டியதாகும். செயற்திட்டத்திற்காக ஐ.அ.டொ 8.35 மில்லியன் நிதியம் ஈடுபடுத்தப்பட வேண்டும். செயற்திட்டத்தின் கீழ் வரும் கடன் உடன்படிக்கை 2013 யூலை 23 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் செயற்திட்டம் 04 வருடங்களுக்குள் (மாதம் 48) கொத்தணி முறைமையின் கீழ் உள்ளூராட்சி மன்ற அதிகாரப் பிரதேசங்களில் உருவாகும் கழிவுப்பொருட்களை இறுதியாக வெளியேற்றுவதற்காக வசதிகளை வழங்குவதற்கும் 04 ஆரோக்கிய கழிவுப் பொருட்கள் தொட்டிகளை அனுராதபுரம், கீரிக்குளம், ஹிக்கடுவ, மொன்ரோவியாவத்த, பாணந்துறை, மாலமுள்ள மற்றும் உடுநுவர கொட்டிகாவத்த ஆகிய இடங்களில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. முறையான சாத்திய ஆய்வொன்றை மேற்கொண்டு ஆரோக்கிய தொட்டிகளை வைக்கும் இடங்களை தெரிவு செய்வதற்கு செயற்திட்ட ஆரம்பத்தின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பாணந்துறை, மாலமுள்ள மற்றும் உடுநுவர கொடிகாவத்த நிர்மாணங்களுக்குப் பதிலாக யாழ்ப்பாணம் கீரிமலை மற்றும் மெதிரிகிரிய, யுதகனாவ ஆகிய இடங்களில் இந்த கழிவுப்பொருள் தொட்டிகளை நிறுவுவதற்கு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2 ஆண்டுகள் அளவில் எடுக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் காலரீதியாகவும் ஆக்கபூர்வமாவும் அடைந்து கொள்ள முடியாதிருந்ததுடன் கழிவுப் பொருள் தொட்டிகள் நிர்மாணத்திற்குரிய செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் திட்டமிடப்பட்ட கட்டத்தில் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

பிளிசறு செயற்திட்டம்

முறையான வளங்கள் பாதுகாப்பு மற்றும் திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை உறுதிப்படுத்தல் அது தொடர்பாக உரிய ஆட்களின் அறிவு மற்றும் ஆற்றலை வளர்த்தல் மற்றும் திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டங்களை செயற்படுத்துதல்,

நிகழ்ச்சித்திட்டங்களை அவதானித்தல், வசதிகள் வழங்குதல் தேவையான ஆரம்ப நிதி ஏற்பாடுகளை வழங்குதல், திண்மக்கழிவுப் பொருள் மீள்சுழற்சி வங்கி முறைமையொன்றை ஸ்தாபித்தல் முறைப்படி திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம் செய்யாத உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் இந்த செயற்திட்டத்தை செயற்படுத்துவதின் பிரதான நோக்கங்களாக இருந்தன. 06 வருடங்களுக்கான நிதியத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம் ரூபா 5.6 பில்லியனாக இருந்தது. அதில் ரூபா 2.67 பில்லியன் பொதுத் திறைசேரியிடமிருந்தும் ரூபா 3.00 பில்லியன் 2008 வருடாந்த பாதீட்டின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட ‘‘பசுமை வரி’’ மூலமும் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

இச்செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் இருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 143 கொம்போஸ்ட் பிரிவுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 20 கொம்போஸ்ட் பிரிவுகள் மீளாய்வாண்டின் இறுதி அளவில் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டின் போது 07 சேதனப் பசளை பிரிவுகள், பிளாஸ்ரிக் மீள்சுழற்சி நிலையமொன்றும் 02 உயிர் வாயு பிரிவுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 18 பிரிவுகள் மேம்படுத்தல் இடம்பெற்றிருந்தன. இதற்கு மேலதிகமாக 19 அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 07 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

வெளிநாட்டு அலுவல்கள்

பரஸ்பர நலன்களை பெற்றுக்கொள்வதற்காக உலகில் நட்பு ரீதியான நாடொன்றாக இருப்பது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பெறுபேறாக இருந்தது. அப்பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக அமைச்சு தேசிய ரீதியில் 19 பிரிவுகள் மற்றும் சர்வதேச ரீதியில் 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் 37 வெளிநாட்டு தூதரங்கள், 13 உயர் ஸ்தானிகர் அலுவலகங்கள், 01 பிரதி உயர் ஸ்தானிகர் அலுவலகம், 12 கொன்சியூலர் ஜெனரால் அலுவலகங்கள், ஐக்கிய நாடுகளுக்கான 02 நிரந்தர தூதரகங்கள் மற்றும் 01 பிரதிநிதித்துவ அலுவலகம் என்ற வகையில் உலகளாவிய ரீதியில் வியாபித்துள்ள தூதரகங்களின் வலையமைப்பினால் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- வெளிநாட்டு அலுவல்கள் பற்றிய விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும்
- இலங்கை பற்றி சாதகமான பிரதிமையைக் கட்டியெழுப்புதவதற்காகச் செயற்படுத்தலும் சர்வதேச ரீதியாக சாட்டப்படும் எதிர்பிரசாரங்கள் குறித்து உரியவாறு பதிலளித்தலும்
- வெளிநாட்டுகளுடன் தூதராண்மை உறவுகளைப் பேணுதலும் ஒப்பந்தங்கள், சமவாயங்கள் குறித்த பேச்சுவார்த்தைகளும்
- தூதராண்மைக் காப்புரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பெற்றுக் கொடுத்தல்
- வெளிநாட்டு வர்த்தகத்தையும் சுற்றுலா நடவடிக்கைகளையும் ஊக்குவிப்பதில் உதவியளித்தல்
- புவியியல் ரீதியான அரசியல் போக்குகளை முகாமை செய்தவற்கு வேண்டிய உபாய முறைகள் பற்றி ஆய்வு செய்தலும் அரசுக்கு ஆலோசனை வழங்குதல்
- வெளிநாடுகளில் வாழுகின்ற இலங்கையர்களின் நலநோன்புகைக்காக வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களால் மேற்படி செயற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

கட்டிடங்கள் திருத்த வேலைகள் மேற்கொள்ளாமை.

இலங்கை அரசிற்குரிய சுவிடனில் அமைந்துள்ள ஸ்டொக்ஹொம் இல் அமைந்துள்ள தூதுவராலய அலுவலக உத்தியோகபூர்வ விடுதி 2011 ஒக்தோபர் மாதம் முதல் திருத்த வேலைக்காக பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அந்த திருத்த வேலைகளுக்காக தேவையை தூதுவராலயத்தினால் 09 சந்தர்ப்பங்களின் போது அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இங்கு எவ்வித திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2011 ஒக்தோபர் மாதத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 07 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக வாடகை வீடுகளில் குடியிருப்பதற்கு உயர்ஸ்தானிகருக்கு நேர்ந்திருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது வாடகையாக ரூபா 11.98 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு உத்தியோகபூர்வ விடுதிகள் கையளிக்கப்படாமை.

மலேசியாவின் கோலாம்பூரில் அமைந்துள்ள தூதுவரலாய விடுதியில் திருத்த வேலைகள் உடன்படிக்கையின் பிரகாரம் 2016 பெப்ரவரி 21 ஆந் திகதி குறித்துரைக்கப்பட்ட படி திருத்தம் செய்து உத்தியோகபூர்வ விடுதி கையளிக்கப்பட வேண்டியிருந்தது. 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அக்கட்டிடங்கள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் 2016 மார்ச் மாதம் முதல் 2018 யூன் 30 ஆந் திகதி வரை உயர் ஸ்தானிகர் குடியிருந்த வீட்டிற்காக மொத்தம் RM 532,000 வாடகை கட்டணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த கட்டிடம்

அவுஸ்திரேலியாவில் அமைந்துள்ள கன்பறா இலங்கை உயர் ஸ்தானிகராலயத்திற்குச் சொந்தமான அவுஸ்திரேலிய டொலர் 2,589,000 பெறுமதியான 02 கட்டிடங்கள் முறையே 2007 ஆம் ஆண்டிலிருந்தும் 2012 ஆம் ஆண்டிலிருந்தும் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

விளைவற்ற வகையில் காணப்படும் காணி

2007 ஆம் ஆண்டின் போது ஐ.அ.டொலர் 1.2 மில்லியன் (RM 3,661,000) கொடுப்பனவு செய்து உயர் ஸ்தானிகராலயத்தை நிர்மாணிப்பதற்காக 1.681 ஏக்கர் விசாலமான காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எவ்வித நிர்மாணமொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

விஷேட படிகள் கூடுதலாக கொடுப்பனவு செய்தல்.

2013 ஏப்ரல் 01 ஆந் திகதிய OM/E7/6/2013 ஆம் இலக்க வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கைக்கு புறம்பாக வெளிநாட்டு தூதுவர் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 163,780 கூட்டுத்தொகையான விஷேட படிகள் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

07 தொடர் மாடி வீடுகள் மீளக் கையளிக்காமை.

2000 ஒக்தோபர் 25 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அல்விட்டிகல மாவத்தையில் அமைந்துள்ள அரச வீடுகளில் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்ட உடனே பொருத்தமான உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்காக மீண்டும் பொது நிர்வாக அமைச்சிற்கு கையளிப்பது என்ற அடிப்படையில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால், உத்தியோகத்தர்களுக்கு 07 தொடர்மாடி வீடுகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. அல்விட்டிகல மாவத்தை வீடுகளில் நிர்மாணம் முடிவடைந்திருந்த போதிலும் பொது நிர்வாக அமைச்சிற்குரிய 07 தொடர்மாடி வீடுகளை மீள்பொறுப்பேற் தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கட்டுநிதி தீர்வு செய்யப்படாமை

2018 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு தூதுவர் அலுவலகங்களில் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 318.08 மில்லியனாக இருந்தது. அம் மீதிகளில் ரூபா 218.19 மில்லியன் 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யப்படாமல் முன்கொண்டுவரப்பட்ட மீதிகளாக இருந்தன.

வருமானத்திற்கு எடுக்கப்படாத வைப்புக்கள்

பொது வைப்புக் கணக்குகளில் 2018 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 174.2 மில்லியனாக இருந்தது. அமைச்சு மற்றும் தூதுவர் இல்லங்களில் அவ்வைப்புக்களில் தூதுவராலயங்கள் பொது வைப்புக் கணக்கில் 2 ஆண்டுகளை மிகை ரூபா 5.5 மில்லியனான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்

வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்வதற்காக கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் வெளிநாட்டு அனுப்புகைகளின் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு உள்ள பங்களிப்பினை அதிகரித்தல் இத்துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறாக உள்ளது. அந்த எதிர்பார்ப்பினை நிறைவேற்றுவதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் அமைச்சு மற்றும் அதன் கீழான 02 நியதிச்சட்ட / நிறுவனங்களாலும் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதல்.
- குடிபெயர் தொழிலாளர்களின் நலன்புரி மற்றும் வதிவற்ற இலங்கையருக்கான நலன்புரி.
- பதிவு செய்யப்பட்ட தொழில் முகவர் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தலும் நிர்வகித்தலும்
- வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்குரிய தொழில்சார் வழிகாட்டல்கள்

அமைச்சு மற்றும் அதன் கீழான நியதிச்சட்ட நிறுவனங்களால் மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

தொழிலுக்காக வெளிநாடுகளுக்கு செல்வது குறைவடைந்தமை

அமைச்சின் நடவடிக்கைகளில் முன்னுரிமை துறையொன்றான (Trust Area) வெளிநாட்டு தொழில் சந்தை மேம்படுத்தல் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கடந்த சில வருடங்களில் தொழிலுக்காக வெளிநாடு செல்லும் அளவு படிப்படியான குறைவடைந்து இருந்தன. 2014 ஆம் ஆண்டின் போது தொழிலுக்காக வெளிநாடு சென்ற எண்ணிக்கை 300, 700 ஆக இருந்தது. அது 2017 ஆம் ஆண்டளவில் 212,162 வரை 29.44 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அக்குறைவு பெண்களாகவும் ஆண்களாகவும் இடம்பெற்றிருந்தன. அது தொடர்பான விபரங்கள் அட்டவணையில் 19 இல் தரப்பட்டுள்ளது.



அட்டவணை 19 – தொழிலுக்காக வெளிநாடு சென்றவர்களின் எண்ணிக்கை மூலம் - இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை.

உழைப்பு வகையின் பிரகாரம் தொழிலுக்காக வெளிநாடுகளுக்கு செல்லல்

2011 ஆம் ஆண்டின் போது வீட்டுப்பணிப்பெண்கள் மற்றும் பயிற்சி பெறாத உழைப்பு வகையின் கீழ் தொழிலுக்காக வெளிநாடு சென்ற ஆளணி முறையே 107,500 பேர் மற்றும் 63,642 பேராக இருந்தனர் அது 2017 ஆம் ஆண்டளவில் முறையே 56,057 பேர் வரை 47.85 சதவீதத்தினதும் 61.057 பேர் வரையும் 4.06 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது.

வீட்டுப்பணிப்பெண்கள் மற்றும் பயிற்சி பெறாத உழைப்பு வகையின் கீழ் தொழிலுக்காக வெளிநாடு சென்ற அளவு வருடாந்தம் குறைவடைந்து காணப்பட்டாலும் தொழில்துறை மற்றும் அரை தொழில்துறை உழைப்பு வகையில் கீழ் தொழிலுக்காக வெளிநாடு செல்லும் எண்ணிக்கையில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது 2011 ஆம் ஆண்டின் போது உயர் துறைசார் தொழில்துறை மற்றும் அரை துறைசார் தொழில் உழைப்பு வகையில் தொழிலுக்காக வெளிநாடு சென்றவர்களின் எண்ணிக்கை முறையே 3,848 பேர் மற்றும் 6,136 பேராகவும் இருந்தனர். எனினும் 2017 ஆம் ஆண்டளவில் அறந் அளவு முறையே 6,371 பேர் வரை அதாவது 65.57 சதவீதத்தினாலும் 7,124 பேர் வரை 16.10 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தன.



அட்டவணை 20 - உழைப்பு வகையின் பிரகாரம் தொழிலுக்காக வெளிநாடு சென்றோர் எண்ணிக்கை

மூலம் - இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தொழிலுக்காக வெளிநாடு சென்ற அளவு குறைவடைந்திருந்த போதிலும் குடியகல்வோரின் அனுப்புகையின் ரூபா பெறுமதி அதிகரித்திருந்தது. 2012 ஆம் ஆண்டின் போது குடியகல்வோரின் அனுப்புகை ரூபா 763,980 மில்லியனாகஇருந்த போதிலும் அது 2017 ஆம் ஆண்டு வரை ரூபா 1,091,972 மில்லியனாக இருந்தது. விபரங்கள் அட்டவணை 20 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



அட்டவணை 21 ----- வெளிநாடு சென்றோரின் அனுப்புதல்கள் மூலம் - இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை.

பதிவு செய்யப்பட்ட முகவர் நிறுவனங்கள் மூலம் வெளிநாடு செல்லும் அளவு குறைவடைதல்

இலங்கை வெளிநாட்டு வாய்ப்பு சேவை பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட முகவர் நிறுவனங்கள் மூலம் வெளிநாடு சென்றவர்களின் அளவு படிப்படியாக குறைவடைந்து வேறு முறைமை மூலம் தொழிலுக்காக வெளிநாடு செல்லும் அளவு வருடாந்தம் அதிகரித்திருந்தது. 2011 ஆம் ஆண்டின் போது தொழிலுக்காக வெளிநாடு சென்றவர்களின் மொத்தம் 55.63 சதவீதம் பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட முகவர் நிறுவனங்களிலிருந்து வெளிநாடு சென்றிருந்த போதிலும் அது 2017 ஆம் ஆண்டளவில் 32.32 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. விபரங்கள் - அட்டவணை 22 இல் தரப்படுகின்றது.



அட்டவணை 22 - பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட முகவர் நிறுவனங்களினாலும் வேறு வகையிலும் வெளிநாடு செல்லல்
மூலம் - இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை.

இடம்பெயறும் தொழிலாளர்கள் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை இடம்பெயறும் தொழிலாளர் தொடர்பாக அமைச்சினால் கையொப்பமிடப்பட்ட 20 புரிந்துணர்வு உடன்படிக்கைகள் 2017 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்பட்டு வந்தன. இந்த உடன்படிக்கைகள் நாளதுவரையாக்கப்படல் மற்றும் பின்தொடர் நடவடிக்கை எடுத்தலோ இடம்பெற்றிருக்கவில்லை. அத்துடன் கைச்சாத்திட்ட நாடுகளுடன் ஒன்றிணைந்த குழுக் கூட்டங்கள் முறையாக நடாத்தப்படாதிருந்தமை 12 புரிந்துணர்வு உடன்படிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

முறையான மேற்பார்வையொன்று இடம்பெறாமை

பிரதேச மட்டத்தில் புலம்பெயர்ந்தோர் தகவல்களை சேகரித்தல், மேற்பார்வை மற்றும் பின் தொடர் நடவடிக்கை உட்பட புலம்பெயர் தொழிலாளர்களினதும் வெளிநாட்டு வேலைக்காக வெளியேறிச்சென்று மீண்டும் வருகை தரும் புலம்பெயர்ந்தோரின் பொருளாதார மற்றும் சமூக நிலைமையை மேம்படுத்துவதற்கு தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தும் நோக்கில் பிராந்திய மட்டத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது அதற்காக இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளாக அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவினத்தில் 77 சதவீதம் அல்லது ரூா 470.51 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் அந்த உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகளை முறைப்படி கண்காணித்து நிறுவனத்தின் நோக்கத்தை நோக்கி வழிநடாத்துவதற்கு முறையான வேலைத்திட்டமொன்றை அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

புலம்பெயர் தொழிலாளர்களுக்கான உத்தேச ஓய்வூதிய முறைமை செயற்படுத்தாமை

அரசின் துரித சலுகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களுக்காக ஓய்வூதிய முறைமையை செயற்படுத்துவதற்காக 2016 நவம்பர் 09 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் அது 2018 யூலை 31 ஆந் திகதி வரையில் செயற்படுத்துவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

பதவியணியினர் பயிற்சியளித்தல்

மீளாய்வாண்டிற்காக அமைச்சில் 1044 பேருடனான பதவியணியினர் இணைக்கப்பட்டிருந்தனர். அந்த பதவியணியினருக்கு பயிற்சியளிப்பதற்காக ரூபா 5 மில்லியன் நிதி ஏற்பாடு வருடாந்த மதிப்பீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் சகல உத்தியோகத்தர்களையும் மேவுகை செய்யக்கூடியவகையில் பயிற்சி திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. பதவியணியினரில் 52 சதவீதத்திற்காக மீளாய்வாண்டின் போது எவ்வித பயிற்சியொன்றும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மேற்கூறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 497,426 தொகை பயிற்சியளித்தலுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

விசேட மானியமளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் முறையாக கண்காணிக்கப்படாமை

சுவிட்சலாந்து அரசின் ஐ.அ.டொ 3.87 மில்லியன் நன்கொடையின் பேரில் இலங்கையின் புலம்பெயர் ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களில் பாதுகாப்பு மற்றும் சமூர்த்தி தொடர்பில் பங்களிக்கும் நோக்குடன் சறந்த தொழிலாளர் உரையாளர்களினதும் இலங்கையில் இருக்கும் அவர்களின் குடும்பங்களின் பாதுகாப்பு மற்றும்

நல்வாழ்வு என்ற பெயரில் நிகழ்ச்சித்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டு வந்ததுடன் அமைச்சினால் அந்நிகழ்ச்சித்திட்டங்களை கண்கணித்தல் மற்றும் வழிநடத்துதல் முறையாக இடம்பெற்றிருக்கவில்லை.

தொழில் வங்கி ஆரம்பித்தலின் நோக்கங்களை நிறைவேறாமை.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் தந்திரோபாய மார்க்கமொன்றாக தொழிலுக்காக வெளிநாடு செல்வதற்கு எதிர்பார்க்கும் நபர்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட தொழில் வங்கியொன்றை நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது 17,663 பேர் அங்கு பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் தொழில் முகவர் நிறுவனங்களால் 120,462 சந்தர்ப்பங்களின் போது அங்கு பதிவு செய்யப்பட்டவர்களின் தகவல்கள் பரீட்சிக்கப்பட்டிருந்தன. எனினும் பதிவு செய்யப்பட்டவர்களில் 1,358 பேருக்கு மாத்திரம் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு சந்தர்ப்பங்கள் உரித்தாகியிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆம் ஆண்டில் தொழில் வங்கியில் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை 8405 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எனினும் 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டிருந்த எண்ணிக்கையில் 9 சதவீதம் மாத்திரம் வெளிநாடு சென்றிருந்தனர். 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை அச்சதவீதம் 07 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

விஷேட புலனாய்வு பிரிவிற்கு கிடைக்கும் முறைப்பாடுகள்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையில் சட்டத்தை மதிக்கக் கூடியதாகவும் ஒழுக்கத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 37 பேருடன் கூடிய பதவியணியினர் இணைக்கப்பட்டிருந்தனர். 2017 ஆம் ஆண்டில் வெவ்வேறு விடயங்களுக்குரிய 4,341 முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. அதில் 2,815 முறைப்பாடுகள் அதாவது 65 சதவீதம் விஷேட புலனாய்விற்காக தொடர்புபடுத்தப்பட்டிருந்தன. புலனாய்வுப் பிரிவிற்கு கிடைக்கும் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டு 14 நாட்களுக்குள் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது. அவ்வாறு செய்ய முடியாது போன முறைபாடுகளுக்காக சட்டரீதியான நடவடிக்கைகளை வழங்குவதற்கு சட்டப்பிரிவிற்கு தொடர்புபடுத்தப்பட வேண்டியிருந்தது. எனினும் 2017 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் தீர்வு வழங்குவதற்கு இல்லது சட்டப்பிரிவிற்கு தொடர்புபடுத்துவதற்கு முடியாதிருந்த 345 முறைப்பாடுகள் புலனாய்வுப் பிரிவில் காணப்பட்டன.

விஷேட புலனாய்வு பிரிவிற்கு கிடைக்கும் முறைப்பாடுகள்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையில் சட்டத்தை மதிக்கக் கூடியதாகவும் ஒழுக்கத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 37 பேருடன் கூடிய பதவியணியினர் இணைக்கப்பட்டிருந்தனர். 2017 ஆம் ஆண்டில் வெவ்வேறு விடயங்களுக்குரிய 4,341 முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. அதில் 2,815 முறைப்பாடுகள் அதாவது 65 சதவீதம் விஷேட புலனாய்விற்காக தொடர்புபடுத்தப்பட்டிருந்தன. புலனாய்வுப் பிரிவிற்கு கிடைக்கும் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டு 14 நாட்களுக்குள் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது. அவ்வாறு செய்ய முடியாது போன முறைபாடுகளுக்காக சட்டரீதியான நடவடிக்கைகளை வழங்குவதற்கு சட்டப்பிரிவிற்கு தொடர்புபடுத்தப்பட வேண்டியிருந்தது. எனினும் 2017 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் தீர்வு வழங்குவதற்கு இல்லது சட்டப்பிரிவிற்கு தொடர்புபடுத்துவதற்கு முடியாதிருந்த 345

முறைப்பாடுகள் புலனாய்வுப் பிரிவில் காணப்பட்டன.

தொழில் முகவர் நிறுவனம் தொடர்பான செயலாற்றல்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டத்தின் 27(ஆ) பிரிவின் பிரகாரம் விண்ணப்பத்தாரர் நபரொருவராயின் அல்லது வியாபார நிறுவனமொன்றாக கம்பனியொன்று தொடர்பாக வரும் வரையில் வியாபாரத்திற்கு பொறுப்பாக உள்ள அல்லது வெளிநாட்டு சேவையில் ஈடுபட்டுள்ள வியாபாரமொன்றை நடாத்திச்செல்வதற்கு அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படக்கூடாது. 2017 ஆம் ஆண்டில் பணியகத்திற்கு கிடைத்திருந்த முறைப்பாடுளில் 41 சதவீதம் பதிவு செய்யப்பட்ட தொழில் முகவர் நிறுவனங்களினால் உடன்படிக்கை மீறியமை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் அல்லது சமர்ப்பிக்கப்பட்ட 805 முறைப்பாடுகளில் 180 கறுப்பு பட்டியலுக்கு உள்ளடக்கப்பட்டு விசாரணை செய்யப்படாமல் ஒரு மாதமான காலத்தை கடந்தும் 04 முறைப்பாடுகள் ஓராண்டு காலத்தில் மிகைத்திருந்தது. 2017 ஆம் ஆண்டில் கறுப்பு பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்ட தொழில் முகவர் நிறுவனங்களுக்கு இடையே 02 நிறுவனங்கள் 06 சந்தர்ப்பங்களின் போதும் ஒருதொழில் முகவர் நிறுவனம் 07 சந்தர்ப்பங்களின் போது அவ்வாது கறுப்பு பட்டியலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

பாதுகாப்பு வீடுகள் தொடர்பான நடவடிக்கைகள்

வெளிநாடு செல்லும் இலங்கை பெண்கள் தமக்கு தொழில் புரியும் இடங்களில் சந்திப்பதற்கு நேரும் வெவ்வேறு வகையான தொந்தரவுகள் காரணமாக அத்தொழில் இடங்களிலிருந்து வெளியேறி வெளிநாட்டு தூதரகங்களுக்கு ஆதரவு தேடி வருகை தரும் போது தற்காலிக மாற்று வழியொன்றாக தடுப்பு நிலையங்களுக்கு தொடர்பபுபடுத்துவது வழமையான செயற்பாடொன்றாகும்.

முன்னைய 03 ஆண்டுகளில் 11,542 பேர் தடுப்பு நிலையங்களுக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தனர். 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அதில் தடுத்து வைக்கப்பட்ட 250 பேரில் 20 பேருக்கு 06 மாதத்திற்கு மேற்பட்ட காலமாக அவ்வீடுகளில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு அவ்வீடுகளின் வாடகை உணவு மற்றும் மருந்து வசதிகள் வசதிகளிற்காக 2017 ஆம் ஆண்டின் போது மொத்தம் ரூபா 43.30 மில்லியன் அரசினால் செலவிடப்பட்டிருந்தது.

புலம்பெயர் உழைப்பு பங்களிப்பு நிதியை முறைமை செயற்படாமை

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் 1988 ஆம் ஆண்டிலிருந்து ஊழியர்களுக்காக குடியகல்வு உழைப்பு பங்களிப்பு நிதியமொன்று தாபிக்கப்பட்டிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அந்நிதியத்தில் 1602 புலம்பெயர் உழைப்பாளிகளுக்குரிய ரூபா 7.71 மில்லியன் மீதியொன்று காணப்பட்டது. இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்ட நோக்கங்கள் தெளிவுபடுத்தப்படும் வகையில் எவ்வித எழுத்துமூல தகவலொன்றும் பணியகத்தில் காணப்படவில்லை. அத்துடன் நிதியத்தின் முகாமைத்துவம் தொடர்பாக முறையாக வேலைத்திட்டமொன்று இல்லாமையால் நிதியம் செயற்பாடாது நிலைமையில் காணப்பட்டது.

இலங்கை வேலைவாய்ப்பு (ஏஜன்சி) தனியார் கம்பனிக்குச் சொந்தமான சந்தைப் பங்கு குறைவடைதல்

இலங்கை வேலைவாய்ப்பு சேவை (ஏஜன்சி) தனியார் கம்பனி தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நாட்டிற்கு கிடைத்த மொத்த தொழில் வாய்ப்புச் சந்தர்ப்பங்கள் 310,786 ஆக இருந்தது. அதில் இலங்கை

வேலைவாய்ப்பு (ஏஜன்சி) தனியார் கம்பனியால் 427 தொழில் சந்தர்ப்பங்கள் அதாவது 0.14 சதவீதம் மாத்திரம் வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2016 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்த தேறிய கட்டளைகளின் எண்ணிக்கை 09 ஆலும் 2211 தொழில் வாய்ப்புக்களும் குறைவடைந்திருந்தன. மீளாய்வாண்டின் போது ஜோர்தான், சிங்கப்பூர் மற்றும் பஹ்ரேன் ஆகிய நாடுகளிலிருந்து கிடைத்த தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கை முறையே 140, 100 மற்றும் 60 இற்காக பொருத்தமாக தொழிலாளர்களை அனுப்புவதற்கு கம்பனிக்கு முடியாதிருந்தது. அவ்வாறே மாலைதீவுகளிலிருந்து கிடைத்த 58 கைத்தொழில் மற்றும் துறைசார் தொழில் 55 இற்காக உழைப்பாளிகள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டின் போது கட்டார், குவைத் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளிலிருந்து தொழில் கட்டளைகள் கிடைத்திருந்த போதும் அதற்காக ஊழியர்களை தொர்ப்புபடுத்தியிருக்காததுடன் மீளாய்வாண்டின் போது அந்நாடுகளிலிருந்து எவ்வித தொழில் கட்டளையும் கிடைத்திருக்கவில்லை.

மீளாய்வாண்டின்போது வெளிநாடு சென்ற 806 புலம்பெயர்ந்தவர்களில் நேரடி மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பேரில் வெளிநாடு சென்ற அளவு தவிர கம்பனியால் பெற்றுக்கொள்ளப்பட்ட தொழிலுக்காக வெளிநாடு சென்ற அளவு 44 ஆகும். அக்கம்பனியின் மொத்த வெளிநாடு சென்றோர் 5 சதவீதமாக இருந்தது. கம்பனியால் தொழிலுக்காக தொழிலாளர்களை தொடர்புபடுத்திய நாடுகள் கடந்த ஆண்டுகளிலிருந்து படிப்படியாக குறைவடைந்திருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் போது 13 நாடுகளாக அந்த எண்ணிக்கை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் 05 வரை குறைவடைந்திருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது 32 வகையான வெளிநாட்டு வேலை வகைகளுக்காக தொழிலாளர் வெளிநாடு சென்றிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டின் போது அது 10 வகை வரை குறைவடைந்து மீளாய்வாண்டு வரையில் 07 சதவீதமாக குறைவடைந்திருந்தது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அது 78 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

வெளிநாட்டு தொழில் மேம்படுத்தல் முறையாக இடம்பெறாமை.

வெளிநாட்டு தொழில் மேம்படுத்தலுக்கான வெளிநாட்டு தொடர்புகளை கட்டியெழுப்புவதே இலங்கை வேலைவாய்ப்பு (ஏஜன்சி) தனியார் கம்பனியின் பிரதான நோக்கமாக இருந்தது. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் முறையே ரூபா 6.35 மில்லியன் மற்றும் 2.53 மில்லியன் செலவிடப்பட்டு 10 சந்தர்ப்பங்களின் போது கம்பனி உத்தியோகத்தர்கள் வெளிநாடு சுற்றுலாக்களில் ஈடுபட்டிருந்தனர். எனினும் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு சந்தர்ப்பங்களில் அதிகரிப்பொன்று இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறே அவ்வாறு பெற்றுக்கொண்டதாக குறிப்பிடப்பட்டிருந்த 3,616 தொழில் சந்தர்ப்பங்களில் 1,213 தொழிலாளர்கள் மாத்திரம் தொழிலுக்காக தொடர்புபடுத்த முடியுமாக இருந்தது.

சஹன காப்புறுதி நிதியம்

தொழிலுக்காக வெளிநாடு செல்லும் உழைப்பாளிகள் தமது சேவைக்காலத்திற்குள் முழுமையான செயற்பாடற்ற தன்மை, அரை செயற்பாடற்ற தன்மை அல்லது மரணித்தால், இழப்பிட்டு தொகையொன்று வழங்குதல் மற்றும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு செல்லும் செலவினை மீளளிக்கும் நோக்கில் சஹன காப்புறுதி நிதியம் என்ற பெயரில் காப்புறுதி யோசனை திட்டமொன்று இலங்கை வேலைவாய்ப்பு (ஏஜன்சி) தனியார் கம்பனியால் செயற்படுத்தப்பட்டிருந்தது. மேவுகை காலப்பகுதியில் காப்புறுதியாளருக்கு இடம்பெறும் பாதிப்புக்களுக்கு முழுமையான பொறுப்பை

கையளிக்காமல் இக்காப்புறுதி முன்மொழிவு திட்டம் 2015 மார்ச் மாதத்திலிருந்து இலங்கை வேலைவாய்ப்பு வாய்ப்பு பணியகத்தின் கீழ் எடுக்கப்பட்டிருந்தது அதன் பிரகாரம் கம்பனியின் பிரதான வியாபார நடவடிக்கையொன்று இல்லாமல் போனதுடன் கம்பனியிடம் இருந்த நிலையான வைப்புக்கள் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டு உரிய இழப்பீட்டு தொகையை செலுத்த நேர்ந்தது.

கடற்றொழில் மற்றும் நீரியயல் வளங்கள் அபிவிருத்தி

உயர்ந்த ஊட்டச்சத்து மட்டத்துடான மக்கள், அதிக வெளிநாட்டு நாணயமாற்று, உயர்ந்த சமூக பொருளாதார நிலைமை என்பவற்றுடனான கடற்றொழில் சமூகத்தை உருவாக்குதல் இத்துறையின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விளைவகளாக இருந்தது. அப்பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு, ஒரு திணைக்களம், 05 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களால் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

- கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள திணைக்களம் என்பன நியதிச்சட்ட நிறுவனங்களினதும் கூட்டுத்தாபனத்தினதும் விடயங்களுக்குரிய கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல், பின்தொடர் நடவடிக்கை எடுத்தல், மதிப்பீடு செய்தல் என்பன.
- சமுத்திர உவர் நீர் மற்றும் நன்னீர் மீன் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தலும் முகாமைத்துவம் செய்தலும்.
- அரசாங்கத்திற்குச் சொந்தமான கடற்றொழில் படகுகளை முகாமைத்துவம் செய்தலும் செயற்படுத்தலும்.
- அடையாளங்காணப்பட்ட பொருளாதார வலயங்களுக்குள் கடற்றொழில் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தலும் முகாமைத்துவம் செய்தலும்.
- கடற்றொழில் கைத்தொழிலுக்கு தேவையானன ஐஸ் இயந்திரம், குளிர் அறை, மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதலும் நடைமுறைப்படுத்தலும்.
- உயிர் மற்றும் உயிரற்ற தேசிய நீர் வளங்களை அபிவிருத்தி செய்தல்.
- மீன்பிடிப் படகுகள் மற்றும் மீன்பிடி வள்ளங்களை உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல் பகிர்ந்தளித்தல் என்பன
- கடல் மீன் பயிர்செய்கையை உள்ளடக்கி நீர் வாழ் பயிர் செய்கையை அபிவிருத்தி செய்தலும் முகாமைத்துவம் செய்தலும்,
- மீன் மற்றும் மீன் சார்ந்த உற்பத்திகளை விற்பனை செய்தலும் பகிர்ந்தளித்தலும்,
- கடற்றொழில் பிரிவின் ஆராய்ச்சி நடவடிக்கைகளை விரிவுபடுத்தல் மற்றும் அதன் விளைவுகளை கடற்றொழில் கைத்தொழிலின் உயர்ச்சிக்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.
- நவீன விஞ்ஞான முறைமைகளினூடாக சமுத்திர வளங்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு வசதிகளை வழங்குதல்.

அமைச்சு திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களினால் மேலே குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கி கீழே தரப்படுகின்றன.

மீன் இனவிருத்தி நிலையத்தை தோற்றுவித்தல்

மீளாய்வாண்டின் போது புத்தளம் மாவட்டத்தில் குசல பங்கதெனியாவில் மீன் இனவிருத்தி நிலையத்தை தோற்றுவிப்பதற்காக ரூபா 25 மில்லியனும்

பார மீன்களுக்காக மீன் இனவிருத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 25 மில்லியன் நிதி ஏற்பாடும் இலங்கை தேசிய நீர் வாழ் பயிர் அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை அதற்காக முறையே ரூபா 6.17 மில்லியனும் ரூபா 9.6 மில்லியனும் செலவு செய்யப்பட்டிருந்தும் திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

நீர் வாழ் கைத்தொழில் பூங்காவை தோற்றுவித்தல்

மீளாய்வாண்டின் போது மன்னார், அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு ஆகிய வலயங்களில் நீர்வாழ் கைத்தொழில் பூங்காவைத் தோற்றுவிப்பதற்காக இலங்கை தேசிய நீர் வாழ் பயிர் அபிவிருத்தி அதிகார சபையால் ரூபா 500 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றில் ரூபா 68.16 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அவ்வலயங்களில் அமைந்துள்ள உத்தேச காணிகளைத் தீர்த்துவைப்பதற்கு முடியாததன் காரணமாக அச் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்த முடியாதிருந்தது.

கடற்கரைப் பகுதியில் நண்டு வளர்க்கும் நகரத்தை ஸ்தாபித்தல்

மீளாய்வாண்டின் போது கடற்கரை பகுதியில் நண்டு வளர்க்கும் நகரத்தை ஸ்தாபிப்பதற்காக கல்முல்ல, ரெகவ, மக்கேணி ஆகிய நகரங்களில் கடற்றொழில் வலயத்தை தோற்றுவிப்பதற்காக இலங்கை தேசிய நீர் வாழ் அபிவிருத்தி அதிகார சபையால் ரூபா 100 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. ரெகவ செயற்திட்டத்திற்காக ரூபா 23.31 மில்லியன் செலவு செய்து நிர்மாண நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தும் ஏனைய 02 செயற்திட்டங்களுக்காக ரூபா 8.59 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் சுற்றாடல் உத்தரவுப் பத்திரங்கள் பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதத்தின் காரணமாக நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

திவிநெகும கடன் திட்டம்

2011, 2012, 2013, 2014 ஆகிய ஆண்டுகளின் போது இலங்கை தேசிய நீர்வாழ் பயிர் அபிவிருத்தி அதிகார சபையால் அமுல்பபடுத்தப்பட்ட திவிநெகும கடன் திட்டத்தின் மூலம் 6450 நலன்பெறுநர்களுக்கு ரூபா 229.04 மில்லியன் கூட்டுமொத்த கடன் வழங்கப்பட்டிருந்தது. அத்திட்டத்திற்குரிய நலன்பெறுநர்களை முறைப்படியாக பயிற்றுவிக்காமை நலன்பெறுநர்களால் பொருத்தமான மீன் இனங்கள் தெரிவு செய்யப்படாமை செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தும் போது உருவாகும் சிக்கல்களுக்கு ஆலோசனைகளும் தொழில்நுட்ப அறிவுகளும் வழங்கப்படாமையின் காரணமாக திட்டதிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை வெற்றிகரமாகப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது திவிநெகும கடன் திட்டத்தின் கீழ் அனுராதபுரம் மாவட்டத்தில் 04 செயற்திட்ட வகைகளுக்காக 140 நலன்பெறுநர்களுக்கு ரூபா 7.56 மில்லியன் மொத்த தொகையான கடன்கள் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றில் ரூபா 3.06 மில்லியன் மீளச் செலுத்தப்பட்டிருந்தும் பணத்தை அளவீடு செய்வதற்கு அதிகார சபைக்கு முடியாதிருந்தது.

அழகியல் நிலைய அபிவிருத்தி செயற்திட்டம்

அழகியல் நிலைய அபிவிருத்தி செயற்திட்ட பிரேரணைக்காக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 50 மில்லியன் நிதி ஏற்பாடு

வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அவற்றில் ரூபா 19.16 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டம் சம்பந்தமாக முறையான சாத்திய வள ஆய்வினை மேற்கொள்ளாததன் காரணமாக செயற்திட்டதை நடைமுறைப்படுத்தும் போது சிக்கல்கள் உருவாக்கியிருந்தது. அச்சிக்கல்களை இனங்காண்பதற்கு முடியாதன் காரணமாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில அழகியல் நிலைய செயற்திட்டத்தின் ஒட்டு மொத்த பௌதீக செயலாற்றல் 10 சதவீதத்தினை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

நீர் வாழ் பயிர் கைத்தொழில் நகரத்தை நிர்மாணித்தல்

சுற்றாடலுக்குச் சாதகமான கரையோர மற்றும் சமுத்திர நீர்வாழ் பயிர்களின் உற்பத்திகளை அதிகரித்தல் மற்றும் சிறப்பான தர மட்டங்களை உயர்த்தும் குறிக்கோள்களுடன் மன்னார் மாவட்டத்தில் நீர் வாழ் பயிர் கைத்தொழில் நகரத்தை நிர்மாணித்தல் 2016 ஆகஸ்ட் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 290 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 மார்ச் மாதமளவில் காணிகளை அளத்தல் நடவடிக்கை, நீர் வசதிகள், எரிபொருள் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள் என்பவற்றிக்காக ரூபா 8 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளாமை, சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை தயாரித்தலிலுள்ள குறைபாடுகள் என்பவற்றின் காரணமாக செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

மீன்பிடி துறைமுகங்களில் இடம் பெற்ற செயற்பாட்டு நட்டங்கள்

இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற 21 மீன்பிடித் துறைமுகங்களில் 15 துறைமுகங்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 150.96 மில்லியன் மொத்த தொகையான செயற்பாட்டு நட்டத்தை அடைந்திருந்தது. இத்துறைமுகங்களில் 13 துறைமுகங்கள் முன்னைய ஆண்டின் போதும் நட்டமடைந்திருந்தன. நட்டமடையும் துறைமுகங்கள் நட்டமடைவதற்கான காரணத்தை ஆய்வு செய்து இலாபம் அடையும் நிலைக்கு மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கரையோர வளங்கள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கடன் உதவியின் அடிப்படையில் ரூபா 224 மில்லியன் செலவில் சிலாபத்தில் நிர்மாணிக்கப்பட்டு இலங்கை மீன்பிடி துறைமுகக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த சிலாபம் மீன்பிடி துறைமுகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைககள் 2009 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2017 மே மாதமளவில் மீன்பிடி துறைமுகத்தால் நிறைவேற்றப்பட வேண்டிய தொடக்க குறிக்கோளாகிய மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குதல் இடம் பெற்றிருக்கவில்லை. 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை துறைமுகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 65.37 மில்லியன் கூட்டு மொத்தமான செயற்பாட்டு நட்டம் இடம் பெற்றிருந்ததனால் கடன் உதவியின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட இத்துறைமுகத்திற்காக செலுத்த வேண்டியுள்ள வெளிநாட்டுக் கடனும் அதற்குரிய வட்டியும் செலுத்துதல் அரசாங்கத்திற்கான செலவு பொறுப்பாக இருந்தது.

குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட எக்ஸவேட்டர் இயந்திரம்

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தால் துறைமுகங்களிலிருந்து மணலை அகற்றுவதற்காக விலைமனுக் கோரும் அறிவித்தலில் மணல் அகழ்வதற்கான

இயந்திரம் ஒப்பந்தக்காரருக்ககுச் சொந்தமானதாக இருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த நிபந்தனையானது விலைமனுவை மதிப்பீடு செய்த தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மணலை அகற்றுவதற்காக வரையறுத்த சீனோர் நிறுவனத்திடமிருந்து 2016 செப்தெம்பர் 24 ஆந் திகதியிலிருந்து வேலை செய்யும் ஒரு மணித்தியாலயத்திற்கு ரூபா 11,000 படி குத்தகை அடிப்படையில் எக்ஸவேட்டர் இயந்திரம் கூட்டுத்தாபனத்தால் பெற்றுக்கொள்ளப்பட்டு ஒப்பந்தகாரருக்கு ஒரு மணித்தியாலயத்திற்கு ரூபா 3500 படி கூட்டுத்தாபனத்திற்கு பாதிப்பாக உப குத்தகை வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 7500 நிதி நட்டத்தின் அடிப்படையில் 534.6 இயந்திர மணித்தியாலத்திற்கு ரூபா 4.01 மில்லியன் நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது. இந் நட்டம் சம்பந்தமாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

மணல் தோண்டுபவரின் தேவையின் அடிப்படையில் மாத்திரம் மணல் தோண்டுதல்

அம்பலாங்கொட மீன்பிடி துறைமுகத்தில் மணல் தோண்டுபவரின் தேவையின் பிரகாரம் மணல் தோண்டுதல் இடம் பெற்றிருந்தது. அந்த மணல் தோண்டுதலின் காரணமாக அம்பலாங்கொட மீன்பிடி துறைமுகத்தில் மீனவ மக்களின் தேவைகளுக்கு இணங்கிய வகையில் தோண்டுதல் நடவடிக்கை இடம் பெற்றிருக்கவில்லை. மணல் தோண்டுபவரினால் சிறிய பகுதியில் மாத்திரம் தோண்டுதல் நடவடிக்கை இடம் பெற்று இருந்ததாக 2017 ஒக்தோபர் 17 ஆந் திகதி இடம் பெற்ற பௌதீக பரிசோதனையின் போது உறுதிப்படுத்ததப்பட்டது. துறைமுகம் ஆரம்பித்து 04 ஆண்டுகள் கடந்திருந்தும் அக்காலத்தில் தொடர்ச்சியாக மணல் நிரம்புதல் இடம்பெற்ற இததுறைமுகத்தில் மணலை அகற்றுவதற்கு உரிய முறைமை மற்றும் நீண்ட கால முறையான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மீனவர்களுக்கு எரிபொருள், நீர் மற்றும் ஏனைய வசதிகளை பெற்றுக்கொள்ளுதல் தமது அறுவடைகளை நிலத்திற்கு எடுத்து வருவதற்காக துறைமுக மேடையை அடைந்து கொள்வதற்கு முடியாத நிலைமை உருவாகியிருந்தது.

இன்ஜினை களஞ்சியத்தில் வைததிருப்பதற்காக கட்டணம் அறவிடப்படாமை.

தொடம்துவ மீன்பிடி துறைமுகத்தில் மீன்பிடி இயந்திரங்களின் இன்ஜினை களஞ்சியத்தில் வைத்திருப்பதற்காக ஒரு கட்டிடத்தை 2012 ஆம் ஆண்டில் ரூபா 2.85 மில்லியன் செலவு செய்து இலங்கை மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனத்தால் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அக்கட்டிடத்தில் ஒதுக்கி வைக்கப்பட்ட அறை இல்லாததன் காரணமாக கட்டணம் அறவிட முடியாதிருந்தது. அக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2.23 மில்லியன் செலவு செய்து அக்கட்டிடம் 16 அறைகளாக பிரிக்கப்பட்டு 2017 ஒக்தோபர் 19 ஆந் திகதியளவில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2018 மார்ச் 20 ஆந் திகதி வரை கட்டிடத்தின் அறைகளுக்காக எதுவித கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

எரிபொருள் விநியோகிக்கும் பம்பி செயற்படாதுள்ளமை

தங்காலை மீன்பிடி துறைமுகத்தில் எரிபொருள் விநியோகிப்பதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனததிற்குச் சொந்தமான 02 எரிபொருள் விநியோகிக்கும் பம்பிகள் செயற்பாடற்றுக் காணப்பட்டன. அவற்றில் ஒரு பம்பி 2016 சனவரி 29 ஆந் திகதி ரூபா 150,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தும் அது 2018 மார்ச் 05 ஆந் திகதி வரை 02 ஆண்டுகள் காலத்திற்கு செயற்பாடற்றுக் காணப்பட்டன.

காலி மீன்பிடித் துறைமுக வளவில் படகுகள் தரையேற்றி வைக்கப்பட்டுக் காணப்பட்டமை.

காலி மீன்பிடித் துறைமுக வளவில் பல்வேறு இடங்களில் படகுகள் தரையேற்றி வைக்கப்பட்டிருந்ததுடன் சில படகுகள் எதுவித திருத்தங்களும் செய்யப்படாது அழிவற்றுக் காணப்பட்டன. இவ்வாறு நீண்ட காலமாக துறைமுக வளவில் இடத்துக்கு, இடம் படகுகள் தரையேற்றி வைக்கப்பட்டிருந்தனால் துறைமுக வளவில் இடம் நெருக்கடியாகி மீனவர்களுக்கு ஏற்பட்ட அச்சௌகரியங்களை கவனத்தில் கொண்டு இலங்கை மீன்பிடித்துறைமுக கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தால் முறையாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

உணவுச்சாலை வருமானம்

2018 ஏப்ரல் 06 ஆந் திகதியளவில் காலி மீன்பிடித் துறைமுகத்தின் உணவுச்சாலையை மூடி ஒரு ஆண்டும் 03 மாத காலமும் கடந்திருந்தது. எனினும், பொருத்தமான ஒரு கொள்வனவாளரைத் தெரிவு செய்து அவருக்கு உணவுச்சாலையை வழங்குவதற்கு இலங்கை மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்களால் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக துறைமுகத்தினால் ரூபா 3.15 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

குடாவெல்ல மீன்பிடித்துறைமுகத்திற்குச் சொந்தமான உணவுச் சாலை 2016 யூன் 01 ஆந் திகதியிலிருந்து 2018 மே 31 ஆந் திகதி வரை ஒரு ஆண்டு காலத்திற்கு ரூபா 60,000 மற்றும் பெறுமதி சேர் வரியுடன் மாதாந்த குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2017 ஒக்தோபர் 30 ஆந் திகதி இந்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க காணப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரை அறவிட வேண்டிய குத்தகைப் பணம், நீர் மற்றும் மின்சாரத்திற்கான கட்டணம் என்பனவாக ரூபா 1.24 மில்லியன் 20118 ஏப்ரல் 23 ஆந் திகதி வரை இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனத்தால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

ஐஸ் உற்பத்தி நிலையம் விளைவற்றுக் காணப்படல்

குடாவெல்ல மிண்பிடித்துறைமுகத்தின் ஐஸ் உற்பத்தி நிலையம் 2017 மார்ச் 15 ஆந் திகதி குத்தகை வழங்கப்பட்டிருந்தது. எனினும், குத்தகைக்குப் பெற்றவரால் அது 2017 ஒக்தோபர் 17 ஆந் திகதி (07 மாதங்களுக்குள்) மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், அக்காலத்துள் அறவிட வேண்டிய ரூபா 548,564 தொகையான குத்தகைப் பணம் 2018 ஏப்ரல் 23 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. 2018 ஏப்ரல் 23 ஆந் திகதி வரை இந்த ஐஸ் உற்பத்தி நிலையம் விளைவற்றுக் காணப்பட்டிருந்ததுடன் மீண்டும் குத்தகைக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை இலங்கை மீன்பிடித்துறைமுக கூட்டுத்தாபனத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மீன்களை ஒன்று சேர்க்கும் சமிஞ்ஞைகளை நிர்மாணித்தல்

மீன்களை ஒன்று சேர்க்கும் சமிஞ்ஞைகளையும் ரேடியோ கதிர் வீச்சுக்களையும் பயன்படுத்தி ஆழமான கடலில் அறுக்குலா, மீன்களைப் பிடிப்பதற்காக சுற்றாடல் மற்றும் வளங்களுக்குச் சாதகமான புதிய கருவியை தயாரிக்கும் செயற்திட்டத்திற்காக முன்னைய ஆண்டின் போது ரூபா 1.41 மில்லியன் தேசிய நீர்வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையால் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீன்களை ஒன்று சேர்க்கும் 03 சமிஞ்ஞைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ஒரு சமிஞ்ஞை மாத்திரம் 2016 செப்தெம்பர் 29 ஆந் திகதி கல்முனைப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மிகுதியான 02 சமிஞ்ஞைகள் 2018 யூலை மாதம் வரை விளைவற்றுக் காணப்பட்டது.

கவர்ச்சியான மீன் வளர்ப்பும் நோய் கட்டுப்பாடும்

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பொதுமக்களின் பங்குபற்றுதலுடன் கவர்ச்சியான மீன் வளர்ப்பு மற்றும் நோய் கட்டுப்பாட்டிற்காக தேசிய நீர் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையால் ரூபா 1.22 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. சேற்று கேணிகளில் மீன் குஞ்சுகளை வைப்பது தாமதித்ததன் காரணமாக மீன்கள் இறந்தனால் செயற்திட்டம் வெற்றியளித்திருக்கவில்லை.

வலைக்கூடுகள் சார்ந்த மீன் குஞ்சுகள் வளர்ப்பு

களப்புகளில் பரவுகின்ற வலைக் கூடுகள் சார்ந்த மொத்த மீன் குஞ்சுகளை வளர்ப்பதற்காக மீன் உணவுகளை அதிகரிப்பதற்கான ஆராய்ச்சி செயற்திட்டம் 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்காக தேசிய நீர் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையால் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 2.23 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்குரிய நீர்கொழும்பு களப்பு பிரதேசத்தில் 12 வலைக் கூடுகள் 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தும் அதற்குரிய மீன் குஞ்சுகளை வழங்குதல் 2017 யூன் மாதம் வரை தாமதிக்கப்பட்டிருந்தது. மேலும் ஆராய்ச்சி செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு தேவையான மொத்த வலைக் கூடுகள் 21 யை நிர்மாணிப்பதற்கு 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையும் முடியாதிருந்தது.

நேரடி வழி முறைமையில் (online System) பாவனையாளர்களுக்கு சேவைகள் வழங்குதல்

தேசிய நீர் வழங்கல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையால் மீனவர் தகவல் நிலையத்திற்காக மிளாய்வாண்டின் போது ரூபா 1.50 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. நேரடி வழிமுறைமையில் (online System) பாவனையாளர்களுக்கு சேவை வசதிகளை வழங்குவதற்கான கணனி மென்பொருளை அபிவிருத்தி செய்வதற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 710,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை மென்பொருள் மேம்படுத்தப்பட்டு பாவனையாளருக்கு சேவை வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

பாவணையாளரின் மீன் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு முடியாமை

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டின் போது ரூபா 2592 மில்லியன் செலவு செய்து 7200 மெட்ரிக் தொன் மீன்கள் கொள்வனவு செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ரூபா 1.381 மில்லியன் மாத்திரம் செலவு செய்து 3329 மெட்ரிக் தொன் மீன்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டன. 7200 மெட்ரிக் தொன் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு ரூபா 3375 மில்லியன் வருமானம் பெற்றுக்கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்தும் 3857 மெட்ரிக் தொன் மாத்திரம் விற்பணை செய்யப்பட்டு ரூபா 1,915 மிலியன் வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

அதற்கிணங்க விற்பனை இலக்கினை 46 சதவீதத்தால் அடைந்து கொள்வதற்கு முடியாமையும் நிறுவனத்தின் பிரதான குறிக்கோளாகிய நிவாரண விலைக்கு மீன் தேவைப்பாட்டை வழங்குவதன் மூலம் பாவணையாளர்களின் மீன் தேவைப்பாட்டை நிறைவேற்றும் செயற்பாட்டை பூர்த்தி செய்யவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது.

சுகாதாரமும் போசாக்கும்

நாட்டின் துரித பொருளதார அபிவிருத்திக்காக பங்களிக்கும் ஆரோக்கியமான மக்களை உருவாக்குவதனை நோக்கி கொள்கைகள், தந்திரோபாயங்கள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை வழங்குவதன் மூலம் தரமான சுகாதார சேவையொன்றை உறுதிப்படுத்துதல் அமைச்சிலிருந்து எதிர்பார்க்கும் பெறுபேறாக இருந்தது. இப்பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் மற்றும் 12 நியதிச்சட்ட நிறுவனங்கள்/ என்பவற்றைக் கொண்டிருந்தன. அந்நிறுவனங்களினால் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- சுகாதார துறைக்கான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தலும் அமுல்படுத்தலும் சுகாதார சேவைகள் வழங்கலுக்கான தராதரங்கள் மற்றும் வழிகாட்டலைத் தயாரித்தல்
- மனிதவள அபிவிருத்தி
- முகாமைத்துவ திட்டமிடல் முறைமை விரிவாக்கம்
- வள ஒதுக்கீடு, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு
- பிரதான வைத்தியசாலைகளின் நிர்வாகம்
- தனியார் சுகாதார நிறுவனங்களை ஒழுங்குபடுத்தலும் மேற்பார்வை செய்தலும்
- தேசிய சுகாதார காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்பான விடயங்கள்
- பொது மக்கள் சுகாதாரம் மற்றும் போஷாக்கினை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தலும் செயற்படுத்தலும்
- சுகாதாரத் துறையில் ஆராய்ச்சி வாய்ப்புக்களை விரிவாக்குதல்

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களால் மேற்படி செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் கீழே காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

மூலதன நிதி ஏற்பாடுகளை குறைவாகப் பயன்படுத்துதல்.

வருடாந்த வருட செலவு மதிப்பீட்டின் மற்றும் குறைநிரப்பு மதிப்பீடு ஒதுக்கீட்டின் மூலம் சுகாதார போசாக்கு மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சிற்கு மீளாய்வாண்டிற்காக ரூபா 45,594 மில்லியன் மூலதன நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 27,499.73 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 18,094 மில்லியன் அதாவது 40 சதவீத மூலதன நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தன. அச்சேமிப்பானது 34 செலவின விடயங்களுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 5,732 மில்லியன் நிதி ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு ஒதுக்கீட்டின் மூலம் 06 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,409 மில்லியனான மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

வழங்கல் பிரிவின் நிர்வாகத்திலிருந்து விலகி நிர்மாண செயற்திட்டங்களை செயற்படுத்தல்

சுகாதாரம் போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சில் தாபிக்கப்பட்ட வழங்கல் பிரிவிற்கு (Logistic Division)

பிரதான தலைமை பொறியியலாளர் ஒருவர் உட்பட 09 பொறியியலாளர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின் இறுதி வரையில் அமைச்சின் கீழ் 55நிர்மாணங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. இச்செயற்திட்டங்களில் 28 செயற்திட்டங்களின் மேற்பார்வை மற்றும் நிர்வாகம் வழங்கல் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எஞ்சிய 27 செயற்திட்டங்களின் கண்காணிப்பிற்கும் நிர்வாகத்திற்கும் பொறியியலாளர் ஒருவர் இணைக்கப்படாதிருந்த பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

செயற்திட்டங்களுக்குரிய ஒப்பந்த பெறுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை

வழங்கல் பிரிவினால் செயற்படுத்தப்பட்ட 13 செயற்திட்டங்களினதும் ஏனைய பிரிவுகளினதும் செயற்படுத்தப்பட்ட 14 செயற்திட்டங்களுக்குரிய ஒப்பந்த பெறுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. முறைப்படி ஒப்பந்த பதிவேடு நாளதுவரையாக பேணப்படாமை காரணமாக அத்தகவல்கள் கணக்காய்விற்கு வழங்குவதற்கு தவறியிருந்தது.

கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையின் வெளிவாரி நோயாளர் பிரிவு மற்றும் சிகிச்சை கட்டிட நிர்மாணம்

மேற்குறித்த நிர்மாணம் இரண்டு கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரை இதற்காக ரூபா 414.5 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிர்மாண ஒப்பந்தம் இரண்டு கட்டங்களின் கீழ் இரண்டு கம்பனிகளால் செய்யப்பட்டிருந்தது. அக்கம்பனிகளின் ஒப்பந்த பெறுமதி ரூபா 264.8 மில்லியனாக இருந்தது. இரண்டாம் கட்டத்தின் கீழ் ஒப்பந்தம் 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. அத்திகதி முதல் 05 சந்தணர்ப்பங்களின் போது ஒப்பந்த காலம் 399 நாட்களால் நீடிக்கப்பட்டிருந்தது. இறுதியாக 2016 நவம்பர் 10 ஆந் திகதி ஒப்பந்தக் காலம் முடிவடைந்திருந்தது. இந்த ஒப்பந்தம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி கணக்காய்வு சந்தர்ப்பம் வரையில் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அத்திகதியில் 09 மாதங்கள் 21 நாட்கள் தாமத காலம் அறிக்கையிடப்பட்டிருந்தது. 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதியின் பின்னர் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டமையால் ஒப்பந்தகாரருக்கு விலை அதிகரிப்பின் பேரில் ரூபா 2.91 மில்லியன் மேலதிக செலவினமொன்று அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது.

- செயற்திட்டத்தின் மதியுரை நடவடிக்கைகளை மேற்கொண்ட அரச நிறுவனமொன்றுக்கு 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மொத்தமாக ரூபா 2.55 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், மதியுரை நிறுவனமாக அந்நிறுவனத்தை தெரிவு செய்தமைக்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் அதற்காக அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

- நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த கட்டிடத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மின் வழங்கல் முறைமை, மின்சார உபகரணங்கள், காற்றுச்சீராக்கி முறைமை மற்றும் மின்தூக்கி என்பன முறையாக செயற்படுவதாக 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட

பௌதீக பரிசோதனையின் போது உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. எனினும், ஒப்பந்தத்திற்கான செயலாற்றல் பிணை பாதுகாப்பு 2017 யூலை 14 ஆந் திகதி காலாவதியாகி இருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதனை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேற்குறித்த நிர்மாணம் இரண்டு கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரை இதற்காக ரூபா 414.5 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிர்மாண ஒப்பந்தம் இரண்டு கட்டங்களின் கீழ் இரண்டு கம்பனிகளால் செய்யப்பட்டிருந்தது. அக்கம்பனிகளின் ஒப்பந்த பெறுமதி ரூபா 264.8 மில்லியனாக இருந்தது. இரண்டாம் கட்டத்தின் கீழ் ஒப்பந்தம் 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. அத்திகதி முதல் 05 சந்தணர்ப்பங்களின் போது ஒப்பந்த காலம் 399 நாட்களால் நீடிக்கப்பட்டிருந்தது. இறுதியாக 2016 நவம்பர் 10 ஆந் திகதி ஒப்பந்தக் காலம் முடிவடைந்திருந்தது. இந்த ஒப்பந்தம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அமைச்சிற்காக புதிய கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணித்தல்

2014 ஒக்தோபர் 19 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சிற்காக புதிய கட்டிடத் தொகுதி நிர்மாணத்தின் அடிப்படையில் ரூபா 3,896 மில்லியனான வரியின்றி ஒப்பந்தப் பெறுமதிக்கு 2014 ஒக்தோபர் 29 ஆந் திகதி அரச நிறுவனமொன்றுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் கட்டிட திட்டத்திற்கு மாநகர சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் செயற்திட்டத்திற்காக சாத்திய வள ஆய்வொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- ஒப்பந்தத்தை அளிப்புச் செய்யும் கடிதத்தின் பிரகாரம் 2016 ஒக்தோபர் 29 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 3,896 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளின் மொத்தம் ரூபா 1,432.6 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட திகதி வரையிலும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு போதியளவு நிதி ஏற்பாடுகளை பெற்றுக் கொள்வதற்கு அமைச்சு தவறியிருந்தது.

- முறையான திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்த்த இலக்கை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 900.2 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஜம்பார் இறக்குதல் மாத்திரம் இடம்பெற்றிருந்ததுடன் செயற்திட்டத்தின் தாமதக் காலம் அத்திகதியில் உள்ளவாறு 01

வருடங்கள் 02 மாதங்களாக இருந்தன.

- இந்தக் கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் காரணமாக அண்மையில் அமைந்துள்ள காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் 04 வார்ட்களினதும் பிரசவ அறையிலும் சிறுவர் அவசர சிகிச்சை பிரிவிலும் சத்திர சிகிச்சை அறையினதும் சுவர்களில் கோடுகள் விழுந்தும் வெடிப்பும் ஏற்பட்டிருந்தன. அவ்வார்ட்களில் சிலவற்றை மாத்திரம் புனரமைப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அவ்விடங்களில் மீண்டும் கோடுகள் உருவாகியிருந்தன. இது தொடர்பாக ஏற்பட்டுள்ள இழப்பினை மீளளிப்பதற்கு குறித்த ஒப்பந்தகாரருடன் இணக்கப்பாட்டிற்கு வந்ததமைக்கான தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இக்கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்தமை கண்டறியப்பட்டதுடன் அந்நிலைமையை தவிர்க்க முடியாமைக்கு அதுவும் காரணமாக இருந்தது.

- அமைச்சு தற்போது நடாத்திச் செல்லப்படும் சுவசிரிபாய கட்டிடத்தில் காணப்படும் இடவசதிகள் போதுமாக இல்லாமையால் புதிய கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் 2015 மே 01 ஆந் திகதி முதல் ஒரு வருடத்திற்கு ரூபா 108 மில்லியன் வரியில்லாத தொகைக்கு வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்த கட்டிடத்தை தொடர்ந்தும் வாடகைக்கு எடுக்க நேர்ந்திருந்தது.

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் 07 மாடிகளுடன் கூடிய வார்ட் தொகுதி நிர்மாணம்

களுபோவில கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் 07 மாடிகளுடன் கூடிய மிலேனியம் வார்ட் தொகுதி நிர்மாணத்திற்குரிய ஒப்பந்தம் ரூபா 398 மில்லியன் பெறுமதிக்கு 2006 ஆகஸ்ட் 14 ஆந் திகதி தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2008 மார்ச் 19 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 அந் திகதி வரை வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- திட்டமிடப்பட்ட 07 மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு வருகையில் மேலுமொரு மாடியை நிர்மாணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும், திருத்திய பொறியிலாளர் மதிப்பீடொன்று தயாரிப்பதற்கோ அல்லது பெறுகை குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- இச் செயற்திட்டத்திற்காக 2007 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை ரூபா 854.04 மில்லியனான நிதி ஏற்பாடு உள்நாட்டு நிதியளித்தல் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்தமையால் தாமத காலம் 9 ஆண்டுகளாக இருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதன் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் முறையே ரூபா 565.28 மில்லியன் மற்றும் 66 சதவீதம் மாத்திரமாக இருந்தன.

- முறைப்படி ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமையால் 2014 மார்ச் 06 ஆந் திகதி ஒப்பந்தக்காரரின் வேலை முடிவுறுத்தப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 51 மில்லியன் முற்பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்திகதி அளவில் செயலாற்றல் பிணை பொறுப்பு காலாவதியாகியிருந்தமையால் அதிலிருந்தும் முற்பணத்தை தீர்வு செய்ய முடியாமல் இருந்தது.

- 2010 மார்ச் 16 ஆந் திகதி முதல் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் ஒப்பந்தம் தொடர்பாக மதியுரை நிறுவனத்தின் பங்குபற்றலொன்று இடம்பெற்றிருந்த போதிலும் அக்காலத்திற்காகவும் ரூபா 14 மில்லியன் மதியுரைக் கட்டணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் செலுத்துவதற்கு உள்ள மதியுரைக் கட்டணங்களிலிருந்து அந்த 14 மில்லியனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பணத்தை அறவிடாமல் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 27 மில்லியன் மதியுரைக் கட்டணங்களாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 43 மில்லியன் கிரயத்திலான உபகரணங்கள் 02 வருட காலமாக விளைவற்ற வகையில் வேலைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. கட்டிடத்தில் நிர்மாண நடவடிக்கைகளுக்காக ஒப்பந்தகாரரினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த காற்றுச்சீராக்கி இயந்திரங்கள், துணி துவைக்கும் இயந்திரங்கள் மற்றும் தீயணைக்கும் கருவிகள் போன்ற உபகரணங்கள் காலாவதியாவதற்கு உட்பட்டு உத்தரவாதக் காலமும் முடிவடைந்திருந்தது. வேலைத் தளத்தில் காணப்படும் ஏனைய பொருட்களும் அழிவடையும் நிலைமைக்கு உட்பட்டு வருவதுடன் கட்டிடம் பாழடைந்து காணப்பட்டமை வைத்தியசாலையின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக இருந்தது.

- கட்டிடத்தின் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகை குழு பரிந்துரையின் பேரில் இலங்கை அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 743 மில்லியன் ஒப்பந்த பெறுமதிக்கு 2017 மே 31 ஆந் திகதி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 398 மில்லியனால் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த கட்டிடத்தின் எஞ்சிய வேலைகளுக்காக ரூபா 743 மில்லியன் அதாவது முதலாவது மதிப்பீட்டின் இரண்டு மடங்கிற்கு அண்மித்த தொகையொன்று செலவிட நேர்ந்திருந்தது.

கம்பொல ஆதார வைத்தியசாலையின் அவசர விபத்துப் பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு அறை மற்றும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு

மேற்குறிப்பிட்ட நிர்மாணத்திற்கான மொத்தக் கிரய மதிப்பீடு ரூபா 371 மில்லியனாக இருந்தது. இச் செயற்திட்டத்திற்கான பெறுகைக்காக 09 கேள்விதாரர்கள் முன்வந்திருந்தனர்.

அதில் ரூபா 270 மில்லியனான குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. கேள்வி ஆவணங்களில் பிரதான ஒப்பந்தகாரராக ரூபா 250 மில்லியனுக்கு குறையாத அல்லது அதற்கு சமமான நிர்மாண செயற்திட்டமொன்றை கடந்த 05 ஆண்டுகளின் போது 12 மாதங்களில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்ற நிபந்தனையொன்று குறிப்பிடப்பட்டிருந்தது. அத்தோடு ஒப்பந்தம் 2018 நவம்பர் 13 ஆந் திகதி அளவில் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்யப்பட வேண்டும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.3 வழிகாட்டலின் பிரகாரம் இச் செயற்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகளுக்காக கூடியது 12 வார காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும், அந்த வரையறையை மிகைத்து 54 வார காலம் எடுக்கப்பட்டிருந்தது.

- ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் முன் தகைமையாக மத்திய மாகாண பிரதான செயலக கட்டிடத் தொகுதியை நிர்மாணித்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், அக்கட்டிடத் தொகுதி வேறொரு ஒப்பந்தகாரரால் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ஒப்பந்தம் வழங்கப்பட்ட ஒப்பந்தகாரரால் போலியான தரவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அது தொடர்பில் கவனம் செலுத்தாமல் கேள்வி மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததாக கண்டறியப்பட்டது.

- அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.3.19 வழிகாட்டலின் பிரகாரம் கட்டணமின்றி பராமரிப்புக் காலத்தின் பின்னர் ஐந்து வருடங்களின் பராமரிப்புக் கிரயம், மதிப்பிட்டு குறிக்காட்டியொன்றாக ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அந்த குறிகாட்டி மதிப்பீடொன்று இல்லாமல் கேள்வி மதிப்பீடு பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தம் வழங்கப்பட்ட கேள்விதாரரால் நிர்மாணிக்கப்பட்டிருந்த கேள்வி பிணைப் பொறுப்பில் குறிப்பிடப்பட்ட முகவரி மற்றும் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட முகவரியின் வேறுபாடு தொடர்பாக கேள்வி மதிப்பீட்டின் போது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

- பெறுகை குழுவின் தீர்மானத்தின் பிரகாரம், ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த 06 மாதங்களுக்குள் சகல உப ஒப்பந்த வேலைகளுக்காக பொறியியலாளரின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. எனினும், ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2018 மே 22 ஆந் திகதி வரையிலும் 09 மாதம் காலம் கடந்திருந்த போதிலும் அவ்வாறு பொறியியலாளர் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- ஒப்பந்த கையளிப்பு கடிதத்தின் பிரகாரம் 2018 நவம்பர் 13 ஆந் திகதி அளவில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், ஒப்பந்தம் வழங்கப்பட்டு 154 நாட்கள் காலம் கடந்திருந்த போதிலும் ஒப்பந்தகாரரால் காப்புறுதி மேவுகை மற்றும் ஏற்றுக்கொள்ளக் கூடிய செயலாற்றல் பாதுகாப்பொன்று சமர்ப்பிக்கப்படாமையால் மதியுரை நிறுவனத்தால் ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு 2018 சனவரி 23 ஆந் திகதி

பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 யூன் 30 வரையிலும் செயற்திட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டோ ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டோ இருக்கவில்லை.

- மதியுரை சேவைகள் பெற்றுக்கொள்வதற்கான கைநூலின் 1.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் மதியுரை சேவைகள் பெற்றுக்கொள்ளும் போது போட்டி அடிப்படையில் வழங்குனர் தெரிவு இடம்பெற வேண்டிய போதிலும் இந்நிர்மாணம் தொடர்பாக அந் நியதிகள் பின்பற்றப்படாமல் அரச நிறுவனமொன்றிடமிருந்து மதியுரை சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு 2018 யூலை 03 ஆந் திகதி வரையிலும் ரூபா 15 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.9.1 வழிகாட்டியின் பிரகாரம் மதியுரை நேர அட்டவணைக்குள் பெறுகை நடவடிக்கை பூர்த்தி செய்யப்படாதிருந்தமையால் பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களுக்கும் உதவி உத்தியோகத்தர்களுக்கும் செலுத்த வேண்டிய கட்டணங்களிலிருந்து 50 சதவீதமான கட்டணமொன்று செலுத்தப்பட வேண்டியிருந்தது. அவ்வாறே அந்த உறுப்பினர்கள் அவர்களின் வழமையான கடமை நேரத்தின் பின்னர் குழுக் கூட்டங்களுக்கு சமூகமளிக்க வேண்டும். அந்த நியதிகளை கருத்திற் கொள்ளாமல் பெறுகை குழு உறுப்பினர்களுக்கும் உரிய ஏனைய உதவி உத்தியோகத்தர்களுக்கும் வருகையை அடிப்படையாகக் கொண்டு முழுப் பணத்தையும் செலுத்துவதற்கு 2017 நவம்பர் 21 ஆந் திகதி செயலாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அந்த அங்கீகாரத்தின் பிரகாரம் பெறுகை குழு 09 உறுப்பினர்களுக்கு ரூபா 98,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அப்பெறுகை வழமையான கடமைக் காலத்திற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டமைக்காக உரிய குழுப் குறிப்பின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

முல்லேரியா ஆதார வைத்தியசாலையின் தேசிய ஆசன நிலையமொன்றை நிர்மாணித்தல்

கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் 04 மாடிகளுடன் கூடிய தேசிய ஆசன நிலைய நிர்மாண செயற்திட்டத்திற்காக ரூபா 543 மில்லியனான மொத்த கிரய மதிப்பீடு 2015 ஆம் ஆண்டின் போது அமைச்சரவையாலும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 06 மாடிகளுடன் கூடிய தேசிய ஆசன நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,746 மில்லியனான மொத்தக் கிரய மதிப்பீடொன்று அமைச்சு செயலாளரால் 2015 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 04 மாடிகளிருந்து 06 மாடி வரையும் மொத்த கிரய மதிப்பீடு ரூபா 543 மில்லியன் முதல் ரூபா 1,746 மில்லியன் வரையும் அதிகரிப்பதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தினதும் நிதி அமைச்சினதும் அமைச்சரவையின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.2.3 பிரிவின் பிரகாரம் ரூபா 1.746 மில்லியனான கிரய மதிப்பீடொன்றுடன் கூடிய பெறுகை, கூடியது 10 வாரங்களுக்குள் பூர்த்தி செய்ய வேண்டிய போதிலும் இப்பெறுகைக் காலம் 60 வார காலம் கடத்தப்பட்டிருந்தது. மதியுரை சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான கைநூலின் 1,2,2 ஆம் பந்தியின் பிரகாரம் மதியுரை சேவைகள் பெற்றுக்கொள்ளும் போது போட்டி அடிப்படையில் வழங்குனர்

தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாமல் அரச நிறுவனமொன்றிடமிருந்து அச்சேவை பெற்றுக்கொண்டு ரூபா 41 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

இரண்டாவது சுகாதாரத் துறை அபிவிருத்தி செயற்திட்டம்

2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தேசிய சுகாதார அபிவிருத்தி திட்டத்தை செயற்படுத்துவதற்கு நிதி ஒத்துழைப்பு வழங்குவதற்காக உலக வங்கி கடன் மானியத்தின் கீழ் இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்தி செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.
செயற்திட்டத்தின் உடன்படிக்கையின் பிரகாரம் தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் செயற்திட்டத்தின் செயற்பாடுகளை செயற்படுத்துவது முறையே அமைச்சிற்கும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சிற்கும் கையளிக்கப்பட்டிருந்தன. போசனைக் குறைவு மற்றும் தொற்றாத நோய் தொடர்பான சவால்களுக்காக மிகவும் சிறந்த பெறுபேற்றை ஏற்படுத்துவதற்காக முடியுமான வகையில் பொது சுகாதார செயலாற்றல் தொடர்பாக நியமங்களை மேம்படுத்துவது செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களாக இருந்தன. செயற்திட்ட செயற்பாடுகள் 2013 யூலை 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி அளவில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. நிதி உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 25,270 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 4,436.62 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

- இலங்கையில் விபத்துக்கள் மற்றும் அவசர சிகிச்சை சேவைகளை மேம்படுத்துவதற்காக 14 வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சை பிரிவுகளை நிர்மாணிப்பதற்கும் மேலும் 14 வைத்தியசாலைகளில் காணப்படும் அவசர சிகிச்சை சேவைகளை மேம்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தன. அதன் கீழ் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை களுத்துறை, பொலன்னறுவை, யாழ்ப்பாணம் மற்றும் கல்முனை ஆகிய வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சை பிரிவுகள் புதிதாக நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்நிர்மாணங்கள் எவையும் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

- அமைச்சின் கீழ் காணப்படும் வாகன அணியை முகாமைப்படுத்துவதற்காக ரூபா 4.7 மில்லியனான கிரயமொன்றுடன் கூடிய மென்பொருள் முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு தனியார் நிறுவனமொன்றுடன் 2014 திசெம்பர் 18 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2016 யூன் 30 ஆந் திகதி அளவில் அனைத்து நடவடிக்கைகளையும் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் மென்பொருள் முறைமையை ஸ்தாபிக்கும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் ஒப்பந்தக்காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை.

- செயற்திட்டத்தின் கீழ் 2 Lineer Accelerators இயந்திரங்கள் 2015 திசெம்பர் 02 ஆந் திகதி ரூபா 476 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. குறித்த இயந்திரங்கள் நிறுவப்பட வேண்டிய கொங்கிறீட் பதுங்குகுழிகள் நிர்மாணிப்பதில்

தாமதம் காரணமாக நிறுவப்படாமல் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு வைத்தியசாலைகளில் 2018 மே 30 ஆந் திகதி வரையிலும் 2 வருடங்கள் மற்றும் 6 மாதம் காலமாக அவ்வியந்திரங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

- செயற்திட்டத்தின் கூட்டிணைந்த திட்டத்தின் (Poject Coperate Plan) பிரகாரம் 05 வருடங்களான செயற்திட்டக் காலத்தினுள் புதிய கண்டுபிடிப்புக்களுக்காக வழங்கப்பட்டிருந்த மொத்த நிதி ஏற்பாடு 346 மில்லியனாக இருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 34 ஆராய்ச்சிகளின் செயற்பாடுகளுக்கு ரூபா 399 மில்லியன் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. புதிய கண்டுபிடிப்பு செயற்திட்டம் 2018 மார்ச் 31 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 34 ஆராய்ச்சி முன்மொழிவுகளில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 03 ஆாய்ச்சிகளுக்குரிய இறுதி அறிக்கைகள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. புதிய கண்டுபிடிப்பு செயற்திட்டங்கள் சில ஒரே நபரினால் மேற்கொள்ளல் மற்றும் அமைச்சு செயலாளரினால் நியமிக்கப்பட்ட புதிய கண்டுபிடிப்புக்கள மீளாய்வுக் குழு (Reviev Committee)அங்கத்தவர்கால் ஆராய்ச்சி செயற்திட்டம் மேற்கொண்ட காரணத்தினால் ஆராய்ச்சி செயற்திட்டம் செயற்திறனாக இடம்பெறாமை தாக்கமளித்திருந்தது.

- செயற்திட்டத்தின் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் உள்ளூர் பயிற்சி மற்றும் வெளிநாட்டு இயலுமையைக் கட்டியெழுப்புவதற்கான ரூபா 672.74 மில்லியன் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு உள்நாட்டு இயலுமையை கட்டியெழுப்புவதற்காக ரூபா 371 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் முன்னேற்றம் 62 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

- இயலுமையைக் கட்டியெழுப்பும் விடயத்துறையின் (Terms of Reference) பிரகாரம், தேசிய இயலளவைக் கட்டியெழுப்புதலின் கீழ் செயற்திட்ட காலப்பகுதியில் பெறுகை கேள்வி ஆவணங்கள் தயாரித்தல் மற்றும் மதிப்பாய்விற்காக (Preparation of bidding documents and Bid Evaluaion) 1,080 உத்தியோகத்தர்கள் பயிற்சியளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் பயிற்சி நடவடிக்கைகளை திட்டமிடல் காரணமாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 86 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் தொடர்புடைய பாடநெறி நடாத்தப்பட்டிருந்தது.

- செயற்திட்டக் காலப்பகுதியில் குறுகிய கணனி பாடநெறியின் (On-line) கீழ் 2,100 உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பாடநெறி திட்டமிடல் தாமதமானதன் பேரில் 2017 திசெம்பர் 31 ஆந் வரையிலும் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- 2015 யூலை 14 இன் 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர்களால் பெற்றுக்கொள்ளப்படும்

முற்பணங்கள் 10 நாட்களோ அல்லது அதற்கு முன்னரோ அச்செயற்பாடு முடிவுற்றால் உடனடியாக தருவு செய்யப்பட வேண்டும். எனினும் செயற்திட்டத்தின் வெவ்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த முற்பணங்களின் மொத்தம் ரூபா 6 மில்லியனான செயல்நிமித்த கட்டுநிதி, 16 நாட்கள் தொடக்கம் 348 நாட்கள் வரையான வீழ்ச்சியுடைய காலதாமதத்துடன் தீர்வு செய்யப்பட்டிருந்தது.

தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல்

சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவை 2007 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஆண்டின் போது 1,747 தனியார் மருத்துவ நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. எனினும், அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருந்த தனியார் வைத்திய நிறுவனங்களின் அளவு மீளாய்வாண்டின் இறுதி வரையில் 1,024 வரை குறைவடைந்து இருந்தது. அவ்வாறு பதிவு குறைவடைவதற்கு தாக்கமளிக்கும் தனியார் மருந்து நிறுவனங்களை மூடுவது அல்லது பதிவு செய்யாமை தொடர்பில் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் வைத்திய நிறுவனங்கள் பதிவு செய்தல் சட்டத்தின் 2(1) உப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பதிவு செய்யப்பட வேண்டிய தனியார் வைத்திய நிறுவனங்களின் எண்ணிக்கையை இனங்காணல், பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் தொடர்பாக சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளினை செயற்படுத்துவதற்கு முறையான நடைமுறையொன்று தயாரித்து செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

அரச உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள்

அமைச்சிற்கு இணைக்கப்பட்டிருந்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களிலிருந்து 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக 1549 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவையான ரூபா 76.99 மில்லியனான கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

தரத்தில் சித்தியடையாத மற்றும் காலவதியான மருந்துகள்

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் விற்பனைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், முன்னைய ஆண்டின் போது தரத்தில் சித்தியடையாத மற்றும் காலாவதியான மருந்துகளின் மொத்தக் கிரயம் முறையே ரூபா 110.01 மில்லியன் மற்றும் ரூபா 19.98 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டின் போது அது முறையே ரூபா 80.83 மில்லியன் மற்றும் ரூபா 23.56 மில்லியனாக இருந்தன. முன்னைய ஆண்டிற்கும் மீளாய்வாண்டிற்கும் உரிய தரத்தில் சித்திபெறாத மருந்துகளில் முறையே ரூபா 133.57 மில்லியன் மற்றும் ரூபா 26.60 மில்லியன் 2018 மார்ச் 26 ஆந் திகதி வரையில் உரிய மருந்துகள் வழங்குனர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மருந்துகள் காலாவதியானமையால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 89.97 மில்லியனான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

நட்டமடையும் ஒசுசல

மீளாய்வாண்டில் காணப்பட்ட செயற்பாட்டில் உள்ள 37 ஒசுசலவில் 19 ஒசுசல நிலையங்கள் ரூபா 41.29 மில்லியனான நட்டத்தை ஈட்டியிருந்தன. அவிஸ்ஸாவெல, மினுவாங்கொட, தியவத்தலாவ, தங்காலை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம் மற்றும் இரத்மலான ஆகிய நகரங்களில் அமைந்துள்ள 7 ஒசுசல நிலையங்கள்

2013 ஆம் ஆண்டு முதல் இதுவரை தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்தது. நட்டத்தைக் குறைத்துக் கொள்வதற்கு வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டின் மொத்த நட்டத்தில் 37.54 சதவீதம் அந்த 07 ஒசுசல நிலையங்களிலிருந்து அடைந்திருந்தது.

மருந்து வழங்குனர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணம்

மருத்துவ வழங்கல் பிரிவிற்கு தரத்தில் சித்தியடையாத மற்றும் மருந்துகள் வழங்கல் மருந்துகள் குறைவாக வழங்கல்களுக்காக செலவிடப்பட்ட செலவினம், அதற்காக நிர்வாகக் கட்டணங்கள் மற்றும் அந்த இருப்புக்களை அழிப்பதற்கான செலவினம் என்பவற்றை வழங்குனர்களிடமிருந்து அறவிடுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,303.74 மில்லியனான வரவுத்தாள்கள் வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரை அதில் ரூபா 580.00 மில்லியன் அறவிடுவதற்கு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. அந்த வரவுத் தாள்களின் பெறுமதியில் ரூபா 104.80 மில்லியன் பெறுமதியான வரவுத்தாள் கறுப்புபட்டியலில் உள்ள வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டிருந்தமையால் அத்தொகையை அறவிடுவது நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்டன.

Ascorbic Acid Tablets BP/USP 100mg மருந்துகளில் 60,000 அலகுகள் கொள்வனவு

2014 நவம்பர் 15 ஆந் திகதிய மேலே குறிப்பிடப்பட்ட மருந்துகளில் 30,000 அலகுகள் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருந்தன. அதில் ரூபா 25,450 அலகுகள் தரத்தில் சித்தியடையாத இனங்காணப்பட்ட சந்தர்ப்பம் வரையில் அதில் 18,326 அலகுகள் நோயாளிகளுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. 3,446 மருந்து அலகுகள் வழங்குனரால் மீண்டும் வழங்கப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய 22,004 அலகுகளுக்குரிய ரூபா 11.69 மில்லியன் மற்றும் அதில் 25 சதவீதமான ரூபா 2.92 மில்லியன் தண்டப்பணமக வழங்குனரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. முதலாவது 30,000 மருந்துகள் அலகுகளில் 25,450 அலகுகள் தரத்தில் சித்தியடையாதமையால் இரண்டாவது 30,000 அலகுகளை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. தரத்தில் சித்தியடையாத 22,004 அலகுகளுக்குரிய ரூபா 14.61 மில்லியன் அறவிடப்படாதிருக்கையில் இரண்டாவது 30,000 அலகுகளுக்காக முழுத்தொகையும் வழங்குனருக்கு கூட்டுத்தாபனம் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தன.

2015 செப்தெம்பர் 11 ஆந் திகதி கிடைக்கப் பெற்றிருந்த இரண்டாவது 30,000 அலகுகளில் 1,500 அலகுகள் தரத்தில் சித்தியடையாதிருந்த போதிலும் 2018 மார்ச் 30 ஆந் திகதி வரையில் அதன் கிரயம் ரூபா 796,710 மற்றும் 25 சதவீதமான ரூபா 199,177 ஆன தண்டப்பணம் வழங்குனர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

60,000 மருந்து அலகுகளுக்கான மேற்படி கட்டளை மேலே குறிப்பிடப்பட்ட வழங்குனருக்கு வழங்கப்பட்ட 03 நாட்களின் பின்னர் அம் மருந்துகளில் மேலும், 60,000 அலகுகளை புதிய கட்டளையொன்றை வேறு வழங்குனருக்கு சமர்ப்பிக்கப்பட்டு 2016 சனவரி 05 ஆந் திகதி அளவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2016 சனவரி 31 ஆந் திகதி வரை 74,370 அலகுகள் களஞ்சியத்தில் எஞ்சிக் காணப்பட்டதுடன் சராசரி மாதாந்த விற்பனை அளவை விஞ்சி இருப்பு கொள்வனவு செய்யப்பட்ட காரணத்தினால் முதலாவது வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்த 27,347 அலகுகளும் இரண்டாவது வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்த 501 அலகுகளும் உட்பட 27,848 மருந்து அலகுகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி

அளவில் காலாவதியாகியிருந்தன. மருந்துகள் காலாவதியானமை காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 14.83 மில்லியனான நட்டமொன்று இடம்பெற்றிருந்தது.

தாமதக் கட்டணங்கள் அறவிடப்படாமை

Formoterol Fumarate and Budesonide Dry Powder Capsules (Foracort - DP Caps 400) மருந்துகளில் 30,000 அலகுகளை கொள்வனவு செய்வதற்காக வழங்குனருடன் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 20.26 மில்லியனான தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

போதியளவு அதிகாரமிலாமல் ஊக்குவிப்பு படிகள் கொடுப்பனவு

1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக பொதுத் திறைசேரியின் அங்கீகாரமொன்று இல்லாமல் 1997 ஆம் ஆண்டு முதல் இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தினால் ஊக்குவிப்பு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2007 நவம்பர் 09 ஆந் திகதி பொது முயற்சிகள் தொடர்பான குழுவினால் கூட்டுத்தாபனத்தின் பதவியணிக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவுகளுக்காக பொது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென கட்டளையிடப்பட்டிருந்தது. 2018 மார்ச் 28 ஆந் திகதி வரையிலும் அந்த அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஐந்து ஆண்டுகளின் போதும் பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி மொத்தம் ரூபா 307.79 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

போதியளவு அதிகாரமின்றி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த லீவுக்கான படிகள்

1987 நவம்பர் 19 ஆந் திகதி முதல் இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்திற்கே உரித்தான நிர்வாக ரீதியான மற்றும் கட்டுப்பாட்டுப் பிரமாணங்கள் உள்ளடக்கப்பட்டு விடுமுறை நடைமுறைக் கோவையொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அதற்காக பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாதிருந்தமையால் அவ்விடுமுறை செயற்பாட்டுக் கோவைக்காக 2009 சனவரி மாதத்திலிருந்து தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணம் மற்றும் ஏனைய உரிய சுற்றறிக்கைகள் பயன்படுத்த வேண்டுமென 2009 பெப்ரவரி 16 ஆந் திகதி பணிப்பாளர் சபையால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் பதவியணயினருக்கு பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி 2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு மருத்துவ விடுமுறைகளுக்காக விடுமுறை படிகளாக ரூபா 18.29 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

முறையற்ற விதத்தில் பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்தல்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்படாத பாதுகாப்பு காப்பாளர் பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் பணிப்பாளர் சபையினதும் அங்கீகாரமொன்று இல்லாமல் 11 நபர்கள் நிரந்தர அடிப்படையிலும் ஒருவர் ஒப்பந்த அடிப்படையிலும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக ரூபா 10.02 மில்லியன் சம்பளம் மற்றும் படிகளாக இலங்கை ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சியும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் அங்கீகாரமின்றியும் 02 உற்பத்தி உதவியாளர்கள், 03 முகாமைத்துவ உதவியாளர்கள், 04 சாரதிகள் மற்றும் ஒரு தொழிலாளரும் 2015 ஆம் ஆண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக ரூபா 21.17 மில்லியன் சம்பளங்கள் மற்றும் படிகள் கூட்டுத்தாபனத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் வெகுசன ஊடகம்

மக்கள் நேயமுடன் கூடிய அபிவிருத்தியை நோக்கி சுதந்திரமானதும் பொறுப்பு வாய்ந்ததுமான இலங்கைக்கான ஊடக கலாசாரத்தை ஏற்படுத்துவதற்கு இப்பிரிவிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பெறுபேற்றை அடைந்துகொள்வதற்கு பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் ஊடக அமைச்சு, அதன் கீழ் இரண்டு திணைக்களங்களினாலும் 12 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களினாலும் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடகம் தொடர்பிலான கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் மற்றும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் பின்தொடர் நடவடிக்கையும் மதிப்பீடும்.
- பாராளுமன்றத்திற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களது அலுவல்களுக்கும் உரியதாக அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள்.
- பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவியணியனிருடன் தொடர்புடைய தாபன ரீதியானதும் அலுவல்கள்.
- முன்னால் பாராளுமன்ற உறுப்பினர்களிதும் அவர்களின் குடும்பங்களினதும் நலனோன்புகைசார் அலுவல்கள்
- பாராளுமன்ற கண்காணிப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள்.
- மக்களது உளப்பாகங்களை நல்வழியில் மையப்படுத்தி பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் துறைகளின் முன்னேற்றக்கூறாக வெகுசன ஊடகத்தின் பங்களிப்புக்குத் தேவையான தந்திரோபாயங்களை வகுத்தமைத்தல்.
- மக்களிடையே அறிவு, உளப்பாங்குகள் மற்றும் நல் ரசனை போன்றவற்றை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்.
- சரியான தகவல்களை அறிந்து கொள்ளும் மக்களின் உரிமையை உறுதிப்படுத்தத் தேவையான வழிமுறைகளைக் கையாளுதல்.
- உயர்தரத்திலான ஊடக ஒழுக்கத்தினை ஏற்படுத்தத் தேவையான நிகழ்ச்சித்திட்டத்தினைச் செயற்படுத்தல்.
- அரசாங்க உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் மற்றும் செய்திகளை வெளியிடுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்.
- இலங்கை பற்றிய தகவல்களை உள்நாட்டு, வெளிநாட்டு ஊடக நிறுவனங்களுக்கு வழங்குதல்.
- வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலயங்களுக்கு அவசியமான தகவல்களையும் விளம்பரச் சேவைகளையும் வழங்குதல்.
- வெளியீடுகளுக்குரிய சர்வதேச ஒப்பந்தங்கயையும் சமவாயங்களையும் நடைமுறைப்படுத்தல்.
- திணைக்கள வெளியீடுகள் தவிர்ந்த அரசாங்க வெளியீடுகளின் விற்பனை, களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக அலுவல்கள்.
- செய்திகள், திரைப்படங்கள், விவரண நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றை தயாரித்தலும் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்தலும்.
- வாணிப தொலைக்காட்சி, வானொலி ஒலிபரப்புக்கள் வெளிநாட்டு அலைவரிசைகள் உட்பட வானொலி பிரசாரப் பணிகள்.

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களால் மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

சினிமா பாடசாலையொன்று, திரைப்பட மற்றும் பாதுகாப்பு கூடமொன்று தாபித்தல்.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்காக மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 25 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந் நிதி ஏற்பாடு போதியளவில்

மேலதிகமான கொடுப்பனவை அறவிடப்படாமை.

தகவல் திணைக்களத்தின் புதிய ஊடக நிலையத்தை நிர்மாணிப்பதற்குரிய ஒப்பந்தக்காரருக்கு 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 6.62 மில்லியன் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அந்நிர்மாணத்திற்குரிய மதிப்புரையாளராக செயற்பட்ட அரச கூட்டுத்தாபனமொன்றினால் அவ்வாறு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த தொகையை ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடுமாறு தகவல் திணைக்களத்திற்கு அறவிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அம்மேலதிக கொடுப்பனவு அறவிடப்பட்டிருக்கவில்லை.

அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் மூலதன மானியங்கள் வட்டியின்றி வங்கியிடல்

நாணயக் கடிதம் திறக்கும் போது அதன் பெறுமதிக்கு சமமான பெறுமதியொன்றை பாதுகாப்பொன்றாக வட்டி கிடைக்காத வங்கிக் கணக்கொன்றில் வைப்புச் செய்யுமாறு வங்கியால் கோரப்பட்டிருந்த வேண்டுகோளின் பிரகாரம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் வங்கிக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மூலதன மானியமாக அரசிடமிருந்து கிடைத்த ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட தொகையொன்று அவ்வங்கிக் கணக்கில் ஆண்டு முழுவதும் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இல்லாமையால் குறைநிரப்பு பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 100 மில்லியன் நிதி ஏற்பாட்டுடன் ரூபா 125 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அச் செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்கு எந்தவித பயன்பாடொன்றும் மேற்கொண்டிருக்கவில்லை.

இறுதி வரையிலும் அதன் மீதி ரூபா 153 மில்லியனாக இருந்தது.

பத்திரிகை, சஞ்சிகை விற்பனை மற்றும் திரட்டிய வருமானம் குறைவடைந்தமை

வரையறுக்கப்பட்ட ஐக்கிய செய்திப்பத்திரிகை கம்பனியால் முன்னைய ஆண்டின் போது 06 செய்திப் பத்திரிகைகள் மற்றும் 09 சஞ்சிகைகள் வெளியிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அப் பெறுமானத்தை விஞ்சி 06 செய்திப்பத்திரிகைகளும் 12 சஞ்சிகைகளும் வெளியிடப்படுத்தப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வெளியிடப்பட்ட 04 செய்திப் பத்திரிகைகள் 06 சஞ்சிகைகளின் விற்பனை செய்யப்பட்ட எண்ணிக்கை 1,117,279 ஆல் அதாவது 7 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் கம்பனியின் வர்த்தக அச்சீட்டு பிரிவு விஷேட வெளியிட்டுப் பிரிவு மற்றும் டிஜிட்டல் அச்சிட்டு பிரிவினாலும் உழைக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 9.39 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

இரண்டு துணைக் கம்பனிகள் மூடப்பட்டமை.

வரையறுக்கப்பட்ட ஐக்கிய செய்திப்பத்திரிகை கம்பனியால் ரூபா 3 மில்லியனான மற்றும் ரூபா 2.5 மில்லியனான ஆரம்ப மூலதனத்துடன் இரண்டு துணைக்கம்பனிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அவ்விரண்டு கம்பனிகளின் மீளாய்வாண்டின் இறுதி

அளவில் திரட்டிய நட்டம் ரூபா 25.8 மில்லியன் மற்றும் ரூபா 13.1 மில்லியனாக இருந்தன. அத் திகதி வரை இந்த இரண்டு கம்பனிகளிடமிருந்தும் வரையறுக்கப்பட்ட ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனிக்கு ரூபா 22.7 மில்லியன் மற்றும் ரூபா 10.7 மில்லியன் கிடைக்க வேண்டியிருந்தது. அந்த இரண்டு கம்பனிகளின் நட்டம் அடைந்தமை மற்றும் பாதகமான தொழிற்பாடு மூலதன நிலைமையின் பேரில் அந்த இரண்டு கம்பனிகளை முடிவிடுவதற்கு பணிப்பாளர் சபையால் 2018 பெப்ரவரி 15 ஆந் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தது.

தேசிய ஒருமைப்பாட்டு அலைவரிசை ஆரம்பித்து வைத்தல்.

2017 ஆம் ஆண்டின் போது சாத்திவள கற்கை ஆய்வொன்றின் பிரகாரம் தேசிய ஒருமைப்பாட்டு அலைவரிசையொன்றை ஆரம்பிப்பதற்காக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கு தேசிய ஒருமைப்பாடு மற்றும் மீள்நிர்மாண அமைச்சிற்கு ரூபா 187 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந் நிதி ஏற்பாடுகளிலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 171 மில்லியன் இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருந்தது. கூட்டுத்தாபனத்தினால் உரிய செயற்பாட்டிற்காக அதில் ரூபா 49 மில்லியனை மாத்திரம் பயன்படுத்தியிருந்தது. அதன் பிரகாரம் எஞ்சிய ரூபா 122 மில்லியன் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினால் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

அரச இலத்திரனியல் ஊடகத்தினால் கையேற்கப்பட்ட ஊடக வர்த்தக சந்தை பங்கு குறைவடைந்தமை.

இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபனத்தினால் 2014 ஆம் ஆண்டின் போது ஊடக சந்தையின் 8.7 சதவீதம் கைபற்றப்பட்டிருந்தது. வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பினால் 2014 ஆம் ஆண்டின் போது ஊடக சந்தையின் 18.91 சதவீதத்தை கைப்பற்றியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த இரண்டு ஊடக நிறுவனங்களின் சந்தைப்பங்கு முறையே 4.3 மற்றும் 7 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. அவ்வாறான வீழ்ச்சி வரைபு 23 காண்பிக்கப்பட்டுள்ளது.



வரைபு 23 - அரச ஊடகத்தினால் கைப்பற்ற சந்தைப்பங்கு குறைவடைந்தமை
மூலம் - வரையறுக்கப்பட்ட லங்கா சந்தை ஆராய்ச்சிப் பணியகம்

மேற்படி தரவுகளின் பிரகாரம் இரண்டு அரச இலத்திரனியல் ஊடகங்களின் சந்தைப் பங்கு தொடர்ச்சியாக ஆண்டுதோறும் வீழ்ச்சியடைந்திருந்தது. இதனால் நிறுவனத்தின் பிரதான வருமான மார்க்கமான வானலை விற்பனை வருமானம் விரைவாக வீழ்ச்சியடைந்திருந்தது. விபரங்கள் வரைபில் 24 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



வரைபு 24 ------ வானிலை கால விற்பனை வருமான குறைவு
மூலம் ---- வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

இவ்வாறு வான் கால விற்பனை வருமானம் குறைவடைந்தமையால் சந்தைப்பங்கு குறைவடைந்திருந்ததுடன் சேவை நாடுனர் தனியார் வானொலி அலைவரிசைகளுக்கு கவரப்பட்டுள்ளனர். இவ்வாறு இரண்டு ரூபவாஹினி அலைவரிசையிலிருந்து விலகும் சேவைநாடுனர்களை மீண்டும் கவர்ந்து கொள்வதற்காக இரண்டு அலைவரிசைகளில் காணப்படும் அங்கீகரிக்கப்பட்ட விளம்பர அறிவித்தல்களுக்காக அறவிடப்படும் நியம விலைகளை விட மிகவும் குறைந்த விலைகளின் கீழ் 65 சதவீதத்தை மிகைத்த கழிவொன்றுடன் வானலை காலத்தை வழங்குவதற்கு நேர்ந்திருந்தது. அவ்வாறு கழிவு பெறுவதற்கு மேலதிகமாக அந்த சேவைநாடுனர்களுக்காக கட்டணங்கள் அறவிடப்படாமல் வழங்கப்படும் நிரல் விளம்பரம், மேலதிக விளம்பரம் போன்றவை கூடுதலாக வழங்கப்பட்டிருந்தன.

இலங்கை பத்திரிகை பேரவை தனியார் கட்டிடமொன்றில் நடாத்திச் செல்லப்படல்

2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தின் கடிதத்தின் 1 ஆம் பந்தி தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரமும் 2012 யூலை 10 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவின் கட்டளை இலக்கம் 7 இன் படி அமைச்சு மற்றும் அதன் கீள் காணப்படும் சகல நிறுவனங்களின் அலுவலகங்களை இயலுமான வரை அரசாங்கத்தின் கட்டிடமொன்றில் நடாத்திச் செல்லப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. இலங்கை பத்திரிகை பேரவை ஆரம்பம் முதல் 40 வருடங்கள் அளவிலான காலம் வாடகை

அடிப்படையில் தனியார் கட்டிடங்களில் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. அதற்காக 2006 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 18.81 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அரசாங்க கட்டிடமொன்றை பெற்றுக்கொள்வதற்கு உள்ள சிக்கல்கள் அடிப்படையில் இந்நிலைமை உருவாகியிருந்ததாக சபையின் தலைவரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

பதிவு செய்யப்படாத பத்திரிகைகள் தொடர்பாக புலனாய்வு செய்யாமை

1973 இன் 05 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் படி சகல பத்திரிகைகளும் பத்திரிகை பேரவையில் பதிவு செய்யப்பட வேண்டியிருந்தன. அவ்வாறு பதிவு செய்யப்படாது சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட பத்திரிகைகள் தொடர்பாக தேவையான சட்டங்கள் மற்றும் விதிகளை உருவாக்குவதற்கு அதிகாரச்சட்டத்தின் 30 ஆவது பிரிவின்படி அதிகாரம் காணப்பட்ட போதிலும் பேரவையினால் அதற்காக விதிகளோ கட்டளைகளோ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. பதிவுசெய்யப்பட வேண்டியப த்திரிகைகளின் எண்ணிக்கையாக சபையினால் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை 300 ஆக இருந்த போதிலும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பதிவுசெய்யப்படாத பத்திரிகைகள் முறையே 230 மற்றும் 199 ஆக இருந்தது. சந்தையில் பதிவுசெய்யப்படாமல் விற்பனை செய்யப்பட்ட பத்திரிகைகள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

பொது மக்களால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளை விசாரணை செய்யாமை

மீளாய்வாண்டின் போது செய்தித்தாள்களுக்கு எதிராக பொதுமக்கள் மற்றும் வெவ்வேறு நிறுவனங்களால் 49 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் இலங்கை பத்திரிகை பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டில் தீர்க்கப்படாதிருந்த 52 முறைப்பாடுகளுடன் மீளாய்வாண்டின் போது தீர்வு செய்வதற்கிருந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 101 ஆக இருந்தது. அதில் 35 முறைப்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு தீர்வ் செய்யாத 35 முறைப்பாடுகளில் 16 முறைப்பாடுகள் 1 வருடம் முதல் 4 ஆண்டு வரைான காலப்பகுதியிலான தாமதமொன்று இடம்பெற்றிருந்தது.

சட்டம், சமாதானம் மற்றும் தென் மாகாண அபிவிருத்தி

சட்டத்திற்கு மதிப்பளிக்கும் சமூகமொன்றிற்காக சட்டத்தையும் சமாதானத்தையும் பேணிச் செல்லல், தென் மாகாண அபிவிருத்தியை கட்டியெழுப்புதல் என்பன இந்தத் துறையிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பெறுபேறுகளாக இருந்தது. அந்த பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கான சட்டம், சமாதானம் மற்றும் தென் மாகாண அபிவிருத்தி அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் 03 நியதிச் சட்ட சபைகள் / நிறுவனங்களால் கீழே குறிப்பிடப்படுகின்ற பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- சட்டம், சமாதானம் மற்றும் தென் மாகாண அபிவிருத்தி விடயங்களுக்குரிய திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுக்குரிய கொள்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வழங்கல், பின் தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு, சட்டம் மற்றும் சமாதானம் என்பவற்றைப் பேணிச் செல்வதற்காக சமூக விழுமியங்களை உறுதிப்படுத்துகின்ற விரிவான மீளமைப்புக்களை உள்ளடக்கிய உபாய வழிகளின் அபிவிருத்தி.
    - மோட்டார் வாகன போக்குவரத்துக் கட்டுப்பாடு
    - குற்றங்கள் மற்றும் சமூக விரோத செயற்பாடுகளை குறைத்தல் மற்றும் தடை செய்தல்.
    - புராதன கால காலி கோட்டையினைப் பேணிப் பாதுகாத்தல், பாதுகாத்தல் புனரமைத்தல்.
    - தென் மாகாண அபிவிருத்தி சபையினைத் தாபித்தல்

மேற்கூறப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கமாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனங்களின் விபத்துக்களைத் தடுத்தல்

- சட்டம், சமாதானம் மற்றும் தென் மாகாண அபிவிருத்தி அமைச்சின் பிரதான பணியாக மக்களின் வாழ்க்கை மற்றும் உடைமைகளைப் பாதுகாக்கும் வகையில் மோட்டார் போக்குவரத்தை முறைப்படுத்துவதற்குத் தேவையான படிமுறைகளை எடுப்பதே ஆகும். நாட்டில் பிரயாணத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வாகனங்களின் அளவு விரைவாக அதிகரித்தமை மற்றும் அதற்கு சமமான வகையில் வாகன விபத்தக்களின் அளவும் விரைவாக அதிகரிக்கும் வேகம் 1,000 வாகனங்களுக்கு 06 விபத்துக்களாக 2014 – 2016 காலப்பகுதியில் நிலையாகக் காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் போது அந்த விகிதம் 1,000 இற்கு 05 வரை குறைவடைந்திருந்தது. எனினும், விபத்துக்களினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்த வண்ணம் இருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது விபத்துக்களினால் 2,816 பேர் மரணமடைந்திருந்ததுடன் அது 2017 ஆம் ஆண்டின் இறுதிவரையில் 3,147 பேர் வரை அதிகரித்திருந்தது. 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை ஏற்பட்டிருந்த விபத்துக்களின் எண்ணிக்கை மற்றும்

மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை காண்பிக்கப்படுகின்றது. என்பன கீழே வரைபு 25 இல்



சலாகை வரைபடம 25: வாகன விபத்துக்கள் மற்றும் அந்த விபத்துக்களினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை
மூலம்: மோட்டார் வாகன பொலிஸ் தலைமையகத்தின் தகவல்கள்

மீளாய்வாண்டின் போது உயிரிழப்பு விபத்துக்களின் அளவு மற்றும் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை என்பன அதிகரித்திருந்தன. வருடாந்த உயிரிழப்பு விபத்துக்களின் எண்ணிக்கை 130 ஐ விஞ்சியும் கடுமையான விபத்துக்களின் எண்ணிக்கை 400 ஐ விஞ்சியும் காணப்பட்ட பொலிஸ் பிரிவில் நுகேகொடை, கம்பஹா, குருணாகலை, அனுராதபுரம் மற்றும் இரத்தினபுரி பொலிஸ் பிரிவுகள் இனங்காணப்பட்டிருந்தன. அவ்வாறே சந்தேக நபர்களை இனங்காண முடியாத உயிரிழப்பு விபத்துக்கள் 63 ஐயும் கடுமையான விபத்துக்கள் 183 ஐயும் உள்ளடக்கிய விபத்துக்களின் எண்ணிக்கை 2,105 ஆக அறிக்கையிடப்பட்டிருந்தன.

குற்றங்களைத் தீர்த்தல்

நாட்டின் சட்டம் மற்றும் சமாதானத்தைப் பாதுகாக்கும் செயல்முன்னேற்றத்தைப் பின்பற்றுகின்ற பிரதான குறிகாட்டியாக நாட்டில் குற்ற அறிக்கைகளின் அதிகரித்த அளவு மற்றும் அறிக்கையிடப்பட்ட குற்ற தீர்வுகளில் ஒப்பீட்டுப் பெறுமதியாக இருந்தது. ஏற்பட்டிருந்த குற்ற அளவுகளின் பிரகாரம் 06 வகைக் குற்றங்களுக்குரிய எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் குறைவடைந்திருந்தது. எனினும், மேலும் 04 குற்ற வகைகளுக்குரிய குற்றங்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அதிகரித்திருந்தது. அவ்வாறே கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கையின் சதவீதம் 08 குற்ற வகைகள் தொடர்பாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது உயர் சதவீதமொன்று அறிக்கையிடப்பட்டிருந்தது. 02 குற்ற வகைகளுக்குரிய அந்த சதவீதம் மீளாய்வாண்டின் போது குறைவடைந்திருந்தது. விபரம் அட்டவணை 21 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

	2016			2017		
குற்றங்களின் வகைகள்	அறிக்கையிடப்பட்ட அளவு -	தீர்க்கப்பட்ட எண்ணிக்கை -	தீர்க்கப்பட்ட சதவீதம் -	அறிக்கையிடப்பட்ட அளவு -	தீர்க்கப்பட்ட எண்ணிக்கை	தீர்க்கப்பட்ட சதவீதம் -
கடுமையான குற்றம்	36,937	26,869	72.74	35,979	28,016	77.86

நபர்களுக்கு எதிரான சிறிய தவறு	45,579	30,481	66.88	52,224	29,303	69.40
ஆதனங்களுக்கு எதிரான சிறுதவறு	33,349	15,969	47.88	32,881	16,664	50.68
சிறு முறைப்பாடுகள்	1,039,350	1,038,942	99.96	1,029,087	1,029,047	99.99
சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள்	5,709	3,294	57.70	5,054	3,711	73.43
பெண்களுக்கு எதிரான குற்றங்கள்	9,042	4,986	55.14	8,444	6,100	72.24
மதுபானம் தொடர்பான குற்றங்கள்	120,105	111,028	92.44	120,198	113,037	94.04
தூக்கத்தை உருவாக்கும் பொருட்கள் தொடர்பான தவறுகள்	88,352	86,330	97.71	107,944	104,641	96.94
மோசடித் தவறுகள்	1,255	1,217	96.97	1,055	1,025	97.16
நியதிச்சட்ட தவறுகள்	46,171	44,177	95.68	49,013	46,857	95.60

அட்டவணை 21: அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை மற்றும் அதற்கான தீர்வினை வழங்குதல்

மூலம்: வருடாந்த செயலாற்றல் அறிக்கை - 2017 அரசாங்க நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் சட்டமும் சமாதனமும் தொடர்பான அமைச்சு

போதைப் பொருள் கட்டுப்பாடு

அபாயகரமான மருந்துகளைப் பயன்படுத்தல் மற்றும் ஒன்றுசேர்தலைத் தடுத்தலும் அமைச்சின் பிரதான பணியாகும். பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் ஆண்டறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் அளவு பின்வரும் அட்டவணை 22 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

நிறுவனம்	Heroin ஹெரோயின்		Cannbis கெனபீஸ்		Hashish ஹஸிஸ்		Cocaine கொக்கேய்ன்	
	கிலோகிராம்		கிலோகிராம்		கிலோகிராம்		கிலோகிராம்	
	2016	2017	2016	2017	2016	2017	2016	2017
பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகம்	147.7	23.6	108.3	206.6	4.7	1.1	1486.1	2.1
பொலிஸ் நிலையங்கள்	48.7	236.8	3531.8	3876.9	35.6	3.0	1.6	218.6
விஷேட செயற் படையணி	0.3	0.3	409.9	512.9	0.0	-	0.1	-
ஏனைய நிறுவனங்கள்	10.2	54.2	124.5	390.6	0.0	34.0	82.8	0.0
மொத்தம்	207.0	315.0	4174.5	4987.1	40.3	38.2	1570.8	220.7

அட்டவணை 22: கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் அளவு
மூலம்: பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் ஆண்டறிக்கை

முற்பொருத்து கட்டிட நிர்மாணம் தாமதமடைந்தமை

2017 ஆம் ஆண்டின் போது 103 முற்பொருத்து கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 625 மில்லியன் நிதிஏற்பாடு வருடாந்த பாதீடு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்தது. அக்கட்டிட நிர்மாணம் இலங்கை பொலிஸ் மற்றும் விஷேட செயற்படையணியினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இலங்கை பொலிஸிற்கு ரூபா 450 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 87.28 மில்லியன் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. 08 கட்டிடங்களின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் மேலும், 02 கட்டிடங்களின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. விஷேட செயற்படையணிக்கு ரூபா 175 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் 06 முகாம்களின் கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

600 பொலிஸ் நிலையங்களை நிர்மாணிக்கும் இலக்கு அடையப்படாமை

பொலிஸ் நிலையங்கள் மற்றும் 50 பொலிஸ் காவலரண்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 500 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 446.88 மில்லியன் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டதன் பின்னர் ரூபா 53.12 மில்லியன் நிதிஏற்பாட்டுத் தொகையில் ரூபா 8.05 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது 17 பொலிஸ் நிலையங்கள் தாபிக்கப்பட்டிருந்ததுடன் மொத்த பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை 489 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. எனினும், எதிர்பார்த்த இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை.

பொலிஸ் பயிற்சி நிறுவகத்தை அபிவிருத்தி செய்தல்

பொலிஸ் பயிற்சி நிறுவகத்தின் அபிவிருத்தி வேலைகளை முழுமையாக பூர்த்தி செய்வதற்காக ரூபா 587.31 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த நிதிஏற்பாட்டில் ரூபா 563.00 மில்லியன் தொகை ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டதன் பின்னர் ரூபா 24.31 மில்லியன் தொகையான தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 11.18 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. கட்டான பயிற்சி நிறுவகத்தின் நிர்வாகக் கட்டிடம், விடுதி, உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் விளையாட்டு மைதானத்தை உள்ளடக்கிய கட்டிடங்களின் நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதில் 09 நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

பொலிஸ் பயிற்சி பாடசாலைக் கட்டிட நிர்மாணம்

நிர்மாண நடவடிக்கைகளை பூரணமாகப் பூர்த்தி செய்வதற்காக ரூபா 199.69 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 100 மில்லியன் தொகை ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் சேமிக்கப்பட்ட ரூபா 99.69 மில்லியனில் ரூபா 95.96 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. விடுதி, கேட்போர் கூடம் மற்றும் வீதிகளை உள்ளடக்கிய 06 செயற்திட்டங்களிலிருந்து பணியாளர் அலுவலகத் கட்டிடத் தொகுதியை விரிவுபடுத்துதல் மற்றும் பொலிஸ் பரிசோதகர் தரத்தின் விடுதிகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

பொலிஸ் தகவல்கள் மற்றும் தொலைத்தொடர்பு வலயமைப்பு

மீளாய்வாண்டின் போது வலையமைப்பு தொலைத்தொடர்பு பணிகளில் 50 சதவீதமான அளவைப் பூர்த்தி செய்வதற்காக ரூபா 150 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 92.50 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அத்தொகை பொலிஸ்மா அதிபர் (மீண்டெழும்) கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையால் அந்த தொலைத்தொடர்பு வலயமைப்பு பணிகளை நிறைவேற்றுதலில் செயல்முன்னேற்றம் ஒன்றை அடைய முடியாதிருந்தது.

விஷேட செயற்படையணிகளுக்காக கட்டிடத்தை நிர்மாணித்தல்

2017 ஆம் ஆண்டின் போது விஷேட செயற்படையணிக்காக 60 கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கு ரூபா 325 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 17.36 மில்லியன் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டதன் பின்னர் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 115.77 மில்லியன் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் 43 கட்டிடங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 17 கட்டிடங்களின் நிர்மாண வேலைகள் நடந்து கொண்டிருந்தன.

நவீன உபகரணங்களின் பாதுகாப்பு இயலளவை அதிகரித்தல்

மிகவும் பொருத்தமான சட்டத்தை அமுல்படுத்துவதற்காக பொலிஸ் திணைக்களம் நவீன உபகரணங்களில் இருந்து பாதுகாப்பு இயலளவை அதிகரிப்பதற்காக 2017 இன் வருடாந்த பாதீட்டின் முன்மொழிவின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 5 பில்லியன் தொகையான மேலதிகமான நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

போதைப்பொருள் பயன்படுத்துபவர்களுக்குப் புனர்வாழ்வளித்தல்

போதைப்பொருள் பயன்படுத்துவபவர்களுக்கு புனர்வாழ்வழிப்பதற்காக அபாயகர ஔடத கட்டுப்பாட்டு தேசிய சபையினால் முகாம்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதில் 03 முகாம்களுக்காக வைத்திய சபையிலிருந்து முழுமையான பதிவு அல்லது தற்காலிக பதிவு பெறப்படாதிருந்த வைத்தியர்களின் வைத்திய சேவைகள் பெறப்பட்டிருந்தது. விளையாட்டின் போது பயன்படுத்தப்படுகின்ற செயற்படுநிலையை அதிகரிக்கும் மருந்துகளில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்களில் மேற்கொள்ளப்பட்ட உயிரியல் ரீதியான மாதிரிப் பகுப்பாய்வு நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக விஞ்ஞான ரீதியான சேவைகளை வழங்குதல் மற்றும் இலங்கை சுங்கத்திற்காக தொழில்நுட்ப உதவியினை வழங்குதல் போன்ற பணிகள் 2017 ஆம் ஆண்டின் போது இடம்பெற்றிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட பணிகளில் 2016 ஆம் ஆண்டின் போது ஒன்று மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. வீரீ ஹெரோயின்களின் புதிய போதை துணுக்குகள் உள்ளடக்கி இருந்தமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு 50 சதவீதத்திற்கு குறைவான மட்டத்தில் காணப்பட்டதுடன் போதைப்பொருள் மற்றும் குற்றங்களைத் தடுக்கும் அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஈ கல்வி நிகழ்ச்சித்திட்டம் மாதகம் மற்றும் போதைதரும் பொருட்களை இனங்காண்பதற்கான சட்டங்களை அமுல்படுத்துகின்ற நிறுவனங்களின் களப் பரிசோதனை தொகுதியை அமைத்தல் 10 சதவீதமான மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. முன்னைய ஆண்டின் போது 30 சதவீத செயல்முன்னேற்றத்தை காட்டியது.

துறைமுகம் மற்றும் கப்பற்துறை அலுவல்கள்

இடையூறின்றி சமுத்திர முறைமுக வசதிகளை ஒழுங்கமைத்தல் இந்த பிரிவின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளாகும். இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்காக துறைமுகம் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சு மற்றும் நியதிச் சட்ட சபைகள் / 03 நிறுவனங்களினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- துறைமுகம் மற்றும் கப்பற்துறை அலுவல்களின் விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வழங்கல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு
- அவற்றைத் தவிர ஏனைய துறைமுகங்களின் எண்ணெய் தாங்கி உபகரணம், வெளிச்சவீடு மற்றும் வெளிச்சவீடுகளின் அபிவிருத்தியும் நிர்வாகச் செயற்பாடுகளும்
- கப்பற்துறை சேவை வழங்குனர்களுக்கும் பயன்படுத்துவோர்களுக்கும் இடையேயான பிரச்சினைகளைத் தீர்த்தல்
- கப்பற்துறை சேவைகளுக்காக போட்டி விதிக்கோவைகள் விதித்தல்
- கப்பற்துறை வழங்குனர்களுக்கும் பயன்படுத்துவோர்களுக்குமிடையில் மதியுரை ரீதியான தொடர்புபடுத்தலை உறுதிப்படுத்துதல் மற்றும் உதவுதல்.
- பூத் படகு மற்றும் சமுத்திர நாடோடிப்படகு மீதிகளை கையேற்றல்.
- கப்பற்துறை நடவடிக்கைகளின் அபிவிருத்தி நிதியத்தை நிர்வகித்தல்.
- கப்பல் கட்டணமும், கப்பற்துறை சேவை நடவடிக்கைகளும் கடற்கரையோர பிரயாணிகள் போக்குவரத்து.
- நிறுவனத்தை மேற்பார்வை செய்தல்

மேற்கூறப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கமாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகம் - II ஆம் கட்டத்திற்காக காணி கைப்பற்றல் மற்றும் இழப்பீடு செலுத்துதல்

இந்த செயற்திட்டத்திற்காக காணிகளைக் கையேற்றல் மற்றும் அதற்காக இழப்பீடு செலுத்துவதற்கு 2016 ஆம் ஆண்டின் போதும் 2017 ஆம் ஆண்டின் போதும் முறையே ரூபா 1,000 மில்லியன் வீதம் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த நிதிஏற்பாடுகளில் காணி கைப்பற்றுவதற்காக முறையே ரூபா 892.5 மில்லியன் மற்றும் ரூபா 164.2 மில்லியன் என கூட்டுமொத்தமாக ரூபா 1,056.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், கையேற்கப்பட்ட காணிகளின் சட்டரீதியான உரித்தை கையேற்றல் மற்றம் ஆரம்பக் குடியிருப்பாளருக்கு வழங்கப்பட்ட மாற்றுக் காணிகளுக்காக முறையான உரித்துறுதிச் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கைகள் 2018 மே 08

ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

யாழ்ப்பாண தீபகற்பம் மற்றும் அண்மையிலுள்ள தீவுகளில் இறங்குதுறை வசதிகளை அபிவிருத்தி செய்தல்

யாழ்ப்பாண தீபகற்பம் மற்றும் அதனை அண்மித்த தீவுகளுக்கிடையே பாதுகாப்பான முறையில் பிரயாணிகள் மற்றும் பொருள் போக்குவரத்தைச் செய்வதற்காக இறங்குதுறை வசதிகளை அபிவிருத்தி செய்யும் பணிகளுக்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 50 மில்லியன் மற்றும் ரூபா 35 மில்லியன் கூட்டுமொத்தமாக ரூபா 85 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த நிதிஏற்பாடுகளில் முறையே ரூபா 14.5 மில்லியன் மற்றும் ரூபா 20.5 மில்லியன் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 35 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் மூலம் 02 அபிவிருத்தி செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

கப்பற்துறை செயலகத்தில் யாழ்ப்பாண மாவட்ட உப அலுவலகத்தையும் உத்தியோகபூர்வ இல்லத்தையும் நிர்மாணித்தல்

துறைமுகம் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த மீளாய்வாண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இந்த நிர்மாண பணிகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்த நிர்மாண நடவடிக்கைகளில் இருந்து 7 சதவீத பௌதீக செயல்முன்னேற்றம் மாத்திரம் பெறப்பட்டிருந்தன. எனினும், ஒப்பந்தகாரருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகள் 2018 ஆகஸ்ட் 08ஆந் திகதி பூர்த்தி செய்யப்படவேண்டியிருந்தது. அத்திகதி வரையில் அதன் ஒட்டுமொத்த பௌதீக செயல்முன்னேற்றம் 45 சதவீத அளவில் காணப்பட்டது.

வழுக்கும்பாதை (Slipway) நிர்மாணம்

யாழ்ப்பாண தீபகற்பத்திற்கும் தீவுகளுக்கும் இடையே பிரயாணிகள் மற்றும் பொருள் போக்குவரத்தில் படகுகளைப் பதிவு செய்தல், ஒழுங்கமைத்தல் மற்றும் பழுதுபார்த்தலுக்கான வசதிகளை வழங்குவதன் மூலம் கரையோரத்தை அண்மித்த மக்கள் போக்குவரத்து சேவையை முறைமைப்படுத்தும் நோக்கத்துடன் கைட்ஸ் பிரதேச செயலகப் பிரிவில் வழுக்கும்பாதை (Slipway) நிர்மாணிப்பதற்காக 2016 ஆகஸ்ட் 29 ஆந் திகதி கடற்படையுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்டிக்கையின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் செயல்முன்னேற்ற மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் அத்திகதி வரையில் காணப்பட்ட ஒட்டுமொத்த நிர்மாணங்களின் பௌதீக செயல்முன்னேற்றம் 65 சதவீத மட்டத்தில் காணப்பட்டது.

பிரயாணப் பொதிகளை விடுவிப்புச் செய்வதற்கான களஞ்சியத்தைப் பேணிச் செல்லல்

பொறுப்பாளரின்றி வருகை தருகின்ற தனிப்பட்ட பிரயாணப் பொதிகளை

விடுவிப்புச் செய்வதற்கான களஞ்சியத்தை (Unacompained Personal Baggage Clearance warehouse) நடாத்திச் சென்றதால் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 29.64 மில்லியன் வருமானமொன்றை உழைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், உரிய செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 31 அந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

செயற்திட்டங்கள் அமுல்படுத்தல்

வரையறுக்கப்பட்ட கப்பல் கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்துவதற்காக திட்டமிடப்பட்ட கீழே குறிப்பிடப்படுகின்ற செயற்திட்டங்கள் அமுலாக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

- டக் படகு கையானல் சேவைகளை வழங்குவதற்காக 2017 ஆம் ஆண்டின் போது 53 மில்லியன் வருமானமொன்றை உழைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- மூன்றாம் தரப்பினருடன் சேர்ந்து சுயமாக அமுல்படுத்தப்படுகின்ற இரண்டு வள்ளங்கள் (Self Propelled Barges) கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், உரிய நிறுவனத்துடன் இணக்கப்பாட்டிற்கு வராமையினால் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- மூன்றாம் தரப்பினருடன் சேர்ந்து கப்பல்களுக்காக எரிபொருள் வழங்கும் மிதக்கும் களஞ்சிய வசதிகளை (Floating Bunker Storage) நடாத்திச் செல்வதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதிலுள்ள தாமதத்தினால் அந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- தென்னிந்திய வலயத்தில் பிரயாணிகள் போக்குவரத்து மிதவை / கப்பல் சேவை நடவடிக்கைகள் (Passenger Ferry / Cruise Operations) நடாத்திச் செல்வதற்கான வசதிகள் வரையறுக்கப்பட்டமை மற்றும் சுற்றுலா கவர்ச்சிகரமற்ற பிரயாண முடிவு காணப்பட்டடையின் காரணமாக அந்த செயல்திட்டத்தை அமுல்படுத்த முடியாதிருந்தது.

- கடற்கரையை அண்மித்த கப்பற்துறை சேவைகளை நடாத்திச் செல்வதற்கான சாத்தியவள ஆய்வு, தேவையான தரவுகள் இல்லாமையின் காரணமாக பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

சர்வதேச சமுத்திர அமைப்பின் (IMO) கொள்கை விஞ்ஞாபனங்களுக்கு இணங்கும் வகையில் கரையோர பிரமாணங்கள் மற்றும் உள்நாட்டு கட்டளைச் சட்டங்களைத் திருத்துதல்.

சர்வதேச சமுத்திர அமைப்பின் (ஐஆழு) சர்வதேச கொள்கை விஞ்ஞாபனங்களை பூர்த்தி செய்வதற்குத் தேவையான பிரகாரம் உள்நாட்டு சட்டங்களை திருத்துவதற்கு 2015 ஏப்ரல் 29 ஆந் திகதி அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 யூன் 30 ஆந் திகதி வரையில் கரையோரம் தொடர்பான பிரமாணங்கள் மற்றும் உள்நாட்டு கட்டளைச் சட்டம் சர்வதேச கொள்கை விஞ்ஞாபனங்களுக்கு இணங்கும் வகையில் திருத்தப்பட்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக கரையோர கடற்படை செயலகத்தினால் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய அதிகாரச்சட்டத்தின் வரைவு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கையிலுள்ள சகல துறைமுகங்களுக்கும் கப்பல் வருகை மற்றும் கப்பல் பொருள் கையாளல்

கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை போன்ற பிரதான துறைமுகங்களுக்கு கப்பல் வருகை மற்றும் துறைமுகத்தின் மூலம் கடந்த 05 வருடங்களில் கையாளப்பட்ட கொள்கலன் அலகுகள் மற்றம் பராம்பரிய கப்பல் சரக்குகளின் அளவு தொடர்பான விபரம் அட்டவணை 23 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

விபரம் ----------	2013 ------	2014 ------	2015 ------	2016 ------	2017 ------
வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை	4,024	4,298	4,760	5,023	4,942
கையாளப்பட்ட இருபது அலகு கொள்கலன்களின் (TEUS) அலகுகளின் எண்ணிக்கை (அலகு 000)	4,306	4,908	5,185	5,735	6,209
கையாளப்பட்ட பாரம்பரிய கப்பல் சரக்குகளின் அளவு (மெ.தொன்.000)	5,664	6,339	7,156	7,811	7,735

அட்டவணை 23: பிரதான துறைமுகங்ளில் கையாளப்பட்ட கொல்கலன்களின் எண்ணிக்கை மற்றும் பாரம்பரிய கப்பல் சரக்குகளின் அளவு

மூலம்: இலங்கை துறைமுக அதிகார சபையின் செயலாற்றல் மீளாய்வு அறிக்கை

2017 ஆம் ஆண்டின் போது இலங்கைக்கு வருகை தந்த மொத்தக் கப்பல்கயின் எண்ணிக்கை 4,942 ஆக இருந்ததுடன், அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 1.6 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. கப்பல் கம்பனிகளின் முன்னுரிமைத் தன்மையினால் ஆழத்தில் கூடிய பாரியளவான கப்பல் மூலம் கொள்கலன்களைக் கொண்டு வருதல் அதற்கான காரணமாக இருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது கையாளப்பட்ட சமமான கொள்கலன் அலகுகளின் எண்ணிக்கை 6,209,068 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அது 8.27 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அவ்வாறே பாரம்பரிய கப்பல் சரக்கு கையாளல்கள் 2017 ஆம் ஆண்டின் போது மெ.தொ (ஆயிரம்) 7,735 ஆக இருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டின் கையாளல்களுடன் ஒப்பிடும் போது 0.97 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

கொள்கலன் கையாளல் நடவடிக்கைகளில் கொழும்பு துறைமுகத்தின் சர்வதேச இடம் மற்றும் துறைமுக அதிகாரசபையின் சந்தைப்பங்கு

2017 ஆம் ஆண்டிற்காக உலக துறைமுகம் தொடர்பாக அல்பாலைன் அமைப்பினால் விநியோகிக்கப்பட்ட அல்பாலைனர் அறிக்கையின் (Alpha liner Report) பிரகாரம் கொழுப்பு துறைமுகம் இருபதுக்குச் சமமான அலகுகள் (twenty EquiValent Unit) 6,209,068 இனைக் கையாண்டு உலகத்தில் 23 ஆவது இடத்தைப் பெற்றிற்ததுடன் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அந்த நடவடிக்கைகளில் 8.27 சதவீத

முன்னேற்றத்தை அடையக்கூடியதாக இருந்தது.

மீளாய்வாண்டின் இறுதிவரையில் கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன் கையாளல்களை உள்ளடக்கிய செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற 04 இறங்குதுறைகள் காணப்பட்டதுடன் அதில் ஜயகொள்கலன் இறங்குதுறை மற்றும் சமகி கொள்கலன் இறங்குதுறை என்பன முழுமையாக துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமானதாகும். ஏனைய இரண்டு இறங்குதுறைகளும் கொழும்பு சர்வதேச கொள்கலன் இறங்குதுறை (C.I.C.T) மற்றும் தெற்காசிய நுழைவு இறங்குதுறை (S.A.G.T) என்பன தனியார் நிறுவனங்கள் இரண்டிற்கு 85 சதவீத உரித்தின் அடிப்படையில் 35 வருடங்களுக்கு நிர்மாணிப்பதற்கு, கையாள்வதற்கு மற்றும் கையளிப்பதற்கு (Built, Operation & Transfer) என்ற அடிப்படையின் கீழ் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

ஒட்டுமொத்தமாக எடுப்போமாயின் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன் கையாளல் 8 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொள்கலன் கையாளல் செயற்பாடுகள் 4 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. இதற்காக கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் பிரதான காரணங்களாக இருந்தன.

- அதிகாரசபைக்குரிய தற்போது கையாளல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற இறங்குதுறைகளின் ஆகக்கூடிய ஆழம் 14.2 மீற்றராக இருந்ததுடன், தற்போது பயன்படுத்தப்படுகின்ற பாரியளவிலான கப்பல்களின் நங்கூரம் இடுவதற்காக ஆழம் போதியளவாக இல்லாமை மற்றும் போதியளவான ஆழத்துடன் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டுள்ள (18 மீற்றர் ஆழத்துடன்) கிழக்கு இறங்கு துறையை செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்காமை.
- இறங்கு துறைகளில் காணப்படுகின்ற பாரந்தூக்கிகளின் (Granty Crance) பயன்தரு ஆயுட் காலம் முடிவடைந்திருந்தமை மற்றும் அவைகள் காலவதியான உபரணங்களாக இருந்தமை.
- களஞ்சிய கட்டணம் விடுவிப்பு கால எல்லை போட்டியாளரால் திருத்தம் செய்யப்படாமை.
- நான்கு தனியார் கம்பனிகளுக்குரிய கப்பல்களை மீளாய்வாண்டின் போது சமமான ஆழமுள்ள தெற்காசிய துறைமுகத்திற்கு (SAGT) எடுத்துச் செல்லப்பட்டமை.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் இறங்குதுறை கையாளல் நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்தமை

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் 2001 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டின் இறுதிவரையான பதினெழு வருட காலத்தில் கொள்கலன் கையாளலின் இயலளவு மொத்த கொள்கலன் கையாளல் சதவீதமாக கவனத்தில் கொள்ளும் போது 81 சதவீதம் முதல் 32 சதவீதம் வரை விரைவாக வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும் கொழும்புத் துறைமுகத்தில் போட்டி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற இரண்டு தனியார் கம்பனிகளின் 2013 ஆம் ஆண்டின் போது செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட கம்பனி 01 சதவீதம் முதல் 39 சதவீதம் வரை விரைவாக அதிகரிப்பைப் பெற்றிருந்ததுடன் ஏனைய கம்பனிகள் 2001 ஆம் ஆண்டின் போது 19 சதவீதமான தனது சந்தைப்பங்கை 2017 ஆண்டு வரையில் 29 சதவீதம் வரை அதிகரித்துக் கொண்டிருந்தது. கடந்த பதினேழு வருடங்களின் கொள்கலன் கையாளல் தொடர்பான விபரம் வரைபடம் 29 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



அட்டவணை 29: இலங்கை துறைமுக அதிகாரசபையின் இறங்கதுறை கையாளல் நடவடிக்கைகள்

மூலம்: இலங்கை துறைமுக அதிகாரசபையின் செயலாற்றல் மீளாய்வு அறிக்கை – 2017

வரைபடம் 26 இல் குறிப்பிடப்பட்ட தரவுகளின் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொள்கலன் கையாளலுக்காக உரித்தாக இருந்த சந்தைப் பங்கு படிப்படியாக தனியார் துறைக்கு நழுவிச் செல்லும் நிலை காணப்பட்டது. அதிகாரசபையின் கொள்கலன் கையாளல் நடவடிக்கைகள் தொடர்பாக இறங்குதுறை பயன்படுத்தும் விகிதத்தை (Terminal Occupancy Ratio) ஆராய்ந்து பார்த்த போது 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையெ 68 சதவீதம், 63 சதவீதம் மற்றும் 60 சதவீதம் ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் அதிகாரசபையின் இறங்குதுறையின் பயன்பாட்டு விகிதம் படிப்படியாகக் குறைந்து செல்லும் போக்கு காணப்பட்டது.

கிழக்கு கொள்கலன் இறங்குதுறையின் கையாளல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமை

கொழும்பு துறைமுகத்தை விரிவுபடுத்தும் செயற்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் 600 மீற்றர் நீளமும் (Quay Length) ஆழம் 18 மீற்றர் ஆழமும் (water Depth) உடைய இயலளவு அண்ணளவாக இருபது. அலகு 800,000 ஆன கிழக்கு கொல்கலன் இறங்குதுறையில் ஒரு பகுதியை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ரூபா 11,168.47 மில்லியன் செலவில் 2016 யூன் 24 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும், கப்பல் சரக்கு கையாளல்களுக்குத் தேவையான பாரந்தூக்கிகளை உள்ளடக்கிய உபகரணங்களை வழங்கி அதன் கையாளல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

வரிக்கு முன் இலாபம் மற்றும் நட்டநிலை

இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான பிரதான துறைமுகங்கள் மூலம் கடந்த 05 வருட காலத்தில் 2015 ஆம் ஆண்டு தவிர ஏனைய 4 வருடங்களிலும் வரிக்கு முந்திய இலாபம் பெறப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிற்கிடையே மீளாய்வாண்டின் போது உழைக்கப்பட்ட வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 13,222 மில்லியனாகக் காணப்பட்டது. உழைக்கப்பட்ட வரிக்கு முந்திய இலாபம் / (நட்டம்) தொடர்பான

விபரம் அட்டவணை --- இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



அட்டவணை 27: தேறிய செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)
மூலம்: இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள்

அம்பாந்தோட்டை துறைமுகத்தை வாடகை அடிப்படையில் வழங்குதல்

2009 ஆம் ஆண்டின் போது அம்பாந்தோட்டை துறைமுகத்தின் முதலாம் கட்ட நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் II ஆம் கட்டம் நிர்மாணித்துக் கொண்டிருந்ததுடன் துறைமுகத்தின் கையாளல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2018 யூலை 31 ஆந் திகதி வரையில் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் I மற்றும் II ஆம் கட்டங்களை நிர்மாணிப்பதற்காக வெளிநாட்டுக் கடன், உள்நாட்டுக் கடன் துறைமுக அதிகாரசபையின் நேரடி பங்களிப்பு மற்றும் சுழற்சிக் கிரயம் என்பவற்றை உள்ளடக்கிய மொத்த செலவினம் ஐ.அ.டொலர் 1,541 மில்லியன் ஆகக் காணப்பட்டது. இச் செலவினம் அட்டவணை 24 இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் செலவிடப்பட்டிருந்தது.

	ஐ.அ.டொலர் மில்லின்
உள்நாட்டுக்கடன், வெளிநாட்டுக்கடன் மற்றும் துறைமுக அதிகாரசபையின் நேரடி பங்களிப்பு	1,302
உபகரணங்களுக்காக மேலும் செலுத்துவதற்கு உள்ள தொகை	60
காணி கையேற்றல், உள்நாட்டு வரி செலுத்துதல், செயற்திட்ட முகாமைப் பிரிவு செலவினத்தை உள்ளடக்கிய ஏனைய செலவினம்	179
மொத்தம்	1,541

அட்டவணை 24: அம்பாந்தோட்டை துறைமுகத்திற்காக செலவிடப்பட்ட தொகை
மூலம்: செயற்திட்ட அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை

2009 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலத்தில் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் கையாளல் நடவடிக்கைகள் மாகம்புற துறைமுக முகாமைத்துவக் கம்பனியால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதிகார சபையின் நிதி அறிக்கைகளின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்தக் கம்பனியின் செயற்பாட்டு நட்டம் ரூபா 21,904 மில்லியனாக இருந்தது. 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அம்பாந்தோட்டை

துறைமுகத்திற்குரிய சொத்துக்கள் 2017 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட இரண்டு தனியார் கம்பனிகளில் 99 வருட காலத்திற்கு முதலீடு செய்யப்பட்டிருந்தது. அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கம்பனிகளில் முதலீடு பின்வருமாறு இருந்தது.



மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் கீழ் வரையறுக்கப்பட்ட சைனா மேர்ச்சன்ட்ஸ் போர்ட் ஹோல்டிங்ஸ் கம்பனியில் தமது பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக ஐ.அ.டொலர் 973,658 மில்லியன் துறைமுக அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் அதிகார சபை அந்தப் பணத்தை திறைசேரிக்கு வழங்கியிருந்தது. இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

- ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டாளரின் மூலம் துறைமுக ஆதனங்களை மதிப்பீடு செய்து அதன் பெறுமதியின் அடிப்படையில் முதலீட்டுப் பெறுமதி தீர்மானிக்கப்படாதிருந்ததுடன் ஐ.அ.டொலர் 1,400 மில்லியன் தொகையானது இரண்டு கம்பனிகளில் மூலதன முதலீட்டுப் பெறுமதி கணிப்பிடுதல் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.
- கையளிக்கப்பட்ட 1103 ஹேக்டேயர் காணிக்காக 99 வருட காலத்தில் அறவிட வேண்டிய வாடகைப் பெறுமதி முதலீட்டுப் பெறுமதி தீர்மானிக்கும் போது கவனத்தில் கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அதிகாரசபையின் கணக்குகளில் உள்ளடங்கியுள்ள ரூபா 169,586 மில்லியன் தேறிய பெறுமதி உடைய அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பாக 1103 ஹேக்டேயார் காணியை உள்ளடங்கிய பயனற்ற ஆதகங்கள் மற்றும் ரூபா 21,815 மில்லியன்

தொகையான அசையாச் சொத்துக்கள் ஸ்தாபிக்கப்பட்ட இரண்டு கம்பனிகளுக்கும் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த சொத்துக்கள் அதிகாரசபையின் முதலீட்டு சொத்தாக (Investment Property) அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

- துறைமுகத்தின் சொத்துக்கள் 2017 திசெம்பர் 09 ஆந் திகதி முதல் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் சொத்துக்கள் புதிய கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதுவரையும் துறைமுகத்தின் முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொண்ட மாகம்புர துறைமுக முகாமைத்துவ கம்பனியின் ஊழியர்களில் அதிகமானோருக்கு இழப்பீடு செலுத்தி சேவைகளிலிருந்து நீக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கம்பனி நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு திட்டமொன்றைத் தயாரிக்காதிருந்ததுடன் சில உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

- மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகத்திற்குரிய சொத்துக்கள் மேற்கூறப்பட்ட பிரகாரம் இரண்டு கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்தக் கம்பனிகளின் பங்குகளையும் பெற்றுக்கொள்வதற்காக வரையறுக்கப்பட்ட சைனா மேர்சன்ட்ஸ் போட் ஹோல்டிங்ஸ் கம்பனியால் (China Merchant Port Holding Company (Private) Limited) அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 973.66 மில்லியன் தொகை 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பொதுத் திறைசேரக்கு 03 தவணைகளில் வழங்கப்பட்டிருந்தன. எனினும் அதிகாரசபையினால் அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக பெறப்பட்ட கடனில் 2017 நவம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு சேமிக்கப்பட்டிருந்த ரூபா 147,746 மில்லியன் கடன் மீதி பொதுத் திறைசேரிக்கு கையளித்தல் தொடர்பாக இலங்கை துறைமுக அதிகாரசபைக்கும், பொதுத் திறைசேரிக்கும் இடையே இணக்கப்பாட்டிற்கு உடன்பட்டிருக்கவில்லை. மேலும் கடன் செலுத்தும் பொறுப்பு 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய அமைச்சரவைக் தீர்மானத்தின் பிரகாரம் பொதுத்திறைசேரிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், பொதுத்திறைசேரியின் இணக்கப்பாடோ அல்லது அமைச்சரவைத் தீர்மானமோ இன்றி அதிகாரசபையினால் மேற்கூறப்பட்ட கடன் மீதி நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றப்பட்டிருந்தது.

- மேற்கூறப்பட்ட பிரகாரம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக பெறப்பட்ட கடன் மீதி ஏனைய நிறுவனங்களுக்கு கையளிக்கப்படாமல் அதிகாரசபையின் கணக்குகளிலிருந்து தீர்க்கப்பட்டமையின் காரணமாக அரசாங்கத்தின் எந்தக் கணக்கிலும் அந்தக் கடன் பணம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவை அகற்றப்பட்டு வெளிநாட்டுக் கடன் உள்நாட்டு நிதிக்கு மற்றும் போது 2016 திசெம்பர் 31 வரை இனங்காணப்பட்ட ரூபா 27,458.93 மில்லியன் தொகையான அந்நிய செலவாணி நாணயமாற்று நட்டம் 2017 ஆம் ஆண்டின் போது நிறுத்திவைக்கப்பட்ட உழைப்பின் (Retained Earnings) மீதிக்கு சீராக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட நிறுத்திவைக்கப்பட்ட உழைப்பு மீதி மேற்கூறப்பட்ட பெறுமதியால் மிகைக் கணிப்பீட்டிற்குட்பட்டிருந்தது.

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பணிகள் நிறைவேற்றப்படாமை

அதி உயர் பாதுகாப்பு வலயமாக பெயரிடப்பட்டுள்ள துறைமுக சூழலில் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் சகல வாயிற் கதவுகளுக்கும் ஒன்றிணைந்த களஞ்சியங்களுக்காகவும் ரூபா 60 மில்லியன் செலவில் CCTV கெமரா முறைமையொன்று பொருத்துதுல், தகவல் தொழில்நுட்ப பிரிவிற்காக ரூபா 400 மில்லியன் செலவில் கொள்கலன் இறங்குதுறை முகாமைத்துவ முறைமையொன்றை அமுல்படுத்துதல், ரூபா 50 மில்லியன் செலவில் நுழைவு வாயிற்கதவு சுயமாக செயற்படும் முறைமையை தயாரித்தல் (RFID), மின்சாரம் மற்றும் பொறியியல் பிரிவினால் ரூபா 20 மில்லியன் செலவில் சகல பிரிவுகளுக்காகவும் ஒலி தொலைத்தொடர்பு முறைமையொன்றை தயாரிப்பதற்கும் மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும், உரிய பணிகள் எதுவும் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் தேவைகள் நிறைவேற்றப்படாமை

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 10(5) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க கூட்டுத்தாபனம் ஏதாவது ஒரு வருடத்தில் மிகையொன்று காணப்படுமாயின் அதிகாரச்சட்டத்தில் காணப்பட்டுள்ள கழித்தல்களின் பின்னரான சேமிப்பு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எனினும் அதிகாரசபை 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 1,035.73 மில்லியன் மற்றும் ரூபா 13,324.14 மில்லியன் தேறிய இலாபத்தைப் பெற்றிருந்த போதிலும், அந்த இலாபத்திலிருந்து எதுவும் திரண்ட நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மேற்கூறப்பட்ட இலாபத்தில் கொழும்பு துறைமுக 2 இறங்கு துறைகளின் கையாளல் நடவடிக்கைகளில் நிரந்தரமாக ஈடுபடுகின்ற 2 தனியார் கம்பனிகள் அதிகாரசபையினால் அறவிடப்படுகின்ற வருடாந்த வாடகை மற்றும் அரச இறைகளையும் உள்ளடக்கியிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டிற்காக அந்த வருமானங்கள் முறையே ரூபா 1,993.47 மில்லியன் மற்றும் ரூபா 2,489.28 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

சுங்க தண்டங்களை இலகுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை

2011 ஆம் ஆண்டின் போது இலங்கை சுங்கத்திற்கு அறிவிக்காமல் இறக்குமதி செய்யப்பட்ட 27 பாரந்தூக்கிகள் தொடர்பாக சுங்கத்தினால் ரூபா 1,580 மில்லியன் தொகையான சுங்கத் தண்டம் ஒன்று விதிக்கப்பட்டிருந்தது. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 165 ஆம் பிரிவின் பிரகாரம் சுங்க புலனாய்வு தீர்வு கிடைத்து ஒரு மாதத்திற்குள் நிதி அமைச்சருக்கு முறைப்பாடுகள் சமர்ப்பிக்க முடியுமாக இருந்த போதிலும், மேற்கூறப்பட்ட தண்டணையை இலகுபடுத்துவதற்காக அதிகாரசபையினால் நிதி அமைச்சருக்கு அவ்வாறான முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இது தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணையில் காணப்பட்டது.

சூரியவெவ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கு நிர்மாணம்

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்காக சூரியவெவ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கின் வடிவமைப்பு மற்றும் நிர்மாண நடவடிக்கைகள் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த நிர்மாணங்கள் அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் விலகல் கட்டளையின் (Veriation Order) பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட நிர்மாணத்திற்காக அதிகாரசபையின் புத்தகங்களின் பிரகாரம் துறைமுக

அதிகாரசபையினால் ஒப்பந்தகாரருக்கு ரூபா 2,881 மில்லியன் தொகையான வட்டியுடன் கூட்டுமொத்தமாக ரூபா 5,838 மில்லியன் தொகை 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செலுத்த வேண்டியிருந்தது. சர்வதேச மாநாட்டுத் தீர்மானத்தின் அடிப்படையில் ஒப்பந்தத்திற்கான நிர்மாணச் செலவினம் ரூபா 2,957 மில்லியன் தொகை மற்றும் வட்டியாக ரூபா 993.8 மில்லியன் என கூட்டுமொத்தமாக ரூபா 3,950.8 மில்லியன் செலுத்தி கொடுக்கல் வாங்கல்களை பூர்த்தி செய்வதற்கு 2017 திசெம்பர் 29 ஆந் திகதி இருதரப்பினரும் இணக்கப்பாட்டிற்கு வந்திருந்தனர். ரூபா 993.8 மில்லியன் தொகை குறித்த திகதியில் ஒப்பந்தகாரருக்குச் செலுத்தாமையினால் செலுத்துவதற்கு வட்டிச் செலவினம் ஒன்று ஏற்பட்டிருந்தது. இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்காக விளையாட்டரங்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிறுவனத்துடன் முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடாமையின் காரணமாக மேற்கூறப்பட்ட நிர்மாணக் கிரயம் மற்றும் வட்டி என்பவற்றை இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் ஏற்பதற்கு இணங்காமையினால் அந்தப் பணம் பொதுத்திறைசேரியினால் செலுத்துவதற்கு இணங்காணப்பட்டிருந்ததுடன் அந்த நிர்மாணங்கள் மற்றும் வட்டிக் கிரயம் என்பன பொதுத்திறைசேரிக்கு செலவினப் பொறுப்பொன்றாக இருந்தது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைதல்

பொருளாதார, சமூக, சுற்றாடல் போன்ற பல்வேறு துறைகளில் பல்வேறு காலகட்டங்களிலே ஏற்படுகின்ற, ஐக்கிய நாடுகளின் அமைப்பிற்குரிய அங்கத்துவ அரசாங்கங்களினால் 2030 ஆம் ஆண்டு வரையிலும் ஒரே நிலைக்கு கொண்டு வரும் எதிர்பார்ப்பில் 17 நோக்கங்கள் மற்றும் அந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பயணிப்பதற்கு 169 இலக்குகள் ஸ்தாபிக்கப்பட்டு 2017 இன் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டம், 2017 ஒக்தோபர் 03 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு சுற்றறிக்கை மூலம் சகல அரசாங்க நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை துறைமுக அதிகாரசபையினால் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

நெடுஞ்சாலைகள்

உயர் இணைத்தல் முறைமை ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் பிரயாண நேரம் மற்றும் கிரயத்தை இழிவுபடுத்துவதற்காக மற்றும் வீதிப்பாதுகாப்பு மற்றும் வசதிகளை அதிகரிப்பதன் மூலம் வீதிகளை பயன்படுத்துவோரின் வாழ்க்கை நிலையினை கட்டியெழுப்புதல் இந்த துறையில் எதிர்பார்க்கப்பட்ட விளைவாகும். அந்த விளைவினை கைப்பற்றிக்கொள்வதற்காக உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் இரண்டு நியதிச் சட்ட நிறுவனங்களால் பின்வரும் பணிகள் நிறைவேற்ற வேண்டி இருந்தது.

- நெடுஞ்சாலைகள் விடயத்திற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வழங்கல்கள்.
- அந்த செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்.
- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து தேசிய கொள்கையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்புபடுத்துதல்.

அமைச்சு மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களினால் அந்த பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கமாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொடங்கும் முற்பணம்

தென் மாகாண வீதி இணைத்தல் செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட மொறட்டுவ முதல் பிலியந்தல மற்றும் றத்மலான முதல் மிரிஹன வரையிலான வீதிகளுக்காக பொறியியல் மதிப்பீட்டின் பிரகாரம் பெறுமதி ரூபா 1,322 மில்லியனாக இருந்தது. மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட ரூபா 654 மில்லியன் பெறுமதியான வேலைப்பகுதி நீக்கப்பட்டு வீதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனினும் ஆரம்ப மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு தொடங்கும் முற்பணம் செலுத்தப்பட்டமையால் நீக்கப்பட்ட வேலைப் பகுதிக்காகவும் ரூபா 104 மில்லியன் தொடங்கும் முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு மேலதிகமாக செலுத்தப்பட்ட முற்பணம் மீளாய்வாண்டின் இறுதிவரையில் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பதுளை செங்கலடி வீதி செயற்திட்டத்தின் அளவிடைப் பத்திரத்தில் நிச்சயமற்றவைகளுக்காக ஒதுக்குதல் மற்றும் குறித்த ஒதுக்கங்களின் பெறுமதிகள் என்பவற்றைக் கவனத்தில் கொள்ளாமல் அசைவுறாத முற்பணமாக ரூபா 456.86 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

செயன்முன்னேற்றம் தொடர்பில் கவனம் செலுத்தாமல் முற்பணம் செலுத்துதல்

தென் மாகாண வீதி இணைப்பு செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படுகின்ற கெஸ்பேவ முதல் பொக்குனுவிட்ட மற்றும் கிறுலப்பன முதல் கொடகம வரையான வீதிகளுக்காக ஒப்பந்தகாரர்களின் செயற்றிறனின்மை மற்றும் குறைந்த செயல்முன்னேற்றம் தொடர்பில் கவனம் செலுத்தாமல் ரூபா 49 மில்லியன் முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமை

தேசிய நெடுஞ்சாலைகள் சார்ந்த செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளில் குறைந்த செயல்முன்னேற்றம் மற்றும் திட்டமிடல்களின் நலிவுகளினால் ஐ.அ.டொலர் 6.13 மில்லியனுக்குச் சமனான ரூபா 923 மில்லியன் தொகையைப் பயன்படுத்துவதற்கு

முடியாமல் அப்பணம் மீள அனுப்பப்பட்டிருந்தது.

அறிக்கை தயாரிக்கப்படாமை

புதிய களணி பாலம் முதல் அத்துறுகிறிய வரை Elivated பெருந்தெருக்கள் செயற்திட்டத்தில் சுற்றாடல் தாக்கம் தொடர்பான அறிக்கை மற்றும் மீளக் குடியமர்த்தல் திட்டத்தைத் தயாரித்து அறிக்கை தயாரிக்கும் ஒப்பந்தம் என்பன முறையே ரூபா 3.95 மில்லியன் மற்றும் ரூபா 3.71 மில்லியன் பெறுமதியின் அடிப்படையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

செயலாற்றல் பிணைமுறி பெறுமதியை செயற்திட்டத்தால் செலுத்துதல்

ஒன்றிணைந்த வீதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்கும் தெற்கு அதிவேக வீதி செயற்திட்டத்திற்கும் உரிய உடன்படிக்கைகளில் 4.2 ஆவது பொதுவான நிபந்தனையின் கீழ் செயலாற்றல் பிணை முறிகளின் கிரயம் ஒப்பந்தகாரரால் செலுத்த வேண்டியிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது ஒப்பந்தகாரரால் செலுத்த வேண்டியிருந்த முறையே ரூபா 609 மில்லியன் மற்றும் ரூபா 21 மில்லியன் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 630 மில்லியன் செயலாற்றல் பிணைமுறிக் கிரயம் செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது. கேள்வி ஆவணங்களைத் தயாரிக்கும் போதும் கேள்விகளை மதிப்பீடு செய்யும் போதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

மதிப்பீட்டின் Lump Sum ஆக விலை வீதத்தை குறிப்பிட்டமை

ஒன்றிணைந்த வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்திட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளின் விடயம் 119.2(1) இல் விலை வீதம் Lump Sun ஆக உள்ளடக்கப்பட்டிருந்தது. இதனால் அதில் குறிப்பிடப்பட்ட மொத்தத் தொகையினதும் உள்ளபடியான கிரயத்தைக் கவனத்தில் கொள்ளாது செலுத்துவதற்கு செயற்திட்டம் கட்டுப்பட்டிருந்தது. இதன் காரணமாக செயற்திட்டத்தால் ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்ட மேலதிகப் பணம் ரூபா 340 மில்லியன் ஆக இருந்தது. கேள்வி ஆவணம் தயாரிக்கும் போதும் கேள்வியினை மதிப்பீடு செய்யும் போதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

உழைக்கும் போதான வரி செயற்திட்டத்தால் செலுத்துதல்

2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் XIV ஆவது அத்தியாயம் மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் மதியுரை ஒப்பந்தம் தயாரிக்கப்படாமையினால் கூட்டுமொத்தமாக ரூபா 61 மில்லியன் உழைக்கும் போது வரி ஒன்றிணைந்த வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

மீள் ஏற்றுமதி அடிப்படையில் வரி விடுதலைபெற்று பொருட்களை இறக்குமதி செய்தல்

ஒன்றிணைந்த வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீள் ஏற்றுமதி அடிப்படையின் கீழ் வரி விடுதலையைப் பெற்று கூட்டுமொத்தமாக ரூபா 323 மில்லியன் தொகையான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. அதற்குரிய வேலைத்தள அங்கீகாரம் அல்லது அதற்குத் தேவையான கூட்டிணைக்கப்பட்ட பிணை முறியும் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் செயற்திட்ட இறுதியின் போது ஏற்றுமதி செய்யப்பட்டதை உறுதிப்படுத்துவதற்காக பொறுப்பு வாய்ந்த தரப்பினரால் மேற்பார்வையொன்று மேற்கொள்ளப்பட்டமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

தாமதக் கட்டணம் செலுத்துதல்

ஒன்றிணைந்த வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட நலிவுகள், பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றத்தின் விளைவாக கடன் பணத்தை விடுவிக்கும் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் செயற்திட்டத்தால் ஐ.அ.டொலர் 305,203 இற்கு சமமான ரூபா 46 மில்லியன் தொகையான தாமதக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

சொத்துக்கள் சான்றுறுதிப்படுத்தப்படாமை

ஒன்றிணைந்த வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்திட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட அளவிடைப்பத்திர இலக்கம் 120.4(1), (2) மற்றும் 120.5(1), (2), (3) Lump sum விலை வீதத்தின் கீழ் ரூபா 466 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த சொத்துக்கள் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒன்றிணைந்த வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்குரியதாக தயாரிக்கப்பட்ட நிதிநிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதிகளில் பூரணத்துவம், சரியான தன்மை மற்றும் மதிப்பீடு தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. உள்ளகக் கொடுப்பனவு சான்றிதழ்களில் கொடுப்பனவுகளின் அங்கீகாரம் மற்றும் உறுதிப்படுத்தும் அடிப்படை என்பவற்றை கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

விலகல் கட்டளையின் அடிப்படையில் செலுத்துதல்

தெற்கு அதிவேக வீதியின் பின்னதூவ முதல் கொடகம வரையான பகுதியின் நிர்மாணம் 2014 மார்ச் 15 ஆந் திகதி பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. ஒப்பந்தத்திற்கான 13.1 ஆம் உடன்படிக்கையின் நிபந்தனைக்கு முரணாக வழங்கப்பட்டிருந்த 198 நிலையான கட்டளைகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் விலகல் கட்டளைகளின் அடிப்படையில் செலுத்தப்பட்ட தொகை ஆற்றப்பட வேலையின் பெறுமதியில் 106 சதவீதமாக இருந்தது.

காணியை கைப்பற்றும் போது தாமத வட்டி செலுத்துதல்

பதுளை செங்கலடி வீதியில் 5411 காணிக் கூறுகளை கைப்பற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 40 கூறுகளுக்காக, ரூபா 13.3 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. சரியான நேரத்தில் காணி கைப்பற்றப்படாமையினால் 38 கூறுகளுக்காக ரூபா 38 மில்லியன் தாமத வட்டியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

செயற்திட்டத்தின் உபகரணங்களை ஒப்பந்தகாரருக்கு வழங்குதல்

பதுளை செங்கலடி வீதியின் நிர்மாணங்களுக்குரிய அளவிடைப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட பரிசோதனைக்கூட உபகரணங்களுக்காக Lump Sun விலை வீதத்தின் கீழ் ரூபா 27 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அந்த உபகரணங்களின் உரித்தை செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் ஒப்பந்தகாரருக்கு வழங்குவதற்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

காலதாமதத்திற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் இனங்காணப்படாமை

பதுளை செங்கலடி செயற்திட்ட திட்டத்தின் நடவடிக்கைகள் தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்நிறுவனத்தால் பிழையான நில அளவை வரைபடம் ஒப்பந்தகாரருக்கு வழங்கியமையால் பதுளை செங்கலடி வீதியின் திட்ட நடவடிக்கைகள் தாமதத்தின் அடிப்படையில் ஒப்பந்தகாரரினால் காலநீடிப்பு செயற்திட்டத்தின் ஆரம்ப சந்தர்ப்பத்தின் போதே கோரப்பட்டிருந்தது. செயற்திட்டத்தால் ரூபா 6 மில்லியன் தொகையான திட்டங்கள் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த காலநீடிப்புக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட காரணங்களுக்குப் பொறுப்பான இருந்த உத்தியோகத்தரை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

காப்புறுதி கட்டணம் மேலதிகமாகச் செலுத்துதல்

பதுளை செங்கலடி வீதி நிர்மாண அளவிடைப் பத்திரங்களில் உள்ளடக்கப்பட்ட காப்புறுதி விடயங்களுக்காக lump sum விலை வீதத்தின் கீழ் ரூபா 26 மில்லியன் ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்தகாரரால் ரூபா 21 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 5 மில்லியன் ஒப்பந்தகாரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

நிதிஏற்பாடு ஒதுக்கப்படாத பொறுப்புக்களுக்கு உடன்படல்

2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 2(ஈ) பந்தியின் பிரகாரம் கசல பொறுப்புக்களுக்கும் அந்த வருடத்தில் பணம் செலுத்தி விடுவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறின்றி உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் ரூபா 16,942.50 மில்லியன் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. 2018 இன் வருடாந்த பாதீட்டின் மூலம் அந்த பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக ரூபா 4,149.60 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக அமைச்சால் ரூபா 12,792.90 மில்லியன் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி

கல்வி, தொழில்துறை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி மூலம் இளைஞர்களை பலப்படுத்தவதன் மூலம் ஊழியப் படையொன்றை ஏற்படுத்துவதினூடாக பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தும் எதிர்பார்க்கப்புடன் திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு, திணைக்களமொன்றுடன் 11 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்கள் மூலம் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல், திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் பின் தொடர் நடவடிக்கை எடுத்தலும் மதிப்பீடு செய்தலும்.
- பல்கலைக்கழக கல்விக்காக தகைமை பெறாத மாணவர்களுக்கு தொழில் கல்வி தேவைப்பாட்டினை விரிவாக்குவதற்கு கொள்கைகளைத் தயாரித்தலும் வசதிகளை வழங்குவதும்.
- தொழில் சந்தைக்கு பொருத்தமான ஊழியர் அணியொன்றை ஏற்படுத்துவதற்காக தொழில்சார் மற்றும் தொழில்நுட்பக் கல்வியை நவீனமயப்படுத்தல்.
- பயிலுனர் பயிற்சி சந்தர்ப்பங்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலும்.
- தொழில்சார் கல்விப் பயிற்சிக்காக உள்ள விருப்பத்தைமேம்படுத்துவதற்காக தந்திரோபாயங்களை உருவாக்குதலும் செயற்படுத்தலும்.
- கல்வி, தொழில்துறை, தொழில்நுட்பவியல் பயிற்சி மூலம் இளைஞர்களை பலப்படுத்தி திறனுள்ள உழைப்பு படையணியொன்றை ஏற்படுத்துதல்.

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களால் மேற்படி கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தை மேம்படுத்துதல்

1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி சட்டத்தின் தொழில் பயிற்சி பாடநெறிகள் தராதரப்படுத்தப்பட வேண்டியிருந்தன. அமைச்சின் கீழ் செயற்படும் பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படும் 4,147 பாடநெறிகளில் 1513 பாடநெறிகள் இதுவரை தராதரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பயிற்சி பாடநெறிகளை நடாத்துவதற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படாமை மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் முறையாக தயார்செய்யப்படாமையாலும் மாணவர்களுக்கு தரமான வழங்குவதற்கு முடியாதிருந்தது.

தொழில் பயிற்சி பாடநெறிகள் தொடர்பாக சமுகத்திற்கு தெரியப்படுத்துதல்

தொழில் கல்விக்காக உள்ள விருப்பத்தை அதிகரிப்பதற்காக தந்திரோபாயங்களை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல் அமைச்சின் செயற்பாடொன்றாக இருந்தது. பாடநெறிகளுக்காக மாணவர்களை ஈர்ப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

பயிற்சி பாடநெறிகளுக்கு மாணவர்களின் வரவு குறைவாக இருத்தல்

அமைச்சின் கீழ் உள்ள பயிற்சி நிலையங்களில் சில பாடநெறிகளுக்காக

மாணவர்கள் பங்களிப்பு போதியளவில் குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் 5 மாணவர்களுக்கு குறைவான எண்ணிக்கையுடன் கூடிய 118 பாடநெறிகளும் 6 முதல் 10 மாணவர்கள் வரையான எண்ணிக்கையுடைய 273 பாடநெறிகளும் காணப்படுவது அவதானிக்கப்பட்டதுடன் 15 மாணவர்களுக்கு குறைந்த எண்ணிக்கையான 612 பாடநெறிகளும் இருந்தன. கூடுதுலான மாணவர்களை அனுமதிப்பதற்கு தேவையான வளங்கள் மற்றும் வசதிகள் வழங்கப்பட்டிருக்கையில் அவ்வளங்களை செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தாமல் பாடநெறிகள் குறைபயன்பாட்டுடன் நடாத்திச் செல்வது தொடர்பில் அமைச்சின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

கல்விசார் பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்பாமை மற்றும் மதியுரையாளர்களை பயிற்றுவிக்காமை.

அமைச்சின் கீழான 367 தொழில் பயிற்சி நிலையங்களில் நடாத்திச் செல்லப்படும் பாடநெறிகளின் தரத்தை அதிகரிப்பதற்கான போதியளவு கல்விசார் பதவியணியினர் ஆட்சேர்த்தல் மற்றும் அவர்களின் கற்பித்தலின் தரத்தை மேம்படுத்துவதற்காக கற்பிக்கும் விடயத்துறைக்குரியதாக போதியளவு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்கு பெறச்செய்யப்பட வேண்டியுள்ளது. எனினும் மீளாய்வாண்டின் போது 109,632 பேருக்கு அண்மித்த அளவிலான மாணவர் அளவொன்று ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த போதிலும் அம்மாணவர்களை பயிற்றுவிப்பதற்காக தேவையான பயிற்சியாளர்களை ஆட்சேர்ப்பு செய்தவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சில நிலையங்களில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 752 விரிவுரையாளர்களுக்கு வெற்றிடங்கள் காணப்பட்டன.

பாடநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்கள் தொடர்பாக பின் தொடர் நடவடிக்கை எடுக்காமை

அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் பயிற்சி நிலையங்களில் அதிகளவில் தொழில் பயிற்சியை பூர்த்தி செய்த நலனாளிகளை தொழில் ஈடுபடுத்துதல் தொடர்பாக பின்தொடர் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பயிலுனர்களை தொழில் ஈடுபடுத்துவது தொடர்பான தரவு முறையொன்று இல்லாமையால் தற்போது நடாத்தப்படும். பாடநெறிகள் தொழில் சூழலுக்கு இணங்குவது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தேவையான நவீன மயப்படுத்துதல் தொடர்பான மதிப்பீடு ஒன்றை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அரச மட்டத்தில் தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு தொழிலில் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளல், அரச தனியார் பங்களிப்பு (PPP) சந்தர்ப்பங்கள் இனங்காணப்பட்டு மாணவர்களை தொழிலில் ஈடுபடுத்துதல், சுயதொழிலுக்காக பங்களிப்பு வழங்குதல் தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்று தொடர்பில் அமைச்சின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

பல்கலைக்கழக கல்லூரிகளின் செயற்பாடு

துறைசார் அபிவிருத்தி செயற்திட்டத்தின் நிதிசார் அணுசரணையின் கீழ் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் கீழ் 06 பல்கலைக்கழக கல்லூரிகள் தாபிக்கப்பட்டிருந்தன. அந்த பல்கலைக்கழக கல்லூரிகளில் நடாத்தப்படும் 50 பாடநெறிகளுக்காக 1575 மாணவர்கள் அனுமதிப்பதற்கு இயலுமை காணப்பட்டது. எனினும் மீளாய்வாண்டின் போது 1329 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 101 மாணவர்கள் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர். துறைசார்

பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம் ஆண்டினுள் அனைத்து பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்ப வேண்டிய போதிலும், 06 கல்லூரிக்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 35 விரிவுரையாளர்கள் 21 செய்துகாட்டுனர்கள் மதியுரையாளர் ஒருவர் என கல்வி பதவியணியில் காணப்பட்டதுடன் கல்விசாரா பதவியணியில் 28 வெற்றிடங்கள் காணப்பட்டன. படங்கல பல்கலைக்கழக கல்லூரியால் நடாத்தப்பட்டிருந்த 06 பாடநெறிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தராதரப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

பட்டப்படிப்பு பாடநெறிகளை நடாத்துதல்

தொழில்சார் தொழில்நுட்பம் பல்கலைக்கழகத்தினால் தற்போது நடாத்தப்படும் 13 பட்டப்பின் பாடநெறிகள் மற்றும் 11 டிப்ளோமா பாடநெறிகளுக்கு இடையே 03 பட்டப்படிப்பு பாடநெறிகளிலும் 02 டிப்ளோமா பாடநெறியில் மாத்திரம் தராதரப்படுத்தப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரையில் பல்கலைக்கழகம் தாபிக்கப்பட்டு 08 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 2008 இன் 31 ஆம் 21(I) பிரிவின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் தராதரப்படுத்தல் மற்றும் தரத்தை உறுதிப்படுத்துதல் சபையொன்று தாபிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் எதிர்பார்த்த மட்டத்திற்கு பட்டப்படிப்பு பாடநெறியில் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு மீளாய்வாண்டில் இறுதி வரையில் இயலுமை கிடைத்திருக்கவில்லை. பல்கலைக்கழகம் நடாத்தும் 09 பட்டப்படிப்பு பாடநெறிகள் மற்றும் 02 டிப்ளோமா பாடநெறிகளுக்குரிய 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பதிவு செய்த மாணவர்களின் பரீட்சை சித்தியடைதல் சதவீதம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

டிப்ளோமா கற்கை நெறிகளை நடாத்துதல்

தேசிய தொழில் தகைமை உள்ள நபர்களுக்கு அவர்களின் தராதரத்தை மேம்படுத்தும் பொருட்டு தகைமையொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக கல்வி பாடநெறிகளை வழங்குவதல் வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் நோக்கமொன்றாக இருந்தது, 2017 ஆம் ஆண்டின் போது ஒரு டிப்ளோமா பாடநெறியொன்றுக்காக மாத்திரம் மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தனர். டிப்ளோமா பாடநெறிகளில் மாணவர்களின் சித்தியடைதல் சதவீதமும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் அப்பாடநெறிகளை பூர்த்தி செய்வதிலும் நீண்ட தாமதம் அவதானிக்கப்பட்டது.

NVQ - 5 மற்றும் 6 மட்ட நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தல்

வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் Establish public and PPP University Colleges to offer demand - driven NVQ 5,6 level program இற்காக செயற்திட்டத்தின் கீழ் ரூபா 01 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டபோதும் அரச மற்றும் தனியார் பங்குடைமையுடன் பல்கலைக்கழக் கல்லூரிகளை நிறுவாமையால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

திட்டமிடப்பட்ட பாடநெறிகள் ஆரம்பிக்கப்படாமை

தொழில் கல்வி மற்றும் பயிற்சியளித்தல் திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 39 தொழில்நுட்பவியல் / தொழில்நுட்ப கல்லூரிகளில் 125 பாடநெறிகளை நடாத்துவதற்கும் அதற்காக 27,000 மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்

செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் 119 பாடநெறிகளுக்காக 33,650 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். திணைக்களத்தினால் அனுமதிப்பதற்கு திட்டமிடப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையை விஞ்சி அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் நடாத்தப்பட்ட மொத்த பாடநெறிகளின் எண்ணிக்கையில் 21 பாடநெறிகளுக்காக மாணவர்களை அனுமதிக்கும் முன்னேற்றம் செயல்நடவடிக்கை திட்டத்துடன் ஒப்பிடும் போது 50 சதவீதத்திற்கும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. கட்டிட நிர்மாணம் தொடர்பான தேசிய சான்றிதழ், மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர், சந்தைப்படுத்தல் முகவர் உதவியாளர், களஞ்சியக் காப்பாளர் உட்பட 14 பாடநெறிகளுக்காக மீளாய்வாண்டின் போது 3,405 மாணவர்கள் அனுமதிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அப்பாடநெறிகள் எவ்வித தொழில்நுட்பவியல் / தொழில் நுட்ப கல்லூரிகளில் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

சில பாடநெறிகள் தராதரப்படுத்தப்படாமை

2013 பெப்ரவரி 26 ஆந் திகதிய 01/2013 ஆம் இலக்க மூன்றாவது மற்றும் தொழில்துறை ஆணைக்குழுவின் தொழில்துறை தகைமை சுற்றறிக்கையின் பிரகாரம் சகல பாடநெறிகளும் தராதரப்படுத்த வேண்டியிருந்தன. 2017 யூன் 23 ஆந் திகதி வரையிலும் 39 தொழில்நுட்பவியல் / தொழில்நுட்ப கல்லூரிகளில் நடாத்தப்படும் 876 பாடநெறிகளில் 272 பாடநெறிகள் தராதரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக தேசிய மட்டத்தில் சான்றிதழ் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் அப்பாடநெறிகளை பின்பற்றிய மாணவர்களுக்கு இல்லாமல் போயிருந்தது.

கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் குறைபயன்பாட்டுடன் காணப்படல்

துறைசார் நிபுணத்துவ அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் தொழில்நுட்பவியல்/தொழில்நுட்ப கல்லூரிகளுக்கு பயிற்சி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் ரூபா 70 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் 15 மில்லியன் செலவு செய்து பயிற்சி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. நுவரெலியா தொழில்நுட்ப கல்லூரிக்காக 2017 மார்ச் 14 ஆந் திகி ரூபா 19.89 மில்லியன் பெறுமதியான CNC Milling இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த இயந்திரத்தை பயன்படுத்தி கற்பித்தல் நடவடிக்கைகளுக்கான அத் தொழிநுட்ப கல்லூரியில் நிரந்தர போதனாசிரியர் இல்லாமையால் 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அந்த உபகரணம் விளைவற்றுக் காணப்பட்டது. மேலும் அந்த இயந்திரம் செயற்பாடு நிலைமையில் காணப்படாதிருந்த போதிலும் 2018 சனவரி 05 ஆந் திகதி 10 சதவீத நிறுத்தி வைத்தல் தொகை விடுவிக்கப்பட்டிருந்தன.

திட்டமிடப்பட்டதன் பிரகாரம் மாணவர்களை அனுமதிக்காமை

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தினால் மீளாய்வாண்டின் போது 08 கல்லூரிகளில் பட்டங்கள், டிப்ளோமா மற்றும் சான்றுபத்திர பாடநெறிகளுக்காக 1,448 மாணவர்களை அனுமதிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 829 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின் போது பட்டப்படிப்பு பாடநெறிகளுக்காக புதிய மாணவர்களை அனுமதித்தல் ஆண்டின் இறுதி வரை தாமதிக்கப்பட்டிருந்ததுடன் அப்பாடநெறிகளில் கல்வி நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

கட்டிடம் நிர்மாணிக்கப்படாமையால் குத்தகை அடிப்படையில் கட்டிடம் பெற்றுக்கொள்ளல்

மட்டக்குளிய தலைமை அலுவலகத்தின் ஐந்து மாடி கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 304.10 மில்லியனான கிரய மதிப்பீட்டொன்று தயாரிப்பதற்கும் மண் பரிசோதனைக்காகவும் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 6.46 மில்லியன் அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திற்கும் தனியார் கம்பனியொன்றுக்கும் வழங்கப்பட்டிருந்தது. தேவையான நிதி ஏற்பாடு கிடைக்காததன் பேரில் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அந்நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. பட்டப்படிப்பு பாடநெறிகளை நடாத்துவதற்காக இரண்டு வருட காலப்பகுதியொன்றுக்காக ரூபா 55.20 மில்லியனுக்கு கட்டிடமொன்று வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 27 ஆந் திகதி அதற்காக ரூபா 27.60 மில்லியன் முற்பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரை அதன் உள்ளக வேறாக்கலுக்காக ரூபா 22.57 மில்லியனும் தளபாடங்களுக்காக ரூபா 18.59 மில்லியனும் செலவிடப்பட்டிருந்தது. அத்திகதி வரை உரிய கட்டிடத்தில் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மேற்குறித்த கட்டிடம் குத்தகைக்கு எடுத்து மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக பொருத்தமான வகையில் கட்டிடங்கள் தயாரிப்பதற்காக மீளாய்வாண்டில் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 77.8 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 50.4 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய ரூபா 27.4 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

அனர்த்த முகாமைத்துவம்

இயற்கையான மற்றும் மனிதர்களால் உருவாக்கப்படுகின்ற இடர்களைக் குறைத்தல் மற்றும் தடுப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் வாழ்வதற்குப் பொருத்தமான பாதுகாப்பான சூழலைக் கட்டியெழுப்புதல் இத்துறையின் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோளாக இருந்தது. அக்குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக இடர் முகாமைத்துவ அமைச்சு, ஒரு திணைக்களம், 04 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களால் பின்வரும் கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

- இடர் முகாமைத்துவ விடயத்திற்குரிய கொள்கை நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்திட்டங்கள் என்பவற்றைத் தயாரித்தல்
- இயற்கை இடர் மற்றும் மனித செயற்பாடுகளால் உருவாகும் இடர்களை இலகுபடுத்துதல், எதிர் கொள்ளுதல், மீளுதல் (Recovery) நிவாரணம் வழங்குதல் ஆகிய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும் முகாமைத்துவம் செய்தலும்.
- தேசிய கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தேசிய இடர் முகாமைத்துவ திட்டம், தேசிய அவசர சந்தர்ப்ப செயற்பாட்டுத் திட்டம் என்பவற்றைத் தயாரித்தல்.
- இடர்களை இலகுபடுத்துதல், எதிர் கொள்ளுதல், மீளுதல் என்பன தொடர்பாக வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
- சுற்றாடல் ஆபத்துகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய தொழில்நுட்பக் கொள்கைகளுடனான வீடமைத்தலை முன்னேற்றுதல்.
- வீடுகளை நிர்மாணிப்பதற்கான பொருத்தமான தொழில்நுட்பத்திற்குரிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.
- காலநிலையை விஞ்ஞானரீதியாக மீளாய்வு செய்தலும் ஆராய்ச்சி செய்தலும்.
- இயற்கை இடர்களை முன்னறிதல் (Forecasting of Natural Disaster) மற்றும் அவை தொடர்பாக உரிய பிரிவுகளுக்கு தெரியப்படுத்துதல்.
- இயற்கையான இடர்கள் மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படுகின்ற இடர்களின் போது பாதுகாப்பாக வெளியேற்றுதல் செயற்பாட்டை அமுல்படுத்தல்.
- சர்வதேச மனிதாப நிவாரண சேவை நிகழ்ச்சிதிட்டங்களை ஒருங்கிணைத்தல்.

மேற்கூறிய நிறுவனங்களால் கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கி கீழே தரப்படுகின்றன.

இலங்கையின் இடர் முகாமைத்துவம் சம்பந்தமான சட்ட கட்டமைப்பு

இலங்கையின் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் சம்பந்தமாக சட்டரீதியான ஒழுங்கு விதிகள் 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை இடர் முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இடர் முகாமைத்துவம் சம்பந்தமான எதிர்கால சவால்களை வெற்றிக்கொள்வதற்காக இடர் முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சட்டரீதியான தேவைப்பாடுகளை விரிவுபடுத்துவதற்கான தேவைகள் உருவாகியிருந்த போதிலும் இடர் முகாமைத்துவ அதிகாரச்சட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டின் போது உத்தேசிக்கப்பட்ட திருத்தம் மீளாய்வாண்டின் இறுதிவரை

பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் கட்டிட ஆராய்ச்சி அமைப்பு நியதிச்சட்ட ஒழுங்குவிதிகளின்படி ஸ்தாபிக்கப்பட்ட ஒரு நிறுவனமாக இல்லாததுடன் அதன் காரணமாக ஆராய்ச்சி அமைப்பின் மூலம் மக்களுக்கு வழங்கப்படுகின்ற மண்சரிவு ஆபத்து தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை சம்பந்தமாக சட்டரீதியான அங்கீகாரம் காணப்படவில்லை. இக்காரணத்தால் இடர் விபத்து மதிப்பீடுகளை கவனத்தில் கொள்ளாது நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுகின்ற தரப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆராய்ச்சி அமைப்பிற்கு முடியாதிருந்தது.

இலங்கையில் இடம்பெறக்கூடிய இயற்கையான மற்றும் செயற்கையான இடர்களை இனங்காணல்

2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை இடர் முகாமைத்துவ அதிகாரச் சட்டத்தின் கீழ் இலங்கையில் இடம் பெறக்கூடிய 21 இடர்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் பூகம்பம் மற்றும் ஏனைய வெடிப்புக்களின் மூலம் ஏற்படக்கூடிய இடர்கள் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம், வன்முறைகள் ஆகியவற்றின் மூலம் ஏற்படுகின்ற இடர்கள், இடர்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும் இடர் முகாமைத்துவ நிலையத்தால் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்ட இடர் ஆபத்துக்களை குறைக்கும் நடவடிக்கைகள் வெள்ளம், மண்சரிவு, வரட்சி ஆகிய சில இடர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

இடர் முகாமைத்துவ திட்டங்களை தயாரித்தல்

இலங்கை இடர் முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 8 ஆம் பந்தியின் 2(அ) பிரிவின் பிரகாரம் தேசிய இடர் முகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் இடர் முகாமைத்துவம் சம்பந்தமான சர்வதேச அங்கீகாரமான "செந்தாய்" கட்டமைப்பிற்கு இணங்கிய வகையில் தேசிய திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் 2018 - 2030 காலப் பகுதிக்காக தேறிய இடர் முகாமைத்துவ திட்டத்தை தயாரிக்கும் நடவடிக்கை 2017 மார்ச் 07 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்நடவடிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.
இத்தேசிய இடர் முகாமைத்துவ திட்டத்தை தயாரிக்காமையின் காரணமாக அதற்கு சமாந்தரமாக தயாரிக்கப்பட வேண்டிய மாவட்ட இடர் முகாமைத்துவ திட்டம், நிறுவன ரீதியான இடர் முகாமைத்துவ திட்டம் தேசிய அவசர செயற்பாட்டுத் திட்டம் ஆகிய உப செயற்திட்டங்களை பூர்த்திசெய்வதற்கு முடியாதிருந்தது.

இடர் ஆபத்துக்களை இனங்காண்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்கள்

இடர் ஆபத்துக்களை இனங்காண்தல் வானிநிலை அறிவித்தல்களை வெளியிடுதல் என்பவற்றிற்காக பயன்படுத்தப்படுகின்ற உபகரண முறைமை வினைதிறனாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. பல்வேறு வெளிநாட்டு முகவர் நிறுவனங்களால் வழங்கப்பட்ட உபகரணங்கள் இலங்கையின் வானிலை நிலைமைகளுக்கு இணக்கமின்மை, முறையான திட்டங்கள் தயாரிக்கப்படாது உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளல், பழைய மற்றும் காலாவதியான உபகரணங்களை அறிவித்தல்களை வெளியிடுவதற்கு பயன்படுத்தியமை ஆகிய காரணங்களால் உரிய உபகரண முறைமையை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. இது சம்பந்தமாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதாணிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

டொப்லர் ரேடார் முறைமை செயற்படாதுள்ளமை

2006 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட பிரேரணையின் பிரகாரம் வழங்கப்பட்ட ரூபா 400 மில்லியன் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி ரூபா 320 மில்லியன் பெறுமதியான டொப்லர் ரேடார் முறைமையானது உலக வானிலை ஆய்வு சங்கத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு 2011 ஆம் ஆண்டின் போது தெனியாய பிரதேசத்தில் நிறுவப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பல்வேறு தொழில்நுட்ப கோளாறுகள் காரணமாக அது செயற்படாதிருந்தது. இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது ரேடார் முறைமையைத் தயாரித்த நிறுவனத்தால் 2010 ஆம் ஆண்டின் போது ஐக்கிய அமெரிக்க குடியரசில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது நடைமுறைப்படுத்தும் பரிசோதனை வெற்றியளித்திருக்கவில்லை எனவும் இரண்டாவது பரிசோதனையின் போது அது வெற்றிகரமாக செயற்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்ட போதிலும் அப்பரிசோதனைகளுக்கு இலங்கை வானிலை ஆய்வு திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருக்கவில்லை என்பதும் உறுதிப்படுத்தப்பட்டது. ரேடார் முறைமையை இறக்குமதி செய்தன் பின்னர் நீண்ட காலம் பயன்படுத்தப்படாது வைத்திருந்தமை அந்த முறைமை செயற்படாமைக்கு காரணமாக இருந்தது. 2016 சனவரி 29 ஆந் திகதி ரேடார் முறைமைக்குரிய ரூபா 8.14 மில்லியன் பெறுமதியான துணைக்கருவி வெளித்தரப்பினரால் களவாடப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன் 2017 ஏப்ரல் 21 ஆந் திகதி செயற்படாது காணப்பட்ட ரேடார் முறைமையை கழற்றி திருத்தம் செய்வதற்காக ஐக்கிய அமெரிக்க குடியரசின் உற்பத்தி நிறுவனத்திற்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த திருத்தம் செய்தல் நடவடிக்கைகளின் தற்போதைய நிலைமை தொடர்பாக வானிலை ஆய்வு திணைக்களத்தால் அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

பல்நோக்கு இடர் ஆபத்துக்களின் பகுப்பாய்வு

இடர் முகாமைத்துவ நிலையத்தால் 2016 – 2019 காலப்பகுதியில் அமுல்படுத்தப்பட வேண்டியிருந்த "பல்நோக்கு ஆபத்து பகுப்பாய்வு" எனும் பெயருள்ள செயற்திட்டத்திற்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ஒரு ஆண்டிற்கு ரூபா 68 மில்லியன் வீதம் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2016 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 5.80 மில்லியன் செலவு செய்யப்பட்டு GIS மென்பொருள் கணனி முறைமையும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டில் ரூபா 205,200 செலவு செய்து கூட்டங்கள், கருத்தரங்குகள் நடாத்துவது மாத்திரம் இடம்பெற்றிருந்தன. அவ்வாறே 2017 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 53 மில்லியன் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பிற்கு திறைசேரியின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாற்றஞ் செய்யப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் குறிக்கோள்களை உரிய முறையில் நிறைவேற்றுவதற்காக இடர் முகாமைத்துவ நிலையத்தின் ஈடுபாடு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

இடர்களால் இன்னல்களுக்கு உள்ளாகிய மக்களுக்கு நிவாரணம் வழங்குதல்

2014 ஏப்ரல் மாதத்திலிருந்து இயற்கை அனர்த்தங்களின் காரணமாக இன்னல்களுக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு நிவாரணம் செலுத்தும் நடவடிக்கை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதன் கீழ் காப்புறுதி நலன்களை வழங்குவதற்காக இடர் இழப்புக்கள் சம்பந்தமான மதிப்பீட்டு அறிக்கையும் ஏனைய விபரங்களும் இடர் முகாமைத்துவ அமைச்சு செயலாளரால் காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டி

இருந்தது. 2017 யூலை 26 ஆந் திகதிய 05/2016 (II) ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் காப்புறுதி நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான விபரங்கள் உரிய மாவட்ட செயலாளரால் நேரடியாக தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பிவைக்க வேண்டிய போதிலும் அத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் உரிய காப்புறுதி நலன்கள் விடுவிக்கப்பட வேண்டுமென ஆலோசணை வழங்கப்பட்டிருந்தது. இக்காரணத்தால் இயற்கை அனர்த்தங்களுக்கு இழப்பீடு செலுத்துவது சம்பந்தமாக இடர் முகாமைத்துவ அமைச்சின் நோக்கெல்லை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

மேலும் இடர் முகாமைத்துவ நிலையத்தால் மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற இடர் நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள் ஆக்கபூர்வமாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

இன்னல்களுக்கு உள்ளாகிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக பொது மக்களிடமிருந்து உதவிகளை சேகரித்தல்

2016 ஆம் ஆண்டின் போது உருவாகிய திடீர் இடர் நிலைமைகளால் இன்னல்களுக்கு உள்ளாகிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக பொது மக்களிடமிருந்து உதவிகள் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் பணமாக கிடைத்த உதவிகள் அரசாங்க வங்கி ஒன்றின் நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் சேகரிக்கப்பட்ட அந்த உதவிப் பணத்தை இன்னல்களுக்கு உள்ளாகிய மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அக்கணக்கில் ரூபா 152.00 மில்லியன் மீதி காணப்பட்டது.

இன்னல்களுக்கு உள்ளாகிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்.

இன்னல்களுக்கு உள்ளாகிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது இரத்தினபுரி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 19 மில்லியன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பயன்படுத்தப்படாது அந்த அலுவலகத்தில் வைத்திருக்கப்பட்டது. மேலும் பலாங்கொடை, கஹவத்த, கிரிஎல்ல ஆகிய பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 25.60 மில்லியன் நிதி ஏற்பாடு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. நலன்பெறுனருக்குச் சொந்தமான ஒரு காணியில் அரசாங்கத்தின் நிதி உதவியின் அடிப்படையில் வீட்டை நிர்மானிப்பதற்கு தெரிவு செய்திருந்த அயகம பிரதேச செயலாளர் பிரிவில் வசிக்கும் வெள்ள அனர்த்தத்தால் இன்னல்களுக்கு உள்ளாகிய 38 நலன்பெறுனர்களுக்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை எதுவித பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. வீட்டுடன் ஒரு காணியை கொள்வனவு செய்வதற்காக இரத்தினபுரி மாவட்டத்தின் 13 பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள 116 நலன் பெறுனர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 112 நலன் பெறநர்களுக்கு எதுவித பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் இரத்தினபுரி மாவட்டத்தின் 12 பிரதேச செயலகப் பிரிவுகளின் காணிகளை கொள்வனவு செய்தல் அல்லது வீட்டை நிர்மாணிப்பதற்கான 323 நலன் பெறுனர்கள் மற்றும் 350 நலன் பெறுனர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது நலன்களை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்களை இன்னல்களுக்கு உள்ளாகிய நபர்களுக்கு பகிர்ந்தளித்தல்

நுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை பிரதேச செயலகத்தில் இடர்களுக்கு உள்ளாகிய நபர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படாது முறையற்ற வகையில் களஞ்சியத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. ஹங்குரன்கெத்த பிரதேச செயலகப் பிரிவில் இன்னல்களுக்கு உள்ளாகியவர்களால் பிரதேச செயலாளருக்கு 2017 ஆம் ஆண்டின் போது சமர்க்பிக்கப்பட்ட 52 பல்வேறு வேண்டுதல்களுக்கு மத்தியில் 42 வேண்டுதல்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது சூறாவளி மற்றும் மண்சரிவுகளின் காரணமாக சேதமடைந்த 14 வீடுகளைப் புனரமைப்பதற்கான முற்பணமாக ரூபா 140,000 அம்பகமுவ பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 75,000 பணம் செலுத்தப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இடர்களைக் குறைக்கும் நடவடிக்கை

இடர் முகாமைத்துவ நிலையத்தால் மேற்கொள்ளப்படுகின்ற இடர்களைக் குறைக்கும் செயற்திட்டம் மாவட்ட செயலாளர்களினூடாக அமுல்படுத்தப்படுவதுடன் அது சம்பந்தமான நிதிக் கட்டுப்பாடு முறையற்றவை என்பது கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

வேலைகள் பூர்த்திசெய்யப்படாத செயற்திட்டங்களுக்காக பணம் செலுத்துதல்

உரிய இடர்களைக் குறைக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்ட உடன் வேலை முடிவுறுத்தப்பட்டமைக்கான அறிக்கை இடர் முகாமைத்துவ நிலையத்திற்கு அனுப்பியதன் பின்னர் அதன் அடிப்படையில் இறுதிக் கொடுப்பனவுகனை மேற்கொள்ளுமாறு இடர் முகாமைத்துவ நிலையத்தால் உரிய மாவட்ட செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதியளவில் வேலைகள் முடிவுறுத்தப்படாத 15 செயற்திட்டங்களுக்காக ரூபா 20.24 மில்லியன் பணம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் அனுராதபுரம், பதுளை, நுவரெலியா, கொழும்பு, குருநாகல் ஆகிய மாவட்ட செயலாளர்களுக்கு ரூபா 42.18 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியான 07 செயற்திட்டங்களுக்காக முற்பணமாக ரூபா 4.51 மில்லியன் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தும் அச்செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. உரிய முற்பணங்களை நிலையத்திற்கு மீளச் செலுத்துவதற்காக சம்பந்தப்பட்ட செயற்திட்டங்களின் செயற்பாடுகளை நிறுத்திய திகதியிலிருந்து 1½ மாதங்களிலிருந்து 5½ மாதங்கள் வரையான கால வீச்சில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டங்களை நிறைவேற்றாமை

அம்பாநடதோட்டை மாவட்ட செயலகத்தால் அமுல்ப்படுத்தப்பட்ட அங்குறுகொல பெலஸ்ஸ் திஸாகே குளம், கெப்பெடியாவ வடக்கு பதவியிலுள்ள கலேவெல குளம் என்பவற்றை புனரமைப்புச் செய்யும் நடவடிக்கையானது அதற்குரிய வேலைத்திட்டத்திற்கு இணங்கியவகையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக குளக்கட்டுக்கள் நீருக்கு அடித்துச் செல்லப்படுதல் களி மண் குவிதல் ஆகிய குறைபாடுகள் பௌதீக

பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டன. மேலும், நுவரெலியா மாவட்டத்தின் சீதா எலிய பிரதேசத்தில் 77 மீற்றர் நீளமான வடிகால் முறைமையை விஸ்தரிப்பதற்காக ரூபா 1.84 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 47 மீற்றர் தூரம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. கடுவான ரோஜா மலர் பூங்காவிற்கு கொங்ரீட் இட்டு வடிகால் நிர்மாணிப்பதற்காக ரூபா 18.89 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியான வேலைகள் செய்யப்படாது அந்த வீதிக்கு அஸ்பொல்ட் இடுவதற்காக 7பா 2.65 மில்லியன் செலவு செய்யப்பட்டிருக்கவில்லை.

ஒப்பந்தக்காரருக்கு மேலதிகமாக பணம் செலுத்துதல்.

கண்டி மாவட்டத்தின் அகுறணை நகரத்தில் வெள்ளத்தினாலான இடர்களைக் குறைக்கும் குறிக்கோளுடன் அமுல்படுத்தப்பட்ட பிங்கா ஓயா மற்றும் மஹகல ஓயா பிரதேசத்தில் குவித்துவைக்கப்பட்டிருந்த சேற்று மண்ணை அகற்றும் ஒப்பந்தத்திற்காக ரூபா 20.46 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இடர் முகாமைத்துவ நிலையகத்தால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அது தொடர்பாக மேலும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

சுயமாக செயற்படும் 100 மழை மானிகளைக் கொள்வனவு செய்தல்

சுயமாக செயற்படும் 100 மழைமானிகளைக் கொள்வனவு செய்வதற்காக பொதுத் திறைசேரியால் 2017 திசெம்பர் 21 ஆந் திகதி அதற்காக ரூபா 55 மில்லியன் நிதி ஏற்பாடு தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பிற்கு வழங்கியிருந்த போதிலும் அந்த நடவடிக்கை இடர் முகாமைத்துவ அமைச்சு, வானிலை ஆய்வுகள் திணைக்களம் என்பவற்றால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவற்றில் ரூபா 15.95 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. எனினும், 2017 திசெம்பர் 31 வரை உரிய மழைமானிகள் வானிலை ஆய்வுகள் திணைக்களத்திற்கு கிடைத்திருக்காததுடன் அத்திகதியில் கொள்வனவு செய்வதற்காக எழுதப்பட்ட காசோலை 2018 ஏப்ரல் மாதம் வரை கையில் வைத்திருக்கப்பட்டது.

உழவு இயந்திரமும் நீர் பவுசரும் கொள்வனவு செய்தல்

உழவு இயந்திரமும் நீர் பவுசரும் ஒரு விடயமாகக் கருதி ஒரு அலகு ரூபா 1.91 மில்லியன் படி உழவு இயந்திரத்தில் பொருத்தப்பட்ட 75 குடிநீர் பவுசர்கள் ரூபா 143.99 மில்லியன் கிரயத்திற்கு இடர் முகாமைத்துவ நிலையத்தால் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டன. அக்காலப்பகுதியின் போது தேசிய இடர் நிவாரண சேவை நிலையத்தினாலும் உழவு இயந்திரம் மற்றும் நீர் பவுசருக்காக தனித்தனியான கேள்விகளைக் கோரி அலகுப் பெறுமதி ரூபா 1.75 மில்லியனுக்கு 125 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

படகுகளையும் படகு இன்ஜின்களையும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளல்

இடர் முகாமைத்துவ நிலையத்தால் முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் கொள்வனவு செய்யப்பட்ட படகுகளும் படகு இன்ஜின்களும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வது சம்பந்தமாக முறையான நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 36.35 மில்லியன் பெறுமதியான இன்ஜின் இல்லாத 152 படகுகள் இடர் முகாமைத்துவ நிலையத்தால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட படகுகளுக்கு இன்ஜின் இல்லாமையின் காரணமாக அவற்றை அவசர வெள்ள நிலைமையின் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாதிருந்தது. 2017 மே மாதத்தின்

போது அவசர வெள்ள நிலைமையில் போது வெளி நபர்களிடமிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட படகுகளுக்காக ரூபா 600,000 தொகையை நிலையம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. மேலும் இடர் இடம்பெறாத சந்தர்ப்பத்தில் அவசர கொள்வனவாகக் கருதி ரூபா 18.48 மில்லியன் செலவு செய்து 2017 யூன் மாதத்தின் போது 42 படகு இன்ஜின்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இவற்றில் 11 படகு இன்ஜின்கள் இரத்தினபுரி, மொனராகலை, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய படகு இன்ஜின்கள் 2017 திசெம்பர் 20 ஆந் திகதி வரை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

விளையாட்டு அலுவல்கள்

விளையாட்டு திறமைகளை மேம்படுத்தும் நோக்கில் சுறுசுறுப்பான இனமொன்றைக் கட்டியெழுப்புதல் மற்றும் தேசத்தின் பிரதிமையை உலகலாவிய ரீதியில் மேம்படுத்துதல் விளையாட்டு அமைச்சிலிருந்து எதிர்பார்க்கும் பெறுபேறாக இருந்தது. இப்பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக விளையாட்டு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம், 05 நியதிச்சட்ட நிறுவனங்கள், விளையாட்டு நிதியமொன்று மற்றும் 62 விளையாட்டுச் சங்கங்களினாலும் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- விளையாட்டுத்துறை தொடர்பிலான கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் தயாரித்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும்.
- விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தலும் விளையாட்டுத்துறைக்குள் உத்தேச இலக்குகளை அடைந்து கொள்வதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தலும்.
- விளையாட்டுத்துறை கல்வியினை ஊக்குவித்தல்.
- இலங்கை பற்றிய பிரதிமையை சர்வதேச ரீதியிலே கட்டியெழுப்புவதற்காக விளையாட்டுத் துறையினைப் பயன்படுத்தக் கூடியவாறான புதிய தந்திரோபாய முறைகளை வகுத்தமைத்தலும் உரிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும்.
- பொது மக்களிடையே தேகாரோக்கிய நலன் ஏற்படுத்துவதற்கு அவசியமான வசதிகளை ஊக்குவித்தலும் கூட்டிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்.
- நிறுவனங்களைக் கணக்காணித்தல்.

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களால் மேற்படி செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்தாமை

2017 ஆம் ஆண்டிற்காக விளையாட்டு அமைச்சின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக மூலதனச் செலவினத்திற்காக ரூபா 3,108.8 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதில் ரூபா 1,827 மில்லியன் அதாவது 58 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. பட்டியல் சமர்ப்பிக்கப்படாமை, பெறுகையின் போது முறையீடு சமர்ப்பிக்கப்படாமை, மற்றும் பெறுகை செயற்பாட்டின் போது திட்டமிடப்பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்படாமையால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 200 விளையாட்டரங்குகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 560 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்காக திறைசேரியினால் ரூபா 33.68 மில்லியன் மேலதிக நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 22 மாவட்டங்களுக்கு மாவட்ட செயலாளர்களினூடாக 322 விளையாட்டரங்குகளை அபிவிருத்தி செய்தல் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக மாவட்ட செயலாளர்களுக்கு ரூபா 367.4 மில்லியன் நிதிஏற்பாடு

ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது, குறித்த மாவட்ட செயலாளர்களினால் மீளாய்வாண்டின் போது ரூபா 133.5 மில்லியன் செலவு செய்து 161 விளையாட்டரங்குகளின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 171 விளையாட்டரங்குகளின் வேலை பூர்த்தி செய்யப்படவில்லை.

சுகததாச தேசிய விளையாட்டுத்தொகுதியின் ஓட்டப் பாதையை மீளமைத்தல்

சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதியின் ஓட்டப் பாதையை மீளமைத்தல் மீற்றர் 400 மீற்றர் 200 மீற்றர் ஓடு பாதைகளை மீளமைப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் போது முறையே ரூபா 200 மில்லியன் மற்றும் ரூபா 250 மில்லியன் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 56.32 மில்லியன் செலவு செய்து 20 சதவீத அளவிலான வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

இலங்கை விளையாட்டு வீரர்களின் பெற்றுக்கொண்ட சர்வதேச வெற்றிகள்

2016 ஆம் ஆண்டின் போது இலங்கை விளையாட்டு வீரர்கள் 08 சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி 30 தங்கம், 71 வெள்ளி மற்றும் 107 வெண்கலம் என 208 பதக்கங்களை உரித்தாக்கிக் கொண்டிருந்தனர். மீளாய்வாண்டின் போது 08 போட்டிகளில் பங்குபற்றி 29 தங்கம், 39 வெள்ளி மற்றும் 11 வெண்கலம் என 79 பதக்கங்களை மாத்திரம் உரித்தாக்கிக் கொண்டிருந்தனர்.

மாகாண மற்றும் மாவட்ட விளையாட்டு தொகுதிகளின் நிர்மாணம்

மாகாண மற்றும் மாவட்ட விளையாட்டு தொகுதிகளின் நிர்மாணத்தின் கீழும் 13 மாவட்ட விளையாட்டு தொகுதிகளை 05 மாகாண விளையாட்டு தொகுதிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,000 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதற்காக திறைசேரியினால் ரூபா 300 மில்லியன் மேலதிக நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் 13 மாவட்ட விளையாட்டு தொகுதிகள், 07 மாகாண விளையாட்டு தொகுதிகளினதும் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 941 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதில் 05 மாவட்ட விளையாட்டு தொகுதிகள், 3 மாகாண விளையாட்டு தொகுதிகள் என்பவற்றின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 08 மாவட்ட விளையாட்டு தொகுதிகள் மற்றும் 4 மாகாண விளையாட்டு தொகுதிகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

பிராந்திய விளையாட்டரங்குகளை அபிவிருத்தி செய்தல்.

பிராந்திய விளையாட்டரங்குகளை அபிவிருத்தி செய்தலின் கீழ் 200 கிராமிய விளையாட்டரங்குகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 564 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டின் போது 54 விளையாட்டரங்குகளின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 343 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 26 விளையாட்டரங்குகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், 28 விளையாட்டரங்குகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் 146 விளையாட்டரங்குகளின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஒலிம்பிக் குழுவிடமிருந்து மீள்நிரப்பப்பட வேண்டிய பணம்

2016 பெப்ரவரி மாதத்தில் இந்தியாவில் நடைபெற்ற 12 ஆவது தென் ஆசிய போட்டிகளுக்கு சமூகமளித்த விளையாட்டு வீரர்களுக்காக விமான பிரயாணச்சீட்டு கொள்வனவு செய்வதற்காக விளையாட்டுக்கள் அபிவிருத்தி திணைக்களத்தினால் இலங்கை ஒலிம்பிக் குழுவிற்கு வழங்கப்பட்ட பணத்தில் ரூபா 6.88 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அப்பணத்தை 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் மீளப் பெற்றுக்கொள்வதற்கு விளையாட்டுக்கள் அபிவிருத்தி திணைக்களம் தவறியிருந்தது.

ஊக்குப்பதார்த்தங்களை பெற்றுக்கொள்வதற்கு எதிராக விதிகளை தயாரிக்காமை

2013 இன் 33 ஆம் இலக்க விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஊக்க மருந்து பயன்பாட்டிற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் ஊக்க மருந்து பயன்பாட்டிற்கு எதிரான விதிகளை உருவாக்கி அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் அவற்றை வர்த்தமானியில் பிரசுரித்ததன் பின்னர் அமுலாக்கப்படல் வேண்டியிருந்தது. ஊக்குபதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மை நிறுவனத்தினால் அச் செயற்பாடு நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும், இந்நிறுவனம் தாபிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

பிஜி தேசிய ரகர் விளையாட்டுவீரர்களை இலங்கை குழுவில் சேர்த்தல்

இலங்கை ரக்பி சங்கத்தின் உறுப்புரையின் III பந்தியின் 1(6) பிரகாரம் சர்வதேச ரக்பி குழுவினால் காலத்திற்கு காலம் ரக்பி விளையாட்டு தொடர்பாக விதிக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டியிருந்தது. அந்த சட்டங்கள் மற்றும் விதிகள் மீறப்பட்டு தகைமை பெறாத பிஜி தேசிய ரக்பி விளையாட்டு வீரர்கள் இலங்கை குழுவிற்கு உள்ளடக்கப்பட்டு சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்யப்பட்டமையால் சர்வதேச ரக்பி சம்மேளத்தினால் 2016 ஆம் ஆண்டின் போது இலங்கை ரக்பி சம்மேளனத்திற்கு ஸ்ரேலிங் பவுண் ஐம்பதாயிரம் (அண்ணளவாக ரூபா 11 மில்லியன்) தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்தது.

ஞாபகார்த்த புத்தகங்கள் அச்சீடு

2013 ஆம் ஆண்டில் இலங்கை ஒலிம்பிக் குழுவின் 75 ஆவது ஆண்டு நிறைவுடன் இணைந்ததாக ரூபா 5.2 மில்லியன் தொகைக்கு 2000 ஞாபகார்த்த புத்தகங்கள் அச்சிட்டு வழங்கும் செயற்பாட்டிற்காக, கொள்வனவு செயற்பாடுகளிலிருந்து விலகி நடவடிக்கை எடுத்து உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படாமல் தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2000 ஞாபகார்த்த புத்தகங்களை வழங்குவதற்காக 2013 செப்தம்பர் 30 ஆந் திகதி ஒப்பந்த பெறுமதியில் 50 சதவீதமான ரூபா 2.6 மில்லியன் முற்பணமாக ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அச்சிட்டு வழங்கும் செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கிரிக்கட்

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் மீளாய்வாண்டிற்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

- 2017 ஆம் ஆண்டிற்குரிய நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் நிலையான சொத்துக்கள் பௌதீக மெய்மையாய்வு சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 4,249.70 மில்லியனான சொத்துக்களின் உள்ளமை மற்றும்

- பெறுமதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

- ஒப்பந்த உடன்படிக்கை, வேலை பொறுப்பேற்ற திகதி, வேலை ஆரம்பிக்கப்பட்ட மற்றும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதிகள் தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களில் ரூபா 240.99 மில்லியனான நடைமுறை வேலைகளின் பெறுமதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை.

- 2013 ஆம் ஆண்டு முதல் செலுத்தப்பட்டிருந்த ரூபா 5.85 மில்லியனான முற்பணத்தை இனங்கண்டு தீர்வு செய்வதற்கு நிறுவனம் தவறியிருந்தது.

- விளையாட்டு போட்டிகளை நடாத்துவதற்காக 2008 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் விளையாட்டுச் சங்கங்களுக்கு ரூபா 58.27 மில்லியன் முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை அம்முற்பணத்தை தீர்வு செய்து கணக்கீடு செய்வதற்கு நிறுவனம் தவறியிருந்தது.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு

மகளிர் வன்முறை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் என்பவற்றிலிருந்து விடுபட்ட சமூகமொன்றை உருவாக்குவதை எதிர்பார்த்து மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு, திணைக்களமொன்றும் 03 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களால் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

- மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் தொடர்பிலான கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல். பின்தொடர் நடவடிக்கைகளும் மதிப்பீடும்.
- பொது அலுவல்களின் போது தீர்மானங்களை எடுத்தலும் அரசியல் துறையினுல் பெண்களின் பங்கேற்பையும் பிரதிநிதித்துவத்தையும் அதிகரிப்பதற்காக உபாயமுறைகளைத் தயாரித்தலும், செயற்படுத்தலும்.
- மோதல்களினாலும் வறுமையினாலும் பாதிக்கப்பட்ட பெண்களைமையமாகக் கொண்ட குடும்பங்களின் உடல், உள ரீதியாக வலுப்படுத்த தேவையான நடவடிக்கை எடுத்தலும் ஆண், பெண் இருதரப்புக்கிடையே சமநிலையையும் நியாயத்தையும் ஏற்படுத்துவதற்கு அவசிய நடவடிக்கைகளை எடுத்தலும்.
- மகளிர் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்தினைத் தவிர்ப்பதற்காக சட்டங்களையும் கொள்கைகளையும் வலுப்படுத்தலும் செயற்படுத்தலும்.
- மகளிர் மற்றும் சிறுவர் நடவடிக்கைகளுக்குரிய மிலேனிய அபிவிருத்தி அபிலாசைகளை நிறைவேற்றுதல்.
- மகளிர் மற்றும் சிறுவர் பட்டயங்களை நடைமுறைப்படுத்தல்.
- பாதுகாப்பற்ற நிலையிலுள்ள சிறுவர்களின் உரிமைகளை தேசிய கொள்கைகள் மற்றும் சர்வதேச நியமங்களுக்கு இயைபானவாறு உயர்ந்த மட்டத்தில் வைத்துர் பேணுவதுடன், அத்தகைய சிறுவர்களுக்கான சமவாய்ப்புக்களை ஏற்படுத்திக் பொடுப்பதற்கான திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்.
- செவண சரண ஆதரிப்புப் பெற்றோர் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

அமைச்சு, திணைக்களமொன்று 03 நியதிச் சட்ட நிறுவனங்களால் மேற்படி செயற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

முன்பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வேலை வழங்கல்

குறைந்த பாரமுள்ள பாடசாலை பிள்ளைகளுக்காக காலை உணவு வேலையொன்று வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 300 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடப்பட்டதன் பிரகாரம் செயற்படுத்துவதில் பலவீனங்கள் காரணமாக அச் செயற்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் ரூபா 133 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

திரிய காந்தா நிகழ்ச்சித்திட்டம்

காந்தா சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 45 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்நிதி ஏற்பாட்டில் ரூபா 17.2 மில்லியன் நிதி ஏற்பாடு விதவைகள் மற்றும் குடும்ப தலைவி பெண்கள் குடும்பங்களை முன்னேற்றுதல், நிரந்தர விவசாய

செயற்திட்டங்கள் மற்றும் திரிய மாதா நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சிகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 16.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது அபிவிருத்தி இலக்குகளுக்காக பொருத்தமான செயற்திட்டங்கள் கிடைக்காமை செயற்திட்டங்களை ஆரம்பித்தலில் தாமதங்கள், பொருளாதார மற்றும் சுற்றாடல் குறிகாட்டிகளை கருத்திற் கொள்ளாமை மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்கள் புதிய செயற்திட்டங்களுக்காக இணங்குவதில் காலதாமதங்கள் காரணமாக நலனாலிகளுக்கு எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் வன்முறை அளவு அதிகரித்தல்

2017 ஆம் ஆண்டின் போது மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் பெண்கள் குழுவின் 1938 ஆம் இலக்க தொலைபேசி இலக்கத்திற்கும் முறைபாட்டு நிலையங்களுக்கும் மாவட்டங்களிலிருந்து வெவ்வேறு வகையில் பெண்கள் வன்முறை 1,514 முறைப்பாடுகள் அறிக்கையிடப்பட்டிருந்தன. அதில் தீர்வு செய்யப்பட்டிருந்த முறைபாடுகளில் அளவு தொடர்பான தரவுகள் முறைமை நாளதுவரையாக்கப்படாமை மற்றும் அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2016 ஆம் ஆண்டின் போது பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர் வன்முறை, துஷ்பிரயோகம் மற்றும் அளவு 2.456 ஆக இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் அந்த அளவு 3,046 வரை அதிகரித்திருந்தது.

அரசியல் துறையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல்.

பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து பெண்களை அரசியல் துறைக்கு நுழைவதற்கு தேவையான அறிவினை பெற்றுக்கொள்வதற்காக ஆறு மாத பாடநெறியொன்றுக்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 670,000 தொகையும் 2010 ஆம் ஆண்டில் இருந்து 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 6 மில்லியனும் செலவிடப்பட்டிருந்தது. அப்பாடநெறிகளில் 4 பாடநெறிகளை பூர்த்தி செய்த 109 மாணவர்களுக்காக சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் பாடநெறிகளை பின்பற்றிய பெண்கள் இலங்கை அரசியலுக்கு பெண்கள் பிரதிநிதித்துவத்தை உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு வருவதற்கும் அப்பாடநெறிகள் பங்களிப்பு செய்திருந்தமை தொடர்பாக அமைச்சினால் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சிறுவர்களின் உரிமை தொடர்பான சட்டங்களை தயாரிக்காமை

1956 ஆம் ஆண்டில் ஆரம்பமான நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் 61 வருடங்கள் கடந்திருந்த போதிலும் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் உலக நியதிச்சட்டத்திற்கு இணங்க தேசிய கொள்கையொன்று தயாரிப்பதற்கும் அதற்குரிய சட்டங்களை தயாரித்தல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

முறைப்பாடுகள் தொடர்பான செயற்பாடு

நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 12,093 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 9 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அம்முறைப்பாடுகளில் 6,232 முறைப்பாடுகள் மாத்திரம் முழுமையான தீர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. 3,569 முறைப்பாடுகளுக்காக தற்காலிக தீர்வுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2,268 முறைப்பாடுகள் தீர்வுகளுக்காக வேறு

நிறுவனங்களுக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. 24 முறைப்பாடுகளுக்காக பதில் வழங்கப்படாமல் இருந்ததுடன் பிள்ளைகளின் முறைப்பாடுகளுக்காக வழங்கப்பட்ட தீர்வுகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சிறுவர் இல்லங்கள் கண்காணிப்பு பலவீனமடைந்தமை

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 140 சிறுவர் இல்லங்களை கண்காணிப்பதற்காக ரூபா 4.97 மில்லியன் செலவினமொன்று குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதற்காக வருடாந்தம் பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 5.00 மில்லியன் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, எனினும் மீளாய்வாண்டின் பேது 16 சிறுவர் இல்லங்கள் மாத்திரம் கண்காணிக்கப்பட்டிருந்தன.

சிறுவர்களுக்காக சமூக பாதுகாப்பு செயற்திட்டம்

சிறுவர்களுக்காக சமூக பாதுகாப்பு செயற்திட்டத்தின் கீழ் நான்கு பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5.5 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாவட்ட செயலாளர்கள் மற்றும் உதவி பிரதேச செயலாளர்களுக்காக அறிவூட்டும் வேலைத்திட்டங்களை நடாத்துதல், ஊனமுற்ற பிள்ளைகளை சமூக / சிறுவர் சபைகளில் செயல்ரீதியாக பங்குபற்றும் இயலுமையை ஏற்படுத்துவதற்காக விசேட செயற்பாடுகளை எடுத்தல், தேசிய ஆராய்ச்சி சம்மேளனமொன்றை நடாத்துதல், இலங்கையில் வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பு நிறுவனங்களில் இருக்கும் பிள்ளைகள் சிறுவர் வியாபாரத்துடன் தொடர்புருவதை இனங்காணும் கூட்டிணைப்பொன்று மற்றும் அமைப்புகள் போன்ற செயற்பாடுகள் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ஆராய்ச்சி மற்றும் வீடியோ வடிவமைத்தல்

சிறுவர் உரிமகளைப் பாதுகாப்பதற்காக பிள்ளைகளுக்கு சிறுவர் உரிமை தொாடர்பான நட்பு ரீதியாக அறிவூட்டுவதை நோக்காகக் கொண்டு 4 தலைப்புக்களில் 4 வீடியோ பதிவுகளை வடிவமைப்பதற்காக ரூபா 1.81 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது, அவ்வீடியோக்களை 2015 யூன் 25 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு பயிற்சி நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

சிறுவர்களுக்கு மானியப் பணம் செலுத்தப்படாமை

தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் வழிகாட்டல் கோவையின் பிரகாரம் சிறுவர் அபிவிருத்தி நிதியத்தினை தாபித்ததன் பிரதான நோக்கம் யுத்த சூழ்நிலைகள் மற்றும் ஏனைய இயற்கை அனர்த்தங்களினால் தமது பெற்றோர்களையோ பாதுகாவலர்களையோ இழந்த பிள்ளைகள் உட்பட பொருளாதர பிரச்சினைகளால் தமது கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கும் தேர்ச்சிகள் மற்றும் ஏனைய திறமைகள் என்பவற்றை அதிகரித்துக் கொள்ள முடியாத இலங்கை குழந்தைகளுக்கு நிதி உதவிகள் வழங்குவதாகும். மீளாய்வாண்டின் இறுதியில் தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்தில் ரூபா 5.6 மில்லியன் காணப்பட்டது. அந்நிதிகளை சிறுவர்களுக்கு உதவி வழங்குவதற்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் 2015, 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் எவ்வித உதவி மானியமொன்றும் சிறுவர்களுக்கு செலுத்த நிதியம் தவறியிருந்தது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கையை சட்டரீதியாக்காமை

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தாபிக்கப்பட்டு 20 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கையை சட்டரீதியாக்குவதற்கு மீளாய்வாண்டின் போதும் தவறியிருந்தது.

முறைப்பாடுகளுக்காக தீர்வு வழங்குவதில் தாமதம்

2017 ஆம் ஆண்டின் போது சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 9,014 முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. 2018 பெப்ரவரி 15 ஆந் திகதி வரையில் 2,613 முறைப்பாடுகள் தீர்வு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் கிடைத்த முறைப்பாடுகளில் 71 சதவீதம் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. 2011 - 2015 காலப்பகுதியில் கிடைக்கப் பெற்றிருந்த 63,189 முறைப்பாடுகளில் 55 சதவீதம் 201 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.
அதிகாரசபைக்கு வருடம் பூராகவும் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாக தகவல் சேகரிக்கப்பட்டு அறிக்கையிடுவதற்கு பிரதேச மற்றும் மாவட்ட உத்தியோகத்தர்களின் செயற்திறனின்மை தகவல்களைக் கோருதல் மற்றும் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படாமை முறையான கண்காணிப்பொன்று மேற்கொள்ளாமை போன்றவற்றால் முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை துரிதமாக அதிகரத்திருந்தது. அவ்வாறே 2016 ஆம் ஆண்டு முதல் 100 இற்கு மேற்பட்ட பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எண்ணிக்கையொன்று வெற்றிடங்களாக காணப்பட்டதுடன், அந்த ஆட்சேர்ப்பிற்காக தெரிவுசெய்யப்பட்ட 116 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக 2017 திசெம்பர் 14 ஆந் திகதி கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. சிறுவர் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது தொடர்பாக இந்த உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டமையும் முறைப்பாடுகளைத் தீர்வு செய்வதற்கு தாமதமாவதற்கு காரணங்களாக இருந்தன.

முன்பருவ பிள்ளை அபிவிருத்தி செயற்திட்டத்தின் செயற்றாடுகளை திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நிறைவேற்றாமை

இலங்கையில் உயரத்திலான முன் பிள்ளை பருவ அபிவிருத்தி செய்யும் நோக்கில் 50 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் உலக வங்கி கடன் மானியங்களின் கீழ் முன் பிள்ளை பருவ அபிவிருத்தி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததது. 2017 ஆம் ஆண்டிற்காக செயற்திட்டத்தை செயற்படுத்த ரூபா 750 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 523 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. முன் பிள்ளை பருவ அபிவிருத்தி நிலையங்களின் வருடாந்த சிறுவர் அபிவிருத்தி மதிப்பீடு, பொருளாதார பிரச்சினைகள் உள்ள பிள்ளைகளுக்காக முன்பள்ளி பாடசாலைக் கட்டணங்களில் சலுகை வழங்குதல்குறைந்த வருமானம் பெறுகின்ற பிரதேசங்களில் 12 முன் பிள்ளை பருவ அபிவிருத்தி நிலையங்களை ஸ்தாபித்தல், ஆரம்ப தர ஆசிரியர்களுடன் இணைந்த நிகழ்ச்சித்திட்டங்கள், முன் பிள்ளை பருவ அபிவிருத்தி நிலையங்களைப் பதிவு செய்தல் மற்றும் முறையான மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு முறைமையொன்றை அறிமுகப்படுத்துதுல் ஆகிய செயற்பாடுகளுக்காக ரூபா 164.40 ஆன நிதிஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலம் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் அச்செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

முன் பிள்ளை பருவ அபிவிருத்தி சேவைகளை மேம்படுத்துதுல்

பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி பொறுப்பின் கீழ் தோட்டங்களில் முன் பிள்ளை பருவ அபிவிருத்தி சேவைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் முன் பிள்ளை பருவ அபிவிருத்தி

நிலையங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 98.84 மில்லியன் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. மேலும் 06 நிலையங்களுக்கு அவற்றின் வேலைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு முன்னர் ரூபா 1.69 மில்லியனான விளையாட்டு உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் சமையலறை உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றை முறையாக களஞ்சியப்படுத்தாமை காரணமாக பயன்பாட்டிற்கு பொருத்தமற்றதாக இருந்தன.

சுற்றுலாத்துறை அலுவல்கள்

இலங்கை சுற்றுலாப் பயணிகளின் நினைவில் நிற்கும், உண்மையான மற்றும் பல்வேறு அனுபவங்களுக்காக உலகின் விசேட தீர்வொன்றாக இனங்காண்பதற்கு தேவையான கொள்கைகளை தயாரிப்பதன் மூலம் இலங்கை இளைஞர் சமூகத்திற்கு நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் பொருளாதாரத்திற்கு உயர் அந்நியச் செலாவணியொன்றை உழைத்தல் சுற்றுலா அலுவல் பிரிவின் பிரதான நோக்கங்களாக இருந்தன. அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு, திணைக்களமொன்றும் 04 நியதிச்சட்ட நிறுவனங்களாலும் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- சுற்றுலாத்துறை அபிவிருத்தி அலுவல்கள் தொடர்பான கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் செயற்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கணக்காணித்தலும் மதிப்பிடுதலும்.
- சுற்றுலாத்துறை கைத்தொழில் அபிவிருத்தியும் நியமங்களையும் வகுத்தமைத்தலும்
- சுற்றுலாத்துறை முகவராண்மைகளின் பதிவு ஒழுங்குபடுத்துகையும்
- ஓய்வு நேரங்களைக் கழிப்பதற்காக பொழுதுபோக்கு வசதிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேம்படுத்தல்.

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களால் மேற்படி செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் கீழே காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

சுற்றுலா பயணிகளின் வருகையும் அந்நியச் செலவாணி உழைப்பும்

கவர்ச்சிகரமான கடற்கரைகள், சுமூகமான மற்றும் நட்பு ரீதியான மக்களுடனான வளம்மிக்க உயிரினங்கள் மற்றும் இயற்கையான கலாச்சாரம், பல்வகை உணவுகள், நீருடன் இணைந்த சாகச அனுபவங்கள் மற்றும் அபூர்வமான உலகளாவிய கவர்ச்சி மிக்க இடமொன்றாக ஆசியாவின் சுற்றுலா சின்னமாகவும் ஆசியாவின் சுற்றுலா சாகசம்மிக்க இடங்களாகவும் தமது பிரதிபிம்பத்தை முன்னேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 598,356 ஆன அந்நியச் செலவாணியொன்று இலங்கைக்கு வழங்கி 2,116,407 சுற்றுலா பயணிகள் வருகை தந்திருந்தனர்.

நாடென்ற என்ற வகையில் எடுக்கும் போது சுற்றுலாக் கைத்தொழிலில் இருந்து இலங்கை கூடுதலான அந்நியச் செலவானியை ஈட்டுவதை எதிர்பார்த்துள்ளதுடன் 2017 ஆம் அண்டின் போது இக்கைத்தொழிலில் இருந்து ரூபா 3,924.9 மில்லியனான வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது 11.6 சதவீதத்தினால் அங்கீகரித்திருந்தது.

எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது சுற்றுலாப் பயணிகள் வருகை 2.1 மில்லியனாக இருந்த போதிலும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் அதிகரிப்பு வேகம் 11 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. 2017 சனவரி மாதத்திலிருந்து ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியில் விமான நிலையத்தின் ஒரு பகுதி மூடப்பட்டிருந்தமை, மே மாதத்தில் தெற்கில் ஏற்பட்ட வெள்ளம் வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மலை நாட்டில் வரட்சி காணப்பட்டமை, சர்வதேச ரீதியான ஏற்பட்ட பாதகமான

பெறுபேறுகளை ஏற்படுத்திய டெங்கு நோய், பரவியமை மற்றும் கழிவுப்பொருள் பிரச்சினைகள் காரணமாக அந்த அதிகரிப்பு வேகம் குறைவடைந்திருந்தது.

முன்னைய ஆண்டின் போது உட்பட மீளாய்வாண்டின் போதும் பிரதான வலயங்களில் பெரும்பாலானவற்றில் சுற்றுலா பிரயாணிகள் வருகையில் அதிகரிப்பொன்று காணப்பட்டது. அதன் பிரகாரம் கிழக்கு ஆசியாவிலிருந்து 4.5 சதவீதமும், மேற்கு ஐரோப்பாவிலிருந்து 5.8 சதவீதமும் தென் ஆசியாவிலிருந்து 0.9 சதவீதமாகவும் அதிகரித்திருந்தது. அவ்வாறே நாடென்ற ரீதியில் முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டிலும் கூடுதலான சுற்றுலா பிரயாணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்தனர். அந்த அளவு 384,628 ஆக இருந்தது. அதற்கு பின்னர் கூடுதலாக சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையான 268,952 பேர் மக்கள் சீனக் குடியரசிலிருந்து வருகை தந்திருந்தனர். முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டிலும் கூடுதலான சுற்றுலா பயணிகள் வருகை அறிக்கையிடப்பட்ட 10 நாடுகள் மற்றும் வருகை தந்த சுற்றுலா பிரயாணிகளின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணை 28இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிலும் சுற்றுலா பயணிகள் வருகை அட்டவணை 28 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



வரைபு 28….. நாடுகளின் சுற்றுலா பிரயாணிகளின் வருகை
மூலம்….. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தரவுகள்

வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை அதிகரித்தமையும் சுற்றுலா பிரயாணி ஒருவரின் சராசரி செலவினம் மற்றும் சுற்றுலா பிரயாணி ஒருவர் இலங்கையில் செலவிடும் சராசரி நாட்களின் அளவு அதிகரித்தமை சுற்றுலா உழைப்பு அதிகரித்தமைக்கு பிரதான காரணமாக இருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது சுற்றுலா பிரயாணி ஒருவரின் சராசரி நாளாந்த செலவினம் ஐ.அ.டொலர் 170.1 ஆக இருந்ததுடன் அப்பெறுமதி 2016 ஆம் ஆண்டின் போது ஐ.அ.டொலர் 168.2 ஆக இருந்தது. அதன் பிரகாரம் சுற்றுலா உழைப்பு ஏதேனும் விகிதமொன்றினால் அதிகரிப்பது தொடர்பில் அது தாக்கமளித்திருந்தது. அவ்வாறே சுற்றுவா பிரயாணி ஒருவர் இலங்கையில் செலவிடும் சராசரி நாட்கள் 2017 ஆம் ஆண்டின் 10.9 ஆக இருந்ததுடன், அது முன்னைய ஆண்டில்

10.2 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும் 1987 ஆம் ஆண்டின் போது சுற்றுலா பிரயாணி ஒருவர் இலங்கையில் செலவிட்ட சராசரி நாட்களின் எண்ணிக்கை 13.2 உடன் ஒப்பிடும் போது அந்த இலக்கை அடைவதற்கு மீளாய்வாண்டின் போதும் முடியாதிருந்தது.

இலங்கையை உலக சுற்றுலாக் கைத்தொழிலில் உயர்ந்த இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கு 2017 ஆம் ஆண்டின் போது சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபா 3,924 மில்லியனான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தன. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு அந்நிதி ஏற்பாட்டிலிருந்து 14 சதவீதமும் இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்திற்கு 70 சதவீதமும் இலங்கை சுற்றுலா மற்றும் ஹொட்டல் முகாமைத்துவ நிறுவனத்திற்கு 12 சதவீதமும் இலங்கை சுற்றுலா சம்மேளனப் பணியகத்திற்கு 4 சதவீதமுமாக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு மேலதிகமாக 2017 வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் சுற்றுலா அபிவிருத்தி மற்றும் நடவடிக்கைகளுக்காக சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சிற்கு ரூபா 618 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் சட்டடத்தின் மூலம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபைக்கு, இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்திற்கு இலங்கை சுற்றுலா மற்றும் ஹொட்டல் முகாமைத்துவ நிறுவனத்திற்கும் இலங்கை சுற்றுலா சம்மேளன பணியகத்திற்கும் கையளிக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் கடமைகளிலிருந்து இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பதிவு செய்யப்படாத சுற்றுலா சுற்றுலா பயண சேவைகளில் ஈடுபடும் எவரேனும் நபரெர்ருவரோ அல்லது நபரொருவர் தவறொன்றுக்கு குற்றவாளியாக்குவதற்கு விதிகளை பிறப்பிப்பதற்கு, சுற்றுலா கைத்தொழில் அல்லது அதனுடன் அண்மித்த ஏனைய கைத்தொழில்களுக்குரிய உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொண்ட நியமங்களை மேம்படுத்துதல், அமுலாக்குதல் மற்றும் பேணிச் செல்லல் என்பவற்றுக்காக சுற்றுலா கைத்தொழில்களுக்குரிய உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொண்ட நியமங்களை மேம்படுத்தல், அமுலாக்குதல் மற்றும் பேணிச் செல்லல் என்பவற்றுக்காக சுற்றுலா முயற்சியாளர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கி சுற்றுலா கைத்தொழில்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக நிறுவனங்கள் மற்றும் வியாபாரங்களை தாபித்தல் போன்ற செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

சுற்றுலா கவர்ச்சியினை அபிவிருத்தி செய்தல்

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சிற்கு சுற்றுலா பயணிகளை கவர்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 568 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 162.3 அதாவது மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாட்டில் 28.5 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

சுற்றுலா கிராமங்களை அபிவிருத்தி செய்தல்

சுற்றுலா கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 25 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 556,828 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதனை செயற்படுத்தும் முறை தொடர்பான கொள்கை தொகுதியொன்று / வழிகாட்டலொன்று தயாரிக்கப்பட்டு அதிகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ஏற்றுமதி வரி அறவிடப்படாமை

2003 இன் 25 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 2(ஆ) உப பிரிவின் பிரகாரம் இலங்கைக்கு வெளியே கப்பல் மூலம் பிரயாணிக்கும் பிரயாணிகளுக்காக வழங்கப்படும் ஒவ்வொரு பிரயாணச் சீட்டிலிருந்து வரி அறவிடப்பட்டு அதன் ஒரு பகுதியை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதில் பிரயாணித்த பிரயாணிகளிடமிருந்து வரியினை அறவிட்டு அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டின் போது 27565 பிரயாணிகள் வெளியேறியிருந்த போதிலும் அதற்காக ஒரு பிரயாணியிடமிருந்து ஐ.அ.டொலர் 1.66 வீதம் நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 6.41 மில்லியன் ஏற்றுதி வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையிலிருந்து விலகி நடவடிக்கை எடுத்தல்

2017 செப்தெம்பர் 16 ஆந் திகதி முதல் 26 ஆந் திகதி வரை பிரான்சில் நடாத்தப்பட்ட சர்வதேச பிரான்ஸ் சுற்றுலா சந்தைக்காக ரூபா 35 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அங்கு வியாபார கூடங்களை வடிவமைப்பதற்கும் நிர்மாணிப்பதற்கும் ரூபா 8.24 மில்லியன் நடனக் குழுவொன்றை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 1.03 மில்லியனும் செலவிடப்பட்டிருந்தது. அதற்குரிய வழங்குனர் தெரிவின் போது அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு புறம்பாக வேறு பதவியணியினரை நியமித்தல்.

சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கை தூதுவராலயங்களுக்கு இணைக்கப்பட்டிருந்த வர்த்தக திணைக்களத்தின் வர்த்தக உத்தியோகத்தொருவர் மற்றும் நிறுவனத்தின் பதவியணியினருக்கு உள்ளடக்குவதற்கு (ஐக்கிய நாடுகளின் சந்தை நடவடிக்கைகளுக்காக) மூன்று உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். எனினும், இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தின் முகாமையாளரால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத பணிப்பாளர் பதவியொன்றும் சுற்றுலா மேம்படுத்தல் உத்தியோகத்தர் பதவியொன்றுக்காக முறையற்ற விதத்தில் ஒப்பந்த மற்றும் அமைய அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டிருந்தன. அந்த நியமனத்தை அடிப்படையாகக் கொண்டு சம்பளம், போக்குவரத்து, வீட்டு வாடகை, தொலைபேசி மற்றும் மேலதிக படிகள் மற்றும் ஏனைய படிகளாக இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தினால் ரூபா 179.44 மில்லியன் சிக்கனமற்ற வகையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

நகர அபிவிருத்தி

மேல்மாகாண வலயம் மற்றும் ஏனைய மாநகர பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியில் அபிவிருத்தியடைந்த சமுதாயமொன்றை உள்ளடக்கிய அதி நவீன கட்டிட கலையுள்ள நகராக வடிவமைத்தல் இத்துறையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளாக இருந்தது. அந்த பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகள் / 02 நிறுவனங்களினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி விடயங்களுக்குரிய நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வளங்கல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு.
- கொட்டாவ, கடுவெல மற்றும் கடவத்த நகர அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் அதனை அண்மித்த செயற்பாடுகள்.
- நகரப் பிரதேசங்களில் பொருளாதாரம், சமூக மற்றும் பௌதீக அபிவிருத்திகளை ஒன்றிணைத்து முறையான மேம்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் செயற்பாடுகள்.
- நகர கழிவுப்பொருள் முகாமைத்துவம்
- தாழ்நிலங்களை நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள்.
- நகரப் பிரதேசங்களில் அமைந்துள்ள சேவை மற்றும் வசதிகள் குறைந்த பிரதேசங்கள் மற்றும் சதுப்பு நிலம் என்பன பொதுத்திட்டத்தின் பிரகாரம் அபிவிருத்தி செய்வதற்கு தேவையான வழிகாட்டல்
- தேசிய பௌதீக திட்டமிடல் மற்றும் பிரதேச ரீதியான பௌதீக திட்டங்களை தயாரித்தல்.
- ஒன்றிணைந்த நகர அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்காக தேசிய பௌதீக திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு சகல நிர்வாக நடவடிக்கைகளையும் கையாளல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
- அமைச்சின் விடயப்பரப்பிற்குரிய நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள சகல விடயங்களுக்கும் உரிய நடவடிக்கைகள்
- அமைச்சின் விடயப்பரப்பிற்குரிய நிறுவனங்களின் மேற்பார்வை.

நகரில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வலயங்களை இனங்காணல்

1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் நாட்டில் நகரில் அபிவிருத்தி செய்ய வேண்டிய வலயங்களை கண்டறிதல் மற்றும் அந்த வலயங்களுக்கான அபிவிருத்தி திட்டங்களை தயாரித்தல் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் 243 நகர அபிவிருத்தி திட்டங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அதில் அபிவிருத்தி திட்டம் 40 வலயங்களுக்கு மாத்திரமே தயாரிக்கப்பட்டிருந்தது.

உபாய வழிகளில் நகர அபிவிருத்தி செயற்திட்டம்

உபாய நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் இலங்கையின்

பங்குபற்றலுடன் நகர வலயங்களில் தெரிவு செய்யப்பட்ட நகர சேவை மற்றும் பொது நகர இடங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் அமுல்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் கீழ் பங்குபற்றலுடன் நகர வலயமாக கண்டி நகரம், காலி நகரம் என்பன தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் நிதிரீதியான உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 25,162.5 மில்லியனுக்கு சமனான ஐக்கிய அமெரிக்க டொலர் 192.8 மில்லியன் ஆக இருந்தது. அந்தக் கிரயத்தில் ரூபா 19,257 மில்லியனுக்கு சமனான ஐக்கிய அமெரிக்க டொலர் 167 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்தது. 2017 மே மாதம் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பான நகரை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளும் இந்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடுகளில் இருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் கீழ்வரும் நகர அபிவிருத்தி செயற்பாடுகள் 2021 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

பிரமாணங்களுக்கு முரணாக ஆலோசனையாளர்களை சேர்த்தல்

2016 மார்ச் 24 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 8.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி உடன்படிக்கை மற்றும் அரசாங்க பெறுகை வழிகாட்டிகளில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க ஆலோசனையாளர்கள் சேர்க்கப்பட வேண்டியிருந்தனர். அந்த நியதிகள் பின்பற்றப்படாமல் மீளாய்வாண்டின் போது 11 ஆலோசனையாளர்கள் சேர்க்கப்பட்டு கூட்டுமொத்தமாக 36 மில்லியன் சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது.

செயற்திட்டத்தின் செயலாற்றல் குறைவடைந்தமை

இந்த செயற்திட்டத்திற்காக கடன் வழங்கப்படுகின்ற முகவர் நிறுவனத்தினால் ரூபா 27,507 மில்லியன் தொகைக்குச் சமமான ஐ.அ.டொலர் 202 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையில் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 3 ½ வருடங்கள் அளவிலான காலம் கடந்திருந்த போதிலும் இதுவரையில் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 11 சதவீதமான ரூபா 3,421.72 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 23.16 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக பிரதானமாக செயற்திட்டத்தின் பணிகள் மாதாந்தம் காலாண்டு ரீதியில் மற்றும் அரையாண்டு ரீதியில் ஒதுக்கப்பட்டு இலக்குகள் தீர்மானிக்கப்பட்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாமையினால் செயற்திட்டத்தின் செயலாற்றல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

காணியைக் கைப்பற்றல் மற்றும் மீளக்குடியமர்த்துவதற்கு முறையான திட்டமொன்று தயாரிக்கப்படாமை

காணிகளைக் கைப்பற்றல், மீளக் குடியமர்த்துதல் பணிகளுக்காக முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காமையினால் மீளாய்வாண்டின் போது யாழ்ப்பாண நகரத்தின் அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 335 மில்லியன் தொகைக்குச் சமனான ஐ.அ.டொலர் 2.17 நிதிஏற்பாட்டில் ரூபா 44.72 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 0.29 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் ஆரம்பிக்கப்படாமை

மீளாய்வாண்டின் போது கண்டி, காலி மற்றும் யாழ்ப்பாணம் போன்ற நகரங்களில் புனரமைப்பு வேலைகள் நடவடிக்கைகளுக்காக 87 ஒப்பந்தங்கள் ரூபா 19,623 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தில் ஒப்பந்தங்களைக் கையளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையில் அந்த ஒப்பந்தங்களிலிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 8,289 மில்லியன் தொகையான ஒப்பந்தங்கள் 34 ஒப்பந்தகாரர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், திட்டமிடப்பட்ட பிரகாரம் ரூபா 1,065 மில்லியனுக்கு கையளிக்கப்பட்ட 25 உப செயற்திட்டங்களுக்குரிய ஒப்பந்தங்களின் சேவைகள் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தை விஞ்சி ஒப்பந்தங்களைக் கையளித்தல்

கண்டி நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் பொது வைத்தியசாலை தர்மாசோக்க மாவத்தை மற்றும் கட்டுகஸ்தோட்டை, மடவள, திகன வீதி போன்ற இரண்டு ஒப்பந்தங்களினதும் பொறியியலாளர் மதிப்பீடுகளின் பெறுமதி முறையே ரூபா 911 மில்லியன் மற்றும் ரூபா 2,156 மில்லியன் ஆக இருந்த போதிலும், அந்த மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை விஞ்சி முறையே ரூபா 727 மில்லியன் மற்றும் ரூபா 1,615 மில்லியன் என்ற அதிகரித்த பெறுமதிகளுக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் மற்றும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட பெறுமதிக்கிடையே கோடிட்டுக் காண்பிக்கின்ற பாரியளவான முரண்களுக்கான காரணம் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மேற்கூறப்பட்ட 02 ஒப்பந்தங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 351 மில்லியன் வேலை ஆரம்பிக்கின்ற முற்பணம் இரண்டு ஒப்பந்தகாரருக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அவற்றின் செயல்முன்னேற்றம் 30 சதவீதத்தை விட குறைவடைந்தமையினால் வழங்கப்பட்ட முற்பணத்தை மீள அறவிடுவற்கு முடியாதிருந்தது.

அந்த நியதிகள் பின்பற்றப்படாமல் மீளாய்வாண்டின் போது 11 ஆலோசனைகள் பெறப்பட்டு கூட்டுமொத்தமாக ரூபா 36 மில்லியன் சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது.

வேலை ஆரம்பிப்பு முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதும் ஆரம்பிக்கப்படாத ஒப்பந்தங்கள்

கண்டி மாநகர சபையின் வாகனத் தரிப்பிடத்தை அபிவிருத்தி செய்யும் ஒப்ப்நதத்தின் கீழ் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னரும் ஒப்பந்தம் கையளிக்கும் கடிதம் வழங்குவதற்கு முன்னரும் வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 49 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் ஒப்பந்தத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்தகாரர்களின் இயலுமை, செயலாற்றல் என்பவற்றை கவனத்தில் கொள்ளாமல் கண்டி டொமிலீன் பூங்காவை அபிவிருத்தி செய்யும் ஒப்பந்தத்திற்காக வேலை ஆரம்பிப்பு முற்பணமாக 02 தவணைகளில் கூட்டுமொத்தமாக ரூபா 58.82 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே ஒப்பந்தத்திற்குரிய ஆரம்ப வடிவமைப்புத் திட்டங்களின் குறைபாடு காரணமாக ரூபா 27 மில்லியன் மேலதிக தொகையொன்றைச் செலவிட வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் ஒப்பந்த காலமும் மேலும் 3 ½ மாதங்களினால் நீடிக்க வேண்டி ஏற்பட்டிருந்தது.

பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாமை

செயற்திட்டத்திற்காக பெறுகைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காமையினால் ஐ.அ.டொலர் 44.33 மில்லியன் தொகையான மதிப்பீட்டுக் கிரயத்தின் கீழ் 105 பெறுகை நடவடிக்கைகளை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது.

பெறுகை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமை

கண்டியில் மழை நீர் வழிந்தோடிச் செல்லும் வடிகாண் முறைமையை நிர்மாணிப்பதற்காக ரூபா 950 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தின் கீழ் ஒப்பந்தத்திற்காக பெறுகை நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் அந்த பெறுகை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

கடன் வழங்குகின்ற நிறுவனங்களினால் கடன் வசதிகள் நிறுத்தப்படுதல்

கெட்டம்பே நீர்சுத்திகரிக்கும் இயந்திரக்கூடத்தை மீள நிர்மாணிக்கும் ஒப்பந்தம் ரூபா 899 மில்லியன் தொகையில் கையளிக்கப்பட்டதை அடுத்து ஒப்பந்தகாரரின் இயலுமை மற்றும் வசதிகள் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையின் அடிப்படையில் மீண்டும் கேள்வி கோருவதற்கு பெறுகை முறைப்பாட்டுக் குழு தீர்மானித்திருந்தது. அந்த நிலைமையின் கீழ் இந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிவசதிகள் கடன் வழங்குகின்ற முகவர் நிறுவனங்களினால் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்தது. இதனால் கெட்டம்பே நீர் சுத்திகரிப்பு இயந்திரம் சுத்திகரித்தலை நிறுத்தியிருந்தது.

நிதித்தேவைகள் தொடர்பாக நலிவுகளின் எதிர்வுகூறல்

செயற்திட்ட நடவடிக்கைகளில் குறைந்த செயல்முன்னேற்றம் மற்றும் நிதித் தேவைகள் தொடர்பாக காணப்பட்ட நலிவுகளின் எதிர்கூறலின் காரணமாக ரூபா 634.5 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 4.26 மில்லியன் தொகை செயற்திட்டத்தின் விசேட டொலர் கணக்கில் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் முழுவதும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

திட்டமிடலின்றி வாடகை வாகனங்களைப் பயன்படுத்துதல்

செயற்திட்டத்திற்காக மாதமொன்றிற்கு ஆகக் கூடியதாக 2,500 கிலோமீற்றர் ஓடக்கூடிய வகையில் வாடகை அடிப்படையில் மோட்டார் வாகனம் பெறப்பட்டிருந்தது. வாகனங்கள் ஓடக்கூடியதாக இருந்த தூர அளவு குறைவாக ஓடியிருந்தது. எனினும், வாகனங்கள் ஓடக்கூடியதாக இருந்த தூர அளவை விஞ்சி கூட்டுமொத்தமாக 133,841 கிலோமீற்றர் ஓடப்பட்டமையினால் ரூபா 7.15 மில்லியன் மேலதிகச் செலவினமொன்று ஏற்பட்டிருந்தது. இவ்வாறு வாடகை அடிப்படையில் பறப்பட்ட வாகனங்களின் ஆகக்கூடிய செயற்திறன் மற்றும் சரியான மதிட்டபிடலின்றி ஓடப்பட்டமையினால் மேலதிக செலவினத்தைச் செய்வதற்கு செயற்திட்டத்திற்கு ஏற்பட்டிருந்தது.

ஆரம்ப விசாரணை மற்றும் சுற்றாடல் தாக்கம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்படாமை

காலி கோட்டையின் அரண்மனை மீள்நிர்மாணம் செய்யும் போது ஆரம்ப

விசாரணை மற்றும் சுற்றாடல் தாக்கங்கள் தொடர்பான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாமல் ஆலோசனையாளர்களினால் அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் மீள்நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. எனினும், அந்த அறிக்கையைத் தயாரிப்பதற்காக ஆலோசனையாளர்களுக்கு ரூபா 60 மில்லியன் செலுத்தப்பட்டமையினால் அந்த செலவினம் பயனற்றதாக இருந்தது.

குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

செயற்திட்டத்தால் மீளாய்வாண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 195 மில்லியனுக்கு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு கண்டி மற்றும் காலி மாநகர சபைகளுக்கும் நீர்ப்பாசன திணைக்களத்திற்கும் கையளிக்கப்பட்டிருந்தது. அந்த சொத்துக்களை பயன்படுத்தும் திட்டமொன்று காணப்படாமையினால் கொள்வனவு செய்யப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் அந்த சொத்துக்கள் கையளிக்கப்பட்ட நிறுவனங்களின் வளாகத்தில் 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் குறைந்த பயன்பாட்டுடன் காணப்பட்டது. மேலும், ரூபா 120 மில்லியன் கிரயத்தில் 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நீரக்குழாய் மற்றும் துணைப்பாகங்கள் 2018 ஏப்ரல் மாதம் வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வளவில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது.

அநுராதபுரம் ஒன்றிணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டம்

கலாசார மற்றும் பாரம்பரிய புலமைகளைப் பாதுகாக்கும் அனுராதபுர நகரத்தில் புராதன மற்றும் நவீனமயமாக்கப்பட்ட பிரதேசங்களுக்கிடையே சமத்துவமான அபிவிருத்தி மேம்பாட்டைச் செய்யும் நோக்கில் இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த கிரயம் 9,779.95 மில்லியனுக்குச் சமமான யூரோ 62.4 மில்லியனாகக் காணப்பட்டது. அந்தக் கிரயத்தில் ரூபா 8,150 மில்லியனுக்குச் சமமான யூரோ 52 மில்லியன் பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் நிறுவனத்தினால் வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்திட்டம் மீளாய்வாண்டின் போது ரூபா 52.01 மில்லியன் அதாவது யூரோ 0.33 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த செயற்திட்டத்தின் காலத்தை மேவுகை செய்யும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் அல்லது மீளாய்வாண்டிற்காக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே செயற்திட்டம் மூலம் செய்யப்படுகின்ற சிவில் வேலைக்காக விரிவான நடவடிக்கைத் திட்டமொன்றைத் தயாரிக்கும் தாமதத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பெறுகை மற்றும் நகர திட்டமிடல் தொடர்பாக தேவையான தகவல்கள் மற்றும் அனுபவங்கள் இன்றிய இரண்டு உத்தியோகத்தர்கள் உதவிப் பணிப்பாளராக சேர்க்கப்பட்டு செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் மூலம் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தாமதமாவதற்கு காரணமாக இருந்தது.

திருகோணமலை மாவட்டத்தில் பாரிய திட்டத்தைத் தயாரிக்கும் செயற்திட்டம்

திருகோணமலை மாவட்டத்தில் விவசாய, வலுசக்தி மற்றும் சுற்றுலா கைத்தொழில் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் மாநகர திட்டமொன்றைத் தயாரிக்கும் செயற்திட்டமொன்று மாநகர் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்ட

ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் சிங்கப்பூரின் ஆலோசனைக் கம்பனியொன்று செயற்திட்டத்தின் மதியுரையாளராக தெரிவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஐ.அ.டொலர் 982,000 கிரயத்தில் திருகொணமலைத் மாவட்ட பாரிய திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக முன்னைய ஆண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் பிரகாரம் 09 மாதங்களில் அறிக்கை கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந்த அறிக்கை கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் ஐக்கிய அமெரிக்க டொலர் 589,200 தொகை அதாவது ரூபா 90.29 மில்லியன் தொகைக்குச் சமமான தொகையொன்று 03 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2018 யூன் மாத இறுதிவரையிலும் திருகோணமலை மாவட்ட பாரிய திட்டம் தயாரிக்கப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு ஆலோசனைக் கம்பனியின் உடன்படிக்கையின் பிரகாரம் 09 மாத காலத்தில் திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தவறியமையின் அடிப்படையில் அவ்வவ்போது அமைச்சரவையினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் மூலம் மேலும் 08 மாத காலம் நீடிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

திட்டம் தயாரித்தலில் தாமதம் ஏற்பட்டமையினால் பதவியணியினருக்கு சம்பளம் மற்றும் படிகள் செலுத்துதல்

திட்டம் தயாரிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த காலத்தில் சிங்கப்பூர் கம்பனியால் அந்த திட்டத்தை வழங்குவதற்கு முடியாதிருந்தது. செயற்திட்டம் 2017 நவம்பர் 30 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் திட்டம் தயாரித்தலில் உள்ள தாமதத்தினால் 2018 யூலை 31 ஆந் திகதி பதவியணியினர்களுக்கு சம்பளம் செலுத்தி செயற்திட்டத்தை நடாத்திச் செல்ல வேண்டியிருந்தது.

ஏனைய செயற்திட்டத்தினாலும் திணைக்களத்தினாலும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

சிங்கப்பூர் கம்பனியினால் திட்டம் தயாரிப்பதற்கு கையளிக்கப்பட்ட போதும், மேல்மாகாண வலயத்தில் மாநகர திட்டங்கள் செயற்திட்ட மூலமும், திருகோணமலை மாநகர திட்டமடல் செயற்திட்டத்திற்காக ரூபா 1.40 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே அமைச்சின் கீழ் உள்ள தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மூலமும் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த நகர அபிவிருத்தித் திட்டத்தைக் கவனத்தில் கொள்ளாமல் சர்வதேச மதியுரைக் கம்பனியின் மூலமும் திருகோணமலை மாவட்ட பாரிய திட்டம் தயாரிக்கும் நோக்கம் கையளிக்கப்பட்டிருந்தது.

களக் கூட்டங்களுக்குச் சமூகமளிப்பதற்கு செலவிடப்பட்ட பணம்

இந்த செயற்திட்டத்தின், செயற்திட்ட இணைப்பாளர், திருகோணமலை மாவட்டத்தில் காணப்பட்ட களக் கூட்டங்களுக்கு சமூகமளிப்பதற்காக ஹெலிகொப்டர் வானூர்தியொன்று பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த விமான பயணத்திற்காகவும், அவர்களின் தங்குமிட, உணவு, மதுபானங்களுக்காகவும் திறைசேரி நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 101,652 தொகை செலவிடப்பட்டிருந்தது.

பொது போக்குவரத்து மற்றும் பேருந்து சேவைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்

பொது போக்குவரத்துக்காக பேருந்து சேவைகளை அபிவிருத்தி செய்யும்

செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது குறைநிரப்பு ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 200 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 104.04 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் செயற்திட்டத்தினால் ரூபா 131.33 மில்லியன் தொகையான பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதிவரையில் கூட்டுமொத்தமாக ரூபா 235.34 மில்லியன் செலவினமொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. எனினும், 2017 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தின் நிதியத்தை பகிர்ந்தளிக்கும் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 346.93 மில்லியனாகும். மீளாய்வாண்டின் போது இந்த செயற்திட்டத்தின் மூலம் பொது போக்குவரத்து சேவைகளை அபிவிருத்தி செய்வதற்காக பேரூந்து சேவைகளை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை பேரூந்து பாதைக் கூறுகளை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருந்தது. ஒரு திசைக்கு ஆகக் குறைந்தது 03 பாதைக் கூறுகளை ஏற்படுத்துவதன் மூலம் மாத்திரம் முன்னுரிமை பாதைக் கூறொன்று ஒதுக்கப்பட முடியுமாக இருந்த போதிலும், அநேகமான வீதிகளில் 03 பாதைக் கூறுகள் காணப்படாமையினால் முன்னுரிமை பேரூந்து பாதைக் கூறில் மோட்டார் சைக்கிள், லொறி மற்றும் கார் வாகனங்களை உட்படுத்தியதன் காரணமாக முன்னுரிமை பாதைக்கூறுத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட செலவினத்தில் எதிர்பார்க்கப்பட்ட விளைவைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

பேரூந்துக் கட்டுப்பாட்டு செயற்படு நிலையங்களை ஏற்படுத்துதல்

மீளாய்வாண்டின் போது கொட்டாவ மாகும்பற பல்நோக்கு போக்குவரத்து நிலையத்தில் பேரூந்து கட்டுப்பாட்டு செயற்படு நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்கும் சகல தனியார் பேரூந்துகளிலும் ஜீபீஆர்எஸ் இயந்திரத்தைப் பொருத்தி பேரூந்து போக்குவரத்து கட்டுப்பாட்டு செயற்படு நிலையமொன்றை ஆரம்பிப்பதற்காகவும் ரூபா 20 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பேரூந்து கட்டுப்பாட்டு செயற்படு நிலையத்தை ஸ்தாபிப்பதற்கும் பேரூந்துகளில் ஜீபீஎஸ்ஆர் பொருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கொழுப்பு நகருக்கு அண்மித்ததாக நீர் ஊடறுத்துச் சென்றதன் பின் நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கான நகர சுற்றாடலுக்கான பொறுப்பு நிதியம்

உலக வங்கியினால் ஐ.அ.டொலர் 900,000 தொகை அதாவது ரூபா 118.8 மில்லியன் மானியத்தின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட நிதியம், 2012, ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருந்தது. அந்த பணிக்காக 2014 யூலை 21 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அத்திகதியின் பின்னர் 2017 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் 02 சந்தர்ப்பங்களின் போது 2½ வருடங்களில் பொறுப்பு நிதியத்தின் பணத்தைப் பயன்படுத்தி நோக்கத்தை நிறைவேற்றும் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்தக் காலத்தின் போதும் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பணத்தை பயன்படுத்துவதற்கு தவறியமையினால் ஐ.அ.டொலர் 172,927 தொகை அதாவது ரூபா 26.55 மில்லியன் தொகை உலக வங்கிக்கு மீள அனுப்ப வேண்டியிருந்தது. அவ்வாறு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட வெள்ளநீர் அபாயத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் வெள்ளநீர் அபாயத்தை குறைத்தல் தொடர்பான செயல்நடவடிக்கைத்திட்டமொன்று தயாரிப்பதற்கான ஆலோசனைச்

சேவைக்காக நிறுவனமொன்றைத் தெரிவுசெய்வதற்கு பெறுகை நடவடிக்கை இடம்பெற்றிருக்கவில்லை. அதற்காக 02 வருடங்களும் 04 மாதங்களும் ஆன காலம் எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கொழும்பு நகரத்தை அண்மித்த பிரதேசங்களில் உள்ளக நீர் வழிகள் மற்றும் குளங்களின் தரத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் வெற்றுநிலத்தை முகாமைத்துவம் செய்வதற்கான திட்டத்தை தயாரிப்பதற்கான ஆலோசனைச் சேவைக்கான பெறுகை நடவடிக்கைகளுக்கு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமொன்று எடுத்திருந்தது. அவ்வாறு அதிக காலம் எடுக்கப்பட்டு உரிய பணிகளுக்காக ஆலோசனை நிறுவனமொன்றைத் தெரிவுசெய்யும் பெறுகை மதிப்பீட்டின் பிரகாரம் முதலாம் இடத்தைப் பெற்ற ISO என்ற பெயருடைய சர்வதேச நியம சான்றிதழை உரித்தாக்கிக் கொண்டிருந்த மற்றும் உயர் தகைமைகளுடன் உள்ள பதவியணியினரால், சர்வதேச ஆலோசனை நிறுவனத்திற்கு இரண்டாவது இடத்திற்கு புள்ளியினைப் பெற்ற ஆலோசனை நிறுவனத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 9.72 மில்லியன் தொகை ஆலோசனைக் கட்டணமாக மேலதிகமாக செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. அவ்வாறு 2015 யூலை 21 ஆந் திகதி முதல் 2016 சனவரி 18 வரையான காலத்தில் அந்த நிறுவனத்தால் 03 சந்தர்ப்பங்களில் காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு தாமதமாகியிருந்தது. அவ்வாறே இந்த ஆரோசனை நிறுவனத்தின் ஊடாக கொழும்பு நகரத்தை அண்மித்ததாக வெள்ளப்பெருக்கு அபாயத்தை குறைப்பதற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கும் தொகுதிக் கட்டமைப்பில் (பெக்கேஜ்) நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சியளித்தல் மற்றும் செயலமர்வுகளை நடாத்துதல் என்பவற்றை ஒழுங்கு முறையாகவும் முறையாகவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக வெள்ளப்பெருக்கு அபாயத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் வெள்ளப் பெருக்கை குறைப்பதற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக மீண்டும், மீண்டும் சர்வதேச ஆலோசனைக் கம்பனிகளிலிருந்து உதவியினைப் பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது.

கொட்டாவ, கடுவெல மற்றும் கடவத்த நகர அபிவிருத்தி செயற்திட்டம்

பெரும்பாக கொழும்பு போக்குவரத்து வலையமைப்பை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் உப கருத்திட்டமாக கொட்டாவ, கடுவெல மற்றும் கடவத்த நகர அபிவிருத்தி செயற்திட்டம் Township Development Component (3K செயற்திட்டம்) ஆரம்பிக்கப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2015 மே 31 ஆந் திகதியில் செயற்திட்டம் முடிவடைய வேண்டியிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் கீழ் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட பணிகள் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைகளின் போது நிறைவேற்றுவதற்கு தவறியமையின் அடிப்படையில் கடன் பணம் பெற்றுக்கொள்ளப்படாமல் திறைசேரி நிதிஏற்பாட்டின் அடிப்படையில் தற்போது இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. அதன் பிரகாரம் குறித்த காலத்தில் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமையினால் தற்போதும் பதவியணியினருக்கும் நிர்வாகச் செலவினங்களுக்கும் திரண்ட நிதியத்திலிருந்து செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதன் பிரகாரம் ரூபா 43.4 மில்லியன் திரண்ட நிதியத்திலிருந்து செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் பதவியணியினருக்கு பிழையாக கணக்கிடப்பட்டு 1.91 மில்லியன் மேலதிகமாக சம்பளம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் அறவிட வேண்டிக் காணப்பட்டது. அவ்வாறு செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மிகவும் மெதுவான போக்கில் பூர்த்தி செய்யப்படுகின்றது.

மேல்மாகாண வலயத்தில் மாநகர திட்டமிடல் செயற்திட்டம்

மேல்மாகாண வலயத்தில் மாநகர திட்டமிடல் செயற்திட்டம் 2015 மே மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அது 2017 செப்தெம்பர் மாத இறுதிவரையில் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அமுல்படுத்தப்படுகின்றது. எனினும் இந்த செயற்திட்டம் இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் நிதி, திட்டமிடல் அமைச்சு என்பவற்றுடன் 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அதில் 02 வருடத்திற்கு மேற்பட்ட காலத்தில் ரூபா 79.85 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், அந்த செயற்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் 2015 மே மாதம் முதல் 2017 செப்தெம்பர் வரையான காலத்தில் ரூபா 250.37 மில்லியன் தொகை செயற்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்திற்காக ரூபா 330.23 மில்லியன் ஒட்டுமொத்த செலவினமொன்று ஏற்பட்டிருந்தது. எனினும் இந்த செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2017 யூலை மாத இறுதியில் பூர்த்தி செய்யப்படவேண்டுமென 2016 ஆகஸ்ட் 16 ஆந் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்த அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக 2017 ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் என்ற இரண்டு மாதங்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய செலவினங்களை உள்ளடக்கியதாக ரூபா 13.08 மில்லியன் தொகை திரண்ட நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. 2017 யூலை 11 ஆந் திகதிய அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் மிகுதி சகல செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கு மேல்மாகாண திட்டமிடல் செயற்திட்டம் என்ற பெயரில் புதிய செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டத்தை நடாத்திச் செல்வதற்கான கால அட்டவணையொன்று காணப்படவில்லை. அவ்வாறே தேசிய பௌதீக திட்டம் திணைக்களத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற பணிப்பொறுப்புக்கள் இந்த செயற்திட்டத்திலிருந்து இடம்பெற்றிருந்ததுடன் மேல் மாகாண வலய மாநகர அதிகாரசபை தாபிக்கும் வரையொன்றைத் தயாரித்தல் மற்றும் அதற்குத் தாக்கமளிக்கின்ற உள்ளூராட்சி கட்டளைச் சட்டங்களை திருத்துதல், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையே ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் மேல்மாகாண மாநகர அதிகாரசபையின் கட்டமைப்பு தொடர்பாக செயற்திட்டங்களைத் தயாரித்தல் என்பன பிரதான நோக்கங்களாக இருந்த போதிலும், அந்த நோக்கங்களுக்குப் புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

கொழும்பு நகரத்தை அண்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்டம்

கொழும்பு நீர்த்தேக்க பிரதேசங்களில் நீர் சேர்வதைக் குறைப்பதற்கு கொழும்பு நகர பிரதேசத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களின் இயலளவை வலுப்படுத்துதல், கொழும்பு நகரை அழகுபடுத்தல் போன்ற நோக்கங்களைக் கொண்டு இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 42,031.44 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 321 மில்லியன் ஆக இருந்தது. அதில் ஐ.அ.டொலர் 213 மில்லியனுக்கு சமனான மொத்தக் கிரயத்தில் 66.35 சதவீதம் மீள்நிர்மாணத்திற்காகவும் அபிவிருத்திக்காகவும் சர்வதேச வங்கிகளினால் நிதியீட்டம் செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தினால் செலவிடப்படுகின்றது. இந்த செயற்திட்டம் 2012 யூலை 10 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 யூன் 30 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 02 சந்தர்ப்பங்களின் போது செயற்திட்டத்தின் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2020 யூன் 30 ஆந் திகதி செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு

தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் உலக வங்கி கடனின் கீழ் நிதியத்திலிருந்து ரூபா 12,198 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 87.7 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக இலங்கை அரசாங்க நிதியத்திலிருந்து ரூபா 3,691 மில்லியன் அதாவது, ஐ.அ.டொலர் 25.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டம் அமுலாக்கப்பட்டு 5½ வருடங்களுக்கு பின்னர் கடன் தொகைகளில் 41 சதவீதத்திற்கு அண்ணளவான தொகை ஒன்று பயன்படுத்தப்பட்டிருந்தது.

செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பெத்தகான உயிரியல் பல்வகைமை பூங்காவின் செயற்பாடுகள் நிர்ணயிக்கப்பட்ட நியமத்திலும் குறித்த பிரகாரமும் நிர்ணயிக்கப்படாமையினால் ஒப்பந்தகாரருக்கு ரூபா 92.07 மில்லியன் தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே மட்டக்குளிய காக்கைதீவு கடற்கரை பூங்காவை நிர்மாணிப்பதற்காக ரூபா 275.78 மில்லியன் தொகையில் ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தம் 10 மாத காலத்திற்குள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கடற்கரைப் பூங்கா நிர்மாணத்தைப் பூர்த்தி செய்வதற்கு 1½ வருடத்திற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. அவ்வாறே குறித்த பொறியியலாளர் திட்டத்தின் பிரகாரம் நிர்ணயிக்கப்படாதிருந்ததுடன் நிர்மாணச் செயற்பாடுகளின் தாமதத்தினால் 47 குறைபாடுகள் காணப்பட்ட போதிலும் பூங்கா கையேற்கப்பட்டிருந்ததுடன் அந்த சந்தர்ப்பம் வரையிலும் குறைபாடுகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் ஒப்பந்தகாரருக்கு ரூபா 129.14 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

கொழும்பு நகரத்தை விட மிகவும் சுற்றாடலுக்கு இசைவானதாகவும் அழகுபடுத்துவதற்காகவும் செயற்திட்டத்தின் மூலம் பேரேவெவ அபிவிருத்தி செய்யும் பல்வேறு பணிகளுக்காக ரூபா 1,552.07 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. திறைசேரி நிதியத்திலிருந்து மேலும் ரூபா 470 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும், பேரேவெவயை அண்மித்த வீடுகள் மற்றும் ஹொட்டல்களின் கழிவுகள் பேரேவெவயிற்கு வந்து சேர்வதை தடுப்பதற்கான வழிமுறைகள் காணப்படாமையினால் பேரேவெவ அருகிலும் துர்நாற்றம் காணப்பட்டதுடன் பேரேவெவ அபிவிருத்தி செயற்பாடுகளினால் சுற்றுலா துறைக்கும் மற்றும் இலங்கையர்களுக்கும் ஓய்வினை கழிப்பதற்கு பொருத்தமான சூழல் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கவில்லை.

கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள்

உலகலாவிய ரீதியில் போட்டி மற்றும் சாதகமான வணிகச் சூழலொன்றை உருவாக்குதல் இந்தத் துறையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விளைவாக இருந்தது. அந்த பெறுபேற்றை அடைந்து கொள்வதற்காக கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சு, 09 திணைக்களங்கள் மற்றும் 26 அரசாங்க தொழில் முயற்சிகளினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பணிப்பொறுப்புக்கள் நிறைவேண்டியதாகக் காணப்பட்டன.

- கைத்தொழில் மற்றும் வணிக விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வழங்கல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு
- கைத்தொழில் மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி
- வியாபாரக் கண்காட்சிகளை நடாத்துதல்.
- உள்நாட்டுச் சந்தையில் நுகர்வோர் பொருட்களை தரமான மட்டத்திலும் பற்றாக்குறையின்றியும் நியாயமான விலையில் வழங்குவதற்குத் தேவையான வழிமுறைகளை எடுத்தல்
- 1949 இன் 6 ஆம் இலக்க ஈடுவைத்தல் அதிகாரச்சட்டத்தின் 114 ஆவது பிரிவின் கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களை அங்கீகரித்தல்.
- நுகர்வோர் பொருட்களுக்குரியதாக தேசிய விலைக் கொள்கை வழங்கல் மற்றும் செயற்படுத்துதல்.
- நுகர்வோர் பாதுகாப்பிற்கான செயற்திட்ட நடவடிக்கைகளை எடுத்தல்.
- இலங்கை கைப்பணி கைத்தொழில் உற்பத்திக்காக அலங்கார அபிவிருத்தி மற்றும் பரவலாக்குதல்.
- புலமைச் சொத்துக்கள் தொடர்பான சர்வதேச சம்மேளனத்தை நிர்வகிப்பதற்குரிய பணிகளை வெளியிடும் உரிமை மற்றும் ஜகத் புலமைச்சொத்து அலுவலகத்தின் வெளியீட்டு உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகள்
- சீனிக் கைத்தொழிலுக்குரிய அரசாங்க வளங்களின் முகாமைத்துவம் மற்றம் பாதுகாப்பு

மேற்கூறப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கமாக்கப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்

மீளாய்வாண்டின் போது அதிகாரசபையினால் விலைகளைக் குறித்தல், லேபல் ஒட்டுதல் மற்றும் பொதியிடல் தொடர்பாக 9,825 சுற்றி வளைப்புக்கள் அதாவது மொத்த சுற்றி வளைப்புக்களின் அளவில் 38 சதவீதம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மொத்த

சுற்றிவளைப்புக்களில் 26.98 சதவீதம் பொருட்களின் விலைப் பட்டியலை காட்சிப்படுத்துதல் தொடர்பாக இருந்தது. எனினும், நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்த வேண்டிய குறிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல், பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான நியமம் மற்றும மாதிரிகள், நிர்ணயிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை மற்றும் ஆகக்கூடிய விலை நிர்ணயிக்கப்பட்ட பொருள் விற்பனை தொடர்பான சுற்றிவளைப்புக்கள் மொத்த சுற்றிவளைப்பில் 14 சதவீதமான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

நிலுவைக் கடன் மற்றும் வட்டி அறவிடப்படாமை

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் மற்றும் கூட்டுறவு மிகை நிதியத்தால் கூட்டுறவுச் சங்கத்திற்கு கூட்டுமொத்தமாக ரூபா 818.62 மில்லியன் கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்தக் கடன் அளவில் ரூபா 618.01 மில்லியன் கடன் மற்றும் ரூபா 208.94 மில்லியன் தொகையான வட்டி என்பன நிலுவையாகக் காணப்பட்டன. மீளாய்வாண்டின் போது கடன் பெற்ற சங்கங்களினால் ரூபா 1.73 மில்லியன் கடன் தவணைப்பணம் மற்றும் ரூபா 9.06 மில்லியன் தொகையான வட்டித்தொகை மாத்திரம் மீளச் செலுத்தப்பட்டிருந்தது. நிலுவைக் கடன் மற்றும் வட்டியை அறவிடுவதற்காக கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தால் போதியளவான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 2017 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கூட்டுறவு சங்கத்திற்கு ரூபா 20 மில்லியன் கடன் தருவதாக குறிப்பிட்டிருந்த போதிலும், 2015 யூலை மாதத்தின் பின்னர் எந்த ஒரு சங்கத்திற்கும் கடன் வழங்கப்பட்டிருக்கவில்லை.

கூட்டுறவு சங்கங்களின் கணக்காய்வு

1972 இன் 5 ஆம் இலக்க கூட்றுறவுச் சங்க அதிகாரச்சட்டத்தின் 44(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுறவுச் சங்கத்தின் கணக்காய்வு செய்தல் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் போது 45 கூட்டுறவுச் சங்கங்களில் 59 நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2018 யூலை 10 ஆந் திகதி வரையிலும் அந்த 30 நிதிக் கூற்றுக்களிற்காக மாத்திரம் அறிக்கை வழங்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டுக்கு முன் சமர்ப்பிக்கப்பட்ட 12 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு நடவடிக்கைகள் முடிவடைந்திருந்த போதிலும் அறிக்கை விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

கம்பனிகளில் ஆண்டறிக்கையை கோவையிடல்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 131(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஒவ்வொரு கம்பனியாலும் பதிவு செய்யப்பட்டு 1½

வருடங்களின் பின்னர் ஆண்டறிக்கை கோவையிடப்பட வேண்டும். ஆண்டறிக்கைக்காக அறவிடப்பட்ட கட்டணங்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 1,623.63 மில்லியன் வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது. புதிய கம்பனிச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட 2007 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை 72,865 கம்பனிகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அந்தக் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டதன் பின்னர் நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதியில் ஆண்டறிக்கை சேவையிடப்பட வேண்டிய போதிலும், அந்தக் கால எல்லையில் 16,148 கம்பனிகளால் எந்தவொரு ஆண்டறிக்கையும் கோவையிடப்பட்டிருக்கவில்லை. மீளப் பதிவு செய்த 25,071 கம்பனிகளுக்கிடையே 2,555 கம்பனிகளால் அவ்வாறே ஆண்டறிக்கை கோவையிடப்பட்டிருக்கவில்லை. கம்பனிச் சட்டத்தின் 346(அ) பிரிவின் கீழ் 3,455 கம்பனிகளின் பெயர் அகற்றப்பட்டிருந்ததுடன் அதில் ஆண்டறிக்கை கோவையிடப்படாமையின் காரணமாக 2,715 கம்பனிகளின் பெயர் அகற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெயரை நீக்கியமையினால் அறவிட முடியாதுள்ள மொத்த வருமானம் ரூபா 50.87 மில்லியனாகக் காணப்பட்டது. ஆண்டறிக்கை கோவையிடாமல் புறக்கணித்த கம்பனிகளின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்துச் சென்றமையை அட்டவணை 28 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



வரைபடம்: ஆண்டறிக்கை கோவையிடுதலை புறக்கணித்த கம்பனிகள்
மூலம்: நிலுவை வருமானம் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு அறிக்கை 2017

கம்பனிகளை பதிவு செய்யும் நடவடிக்கைகளை கணனிமயப்படுத்துதல்

கம்பனிகளை பதிவு செய்யும் செயற்பாடுகளை கணனி மயப்படுத்தும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூபா 88.81 மில்லியன் தொகையான ஒப்பந்தமொன்று 2014 சனவரி 21 ஆந் திகதி ஒப்பந்தகாரர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்த காலஎல்லை 09 மாதங்களாக இருந்த போதிலும், அந்தக் கால எல்லையில் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தகாரர் தவறியிருந்தார். அதன் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்டம் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது. அது வரையில் ஒப்பந்தகாரருக்கு ரூபா 13.27 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும், சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் தீர்ப்பாளர் ஒருவர் நடவடிக்கைகளைச் செய்து கொண்டிருந்தார்.

புடவைகள் மற்றும் ஆடைகள் துறை தொடர்பான பட்டப்பின் படிப்பு மற்றும் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்

இலங்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவனம் 2009 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் 2017 ஆம் ஆண்டின் இறுதிவரையில் 08 வருடங்களை கடந்திருந்தது. 2009 இன் 12 ஆம் இலக்க இலங்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவன அதிகாரச்சட்டத்தின் 01 பகுதியின் 04(அ) பிரிவின் பிரகாரம் புடவை மற்றும் ஆடைகள் துறை தொடர்பான பட்டப்பின் படிப்பு மற்றும் பட்ட பாடநெறி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக திறைசேரியிலிருந்து 2015 ஆம் அண்டு முதல் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 23 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. 2018 மே 31 ஆந் திகதி வரையிலும் பிரதான திட்டம் மற்றும் மண் மாதிரி பரிசோதனைக்காக அதில் ரூபா 1.59 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மிகுதித் தொகை நிறுவனத்தின் குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

தரச் சான்றிதழ்களை விநியோகித்தல்

சர்வதேச மற்றும் தேசிய நியமங்களுக்கும் மற்றும் கம்பனியின் நியம முறைமைகளுக்கும் இணங்க புடவைகள் மற்றம் ஆடைகள் கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற நபர்களுக்கு தரச் சான்றிதழை விநியோகித்தல் இலங்கை புடவைகள் மற்றம் ஆடைகள் நிறுவனத்தின் நோக்கமாக இருந்தது. நடாத்திச் செல்லப்படுகின்ற work study பாட நெறி தவிர ஏனைய பாடநெறிகளுக்காக தேசிய தொழில் தகைமை மட்டத்தின் தகைமை

நிலை (NVQ) பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தால் மீளாய்வாண்டின் போது நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்ட 146 பாடநெறிகளுக்கிடையே 19 பாடநெறிகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. பொறியியல் பிரிவில் 44 பாடநெறிகளை நடாத்துவதற்காக 773 மாணவர்களின் பங்குபற்றல் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும், ஆண்டின் இறுதிவரையில் 21 பாடநெறிகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் 302 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இலங்கை மத்திய வங்கியிலிருந்து வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம் இன்றி பதிவு செய்தல்

1949 இன் 6 ஆம் இலக்க ஈடு வைத்தல் அதிகாரச்சட்டம், 1947 இன் 12 ஆம் இலக்க நம்பிக்கை பொறுப்பு கட்டளைச் சட்டம் மற்றும் 1990 இன் 14 ஆம் இலக்க உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்பு அடியிதழ் அதிகாரச்சட்டத்தின் கீழ் கடன் வழங்கும் சங்கங்களை அங்கீகரிக்கும் குழுவின் சிபரிசின் அடிப்டையில் கடன் வழங்கும் நிறுவனங்களை வெளியிடுவதற்கான நியமிக்கும் அதிகாரம் வணிக பணிப்பாளர் நாயகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. வணிகத் திணைக்களத்தால் 1973 செப்தெம்பர் மாதம் முதல் 2017 ஏப்ரல் மாதம் வரை ஈடு வைத்தல் அதிகாரச்சட்டத்தின் 114(1) ஆம் பிரிவின் கீழ் கடன் வழங்கும் 375 நிறுவனங்கள் அந்த அதிகாரச்சட்டத்தின் பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனமாக அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனங்களுக்கு இடையே 269 நிறுவனங்கள் கூட்டுறவுச் சங்கம் மற்றும் கிராமிய வங்கிகளாக இருந்ததுடன் மிகுதி 106 நிறுவனங்களும் நிதிக் கம்பனிகள் மற்றும் வங்கிகளாக இருந்தன. மேற்கூறப்பட்ட பிரிவின் கீழ் நிதிக் கம்பனிகள் மற்றும் வங்கி நிறுவனங்களை அங்கீகரிப்பதற்குரிய நிறுவனத்தால் இலங்கை மத்திய வங்கியிலிருந்து பெறப்பட்ட அனுமதிப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட 57 நிதிக்கம்பனிகள் மற்றும் வங்கி நிறுவனங்களுக்காக அந்த அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

கடன் வழங்கும் நிறுவனங்களின் மேற்பார்வை நலிவாக இருந்தமை

அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களின் அருகதையினை நிரந்தரமாக மேற்பார்வை செய்யும் பணிக்காக அந்த நிறுவனங்களின் வருடாந்த கணக்குகள் வணிக பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. அந்த கணக்கு அறிக்கைகளை சமர்ப்பித்தல் உரிய நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களின் செயற்படுநிலை தொடர்பாக மேற்பார்வையினை மேற்கொள்ளும் பொறுப்பு வணிகப் பணிப்பாளருக்கு காணப்பட்ட போதிலும் அப்பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

வியாபாரச் சிக்கனங்கள் மற்றும் பேடன்ட் அனுமதிப்பத்திரம் என்பவற்றைப் பதிவு செய்தலில் தாமதம்

மீளாய்வாண்டின் போது இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தால் பதிவு செய்யப்பட்ட வியாபாரச் சின்னங்களின் எண்ணிக்கை 10,622 ஆகக் காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் போது பதிவு செய்வதற்காக 11,286 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் அதில் எந்தவொரு விண்ணப்பமும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. வியாபாரச் சின்னமொன்று 10 வருட காலத்திற்காக செல்லுபடியாக இருந்ததுடன் சின்னமொன்றைப் பதிவு செய்யும் வரையில் அதனை பதிவு செய்வதற்கான விண்ணப்ப பத்திரம் பணிப்பாளர் நாயகத்திற்குக் கிடைத்த திகதி முதல் அது பதிவு செய்யப்பட்ட திகதியான அதிகாரச்சட்டத்தின் பணிகளுக்காக கவனத்தில் கொள்ள முடியுமென 2003 இன் 36 ஆம் இலக்க புலமைச் சொத்து அதிகாரச்சட்டத்தின் 118(2) ஆம் உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. வியாபாரச் சின்னங்களை பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கப்பட்ட திகதி முதல் அதனைப் பரீட்சிப்பதற்காக 07 மாதம் முதல் 10 வருடங்கள் வரையிலான காலமும், கட்டணம் செலுத்தப்பட்டதன் பின்னர் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக 01 வருடம் முதல் 03 வருடங்கள் வரையிலான காலமும், பதிவு கட்டணம் செலுத்திய திகதி முதல் பதிவுச் சான்றிதழ் விநியோகிப்பதற்காக 06 மாதம் முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமுமாக கவனத்தில் கொள்ளக் கூடிய தாமதமொன்று ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிறுவனத்தால் பதிவு செய்யப்பட்டிருந்த மொத்த வியாபாரச் சின்னங்களின் எண்ணிக்கை 55,149 ஆக இருந்ததுடன், அதில் 24,076 எண்ணிக்கை அதாவது 44 சதவீதம் புதுப்பிக்கும் காலம் முடிவடைந்த வியாபாரச் சின்னங்களாக இருந்தன. மேலும் அலுவலகத்தால் பதிவு செய்யப்பட்ட 150 வியாபாரச் சின்னங்கள் உரிய வெளித்தரப்பினரால் தொடரப்பட்டிருந்த வழக்கு நடவடிக்கைகளுக்காக சாட்சியாளராக இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் போது பதிவு செய்யப்பட்டிருந்த பேடன்ட் அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 181 ஆகும். இந்த பேடன்ட் அனுமதிப்பத்திரத்தைப் பதிவு செய்வதற்காக 05 மாதங்கள் முதல் 12 வருடங்கள் வரையிலான காலம் கடந்திருந்தது. பேடன்ட் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்ப பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அதனைப் பரீட்சிப்பதற்காக விண்ணப்பிக்கப்பட்ட திகதி முதல் 08 மாதத்திலிருந்து 10 வருடங்கள் வரையிலான காலமொன்றும், பரிசோதனையின் பின்னர் குறைபாடுகளை அறிவிப்பதற்கு 02 மாதம் முதல் 01 வருடமும் 11 மாதங்கள் வரையான காலமும் எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டு இறுதிவரையிலும் வழங்கப்பட்டிருந்த

பேடன்ட் அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 4,560 ஆகக் காணப்பட்டது.

அவ்வாறே பேடன்ட் அனுமதிப்பத்திரம் மற்றும் கைத்தொழில் திட்டத்திற்காக அனுமதிப்பத்திரம் கையளித்தல் தொடர்பாக முறையே தரப்பினர் 08 மற்றும் 05 ஆக வெளித்தரப்பினரால் இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் 13 வழங்குகள் தொடரப்பட்டிருந்தன.

வியாபாரச் சின்னங்களை சர்வதேச ரீதியாக பதிவு செய்வதற்கான "மெட்ரிட் கூட்டமைப்பு பத்திரத்திற்கு நுழையும் செயற்திட்டம்" இற்காக வரிசை அமைச்சினால் 2016 மற்றும் 2017 என்ற இரண்டு ஆண்டுகளின் போது ரூபா 64 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 62.3 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதில் ரூபா 32.5 மில்லியன் சேர்வர் இயந்திரத்தை கொள்வனவு செய்யும் பெறுகை செயற்பாடுகளுக்கான தகவல்கள் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நட்ப நிறுவனத்திற்கு 2016 திசெம்பர் மாதம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கொள்வனவு செய்வதற்குத் தேவையான பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மெட்ரிட் கூட்டமைப்பு பத்திரத்திற்கு நுழையும் செயற்திட்டத்திற்குரிய சேவை வழங்குவதற்காக மதியுரைக் கம்பனியொன்றைத் தெரிவு செய்வதற்காக ரூபா 7.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதனுள் இலங்கை அரசாங்கத்தால் பின்பற்றப்பட வேண்டிய வியாபாரச் சின்னங்கள் சர்வதேச பதிவு செய்யும் சட்டரீதியான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் வகையில் புலமைச் சொத்து அதிகாரச்சட்டத்திற்குத் தேவையான திருத்தங்கள் மற்றும் பிரமாணங்களைத் தயாரித்தல் மற்றும் வியாபாரச் சின்னப் பிரிவின் செயற்பாடுகளை நாளதுவரையாக்குவதற்கு மிகுதியாகவுள்ள வியாபாரச் சின்னங்களுடன் தொடர்பான கடமைகளை நிறைவேற்றதலும் உள்ளடங்கியிருந்தது. எனினும் 2018 மே மாதம் வரையிலும் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

வீடமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள்

சகல பிரசைகளுக்கும் நல்ல வாழ்க்கை நிலைமையொன்றை உறுதிப்படுத்துவதை நோக்கக்காக் கொண்டு சகல குடும்பங்களுக்காகவும் வீட்டு வசதிகளை வழங்குதல் இத்துறையிலிருந்து எதிர்பார்க்கும் பெறுபேறாக இருந்ததுடன், அப்பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்காக வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு மற்றும் அதன் கீழான இரண்டு திணைக்களங்களாலும் 10 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களாலும் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை தொடர்பான திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும்
- அரசாங்க உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் ஏனைய கட்டிடங்களுக்கான நியமங்களையும் தராதரங்களையும் விதித்துரைத்தல்
- குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் விசேட பிரசைக் குழுக்கள் உட்பட பொதுமக்களின் வீடமைப்புத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வீடமைப்புத் திட்டங்களையும் வீடமைப்பு நிதிசார் திட்டங்களையும் செயற்படுத்தல்
- குழல் நேயமிக்க செலவுக்கேற்ற நன்மையளிக்கும் வீடமைப்பு தொழில்நுட்ப முறைகள் பற்றி கிராமிய மக்களுக்கு வழிகாட்டல்
- பிரதானமாக அரசாங்க நிறுவனங்களுக்கு பொறிசார் பொறியியல் சேவைகளை வழங்குதல்
- தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் தரவளவுகளுக்கும் ஏற்றதாக கட்டுமானக் கைத்தொழில் துறையின் பணிகளை ஒழுங்குபடுத்தலும் பதிவு செய்தலும் விதிமுறைப்படுத்தலும் தரப்படுத்தலும்
- நிர்மாணக் கைத்தொழிலுக்கான மதியுரைகளையும் ஒழுங்குறுத்துகைச் சேவைகளையும் வழங்கலும் கணரக நிர்மாண உபகரணங்களை இயக்குதலும் பராமரித்தலும் தொடர்பான பயிற்சி அளித்தலும்
- கூட்டாதன முகாமையும் ஒழுங்குறுத்துகைப் பணிகளும்
- பொதுக் கூட்டாதன மறுசீரமைப்பும் வினைத்திறனுடனும் துரிதமாகவும் வீடுகளின் உரித்தை உரிமைமாற்றம் செய்தலும் இவ்வமைச்சின் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் நிறுவனங்களின் கண்காணிப்பு

மேற்படி செயற்பாடுகளை நிறைவேற்றும் போது தெரிவுக்கணக்காய்வு பரிசோதனைகளின்போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

மாதிரிக் கிராம வேலைத்திட்டம் (Model Village Programme)

இத்திட்டம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் செயற்படுத்தப்பட்டது. செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா. 1,170 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும், இதில் ரூபா. 815 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் 3,500 வீடுகளை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதும், வருட இறுதியில் இவ்விலக்கில் 6 வீதம் அதாவது 205 வீடுகள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இதனால் நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல் கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

வட மாகாண வீடமைப்புத் திட்டம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் சிறுநீரக நோய் பரவலாக காணப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்புத் திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா. 1,267 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் இதில் ரூபா. 1,167 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் நிறைவு செய்யப்பட வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை 2,534 ஆக இருந்தாலும் வருட இறுதியில் இவ்விலக்கில் 27 வீதம் அதாவது 965 வீடுகள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

போகஸ்வெவ விசேட வீடமைப்புத் செயற்திட்டம்

இந்த வீடமைப்பு செயற்திட்டம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், 1,078 வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா. 471 மில்லியன் செலவாகுமென உத்தேசிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா. 471 மில்லியன் செலவில் 184 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் 1,078 வீடுகளை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதும், வருட இறுதியில் இவ்விலக்கில் 17 வீதம் அதாவது 184 வீடுகள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

வீடமைப்புத் திட்டம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ரணவரு அதிகாரசபையுடன் இணைந்து செயற்படுத்தும் இத்திட்டத்தில் ரூபா. 798.1 மில்லியன் செலவில் 913 வீடுகளை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டில் இதற்காக ரூபா. 150 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இதன் மூலம் 49 வீடுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இதற்கமைய நிறைவு செய்யப்பட வேண்டியிருந்த வீடுகளில் 5 வீதம் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

கிராம சக்தி கிராம எழுச்சி வீடமைப்புத் திட்டம்

இத்திட்டம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் செயற்படுத்தப்பட்டிருந்தது. இத் திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டின் இறுதியில் 500 வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா. 250 மில்லியன் செலவாகுமென உத்தேசிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் இதற்காக ரூபா. 100 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இவ்வொதுக்கீட்டினைப் பயன்படுத்தி 1,304 வீடுகளை நிர்மாணிப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் இறுதியில் ஒரு வீடாவது நிர்மாணித்து பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

வெலிஓயா வீடமைப்புத் திட்டம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் இச்செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் 1,042 வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா. 61 மில்லியன் செலவாகுமென உத்தேசிக்கப்பட்டிருந்தது. இத்திட்டத்திற்காக ரூபா 57 மில்லியன் செலவில் 995 வீடுகளின் நிர்மாண வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. இதனடிப்படையில் திட்டத்தின் பௌதீக முன்னேற்றமானது 95 வீதமாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் பிரதேசத்தின் நீர் வளம் போன்ற இயற்கைத் தன்மைகள் தொடர்பிலான முறையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அவை தொடர்பான அறிவினைப் பெற்றுக்கொள்ளாது திட்டத்தினை செயற்படுத்தியிருந்தமையினால் பிரதேசத்தில் நிலவிய நீர்ப் பற்றாக்குறை காரணமாக வீடுகளைப் பெற்றுக்கொண்டவர்கள் அவற்றை கைவிட்டுச் சென்றிருந்தனர்.

லுனாவ வீடமைப்புத் திட்டம்

நகர மக்கள் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் இத்திட்டத்தின் மூலம் மீளாய்வு ஆண்டில் 356 வீடுகளை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. 2017 திசம்பர் 31 ஆந் திகதியளவில் திட்டத்தினை நிறைவு செய்ய வேண்டியிருந்த போதும், இத்திகதியில் திட்டத்தின் நிர்மாண வேலைகள் நிறைவடைந்திருக்கவில்லை.
மீளாய்வாண்டில் இத்திட்டத்திற்காக ரூபா. 90 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதும், இதில் ரூபா. 60 மில்லியன் மாத்திரம் உபயோகிக்கப்பட்டு திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றத்தின் 14 சதவீதம் மாத்திரமே அடையப்பெற்றிருந்தது.

ஹொரன ரோஸ்வுட்வத்த வீடமைப்புத் திட்டம்

இவ்வீடமைப்புத் திட்டமானது நகர மக்கள் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் செயற்படுத்தப்பட்டிருந்தது.
மீளாய்வாண்டின் த்தின் இறுதியின் போது ரூபா. 34 மில்லியன் செலவில் 40 வீட்டுத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 6.29 மில்லியன் உபயோகிக்கப்பட்டு திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றத்தின் 12 வீதம் மாத்திரமே அடையப்பெற்றிருந்தது.

கல்ஓயா தெற்கு எல்லைக்கு குறுக்கே பாலம் அமைத்தல்

அரச நிர்மாண மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்தினால் கல்ஓயா தெற்கு எல்லைக்கு குறுக்கே பாலம் அமைத்தலுக்கான வேலை ஒப்பந்தம் 2015 ஏப்ரல் 24 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. திட்டத்தின் உத்தேச செலவு ரூபா. 107.10 மில்லியனாகக் காணப்பட்டது. 2017 ஜுன் 27 ஆம் திகதி வரையில் நிர்மாண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்ததுடன், 2017 ஜனவரி 24 ஆம் திகதி வரையில் அதற்காக ரூபா 66.68 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- செயற்திட்டத்தின் காலஎல்லை 2016 ஜுன் 23 ஆம் திகதியின் பின்னர் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. வேலை ஒப்பந்தத்திற்கமைய தாமதமாகும் ஒரு நாளைக்காக ரூபா. 45,000 அல்லது ஒப்பந்தப் பெறுமதியில் 10 வீத உச்ச பெறுமானம் (ரூபா. 10.71 மில்லியன்) செலுத்தப்பட வேண்டியிருந்த போதும், தாமதக் கட்டணம் அதன் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

- எந்தவித அதிகாரமின்றி வேலைத்தளத்திலிருந்த மருதம், கத்தாப்பு மற்றும் கிண்ணை ஆகிய மரங்கள் வெட்டப்பட்டு முறையே 411, 132 மற்றும் 155 அடி நீளமான கட்டைகள் தொகுத்தல் அதிகாரிகளினால் சட்டத்திற்கு முரணாக எடுத்துச் செல்லப்பட்டிருந்தன. மேலும் குறித்த அதிகாரிகளின் எவ்வித அனுமதியுமின்றி 73 கியூப் மணல் வேலைத்தளத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது தொடர்பாக கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தினால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- **கோவைகள் காணாமல் போனதன் காரணமாக அறவிட முடியாது போன கடன்கள்**

- கட்டிடத் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்டக் காரியாலயத்தினால் கூட்டுறவுக் கடன் வழங்கல் சபையின் வீடமைப்புக் கடன் திட்டத்தின் (TCCS) கீழ் பெற்றுக்கொடுக்கப்பட்ட ரூபா. 5.97 மில்லியன் பெறுமதியான 1,468 வீடமைப்புக் கடன் சம்பந்தமான கோவைகள் காணாமல் போனதன் காரணமாக அக்கடன்களை அறவிட முடியாமல் போயுள்ளது.

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கான தண்டப்பணம் செலுத்துதல்

வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் 2006 வருடம் தொடக்கம் 2012 வருடம் வரை ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுடன் இணைத்துக் கொள்ளப்பட வேண்டிய சம்பளத்திற்கும் குறைவான சம்பளத்திற்கு உறுப்புரிமைக் கட்டணம் செலுத்தியமையால் மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 71.06 மில்லியன் தண்டப்பணமாக செலுத்தப்பட்டிருந்தது.

செவன நிதியத்தின் நோக்கங்களுக்காக நிதியினைப் பயன்படுத்தாமை

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் இயங்கிய செவன நிதியத்தின் கீழ் ரூபா. 524 மில்லியன் இருப்பாகக் காணப்பட்டதுடன், அந்நிதியத்திற்காக திறைசேரியினால் மற்றும் ஏனைய பிரிவுகளினால் ரூபா 380 மில்லியன் கிடைத்திருந்தது. அதனடிப்படையில், மீளாய்வாண்டில் ரூபா 904 மில்லியன் நிதி நன்கொடை கணக்கில் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் நிதியத்தின் நோக்கங்களுக்காக இதில் ரூபா. 70 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் வீடுகளைப் பெற்றுக்கொண்டோர் வசிக்காமை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் செவன கிராம வேலைத்திட்டம் மற்றும் குறைந்த வருமான தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றினால் முறையே 500 வீட்டுத் தொகுதிகள் மற்றும் 35 வீட்டுத் தொகுதிகளின் நிர்மாண வேலைகளை மீளாய்வாண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. நீர் தொடர்பான பிரச்சினைகள் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியிலும் அவற்றில் ஒரு வீட்டுத் தொகுதியினதும் நிர்மாண வேலைகள் நிறைவு பெற்றிருக்கவில்லை. 2018 மே மாதமளவில் குடியமரும் நிலையில் 89 வீடுகளின் வேலைகள் முடிவடைந்திருந்த போதும் அவ்வீட்டுகுரிய நலனாலிகள் குடியமர்ந்திருக்கவில்லை.

வீடமைப்புத் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட காணிகளின் பொருத்தமின்மை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகா சபையின் கீழ் முன்மாதிரி கிராம வேலைத்திட்டத்தின் மூலம் 5,000 வீட்டுத் தொகுதிகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வாண்டில் அவற்றில் 3,500 வீட்டுத்தொகுதிகளின் வேலைகளை பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட காணி பொருத்தமற்றதாகக் காணப்பட்டதால் 205 வீட்டுத் தொகுதிகளின் வேலைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

வட மாகாண வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டம்

வட மாகாண வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் 2,534 வீட்டுத் தொகுதிகளின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் 695 வீட்டுத்தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. 2018 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டாகும் பொழுது 726 வீட்டுத் தொகுதிகள் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், 1,103 வீட்டுத் தொகுதிகளின் நிர்மாணப் பணிகள் குடியேறுவதற்குத் தகுந்த அளவில் நிறைவு செய்யப்பட்டிருந்தன.

பங்கேற்றல் முறைமையின் கீழ் வீடுகளை அமைத்தல்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் பங்களிப்பு முறைமையினைப் பயன்படுத்தி செவன விசிரி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 250 வீட்டுத் தொகுதிகளின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் 24 வீட்டுத் தொகுதிகளின் நிர்மாணப் பணிகள் மாத்திரம் நிறைவடைந்திருந்தன.

சொந்துரு பியச வங்கிக் கடன் வேலைத்திட்டம்

சொந்துரு பியச வங்கிக் கடன் வேலைத்திட்டத்தின் கீழ் 3,000 வீட்டுத் தொகுதிகளின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை திட்டமிட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் இறுதியில் ஒரு வீட்டுத் தொகுதியின் நிர்மாணப் பணி மாத்திரம் நிறைவடைந்திருந்தது.

செவன கிராம வீடமைப்பு வேலைத்திட்டம்

தொடர்வேலைத் திட்டத்தின் கீழான செவன கிராம வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் 869 வீட்டுத் தொகுதிகளின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டிருந்தது. நீர் தொடர்பான பிரச்சினைகள் காரணமாக வீட்டுரிமையாளர்கள் குடியமர்வதற்கு விரும்பாத காரணத்தினால் அவர்களது பங்களிப்பு முறையாகப் பெறப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் 111 வீட்டுத் தொகுதிகளின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்திருந்ததுடன், இதன் முன்னேற்றம் 13 சதவீதமாகக் காணப்பட்டது

அரச தனியார் பங்களிப்பு வீடமைப்பு வேலைத்திட்டம்

தொடர்வேலைத் திட்டத்தின் கீழான அரச தனியார் பங்களிப்பு வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை யக்கல சியநே பூங்காவில் 28 வீட்டுத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்கான திட்டத்தினை அமைத்திருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதியில் ஒரு வீட்டுத் தொகுதியின் நிர்மாணப் பணியாவது நிறைவடைந்திருக்கவில்லை.

நடுத்தர வீடமைப்பு வேலைத்திட்டம்

நடுத்தர வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் 5 வேலைத்திட்டங்களின் கீழ் 3,611 வீட்டுத் தொகுதிகளின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் இறுதியில் மவுன்ட் கிளிபர்ட் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 860 வீட்டுத் தொகுதிகளின் நிர்மாணப் பணிகள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

பழைய வீடமைப்புத் திட்டங்களை புனர் நிர்மாணம் செய்தல்

24 பழைய வீடமைப்புத் திட்டங்களை புனர்நிர்மாணம் செய்வதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 250 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ் வீடமைப்புத் திட்டங்களின் புனர் நிர்மாண நடவடிக்கைகள் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 18 வீடமைப்புத் திட்டங்களின் புனர்நிர்மாண நடவடிக்கைகள் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா. 170 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

போக்குவரத்து

பயணிகள் மற்றும் பொருட்கள் வசதியாக, பாதுகாப்பாகவும் விரைவான போக்குவரத்து சேவையொன்றை வழங்குவதற்காக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சிலிருந்து எதிர்பார்க்கும் பெறுபேறாக இருந்தது. அப்பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக அமைச்சு மற்றும் அதன் கீழான இரண்டு திணைக்களங்கள் 06 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களாலும் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒன்றிணைந்த பயணிகள், பண்டப் புகையிரதப் போக்குவரத்து சேவைகளை வினைத்திறமையாக நடாத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும் புகையிரத உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியும் புகையிரத சேவைகளை வழங்கலும்.
- பயணிகளுக்குப் படகுத்துறைச் சேவைகளை வழங்கல்.
- சுற்றாடலுக்குச் சாதகமான போக்குவரத்து முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல்.
- தனியார் போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்குபடுத்துதல்.
- மோட்டார் வாகனங்களின் பதிவும், அனுமதிபத்திரங்களை வழங்குதலும் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கலும்.
- மோட்டார் வாகனங்களுக்குரிய சட்டங்கள், விதிகள் மற்றும் வழிகாட்டிகளை வழங்குதலும் ஒழுங்குபடுத்தலும்.
- விமான நிலையங்களின் அபிவிருத்தியும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.
- சர்வதேச விமானப் பிரயாணங்களை விரிவுபடுத்தல்.
- இலங்கையின் விமான நிலையங்களை வெளிநாடுகள் பயன்படுத்துவதற்குரிய ஊக்குவிப்பினையும் ஒழுங்குபடுத்தலையும் மேற்கொள்ளல்.
- தனியார் விமானச் சேவைகளைக் கண்காணித்தலும் ஒழுங்குபடுத்தலும்.
- வானூர்திகளைப் பதிவு செய்தல்.

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களால் மேற்படி செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் கீழே காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

மாத்தறை, பெலிஅத்த மற்றும் கதிர்காமம் புதிய புகையிரத வீதி நிர்மாணம்

மாத்தறை முதல் கதிர்காமம் வரை புதிதாக புகையிரத வீதி நிர்மாணச் செயற்திட்டம் 2013 ஆகஸ்ட் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் 2016 யூலை 31 ஆந் திகதி செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாத காரணத்தினால் மீண்டுமொருமுறை 2018 ஒக்தோபர் 26 ஆந் திகதி வரை இரண்டு தடவை காலம் நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. இவ்வெளிநாட்டு செயற்திட்டத்திற்காக சீனாவின் எக்சிம் வங்கியால் அ.டொ. 278.2 மில்லியன் அதாவது ரூபா 36,155 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது, 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 28,093 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியில் செயற்திட்ட நிர்மாணத்தைப் பூர்த்தி செய்வதற்கு முடியாத காரணத்தினால் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்துடன் பின்வரும் நட்டங்கள் ஏற்பட்டிருந்தன.

- **அந்நியச் செலாவணி நட்டம்**

மாத்தறை - கதிர்காமம் புதிய புகையிரத வீதி நிர்மாணத்திற்காக சீனாவின் எக்சிம் வங்கியால் 2010 ஆகஸ்ட் மாதம் முதல் ஒப்பந்தக் கம்பனிக்கான ஐ.அ.டொ 83,460,000 கொடுப்பனவு 02 வருடங்களும் 06 மாதங்களும் தாமதமானமையால் ரூபா 737.6 மில்லியன் அந்நியச் செலாவணி நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 48 மாதங்களுக்குள் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் ஒப்பந்தகாலத்தை இரண்டு முறை நீடிக்கப்பட்ட காரணத்தினால் அரசிற்கு ரூபா 36.5 மில்லியன் அந்நியச் செலாவணி நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

- **தாமதக் கட்டணம் அறவிடப்படாமை**

மாத்தறையிலிருந்து கதிர்காமம் வரையான புகையிரத வீத நிர்மாண ஒப்பந்தத்திற்கான உடன்படிக்கையின் 8.7 மற்றும் 14:15(6) பிரிவுகளின் பிரகாரம் ஒப்பந்த நிர்மாணங்கள் தாமதமானால் நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட திகதியின் பின்னர் வரும் ஒவ்வொரு வாரத்திற்காகவும் ஒப்பந்த பெறுமதியில் 0.1 சதவீத தாமதக் கட்டணம் ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். அதன் பிரகாரம் 2018 யூன் 14 ஆந் திகதி வரை ஒப்பந்தகாரரால் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு 34 வாரங்கள் தாமதமாகியிருந்தன. அதன் பிரகாரம் ரூபா 1,445.85 மில்லியனான தாமதக் கட்டணமொன்று ஒப்பந்தக்காரரிடம் அறவிடப்பட வேண்டிய போதிலும் 2018 ஆகஸ்ட் மாதம் வரையிலும் அத்தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

குருணாகல், ஹபரன ஊடாக தம்புள்ள புகையிரத வீதி நிர்மாணம்

இச் செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 370 மில்லியனான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 29.08 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. சுற்றாடல் ஆய்வு அறிக்கையை அங்கீகரித்துக் கொள்வதில் தாமதம் காரணமாக செயற்திட்டத்தை ஆரம்பிப்பதிலும் தாமதம் காணப்பட்டது.

சுற்றாடலுக்கு சாதகமான போக்குவரத்து முறைமையொன்றை அறிமுகப்படுத்தல்

சுற்றாடலுக்கு சாதகமான போக்குவரத்து முறைமையொன்றை அறிமுகப்படுத்துவது அமைச்சின் கடமைப் பொறுப்பாக இருந்த போதிலும் அதற்காக மத்திய மயப்படுத்தப்பட்ட திட்டமொன்றுடன் கூடிய செயல்நடவடிக்கை திட்டமொன்று அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை புகையிரத திணைக்களத்தின் தொழிற்பாட்டு இலாபம்.

இலங்கை புகையிரத திணைக்களம் 1867 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாண்டு முதல் 1934 ஆம் ஆண்டு வரை திணைக்களம் தொழிற்பாட்டு இலாபத்தை ஈட்டியிருந்தது. அக்காலப் பகுதியில் புகையிரதத்தின் மூலம் பொருட்களை கொண்டு சென்றதால் திரட்டிய வருமானத்தில் 57 சதவீதமான வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் புகையிரத திணைக்களத்தின் மீண்டெழும் வருமானம் ரூபா 6.49 பில்லியனாக இருந்ததுடன் மீண்டெழும் செலவினம் ரூபா 14.08 பல்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் மீண்டெழும் நட்டம் ரூபா 7.59 பில்லியனாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீண்டெழும் நட்டம் படிப்படியாக அதிகரித்துக் காணப்பட்டது. முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் சேகரிக்கப்பட்ட வருமானம் முறையே ரூபா 150 மில்லியனாலும் ரூபா 1,100 மில்லியனாலும் மிகைத்து நட்டம்

மீண்டெழும் செலவினம் மற்றும் நட்டம்	2012 ரூபா மில்லியன்	2013 ரூபா மில்லியன்	2014 ரூபா மில்லியன்	2015 ரூபா மில்லியன்	2016 ரூபா மில்லியன்	2017 ரூபா மில்லியன்
மீண்டெழும் வருமானம்	4,852	5,425	5,910	6,335	6,623	6,490
மீண்டெழும் செலவினம்	8,648	10,586	16,943	14,048	13,396	14,080
மீண்டெழும் நட்டம்	3,796	5,161	11,033	7,713	6,773	7,590
மீண்டெழும் வருமானத்தின் சதவீதமாக செயற்பாட்டு நட்டம்	78.24	95.13	186.68	121.75	102.26	116.95

ஏற்பட்டிருந்தது. விபரங்கள் அட்டவணை 25 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 25:- இலங்கை புகையிரத திணைக்களத்தின் மீண்டெழும் வருமானம், செலவினம் மற்றும் நட்டம்

மூலம் :- இலங்கை புகையிரத திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக்கணக்கு

வருமான சேகரிப்பு

இலங்கை புகையிரத திணைக்களத்தின் வருமான சேகரிப்பு மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தை விட மீண்டெழும் செலவினம் இரண்டு மடங்கால் அதிகரித்திருந்தது. இலங்கை புகையிரத திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது திறைசேரிக்கு ரூபா 7.59 பில்லியன் மேலதிக நிதி ஏற்பாட்டில் வழங்க நேர்ந்திருந்தது. மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட ரூபா 6,489.63 மில்லியன் வருமானத்தின் உள்ளடக்கம் அட்டவணை 29 இல் காட்டப்பட்டுள்ளது.



அட்டவணை 29 -- 2017 ஆம் ஆண்டின் வருமான உள்ளடக்கம்

மூலம்:- 2017 ஆம் ஆண்டின் இலங்கை புகையிரத திணைக்களத்தின் வருமானக் கணக்கு

தற்போது வருமான உள்ளடக்கத்தின் 66 சதவீதமான அதாவது ரூபா 4,280.63 மில்லியன் வருமானம் பயணிகளிடமிருந்து சேகரிக்கப்பட்டிருந்தது. இலங்கை புகையிரத திணைக்களத்தில் ஆரம்பத்தில் காணப்பட உள்ளடக்கத்தின் பிரகாரம் பொருள் போக்குவரத்தின் 57 சதவீதமான அளவு உழைக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 7 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. அக் குறைவினால் பொருளாதாரத்திற்கும் இலங்கையின் சுற்றாடல் தொடர்பில் ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொருளாதார தாக்கம்

பின்வரும் விடயங்களின் பிரகாரம் பொருட் போக்குவரத்து மூலம் இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு மேலதிக வருமான உழைத்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

- வருடாந்தம் இலங்கை துறைமுகத்திலிருந்து 232,000 கொள்கலன் புறப்படுவதுடன் குறைந்தது அக் கொள்கலன்கள் இலங்கை துறைமுகத்திலிருந்து ஒருகொடவத்த கொள்கலன் தரிப்பிடம் வரை 3.3 கிலோமீற்றர் தூரம் புகையிரதம் மூலம் போக்குவரத்து செய்யக் கூடியதாக இருந்தது. ஒரு கொள்கலனிற்கு ஒரு கிலோமீற்றருக்கு ரூபா 150 கட்டண அடிப்படையில் புகையிரதத்தின் மூலம் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுத்தால் ரூபா 114.84 மில்லியன் ஆன வருமானமொன்றை உழைக்க கூடியதாக இருந்திருக்கும். இம் மேலதிக வருமானத்தை உழைப்பது தொடர்பில் திணைக்களம் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

- பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குரிய 11 பிராந்திய களஞ்சியங்களுக்கு 2017 ஜனவரி மற்றும் திசெம்பர் மாதங்கள் தவிர ஏனைய மாதங்களில் எரிபொருள் தேவைப்பாடு 987,402,120 லீற்றராக இருந்தது. இலங்கை புகையிரத திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது 315,435,760 லீற்றர் புகையிரதத்தின் மூலம் போக்குவரத்து செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அப்பிராந்தியக் களஞ்சியங்களுக்கு மேலும் 671,966,360 லீற்றர் புகையிரதத்தின் மூலம் போக்குவரத்து செய்ய முடியுமாக இருந்த போதிலும் இந்த எரிபொருளை புகையிரதம் மூலம் கொண்டு செல்வதற்கு புகையிரத திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. போக்குவரத்து செய்யப்பட்ட எரிபொருள் இருப்பு டீசல் (BGT) எனின் ரூபா 449.39 மில்லியன் வருமானமொன்றையோ அல்லது பெற்றோல் (BMT) எனின் ரூபா 360.43 மில்லியன் வருமானமொன்று பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்திருக்குமென அவதானிக்கப்பட்டது.

- புகையிரதம் மூலம் சீமெந்து கொண்டு செல்லப்பட்டு உழைக்கப்பட்ட வருமானம் 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 13.22 மில்லியனால் அதாவது 60 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அவ்வருமானத்தை அதிகரித்துக் கொள்வது தொடர்பான தந்திரோபாயங்கள் தொடர்பில் திணைக்களத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

சுற்றாடல் தாக்கம்

இலங்கைக்குள் புகையிரதம் மூலம் பொருட் போக்குவரத்தை அதிகரிப்பதனால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கங்களை குறைத்துக் கொள்வதற்கு முடியுமான வகையில் பின்வரும் விடயங்கள் தொடர்பில் திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

- புகையிரத என்ஜின் ஒன்றின் மூலம் 20 அடி நீளமான 18 கொள்கலன்களை கொண்டு செல்லக் கூடியதாக இருப்பதுடன் 40 அடி நீளமான 09 கொள்கலன்களை கொண்டு செல்ல முடியும். இதற்காக ஒரு புகையிரத என்ஜினுக்கு 01 கிலோ மீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுவதற்கு ஒரு லீற்றர் எரிபொருள் எரிக்கப்படுகின்றது. 20 அடி நீளமான 18 கொள்கலன்களை கொண்டு செல்வதற்கான பிரைமூவர் (கொள்கலன் போக்குவரத்து) பயன்படுத்தினால் அதற்கான கிலோ மீற்றர் ஒன்றுக்கு செலவாகும் எரிபொருள் அளவு (0.26x18) 4.68 லீற்றர் ஆகும். 40 அடி கொள்கலன்களை கொண்டு செல்வதற்காக 09 பிரைமூவர் (கொள்கலன் போக்குவரத்து) பயன்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்காக ஒரு கிலோ மீற்றருக்கு (0.37x9) 3.33 லீற்றர் எரிபொருள் எரிக்கப்படும். இதன் பிரகாரம் ஒரு கிலோ மீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு பிரைமூவர் (கொள்கலன் போக்குவரத்து) பயன்படுத்தினால் மேலதிகமாக எரிக்கப்படும் எரிபொருளின் சராசரி (03 லீற்றராக இருந்த காரணத்தினால் சுற்றாடலுக்கு விடுவிக்கப்படும் வாயுக்கள் மற்றும் காபனீரொட்சைட் பதார்த்தங்களின் சராசரி அளவினை விட மூன்று மடங்கால் குறைத்துக் கொள்ள முடியுமென அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் புகையிரத என்ஜின் மூலம் கொள்கலன் போக்குவரத்து செய்யப்படுவதால் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்பினை மூன்று மடங்கினால் குறைக்கக் கூடியதாக இருப்பதாக அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் வருடாந்தம் 232,000 கொள்கலன் அளவில் விடுவிக்கப்படுவதுடன் கொள்கலன் பிரைம் மூவர் (கொள்கலன் போக்குவரத்து) மூலம் போக்குவரத்து செய்வதால் எரிக்கப்படும் மேலதிக எரிபொருளின் அளவு 696,000 லீற்றர் என மதிப்பீடு செய்யப்படலாம்.

- இலங்கையில் வளி மாசடைதல் 12.5 சதவீதம் (2001 ஆம் ஆண்டு) வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் புகை மூலம் இடம் பெறுவதாகவும் தற்போது அது 40 சதவீதம் வரை அடைந்துள்ளதாகவும் கணிப்பீடுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. புகையிரதம் மூலம் கொள்கலன்களை கொண்டு செல்லுவதால் வருடாந்த 696,000 லீற்றர் எரிபொருள் எரியும் வாயு மற்றும் காபன் திரவியங்கள் மூலம் சுற்றாடலுக்கு விடுவிக்கப்படும் காபன் மொனரொக்சைட் (Co), சல்பர் ஒக்சைட் (Sox), நைட்ரஜன் ஒக்சைட்(Nox), படியும் பதார்த்தங்கள் (SPM) பார உலோகம் மற்றும் ஈயம் (Heavy Metals, Pb) சிறு அளவில் கட்டுப்படுத்துவதற்கு இயலுமை இருப்பதாக அவதானிக்கப்பட்டது.

- மேலே குறிப்பிடப்பட்ட வாயுக்கள் மற்றும் பார உலோகங்கள் கலவை மூலம் ஏற்படும் நோய்களான தலை சுற்றுதல், தலைவலி, சுவாச பாதிப்புக்கள், சளித்தொல்லை, நிவ்மோனியா குளோபுதாகய மற்றும் அஸ்மா போன்ற நோய்களிலிருந்து விடுபட்டு மக்கள் வாழ்க்கைக்கு ஏற்படும் தாக்கங்களை குறைக்கும் இயலுமை தொடர்பில் திணைக்களத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

வீதிப் பாதுகாப்பிற்கான கடமைகளை நிறைவேற்றாமை

காப்புறுதி நிறுவனங்களில் மூன்றாம் தரப்பு வாகன காப்புறுதி காப்புறுதியிலிருந்து பெறும் வருமானத்திலிருந்து 01 சதவீதம் படி ரூபா 62.77 மில்லியனான வருமானமொன்று மீளாய்வாண்டின் போது வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய மன்றத்தினால் சேகரிக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 17.82 மில்லியன் மன்றத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக செலவிடப்பட்டிருந்தது அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரை சேகரிக்கப்பட்ட பணத்தில் ரூபா 44.96 மில்லியன் செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. வீதிப் பாதுகாப்பிற்கான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தாமையால் இப்பணம் சேமிக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

வீதி விபத்துக்கள் மற்றும் சொத்துக்கள் சேதம் தொடர்பான தகவல் முறைமையொன்றை தாபிக்காமை -

மோட்டார் வாகனங்களினால் இடம்பெறும் வீதி விபத்துக்களை குறைத்தல் வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய மன்றத்தின் பிரதான பணியாகும். ஒவ்வொரு ஆண்டிலும் வீதி வலையமைப்பிற்கு சேரும் வீதிகள், மோட்டார் வாகனங்களின் அளவு, வீதி விபத்துக்கள், சொத்துக்கள் சேதம் மற்றும் தொடர்புடைய சகல தகவல்களையும் உள்ளடக்கிய கணனி தரவு களஞ்சியமொன்றை பேணுதல் அத்தியாவசிய செயற்பாடொன்றாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அச் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு மன்றம் தவறியிருந்தது.

பாதுகாப்பற்ற புகையிரத நிலையங்கள் இனங்காணப்படாமை

மீளாய்வாண்டின் போது புகையிரதங்களில் 86 வாகனங்கள் மோதி 59 பேர் காயமடைந்திருந்ததுடன் 12 பேர் மரணத்திருந்தனர். புகையிரத குறுக்கு வீதிகளில் 439 வாகன மோதல்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன. வீதிப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக பாதுகாப்பற்ற புகையிரத வீதிகளில் அறிவூட்டுவதற்கு 250 பதாதைகளை பொருத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பாதுகாப்பற்ற புகையிரத நிலையங்களை இனங்காணுதல் அல்லது பதாதைகள் பொருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

நிலைபேறான அபிவிருத்தியை அடைந்து கொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி மற்றும் தொடர்புடைய இலக்கு அடிப்படை தரவுகள், இலக்கை அடைய வேண்டிய படிக்கல் உட்பட செயன்முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

வீதி விபத்துக்களில் மரணிக்கும் அளவு அதிகரித்தல்

மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வீதி விபத்துக்களின் வகை மற்றும் அதன் மூலம் காயமடைந்த மற்றும் மரணித்தவர்களின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்துச் சென்றிருந்தன. விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.



அட்டவணை 30 .... வீதி விபத்துக்களின் எண்ணிக்கை மற்றும் மரணித்தவர்களின் எண்ணிக்கை

மூலம் - செயலாற்றல் அறிக்கை

சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்பல்

பொருளாதார மற்றும் சமூகரீதியாக வலுப்படுத்துவதினூடாக பாதுகாப்பான சமூகமொன்றாக உருவாக்குவதை பெறுபேற்றை அடைந்து கொள்வதற்காக சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்பல் அமைச்சு மற்றும் அதன் கீழான இரண்டு திணைக்களங்களாலும் 05 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களாலும் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி உள்ளடங்கலான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை உருவாக்குதல்.
- முதியோரைப் பேணுதல் மற்றும் பாதுகாத்தல்.
- விசேட தேவைப்பாடுடைய நபர்களின் குறைகளை இனங்காணுதல் மற்றும் புனர்வாழ்வளித்தல் செய்தல்.
- வாழ்வின் எழுச்சி செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தி கிராமிய மற்றும் பிரதேச பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல்.
- பொதுசன் உதவி முன்மொழிவு முறையினை மீளாய்வு செய்தல், மீள் கட்டமைப்பு மற்றும் பொருத்தமான புதிய சீரமைப்புகளை அறிமுகப்படுத்தல்
- காச நோயாளர்களுக்கு, சிறுநீரக நோயாளர்களுக்கு, தொழு நோயாளர்களுக்கு புற்று நோயாளர்கள், மனவளர்ச்சி குன்றிய நோயாளர்களுக்கு மற்றும் அவர்களில் தங்கி வாழ்வோருக்கு உதவிகளை வழங்குதல்.
- மதியுரை சேவைகளை நடைமுறைப்படுத்தல்.
- ஊனமுற்ற நபர்களுக்காக தொழில்சார் பயிற்சிகளை வழங்குவதற்கும், வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் தேவையான நடைமுறைகளை ஒழுங்கமைத்தல்.
- சமூக பாதுகாப்பு மற்றும் சமூக காப்புறுதி முறைமைகளை நடைமுறைப்படுத்தல்.

அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் நிறுவனங்கள் மூலம் மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

முதியோருக்கான தேசிய கொள்கையொன்றை செயற்படுத்துதல்

75 வயது வரையான சிரேஷ்ட பிரஜைகளுக்கு மருத்துவக் காப்புறுதி திட்டமொன்றைத் தொடங்குவதற்கும் 65 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்காக பொதுப் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்குமென முதியோர்களுக்கான தேசிய கொள்கையொன்றை தயாரிப்பதற்கு முன்னைய ஆண்டில் ரூபா 5.00 மில்லியன் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக முதியோர் செயலகத்திலும் 331 பிரதேச செயலகங்களிலும் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக முன்னைய ஆண்டின் போது ரூபா 3.37 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1.69 மில்லியன் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு எஞ்சிய நிதி ஏற்பாட்டினை செலவினமாக கருதி கணக்கீடு செய்து வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அக் கொள்கை உரையை தயாரிப்பதற்காக இரண்டு வருட கால கடந்திருந்த போதிலும் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் செயற்படுத்தியிருக்கவில்லை.

முதியோர் படிகளில் ஒரு பகுதி விளைவற்ற வகையில் காணப்படல்

70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு மாதாந்தம் குறைந்த வருமானம் பெறும் 386,380 ரூபா 2,000 வீதம் படிகள் கொடுப்பனவிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 9,265.92 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 25 மாவட்டங்களில் 375,317 முதியோருக்கு ரூபா 9,007.60 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 258.11 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் செலுத்தப்படும் முதியோர் படிகளில் 100 அறவிடப்பட்டு பிரதேச செயலகத்தின் மூலம் முதியோர் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் மொத்த ரூபா 1,098.46 மில்லியன் விளைவற்ற வகையில் முதியோர் செயலகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

முதியோருக்கான பகல் நேர பாதுகாப்பு நிலையங்களுக்காக வழிகாட்டிக் கோவையொன்றை தயாரித்தல்

முதியோர் செயலகத்தினால் 2017 சனவரி மாதத்தின் போது முதியோருக்கான பகல் நேர பாதுகாப்பு நிலையங்களுக்கான வழிகாட்டிக் கோவையொன்று தயாரிக்கப்பது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவ்வழிகாட்டிக் கோவையை செயற்படுத்தக் கூடிய வகையில் முழுமையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

முதியோர் இல்லக் கண்காணிப்பு

இலங்கையில் நடாத்திச் செல்லப்படும் முதியோர் இல்லங்களது எண்ணிக்கை 306 ஆக இருந்ததுடன் அதில் 119 இல்லங்கள் முதியோர் செயலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் இம்முதியோர் இல்லங்களில் 19 மாத்திரமே முதியோர் செயலகத்தினால் பரிசோதனைக்குள்ளாகியிருந்தன.

வலது குறைந்த நபர்களுக்கு வீடமைப்பு உதவி கொடுப்பனவு

தேசிய லொத்தர் சபையினால் நடாத்திச் செல்லப்படும் சுபிரிவாசனா சம்பத் லொத்தர் வருமானத்தில் 5 சதவீதமான பங்களிப்பினைப் பெற்றுக்கொண்டு குறைந்த வருமானம் பெறுவோரின் வீடுகள் இல்லாத வலது குறைந்த நபர்களுக்காக ரூபா 250,000 தொகை 3 தவணைகளின் கீழ் வீடமைப்பு உதவி வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதி வரை 19 மாவட்டங்களில் 93 பேருக்கு வீடமைப்பு உதவிகள் 2007 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை வீடமைப்பு உதவியான ரூபா 8.50 மில்லியன் செலுத்த வேண்டியிருந்தது.

வலது குறைந்த நபர்களுக்கு வலது குறைந்தோர் படிகள் கொடுப்பனவு

குறைந்த வருமானம் பெறும் 30,654 வலது குறைந்தோருக்கு மாதாந்தம் 3,000 வீதம் வலது குறைந்தோர் படிகள் கொடுப்பனவிற்காக ரூபா 1,103.54 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 25 மாவட்டங்களில் குறைந்த வருமானம் பெறும் 30,077 வலது குறைந்தோருக்கு ரூபா 1,082.78 மில்லியன் வலது குறைந்தோர் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மாவட்டங்களில் இருக்கும் குறைந்த வருமானம் பெறும் வலது குறைந்தோர் தொடர்பான தகவல்கள் நாளாது வரையாக்காமையால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

சிறுநீரக நோயாளர்களுக்கான உதவி வழங்கல்

சிறுநீரக நோயாளர்களுக்காக 09 மாவட்டங்களுக்கு உதவி வழங்குவதற்கு ரூபா 907.22 மில்லியன் குறைநிரப்பு மதிப்பீடு ஒதுக்கீட்டின் மூலம் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 868.76 மில்லியன் பயன்படுத்தபட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதி அளவில் ரூபா 38.48 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இனங்காணப்பட்ட 21,500 நோயாளர்களில் 20,493 நோயாளர்களுக்கு உதவி வழங்கப்பட்டிருந்தது, எவ்வாறாயினும் காத்திருக்கும் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

சமூக பாதுகாப்பு உறுதி வழங்குதல்

1990 இன் 17 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு சபை சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் ஓய்வூதிய முன்மொழிவு முறைமை பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் வேறாக பங்களிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டதாக உறுதிப்படுத்துவதற்கு அவர்களுக்கு உரித்தான நலன்களை அறிவூட்டுவதற்கும் உறுதியொன்று வழங்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை 172,684 பேர் பங்களிப்பினை பெற்றுக் கொண்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 97,370 சமூக பாதுகாப்பு உறுதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

முதியோருக்கான தேசிய முதியோர் செயலகத்திற்குரிய காணி

2009 ஆம் ஆண்டில் முதியோர் பாதுகாப்பு நிலையம் ஒன்றை பேணுவதற்காக வெகுமதி உரித்துறுதியின் மூலம் பெறப்பட்ட 02 ஏக்கர்களில் நிவித்திகல நில்வளா செவன ஊனமுற்றோர் நிலையத்தின் காணியும் கட்டிடமும் வெகுமதி உரித்துறுதி மூலம் கிடைத்திருந்தத எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் பெறுமதி மதிப்பிட்டு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை. முதியோர் இல்லத்தை நிர்மாணிப்பதற்காக 2011 ஆம் ஆண்டின் போது வெகுமதி உறுதியின் மூலம் ரூபா 13.00 மில்லியனான கம்பஹா ஹோலிகுரொஸ் காணி மற்றும் ரூபா 3.20 மில்லியனான ஹாரகம இராணித் தோட்டம் கிடைத்திருந்த போதிலும் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் உரிய செயற்பாடு நிறைவேற்றப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

தொழில்பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ள காணி கையேற்கப்படாமை.

சமூக சேவைகள் திணைக்களத்திற்குரிய 07 தொழில் பயிற்சி நிலையங்களுக்குரிய மொத்தக் காணியின் அளவு 22 ஹெக்டோயராக இருந்ததுடன் அக்காணி 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் முறையாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சிறுவர் வழிகாட்டல் நிலையம்

சமூக சேவைகள் திணைக்களத்திற்காக சிறுவர் வழிகாட்டல் நிலையமொன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 25.00 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 16.93 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அந்நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

விஞ்ஞான தொழில்நுட்பமும் ஆராய்ச்சிகளும்

விஞ்ஞானம் சார்ந்த ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை பிரயல்யப்படுத்துதலினூடாக விஞ்ஞான ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் உயர்ந்த நாடொன்றாக மாற்றுவது இத்துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறாக இருந்தது. அப்பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 13 நியதிச்சட்ட நிறுவனங்களால் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சிகள் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல், பின்தொடர் நடவடிக்கை மற்றும் மதிப்பீடு செய்தல்
- விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப துறைகளில் சர்வதேச ரீதியாக இடம்பெறும் கண்டுபிடிப்புகளுக்கு இணங்கும் வகையில் உள்நாட்டு ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளுக்காக தேவையான வசதிகளை ஏற்படுத்ததுல்
- விஞ்ஞானம் சார்ந்த, கைத்தொழில், சமூக மற்றும் பொருளதார ஆராய்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகளை விரிவாக்குவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
- ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்குரிய வசதிகளை வழங்குவதினூடாக ஆராய்ச்சிகளைத் திட்டமிடலும் செயற்படுத்தலும்
- புதிய ஆராய்ச்சி பெறுபேறுகளை உரிய தரப்பினர்களுக்கு வழங்குதல்
- புதிய கண்டுபிடிப்புகளுக்காக சமூகத்தை தொடர்புபடுத்துதல், முன்வருவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- நிர்மாணக் கைத்தொழில்களை மேம்படுத்தல், அபிவிருத்திக்காக ஆராய்ச்சிகளை செயற்படுத்தல்

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களால் மேற்படி கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

சிக்கனமற்ற செலவினம்

ரிதீகம விதாதா நிலையத்திற்கு 2015 திசெம்பர் 23 ஆந் திகதி முதல் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அந்நிலையத்திற்கு வெளிக்கள ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் மற்றும் அலுவலக உதவியாளரொருவர் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தனர். இதன் காரணமாக 2015 ஆம் ஆண்டின் பின்னர் இந்நிலையத்தில் எவ்வித சேவையொன்று இடம் பெற்றிருக்காததுடன் அவ்வெளிக்கள ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் மற்றும் அலுவலக உதவியாளருக்கு ரூபா 1.07 மில்லியன் சம்பளம் மற்றும் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

2020 ஆம் ஆண்டின்போது நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்கு நிதியினை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திலேயே உருவாக்குதல் மற்றும் 2017 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தின் வருமானம் ரூபா 62 மில்லியன் அல்லது 26 சதவீதத்தினால் அதிகரித்துக் கொள்ளும் அபிலாஷையுடன் நிறுவனம் தற்போது காணப்படும் நடவடிக்கைகளை ஆய்வு செய்து அந்த இலக்கை அடைந்து கொள்வதற்கு நடைமுறையொன்றை தயாரிப்பதற்காக ரூபா 1.34 மில்லியன் செலவு செய்து விற்பனை மேம்பாட்டு மதியுரையாளரின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அந்த அபிலாஷையை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் அச்செலவினம் சிக்கனமற்றதாக இருந்தது.

திறைசேரி அங்கீகாரமின்றி வெளிநாட்டு உதவி செயற்திட்டத்தை செயற்படுத்துதல்

2011 ஏப்ரல் 21 ஆந் திகதிய எம்.ஒ.எப்பீ/ஈ.ஆர்.ஆர்சீ/2011/1 ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக வெளிநாட்டு வளத் திணைக்களம் அறிவூட்டப்படாமல் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 2.44 மில்லியன் பெறுமதியான கொரிய செயற்திட்டமொன்றும் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 9,476 மில்லியன் பெறுமதியான இந்து இலங்கை செயற்திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

திறைசேரி அங்கீகாரமின்றி ஊழியர் ஆட்சேர்ப்பு

2016 சனவரி 08 ஆந் திகதிய 1/2016 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாகவும் திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமலும் 13 ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையிலும் 64 உத்தியோகத்தர்கள் பணிப்பொறுப்பு அடிப்படையிலும் கைத்தொழில்நுட்ப நிறுவனத்தினால் சேவையில் ஈடுபடுத்தி மொத்தம் ரூபா 17.88 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

செயற்திட்டத்தை அமுல்படுத்தப்படாமையால் இடம் பெற்ற நட்டம்

ஐரோப்பிய சங்கத்தின் நிதி உதவிகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டமொன்று உடன்படிக்கை செய்யப்பட்டதன் பிரகாரம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் ரூபா 13.28 மில்லியன் நட்டமொன்று இடம்பெற்றிருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளரால் அந்நட்டத்தை ஐரோப்பா சங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்நட்டத்திலிருந்து ரூபா 12.30 மில்லியன் மேலும் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் அச் செலுத்த வேண்டிய நட்டம் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

முறைப்படி விதந்துரைப்புக்கள் தயாரிக்கப்படாமல் கேள்வி கோரல்

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு டயல்டோ மீற்றர் ஒன்று கொள்வனவு செய்வதற்கு முறையான விதந்துரைப்புக்களை தயாரிக்கப்படாமல் கேள்வி கோரப்பட்டிருந்தது. இதனால் ஆகக்குறைந்த கேள்வி சமர்ப்பித்த கேள்விதாரரின் கூறுவிலை நிரகாரிக்கப்பட்டு கூடிய விலை சமர்ப்பித்த கேள்விதாரரின் கூறுவிலைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இதனால் நிறுவனத்திற்கு ரூபா 2.23 மில்லியன் நிதிசார் நட்டமொன்று இடம்பெற்றிருந்தது நிறுவனத்தினால் ஆகக்குறைந்த கேள்வியை சமர்ப்பித்த கேள்விதாரருடன் கலந்துரையாடாமல் கூடிய கூறுவிலை சமர்ப்பித்த கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

வெளிநாட்டு புலமைப்பரிசில் உடன்படிக்கை மீறிய உத்தியோகத்தர்கள்

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வெளிநாட்டு புலமைப் பரிசில் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படாத 18 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 7.81 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அப்பணத்தை அறவிடுவதற்கு நிறுவனம் தவறியிருந்தது.

விளைவற்ற சொத்துக்கள்

விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சிற்குரிய 4 கெப் வண்டிகள் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கோள்மண்டல வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவ்வாகனங்களை பயன்படுத்துவதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இறக்குமதி செய்யப்பட்ட டின்மீன் மற்றும் மாஜரீன் தொடர்பாக பார உலோக பரிசோதனை மேற்கொள்ளப்படாமை

மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு உற்பத்திக் கம்பனியொன்றிடமிருந்து 49 சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்பட்ட ஐ.அ.டொ. 7,878,766 பெறுமதியான 2,406,088 கிலோ கிராம் டின்மீன்களுக்கான தெரிவு பரிசோதனையொன்று இலங்கை தரக் கட்டண நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அப்பரிசோதனையின் பிரகாரம் 42 சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்பட்ட ஐ.அ.டொ 7,287,075 பெறுமதியான 2,019,581 டின் மீன்களுக்கு பார உலோக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு உற்பத்திக் கம்பனியொன்றிடமிருந்து 28 சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த ஐ.அ.டொ. 482,736 பெறுமதியான 607,800 கிலோ கிராம் மாஜரினுக்காக இலங்கை தரம் 1427:2011 இல் 5.6 பிரிவின் பிரகாரம் பார உலோக பரிசோதனை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதில் 14 சந்தர்ப்பத்தில் இறக்குமதி செய்யப்பட்ட ஐ.அ.டொ. 245,426 பெறுமதியான 306,600 கிலோ கிராம் மாஜரினுக்காக இலங்கை தரம் 1427:2011 இன் 5.5 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நுண்ணுயிர் கிருமி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

தரத்தில் குறிப்பிட்டுள்ள சகல மாதிரிகள் பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளாமை.

2016 ஆம் ஆண்டு முதல் 2018 மே மாதம் வரை வெளிநாட்டுக் கம்பனியொன்றிடமிருந்து 24 சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்பட்ட 190,727 கிலோ கிராம் மழலை சவர்க்கார இருப்புகளுக்கான இலங்கை தரக் கட்டண நிறுவனத்தினால் தெரிவு பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த தரத்தின் பிரகாரம் அச்சவர்க்காரம் தொடர்பாக 06 மாரிகள் பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதில் 04 மாரிகள் தொடர்பாக மாத்திரம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தரமற்ற பாதுகாப்பு தலைக்கவசங்களை சந்தைக்கு வழங்குதல்

2017 மார்ச் 20 ஆந் திகதி வெளிநாட்டு உற்பத்திக் கம்பனியொன்றில் இருந்து ஐ.அ.டொ 20,885 பெறுமதியான 7,536 பாதுகாப்பு தலைக்கவசங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. அந்த இருப்பை சந்தைக்கு வழங்க முடியுமென 2017 ஏப்ரல் 04 ஆந் திகதி இலங்கை சுங்கம் அறிவித்திருந்தது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட தரப் பரிசோதனையின் பிரகாரம் இருப்பு நியமத்தில் குறிப்பிடப்பட்ட 2 தேவைப்பாடுகளுக்கு இணங்காதிருந்தமையால் அந்த தலைக்கவசங்களை மீள் ஏற்றுமதி செய்யப்பட வேண்டுமென 2017 மே 19 ஆந் திகதி இலங்கை தர கட்டளை நிறுவனத்தினால் இறக்குமதியாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், முழு

இருப்பு விற்று முடிக்கப்பட்டுள்ளதாக 2017 யூன் 02 ஆந் திகதி இறக்குமதியாளரால் நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

பரிசோதனை அறிக்கை வழங்கப்படாமை

மீளாய்வாண்டின் போது இறக்குமதி செய்யப்பட்ட 344 உணவு மற்றும் உணவல்லாத பொருள் இருப்புக்களுக்குரிய தரப் பரிசோதனைக்காக மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு 2018 ஆகஸ்ட் மாதம் வரையிலும் 07 மாதங்கள் முதல் 19 மாதங்கள் வரையான காலப்பகுதியொன்று கடந்திருந்த போதிலும் பரிசோதனை அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை. அந்த இருப்புக்களில் 157 இருப்புகளுக்குரித்தாக மேற்கொண்ட தெரிவுப் பரிசோதனையின் போது 97 பொருட்கள் சந்தைக்கு வழங்குவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட ஆராய்ச்சி செயற்திட்டங்களில் பெறுபேறு அடைந்து கொள்ளாமை

இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையினால் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 171.92 மில்லியனான மானிய பெறுமதியுடனான 45 அடிப்படை ஆராய்ச்சி செயற்திட்டங்கள் அறிக்கைகள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. மதிப்பிட்டு அறிக்கையின் பிரகாரம் ரூபா 88.39 மில்லியன் பெறுமதியான 21 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் வெற்றிகரமான பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அச் செயற்திட்டங்களின் பெறுபேறுகளை தேசிய தேவைப்பாடுகளுக்கு பயன்படுத்தும் இயலுமை தொடர்பாக மதிப்பிடொன்று செய்து ஆராய்ச்சி மூலம் பொருளொன்றோ செயற்பாடொன்றை மேம்படுத்துவது தொடர்பாக தீர்வு வழங்கப்பட்டிருக்கவில்லை.

செயன்முன்னேற்றத்தை மீளாய்வு செய்யாமல் நிதி ஏற்பாடு வழங்குதல்

இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையினால் ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கா நிதி ஏற்பாடு வழங்கும் போது ஆராய்ச்சிகளின் முன்னேற்றம் தொடர்பாக பரீட்சித்து அவ்வப்போது நிதி ஏற்பாடு வழங்குவதற்கு பதிலாக ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலேயே பரிசோதனைக்குரிய முழு நிதி ஏற்பாட்டையும் அந்தந்த செயற்திட்டத்தின் கீழான நடைமுறைக் கணக்கில் செலவு வைக்கப்படுகின்றன. 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட 155 செயற்திட்டங்களுக்குரிய வங்கிக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 897.28 மில்லியனான மானியங்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 522.21 மில்லியன் வங்கி நடைமுறைக் கணக்குகளில் விளைவற்றுக் காணப்பட்டன.

புத்தாக்கத்திற்காக ஆக்கவுரிமைகளை பெற்றுக் கொள்வதற்கு அக்கறை செலுத்தாமை

2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் சஹசக் முடிவுப் பொருள் தேசிய போட்டியின் கீழ் 1,118 புத்தகாக்கங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அதில் 318 புத்தாக்கங்கள் வெற்றி பெற்றிருந்தன. எவ்வாறாயினும் 2014-2017 காலப்பகுதியில் ஆக்கவுரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக 63 புத்தாக்குனர்கள் மாத்திரம் முன்வைக்கப்பட்டிருந்தன. அவை போட்டிக்கு சமர்ப்பிக்கப்பட்ட புத்தாக்கத்தின் அளவில் 5 சதவீதம்

மற்றும் வெற்றிபெற்ற புத்தாக்கங்ளில் 20 சதவீதம் போன்ற குறைந்த அளவினையே கொண்டிருந்தது.

புத்தாக்கங்களுக்கு நிதியுதவி வழங்குதல்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் "புத்தாக்க ஊக்குவிப்பு 2016" நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து நிதி உதவிகள் வழங்குவதற்கு 08 புத்தாக்குனர்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர். 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மூன்று புத்தாக்குனர்களுக்கு மாத்திரம் நிதி உதவி வழங்கப்பட்டிருந்தது.

புத்தாக்குனர்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிதியுதவிகளிலிருந்து நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின்போது இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் 11 புத்தாக்குனர்களுக்காக ரூபா 7.72 மில்லியன் நிதியுதவி வழங்கப்பட்டிருந்தது. நிதியங்களில் தேவைப்பாடு மற்றும் நிதியம் தேவைப்படும் சந்தர்ப்பம் தொடர்பாக முறையான ஆய்வொன்றில்லாமல் நிதி வழங்கப்பட்டமையால் 03 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 4.13 மில்லியன் கூட்டுத்தொகையான மானியங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

புத்தாக்கங்களை சந்தைக்கு எடுத்துச் செல்லல்.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் புத்தாக்குனர்களுக்கு அவர்களின் வெளியீடுகளை சந்தைக்கு எடுத்துச் செல்வதற்கும் ஆராய்ச்சி மேம்படுத்துவதற்கும் பொறிமுறையொன்றை ஏற்படுத்தும் செயற்திட்டமொன்று மீளாய்வாண்டின்போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2018 ஆகஸ்ட் மாதம் வரையிலும் அதன் நிர்வாக நடவடிக்கைகளுக்கு ரூபா 4.70 செலவிடப்பட்டிருந்தது. எனினும் எந்த புத்தாக்குனருக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டிருக்கவில்லை.

புதிய உற்பத்தி கலாசார மேம்படுத்தல்

இலங்கையில் புதிய உற்பத்தி கலாசாரமொன்றை மேம்படுத்துதல் மற்றும் ஸ்தாபிப்பதற்காக ஊடகக் கொள்கையொன்று தயாரிப்பதற்காக ஊடக கருத்தரங்கொன்றை நடாத்துவதற்கு ரூபா 1.68 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் 2018 யூன் மாதம் வரையிலும் ஊடக கொள்கை தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

தொடர்பாடல்

டிஜிடல் கைத்தொழில் மற்றும் அண்மித்த சேவைகளை அடைந்து கொள்ளும் இயலுமையை அதிகரிப்பதன் மூலம் டிஜிடல் சேவைகள் மற்றும் உற்பத்தியை பிரபல்யப்படுத்துவதன் மூலமும் மக்களின் டிஜிடல் தேவைப்பாட்டை அதிகரிப்பதன் மூலமும் டிஜிடல் அமுலாக்க சமூகமொன்றை கட்டியெழுப்புதல் இத்துறையின் நோக்கங்களாக இருந்தன. இந்நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தொலைத்தொடர்பு மற்றும் டிஜிடல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 03 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. அந்நிறுவனங்களினால் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- தொலைத்தொடர்பு மற்றும் டிஜிடல் உட்கட்டமைப்பு வசதிகள் விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைவருக்கும் தொலைத்தொடர்பு வசதிகள் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.
- அரச துறையின் சேவைகள் வழங்கலின் செயற்திறன் மற்றும் வினைத்திறன என்பவ்றை அதிகரிப்பதற்காசக பொருத்தமான தகவல் தொழில்நுட்ப தீர்வுகளை பயன்படுத்துவதற்கு ஒத்துழைத்தல்.
- கணனி தொழிற்பாட்டை அதிகரிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாவனையை ஊக்குவிப்பதற்காக தந்திரோபாயங்களை தயாரித்தல்

மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

நிலையான தொலைபேசி சேவைகள் அழைப்பாளர் எண்ணிக்கை

இலங்கையின் நிலையான தொலைபேசி சேவைகள் அழைப்பாளர் எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டில் 3.6 மில்லியன் இருந்த போதிலும் அது 2017 ஆம் ஆண்டு வரை 2.6 மில்லியன் வரை 28 சதவீதம் குறைவடைந்திருந்தது. கடந்த 12 ஆண்டுகளில் செல்லிடத் தொலைபேசி துறையுடன் இணைந்த வருடாந்த அதிகரிப்பொன்று காண்பித்தது. 2005 ஆம் ஆண்டின் போது 3.36 மில்லியன் அளவிலான செல்லிட தொலைபேசி அழைப்பாளர் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 28.2 மில்லியன் வரை 739 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

இங்கு தொலைபேசி 100 நபர்களுக்கு 143.64 வரை அதிகரித்திருந்த போதிலும், செயற்பாட்டில் உள்ள அழைப்பாளரை இனங்காணும் அடையாள மொடியுல் பத்திரங்கள் (sim cards) கருத்திற் கொள்ளக்கூடிய அளவு தனியாக மற்றும் ஒரே நபர்களால் பயன்படுத்தப்படுவதால் இப்புள்ளிவிபரங்களின் மூலம் உள்ளவாறான நிலைமை பிரதிபலிக்கவில்லை.

இணையத்தள சந்தாதாரர்களின் எண்ணிக்கை

நிலையான இணையத்தள சந்தாரர்களின் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டின் போது 929,089 ஆக இருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை அந்த அளவு 1,221,960 பேர் வரை 31 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அவ்வாறே 2016 ஆம் ஆண்டின் போது செல்லிட தொலைபேசி இணையத்தள சந்தாதாரர்களின் எண்ணிக்கை 3,991,465 ஆக இருந்த போதிலும் அது 2017 ஆம் ஆண்டின் இறுதி அளவில் 4,682,300 வரை 17 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தன. 2017 ஆம் ஆண்டளவில் 768,760 பேர் ADSL இணையத்தள வசதிகளைப் பெற்றுக்கொண்டிருந்தனர். மாகாணத்தின் பிரகாரம் ADSL இணையத்தள வசதிகள் பரவல் வரைபடம் 31 இல் தரப்பட்டுள்ளது.



வரைபடம் 31 ----------மாகாணத்தின் பிரகாரம் ADSL இணையத்தள வசதிகள் மூலம்---------- இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்படுத்தல் ஆணைக்குழு

ADSL இணையத்தள வசதிகளில் 48.1 சதவீதம் மேல் மாகாணத்தில் உள்ளீர்க்கப்பட்டிருந்ததுடன் 3.3 சதவீதம் முதல் 10.9 சதவீதம் வரையான வீச்சளவில் ஏனைய மாகாணங்களில் வியாபித்திருந்தது. அதன் பிரகாரம் ADSL இணையத்தள வசதிகள் மேல் மாகாணம் தவிர ஏனைய மாகாணங்களுக்கு இடையே விரிவாக்கம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

செயற்திட்டங்களை செயற்படுத்துவதில் தாமதம்

அமைச்சினால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 22 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக ரூபா 2,290.10 மில்லியன் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 2,290.10 மில்லியன் நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 251.13 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதி வரையில் மேலும் செலுத்த வேண்டிய ரூபா 328.89 மில்லியனுடன் செயற்திட்டதிற்காக நிறைவேற்றப்பட்டிருந்த செயற்பாடுகளின் பெறுமதி ரூபா 580.02 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 25 சதவீதம் அளவிலான நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்தன. இந்த 22 செயற்திட்டங்களில் பாடசாலை கணனி ஆய்வுகூடச் செயற்திட்டம் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. வருடாந்த பாதீட்டு மதிப்பிட்டிலிருந்து ரூபா 39.1 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட தகவல் வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் மாவட்ட தகவல் தொழில்நுட்ப வள நிலையங்கள் ஸ்தாபித்தல் போன்ற செயற்திட்டங்கள் ஆண்டில் செயற்படுத்துவதை அமைச்சினால் இடை நிறுத்தப்பட்டிருந்தது. எஞ்சிய 17 செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 10.20 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சினை எடுத்திருந்தது.

தாமரைக் கோபுர செயற்திட்டம்

மக்கள சீனக் குடியரசின் 02 கம்பனிகளால் 2012 நவம்பர் 12 ஆந் திகதி நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்திட்டம் 912 நாட்களில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அச்செயற்திட்டத்தின் பெறுமதி ஐ.அ.டொலர் 104.3 மில்லியனாக இருந்தது. செயற்திட்டத்தின் பூர்த்தி செய்யும் காலத்தை 2017 ஒக்தோபர் மாதம் வரை காலம் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 மே 31 ஆந் திகதி வரை அது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2017 நவம்பர் மாதம்

முதல் 2018 மே மாதம் வரை 200 நாட்கள் கடந்திருந்த போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் 200 நாட்கள் தாமதக் கட்டணமாக ஐ.அ.டொலர் 10.43 மில்லியன் அறவிடப்பட்டிருக்கவில்லை. தாமரைக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணி 2018 மே மாதம் வரையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறே மக்கள் சீனக் குடியரசின் EXIM வங்கியினால் முதலாவது கடன் தொகை விடுவித்தல் (Disbursement) 2013 ஆகஸ்ட் 13 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2016 ஆகஸ்ட் 18 ஆந் திகதி வரையில் கடன் விடுவிக்கும் காலம் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. அத்திகதி வரை மொத்த கடன் தொகையில் ஐ.அ.டொலர் 43,746,097 அதாவது 49 சதவீதம் விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் நிர்மாணங்கள் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்படாமையால் 2016 ஆகஸ்ட் 19 ஆந் திகதி முதல் 2017 ஒக்தோபர் 27 வரையான காலப்பகுதிக்காக மாத்திரம் பயன்படுத்தப்படாத கடன் தொகைக்காக செலுத்துவதற்கு ஏற்பட்ட மேலதிக இணக்கப்பாட்டுக் கட்டணங்கள் அளவு ஐ.அ.டொலர் 322,984 ஆக இருந்தது.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் காலஎல்லை மிகைத்ததன் பேரில் EXIM வங்கியால் விடுவிக்கப்பட்ட முழுக்கடன் தொகை ஐ.அ.டொலர் 67,259,754 இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும் ஆரம்பத்திலிருந்தே இணக்கக் கட்டணங்களை கணக்கிடும் போது மொத்தக் கடன் தொகையான ஐ.அ.டொலர். 88,655,000 பயன்படுத்திய காரணத்தினால் ஐ.அ.டொலர் 636,508 ஆன இணக்கக் கட்டணங்கள் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

2010 ஒக்தோபர் 27 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் உத்தேச தொலைக்காட்சி கோபுரம் மற்றும் களியாட்ட நிலையம் முகாமைத்துவ மதியுரைக் கம்பனியொன்றுடன் கலந்துரையாடி கையளிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உரிமைத்துவத்தின் கீழ் கொழும்பு தொலைக்கட்சி கோபுரம் மற்றும் களியாட்ட நிலையத்தை பகிரங்க கம்பனியான்றாக தாபித்தல், கொழுப்பு பங்கு பரிவர்த்தனை பெயர்ப்பலகையில் பட்டியலிடப்படல் மற்றும் ஆரம்ப பொது வழங்கல் மூலம் 30 சதவீத பங்குகளை மூலதனமாக வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், 1991 இன் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் சட்டம் மற்றும் 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டத்தின் பிரகாரம் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு மேற்படி தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அதிகாரம் இருக்கவில்லை. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரகாரம் கம்பனியொன்றை தாபிக்க முடியாததன் பேரில் கொழுப்பு தாமரைக் கோபுர ஆதனங்கள் தொடர்பாக முகாமைத்துவக் கம்பனிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக பல கட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக 2018 யூலை மாதம் வரையிலும் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் ரூபா 4 பில்லியன் முதலீடு செய்யப்பட்டதன் பேரில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட வாகன நிறுத்துமிடத்திற்காக 2018 யூலை 30 ஆந் திகதி வரையிலும் அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்திருக்கவில்லை.

உயர் கல்வி

உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் சர்வதேச மட்டத்திற்கு பல்கலைக்கழகங்களையும் பட்டப்பின் படிப்பு நிறுவனங்களையும் உருவாக்குவதன் மூலம் அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் உயர்கல்வி வாய்ப்புக்களை உறுதிப்படுத்துதல் இத்துறையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விளைவாக இருந்தது. இவ்விளைவுகளை அடைந்து கொள்வதற்காக உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு, ஒரு திணைக்களம் மற்றும் 36 நியதிச்சட்ட சபைகள்/ நிறுவனங்களால் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

- உயர் கல்வி விடயத்திற்கும் அதன் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயத்திற்குமுரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்திட்டங்கள் என்பவற்றை உருவாக்குதல்.

- பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்குரிய செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்.

- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுடன் இணைந்து தேசிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்பட்டுள்ளன.

900 மேலதிக மாணவர்களை தொழில்நுட்ப பாடவிதானத்துக்கு சேர்த்துக் கொள்ளுதல்.

2017 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப பாடவிதானத்திற்காக சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை 900 ஆல் அதிகரித்தல் பிரதான செயலாற்றல் குறிக்காட்டியாகக் கருதி 11 பல்கலைக்கழகங்களுக்கு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 1,500 மில்லியன் மற்றும் ரூபா 700 மில்லியனாக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எனினும், தொழில்நுட்ப பாட விதானத்திற்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டின் போது 2290 மாணவர்களாக இருந்தும் 2017 ஆம் ஆண்டின் போது அது 2024 மாணவர்கள் வரை 266 மாணவர்களால் குறைவடைந்திருந்தது. இதற்கிணங்க எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்து கொள்வதற்கு மீளாய்வாண்டின் போது முடியாதிருந்தது.

50 உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு முன்மொழிவாக பல்கலைக்கழக பதவியணியினர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 09 பல்கலைக்கழகங்களுக்கு 50 உத்தியோகபூர்வ இல்லங்களும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு ஒரு உத்தியோகபூர்வ இல்லமும் ஆக 51 உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அந்த நிர்மாணங்களுக்காக ரூபா 300 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அந்த 51 இல்லங்களுக்கான நிர்மாண நடவடிக்கைகளில் 22 இல்லங்களின் பௌதீக செயல் முன்னேற்றம் 60

சதவீதத்தினை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

150 கலாநிதி பட்டங்களையும் 50 முதுமானிப் பட்டங்களையும் வழங்குதல்

மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் குறிக்கோளுடன் கல்விசார் பதவியணியினர்களுக்கு 150 கலாநிதி பட்டங்களையும் 50 முதுமானிப் பட்டங்களையும் வழங்குவதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 1,000 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 16 மில்லியனுக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 34.37 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதியளவில் 63 கலாநிதிப் பட்டங்களும் 13 முதுமானிப் பட்டங்களுமாக குறைந்த அளவான பட்டங்களே வழங்கப்பட்டிருந்தன.

செயலாற்றலை அளவீடு செய்வதற்கான முறைமை தயாரிக்கப்படாமை

2014 ஆம் ஆண்டின் போது 59 சதவீதமாகக் காணப்பட்ட பட்டதாரிகள் தொழிலில் ஈடுபடுத்தலை 2017 ஆம் ஆண்டின் பொது 60 சதவீதம் வரை அதிகரிப்பதற்கும் 2014 ஆம் ஆண்டின் போது 45.1 சதவீதமாகக் காணப்பட்ட கலாநிதிப் பட்டதாரிகளுக்கான தகைமை பெற்ற பல்கலைக்கழக கல்விசார் பதவியணியினரை 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் 51 சதவீதம் வரை அதிகரிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. அந்த இலக்குகளின் செயலாற்றல் மட்டத்தை பரீட்சிப்பதற்கான நடைமுறை உயர்கல்வி அமைச்சினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

பல்கலைக்கழகங்களுக்கான சர்வதேச தரப்படுத்தலின் பிரகாரம் உயர்ந்த நிலையை அடைந்து கொள்ளல்

பல்கலைக்கழகங்களுக்கான சர்வதேச தரப்படுத்தலின் பிரகாரம் 03 அரசாங்க பல்கலைக்கழகங்கள் ஆகக்குறைந்தது முதல் 1000 இற்குள்ளும் மேலும் 03 பல்கலைக்கழகங்கள் முதல் 2000 இற்குள்ளும் எஞ்சிய பல்கலைக்கழங்களை முதல் 5000 இற்குள்ளும் வைத்திருப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டில் காணப்பட்ட நிலைமையை 2017 ஆம் ஆண்டின் போது அடைந்து கொள்ளப்பட்ட நிலைமையுடன் ஒப்பிடும் போது எதிர்பார்க்கப்பட்ட செயல்முன்னேற்றம் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. விபரம் பின்வரும் 26 ஆம் இலக்க அட்டவணையில் தரப்படுகின்றது.

பல்கலைக்கழகம்	2015 ஆம் ஆண்டில் காணப்பட்ட மட்டம்	2017 ஆம் ஆண்டில் அடைந்திருந்த மட்டம்	முன்னேற்றம் / (வீழ்ச்சி) சதவீதம்
கொழும்பு பல்கலைக்கழகம்	1946	2259	(20)
பேராதனைப்	2158	2113	10

பல்கலைக்கழகம்			
மொறட்டுவை பல்கலைக்கழகம்	2415	2861	(20)
களணி பல்கலைக்கழகம்	2559	2808	(10)
ருகுனு பல்கலைக்கழகம்	2634	2874	(10)
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்	3045	3349	(10)

அட்டவணை 26 …….. சர்வதேச தரப்படுத்தலின் பிரகாரம் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள் அமைந்துள்ள இடங்கள்.

மூலம் :- உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் 2017 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான செயல் முன்னேற்ற அறிக்கை.

பல்கலைக்கழக மாணவர்களுக்காக வழங்கப்படுகின்ற புலமைப்பரிசில்களின் அளவை அதிகரித்தல்.

அரச மற்றும் அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கி சேர்த்துக்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு மாணவர்களின் அளவை அதிகரிப்பதன் மூலம் சர்வதேச பல்கலைக்கழக தரப்படுத்தலில் இலங்கையின் பல்கலைக்கழகங்களை உயர்ந்த நிலைக்கு கொண்டு வரும் தந்திரோபாயம் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அந்த தந்திரோபாய திட்டம் மீளாய்வாண்டின் இறுதி வரை வெற்றிகரமாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. வழங்கப்பட்டுள்ள புலமைப்பரிசில்களின் அளவு தொடர்பான விபரம் அட்டவணை 27 இல் தரப்பட்டுள்ளது.

ஆண்டு	ஆரம்ப பட்டப்படிப்பு கற்கை நெறிக்கு பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை	பட்டபின்படிப்பு கற்கை நெறிக்கு பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை	மொத்தம்
2011	05	-	05
2012	10	05	15
2013	17	27	44
2014	31	07	38
2015	26	-	26
2017	13	-	13

அட்டவணை 27 :- …….. புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு மாணவர்கள் அரச மற்றும் அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ளுதல்.
மூலம் :- உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் 2017 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான செயல் முன்னேற்ற அறிக்கை.

வைப்பு பணத்தை பயன்படுத்தாமை

அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்கள் உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சில் பதிவு செய்கின்ற போது அறவிடப்பட்டிருந்த வைப்பு பணம் உயர் கல்வி நிறுவனங்களின் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த வேண்டி இருந்தது. எனினும், அந்த நடவடிக்கைகளுக்கும் அவ் வைப்பு பணத்தை பயன்படுத்தாது பல ஆண்டுகளாக வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2013 மே மாதத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை அரசசார்பற்ற பட்டம் வழங்கும் 22 நிறுவனங்களுக்குரிய 38 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 109 மில்லியன் அமைச்சின் வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

உள்நாட்டு மாணவர்களைச் சேர்த்துக் கொண்டதன் பின்னர் ஏற்படுகின்ற வெற்றிடங்கள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பல்கலைக்கழகங்களுக்காக வருடாந்தம் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது பல்வேறு கற்கை நெறிகளுக்காக தகைமை பெற்ற மாணவர்கள் அக்கற்கை நெறிகளின் கீழ் பதிவு செய்து கொள்ளாமை, பதிவு செய்து கொண்ட மாணவர்கள் ஏனைய கற்கை நெறிகளுக்கு மாறுதல், பதிவை இரத்துச் செய்தல், மேலும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதில்லை என பல்கலைக்கழகங்களால் தெரியப்படுத்துதல் ஆகிய காரணங்களால் அட்டவணை 28 இல் காட்டப்பட்டவாறு வெற்றிடங்கள் காணப்பட்டன. முன்னைய ஆண்டுடன் அந்த வெற்றிடங்களின் அளவை ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் போது அந்த வெற்றிடங்களின் அளவு குறைவடைந்திருந்தது.

கல்வி ஆண்டு	வெற்றிடங்கள் காணப்பட்ட கற்கை நெறிகளுக்காக சேர்த்துக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	அக்கற்கை நெறிகளில் பதிவு செய்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை	வெற்றிடமான மாணவர்களின் எண்ணிக்கை
2013/2014	8,940	7,146	1,794
2014/2015	7,980	6,525	1,455
2015/2016	10,405	8,179	2,226
2016/2017	10,318	9,580	738

அட்டவணை 28 :- …….. பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொண்டதன் பின்னர் ஏற்படுகின்ற வெற்றிடங்கள்.
மூலம் :- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

வெளிநாட்டு மாணவர்களைச் சேர்த்துக் கொண்டதன் பின்னர் ஏற்படுகின்ற வெற்றிடங்கள்

2011 சனவரி 25 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். பல கல்வி ஆண்டுகளுக்காக சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியிருந்த வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கைகளையும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கையையும் ஒப்பீடு செய்த போது வெற்றிடங்கள் காணப்பட்டன. விபரம் அட்டவணை 29இல் தரப்படுகின்றது.

கல்வி ஆண்டு	உத்தேசிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	வெற்றிடமான மாணவர்களின் எண்ணிக்கை
2013/2014	58	14	44
2014/2015	18	9	9
2015/2016	38	17	21
2016/2017	53	5	48

அட்டவணை 29 :- …….. பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு மாணவர்களைச் சேர்த்துக் கொண்டதன் பின்னர் வெற்றிடம்.
மூலம் :- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

2016/2017 கல்வி ஆண்டின் போது 05 கற்கை நெறிகளுக்கு மாத்திரம் 53 வெளிநாட்டு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் அந்த 05 கற்கை நெறிகளில் 04 கற்கை நெறிகளுக்கு 05 வெளிநாட்டு மாணவர்கள் மாத்திரம் அட்டவணை 30 இல் குறிப்பிடப்பட்டவாறு தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் மேலும், 05 கற்கை நெறிகளுக்கு 48 வெற்றிடங்கள்

காணப்பட்டிருந்தும் அவ்வெற்றிடங்களை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிரப்புவதற்கு நடவடிக்கை

2016/2017 கல்வி ஆண்டிற்கு வெளிநாட்டு மாணவர்களுக்கான கல்விசார் கற்கைநெறி	சேர்த்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	வெற்றிடமான மாணவர்களின் எண்ணிக்கை
மருத்துவக் கல்வி	07	02	05
பொறியியல் கல்வி	09	01	08
நகரம் மற்றும் கிராம உருவாக்கம்	01	-	01
கலை	26	01	25
பௌதீக விஞ்ஞானம்	10	01	09
மொத்தம்	**53**	**05**	**48**

அட்டவணை 30….. பல்கலைக்கழகங்களில் கற்கை நெறிகளுக்கு வெளிநாட்டு மாணவர்களைச் சேர்த்துக் கொண்டதன் பின்னர் வெற்றிடம்.

மூலம் :- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

புதுப்பிக்கக்கூடிய சக்தி மூலாதாரங்களிலிருந்து மின்வலு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் இலங்கையில் சக்தி துறையில் தன்னிறைவு உடையதாக மாற்றும் எதிர்பார்ப்புடன் மின்வலு மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 7 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்கள் என்பவற்றால் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி தொடர்பான விடயங்களுடனும் கொள்ளைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும்.
- மின்வலு வளமூலங்களின் கட்டுப்பாடு, ஒழுங்குறுத்துகை, பயன்பாடு ஆகியவற்றுக்குத் தகுந்த மின்வலுக் கொள்கையொன்றை வகுத்தமைத்தல்
- நீர், அனல், நிலக்கரி மற்றும் காற்று ஆகிய மூல வளங்களின் மூலம் மின் சக்தியை உற்பத்தி செய்தல் தொடர்பான அலுவல்கள் மீதான ஆராய்வும், திட்டமிடலும் கண்காணிப்பும் அபிவிருத்தியும்
- கிராமிய மின்வலுப்படுத்துகை
- எரிசக்தி வினைத்திறன் கேள்விப்பாட்டின் அடிப்படையில் கேள்வியை முகாமை செய்தலும், புதுப்பிக்கத்தக்க மின் சக்தியை அபிவிருத்தி செய்தலும்
- புதுப்பிக்கத்தக்க மின் சக்தியை அபிவிருத்தி செய்தலும்,

மேற்குறித்த செயற்பாடுகள் அமைச்சின் மற்றும் அதன் கீழ்வரும் செயற்படுகின்ற நிறுவனங்களால் நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

திட்டமிடப்பட்ட இலக்கிடப்பட்ட இயலளவு மட்டத்தை அடைந்து கொள்ளாமை

2025 ஆம் ஆண்டளவில் அனல் மின்நிலையங்களிலிருந்து 2000 மெகாவாட் ஆன மொத்த இயலளவில் மின்சார முறைமைக்கு இணைப்பதற்கு மின்சக்தி மற்றும் எரிபொருள் மீள் உருவாக்கக்கூடிய எரிசக்தி அமைச்சினால் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், 500 மெகாவாட் மின் இயலுமையுடைய உத்தேச சாம்பூர் நிலக்கரி மின் நிலைய செயற்திட்டத்திலிருந்தும் அம்பாந்தோட்டை செயற்திட்ட நிர்மாணத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும், அந்த இரண்டு செயற்திட்டங்களையும் 2017 ஆம் ஆண்டின் போது இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அதற்குப் பதிலாக இயற்கை வாயு (LNG) மின்நிலையங்கள் மற்றும் சூரிய சக்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. இதன் பிரகாரம் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் இலக்கிடப்பட்ட இயலளவை நோக்கி அடைய முடியாமல் இருந்தது.

சூரிய பனல் பாவணை

அரச துறையின் கட்டிடங்களில் பசுமை எரிசக்திக்கு மாற்றும் செயற்திட்டத்திற்குரிய 2018 மே மாதமளவில் 2018 சூரிய பனல் வழங்கப்பட்டிருந்தன. அப்பனல்கள் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட மின் இயலளவு 104 மெகாவொட்டாக இருந்தது. அச்செயற்திட்டத்திற்காக திறைசேரியினால் ரூபா 245 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்ட அதிகாரசபைக்கு இதற்காக ரூபா 45 மில்லியன் கொடுப்பனவு செய்ய வேண்டும். இச்சூரிய பனல் பயன்பாட்டிலிருந்து விடுபடும் போது சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கத்தைக் குறைக்கும் நடைமுறையொன்று அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

மொரகொல்ல நீர் மின்நிலைய செயற்திட்டத்தை ஆரம்பிப்பதில் தாமதம்

தேசிய மின்சார முறைமைக்கு 31 மெகாவாட் இயலளவொன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் மொரகொல்ல நீர் மின் நிலைய நிர்மாணம் 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அச்செயற்திட்டம் 2 வருட கால தாமதத்தின் பின்னர் 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டது. செயற்திட்டத்திற்காக ரூபா 16,780 மில்லியன் அசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைத்திருந்தது. அச்செயற்திட்டம் 2019 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அதன் பௌதீக முன்னேற்றம் 9 சதவீதமாக இருந்தது. அச்செயற்திட்டத்தை உரிய திகதியில் ஆரம்பிக்காமையால் பெற்றுக்கொண்ட கடனுக்காக ரூபா 28 மில்லியனுக்கு அண்மித்த தொகை (USD 177,931) ஏனைய கொடுப்பனவு (தண்டக் கொடுப்பனவாக) கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

புரோட்லன்டிஸ் நீர் மின்சார செயற்திட்டத்தை செயற்படுத்துவதில் தாமதம்

35 மெகாவாட்டுடன் நிலையான இயலளவொன்றுடன் வருடாந்த 126 கெகாவாட் மணித்தியாலம் மின்சாரத்தை பிறப்பிக்கும் நோக்கில் புரோட்லன்டிஸ் நீர் மின்சார செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.
இச்செயற்திட்டத்திற்காக ஐ.அ.டொலர் 82 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், அதற்காக கைத்தொழில் மற்றும் வர்த்தக வங்கி (JCBC) மற்றும் ஹட்டன் நஷனல் வங்கியினாலும் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் முறையே 85 சதவீதம் மற்றும் 15 சதவீதம் என நிதியளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டின் இறுதி அளவில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அதன் செயன்முன்னேற்றம் 43 சதவீதமாக இருந்தது.

உமா ஓயா நீர் மின்சார செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமை

உமா ஓயா நீர் மின்சார செயற்திட்டத்தின் மூலம் 120 மெகாவாட் நிலையான இயலளவொன்றைக் உற்பத்தி செய்வதனை இலக்காகக் கொண்டு 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டின் இறுதி அளவில் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. மின்வலு மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு, இலங்கை மின்சார சபை மற்றும் நீரப்பாசன மற்றும் நீரக முகாமைத்துவ அமைச்சினால் இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டமாகும். உமா ஓயா நீர் மின்சார செயற்திட்டம் 2017 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் பௌதீக செயன்முன்னேற்றம் 78 சதவீதமாக இருந்தது

புதிய ஹபரன – வெயாங்கொடை கோபுர வீதி நிர்மாணசெயற்திட்டத்தை நிறைவு செய்வதில் தாமதம்

புதிய ஹபரன – வெயாங்கொடை கோபுர வீதி நிர்மாண செயற்திட்டம் தாமதம் மற்றும் புதிய அபிவிருத்தி வலையமைப்பை உப நிலைய நிர்மாணத்திற்காக ரூபா 23,720 மில்லியன் செலவினமொன்று மதிப்பிடப்பட்டிருந்தது.

செயற்திட்டம் 2015 சனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2018 சனவரி மாதத்தின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதன் பௌதீக செயன்முன்னேற்றம் 10 சதவீதமான அளவினைக் கொண்டிருந்தது.

இலங்கை மின்சார சபையின் செயற்பாட்டு விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வரைவு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இலங்கை மின்சார சபையினால் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 45,729 மில்லியன் வரிக்கு முன்னராக நட்டத்தை அடைந்திருந்தது. முன்னைய ஆண்டில் ரூபா 13,191 மில்லியனான வரிக்கு முன்னரான நட்டத்துடன் ஒப்பிடும் போது ரூபா 32,538 ஆன வீழ்ச்சியொன்றாக இருந்தது. அரசினால் நிலக்கரியின் மீது பெறுமதி சேர்வரி விதித்தல் மற்றும் நிலக்கரி மூலப்பொருள் மூலக் கிரயம் அதிகரித்தமையால், நிலக்கரி கிரயம் 46 சதவீதத்தினால் அதிகரித்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது. மேலும் விநியோக பிரிவின் செயற்பாடு மற்றும் முகாமைத்துவ செலவினம் அதிகரித்திருந்ததுடன், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 204 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை, வங்கி மேலதிகப் பற்று வட்டி 3560 சதவீதத்தினால் அதிகரித்தமை, தனியார் மின்சாரக் கொள்வனவு மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் கொள்வனவிற்காக தாமத வட்டிக் கொடுப்பனவு முறையே 88 சதவீதத்தினாலும் 90 சதவீதத்தினாலும் இதற்குப் பிரதான காரணமாக இருந்தது.

மின்சார உற்பத்தி

மீளாய்வாண்டின் போது 05 பிரதான மூலகங்களிலிருந்து 14,671 கி.வொ.மணித்தியாலம் மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 14,149 கி.வொ.மணித்தியாலத்துடன் ஒப்பிடும் போது 522 கி.வொ.மணித்தியாலம் அதாவது 4 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அனல் சக்தியினாலும் காற்றுச் சக்தியினாலும் உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தி முன்னைய ஆண்டினை விட மீளாய்வாண்டின் போது 13 சதவீதத்தினாலும் 6 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது காணப்பட்ட வரட்சி காலநிலையில் நீர் மின் உற்பத்தி முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 5 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. விபரங்கள் அட்டவணை 32 இல் தரப்பட்டுள்ளது.



அட்டவணை : ஒவ்வொரு மூலத்திலிருந்தும் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம்

மூலம் : இலங்கை மின்சார சபையின் புள்ளிவிபர தரவு அறிக்கை

உழைக்கும் போது வரி செலுத்துதல்

2007 திசெம்பர் 13 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டில் சம்பள திருத்தம் மூலம் உழைக்கும் போது வரி ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. எனினும் இலங்கை மின்சார சபையினால் 2010 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உழைக்கும் போது செலுத்தும் வரி சபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையால் அக்காலப்பகுதிகள் சபையினால் ரூபா 3,294 மில்லியனான மேலதிக செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பதவியணியினருக்கு படிகள் கொடுப்பனவு

2007 நவம்பர் 14 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானம் மற்றும் 20 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவையில் சுற்றறிக்கை முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பேரில் பதவியணியினருக்கு ரூபா 1,930 மில்லியன் மீளாய்வாண்டின் போது பல்வேறு படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

பெற வேண்டிய கணக்குகள்

05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்படும் ரூபா 4481 மில்லியனான வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறுவனவு மீதிகளை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு இலங்கை மின்சார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

முதலீடுகளை அறவிடுவதில் ஆபத்து

இலங்கை மின்சார சபையின் ஓய்வூதிய நிதியத்தின் மூலம் பிணை முறிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 404 மில்லியன் நிதிக் கருவியொன்றாக காணப்படாமையால் அதற்காக கிடைக்க வேண்டிய வட்டியான ரூபா 51 மில்லியன் கிடைக்காமல் இருக்கக் கூடிய ஆபத்தொன்று காணப்பட்டது. மீளாய்வாண்டின் வரைபு நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கலோ அல்லது ஒதுக்கீடோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

நுகர்வோரின் வைப்புகளுக்காக வட்டி கொடுப்பனவிற்கு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யாமை.

இலங்கை மின்சார சபை பாவனையாளர்களிடமுள்ள வைப்புகளுக்காக ஓய்வூதிய நிதியத்தின் மூலம் பிணை முறிகளில் 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் 28(3) உப பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய வட்டி ரூபா 1,163 மில்லியனாக இருந்ததுடன் அதன் பிரகாரம் இரண்டு வருடங்களின் கூட்டுத்தொகையான ரூபா 1,963 மில்லியனுக்கு நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

தவணைக் கட்டண கொடுப்பனவு

வெளிநாட்டு மானியக் கடன் திட்டதின் கீழ் இலங்கை மின்சார சபையினால் செயற்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டம் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. இதனால் தாமதிக்கப்பட்ட செயற்திட்டத்திற்காக ரூபா 12 மில்லியன் தாமதக் கட்டணமாக கொடுப்பனவு சபைக்கு நேர்ந்திருந்தது.

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி

உள்நாட்டு பெற்றோலியம் மற்றும் இயற்கை வாயுவின் சிறந்த உற்பத்தியுடன் இலங்கையை மின்வலுவில் தன்னிறைவு அடைந்த நாடாக மாற்றுவதே அமைச்சின் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறாக இருந்தது. அப்பெறுபேற்றை அடைந்து கொள்வதற்காக பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு 04, நியதிச்சட்ட சபைகள்/ நிறுவனங்களால் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

- பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி தொடர்பான விடயத்திற்குரிய கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்திட்டங்கள், என்பவற்றைத் தயாரித்தல் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றோலியம் சார்ந்த உற்பத்திக் பொருட்களை இறக்குமதி செய்தல், சுத்திகரித்தல், களஞ்சியப்படுத்தல் பகிர்ந்தளித்தல், சந்தைப்படுத்தல் என்பன.
- பெற்றோலிய உற்பத்தி மற்றும் சுத்திகரித்தல் சம்பந்தமான நடவடிக்கைகள்.
- பெற்றோலியத்தை அகழ்ந்து ஆராய்ச்சி செய்தலும் அவை சார்ந்த நடவடிக்கைகளும்
- பெற்றோலிய உற்பத்தி மூலங்களில் வாயு உற்பத்தியும் பகிர்ந்தளித்தலும்
- எரிபொருள் வழங்குதல் மற்றும் பகிர்ந்தளித்தலுக்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
- நிறுவனங்களை மேற்பார்வை செய்தல்.

மேற்கூறிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கி கீழே தரப்படுகின்றன.

உள்நாட்டு பெற்றோலிய சந்தை

இலங்கை மத்திய வங்கியின் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையின் பிரகாரம் உள்நாட்டு பெற்றோலிய சந்தையில் 86 சதவீதமான வழங்கல்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்படுகின்றது.
மீளாய்வாண்டின் போது பெற்றோலியத்தை இறக்குமதி செய்வதற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 3,428 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. இந்த இறக்குமதிச் செலவு மீளாய்வாண்டிற்கான இலங்கையின் மொத்த இறக்குமதிச் செலவில் 15 சதவீத அளவில் இருந்தது. ஒட்டுமொத்த பெற்றோலிய சந்தையின் மாற்றங்களின் சதவீதமாக 2017 ஆம் ஆண்டின் போது ஒரு பெரல் மசகு எண்ணையின் சராசரி விலை 2016 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட சராசரி விலையுடன் ஒப்பிடுகையில் ஐக்கிய அமெரிக்க டொலர் 57.79 வரை 24.8 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்தி ஒரு மெட்ரிக் தொன்னிற்கான சராசரி விலை 2016 ஆம் ஆண்டின் போதான ஐக்கிய அமெரிக்க டொலர் 434.62 உடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டின் போது ஐக்கிய அமெரிக்க டொலர் 503.06 வரை 15.7 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகளும் தேறிய சொத்துக்களின் நிலைமையும்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் (கணக்காய்வு செய்யப்படாத) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 3503.9

மில்லியன் வரிக்கு முன்னைய தேறிய இலாபம் அறிவிக்கப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டை விட ரூபா 66,049.8 மில்லியனால் குறைவடைந்திருந்தது. இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின் பிரகாரம் சர்வதேச சந்தையில் அதிகரித்திருந்த பெற்றோலிய விலைகளின் பிரகாரம் உள்நாட்டு சந்தை விலைகளில் திருத்தம் செய்தமை இக் குறைவிற்கு பிரதான காரணமாக இருந்தது. மின்வலு உற்பத்திப் பிரிவிற்கான பெற்றோலிய தேவைப்பாடு அதிகரித்துச் செல்லுதல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வங்கி வைப்பு வட்டிகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மேலதிக வருமானம் 2017 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்ட இலாபத்திற்காக பிரதான காரணமாக இருந்தது.

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த வணிகக் கடன்பட்டோர்களின் பெறுமதி ரூபா 76,615.9 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான வணிகக் கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 33,386.7 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான வணிகக் கடன்பட்டோரின் அளவு 129 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அவை முறையே அரசாங்கத் துறையின் கடன்பட்டோரில் ரூபா 65,979.1 மில்லியன் மற்றும் தனியார் துறை கடன்பட்டோரில் ரூபா 10,636.8 மில்லியன் ஆக இருந்தது. அவற்றில் இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனி என்பவற்றிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய நிலுவைப் பணம் முறையே ரூபா 50.3 மில்லியன் மற்றும் ரூபா 12.9 பில்லியனாக இருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மறை தேறிய சொத்துக்கள் நிலைமை மீளாய்வாண்டின் இறுதியிலும் சிறிய அளவில் குறைவடைந்திருந்தும் மேலும் ரூபா 174,939.9 மில்லியன் தொகையான பாதக நிலை வரை வீழ்ச்சியடைந்திருந்தது. எனவே அரசாங்கத்தின் நிதி ஆதரவு இன்றி கூட்டுத்தாபனம் செயற்படுகின்ற ஒரு வியாபாரமாக தொடர்ச்சியாக பேணுவதற்குரிய இயலுமையானது சச்சரவுக்குரியதாக உள்ளது மீளாய்வாண்டின் போதும் கடந்த 4 ஆண்டுகளின் போதும் கூட்டுத்தாபனத்தின் நிதி பெறுபேறுகள் மற்றும் தேறிய சொத்துக்களின் நிலைமை வரைபடத்தில் தரப்படுகின்றது.



வரைபடம் 33 ..... இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தின் நிதி பெறுபேறுகளும் தேறிய சொத்துக்களின் நிலைமையும்

மூலம் ..... இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள்

கூட்டுத்தாபனம் நாட்டிற்கு வழங்கியுள்ள பங்களிப்புக்கள்

கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது ரூபா 1,572.1 மில்லியன் தொகையான வரிக்கு பின்னைய தேறிய இலாபம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தை செயற்படுத்துவதன் மூலம் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குதல், அரசாங்கத்திற்கு வரி செலுத்துதல், அரசாங்கத்திற்கு விஷேட கட்டணங்களைச் செலுத்துதல், பெறுமானத்தேய்வு செய்தல் என்பவற்றை கவனத்திற்கு எடுத்துக் கொள்கையில் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் ரூபா 154,707.9 மில்லியன் பங்களிப்பு நாட்டுக்கு வழங்கப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தால் நாட்டிற்கு வழங்கிய பங்களிப்பு, இலாபம் (நட்டம்) என்பன தொடர்பான நிலைமை, முன்னைய ஆண்டுகளில் காணப்பட்ட நிலைமை என்பன 34 இல் வரைபடத்தில் தரப்படுகின்றது.



வரைபடம் ..... கூட்டுத்தாபனத்தால் நாட்டிற்கு வழங்கியுள்ள பங்களிப்புக்கள் மற்றும் தேறிய இலாபம் / நட்டம்
மூலம் .....இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள்

எதிர்காலத்தை பாதுகாக்கும் கொடுக்கல் வாங்கல்கள் (ஹெஜ்ஜின்)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எதிர்காலத்தை பாதுகாக்கும் கொடுக்கல் வாங்கல்களின் பிரகாரம் பல வணிகவங்கிகளுடன் கைச்சாத்திடப்பட்ட எதிர்காலத்தை பாதுகாக்கும் உடன்படிக்கைகள் சம்பந்தமாக தீர்த்துவைத்தல் நடைமுறையின் ஒரு தரப்பினராக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அழைக்கப்பட்டிருந்தது. தரப்பினர்களுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட தீர்த்துவைத்தல் உறுதியின் கீழ் ஐ.அ.டொலர் 60 மில்லியன் (ரூபா 7,613 மில்லியன்) ஸ்டேன்டட் சாட்டட் வங்கிக்கு (SCB) 2013 யூன் 03 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்ததுடன் ஐ.அ.டொலர் 27 மில்லியன் (ரூபா 3,881 மில்லியன்) டொயிஸ் வங்கிக்கு 2016 ஆகஸ்ட் 04 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. கிடைத்த தகவல்களின் பிரகாரம் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 13,641 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தின் எதிர்காலத்தை பாதுகாக்கும் கொடுக்கல்வாங்கல் (ஹெஜ்ஜின்) சம்பந்தமாக இலங்கை மத்திய வங்கியினால் சட்டச் செலவாக

ரூபா 941.2 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 370.6 மில்லியன் இலங்கை மத்திய வங்கியால் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 567 மில்லியன் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலத்துள் கூட்டுத்தாபனத்தினால் இலங்கை மத்திய வங்கிக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ரூபா 3.1 மில்லியன் கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டின் இறுதி வரை மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக ஐ.அ.டொலர் 8.6 மில்லியன் உரிமைக்காக வர்த்தக வங்கியினால் கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த வழக்கு 2017 ஆம் ஆண்டு இறுதி வரையும் விசாரணை செய்யப்பட்டு வந்திருந்தது.

எண்ணை சுத்திகரிப்பு நிலையத்தை நவீன மயப்படுத்தலும் விஸ்தரித்தலும்

1969 ஆம் ஆண்டின் போது தோற்றுவிக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட எண்ணை சுத்திகரிப்பு நிலையம் நிகழ்காலத்தின் பூர்த்தியான பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு தேவைப்பாட்டில் 35 சதவீதத்திலிருந்து 45 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினை நிறைவேற்றியிருந்தது. இந்த எண்ணை சுத்திகரிப்பு நிலையத்தை நவீனமயப்படுத்தலும் விரிவுபடுத்தலும் அத்தியாவசியமானதாக உள்ளதுடன் அதன் மூலம் மின்வலுவைப் பாதுகாத்தல், பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல், உற்பத்திகளின் தரம் போன்ற சிக்கல்கள் உருவாகுவதனைக் குறைத்தல், பூர்த்தியான பொருட்களாக பெற்றோலிய இறக்குமதியின் போது செலவு செய்யவேண்டியிருந்த அதிக கிரயத்தை குறித்த அளவிற்கு குறைப்பதற்கு முடியுமாக இருந்தது.

2015 மார்ச் 10 ஆந் திகதியிலிருந்து பொருளாதார முகாமைத்துவம் தொடர்பாக அமைச்சரவையின் உப குழுக் கூட்டங்கள் பலவற்றில் தற்போதைய எண்ணை சுத்திகரிப்பு நிலையத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் விஸ்தரித்தல் சம்பந்தமாக விபரமாக கலந்துரையாடப்பட்டிருந்ததுடன் உத்தேச செயற்திட்டத்தின் நிதி சாத்திய வள ஆய்வினை மேற்கொள்வதற்காக 2016 ஆகஸ்ட் 10 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது நிபுனர்கள் குழு நியமிக்கப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வுத் திகதியான 2018 யூன் 30 ஆந் திகதி வரை அதில் எதுவித செயல்முன்னேற்றமும் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. தேசிய முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் கவனத்தில் கொண்டு இச்செயற்திட்டத்தை விரைவாக அமுல்படுத்துதல் மிகவும் முக்கியத்துவமானது என்பது கணக்காய்வின் போதும் அவதானிக்கப்பட்டது. மேலும் உத்தேச சபுகஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பு நிலையத்தை விஸ்தரித்தல் நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்திற்காக (SOREM) காணிச் சுவீகரிப்பு கிரயாமாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 1,003 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

எண்ணையை எடுத்துச் செல்லும் குழாய்வழி வலையமைப்பு

பல தசாப்தங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட குழாய் வழிகளினூடே கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை எண்ணை சுத்திகரிப்பு நிலையம் வரை பெற்றோலிய உற்பத்திகள் எடுத்துச் செல்லப்படுவதுடன் அக்குழாய் வழிகள் திருத்தம் செய்ய வேண்டிய நிலையில் காணப்பட்டது. இதில் பல குழாய் வழிகள் திருத்தம் செய்ய முடியாத நிலையில் காணப்பட்டதன் காரணமாக தற்பொழுது கைவிடப்பட்டிருந்தது. தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற 10 அங்குல மற்றும் 14 அங்குல எரிபொருள் குழாய்களில் முறையே 04 தடவைகள் மற்றும் 06

தடவைகள் 2017 ஆம் ஆண்டின் போது கசிவு ஏற்பட்டிருந்தமை. அறிக்கையிடப்பட்டிருந்தது. எனவே இக்குழாய் வழிகளை புனரமைத்தல் அல்லது நவீனமயப்படுத்தல் மிகவும் அவசரமான ஒரு தேவையாக இருந்தது. இவற்றுக்கு மத்தியில் முத்துராஜவெல எண்ணை சுத்திகரிப்பு நிலையத்திற்கும் கொலன்னாவை எண்ணை சுத்திகரிப்பு நிலையத்திற்குமிடையே எத்தகைய உள்ளக தொடர்புகளும் இல்லாதிருந்ததுடன் அத்தடையின் காரணமே அந்த எண்ணை சுத்திகரிப்பு நிலையங்களை சிறப்பாக பயன்படுத்துவதற்கு தடையாக இருந்தது. மேலும் 2012 செப்தெம்பர் 13 ஆந் திகதி "நாட்டினூடாக குழாய் செயற்திட்டத்தை" அமுல்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

45 ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பு துறைமுகத்திலிருந்து (தெற்கு இறங்கு துறை) கொலன்னாவை வரை எரிபொருளை எடுத்துச் செல்வதற்காக நிர்மாணிக்கப்பட்ட 12 அங்கு விட்டத்திலான குழாய் ஒரு தசாப்பத்திற்கு அண்மித்த காலமாக வேலை செய்யும் நிலையில் காணப்பட்டிருக்கவில்லை. இந்த எரிபொருள் குழாய் 2011 ஆம் ஆண்டின் போது மஹவத்த பிரதேசத்தில் 300 மீற்றர் அளவானவை திருத்தம் செய்யப்பட்டிருந்தும் முழுமையாக செயற்படும் மட்டத்தில் இருக்கவில்லை. 2015 பெப்ரவரி 13 ஆந் திகதி CPSTL நிறுவனத்தின் பணிப்பாளர் சபை பத்திரத்தில் குழாய் வழிகளை திருத்தம் செய்வதற்காக ரூபா 260 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 120 மில்லியன் செலவில் 2171 மீற்றர் மற்றும் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 153 மில்லியன் செலவு செய்து 2573 மீற்றர் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், செயற்படும் நிலைக்கு எரிபொருள் குழாய்வழிகளைக் கொண்டுவருவதற்காக திருத்தம் செய்ய எஞ்சியுள்ள தூரத்தின் அளவு 1000 மீற்றர்களை விட குறைவாக இருந்தும் நாட்டில் எரிபொருள் வழங்கும் செயற்பாடு தடைப்படும் ஆபத்தினைத் தவிர்த்துக் கொள்வதற்காக குழாய் வழிகளைத் திருத்தம் செய்யும் செயன் முறையை பூர்த்தி செய்தவதற்காக துரித நடைமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தின் எண்ணை வழங்கும் குழாய் முறைமையை திருத்தம் செய்தலும் விரிவுபடுத்துதலும்

பண்டார நாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் II ஆம் கட்டத்தின் 2 ஆம் நிலையின் அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு சமாந்தரமாக பண்டார நாயக்கா சர்வதேச விமான நிலையத்திலுள்ள எண்ணை தாங்கியின் குழாய் முறைமையை திருத்தம் செய்தல் மற்றும் விரிவுபடுத்துதல் தொடர்பான செயற்திட்டத்தின் கூறுகளுக்கு மேலதிகமாக களஞ்சிய வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் தற்பொழுது காணப்படும் எண்ணை வழங்கும் குழாய் முறைமைகளை திருத்தம் செய்தல் மற்றும் விரிவுபடுத்துதல் பகுதி உள்ளடக்கப்பட்டுள்ளது. பொறியியலாளர் மதிப்பீட்டின் பிரகாரம் செயற்திட்டத்தின மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 61 மில்லியன் அளவில் இருந்ததுடன் அதற்காக பொறியியலாளர் பெறுகை நடைமுறைகளுக்கு இணங்க சர்வதேச போட்டி விலைமனுக்களை அழைக்குமாறு 2015 திசெம்பர் 09 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானித்திருந்தது. அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இரண்டு வெளிநாட்டு கம்பனிகளுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. 2017 நவம்பர் மாதத்தின் போது இச் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் 2018 யூன் 30 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

திருகோணமலை எண்ணை தாங்கி தொகுதிகளை அபிவிருத்தி செய்தலும் புனரமைத்தலும்

உலகமே கவனம் செலுத்தியுள்ள உலகத்தின் இரண்டாவது ஆழமான துறைமுகமாகிய திருகோணமலை துறைமுகத்திற்குள் அமைந்துள்ளதற்கிணங்க 1930 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட எண்ணை தாங்கி முறைமையில் 12,500 கனமீற்றர் கொள்ளலவுள்ள 102 தாங்கிகளும் ஏனைய அவை சார்ந்த வசதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. நாட்டின் பின்னனியில் பெற்றோலியத்துறையில் பிரதான செயற்பாட்டாளரான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு, களஞ்சிய வசதிகள், செயற்திறனாக தரையிறக்கும் வசதிகள், எடுத்துச் செல்லும் குழாய் முறைமைகளையும் ஏனைய அவை சார்ந்த வசதிகளையும் உள்ளடக்கிய போதியளவான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் இலாபகரமான மாற்று வணிக சந்தர்ப்பங்கள் மற்றும் மாற்று வர்த்தகமான தார், உராய்வு எண்ணை, திரவ வாயு செயற்பாடுகள் முதலிய வணிக நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு இந்த தாங்கிகளை அபிவிருத்தி செய்து மற்றும் புனரமைத்து பயன்படுத்துதல் மிகவும் பிரயோசனமுள்ளதாகும். தற்பொழுது காணப்படுகின்ற 99 ஆன மொத்த தாங்கிகளின் எண்ணிக்கையில் கீழ்ப் பகுதியிலுள்ள 14 தாங்கிகள் இலங்கை இந்திய எண்ணைக் கம்பனியால் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் கைவிடப்பட்டுள்ள மேல் பகுதியிலுள்ள 84 தாங்கிகளைத் திருத்தம் செய்வதற்கான ஆரம்பத் தீர்மானம் எடுக்கும் நடவடிக்கை 2015 ஏப்ல் 29 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அது தொடர்பான இறுதித் தீர்மானத்திற்கு வராததினால் திருத்தம் செய்யும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

தேசிய எரிவாயு கொள்கையைத் தயாரித்தல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம் 2015 செப்தெம்பர் 21 ஆந் திகதி இயற்கை எரிவாயு தொடர்பாக பெற்றோலிய வளங்களை செயன்முறைப்படுத்துவதற்காக தேசிய கொள்கை அபிவிருத்தி அமைச்சிற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன் மூலம் பெற்றோலியம் மற்றும் எரிவாயு சுரங்கங்களை ஆய்வு செய்து உற்பத்தி செய்வதற்காக முதலீட்டாளர்களுக்கு தேவையான சட்ட முறைமைகளைத் தயாரிப்பதற்கும் உள்நாட்டு ரீதியாகக் காணப்படுகின்ற பெற்றோலிய மற்றும் எரிவாயு சுரங்கங்களின் நிதி ரீதியான பெறுமதியுடன் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. மேலும் தேசிய இயற்கை வாயு உற்பத்தி மற்றும் பயன்பாட்டை இலங்கையின் பொருளாதாரத்திற்கு அறிமுகப்படுத்துதல் இக்கொள்கையின் அடிப்படைக் குறிக்கோளாக இருந்ததுடன் அதன் வேண்டுதல் மற்றும் வழங்கல் அளவை செம்மைப்படுத்துவதற்கு துணையாக அமையும். எனினும் 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் தயாரித்து பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்ட இந்த தேசிய எரிவாயுக் கொள்கை கணக்காய்வுத் திகதியான 2018 யூன் 30 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

உராய்வு நீக்கி எண்ணை கலக்கின்ற தொழிற்சாலையை நிர்மாணிக்கும் செயற்திட்டம்

இலங்கை பெற்றோலியக் கூட்டுதாபனம் தற்காலத்தில் உராய்வு நீக்கி எண்ணை செயற்திட்டத்தில் 11 சதவீதமான சந்தைப் பங்கினை கைப்பற்றியுள்ளது. உராய்வு நீக்கி வர்த்தகத்தின் சராசரி வருடாந்த புரள்வாகிய ரூபா 2.5 பில்லியன் அளவானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உராய்வு நீக்கி எண்ணை வியாபாரத்தின் மொத்த புரள்வில் 0.5 சதவீத அளவாக இருந்தமையால் அது கூட்டுத்தாபனத்திற்கு மாற்று நலன்களை வழங்குகின்ற முதலீட்டு சந்தர்ப்பமாகக் கருதலாம். இலங்கையின் ஏற்றுமதி

சந்தைக்கும் உள்நாட்டு சந்தைக்கும் உராய்வு நீக்கி எண்ணையை வழங்கும் குறிக்கோள்களுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் மலேசியாவின் ஹைரெக்ஸ் ஒயில் எஸ்டீஎன்பீஎச்டீ கம்பனியுடன் இணைந்து நிர்மாணித்தல், நடைமுறைப்படுத்துதல், ஒப்படைத்தல் (BOT) முறையின் கீழ் உராய்வு நீக்கி எண்ணை கலக்கும் தொழிற்சாலையை முதுராஜவெலயில் நிர்மாணிப்பதற்கு 2016 மே 06 ஆந் திகதி 03 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. இந்த உராய்வு நீக்கி எண்ணை கலக்கும் தொழிற்சாலையை வருடாந்தம் அண்ணளவாக 72,000 மெட்ரிக்தொன் மொத்த இயலளவை உள்ளடக்கும் வகையில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்கான கிரயம் ஐ.அ.டொலர் 13 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரரால் அந்த மொத்த முதலீட்டை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மலேசிய ஹைரெக்ல் ஒயில் எஸ்டீஎன்பிஎச்டீ கம்பனி உரிய உடன்படிக்கையில் 2016 மே 06 ஆந் திகதி கையெழுத்திட்டதுடன் அதற்கிணங்க தொழிற்சாலையின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதன் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்திசெய்வதற்கும் பரீட்சித்துப் பார்ப்பதற்கும் முடியுமான வகையில் செயற்திட்டத்தின் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உரிய செயற்திட்டத்திற்கான ஒப்பந்தக்காராக மலேசியாவின் ஹைரெக்ஸ் நிறுவனத்தை தெரிவு செய்யும் போது அதற்காக அந்த கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை மாத்திரம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் பொருத்தமான தரப்பினரை தெரிவு செய்யும் வகையில் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஒழுங்குவிதிகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

இச்செயற்திட்டம் சம்பந்தமான BOT உடன்படிக்கை, வழங்கல் உடன்படிக்கை காணி குத்தகை உடன்படிக்கை ஆகிய மூன்று உடன்படிக்கைகளில் கைச்சாத்திடும் போது சட்டமா அதிபரின் அபிப்பிரயாயத்திற்கு முழுமையாக இணக்கமின்றி காணப்பட்டது. அவ்வாறே மேற்கூறிய உடன்படிக்கைகளின் அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகளில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உராய்வு நீக்கி எண்ணை வியாபாரத்திற்கு பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய விடயங்களை உள்ளடக்குவதாகவும் சில பிரிவுகளின் மூலம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரச்சட்டம் மற்றும் அமைச்சரவை தீர்மானங்களை நேரடியாக மீறுவதாகவும் சுட்டிக்காட்டி பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனம் உராய்வு நீக்கி எண்ணை கலக்கும் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்குரிய மிகுதி நடவடிக்கைகளை 2018 யூன் 20 ஆந் திகதியளவில் தற்காலிகமாக நிறுத்தியிருந்தது.

மேலும், ஹைரெக்ஸ் கம்பனியால் உராய்வு நீக்கி எண்ணை கலக்கும் தொழிற்சாலையின் நிர்மாண நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து 2017 திசெம்பர் 15 ஆந் திகதியிலிருந்து செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஆயத்தம் செய்திருந்ததுடன் மேற்கூறிய உடன்படிக்கைகளின் பிரகாரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் ஹைரெக்ஸ் கம்பனிக்கு ஒப்படைப்பதற்கு இணங்கியிருந்த உத்தரவுப் பத்திரம் (உராய்வு எண்ணை கலக்கும் தொழிற்சாலைக்கு தேவையான எண்ணை வகைகளை இறக்குமதி செய்தல், கலத்தல், மீள்ஏற்றுமதி செய்தல் ஆகிய நடவடிக்கைகளுக்கான 20 ஆண்டுகள் காலத்திற்கான உத்தரவுப் பத்திரம்) 2018 யூன் 20 ஆந் திகதி வரையும் அக்கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படாமை தொடர்பாக ஹைரெக்ஸ் கம்பனியால் பல கடிதங்களும் ஞாபக மூட்டல்களும் பெற்றோலிய வளங்கல்கள் அபிவிருத்தி அமைச்சிற்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக சட்டமா அதிபரின் 2018 சனவரி 23 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் மேற்கூறிய உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளை திருத்தம் செய்வதற்கு கூட்டுத்தாபனம் கருத்துரை தெரிவிக்குமாயின் அந்த உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் அந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் ஏதும் பிரிவுகளை திருத்தம் செய்தவற்கு தேவை ஏற்படுமாயின் அது இரு தரப்பினர்களதும் சமரச இணக்கப்பாட்டின் மூலம் இடம்பெறவேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் உடன்படிக்கை செய்த விடயங்களை பொருத்தமான வகையில் திருத்தம் செய்து இச் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக கணக்காய்வுத் திகதியான 2018 யூன் 30 ஆந் திகதி வரையும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

புதிய எரிபொருள் களஞ்சியத்தை வட மாகாணத்தில் நிர்மாணித்தல்

யுத்த சூழ்நிலையின் பின்னர் விரைவாக அபிவிருத்தி அடைந்துள்ள வடக்கு மக்களின் மற்றும் பாதுகாப்பு பிரிவின் பெற்றோலியத் தேவையை இலங்கை பெற்றோலிய இருப்பு களஞ்சியப் பிரிவு கம்பனியால் பேணப்பட்டு வந்த எரிபொருள் களஞ்சியத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு வந்ததுடன் அக்களஞ்சியம் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை அமைந்துள்ள காணியில் அமைக்கப்பட்டிருந்தது. சீமெந்துக் கூட்டுத்தாபனத்தினால் இந்த எரிபொருள் களஞ்சியத்தை அந்த இடத்திலிருந்த அகற்றுமாறு 2011 ஆம் ஆண்டின் போது இலங்கை பெற்றோலியக் களஞ்சியப் பிரிவுக் கம்பனிக்கு தெரியப்படுத்தியிருந்தது. எனினும், அனைத்து வசதிகளையும் கொண்ட புதிய ஒரு களஞ்சியத்தை நிறுவுவதற்காகப் பொருத்தமான ஒரு இடத்தை கண்டுபிடிக்க முடியாததன் அடிப்படையில் அச்செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் கைவிடப்பட்டிருந்தது. அதற்காக தற்பொழுது எரிபொருள் களஞ்சியம் காணப்படும் சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணியையே தேவையான திருத்தங்களையும் விஸ்தரித்தல்களையும் மேற்கொண்டு தொடர்ச்சியாக எரிபொருள் களஞ்சியத்தை பராமரிப்தபதற்காக பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் 2016 சனவரி 14 ஆந்திகதியும் செப்தெம்பர் 13 ஆந் திகதியும் 2 அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் மூலம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையான காலத்திற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு வாடகை செலுத்த வேண்டுமாக இருந்தால் அவ்வாறே அதனை செலுத்ததுவதற்கு அக்காணித் துண்டை நீண்டகால குத்தகை உடன்படிக்கையின் கீழ் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக் கொள்வதற்கு 2016 ஒக்தோபர் 19 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானித்திருந்தது. எனினும், இலங்கை பெற்றோலிய களஞ்சியப்பிரிவு கம்பனியால் மேற்கூறப்பட்ட காலப்பகுதிக்காக இலங்கை சீமெந்து கம்பனிக்கு செலுத்த வேண்டிய நிலுவை வாடகைப் பணமாகிய ரூபா 105 மில்லியன் செலுத்தப்படாததால் எரிபொருள் களஞ்சியத்தை திருத்தம் செய்தல் மற்றும் விரிவுபடுத்துதல் நடவடிக்கையை கணக்காய்வுத் திகதியான 2018 யூன் 30 ஆந் திகதி வரை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

துணைக்கம்பனிகளின் செயலாற்றாலை மீளாய்வு செய்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.3 ஆம் பந்தியின் பிரகாரம் தாய்க் கம்பனியின் பணிப்பாளர்கள் சபையால் அரையாண்டிற்கு ஒரு தடவையாவது துணைக்கம்பனிகளின் செயலாற்றல் மீளாய்வு செய்யப்பட்டு செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு அது அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் அவ்வாறான நடைமுறை மேற்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு போதிய சாட்சிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இதற்கிணங்க பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் துணைக்கம்பனியின் பிரதான வணிக நடவடிக்கையாகிய கப்பல்களுக்கு எரிபொருள் வழங்கும் வர்த்தகம் தொடர்பாகவும் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபை கூட்டங்களின் கலந்துரையாடல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டது.

கிராமிய பொருளாதார அலுவல்கள்

நாட்டினுள் நிலையான அபிவிருத்தியொன்றையும் கிராமிய மக்களின் சமூக ரீதியான நலன்களை உறுதிப்படுத்தல் அமைச்சிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விளைவாக இருந்தது. அந்த பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக கிராமிய பொருளாதார அலுவல்கள் தொடர்பான அமைச்சு, திணைக்களம், நியதிச் சட்ட சபைகள் / 05 நிறுவனங்கள் மற்றும் 13 விஷேட பொருளாதார நிலையங்களால் பின்வரும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- கிராமிய பொருளாதார விடயத்திற்குரிய கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வழங்கல் மற்றும் அமுல்படுத்துதல் பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு
- பிரதேச மற்றும் கிராமிய அபிவிருத்திக் கொள்கை மற்றும் உபாய வழி அபிவிருத்தி
- கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சிறிய தொழில்முயற்சி அபிவிருத்தி செயற்பாடுகள்
- கால்நடை வளப் பிரிவின் உற்பத்தியைக் கட்டியெழுப்புதற்காக தேவையான வசதிகளை வழங்குதல்
- கால்நடை நலன்புரி மற்றும் அது தொடர்பான அலுவல்கள்

மேற்கூறப்பட்ட பணிப்பொறுப்புக்கள் அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களால் நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பொது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கமாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைதல்

கிராமிய பொருளாதாரம் தொடர்பான அமைச்சிற்குரிய நிறுவனத்திற்காக 2017 சனவரி 03 ஆந் திகதிய MREA/6/2/2/1 ஆம் இலக்க கடிதம் மூலம் நிலைபேறான அபிவிருத்திக்குரிய கவலைகளை இல்லாது ஒழித்தல், பட்டினியை ஒழித்தல் மற்றும் நற்புறவான வேலைகள் சுற்றாடல் பொருளாதார அபிவிருத்தி என்ற 3 நோக்கங்கள் இனங்காணப்பட்டிருந்தன. எனினும், கால்நடை வளச் சபையின் உற்பத்தியில் பட்டினியை ஒழித்தல் மற்றும் போசணையை உயர்த்தும் நோக்கங்கள் கால்நடை வளச் சபையின் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் கவலைகளை இல்லாதொழித்தல், நற்புறவான வேலைகள் பொருளாதார அபிவிருத்தியைப் பெற்றுக்கொள்ளல் போன்ற இரண்டு நோக்கங்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தன.

பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைதல்

அமைச்சின் கால்நடை வள பிரிவினால் பால்மா இறக்குமதியைக் குறைப்பதற்காக பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான 08 வருட காலப்பகுதியின் போது ரூபா 7,673.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. (கால்நடை உற்பத்தி திணைக்களத்தின் செலவினம் தவிர) 2010 ஆம் ஆண்டுடன்

ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் பால் உற்பத்தி 148.6 மில்லியன் லீற்றரால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் ஒரு லீற்றர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு ரூபா 51.63 தொகை செலவிடப்பட்டிருந்தது.

மேலும், பாற் பசுக்களை இறக்குமதி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வட்டி வீதத்தின் அடிப்படையில் வெளிநாட்டு வங்கியிலிருந்து ரூபா 5,972 மில்லியன் கடன் பெறப்பட்டிருந்தது. அவ்வாறு பெறப்பட்ட கடன் பணத்தில் 9,500 பசு மாடுகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன், கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு மற்றும் கால்நடை வள சபையினால் தனியார் விவசாயிகளுக்கு அந்தப் பசு மாடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. எனினும், பாற்பசுக்கள் இறக்குமதி செய்வதால் பால்மா இறக்குமதிகளைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தன. போதிலும், 2011 ஆம் ஆண்டின் போது இறக்குமதி செய்யப்பட்ட 84.02 மெட்ரிக் தொன் பால்மாவுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட பால்மா 93.12 மெட்ரிக்தொன் ஆனமையால் இறக்குமதியில் குறைவொன்று ஏற்பட்டிருக்கவில்லை.

உடன்பால் பரவலாக்கும் செயற்திட்டம்

கால்நடை வள அமைச்சின் கீழ் 2004 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டிருந்த உடன்பால் பரவலாக்கும் செயற்திட்டத்தின் கீழ் 1,250 பால் விற்பனைக் கடைகளை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 685 விற்பனைக் கடைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதில் 283 விற்பனைக் கடைகள் கால்நடை வள அபிவிருத்தி சபையினால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்த விற்பனைக் கடைகள் சாத்தியவள ஆய்வின்றி ஆரம்பிக்கப்பட்டமையால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 34 விற்பனைக் கடைகள் அதாவது 12 சதவீத அளவு மாத்திரம் செயற்படு நிலையில் காணப்பட்டது. மாகாண மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 402 விற்பனைக் கடைகளில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 112 விற்பனைக் கடைகள் அதாவது 28 சதவீத அளவு செயற்படு நிலையில் காணப்பட்டது. (தற்போது காணப்படுகின்ற எண்ணிக்கை காண்பிக்கப்படவில்லை) பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், உடன்பால் நுகர்வை அதிகரிப்பதற்குத் தேவையான விற்பனைக் கடைகள் மூடப்படுவதைக் குறைப்பதற்கு தேவையான வழிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

20,000 பாற்பசுக்களை இறக்குமதி செய்யும் செயற்திட்டம்

பாற்பசுக்களை இறக்குமதி செய்யும் செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

பாற்பசுக்களை இறக்குமதி செய்யும் கொள்கையொன்று தயாரிக்கப்படாமை

பாற்பசுக்களை இறக்குமதி செய்தல் தொடர்பாக வலயக் காலநிலைக்கு உசிதமாகும் வகையில் நாட்டில் காணப்படுகின்ற வளங்களிலிருந்து பசு மாடுகளை போசனைப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் நோய் பிணிகளிலிருந்து பாதுகாக்கக் கூடிய வகையில் மற்றும் ஆகக் குறைந்த கிரயத்தில் பராமரிக்கக்கூடிய காவல்நடை வகையை இனங்கண்டு இறக்குமதி செய்வதற்காக இறக்குமதி கொள்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2008 ஆகஸ்ட் 13 ஆந் திகதி தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் இதுவரையும் இறக்குமதி செய்த பாற்பசுக்களின் ஆயுட்காலம் குறுகியதாக இருந்தமையும், கன்று கிடைக்கும்

இயலுமை குறைவாக இருந்தமையும், வைத்தியசாலைக்கு கொண்டு செல்லல் அதிக அளவில் காணப்பட்டமையும், கூடுதலான ஆபத்துடனான செயற்திட்டமாக இருந்தமையும் மற்றும் இந்தக் கடன் பணம் அரசாங்கத்திற்கு தாக்குபிடிக்க வசதியீனமாக இருந்தமையும், தெளிவாக அறிக்கையிடப்பட்டிருந்தது. எனினும், கால்நடை வள சபை மேற்கூறிய தீர்மானங்களைக் கவனத்தில் கொள்ளாமல் 2015 ஆம் ஆண்டு வரையிலும் 4,500 பசுக்களை இறக்குமதி செய்திருந்தது. முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட கால்நடைகள் செயற்றிறனற்றதாகவும் நாட்டிற்கு பயனற்றதாகவும் இருந்தமை அதன் நிதிக்கூற்றுக்கள், பண்ணை பால் உற்பத்தி அறிக்கை, கணக்காய்வு ஐயவினா மற்றும் அதற்காக அளிக்கப்பட்ட விடை என்பவற்றின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் போது அமைச்சரால் சிறிய அளவிலான விவசாயிகளுக்கு இறக்குமதி செய்யப்பட்ட கால்நடைகள் வழங்கப்பட்டதன் காரணமாக அவர்களின் நிதிரீதியான கஷ்டத்திற்கும் மானசீக ரீதியிலான பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது.

பெறப்பட்ட கடன் பணத்திலிருந்து எந்தத்தொகையும் திறைசேரிக்கு மீள செலுத்தப்படாமை

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையால் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீளச் செலுத்த வேண்டிய கடன் மீதி 1,160.61 மில்லியன் ஆகவும், அத்திகதி வரை செலுத்த வேண்டிய கடன் வட்டி ரூபா 203.72 மில்லியன் ஆகவும் இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கடன் தொகையிலிருந்து எந்தவொரு தொகையும் பொதுத்திறைசேரிக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. செலுத்த வேண்டிய கடன் வட்டி தனித்தனியாக ரூபா 24.81 மில்லியன் மாத்திரம் மீளச் செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக சபையின் தலைவரால் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களின் கீழ் செலுத்தப்பட்ட பசு மாடுகளுக்காக சபைக்கு நாளாந்தம் கணிசமான தொகையொன்றை செலுத்துவதற்கு ஏற்பட்டமையால் இந்த தவணைப் பணத்தை சபைக்குச் செலுத்துதல் வசதியீனமாக இருந்ததாக சபையின் தலைவரால் கணக்காய்விற்கு தெரிவித்து அறிக்கையிடப்பட்டிருந்தது.

செயற்திட்டத்திற்காக சுற்றாடல் தாக்க அறிக்கை பெற்றுக்கொள்ளப்படாமை

இந்த செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் சுற்றாடல் தாக்கம் தொடர்பான அறிக்கையும் பெறப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான பாற்பசுக்களின் ஆகக் கூடிய நலன்பெறும் காலஎல்லையான ஐந்து வருட அளவிலான காலத்தின் பின்னர் அந்தக் கால்நடைகளை பண்ணைகளில் இருந்து அகற்றப்பட வேண்டியிருந்ததுடன் அதற்காக முறையான மற்றும் சுற்றாடலுக்கு இசைவான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வினால் பரீட்சிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டில் 09 பண்ணைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட 902 பசுமாடுகளில் 31 பசுமாடுகளுக்காக பண்ணைகளுக்கு கால்நடைகளை எடுத்துச் செல்லும் போதே மெக்ஸ்டைட்டீஸ் என்ற நோய் பீடிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த நோய்க் கால்நடைகள் நாட்டினுள் கொண்டுவருவதற்கு முன் பரிசோதனை செய்து தேவையான நடவடிக்கைகள் எடுக்காமையினால் அந்த நோய் வேகமாகப் பரவக் கூடியதாக இருந்தமையால் அதனைக் கட்டுப்படுத்துதல் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்கள் பொறுப்புடன் செயலாற்றியிருக்கவில்லை.

இறக்குமதி செய்யப்பட்ட பாற்பசுக்களிலிருந்து கிடைக்கின்ற விளைச்சலை விட பராமரிப்புச் செலவினம் அதிகரித்துச் சென்றமை

கால்நடை வள சபயினால் பாற்பசுக்களின் செயற்திட்டத்திற்கு இணையாக ஆரம்பிக்கப்பட்ட சோள உற்பத்தி செயற்திட்டமும் தோல்வியடைந்திருந்தது. அதன் பின்னர் ரீதிகம பண்ணைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பசு மாடுகளுக்காக எல்பா பயிரச்செய்கைத் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதுவும் வெற்றியளித்திருக்கவில்லை. அதன் பிரகாரம் தனியார் நிறுவனம் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட பாற் பசுக்களுக்கு உணவு கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டமையால் அதன் கிரயம் உயர்வடைந்து செல்லும் போக்கொன்று காணப்பட்டது. அதனால் இறக்குமதி செய்யப்பட்ட பசுமாடுகளிலிருந்து கிடைக்கின்ற விளைச்சலை விட பராமரிப்புக் கிரயம் அதிகரித்துச் சென்றமையின் காரணமாக கால்நடை வள சபையில் பண்ணையைப் போன்று பால் விவசாயிகளும் நட்டத்தைப் பெறும் நிலைக்கு உட்பட்டிருந்தனர்.

நோயற்ற அறிக்கையின் சிபாரிசின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை

20,000 பாற்பசுக்களை இறக்குமதி செய்தலின் கீழ் 2017 திசெம்பர் 27 ஆந் திகதி 3,024 பாற்பசுக்கள் இந்நாட்டிற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. அந்த பாற்பசுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நோயற்ற அறிக்கையின் பிரகாரம் அந்த கால்நடைகள் கால்நடை நோய்க்காரணிகள் உள்நாட்டு பசுமாடுகளுக்கும், மனிதர்களுக்கும் பரவும் அபாயமொன்று காணப்படுவதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் கிராமிய பொருளாதார அலுவர்கள் அமைச்சின் செயலாளருக்கு 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும், அந்த அறிக்கையின் பிரகாரம் தாமதமின்றி எடுக்க வேண்டிய படிமுறைகள் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் சில கால்நடைகளை அழித்துவிடச் செய்யும் அபாயமும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், அந்த அறிக்கையில் காணப்படுகின்ற சிபாரிசுகள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் பால் தரும் 20,000 பசுக்களில் எஞ்சிய 15,000 கால்நடைகளையும் மிகவும் விரைவாக இறக்குமதி செய்வதற்காக தேவையான நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் செயற்பாடுகளில் அமைச்சின் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை 2018 மே 02 ஆந் திகதி பகிரங்க செய்திப் பத்திரிகை மூலம் பண்ணையாளரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

அரசாங்க பணத்தின் முறையற்ற வகையில் பயன்படுத்துதல்.

2018 ஆம் ஆண்டின் போது 2,500 கால்நடைகளும், 2019 ஆம் ஆண்டின் போது 7,500 கால்நடைகளும், 2020 ஆம் ஆண்டின் போது 5,000 கால்நடைகளும் ஆக 15,000 பாற்பசுக்கள் இறக்குமதி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், 15,000 கால்நடைகளை இறக்குமதி செய்தற்காக செலுத்த வேண்டிய ஐ.அ.டொலர் 55,465,541 மொத்தத் தொகையில் 20 சதவீதம் முற்பணமாக ஒப்பந்தகாரருக்கு 2018 மே 08 ஆந் திகதி அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. அந்த செலவினத்திற்காக ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்தபோதும், ஐ.அ.டொலர் 11,093,108 தொகை அதாவது ரூபா 1,749.67 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட கால்நடைகளுக்காகவும் முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் வெளிநாட்டு வங்கியொன்றிலிருந்து கடன் அடிப்படையில் பெறப்பட்ட இந்தப் பணத்திற்கான வட்டி மற்றும் வெளிநாட்டு நாணயமாற்று நட்டமும் அந்த கால்நடைகள் நாட்டிற்குள் கொண்டுவருவதற்கு முன்னரே இலங்கை அரசாங்கத்திற்கு செலவிட வேண்டி ஏற்பட்டிருந்ததுடன், அரசாங்கத்திற்குரிய வழங்கல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளாமல் அரசாங்கத்தின் பணம் வெளிநாட்டு வழங்குனரின்

பாவனைக்கு உட்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

குளிரூட்டிக்கூட நிர்மாணம்

சந்தை விலையை நிலையானதாக பேணுவதற்காக அறுவடையின் பின்னர் இழப்பினைக் குறைப்பதற்காக தனியார் பிரிவினரால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற 05 குளிரூட்டிக் கூடங்களை நிர்மாணிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 2,000 மிலியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவின் கீழ் 2016 சனவரி மாதம் முதல் 2016 திசெம்பர் மாதம் வரையான ஒரு வருட காலத்தில் பூர்த்தி செய்யும் செயற்திட்டமாக அமுல்படுத்தப்பட்டு 02 குளிரூட்டிக் கூடங்கள் மாத்திரம் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. பின்னர் 2017 ஏப்ரல் 04 ஆந் திகதி முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரை இந்த நிர்மாணங்களுக்காக ரூபா 500 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. 2018 மார்ச் மாதம் 14 ஆந் திகதி வரையிலும் காணி வழங்கப்படாமையினால் ஏற்பட்ட நிலைமையில் பெறுகை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தது.

தேசிய கால்நடைவள அபிவிருத்திச் சபையின் பங்களிப்பு குறைவடைந்தமை

குடிசன, புள்ளிவிபரத் திணைக்களத்தினதும் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையினதும் பிரகாரம் மீளாய்வாண்டில் நாட்டின் ஒட்டுமொத்த பால் உற்பத்தி லீற்றர் 396,198,000 ஆகவும், தேங்காய் உற்பத்தி 2,450,000,000 தேங்காய்கள் ஆகவும், கோழி உற்பத்தி 21,275,820 கால்நடைகள் ஆகவும் இருந்ததுடன் அதில் தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபையின் பால் உற்பத்தி லீற்றர் 15,003,767 ஆகவும், தேங்காய் உற்பத்தி 14,227,509 தேங்காய்கள் ஆகவும், கோழி உற்பத்தி 2,873,941 கால்நடைகள் ஆகவும் மாத்திரம் காணப்பட்டது. அதன் பிரகாரம் சபையின் பங்களிப்பு பால் உற்பத்தியில் 3.8 சதவீதம், தேங்காய் உற்பத்தியில் 0.6 சதவீதம் மற்றும் கோழி உற்பத்தியில் 13.5 சதவீதம் ஆகவும் இருந்தமையால் பங்களிப்பு மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல்

சுத்தமான குடிநீருக்காக உள்ள நுழைவு, நகரப் பிரதேசங்களில் கழிவுகளை வெளியேற்றுதல் மேவுகை மற்றும் நாடு பூராகவும் நகரங்களை முறையாக திட்டமிடுவதை உறுதிப்படுத்துதல் நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சினதும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களிலிருந்தும் எதிர்பார்க்கப்படும் பெறுபேறொன்றாக இருந்தது. இப்பெறுபேறுகளை பெற்றுக் கொள்வதற்காக அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களாலும் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- விசேட நகரத் திட்டமிடுகையும் அபிவிருத்தியும்.
- நகர அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்வதற்காக தேசிய பௌதீக திட்டங்களின் அடிப்படையில் சகல நிர்மாணப் பணிகளை வழிநடாத்துதலும் செயற்படுத்தலும்.
- சகல பிரசைகளுக்கும் சுத்தமான குடிநீர் பெற்றுக்கொடுப்பதை உறுதி செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- நீர்வழங்கல் சேவைகள், வடிகாலமைப்பு முறைமைகள், துப்புரவேற்பாட்டு வசதிகள் குறித்த ஆய்வு, திட்டமிடுகை, உருவாக்குதல், நிர்மாணித்தல், நெறிப்படுத்துகை மற்றும் பராமரிப்பு.
- சமுதாய நீர்வழங்கல் சேவைகள் மற்றும் கருத்திட்டங்களை வினைத்திறனாகவும் முறையாகவும் மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களால் மேற்படி செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் கீழே காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

குழாய் நீர் இணைப்பு வழங்கல் எதிர்பார்த்த மட்டத்தை அடையாமை

நீர் வழங்கல் மற்றும் ஆரோக்கியத்தை நோக்கமாகக் கொண்டு சபையினால் அமைச்சின் கண்காணிப்பின் கீழ் 42 பாரிய வெளிநாட்டு மானிய நீர் வழங்கல் செயற்திட்டங்களும் 02 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான செயற்திட்டங்களும், நீருடன் இணைந்த சமூக வசதிகளுக்கான 15 முன்மொழிவுகளும், உள்நாட்டு கடன் மானியங்களின் கீழ் 15 செயற்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரையில் மொத்தம் 2,219,172 நீர் வழங்கல் இணைப்புக்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் வழங்கப்பட்டிருந்தன. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் 2,323,669 நீர் வழங்கல் இணைப்புக்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அதில் 104,497 இணைப்புக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இது எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விட 104,497 ஆன குறைவொன்றாகும். அவ்வாறே 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆம் ஆண்டின் போது 138,750 நீர் வழங்கல் இணைப்புக்கள் அதிகரிப்பொன்று வழங்கப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டின் போது 2016 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 126,703 ஆன நீர் வழங்கல் இணைப்புக்களில் அதிகரிப்பொன்று இடம்பெற்றிருந்த போதிலும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக குறைவடைந்திருந்தது.

சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தி, விநியோகம் மற்றும் கிரய மீளாய்வு

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தி, உற்பத்தி செய்யப்பட்ட நீர் இயலளவில்

பயன்படுத்தப்பட்ட நீர் அளவு மற்றும் வருமானம் கிடைக்காத நீர் அளவு முன்னைய ஆண்டுகள் உட்பட மீளாய்வாண்டின் போதும் உயர்ந்த பெறுமதியொன்றைக் கொண்டிருந்தது. விபரங்கள் பின்வரும் அட்டவணை 35 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



அட்டவணை 35 ……. சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தி மற்றும் வருமானம் கிடைக்காத நீர்

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டு வரை நீர் உற்பத்தி மற்றும் பாவனை படிப்படியாக அதிகரித்திருந்தது. 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை வருமானம் கிடைக்காத நீரின் அளவும் படிப்படியாக அதிகரித்திருந்தது. சட்ட விரோதமாக நீரைப் பெற்றுக்கொள்ளல், குறைபாடுகளுடன் குழாய்கள் காணப்படுதல் மற்றும் இலவசமாக வழங்கும் நீர் காரணமாக மீளாய்வாண்டின் போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் போது நாடு பூராகவும் திரட்டிய வருமானம் கிடைக்காத நீர் விகிதம் மொத்த நீர் உற்பத்தியில் 25.24 சதவீதமாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அவ்விகிதம் படிப்படியாக குறைவடைந்திருந்தது. விபரங்கள் பின்வரும் வரைபு 36 இல் தரப்பட்டுள்ளன.



அட்டவணை 36-------மொத்த நீர் உற்பத்தியில் வருமானம் கிடைக்காத நீர் அளவின் சதவீதம்

2017 ஆம் ஆண்டின் போது கொழும்பு நகரின் வருமானம் கிடைக்காத நீர் விகிதம் 43 சதவீதமாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அம்மதிப்பிடப்பட்ட சதவீதத்தை மிகைத்து 43.14 ஆன கூடிய பெறுமதியொன்றை எடுத்திருந்தது. அச்சதவீதம் 2013 ஆம் ஆண்டின் போது 47.71 சதவீதத்திலிருந்து 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 43.14 வரை குறைத்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்தது. எனினும், மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் மதிப்பிடப்பட்டிருந்த சதவீதத்தை மிகைத்து வருமானம் கிடைக்காத நீரின் சதவீதம் அதிகரித்திருந்தது. விபரங்கள் அட்டவணை 37 இல் தரப்பிடப்பட்டுள்ளது.



அட்டவணை 37.....கொழும்பு நகரில் வருமானம் கிடைக்காத நீர் அளவு சதவீதம் மதிப்பிடப்பட்ட சதவீதத்தை மிகைத்தல்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் நிதி விளைவுகள்

2013 ஆம் ஆண்டு முதல் 2017 வரை சபையின் நீர் விநியோக வருமானம் படிப்படியான அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. எனினும், முன்னைய ஆண்டுகளில் விற்பனை வருமானத்தின் அதிகரிப்பு சதவீதத்துடன் ஒப்பிடும் போது

2017 ஆம் ஆண்டின் விற்பனை வருமான அதிகரிப்பு 1.17 சதவீதம் போன்ற குறைந்த பெறுமதியொன்றை கொண்டிருந்தது. 2016 ஆம் ஆண்டு தவிர ஏனைய ஒவ்வொரு வருடத்திலும் விற்பனை வருமானம் அதிகரிக்கும் சதவீதத்தை விட கூடுதலான சதவீதத்தில் விற்பனை கிரயம் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டு மற்றும் அதனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது நிதி வருமானம் 6 சதவீதத்தினால் குறைவடைந்து நிதிச் செலவினம் 303 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் செயற்பாட்டு இலாபம் ரூபா 1,758.9 மில்லியன் முதல் ரூபா 738 மில்லியன் வரை 58 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.



அட்டவணை..... தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் நிதி விளைவுகள்

வெளிநாட்டுக் கடன் உதவிகளைப் பயன்படுத்தாமை

உலர் வலய நகர நீர் மற்றும் ஆராக்கிய செயற்திட்டத்திற்கான உடன்படிக்கையின் பிரகாரம் கடன் வழங்கும் கால எல்லை 2017 ஆகஸ்ட் மாதத்தின் போது முடிவடைந்திருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் ஐ.அ.டொ. 13.6 அளவிலான வெளிநாட்டுக் கடன் மற்றும் உதவிகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. சிலாபம் மற்றும் புத்தளம் பிரதேசங்களில் காணப்படும் இரண்டு நீர் சுத்திகரிப்பு தாங்கிகளை புனரமைப்பதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கு இடம்பெற்ற காலதாமதத்தினால் அந்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தமை மற்றும் பேராறு நீர்த்தேக்கத்தின் பிரதான கோபுர முறைமை நிர்மாணத்தின் செயற்பாட்டிற்காக ஒப்பந்தக்காரரால் தரமற்ற விதத்தில் வழங்கப்பட்டிருந்த நீர் குழாய்கள் அகற்றப்பட்டு தரமான நீர் குழாய்கள் வழங்கப்படாமையால் அத்தாமதங்கள் இடம்பெற்றமையால் வவுனியா பிரதேசத்தின் நீர் வழங்கல் நடவடிக்கை தாமதமாக இருந்தது.

செயற்பாட்டு ரீதியாக ஈடுபடுத்தப்படாத செயற்பாடுகளுக்காக இலாபம் மற்றும் பொது மேந்தலை கொடுப்பனவு

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் அமுல்படுத்தப்பட்டிருந்த பின்வரும் செயற்திட்டங்களுக்கான ஒப்பந்தக்காரர் செயல் ரீதியாக ஈடுபடுத்தப்படாத செயற்பாடுகளுக்காக சபையினால் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- **மொனறாகலை, புத்தள ஒன்றிணைந்த நீர் வழங்கல் முன்மொழிவுத்திட்டம்**

மேற்கூறப்பட்ட செயதிட்டத்திற்காக பெல்ஜியம் அரசு மற்றும் உள்நாட்டு வர்த்தக வங்கியொன்றினால் நிதியளிக்கப்பட்டிருந்ததுடன் அதன் மொத்த கிரயம் ரூபா 5,545.48 மில்லியனாக இருந்தது. அதற்குரிய ஒப்பந்தம் வெளிநாட்டு ஒப்பந்தக்காரரொருவருக்கு 2014 யூன் 16 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. சபை மற்றும் ஒப்பந்தகாரருக்கு இடையே 2015 நவம்பர் 30 ஆந் திகதி இனங்காணப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் யூரோ 500,000 ஆன செயற்பாடுகளை உப ஒப்பந்தமொன்றாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் நிறைவேற்றுவற்காக பொறுப்பேற்றிருந்ததுடன் அதற்காக யூரோ 500,000 நிதி ஏற்பாட்டில் யூரோ 400,000 அதாவது ரூபா 62.81 மில்லியன் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. எஞ்சிய யூரோ 100,000 அதாவது ரூபா 15.70 மில்லியன் ஒப்பந்தகாரர் செயல்ரீதியான ஈடுபாடொன்றில்லாமல் இலாபம் மற்றும் பொது மேந்தலைகளாக ஒப்பந்தகாரர் அறவிட்டிருந்தார்.

- **விஷல் கண்டி நீர் வழங்கல் செயற்திட்டம்.**

இச் செயற்திட்டம் யப்பான தேசிய ஒத்துழைப்பு நிறுவனத்தினால் (ஜெய்கா) நிதியளிக்கப்பட்டிருந்ததுடன் அதன் மொத்த கிரயம் ரூபா 7,146 மில்லியனாக இருந்தது. செயற்திட்ட நோக்கங்களுக்கு புறம்பாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவரின் பயன்பாட்டிற்காக செயற்திட்ட பணத்திலிருந்து ஜீப் வண்டியொன்று கொள்வனவு செய்வதற்கு சபையினால் செயற்திட்டத்திடம் வேண்டப்பட்ட விண்ணப்பித்த வேண்டுகோளின் பிரகாரம் ஒப்பந்தக்காரரால் தற்காலிக பணப் (Provisional Sum) இலிருந்து ரூபா 1860 மில்லியனை 2016 மார்ச் 18 ஆந் திகதி காசோலை மூலம் சபையின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. எனினும் அத்தொகையிலிருந்து வாகனம் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. அப்பணத்தை அனுப்புவதற்காக ஒப்பந்தகாரரால் ரூபா 980,000 பங்களிப்பு கட்டணங்களாக (Attendants Fees) அறவிடப்பட்டிருந்தது.

ஒப்பந்தத்தை துரிதமாக நிறைவேற்றாமல் கால நீடிப்பு வழங்கல்

விஷல் தம்புள்ள நீர் வழங்கல் செயற்திட்டம் 2012 மார்ச் 06 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2014 செப்தெம்பர் 05 ஆந் திகதி வரை 30 மாதங்களில் பூர்த்தி ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்தது. அக்காலப் பகுதியில் பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்ததுடன் 05 சந்தர்ப்பங்களின் போது 43 மாதங்கள், காலம் நீடிப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை எனினும் அரசினால் செயற்திட்டத்திற்காக பெற்றுக்கொண்ட கடனுக்காக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கடன் தவணை மற்றும் கடன் வட்டியாக முறையே ரூபா 1,964.32 மில்லியன் மற்றும் ரூபா 677 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. 2018 யூன் 30 ஆந் திகதி வரையில் சபைக்கு செயற்திட்டத்தின் ஊடாக எவ்வித நலனொன்றும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அக்காலப்பகுதிக்காக செயற்திட்ட அலுவலகத்தினை பேணிச் செல்வதற்காக நேர்ந்தமையால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பதவியணியினர் மற்றும் பொது மேந்தலை செலவினமாக ரூபா 151 மில்லியனான மேலதிக செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது.

சாதாரண சந்தை பெறுமதியை மிகைத்து நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை

புத்தள ஒன்றிணைந்த நீர் வழங்கல் முன்மொழிந்த திட்டத்தின் கீழ் கும்புக்கன, மடுள்ள மற்றும் ஹொரொம்புவ ஆகிய பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடம், செயற்பாட்டு உத்தியோகபூர்வ விடுதிகள், இரண்டு கடமை பொறுப்பு விடுதிகள், தொழில்நுட்ப உத்தியோகத்தர் விடுதியொன்று உட்பட இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர் உத்தியோகபூர்வ விடுதிகள் என்பவற்றிற்காக ரூபா 103.37 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அந் நிர்மாணத்திற்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினதும் கட்டிடங்கள் திணைக்களத்தினதும் விலை விபரங்களின் பிரகாரம் அந்நிர்மாணங்களின் கிரயம் ரூபா 52.48 மில்லியனாக இருந்தது.

ஆய்வுகூடம் பாவனைக்கு எடுக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தமை

விஷல் கண்டி நீர் வழங்கல் செயற்திட்டத்தினால் ரூபா 166.99 செலவு செய்யப்பட்டு மத்திய மாகாணத்திற்காக நீர் உபகரணங்களைப் பரீட்சிப்பதற்காக ஆய்வுகூடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. சபையினால் வழங்கப்படும் சேவையின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் வருமானம் கிடைக்காத நீரின் அளவைக் குறைத்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வுகூடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனினும் ஆய்வுகூடத்தை நடாத்தி செல்வதற்காக தேவையான பயிற்சி பெற்ற பதவியணியினரை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் ஆய்வுகூடத்தை நடாத்திச் செல்வதற்கு தேவையான சர்வதேச ISO 17025 தரச் சான்றிதழ் இலங்கை தராதர அங்கீகார சபை (Sri Lanka Accreditation Board) மூலம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக ஆய்வுகூடம் 2016 ஜனவரி 01 ஆந் திகதியிலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்தது.

நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள்

விவசாயம் சார்ந்த செயற்பாடுகளுக்காக தேவைப்படும் நீர்ப்பாசன நீர் காணப்படுவதை உறுதிப்படுத்துதல் இப்பிரிவிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறொன்றாக இருந்தது. இப்பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சு, திணைக்களமொன்றும் இரண்டு நியதிச்சட்ட நிறுவனங்களாலும் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- நீர்ப்பாசனம், நீர்தேக்கம் மற்றும் நீர் முகாமைத்துவத்தின் விடயங்கள் மற்றும் அமைச்சின் கீழ் வரும் திணைக்களத்தினதும் பொது முயற்சிகளினதும் நோக்கெல்லையின் கீழ் வரும் ஒவ்வொரு விடயத்துடன் தொடர்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை தயார்படுத்தி அமுலாக்கல்.
- நீர்ப்பாசனத் திட்டங்கள், வடிகாலமைப்பு மற்றும் வெள்ளப் பாதுகாப்பு திட்டங்கள் மற்றும் உப்புநீர் நீக்கல் திட்டங்களினை ஊக்குவித்தல், நிர்மாணித்தல், செயற்படுத்தல், பராமரித்தல், மீள் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் செய்தல்.
- ஆறுகள், கால்வாய்கள், ஓடைகள் மற்றும் ஏனைய நீர் வழிகளின் மாசடைதலை தடுத்தல்
- மழை நீரைச் சேமித்தல்
- பொறியியலாளர் ஆலோசனை சேவைகள் மற்றும் நிர்மாணங்களும்
- நீர் வளங்கள் சபை அதிகாரச்சட்டத்தினை அமுல்படுத்தல்.

மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களால் நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

அமைச்சின் கடமைகளுக்கு உரித்தல்லாத செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

முப்படை மற்றும் இலங்கை பொலிஸ் என்பவற்றுக்கு பகிர்ந்தளிப்பதற்காக அரச பாதுகாப்பு அமைச்சிற்காக முன்னர் தயார் கட்டிடங்கள் கொள்வனவு செய்து 07 தவணைகளில் கொடுப்பனவு செய்வதற்காக 2012 யூலை 05 ஆந் திகதி சீனக் கம்பனியொன்றுடன் நீர்ப்பாசன மற்றும் நீரக வளங்கள் அமைச்சு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டடிருந்தது. அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 560.76 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை மொத்தம் ரூபா 13,003.30 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அந்த முன் கட்டிடங்களை கொள்வனவு செய்தல் அமைச்சின் விடயப் பரப்பிற்குரிய செயற்பணி ஒன்றாக இல்லாமல் இருந்ததுடன் அமைச்சின் செயல் நடவடிக்கைத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், முப்படை மற்றும் பொலிஸ் என்பவற்றுக்கு கையளிக்கப்பட்ட வீடுகளின் மொத்த எண்ணிக்கை மற்றும் அவ்வீடுகள் திருப்திகரமாக பொருத்தப்பட்டுள்ளதாக நிறுவனத் தலைவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றுகளும் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ஜின் நில்வளா கங்கை திசை திருப்பும் செயற்திட்டங்கள் செயற்படுத்தாமை

அமைச்சினால் ஜின் நில்வளா கங்கை திசை திருப்பும் செயற்திட்டத்திற்கான 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 4,011.05 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணமாக வெளிநாட்டுக் கம்பனியொன்றுக்கு கொடுப்பனவு

செய்யப்பட்டிருந்தது.
இம்முற்பணத்திலிருந்து ரூபா 2,972.49 மில்லியன் பாராளுமன்றத்தினால் போதியளவு நிதி ஏற்பாடு நிதிஏற்பாடு செய்யப்படாத செலவின விடயமொன்றின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதனால் 2015 ஆம் ஆண்டின் போது மிகை செலவினமொன்றமாக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த மிகை செலவினம் 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.
செயற்திட்டத்தை இனங்காணல் ஒப்பந்தகாரரொருவரை தெரிவு செய்தல், முற்பண வழங்கல் செயற்படுத்துதல் மற்றும் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் போன்ற விடயங்களின் போது முறையான திட்டங்களை தயாரித்தல், வெளிப்படைத் தன்மையை பாதுகாத்தல் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் குறித்த பொறுப்பு வாய்ந்த தரப்பினரால் கருத்திற் கொள்ளக்கூடிய மட்டத்தில் புறக்கணிக்கப்பட்டிருந்தது.
செயற்திட்டத்திற்காக அரசு செலவிட்டிருந்த பணத்திற்கு ஒப்பாக எவ்வித கருத்திற் கொள்ளக்கூடிய நலனொன்று கிடைக்காமல் இருந்ததுடன் அரசின் வளங்களை சிக்கனமற்ற வகையில் பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. குறித்த முற்பணக் கொடுப்பனவிற்காக போதியளவு நிதிஏற்பாடு இல்லாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கையில் அது தொடர்பாக முறையான கருத்திற் கொள்ளால் நிதி விடுவிக்கப்பட்டிருந்தமை தொடர்பாக உத்தியோகத்தர்கள் பொறுப்புக் கூறவேண்டுமென அவதானிக்கப்பட்டது.
கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்

மஹாவலி அதிகாரசபைக்குரிய கட்டிடங்களில் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சினால் கொத்மலே சர்வதேச பயிற்சி நிலையம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. முறைப்படி அக்கட்டிடங்கள் அமைச்சிற்கு கையேற்கப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 7.03 மில்லியன் செலவிடப்பட்டு கட்டிட நிர்மாண மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் நிறைவேற்றப்படாமை

நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 667 மில்லியன் கிரய மதிப்பீட்டிலான 54 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 401 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் இச்செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தன.

யான் ஓயா செயற்திட்டத்தினால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம்

யான் ஓயா நீர்த்தேக்க நிர்மாணத்தின் போது காடுகளிற்கு ஏற்படும் பாதிப்பினை உரிய நிலைமைக்கு கொண்டு வருவதற்காக நடப்பட்ட கன்றுகள் இறந்திருந்ததுடன் எஞ்சிய கன்றுகள் நடப்பட வேண்டிய காலமும் கடந்திருந்தது. பிரதான வீதிக்கு அண்மித்த வகையில் பாதுகாப்பற்ற வகையில் மீண்டும் காடு வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் கால்நடைகளால் அந்த காடு வளப்பிற்கு சேதம் ஏற்பட்டிருந்தன. மேலும், நீர்த்தேக்கத்தில் மூழ்கும் காடுகளில் அழிவடைந்த 100,000 மரங்களுக்குப் பதிலாக 300,000 கன்றுகளை நடுவதற்கு ரூபா 17 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2018 யூன் 30 ஆந் திகதி வரையில் எந்தவொரு கன்றும் முளைத்திருக்கவில்லை. நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்படும் காணியில் மணல் அகற்றியதன் பின்னர் அந்நிலத்தில்

உள்ள குழிகள் நிரப்பப்பட வேண்டியதுடன் மணல் அகழ்வு 2017 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் மண் அகழ்வொருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருகவில்லை. நீர்த் தேக்கத்தின் சுவருக்கு ஒரு கிலோ மீற்றருக்கு உள்ள பிரதேசம் சிரமமான வலயமொன்றாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் அப்பிரதேசத்தில் மணல் அகழ்தல் நடவடிக்கை இடம்பெற்றிருந்தன. நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்படும் பிரதேசத்தில் மணல் அகழும் இடத்தை புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. மணல் அகழ்வு செய்யப்பட்ட குழிகளின் பள்ளம் V கோணத்தில் இருக்க வேண்டிய போதிலும் அனைத்து குழிகளும் நேர் பள்ளமாக காணப்படும் இடங்களில் மணல் அகழ்வு இடம்பெற்றிருந்தது. மணல் அகழ்விற்காக வழங்கப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் ஆழம் 03 மீற்றரை மிகைக்க கூடாத போதிலும் மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டிருந்த குழிகளின் ஆழம் 10 இற்கும் 12 மீற்றருக்கும் இடைப்பட்ட அளவினைக் கொண்டிருந்தது.

முறைப்படி கையேற்கப்படாத வாகனங்கள்

பல்வேறு அரச நிறுவனங்களிடமிருந்து 137 வாகனங்கள் நீர்ப்பாசன திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அவ்வாகனங்கள் முறைப்படி கையெற்பதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அளவீட்டு உபகரணங்கள் பற்றாக்குறை

2002 ஆம் ஆண்டிற்கு முன்னர் நீர் சக்திப் பிரிவில் ரூபா 4.31 மில்லியனான அளவீட்டு உபகரணங்கள் பற்றாக்குறையொன்று இடம்பெற்றிருந்ததுடன் இது தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய அப்பிரிவில் சேவை புரிந்து 2002 மே 09 ஆந் திகதி கட்டாயமாக ஓய்வில் அனுப்பிவைக்கப்பட்ட களஞ்சிய காப்பாளருக்கு வழக்கு தொடரப்பட்டிருந்தது. அவ்வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் அப்பற்றாக்குறையில் ரூபா 411,051 மாத்திரம் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்டது. இப்பற்றாக்குறை இடம்பெற்று 2018 யூன் 30 ஆந் திகதி வரை 14 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் பற்றாக்குறையிலிருந்து மேலும் அறவிடப்பட வேண்டிய தொகை தொடர்பாக எவ்வித நடவடிக்கையொன்றையும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

நீர்ப்பாசன தொழில்நுட்பத்திலிருந்து விலகி துருசு நிர்மாணம்

மொனறாகலை மாவட்டத்தின் ஹல்மில்ல பில்லேவ குளத்தை புனரமைப்பதற்காக தயாரிக்கப்பட்ட ரூபா 2.22 மில்லியன் மதிப்பீடொன்றின் பிரகாரம் நேர் உழைப்பு அடிப்படையின் கீழ் வெள்ளவாய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தினால் ரூபா 3.86 மில்லியன் செலவு செய்து வழமையான நீர்ப்பாசன தொழில்நுட்பத்திலிருந்து விலகி குளச் சுவருக்கு வெளியே துருசு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு துருசு நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் குளத்தின் நீர் துருசின் இருபக்கங்களினாலும் கசிந்தமையால் மீண்டும் புதிதாக துருசு ஒன்றினை நிர்மாணிப்பதற்கு ரூபா 4.47 மில்லியனான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நியம நீர்ப்பாசன தொழில்நுட்பத்திலிருந்து விலகி துருசு நிர்மாணத்திற்காக

செலவிடப்பட்ட ரூபா 3.86 மில்லியனான செலவினம் பயனற்றதாக இருந்தது.

உத்தியோகத்தர்கள் செலுத்த வேண்டிய இழப்பீட்டை திணைக்களம் கொடுப்பனவு செய்தமை

திணைக்களத்தின் நீர்ப்பாசன பொறியியலாளரினால் முறைப்படி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் திணைக்களத்திற்கு சொந்தமான வாகனமொன்று ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டு 2013 செப்தெம்பர் 15 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டு மோட்டார் சைக்கிள் பிரயாணியொருவர் மரணித்திருந்தார். அவ்விடயம் தொடர்பாக உரிய பொறியியலாளர் குற்றவாளியாக்கப்பட்டு 2 வருட சிறைத் தண்டணை 3 வருடங்களுக்கு இடைநிறுத்தப்பட்டிருந்தது. இவ்விபத்தினால் பாதிப்பிற்கு உட்பட்ட தரப்பினரால் நட்டஈடு கோரி தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் திணைக்களத்தினால் வர்த்தக வங்கியொன்றில் பேணிச் சென்ற நடைமுறைக் கணக்கொன்றை இடைநிறுத்தி அதில் ரூபா 2.49 மில்லியன் 2017 செப்தெம்பர் 19 ஆந் திகதி நீதிமன்றத்தினால் எடுக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தினால் அவ்வாறு வங்கியால் அறவிடப்பட்ட பணத்தை முற்பணக் கொடுப்பனவொன்றாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அம்முற்பணத்தை உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவீடு செய்து அதனை தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் குறித்த உத்தியோகத்தரிடமிருந்து அப்பணத்தை அறவிட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த முற்பணத்தொகை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

அங்கீகாரமின்றி படிகள் கொடுப்பனவு

அமைச்சின் கீழ் காணப்படும் நீர் வளங்கள் சபையின் உத்தியோகத்தர்களுக்காக நிறுவனத்தில் தொடர்ந்து வைப்பதற்காக ஊக்குவிப்பு கொடுப்பனவொன்றினை கொடுப்பனவு செய்வது பொருத்தம் என்பதாக அமைச்சின் செயலாளரால் அனுமதித்து திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை ரூபா 8.47 மில்லியன் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

வனசீவராசிகள் பாதுகாப்பு

வலுவாதார அபிவிருத்தியுடன் சுற்றாடலுடன் சாதகமான சமூகமொன்றை உருவாக்குதல் வனசீவராசிகள் வளங்களை பாதுகாப்பதிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறொன்றாக இருந்தது. இப்பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு, மூன்று திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனமொன்றினாலும் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் விடயங்கள் மற்றும் திணைக்களத்தினதும் பொது முயற்சிகளினதும் நோக்கெல்லையின் தொடர்பான கொள்கையையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வடிவமைத்தலும் கண்காணித்தலும்.
- சுற்றாடல் ரீதியான மாற்றங்கள் மற்றும் மிகக் குறைந்த அளவிலான காபன் பாவனையைக் கொண்ட பொருளாதார ரீதியான வலுவாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக வேண்டிய சட்டங்களையும் உபாய வழிமுறைகளையும் வகுத்தமைத்தலும்.
- வலுவாதார தராதரங்களையும் சுற்றாடல் சார்ந்த குறிகாட்டிகளையும் தயாரித்தல்.
- வலுவாதார அபிவிருத்திக்கான செயலகங்களை அமைத்தல்.
- இலங்கையின் மரஞ்செடிகளைப் பேணுதலும் தாவரவியற் பூங்காக்களைப் பராமரித்தலும் பூஞ்செடிப் பயிர்ச் செய்கையை ஊக்குவித்தலும்.
- மிருகங்கள், பறவைகள் மற்றும் ஊர்வன ஆகிய பல்வெறு விலங்குகளை ஒன்று சேர்த்தலும் காட்சிப்படுத்தலும் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட அலுவல்கள்.
- வனசீவராசிகள் வளங்களைப் பேணுதல்.
- வனசீவராசிகளின் பாதுகாப்பு பிரதேசங்களில் சுற்றுலாக் கைத்தொழிலை ஊக்குவிக்கும் போது சுற்றாடல் முறைமை பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தித் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களால் மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

நிலைபேறான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக அறிவுறுத்தப்படாமை

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு நாட்டின் நிலைபேறான அபிவிருத்தி தேவைப்பாடுகள் மற்றும் நியதிகளை ஒன்றிணைப்பதற்காக மிகவும் சிறந்த தீர்வுகளை அடைந்து கொள்ளும் நோக்கில் தாபிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த அமைச்சின் கீழ் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், கால்நடை பாதுகாப்பு தொடர்பாக வரும் நிலைபேறான நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பாக சரியான அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது அந்நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

தாவர பூங்காக்கள் மற்றும் மிருக காட்சிகளை பார்வையிடுவதற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகள் குறைவடைதல்

இலங்கையின் தாவர பூங்காக்கள் மற்றும் மிருககாட்சிசாலைகளைப் பார்வையிடுவதற்கு வரும் சுற்றுலா பிரயாணிகளின் வருகை கடந்த வருடங்களில் அதிகரித்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைவொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகள் முறையே 5.14 மில்லியன் பேர் மற்றும் 0.88 மில்லியன் பேராக மொத்தம் 6.02 மில்லியன் பேர் வருகை தந்திருந்தனர். எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முறையே 4.91 மில்லியன் பேர், 0.81 மில்லியன் பேர் என மொத்தம் ரூபா 5.72 மில்லியன் பேர் வரை குறைவடைந்திருந்தன. விபரங்கள் அட்டவணை 39 இல் காட்டப்பட்டுள்ளன.



அட்டவணை 39.....தாவர பூங்காக்கள் மற்றும் மிருககாட்சிசாலைகளைப் பார்வையிடுவதற்கு வருகை தந்த சுற்றுலா பிரயாணிகளின் எண்ணிக்கை
மூலம்: 2017 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கை

அவ்வாறே முன்னைய ஆண்டின் போது ரூபா 1.78 மில்லியனான வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அது ரூபா 1.75 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது விபரங்கள் அட்டவணை 40 இல் காட்டப்பட்டுள்ளது.



அட்டவணை 40 ..... தாவர பூங்காக்கள் மற்றும் மிருககாட்சிசாலைகளைப் பார்வையிடுவதற்கு 2017 வருகை தந்த சுற்றுலா பிரயாணிகளிடமிருந்து கிடைத்த வருமானம்

மூலம்: 2017 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கை

யானைகள் மற்றும் மனிதர் மோதல்

மனிதர்கள் வாழும் பிரதேசத்தில் காட்டு யானைகள் வருவதை தடுப்பதற்காக மின்சார வேலி, பாதுகாப்பு வேலி மற்றும் நவீன முறைகளால் பௌதீக தடைகளை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக யானைகள் மரணங்களின் எண்ணிக்கை 08 சதவீதத்தினாலும் மனித மரணங்கள் 1 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தன. எனினும் கிழக்கு, ஊவா மற்றும் கிளிநொச்சி வனசீவராசிகள் வலயங்களில் அந்த அளவுகள் மீளாய்வாண்டின் போது அதிகரித்திருந்தன. கடந்த 05 ஆண்டு காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட யானை மனிதர் மரணங்கள் எண்ணிக்கை அட்டவணை 41 இல் தரப்பட்டுள்ளன.



அட்டவணை 41…. யானை மனிதர் மோதலினால் மரணித்த யானை மற்றும் மனிதர்கள்

மூலம் : 2017 செயலாற்றல் அறிக்கை

யானை மாறுமிடங்கள்

யானை அநேகமாக இயற்கையாக சுற்றுலா பிராணியொன்றாக இருந்ததுடன் அவற்றிற்கே உரித்தான பழக்கப்பட்ட வீதிகள் அதாவது யானை மாறுமிடங்கள் ஊடாக பிரயாணிக்கின்றன. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் இவ்வாறான 17 யானை மாறுமிடங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் மின்னேரியா யானை மாறுமிடத்தை மாத்திரம் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. ஏனைய சகல யானை மாறுமிடங்களில் மக்கள் குடியேரியமை மற்றும் பல்வேறுபட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கோள்ளப்பட்டிருந்தன. இதன் காரணமாக காட்டு யானைகள் பயணிக்கும் வீதிகளில் தடைகள் காரணமாக மனிதர்களுடன் ஏற்படும் மோதல்கள் இரண்டு தரப்பினருக்கும் பாதிப்பினை ஏற்படுத்தியிருந்தன.

காட்டு யானைகள் மரணித்தல்

வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் தரவுகளின் பிரகாரம் அழிவுக்குள்ளாகிப் போகும் அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டுள்ள 38 கொம்பன் யானைகள் அளவில் கடந்த 05 ஆண்டு காலப்பகுதியில் இறந்திருந்தன. துப்பாக்கிகள் பயன்பாடு மின்சார தாக்குதலுக்கு உட்படச் செய்தல் வெடிகளை வெடிக்க வைத்தல் மற்றும்

நஞ்சு வைத்தல் போன்றவற்றை மனிதர்கள் கூடுதலாக மேற்கொண்டிருந்தனர். வனசீவராசிகள் உத்தியோகத்தர்களுக்கு யானைகள் தொடர்பாக செயற்பட வேண்டிய முறை தொடர்பாக தெளிவொன்றும் விசேட பயிற்சியொன்றும் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவர்களின் கவனயீனம் காரணமாகவும் யானைகள் மரணிக்கும் சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. உதாரணமாக தல பூட்டுவாவிற்கு பாதுகாப்பொன்று வழங்காமை, ஓமந்த பிரதேசத்தில் பெண் யானையொன்று மரணித்தமை மற்றும் சியம்பலன்கமுவ பெரிய யானை போக்குவரத்தின் போது மரணித்ததை குறிப்பிடலாம். மேலும் கழிவுப்பொருட்களை வெளியேற்றும் இடங்களுக்கு யானைகள் செல்லாமல் இருக்கும் வகையில் மின்சார வேலிகள் நிர்மாணிப்பதற்கு திணைக்களம் தவறியமையால் தற்போது யானைகள் கழிவுப்பொருட்களை உணவாகக் கொள்வதற்கு பழக்கப்பட்டிருந்தன. அதன் விளைவாக அதிகமான காட்டு யானைகள் கழிவுப்பொருட்களை உணவாகக் கொள்வதன் காரணமாக பல்வேறுபட்ட நோய்களுக்கு உட்பட்டு மரணிப்பதாக கால்நடை வைத்தியர்களின் அபிப்பிராயமாக இருந்தது.

படம் 12 ---------- கழிவுப்பொருட்களை வெளியேற்றும் இடங்களுக்கு வரும் யானைகள்

ஏனைய விசேட விலங்கினங்கள்

வன சரணாலய மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பு பொறுப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கையில் 750 – 1000 இற்கும் இடைப்பட்ட சிறுத்தைகள் வாழ்வதாக கண்றியப்பட்டிருந்தது. 2001 ஆம் வருடம் முதல் 2017ஆம் வருடம் வரை 35 சிறுத்தைகள் உயிரிழந்துள்ளன. குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சிறுத்தைகளைப் பாதுகாப்பதற்கோ, அவற்றினால் பொதுமக்களின் பாதுகாப்பிற்கு ஏற்படும் சேதங்களை குறைக்கும் வேலைத்திட்டமொன்றை

அறிமுகப்படுத்துவுதற்கு வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தவறியிருந்தது.

கடலாமைகளைப் பாதுகாத்தல்

கடல் வாழ் உயிரினங்கள் மத்தியில் கடலாமை விசேடமான உயிரினமாகும். இலங்கையில் கடற் கரைக்கு முட்டையிடுவதற்கு வரும் இப்பிராணிகளை பாதுகாப்பதற்கு வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் 05 பாதுகாப்பு நிலையங்கள் பேணப்பட்டு செல்லப்பட்டு வருவதுன் தனியார் நிலையங்கள் 12 முதல் 16 வரையான அளவிலர் பேணப்பட்டு செல்லப்படுகின்றன. எனினும் அந்த நிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்குரிய தேவையான சட்டரீதியான சட்டகம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

கடமைகளை போதியளவில் நிறைவேற்றாமை

விவசாயம் சார்ந்த உற்பத்திகள், பிரம்பு இறக்குமதி ஆகிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அரச மரக்கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் மர உப உற்பத்தி மற்றும் விற்பனையும் இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறே மரத்துடன் அணமித்த முடிவுப்பொருள் மற்றும் அரை முடிவுப் பொருள் ஏற்றுமதி செய்தல் கூட்டுத்தாபனத்தின் நோக்கமொன்றாக இருந்த போதிலும் அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

அரச மரக் கூட்டுத்தாபனம்

மீளாய்வாண்டின் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் மொத்த விற்பனை வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 1 சதவீத அதிகரிப்பொன்றால் அதிகரித்திருந்தது. எனினும் தனிப்பட்ட மற்றும் அரச காணிகளில் சிலிப்பர்கள், இறக்குமதி செய்யப்பட்ட சிலிப்பர்களின் விற்பனை வருமானம் மின்சார வேலி தூண்கள் யானை வேலிக் கம்பங்கள் விற்பனை வருமானம் என்பன முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 30 சதவீதத்திலிருந்து 75 சதவீதம் வரையான வீச்சில் குறைவடைந்திருந்தது. இறக்குமதி செய்யப்பட்ட அரியப்பட்ட மரங்களிலிருந்து மாத்திரம் 0.85 சதவீதம் சதவீதத்தில் அதிகரித்திருந்த போதிலும் அவ்வருமானத்தில் கருத்திற் கொள்ளக் கூடியளவு பெறுபேறொன்றை கைப்பற்றியிருந்தது.

தளபாடப் பொருள் விற்பனை

தளபாடங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்தல் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பிரதான வருமான மார்க்கமாக இருந்தது. மீளாய்வாண்டின் தளபாட விற்பனை வருமானம் ரூபா 985,956 ஆக இருந்ததுடன், அது கூட்டுத்தாபனத்தின் மொத்த வருமானத்தில் 9 சதவீதமாக இருந்ததுடன் திரட்டிய இலாபத்தில் 0.1 சதவீதமாக இருந்தது. கூட்டுத்தாபனம் அரசின் மரங்களை பெற்றுக்கொள்வதில் தனியுரிமையுடைய நிறுவனமொன்றாக இருந்த போதிலும், தளபாடங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்வது தொடர்பாக புதிய உபாயங்கள் பின்பற்றப்படுதல் தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

பின்லர் ஜொயின்ட் உற்பத்தி நட்டம் அடைந்தமை

அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் தளபாடங்கள் உற்பத்தியின் போது ஏற்படும் பலகை விரயத்திலிருந்து கூடிய பயனைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் நடாத்திச் செய்யப்பட்ட பூங்கா பின்கர ஜொயின்ட தொழிற்சாலையில் மீளாய்வாண்டின் போது ரூபா 2.71 மில்லியனான தேறிய நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின்போது அந்த உற்பத்தி விற்பனையிலிருந்து கிடைத்த தேறிய நட்டமொன்று ஒப்பாக 220 சதவீதமான அளவு வீழ்ச்சியடைந்திருந்தது. வருடக் கணக்காக முன்னர் பின்லர் ஜொய்ன்ட்

உற்பத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக சந்தையில் சிறந்த பொறுப்பேற்றலொன்று காணப்படவில்லை. இந் நிலைமையின் கீழ் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 15.88 மில்லியன் உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டு அதிலிருந்து கிடைத்த ரூபா 6.43 மில்லியன் ஆன விற்பனை வருமானம் அது மொத்த உற்பத்தி பெறுமதியில் 40 சதவீதமான அளவினைக் கொண்டிருந்தது. அதன் பிரகாரம் மொத்த உற்பத்தியின் 60 சதவீதமான விற்பனைக் கிரய எதிர்காலத்தில் பயனற்ற செலவினமொன்றாக இலாபத்திற்கான இயலுமை காணப்படுவதினூடாக அவதானிக்கப்பட்டது.

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி

தோட்ட மக்களை வலுப்படுத்தும் பிரதான நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மலைநாட்டு புதிய கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு மற்றும் மூன்று நியதிச்சட்ட நிறுவனங்கள் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பான விடயங்களுக்குரிய கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வழங்கல் மற்றும் மதிப்பீடு.

- தோட்டப்பிரிவு சமூகத்தை பொருளாதார, சமூக ரீதியில் கட்டியெழுப்புதல்.

- அரசாங்கத்தினதும் தனியார் பெருந்தோட்டக் கம்பனிகளிலும் சேவையாற்றுகின்ற காணி உரித்தற்ற மக்களுக்காக வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தில் புதிய கிராமம் மற்றும் மற்றும் நகரங்களை வடிவமைத்தல்.

- தோட்டப்பிரிவு சமூகத்தை வலுப்படுத்துவதற்காக ஜீவனோபாயத்தை உருவாக்கும் செயற்திட்டத்தை அமுல்படுத்தல்.

- கிராமிய தோட்டப் பிரிவுகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

மேற்கூறப்பட்ட பணிப்பொறுப்புக்கள் அமைச்சு மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களினால் அமுல்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கமாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

நலனாளிகளுக்குச் செலுத்தப்பட்ட கடனை மீள அறவிடுதல்

2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டின் ஆரம்பம் வரை புதிதாக குடியிருக்கின்ற தோட்ட வீடமைப்பு அபிவித்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மற்றும் கிறீன் கோல்ட் செயற்திட்டத்தின் வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 442.94 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு விநியோகிக்கப்பட்ட கடனின் அளவில் ரூபா 232.46 மில்லியன் தொகை புதிதாக குடியிருக்கின்ற தோட்ட வீடுகளுக்கும், ரூபா 4.11 மில்லியன் தொகை கிறீன் கோல்ட் வீடுகளுக்கும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 236.57 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. எனினும், 2015 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கூட்டுமொத்தமாக ரூபா 17.62 மில்லியன் மாத்திரம் மீள அறவிடப்பட்ட கடனாக திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சினால் கடன் மீள அறவிடல் சரியான மேற்பார்வையின்றி இடம்பெற்றிருந்தது.

வீடமைப்பு செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நேரடியாக தொடர்புபட்டிருந்ததுடன் செலுத்தப்பட்ட கடனில் 2015 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னிருந்து மீளாய்வாண்டு இறுதிவரையிலும் கூட்டுமொத்தமாக ரூபா 48.31 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்தப் பணத்தில் ரூபா 33.25 மில்லியன் தொகை அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்படாமல் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி

நம்பிக்கை பொறுப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வெளி நிறுவனமொன்று நம்பிக்கை பொறுப்பின் நிதியினை முறையற்ற வகையில் கையாண்டிருந்தது.

வீடமைப்புத் திட்டங்களை பூர்த்தி செய்வதில் தாமதம்

அனர்த்தங்களுக்கு உட்பட்டவர்களுக்காக "ஹரித்த றன் நிவாச பூர்ண" நிதி உதவியின் கீழ் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு கொண்டிருந்தன. 2017 ஆம் ஆண்டின் அமைச்சின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 367 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும், ஆரம்பக் கட்டத்தின் 162 வீடுகளும், முதலாவது கட்டத்தில் 60 வீடுகளும் மற்றும் மூன்றாவது கட்டத்தில் 12 வீடுகளும் காணப்பட்டன. 133 வீடுகளின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்திற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் அல்லது செயலாற்றல் அறிக்கையில் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் காலப்பகுதி குறிப்பிடப்படாதிருந்தமையால் நிர்மாணங்களின் தாமதக் காலத்தை கணிப்பீடு செய்ய முடியாதிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய 937 வீடுகள் 2017 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதில் 458 வீடுகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

முன்பூர்த்தி கொங்கிறீட் முறைமையின் கீழ் வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம்

முன்பூர்த்தி கொங்கிறீட் முறைமையின் கீழ் வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2017 மே 17 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 நவம்பர் 16 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 50 மில்லியனாகக் காணப்பட்டது. அமைச்சால் அந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2017 திசெம்பர் 21 ஆந் திகதி வரையில் ரூபா 33 மில்லியன் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் எந்தவொரு வீடும் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

திட்டமிடப்பட்ட பிரகாரம் வீடுகள் நிர்மாணிக்கப்படாமை

2017 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2,500 வீடுகளின் நிர்மாணம் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,000.00 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும், ஆண்டின் இறுதிவரையிலும் அதில் ரூபா 1,436.22 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், ஆண்டின் போது 692 வீடுகள் மாத்திரம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 80 சதவீத செயல்முன்னேற்றத்தைக் கைப்பற்றியிருந்த 455 வீடுகள் காணப்பட்டதுடன் 60 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையான செயல்முன்னேற்றத்தைக் கைப்பற்றிய வீடுகளின் எண்ணிக்கை 493 ஆகக் காணப்பட்டது. மேலும் 221 வீடுகளின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

பொதுமக்கள் பிரதிநித்துவம்

வீடமைப்புத் திட்டங்களை நிறைவேற்றும் போது வறுமையில் வாடுகின்ற வீட்டு உரிமையொன்று காணப்படாத அத்தியாவசிய நபர்களுக்கு வீடு கிடைக்கப் பெறாதிருந்ததாகவும், வீடுகளை வழங்குவதற்காக முறையான திட்டமொன்று காணப்படவில்லை எனவும் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. வீட்டு நலனாளிகளைத் தெரிவு செய்யும் முறையொன்று அமைச்சில் காணப்படாதிருந்ததுடன், தோட்ட முகாமைத்துவம் மற்றும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி

நம்பிக்கை பொறுப்பு போன்ற வெளிநிறுவனங்களினால் வீட்டு நலனாளிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தமையால் அவற்றின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான போதியளவான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

தேயிலை பயிர்செய்யப்படுகின்ற நிலத்தின் அளவு குறைவடைந்தமை

2015 ஏப்ரல் 23 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தோட்ட ஊழியர்களுக்கு காணி உரித்துடன் வசதியுள்ள வீடொன்றின் உரித்தை வழங்குவதற்காக கொள்கை ரீதியில் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் மூலம் உரிய நலனாளிகளுக்கு 07 பேர்ச் காணியையும், வீடொன்றின் உரித்தையும் சட்டரீதியாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையில் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 3,009 ஆகவும், நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற வீடுகளின் எணணிக்கை 2,292 ஆகவும் காணப்பட்டன. அதற்கு மேலதிகமாக இந்திய அரசாங்கத்துடன் ஏற்படுத்தப்பட்ட இரண்டு உடன்படிக்கைகளின் பிரகாரம் இந்திய நிதி உதவியின் கீழ் 2018 ஆம் ஆண்டு வரையில் 4,000 வீடுகளையும் எதிர்காலத்தில் மேலும் 10,000 வீடுகளையும் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட 19,301 வீடுகளின் எண்ணிக்கைக்காக தேயிலைத் தோட்டங்களில் 135,107 பேர்ச் அதாவது 844 ஏக்கர் இதுவரையில் ஒதுக்கப்பட்டும் ஒதுக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டும் இருந்தது. எனினும், இந்த வீடுகளுக்காக தோட்ட ஊழியர்கள் அல்லாத வேறு தொழில்களில் ஈடுபடுகின்ற நபர்களும் நலனாளிகளாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். வீடுகள் வழங்கப்படுகின்ற நலனாளிகளின் தோட்டத்தில் வேலை செய்கின்ற எண்ணிக்கை 28 சதவீதமான குறைந்த அளவைக் கொண்டிருந்தது. இவ்வாறு வீடுகளுக்கு தகுதியான வேறு காணிகளை வழங்கி தேயிலை பயிர்செய்யப்படுகின்ற காணிகளின் அளவை பாதுகாப்பது தொடர்பில் அமைச்சு கவனம் செலுத்தியிருக்கவில்லை.

விவசாயம்

நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதலை முன்னிட்டு உணவு உற்பத்தியை அதிகரித்தல் இத்துறையினால் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோளாகும். இக் குறிக்கோளை அடைந்து கொள்வதற்காக பின்வரும் பிரதான செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

- விவசாயத் துறையின் அபிவிருத்தியை முன்னிட்டு கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்திட்டங்களைத் தயாரித்தல் வழிகாட்டல்களை வழங்குதல், வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் அமுல்படுத்தல்.
- வலயங்களுக்குப் பொருத்தமான விவசாயத் தொழில்நுட்பத்தை உருவாக்குதலும் அதனை விவசாயிகளுக்கு மத்தியில் வியாபிக்கச் செய்தலும்.
- உயர் தரத்திலான விதைகளையும் நடுகைப் பொருட்களையும் உற்பத்தி செய்து பகிர்ந்தளித்தலும் உணவுப் பயிர் உற்பத்திக்காக சமூக பொருளாதார மீளாய்வை நடாத்துதலும்
- தாவரங்களைப் பாதுகாத்தல் சட்டம், கிருமி நாசினி கட்டுப்பாட்டுச் சட்டம், மண் பாதுகாப்புச் சட்டம், விதைகள் சட்டம் என்பவற்றை அமுல்படுத்துதல்.
- பசளை நியமங்களைப் பேணுதல், பசளைகளின் தேவைப்பாட்டை இனங்காண்தல், பகிர்ந்தளித்தல், தரவு முறைமையை நாளதுவரையாக்குதல் அரசாங்கத்தின் பசளை வேலைத்திட்டங்களை அமுல்படுத்துதல்.
- விவசாயக் காணிகளிலிருந்து சிறந்த விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- விவசாயிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் தேவையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

விவசாய அமைச்சு, 2 திணைக்களங்கள், 9 நியதிச்சட்டசபை நிறுவனங்கள் ஒரு வெளிநாட்டு செயற்திட்டம், 2 நிதியங்கள் என்பவற்றின் மூலம் மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது. அந்த நிறுவனங்களால் அச்செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதாணிப்புக்கள் சுருக்கி கீழே தரப்படுகின்றன.

வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடங்கள்

விவசாய அமைச்சின் அலுவலகத்தை செயற்படுத்துவதற்காக ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடத்திற்காக மீளாய்வாண்டின் போது வாடகை மற்றும் சேவைக் கட்டணமாக ரூபா 252 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அக்கட்டிடத்தை அறைகளாகப் பிரித்து ஒதுக்கீடு செய்தல், தளவிரிப்பு இடுதல், மின்சாரம், குளிரூட்டி செயற்பாடுகள் என்பவற்றிற்காக ரூபா 261 மில்லியனும் செலவு செய்யப்பட்டிருந்தது. விலைப் போட்டியை கட்டுப்படுத்துவதற்கான செயற்பாட்டின் காரணமாக அரசாங்கத்திற்கு மாதாந்தம் ரூபா 20 மில்லியன் மேலதிக செலவை செய்ய வேண்டியிருந்ததுடன் ஒப்பந்தக்காரரர்கள் வேலையைப்

பூர்த்திசெய்வதற்கு தாமதித்ததன் காரணமாக அறவிட வேண்டியிருந்த ரூபா 17 மில்லியன் தாமதக் கட்டணமும் மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

விவசாய அமைச்சின் பழைய கட்டிடம்

பெறுமதி வெளிப்படுத்தப்படாத பத்தரமுல்லையில் அமைந்துள்ள விவசாய அமைச்சிற்குச் சொந்தமாக 17.199 ஹெக்டயர் பரப்பளவுள்ள காணியும் அதில் அமைந்துள்ள விவசாய அமைச்சிற்குச் சொந்தமான கட்டிடத்தொகுதியும் மீளாய்வாண்டின் போது விளைவற்றுக் காணப்பட்டது.

பசளை நிவாரணத்தை உரிய விவசாயிகளின் கணக்குகளுக்கு செலவு வைக்காமை

பசளை நிவாரணம் செலுத்துவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் 3021 நபர்களுக்கு ரூபா 28.25 மில்லியன் மொத்த தொகையான நிவாரணப் பணம் உரிய விவசாயிகளின் கணக்குகளுக்குச் செலவு வைக்கப்படாது ஏனைய நபர்களின் கணக்குகளுக்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே பசளை நிவாரணத்தில் ரூபா 05 மில்லியனுக்கு மேற்பட்ட நிவாரணப் பணம் தாமதித்து செலுத்தியதன் காரணமாக விவசாயிகள் அதிக சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

யூரியா பசளைக்காக அதிக கொடுப்பனவை மேற்கொள்ளல்

மீளாய்வாண்டில் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிகளுக்கு முரணாக ஐக்கிய அமெரிக்க டொலர் 316.20 மில்லியன் செலவு செய்து 72,000 மெட்ரிக் தொன் யூரியா இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. பசளை இறக்குமதி செய்யும் போது யூரியா (பில்ட்) விலைகளின் அடிப்படையில் யூரியா (கிரனியூலா) இறக்குமதி செய்ததன் காரணமாக அரசாங்கத்திற்கு அண்ணளவாக ரூபா 519 மில்லியன் மேலதிகமாகச் செலுத்த வேண்டியிருந்தது.

பசளை விற்பனையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தை நிறுத்தி வைத்திருத்தல்

2016 மார்ச் 09 ஆந் திகதிய 2016/NFS/FCG(1) ஆம் இலக்க விவசாய அமைச்சின் சுற்றறிக்கையின் 6.3 மற்றும் 6.4 ஆம் பந்திகளின் பிரகாரம் நாட்டிலுள்ள அனைத்து கமநல சேவை நிலையங்களும் 2016 பெப்ரவரி 29 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட பசளை நிவாரணமுறைமையின் கீழ் எஞ்சியுள்ள ரூபா 239.27 மில்லியன் பெறுமதியான பசளை இருப்புக்களை 2016 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் விற்பனை செய்து அந்த வருமானத்தை அரசாங்கத்தின் கணக்கிற்கு செலவு வைக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் 93,830 கிலோ கிராம் பசளை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை விற்பனை செய்யப்படாதிருந்ததுடன் பசளை விற்பனையின் மூலம் கிடைத்த ரூபா 207.74 தொகை கமநல சேவை குழுக்களின் கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட பசளைகள்

மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்திற்குச் சொந்தமான கமநல சேவை நிலையங்கள் ரூபா 58.23 மில்லியன் மொத்த பெறுமதியான பசளை இருப்புக்களை கடன் அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கியிருந்தது. 2018 மார்ச் 31 ஆந் திகதி வரை அக்கடனை மீள அறவிட்டு அரசாங்க கணக்கிற்கு செலவு வைத்திருக்கவில்லை.

காபனீரொட்சைட் கரையும் பசளை வழங்குதல்

கரையும் பசளை வழங்குவதற்காக அரசாங்க பெறுகை வழிகாட்டி கோவையிலுள்ள ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்படாது ஒரு தனியார் கம்பனியுடன் மேற்கொண்ட மூன்று ஆண்டு உடன்படிக்கையின் பிரகாரம் வரையறுத்த இலங்கை உரக் கம்பனியால் ஒரு தனியார் கம்பனிக்கு ரூபா 125 மில்லியன் வங்கி பிணை வழங்கப்பட்டிருந்தது. அந்த வங்கிப் பிணையைப் பயன்படுத்தி ரூபா 112.5 மில்லியன் வங்கி மேலதிகப் பற்றைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய கம்பனிக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்ததுடன் வழங்குனர் கம்பனியால் 2018 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் 3 இலட்சம் லீற்றருக்கு மேற்கொள்ளப்பட்ட அளவிலான பசளை வழங்கப்பட்டிருந்தும் அந்த கரையும் பசளையில் 17,200 லீற்றர் மாத்திரம் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

விவசாயத் துறையை நவீனமயப்படுத்தல் செயற்திட்டம்

விவசாயத்துறையை நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்திற்காக உலக வங்கியின் உதவியின் கீழ் ரூபா 9,553.78 மில்லியன் கடன் விவசாய அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. அச் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை 2016 ஒக்தோபர் 15 ஆந் திகதி ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் தாமதத்தின் பின்னர் 2017 மார்ச் 22 ஆந் திகதி அச் செயற்திட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் பொது ரூபா 700 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 81.04 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அச் செலவு பதவியணியினரைச் சேர்த்துக்கொள்ளல், பிராந்திய அலுவலகத்தை நிர்மாணித்தல், தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்தல், ஆலோசனைக் கட்டணங்களைச் செலுத்துதல் என்பவற்றிக்காகச் செலவு செய்யப்பட்டிருந்தும் செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்குரிய ஏனைய வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

பழங்கள் அறுவடைக்குப் பிந்திய செயற்திட்டம்

தொடக்க ஆய்வு மற்றும் முறையான சாத்திய வள ஆய்வினை மேற்கொள்ளாது ஐ.அ.டொலர் 644,693 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட பழங்கள் செயன்முறைப்படுத்தும் நிலையங்களின் செயற்பாடுகள் 2018 மே 10 அந் திகதி வரை செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது.

கிருமி நாசினி கட்டுப்பாட்டுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை அமுல்ப்படுத்தாமை

1980 இன் 33 ஆம் இலக்க கிருமிநாசினி கட்டுப்பாட்டு சட்டம் அங்கீகரிக்கப்பட்டு 2017 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை 37 ஆண்டுகளை அண்மித்த காலமம் கடந்திருந்தும் இலங்கையின் விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்ற செயற்படுகின்ற 107 கிருமி நாசினிகளில் 47 கிருமி நாசினிகள் அறுவடைக்கு முன்னைய காலம் மற்றும் உச்ச அளவான எஞ்சியிருக்க வேண்டிய காலம் என்பன தொடர்பான எல்லை நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை.

செயல் நடவடிக்கைகள் திட்டத்துடனான இணக்கமின்மைகள்

கமநல சேவை நிலையங்கள், புதிய நிர்மாணங்கள், திருத்தங்கள், மாவட்ட அலுவலகங்களைத் திருத்தம் செய்தல் என்பவற்றின் கீழ் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 23.7

மில்லியன் தொகையான 10 செயற்திட்டங்களை அமுலப்படுத்தியிருந்ததுடன் திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 27 மில்லியன் பெறுமதியான 11 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

சிறிய குளங்களைப் புனர் நிர்மாணித்தல், மறுசீரமைத்தல், சிறிய நீர்ப்பாசனம் மற்றும் கைவிடப்பட்ட நெற் காணிகளை அபிவிருத்தி செய்தல்.

இது சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

- நிகழ்ச்சித்திட்டத்தின் 4 நடவடிக்கைகளின் கீழ் ரூபா 918 மில்லியன் பெறுமதியான 558 குளங்களில் 247 குளங்களின் வேலைகள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1184 செயற்திட்டங்களுக்காக ரூபா 627 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அச் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

- நிகழ்ச்சித்திட்டத்தின் 4 நடவடிக்கைகளின் கீழ் 500 குளக்கட்டுக்களுக்காக ரூபா 593 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் 235 குளக்கட்டுக்களின் வேலைகள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. 437 செயற்திட்டங்களுக்காக ரூபா 164.09 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அச் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

- விவசாய அமைச்சின் மூலம் மாத்தளை மாவட்டத்திற்கு சிறிய குளங்களின் புனர் நிர்மாண நடவடிக்கைகளுக்கான 11 வேலைகளக்காக ரூபா 23 மில்லியன் மொத்த நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அச் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கவைக்கப்பட்டிருக்கவில்லை.

கொள்வனவு செய்யப்பட்ட கணனிகள் பயன்படுத்தப்படாது காணப்படல்.

விவசாய அமைச்சினால் கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு கணனிகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 30 மில்லியன் 2017 திசெம்பர் மாதத்தின் போது வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் கொள்வனவு செய்யப்பட்ட 200 கணனிகளில் 30 கணனிகள் 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதி வரை செயற்படும் நிலையில் இல்லாதிருந்ததுடன் எஞ்சியுள்ள 170 கணனிகள் களஞ்சியத்தில் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

வருமான இலக்கை அடைந்து கொள்ளாமை

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையால் மீளாய்வாண்டில் அனைத்து காப்புறுதி முறைமைகளிலிருந்தும் ரூபா 210 மில்லியனை உழைப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் போது ரூபா 156.47 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க இலக்கிடப்பட்ட வருமானத்தில் 25 சதவீதம் அல்லது ரூபா 13.53 மில்லியனால் வருமான இலக்கு அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

விவசாயிகளை காப்புறுதி முறைமைக்கு ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை.

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையால் கடற்றொழில் மற்றும் சேனைப் பயிர் உற்பத்திக்கு காப்புறுதி ஆரம்பிக்கப்படாமை, போட்டித்தன்மையான புதிய காப்புறுதி முறைமைகளின் தேவைப்பாட்டை இனங்கண்டு அமுல்படுத்தப்படாமை மற்றும் வணிக வங்கிகள் விவசாயிகளுக்கு வழங்குகின்ற கடன் முறைமைகளை ஆய்வு செய்து மிகவும் ஆக்கபூர்வமான காப்புறுதி முறைமையை அறிமுகப்படுத்தி விவசாயிகளை காப்புறுதி முறைமைக்கு ஊக்குவிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அறிமுகப்படுத்திய காப்புறுதித் திட்டத்தை வியாபிக்கச் செய்தல்

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையால் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களின் கீழ் காலநிலை மாற்றங்கள் மற்றும் அதன் தாக்கங்களுக்கு எதிராக விரைவாக நடைமுறைப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட இலக்காக தூர நோக்கை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதித் திட்டத்தை 5 மாவட்டங்களில் அறிமுகப்படுத்துவதன் மூலம் இழப்பீட்டுக் கொடுப்பனவை ஆக்கபூர்வமாக்குவதற்குத் திட்டமிடப்பட்டு 2016 மே 05 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2019 மே 04 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அது வவுனியா மாவட்டத்தில் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

பல விவசாயிகளின் காப்புறுதி இழப்பீட்டை ஒரு விவசாயிகளுக்குச் செலுத்துதல்.

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையால் குருநாகல் மாவட்டத்தில் இடைப்பயிர் பயிரிடப்பட்டு அழிவடைந்த 32 விவசாயிகளுக்குச் சேர வேண்டிய ரூபா 276,800 மொத்த தொகையான காப்புறுதி இழப்பீடு ஒரு விவசாயின் வங்கி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் 2018 யூன் 30 ஆந் திகதி வரை அது தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக இடம் பெற்ற கொடுப்பனவுகள்

2017 ஏப்ரல் 21 ஆந் திகதி 4/3/மு/6 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் தலைவரின் கடிதத்தின் பிரகாரம் இழப்பீட்டுக் கொடுப்பனவைச் செலுத்துகையில் தேசிய அடையாள அட்டை இலக்கம் இரட்டிப்புச் செய்யாத வகையில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும் எனத் தெரியப்படுத்தியிருந்தும் அந்த ஒழுங்கு விதிகளுக்கு முரணாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 07 மாவட்டங்களில் ஒரே அடையாள அட்டை இலக்கத்தையும் ஒரே பெயரையும் குறிப்பிட்டு 364 விவசாயிகளுக்கு ரூபா 3.15 மில்லியன் மொத்த தொகையும் 5 மாவட்டங்களில் அடையாள அட்டை இலக்கங்களில் சிறிய மாற்றங்களுடன் ஒரே பெயரைக் குறிப்பிட்டு 50 விவசாயிகளுக்கு ரூபா 432,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது என்பது வெளிப்படுத்தப்பட்டது.

வங்கியினால் நிராகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 9587 விவசாயிகளுக்கு ரூபா 82.93 மில்லியனைச் செலுத்துவதற்காக அப்பணம் வங்கிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. எனினும், வங்கியினால் விவசாயிகளின் அடையாள அட்டை இலக்கம், பெயர் என்பன வேறுபட்டதன் காரணமாக கொடுப்பனவு நிராகரிக்கப்பட்டிருந்தது. 2018 யூன் 30 ஆந் திகதி வரை அவற்றில் 6461

விவசாயிகளுக்குரிய ரூபா 57.37 மில்லியன் பணத்தை அந்த விவசாயிகளுக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டம்

1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்ட சட்டத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்ட இந்த நிதியத்திற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பங்களிப்பை வழங்கி வந்த விவசாயிகளின் எண்ணிக்கை 148,085 ஆக இருந்தது. இத் திட்டம் சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

- 2012 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் அண்டு வரை திட்டத்திற்கு அங்கத்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- 2014 மார்ச் 14 ஆந் திகதிய 1853/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட புதிய பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட வேண்டியிருந்தும் ஓய்வூதியக் கொடுப்பனவு புதிய திட்டத்தின் பிரகாரம் இடம் பெற்று பங்களிப்பு பணத்தை அறவீடு செய்தல் பழைய முறைமையின் கீழ் இடம் பெற்றிருந்தது.

- 2014 சனவரி மாதத்திலிருந்து 2017 திசெம்பர் மாதம் வரை ரூபா 7,664 மில்லியன் மொத்த தொகையான ஓய்வூதியக் கொடுப்பனவு இடம் பெற்றிருந்ததுடன் அதற்காக ரூபா 92.4 மில்லியன் மாத்திரம் பங்களிப்பு பணமாக சேகரிக்கப்பட்டிருந்தது. நிதியத்தின் நிதி சிக்கல் நிலைமையின் அடிப்படையில் மாதாந்தம் ஓய்வூதியத்தை செலுத்துவதற்காக திறைசேரியிடமிருந்து பணத்தை பெற்றுக் கொள்ளும் நிலைமைக்கு சபை மாறியிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 2,520 மில்லியன் அவ்வாறு திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்டம்.

வயது முதிர்ந்த காலத்தில் அல்லது இன்னல்கள் ஏற்படும் போது கடற்றொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பை வழங்குதல், கடற்றொழிலாளர் மரணமடைகையில் அக் கடற்றொழிலாளரில் தங்கி வாழ்பவர்களுக்கு நிவாரணம் வழங்குதல், வாழ் வாதாரத்தில் தொடர்ச்சியாக ஈடுபடுத்துவதற்காக கடற்றொழிலாளர்களை ஊக்குவித்தல், இளைஞர்களை கடற்றொழிலுக்கு அனுப்பிவைத்தல், கடற்றொழிலாளர்களுக்கு மத்தியில் சேமிக்கும் பழக்கத்தை உருவாக்குதல், சிக்கனத்தை மேம்படுத்துதல், ஆகிய குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் வகையில் கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டம் தோற்றுவிக்கப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்படுத்தப்பட்டன.

- 2014 – 2016 காலப்பகுதிக்கான கூட்டினைந்த திட்டத்தை தயாரிக்கும் போது 2014 ஆம் ஆண்டின் பின்னர் நிதியம் தேய்வடையும் நிலைமை ஆரம்பித்து 2020 ஆம் ஆண்டின் போது அது பூச்சிய நிலைக்கு மாற்றமடையலாம் என இனங்காணப்பட்டு 03 ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும் அந்த நிலைமைக்கான பரிகாரமாக எதுவித புனரமைப்பு நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு திட்டத்திற்கு முடியாதிருந்தது.

- தமது வாழ்வாதாரத்தில் தொடர்ச்சியாக ஈடுபடுவதற்காக கடற்றொழிலாளர்களை ஊக்குவித்தல் இளைஞர்களை கடற்றொழிலுக்கு அனுப்பி வைத்தல்,

கடற்றொழிலாளர்களுக்கு மத்தியில் சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்துதல், சிக்கனத்தை மேம்படுத்துதல், ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றுவது சம்பந்தமாக திட்டம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

- மீளாய்வாண்டின் போது பங்களிப்பாளர்களிடமிருந்து ரூபா 3.68 மில்லியன் பங்களிப்பு பணத்தை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் உள்ளபடியாக பங்களிப்பு பணத்தை பெற்றுக் கொள்ளுதல் ரூபா 920,022 மாத்திரமாக இருந்தது.

விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

2002 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை விஞ்ஞானபனத்தின் மூலம் விரிவுபடுத்தப்பட்ட கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் விவசாயிகளின் நலன்புரியை மேம்படுத்துதல், சிறிய விவசாயிகளுக்கு விவசாயக் கடன் வசதிகள், சந்தைக் கடன் வசதிகள் வழங்குதல், விவசாய உள்ளீடுகளை வழங்குதல், விழிப்புனர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், விசேட கமத்தொழில் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல், பயிர் மற்றும் கால் நடை உற்பத்தி நடைமுறைகளை உற்பத்தி செயன் முறைக்காக அனுசரணை வழங்குதல் ஆகிய குறிக்கோள்களுக்காக நிதியம் தோற்றுவிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்படுகின்றது. இவை சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

- நிதியத்தின் ஒட்டு மொத்த வருமானத்தில் 98 சதவீதம் அல்லது ரூபா 100.75 மில்லியன் முதலீட்டின் மூலம் உழைத்த வட்டி வருமானமாக உள்ளதுடன் அவற்றில் 21 சதவீதம் அல்லது ரூபா 21.61 மில்லியன் மாத்திரம் அபிவிருத்திச் செலவுகளுக்காக செலவு செய்யப்பட்டிருந்தது.
- கொவிசெத லொத்தரின் விற்பனை வருமானத்தில் 10 சதவீதம் நிதியத்தின் பிரதான வருமான மூலமாக ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் 2008 ஆம் ஆண்டின் பின்னர் அப்பணம் பொதுத் திறைசேரியிலிருந்து விடுவிக்கப்பட்டு விவசாயிகளுக்கு வீடுகள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 2,797.19 மீதி விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக திறைசேரியில் காணப்படுகின்றதா நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்களின் மூலம் காட்டப்பட்டிருந்தது.
- மீளாய்வாண்டில் திருத்திய பாதீட்டின் மூலம் 51 செயற்திட்டங்களுக்காக ரூபா 538.21 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அவற்றிலிருந்து 38 செயற்திட்டங்கள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 166.25 மில்லியன் பணம் விடுவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 13 செயற்திட்டங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் ரூபா 187.97 மில்லியன் எதுவித நடவடிக்கைக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.
- காபனீரொட்சைட் ரெட் லேடி பப்பாசி பயிர் செய்கைக்காக மொறகொல்லாகம விவசாயி ஒருவருக்கு ரூபா ஒரு மில்லியன் பிணையாளர்களிடமிருந்து முறையான பிணையை பெற்றுக்கொள்ளாது செலுத்தப்பட்டிருந்தது. வெளிக்கள பயண அறிக்கைகளில் ரூபா 600,000 தொகையான தொடக்க கடன் தவணைப் பணத்தில் செயல் முன்னேற்றம் இல்லை என அறிக்கையிடப்பட்டிருந்தும் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாது இரண்டாவது கடன் தவணைப்பணமும் விடுவிக்கப்பட்டிருந்தது. 2018 யூன் 06 ஆந் திகதி வரை கடன் தவணைப் பணத்தை அறவீடு செய்வதற்கு அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதிருந்தது

அரசாங்க சேவைகளிற்கான ஓய்வூதிய நலன்

அரச சேவை ஓய்வூதியக்காரர்களுக்கும் அவர்களது நலனாளிகளுக்காகவும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிலைபேறான முகாமைத்துவ முறைமைளைப் பயன்படுத்துவதன் மூலமும், தனியார் மற்றும் அரச துறைகளுடன் இணைந்து அவர்களில் உயர்ந்த சேவை பெறுனர் மற்றும் சேவைப் வழங்குனர்களின் திருப்தியை உறுதிப்படுத்துவதனூடாக சட்டரீதியான நலன்களை கொடுப்பதன் மூலம் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக திருப்திகரமான ஓய்வூதிய சமூகமொன்றை உருவாக்குதல் ஓய்வூதியத் திணைக்களத்தின் நோக்கமும் செயற்பணியாகும். 1934 பெப்ரவரி 05 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்ட ஓய்வூதிய சட்டவிதிக்கோவையின் கீழ் ஓய்வூதியக் கொடுப்பனவும் 1898 இன் 01 ஆம் இலக்க விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதிய கட்டளைச் சட்டம் மற்றும் 1983 இன் 24 ஆம் இலக்க விதவைகள் தபுதாரரகள் ஓய்வூதிய சட்டத்தின் கீழ் விதவை தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவும் 1942 இன் 18 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அரச சேவைகள் சேமலாப நிதிய நிர்வாகம் மற்றும் கொடுப்பனவு செயற்பாடு ஒழுங்குபடுத்தல் ஓய்வூதிய திணைக்களத்தின் பிரதான பொறுப்பொன்றாக இருந்தது.

ஓய்வூதிய திணைக்களத்தினால் அரச சேவையில் ஈடுபட்டுள்ள ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சில பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

ஓய்வூதியக் கொடுப்பனவு பொருளாதாரத்திற்கான தாக்கம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதியத் திணைக்களத்தினால் செயற்பாட்டிலுள்ள 599,522 ஓய்வூதியம் பெறுவோருக்கு நலன்கள் வழங்கப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டில் ரூபா 209,533 மில்லியன் ஓய்வூதியமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அது அரசாங்கத்தின் மொத்த மீண்டெழும் செலவினத்தின் 10.8 சதவீதமாக இருந்ததுடன் அது அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் 11.4 சதவீதமாக இருந்தது.

2011 ஆம் ஆண்டின் போது 497,209 ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ஓய்வூதியம் பெறுவோர் 599,522 பேர் வரை அதிகரித்திருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது ஓய்வூதியம் பெற்றோர் எண்ணிக்கை 102,313 பேர் அதாவது 21 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2011 ஆம் ஆண்டின் ஓய்வூதிய செலவினம் ரூபா 113,278 மில்லியன் முதல் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை அது 209,533 மில்லியன் அதாவது 84 சதவீத்தினால் அதிகரித்திருந்தது.

அரச சேவையின் விரிவாக்கம், ஓய்வுபெறுவதில் புதிய ஏற்பாடுகள், ஓய்வூதியம் பெறுவோருக்கு வாழ்க்கை செலவினக் கொடுப்பனவு, அரச சேவையின் சம்பள அதிகரிப்பு மற்றும் அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணிப்பிடல், விதவைகளின் எண்ணிக்கை அதிகரித்தல், ஓய்வூதிய முரண்படுகளை நீக்குதல், ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்தல், போன்ற காரணங்களினால் ஓய்வூதிய செலவினம் தொடர்ந்து அதிகரித்திருந்தது. முன்னைய 6 ஆண்டுகள் மற்றும் மீளாய்வாண்டின் ஓய்வூதிய சமூகத்தின் அதிகரிப்பு மற்றும் மொத்த ஓய்வூதிய செலவின அதிகரிப்பு அட்டவணை 42 இல் தரப்பட்டுள்ளது.



வரைபு 42….. ஓய்வூதியாளர்கள் மற்றும் ஓய்வீதியச் செலவீனங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு மூலம் …….. வருடாந்த பாதீட்டு மதிப்பீடு, ஓய்வீதிய தரவுத்தளம் , புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் கையேடு

ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவிற்காக வங்கி கடன் பெற்றுக்கொள்ளல்

2014 ஏப்ரல் மாதம் முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 90,490 ஓய்வூதியம் பெறுவோருக்கு ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவு செய்வதற்கு 18 வருடங்கள் கொடுப்பனவு அடிப்படையில் மூன்று அரச வங்கிகள் மூலம் ஓய்வூதியத் திணைக்களத்தினால் ரூபா 50,592 மில்லியன் கடன்தொகையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு பெற்றுக் கொண்ட கடன் தொகையில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 45,792 ஆக இருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது அவ்வாறு பெற்றுக் கொண்ட கடனுக்கு வட்டியாக ரூபா 4,116 மில்லியன் மற்றும் தவனைப்பணமாக ரூபா 2,283 மில்லியனாக மொத்தம் ரூபா 6,399 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டு முதல் ஓய்வூதியப் பணிக்கொடை கொடுப்பனவிற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகையின் அதிகரிப்பு வரைபு 43 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



வரைபு 43….. ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவிற்காக அரச வங்கிகளில் பெற்றுக்கொண்ட கடன்
மூலம் …….. ஓய்வூதிய திணைக்களம்

நிதியத்தை ஏற்படுத்தியதன் நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை

ஓய்வூதிய திணைக்களத்தினால் 05 ஓய்வூதிய நிதியங்கள் நிர்வகிக்கப்படுவதுடன் அதில் அரச சேவை சேமலாப நிதியம் மாத்திரம் செயற்பாட்டு மட்டத்தில் காணப்பட்டது. 1993 ஆம் ஆண்டில் மாகாண அரச சேவை ஸ்தாபிக்கப்பட்டதுடன் மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு உரித்தான ஓய்வூதியம் மற்றும் விதவை மற்றும் அநாதை ஓய்வூதிய நலன்கள் உரித்தாகின. இதனால் 1993 செப்தம்பர் 03 ஆந் திகதி முதல் மீளாய்வாண்டில் இறுதி அளவிலும் உள்ளூராட்சி ஓய்வூதியம், உள்ளூராட்சி மன்ற சேவை விதவை மற்றும் அநாதை ஓய்வூதியம் மற்றும் உள்ளூராட்சி சேவைத் தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்காக புதிய அங்கத்தவர்கள் அதிகரிப்பொன்று இடம் பெற்றிருக்கவில்லை. அவ்வாறு புதிய அங்கத்துவப் பணக் கிடைக்காததன் பேரில் கொடுப்பனவு செய்யப்பட்ட பணம் நிதியங்களில் காணப்படாமை காரணமாக ஓய்வூதிய திணைக்கள செலவினத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்டிருந்தது. இதனால் இதுவரை அந்நிதியங்களை ஏற்படுத்தியதன் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய சட்ட அகட்டளையில் 04 இன் பிரகாரம் ஆசிரியர் விதவைகள் அநாதை பங்களிப்புத் தொகை மூலம் நிதியமொன்றை கட்டியெழுப்பி அதன் மூலம் ஆசிரியர் விதவைகள் அநாதை ஓய்வூதியம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் பங்களிப்பு தொகையை சேகரித்தல் மற்றும் செலவினங்காக நிதியத்திற்காக வங்கி கணக்கொன்று பேணப்படாமல் இருந்ததுடன் அவ்வாறு கிடைத்த பங்களிப்பு தொகை ஓய்வூதிய திணைக்களத்தினால் விதவை அநாதைகள் பங்களிப்புத் தொகை சேகரிப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அந்நிதியத்தின் செலவினம் ஓய்வூதிய திணைக்கள செலவினத் தலைப்பின் கீழ் செலவு செய்யப்படுவதால் அந்நிதியம் தாபிக்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

ஓய்வூதியம் மேலதிகமாகச் செலுத்துதல்

மீளாய்வாண்டின் இறுதி வரையில் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் அறவிடப்படாத ஓய்வூதியத்தின் கூட்டுத்தொகை ரூபா 551.94 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவ்வாறு அறவிடப்பட்ட 5 ஆண்டுகளுக்கு குறைவாக இருந்து வரும் ரூபா 490.83 மில்லியனும் 5 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரையான காலமாக இருந்து வரும் ரூபா 51.17 மில்லியனும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 9.94 மில்லியனாக இருந்தது.

சேமிப்பு பாஸ் புத்தகங்கள் பாதுகாவலருக்கு கையளிக்காமை

பாஸ் புத்தகங்கள் வழங்கும் பழைய நடைமுறையில் காணப்பட்ட பலவினங்கள் காரணமாக 2015 செப்தம்பர் 14 ஆந் திகதிய 09/2015 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை மூலம் பராயமடையாதவர்களுக்கு நலன் உரித்தான ஆரம்ப சந்தர்ப்பத்தில் பராயமடையாதவர்களின் பாஸ் புத்தகங்கள் அவர்களின் பாதுகாவலர்களுக்கு கையளிக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் பழைய நடைமுறையின் கீழ் காணப்பட்ட பாஸ்புத்தகங்கள் மற்றும் நிலையான வைப்புச் சான்றிதழ் பராயமடையாதவரின் பாதுகாவலர்களுக்கு வழங்குவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று ஓய்வூதிய திணைக்களத்தில் மீளாய்வாண்டின் இறுதி வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் ரூபா 3.17 மில்லியன் கூட்டுப்பெறுமதியான 778 பராயமடையாதவர்களின் வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் ரூபா 192,629 தொகையான 02 சேமிப்புக் கணக்கு புத்தகங்கள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பராயமடையாதவரின் பாதுகாவலர்களுக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

மாகாண சபைகளுக்குரிய கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு

மாகாண சபைகளால் சேகரிக்கப்பட்ட வருமானமும் செலவீனமும்

மீளாய்வாண்டில் 09 மாகாணசபைகளால் ரூபா 269,572 வருமானம் சேகரிக்கப்பட்டதுடன் அந்த வருமானமானது 09 மாகாண சபைகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 182,217 தொகையான அரச மானியங்களிவ் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, மாகாண சபையால் உழைக்கப்பட்ட மொத்த வருமானத்தின் 67.59 சதவீதம் அரசாங்க மானியத்தில் உள்ளடங்கியிருந்தது. மீளாய்வாண்டில் ஒவ்வொரு மாகாண சபையால் சேகரிக்கப்பட்ட அரச மானியங்களானது ரூபா 5,163 மில்லியனிலிருந்து ரூபா 28,772 மில்லியன் வரையிலான வீச்சிலிருந்தது. ஒவ்வொரு மாகாண சபையாலும் சேகரிக்கப்பட்ட அரச மானியங்களின் விபரம் அட்டவணை 44 இல் தரப்பட்டுள்ளது.



படம் 44 - ஒவ்வொரு மாகாண சபையாலும் சேகரிக்கப்பட்ட அரச மானியங்கள்

மூலம்: மாகாண சபைகளின் நிதிக்கூற்றுக்கள்

மீளாய்வாண்டின் இறுதியளவில் 09 மாகணசபைகளாலும் ரூபா 290,431 மில்லியன் மொத்தத்தொகை செலவழிக்கப்பட்டது. அதற்கிணங்க, 09 மாகாண சபைகளாலும் சேகரிக்கப்பட்ட வருமானத்தை விட ரூபா 20,859 மில்லியனால் அதிகரித்து செலவீனம் ஏற்பட்டது. மாகாண சபைகளால் சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் செலவீனத்தின் பிரகாரம் 09 மாகாண சபைகளால் செலவீனதின் பின்னர் சேகரிக்கப்பட்ட வருமானத்தின் சதவீதம் அறிக்கையிடப்பட்ட அதேநேரம் 05 மாகாண சபைகளால் ஏற்படுத்தப்பட்ட செலவீனம் சேகரிக்கப்பட்ட வருமானத்தைவிட அதிகரித்திருந்தது. விபரங்கள் படம் 45 இல் தரப்பட்டுள்ளன.



படம் 46- 09 மாகாண சபைகளால் செலவீனதின் பின்னர் சேகரிக்கப்பட்ட வருமானம் / (சேமிப்பு)

மூலம்: மாகாண சபைகளின் நிதிக்கூற்றுக்கள்

09 மாகாண சபைகளாலும் சேகரிக்கப்பட்ட வருமானத்தின் விபரங்கள் மற்றும் செலவீனம் அட்டவணை 31 இல் தரப்பட்டுள்ளது

கிழக்கு	62,584	62,181	403
மத்திய	12,569	35,519	(22,950)
தெற்கு	34,970	34,548	422
வடக்கு	26,713	24,044	2,669
வட மேல்	36,863	35,456	1,407
வட மத்திய	22,827	23,083	(256)
ஊவா	22,944	23,460	(516)
சப்ரகமுவ	27,821	28,931	(1,100)
கிழக்கு	22,281	23,209	(928)
மொத்தம்	**269,572**	**290,431**	**(20,859)**

அட்டவணை 31 -09 மாகாண சபைகளாலும் சேகரிக்கப்பட்ட வருமானத்தின் விபரங்கள

மூலம்: மாகாண சபைகளின் நிதிக்கூற்றுக்கள்

மேல் மாகாண சபை

மேல் மாகாண சபையால் 2017 ஆம் ஆண்டிற்காக அரசாங்க மானியங்களிலிருந்தான ரூபா 26,156 மில்லியன் தொகை மற்றும் உள்ளக மார்க்கங்களிலிருந்தான ரூபா 42,979 மில்லியன் தொகை உள்ளடங்கலாக ரூபா 69,135 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டிற்காக மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 54,387 மில்லியன் மற்றும் மூலதன செலவினத்திற்கான ரூபா 14,748 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 69,135 மில்லியன் கூட்டுமொத்த தொகை பயன்படுத்தப்படுவதற்கு மதிப்பிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க, 2017 ஆம் ஆண்டின் போது அரசாங்க மானியங்களிலிருந்தான ரூபா 18,085 மில்லியன் மற்றும் உள்ளக மார்க்கங்களிலிருந்தான ரூபா 44,499 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 62,584 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 52,652 மில்லியன் மற்றும் மூலதன செலவினத்திற்கான ரூபா 9,530 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 62,181 மில்லியன் கூட்டுமொத்த தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

வருமான முகாமைத்துவம்

மாகாண காணி ஆணையாளரிற்கு அறவிடப்பட வேண்டியிருந்த 04 பிரதேச செயலகங்களிற்குரிய காணிகளிற்கான ரூபா 17 மில்லியன் தொகையான நீண்ட காலக் குத்தகை அறவிடப்பட்டிருக்கவில்லை. வத்தளை பிரதேச செயலகத்திற்குச்

சொந்தமான 4 ஏக்கர்கள் 1 றூட் 18 பேர்ச்கள் பரப்பளவான அரசாங்க காணித்துண்டு விவசாய நோக்கத்திற்காக 1997 யூலை 31 இல் தனியார் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இணங்கப்பட்ட வருடாந்த குத்தகை வாடகை ரூபா 140,000 ஆகும். அவ் வாடகையில் ரூபா 6.8 மில்லியன் தொகை 1995 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்பட்டது.

இக் காணியானது வணிக நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாக மாகாண கணக்குகள் குழு உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு 2002 யூன் மாதத்தின் போது பிரதேச செயலாளரை நெறிப்படுத்தியிருந்த போதிலும் அந்நெறிப்படுத்தல்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2005 ஆம் ஆண்டின் போது இந்தக் காணியில் 550 பேர்ச்கள் 10 ஆண்டுகளிற்காக உப குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் காணியின் மிகுதி 148 பேர்ச்களில் 03 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் குடியிருப்பதற்கான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அவ் இடப் பிரச்சனையை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

04 பிரதேச செயலகங்களால் மீளாய்வாண்டின் போது ரூபா 6.42 மில்லியன் செலவிட்டு பயனாளிகளிற்கு பகிர்ந்தளிப்பதற்காக 4,801 செயற்திட்டப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவை முறையாக விநியோகிக்கப்படாது விளைவற்றிருந்தன.

ஹொரண ஆதார வைத்தியசாலையின் சமையலறைக்காக ரூபா 3.30 மில்லியன் பெறுமதியான சமையலறை உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 943,800 பெறுமதியான உபகரணங்கள் சமையலறைக்கு அவசியமற்றவையாக காணப்பட்டது.

ரூபா 54.7 மில்லியன் பெறுமதியான இருபத்தெட்டு மின்பிறப்பாக்கிகள் களுத்துறை மாவட்டத்தின் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களிற்காக 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதில் 23 மின்பிறப்பாக்கிகளிற்காக ரூபா 2.6 மில்லியன் தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவ் இயந்திரங்கள்

பயன்படுத்தப்படாது விளைவற்றிருந்ததுடன் அவற்றை களஞ்சியப்படுத்துவதற்கு பொருத்தமான இடம் காணப்படவில்லை.

முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

மாகாண கல்வி அமைச்சினால் கொழும்பு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிற்கு தேவையான விளையாட்டு உபகரணங்களை வழங்குவதற்காக ரூபா 3 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அவ் விளையாட்டு உபகரணங்கள் 2018 சனவரி மாதம் வரையிலும் களஞ்சியங்களிற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

ஹொரண வலயக் கல்வி அலுவலகத்தின் கீழுள்ள 22 பாடசாலைகளின் 22 கட்டிடங்கள் நீண்ட காலமாக அபாய நிலைமையில் காணப்படுகின்றதென 2017 ஏப்ரல் மாதத்தின் போது மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

வெளிப்படையான மோசடிகள்

2011 பெப்ரவரி 10 இல் அல்லது அதற்கு அண்மித்த திகதி தொடக்கம் 2013 யூலை மாதம் அல்லது அதற்கு அண்மித்த காலப்பகுதி வரை மினுவன்கொட பிரதேச செயலகத்திற்கு அண்ணளவாக ரூபா ஒரு மில்லியன் வழங்கப்பட்ட அரச மானியக் கணக்கில் நிறுத்தி வைக்கப்படாது தவறான பாவனைக்காக ஈடுபடுத்தப்பட்டமையால் நிதி மோசடி மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2013 ஆம் ஆண்டு தொடக்கம் வழக்குத் தொடரப்பட்டிருந்த போதிலும் 2018 பெப்ரவரி மாதம் வரையிலும் நீதிமன்ற நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

மஹர பிரதேச செயலகத்தின் மாகாண சபை வருமானம் ரூபா 900,000 2014 யூலை மாதத்தின் போது தவறவிடப்பட்டிருந்த போதிலும் 2018 மே மாதம் வரையிலும் பொறுப்பாகவுள்ள தரப்பினர் இனம்கண்டு கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

மதுகம வலயத்தின் 03 பாடசாலைகள் ரூபா 11.9 மில்லியன் பெறுமதியான கட்டிட நிர்மாணத்தை ஆரம்பித்து சில வருடங்கள் கடந்திருந்த போதிலும் 2018 மே மாதம் வரையிலும் அவ் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

தாமதமான செயற்திட்டங்கள்

நிட்டம்புவ சங்கபோதி வித்தியாலயத்தில் போதியளவு இடவசதிகள் காணப்படாதமையால் 2014 ஆம் ஆண்டில் மூன்று மாடிக் கட்டிடத்திற்காக அத்திவாரம் இடப்பட்டு நிலச் சரிவுகளை மட்டப்படுத்துவதற்கு கொங்கிறீட் தூண்கள் அமைக்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையால் கட்டிடத்தின் கட்டமைப்பு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பழுதடைந்திருந்தது.

மத்திய மாகாண சபை

மத்திய மாகாண சபையால் 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 8,136 மில்லியன் அரசாங்க மானியத்தினாலும், உள்ளக மார்க்கமாக ரூபா 7,454 மில்லியனுமாக ரூபா 15,590 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் மீண்டெழும் செலவினமாக ரூபா 30,836 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினமாக ரூபா 8,136 மில்லியனாக மொத்தம் ரூபா 38,972 மில்லியனைப் பயன்படுத்துவதற்கு மதிப்பிடப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 5,163 மில்லியனும் உள்ளக மார்க்கமாக ரூபா 7,406 மில்லியனுமாக ரூபா 12,569 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினமாக ரூபா 30,355 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினமாக ரூபா 5,164 மில்லியனுமாக ரூபா 35,519 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

மத்திய மாகாண சபைக்குரிய 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

மாகாண சபையின் நிதியங்களைப் பயன்படுத்தாமை

மத்திய மாகாண சபையினால் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 1,362.73 மல்லியன் மாகாண அபிவிருத்திக்காக பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யாமல் இந்தப் பணத்தை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 145.40 மில்லியான வட்டி வருமானம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. மாகாண சபையினால் பேணிச் செல்லப்படும் இரண்டு நடைமுறைக் கணக்குகளில் 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் ரூபா 1,718.94 மில்லியனான மீதியொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இலங்கை குடியரசினால் வங்கி மேலதிகப் பற்று பெற்றுக் கொள்ளப்பட்டு மாகாண சபைக்கு பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக செலவிடப்படும் நிதியளித்தல் கிரயத்தை விட குறைந்த நலனொன்றுடன் கூடிய நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதும் தேறிய வகையில் அரசிற்கு மேலதிக நிதி கிரயமொன்றை செலவிடுவதற்கு நேர்ந்தமை அவதானிக்கப்பட்டது.

உயிர் வாயு அலகு செய்யப்படாமல் காணப்பட்டமை

முறையான கழிவுப்பொருள் முகாமைத்துவம் வாயு மற்றும் பசளை என்பவற்றைப் பயன்பாட்டிற்கு எடுக்கும் நோக்கில் மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி மற்றும் எரிசக்தி மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சினால் 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை 04 ஆண்டு காலப்பகுதியில் 10 கனமீற்றர் முதல் 100 கனமீற்றர் வரையான இயலளவிலான ரூபா 6.37 மில்லியன் கிரயத்திலான 05 உயிர் வாயு அலகுகள் 05 இடங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அதில் ரூபா 2.27 மில்லியன் பெறுமதியான 04 உயிர் வாயு அலகுகள் இயங்காமல் காணப்பட்டதுடன் ஒரு உயிர் வாயு அலகிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நலன்களை அடைந்து கொள்ள முடியாமல் இருந்தது.

இரத்துச் செய்யப்படும் நிலைமையில் காணப்படும் செயற்திட்டங்கள்

மாகாண நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் சமாதானம், உள்ளூராட்சி மன்றங்கள் மாகாண நிர்வாகம், மனித வளங்கள், கல்வி மற்றும் கலாசார அலுவல்கள், சுற்றுலா, காணி, வர்த்தக உணவு வழங்கல் விநியோக நடவடிக்கைகள் மற்றும் முதலீட்டு கூட்டிணைப்பு, ஏனைய அமைச்சின் கீழ் எடுக்கப்படாத விடயங்கள் தொடர்பான அமைச்சினால் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 337.53 கிரயத்திலான 21 ஒப்பந்தங்கள் ஒரு ஒப்பந்தக்காரருக்கு அளிப்பு செய்யப்பட்டிருந்தன. அதில் ஒரு செயற்திட்டம் தவிர ஏனைய 13 செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்படும் நிலைமையிலும் 07 செயற்திட்டங்கள் பலவீனமான நிலைமையிலும் காணப்பட்டன. அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் ஒப்பந்த நிறுவனமொன்றிடமிருந்து அரசிற்கு அறவிடப்பட வேண்டிய முற்பணம் மற்றும் செயலாற்றல் பிணைகளின் மொத்த பெறுமதி ரூபா 49.85 மில்லியனாக இருந்தன.

பாடசாலை மாணவர்களிடமிருந்து முறையற்ற விதத்தில் பணம் சேகரித்தல்

2015 சனவரி 09 ஆந் திகதிய 05/2015 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு முரணாக மமா / தெல்தெனிய பண்டாரநாயக்க பாடசாலையின் தொழில்நுட்ப ஆய்வு கூடத்தின் மின்சார செலவினத்தை தீர்ப்பதற்காக ஒரு மாணவரிடமிருந்து ரூபா 500 வீதம் 647 மாணவர்களிடமிருந்து 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 221,000 மற்றும் ரூபா 102,500 என மொத்தம் ரூபா 323,500 சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அத்தொகை 2017 ஆம் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட ரூபா 102,500 தொகை 2017 செப்தெம்பர் 25 ஆந் திகதி வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டின் சேகரிக்கப்பட்ட ரூபா 221,000 தொகை கணக்காய்வு செய்யப்பட்ட திகதியின் பின்னர் 2017 ஒக்தோபர் 03 ஆந் திகதி வங்கியிலிடப்பட்டிருந்தது.

பாடசாலை செல்லாத பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புதல்

2016 ஏப்ரல் 20 ஆந் திகதிய 1963/30 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் கல்வி அமைச்சரால் 2015 இன் 1 ஆம் பிள்ளைகள் கட்டாயம் பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டுமென்ற கட்டளை வழங்கப்பட்டிருந்தது. அதில் 15 முதல் 19 ஆம் இலக்க கட்டளைகளின் பிரகாரம் மாகாண கல்விப் பணிப்பாளரால் பாடசாலைக்கு அனுப்பப்படாத பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதற்கு தேவையான உயர்ந்தபட்ச நடவடிக்கைகளை எடுக்கப்படல் வேண்டும் மாகாண முறைசாரக் கல்விப் பிரிவின் அறிக்கையின் பிரகாரம் மத்திய மாகாணத்தில் 2017 ஆம் ஆண்டின் போது 5 வயது முதல் 16 வயது வரையான வயதமைப்பினரான பாடசாலை செல்லாத 848 பிள்ளைகள் இனங்காணப்பட்டிருந்தனர். அதில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேலும் பாடசாலைக்கு அனுப்புவதற்குள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 223 ஆக இருந்தது.

பாடசாலைகள் அமைந்துள்ள இடங்கள் முறையாக கையேற்கப்படாமை

தெல்தெனிய மற்றும் தெநுவர வலயக் கல்விக் காரியாலயங்களுக்குரிய 183 பாடசாலைகளில் 121 பாடசாலைகளின் காணிகளை சட்ட ரீதியாக மாகாண கல்வித் திணைக்களத்திற்கு கையேற்கும் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

நீண்டகாலமாக ஒரே பாடசாலை சேவை புரியும் ஆசிரியர்கள்

2007 திசெம்பர் 13 ஆந் திகதிய 2007/20 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆசிரியர்களுக்காக மிகவும் இலகுவான பாடசாலை வகைக்குரிய பாடசாலையொன்றில் ஆகக் கூடிய சேவைக்காலம் 06 வருடங்கள் மற்றும் வசதியான பாடசாலையொன்றில் ஆகக்கூடிய சேவைக்காலம் 08 ஆண்டுகளாக இருக்க வேண்டும். எனினும் மாகாண சபையின் 04 வலயக் கல்வி அலுவலகங்களில் 215 பாடசாலைகளின் 764 ஆசிரியர்கள் 09 வருடங்கள் 27 வருடங்கள் வரையான காலப்பகுதி அளவில் ஒரே பாடசாலை சேவையில் ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சி பாடசாலை அலுவலக உதவியாளர்களை இணைத்தல்

கண்டி மாவட்டத்தில் வலயக் கல்வி அலுவலகங்களுக்கிடையே கம்பளை கல்வி வலய கல்வி அலுவலகம் தவிர ஏனைய 5 வலயங்களின் கீழ் உள்ள பாடசாலைகளில் மாத்திரம் பாடசாலைகளழல் அலுவலக உதவியாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து இணைக்கப்பட்டிருந்தனர். தெல்தெனிய வலயக் கல்வி வலையத்தில் உள்ள பாடசாலைகளில் மாத்திரம் 98 பேர் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து இணைக்கப்பட்டிருந்தனர். பாடசாலைகளில் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து இணைக்கப்பட்டிருந்த பதவியணியினரை வெற்றிடங்கள் காணப்படுகின்ற பாடசாலைகளுக்கு இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து இணைக்கப்பட்டிருந்த பாடசாலைகளில் 74 பாடசாலை உதவிப் பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்படும் பாடசாலைகளுக்கு இணைப்பதற்குப் பதிலாக அங்கீகரிக்கப்பட்ட எல்லை மிகைக்கும் வகையில் பாடசாலைகளுக்கு இணைக்கப்பட்டிருந்தனர்.

தெல்தெனிய மாவட்ட வைத்தியசாலையின் புதிய கட்டிடத்தொகுதி நிர்மாணம்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியங்களைப் பயன்படுத்தி 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஏப்ரல் 11 ஆந் திகதி திறந்து வைக்கப்பட்ட மாவட்ட ஆதார வைத்தியசாலையின் புதிய கட்டிடத் தொகுதியின் சிவில் நிர்மாணத்தை பரிசோதித்த போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- ஒப்பந்தகாரருடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் மற்றும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த கால நீடிப்பின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு கட்டிடம் கையளிக்கப்பட வேண்டியிருந்தது. 2017 நவம்பர் 30 ஆந் திகதி வரையில் கட்டிடம் கையளிக்கப்பட்டோ ஒப்பந்தக் காலம் நீடிப்புச் செய்யப்பட்டோ இல்லாதிருந்தமையால் உடன்படிக்கையின் பிரகாரம் நாளொன்றுக்கு ரூபா 82,502 வீதம் 473 நாட்கள் தாமதத்திற்கான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

- கைச்சாத்திடப்பட்டிருந்த ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதி முதல் 365 நாட்கள் பராமரிப்புக் காலம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் நிறுத்தி வைக்கப்பட்ட பணம் விடுவிக்கப்பட வேண்டிய போதிலும் ஒப்பந்தம் முடிவடைந்து கட்டிடம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கையளிக்கப்படாதிருக்கையில் 2016 திசெம்பர் 23 ஆந் திகதி ரூபா 18.50 மில்லியனான நிறுத்தி வைத்தல் தொகை ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- சிகிச்சை கூட தொகுதி நிர்மாணத்திற்காக அத்திவாரம் பகுதி வெட்டப்பட்டு 03 கி.மீ தூரத்தில் அம் மண் கொண்டு செல்லப்பட்டு அகற்றுவதற்காக ரூபா 213 மில்லியன் ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அந்த மண் வைத்தியசாலைக்கு முன்னாலும் அதற்கு அண்மித்த தெல்தெனியா தேசிய பாடசாலை விளையாட்டரங்கினை நிரப்புவதற்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தமை பௌதீக பரிசோனையின் போது கண்டறியப்பட்டது. அது தொடர்பில் கவனம் செலுத்தப்படாமல் மண் போக்குவரத்திற்காக ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- புதிய வைத்தியசாலை தொகுதியின் குளியறைகளுக்கு டவல்பார், தூரிகை மற்றும் பேபர் ஹோல்டர் போன்ற 05 வகைக்குரிய துணைப்பாகங்கள் பொருத்த வேண்டுமென குறிப்பிட்டு ரூபா 237,510 ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது எனினும் உதிரிப்பாகங்கள் பொருத்தப்படாதிருந்தமை வெளிக்கள பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

- கட்டிடங்கள் முறையாக கையளிப்பதற்கு முன்னர் அதன் உள்ளக மின்வயர் முறைமையில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக 2017 ஆகஸ்ட் 11 ஆந் திகதி வரையில் 101 மின்குமிழ்கள் செயற்படாதிருந்தன.

- கட்டிட திட்டம் மெதும்பர பிரதேச சபையினால் அங்கீகரித்துக் கொள்ள வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கட்டிடத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் அனுமதியற்ற நிர்மாணமொன்றாக அவதானிக்கப்பட்டது.

சிறுநீரக நோயாளர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட சிகிச்சை நிலையம்

வில்கமுவ பிரதேச செயலக பிரிவில் சிறுநீரக நோயாளர்கள் 1200 பேரை விட மிகைத்து இருப்பதாகவும் அந்நிலைமையை தவிர்ப்பதற்காக சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் ரூபா 41.46 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கி நவீன வசதிகளுடன் கூடிய சிகிச்சை நிலையமொன்றை நிர்மாணித்து 2017 மார்ச் 13 ஆந் திகதி பொது மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி அளவில் அம் மருத்துவ பிரிவு மத்திய மாகாண சபைக்கு கையேற்கப்பட்டிருந்த போதிலும், உரிய வைத்தியர்கள் இல்லாமையால் அக்கட்டிடங்கள் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் மூடப்பட்டிருந்தது.

தென் மாகாண சபை

தென் மாகாண சபையால் 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 27,426 மில்லியன் அரசாங்க மானியத்தினாலும், உள்ளக மார்க்கமாக ரூபா 8,159 மில்லியனுமாக ரூபா 35,585 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்தது. அவ்வருமானத்தில் ரூபா 29,180 மில்லியன் மீண்டெழும் செலவினமாகவும், ரூபா 9,116 மில்லியன் மூலதனச் செலவினத்திற்காக பயன்படுத்தப்படுவதற்கு மதிப்பிடப்பட்டிருந்தது. இதன் படி, 2017 ஆம் ஆண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 26,177 மில்லியனும் உள்ளக மார்க்கத்தின் மூலம் ரூபா 8,793 மில்லியனுமாக ரூபா 34,970 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினமாக ரூபா 28,900 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினமாக ரூபா 5,648 மில்லியனாக ரூபா 34,548 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 422 மில்லியனாக இருந்தது.

தென் மாகாண சபை தொடர்பாக 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

வருமான சேகரிப்பு

மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது 07 வருமானக் குறியீடுகளின் கீழ் ரூபா 880.5 மில்லியனான வருமானம் நிலுவையாக இருந்தது. மீளாய்வாண்டிற்காக அந்த 7 வருமானக் குறியீடுகளிலிருந்து ரூபா 419.7 ஆன வருமானத்தை சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது ரூபா 1,300.2 மில்லியனான வருமானம் சேகரிக்கப்பட வேண்டியிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது ரூபா 122.8 மில்லினான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட வருமானத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் விடுவித்தல், வரவு அறிவித்தல் மற்றும் தண்டப்பண சீராக்கம் செய்கையில் மீளாய்வாண்டின் இறுதி அளவில் ரூபா 873.4 மில்லியன் வருமனம் நிலுவையாக இருந்தது.

வைத்தியர்களின் உத்தியோகபூர்வ விடுதிகளை திருத்தியமைத்தல்

அமுகொடை மத்திய மருந்தகத்தின் வைத்தியர்களின் உத்தியோகபூர்வ விடுதி திருத்த வேலைக்காக ரூபா 1.41 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2012 ஒக்தோபர் 18 ஆந் திகதிக்கு முன்னர் நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்கு இணங்கி சமுர்த்தி சங்கமொன்றுடன் 2012 ஆகஸ்ட் 03 ஆந் திகதி தென் மாகாண தலைமை அமைச்சு நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் சமாதானமும், உள்ளூராட்சி மன்றங்கள், போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் உள்நாட்டு மருத்துவம், சுற்றுலா மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2012 நவெம்பர் 17 ஆந் திகதி வரை ரூபா 1.26 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2017 நவெம்பர் 17 ஆந் திகதி வரை நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்படாதிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயலாற்றல் பிணை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. சமுர்த்தி சங்கத்தின் தலைவரின் கையொப்பம் வேறொருவரால் இடப்பட்டு பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

ஒப்பந்தக்காரர் ஒருவர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் ஒப்பந்தக்காரர் வேலையை ஆரம்பித்திருந்தமை

தென் மாகாண தலைமை அமைச்சு நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் சமாதானமும், உள்ளூராட்சி மன்றங்கள், போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் உள்நாட்டு மருத்துவம், சுற்றுலா மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சு 2017 நவெம்பர் 16 ஆந் திகதி 06 நிர்மாணங்களுக்காக பலரிடம் கேள்வி கோரப்பட்டிருந்தன. அந்நிர்மாணங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 30.75 மில்லியனாக இருந்தன. குறித்த ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தங்களை வழங்குவதற்கு முன்னர் 2017 நவெம்பர் 29 ஆந் திகதி முதல் திசெம்பர் 11 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் ஒப்பந்தக்காரர்களால் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. 2017 திசெம்பர் 15 ஆந் திகதி 06 நிர்மாணங்களுக்கு ஒரே ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தங்கள் அளிப்புச் செய்யப்பட்டு அவருடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. 06 ஒப்பந்தக்களுக்கான மேற்பார்வையும் முறைப்படி இடம் பெற்றிருக்காமை கண்டறியப்பட்டது.

மாகாண எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படாத செயற்திட்டங்கள்

2014 ஆம் ஆண்டில் மாகாண எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 08 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு அதற்காக ரூபா 127.63 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த 08 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை பொதுமக்களின் தேவைப்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அச் செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது அரசின் பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்கும் வகையில் முற்பண கொடுப்பனவு மற்றும் முற்பண மற்றும் செயலாற்றல் பாதுகாப்பு பிணை பெற்றுக்கொள்ளலும் இடம் பெற்றிருக்கவில்லை. அவ்வாறே நிர்மாணங்களில் காணப்பட்ட குறைபாடுகள் சரி செய்யப்படாமை மற்றும் சில வேலைப் பகுதிகள் குறித்துரைக்கப்பட்ட நியமத்தில் நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன் செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது முறையான மேற்பார்வையொன்றும் இடம் பெற்றிருக்கவில்லை. மேலும் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் உப ஒப்பந்தங்கள் வழங்கலும் இடம் பெற்றிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த 08 செயற்திட்டங்கள் மூலம் பொதுமக்கள் தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்கள்

பத்தேகம மாதுருகொட இளைஞர் விளையாட்டு தொகுதி நிர்மாண வேலைகள் 2001 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையில் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அக்காலப் பகுதியில் செயற்திட்டத்திற்காக ரூபா 81.76 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் வேலைகள் இடைநடுவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. உரிய நிர்மாணத்தை மேற்கொண்ட இலங்கை தரைப்படை பொறியியல் சேவை ரெஜிமென்ட் 2018 மே 01 ஆந் திகதி முதல் நிர்மாண நடவடிக்கைகளை இடை நிறுத்தி வேலைத்தளத்திலிருந்து வெளியேறியிருந்தது. பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 17 ஆண்டுகள் கடந்தகால பின்னரும் எதிர்பார்த்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது.

பாடசாலைகள் புத்தகங்கள், புத்தகப் பைகள், உபகரணங்களை மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்காமை

தென் மாகாண சபையின் கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி பெருந்தெருக்கள் மற்றும் செய்திகள் அமைச்சினால் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 15.27 மில்லியன் கூட்டுத்தொகை செலவு செய்து பாடசாலை மாணவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக பாடசாலைகள் புத்தகங்கள், புத்தகப் பைகள், உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அப் புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்காமை அமைச்சிலும் மாகாண அலுவலகங்களிலும் வைக்கப்பட்டிருந்தன.

ஏற்பாடுகளுக்கு முரணாக உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்துதல்

2015 ஆகஸ்ட் 21 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 1928/28 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் வெளியிடப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் I மற்றும் II ஆம் தரத்தின் விஷேட பதவியணிக்குரிய பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தருக்கு பொதுப் பதவியணிக்குரிய பதவியொன்றை வகிக்க முடியாதிருந்ததுடன் பொது பதவியணிக்குரிய பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தருக்கு விஷேட பதவியணிக்குரிய பதவியொன்றை வகிக்க முடியாது எனினும் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்காமல் தென் மாகாண கல்வித் திணைக்களத்தின் பொதுப் பதவியணிக்குரிய 03 பதவிகளுக்காக விசேட பதவியணியினைச் சேர்ந்த 39 உத்தியோகத்தர்களும் விஷேட பதவியணிக்குரிய 02 பதவிகளுக்காக பொதுச் பதவிணயணிக்குரிய 20 உத்தியோகத்தர்கள் நிரந்தர மற்றும் பதில் கடமை, கடமை மேவுகை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவ்வாறே இலங்கை கல்வி நிர்வாக சேவையின் விஷேட பதவியணிக்குரிய பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்காக பொதுப் பதவியணியைச் சேர்ந்த 47 உத்தியோகத்தர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 27 உத்தியோகத்தர்கள் பொதுப் பதவியணிக்குரிய பதவிகளில் பதில் கடமை புரிந்தும்/கடமை நிறைவேற்றல் அடிப்படையிலும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

மாகாண சபையின் தகவல்கள் வெளித்தரப்பினரால் செயற்படுத்துதல்

தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையால் கைத்தொழில் தகவல் முறைமையொன்று நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூபா 4.33 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. தகவல் முறைமை நிர்மாணிக்கப்பட்ட நிறுவனத்திற்கு மாத்திரம் முறைமையின் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலுமை காணப்பட்டமை மற்றும் அதிகாரசபைக்கு தேவைப்பாட்டின் பிரகாரம் முறைமையை நாளது வரையாக்குவதற்கு முடியாமல் இருந்தது. இதன் பிரகாரம் மாகாண சபைக்குரிய தகவல்கள் வெளி நிறுவனமொன்றினால் செயற்படுத்துவதற்கு சந்தர்ப்பத்தை தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்டிருந்தது.

கலுன்ன மாதிரி பசுப் பண்ணை ஆரம்பிக்கப்படாமை

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்குரிய கலுன்ன பட்டி நிலையத்தை மாதிரி பசுப் பண்ணையொன்றாக மாற்றுவதற்காக 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை ரூபா 8.25 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மாட்டு தொழுவமொன்று, நீர்த் தாங்கி, மோட்டார் அறை, பாதுகாப்பு வேலி, ஊழியர் விடுதியொன்று, கிணறு மற்றும் பம்பியறை என்பனவற்றை நிர்மாணிப்பதற்காக அச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பசுப் பண்ணை

ஆரம்பிப்பதற்காக தேவையான அடிப்படை காரணிகளான புல், நீர் மற்றும் மனித வளங்கல் இல்லாமையால் பண்ணையின் செயற்பாடு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு செலவிடப்பட்ட தொகையில் மீளாய்வாண்டின் இறுதி வரை பெறுபேறுகளை அடைந்து கொள்ள முடியாதிருந்தது.

மீன் குஞ்சுகளை வளர்ப்பினை மேம்படுத்தும் செயற்திட்டம்

மீன் குஞ்சுகளை வளர்ப்பினை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்கு ரீதியகம கால்நடைப் பண்ணைக்குரிய காணியில் 0.0818 ஹெக்டேயர் பகுதியொன்றில் 09 தடாகங்களை நிர்மாணிப்பதற்கும், காவலாளி வீடொன்றை நிர்மாணிப்பதற்குப் பௌசர் ஒன்று கொள்வனவு செய்வதற்காகவும் 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 27.48 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக திட்டம் தயாரிக்கப்படாமல் ரூபா 8.06 மில்லியன் செலவிடப்பட்டு மீனினங்களை போக்குவரத்து செய்ய பௌசகென்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

மாத்தறை மாவட்டத்தின் மாகாண வீதிகள் மற்றும் பூர்த்தி செய்யப்படாத வீதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்

தென் மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தினால் 2011 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டிருந்த மேலே குறிப்பிடப்பட்ட செயற்திட்டத்திற்காக (ஏபீசீ) கலந்த கற்கள் கொள்வனவு செய்யும் பெறுகை தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- செயற்திட்டத்தின் மேம்படுத்தப்பட்ட வீதிகளுக்கு உரிய அங்கீகரிக்கப்பட்ட அளவிட்டுப் பத்திரங்களின் பிரகாரம் தேவையான 128602 கியுபிக் மீற்றர் களிற்காக ரூபா 556.10 மில்லியன் செலவாகுமென அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.7.2 வழிகாட்டலின் பிரகாரம் அப் பெறுகை செயற்பாடுகள் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனினும் அதற்காக தலைமை செயலகத்தில் பெறுகை குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் அமைச்சரவை பெறுகை குழுவினால் பெறுகை நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்தன.
- இந்த செயற்திட்டத்தின் கலவை கற்கள் வழங்குவது தொடர்பாக இடம் பெற்றிருந்த முறைகேடுகள் தொடர்பாக கணக்காய்வு ஐய வினாவொன்று வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பரீட்சிக்கப்பட்டு அறிக்கையிடுவதற்காக தென் மாகாண உள்ளகக் கணக்காய்வு பணிப்பாளர் தலைமை செயலாளரால் நியமிக்கப்பட்டிருந்தார். அவரின் அறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தரால் ரூபா 14.47 மில்லியனான நிதி நட்டமொன்றை ஏற்படுத்தியுள்ளதாக கண்டறியப்பட்டிருந்தது.
- இச் செயற்திட்டத்தின கீழ் சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுக்கு இணங்காமல் நடவடிக்கை எடுத்து அரசிற்கு நட்டமொன்றை ஏற்படுத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து தலைமை செயலாளருக்கு அறிக்கையொன்று அமைச்சின் செயலாளருக்கு 2016 நவெம்பர் 10 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

வட மாகாண சபை

வட மாகாண சபையானது அரசாங்க மானியங்களிலிருந்தான ரூபா 23,854 மில்லியன் மற்றும் வருமானத்தின் ஏனைய உள்ளக மார்க்கங்களிலிருந்தான ரூபா 3,477 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 27,331 மில்லியன் தொகையான வருமானத்தை 2017 ஆம் ஆண்டிற்காக மதிப்பிட்டிருந்ததுடன் மதிப்பிடப்பட்ட வருமானத்தில், மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 20,575 மில்லியன் மற்றும் மூலதன செலவினத்திற்கான ரூபா 6,776 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 27,351 மில்லியன் கூட்டுமொத்தத் தொகை செலவிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அரசாங்க மானியங்களிலிருந்தான ரூபா 23,149 மில்லியன் மற்றும் வருமானத்தின் ஏனைய உள்ளக மார்க்கங்களிலிருந்தான ரூபா 3,564 மில்லியன் உள்ளடங்கலாக 2017 ஆம் ஆண்டிற்காக அறவிடப்பட்ட ரூபா 26,713 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானத்தில் 2017 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 20,989 மில்லியன் மற்றும் மூலதன செலவினத்திற்கான ரூபா 3,055 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 24,044 மில்லியன் கூட்டுத்தொகையான மொத்த செலவினம் 2017 ஆம் ஆண்டின் போது ஏற்பட்டிருந்தது.

பயன்படுத்தப்படாத கட்டிடங்கள்

வட மாகாணத்திலுள்ள மன்னார், முசலி, நானாட்டான், மாந்தை மேற்கு மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தொலைவிலுள்ள மற்றும் குறைந்த மக்களையுடைய பகுதிகளில் வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் முன்னேற்ற செயற்திட்டத்தின் நிதியிலிருந்து ரூபா 159.3 மில்லியன் மொத்தக் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட கடைத் தொகுதிகள், பஸ் தரிப்பிடங்கள், சிறுவர் பூங்காக்கள் மற்றும் பதவியணியினர் விடுதிகள் போன்ற பதினொரு அபிவிருத்தி வேலைகள் 04 ஆண்டுகளிற்கு மேலாக பயன்பாடற்றிருந்தன. மேலும், நல்லூர் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் ரூபா 44.5 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட உள்ளக விளையாட்டரங்கு, பயிற்சி நிலையம் மற்றும் கலாச்சார மண்டபம் என்பன உரிய நோக்கங்களிற்குப் பயன்படுத்துவதற்குப் பதிலாக 2014 இலிருந்து ஏனைய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

வட மாகாண சபையின் நிதியை பயன்படுத்தி ரூபா 60.2 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட சந்தைகள், வாகன சேவிஸ் நிலையங்கள், உடற்பயிற்சி நிலையங்கள், வாகன தரிப்பிடங்கள், பிராந்திய வைத்தியசாலைக் கட்டிடங்கள் போன்ற பதினெட்டு அபிவிருத்தி வேலைகள் 01 ஆண்டு தொடக்கம் 03 ஆண்டுகள் வரையான காலவீச்சில் பயனற்றிருந்தன.

தீர்ப்பனவு செய்யப்படாத கட்டுநிதி

2012 ஆம் ஆண்டின் போது மன்னார் மாவட்டத்தில் தீயால் அழிவடைந்த கடைகளின் உரிமையாளர்களிற்கு கடைக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவிற்காக உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்ட ரூபா 6 மில்லியன் கட்டுநிதியில், ரூபா 4.87 மில்லியன் தொகை தற்போது வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக 05 ஆண்டுகள் கடந்த பின்னரும் மூன்றாம் தரப்பினரிற்குச் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு உரிய அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் முன்னேற்ற செயற்திட்டத்தில் (நெல்சிப்) மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடி

வீதிகள் மற்றும் சந்தைகளின் நிர்மாண வேலைகள் தொடர்பாக வல்வெட்டித்துறை நகர சபை மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 4.348 மில்லியன் நிதி மோசடி வட மாகாண சபையால் புலனாய்வு செய்யப்பட்டு வட மாகாண செயலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. மேலும், இது தொடர்பில் வட மாகாண பிரதம செயலாளரால் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் மாகாண சபை நிதியத்திலிருந்து புலனாய்வை முடிவு செய்வதற்கு ரூபா 1.55 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இது

தொடர்பான நடவடிக்கை 03 ஆண்டுகளிற்கு மேலாக தாமதப்படுத்தப்பட்டிருந்தது.

இனங்காணப்பட்ட நட்டங்கள்

02 ஆண்டுகள் தொடக்கம் 08 ஆண்டுகள் வரையான காலவீச்சினுள் நான்கு வட மாகாணத் திணைக்களங்களால் இழக்கப்பட்ட ரூபா 48.5 மில்லியன் பெறுமதியான 35 பொருட்கள் மீதான நடவடிக்கை வட மாகாண சபையின் நிதி ஒழுங்குவிதி 70(5) இன் பிரகாரம் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சொத்துக்களை பயன்படுத்துதல்30

குடும்பங்களிற்கான வீடமைப்புத் திட்ட வீடுகளை நிர்மாணிக்கும் நோக்கத்திற்காக 2000 ஏப்ரல் 05 இல் வலிகாமம் தெற்கு பிரதேச சபையால் ரூபா 3.24 மில்லியன் கிரயத்தில் 680 பேர்ச்கள் பரப்பளவான காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2002 திசெம்பர் 24 இல் இவ் ஆதனத்தின் உரிமைத்துவம் மீது மூன்றாம் தரப்பினரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக உரிய நோக்கங்களிற்காக இக்காணி பயன்படுத்தப்படாமல் பயனற்றிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

வடமேல் மாகாண சபை

வடமேல் மாகாண சபையால் மீளாய்வாண்டிற்காக ரூபா 22,266 மில்லியன் அரசாங்க மானியத்தின் மூலமும், உள்ளக மார்க்கங்களிலிருந்து ரூபா 8,642 மில்லியனுமாக ரூபா 30,918 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது அவ்வருமானத்தில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினத்திற்காக முறையே ரூபா 30,918 மற்றும் ரூபா 10,971 மில்லியன் என மொத்தம் ரூபா 41,889 ஆன செலவினம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 28,772 மில்லியனும் உள்ளக மார்க்கத்தின் மூலம் ரூபா 8,091 மில்லியனுமாக ரூபா 36,863 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மீண்டெழும் செலவினமாக ரூபா 28,806 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினம் ரூபா 6,650 மில்லியனாக ரூபா 35,456 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

வடமேல் மாகாண சபையினால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

நிலையான வைப்புக்களில் பண முதலீடு

பிரதம அமைச்சின் கீழ் மாகாண சபையால் நியதிச்சட்டத்தின மூலம் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து மக்கள் நலனுக்காக நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் நிறைவேற்றப்படாமல் ரூபா 102.59 மில்லியன் வங்கிகளில் நிலையான வைப்புக் கணக்குளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

வேறு சேவைகளுக்காக ஆசிரியர்களை விடுவித்தல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 2.5.1 பிரிவின் பிரகாரம் அரச சேவையின் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் வேறொரு சேவைக்கு 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு விடுவிக்கப்பட முடியாது. எனினும் வடமேல் மாகாணத்தில் 50 ஆசிரியர்கள் அரச சார்பற்ற படையணியில் தொண்டர் சேவைக்காக விடுவிக்கப்பட்டு 02 ஆண்டுகள் முடிவடைந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த ஆசிரியர்கள் ஆசிரியர் சேவைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை. அந்த ஆசிரியர்களுக்கு 1991 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 107.42 மில்லியன் சம்பளம் வடமேல் மாகாண கல்வி திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

கல்விக்கு தேவையான வளங்களின் பற்றாக்குறை

வடமேல் மாகாணத்தில் 791 பாடசாலைகளில் 31,667 மாணவர் மேசைகளும், 32,089 மாணவர் கதிரைகளும் 5,440 ஆசிரியர் மேசைகள் 7,046 ஆசிரியர் கதிரைகளும் பற்றாக்குறையாக இருப்பது அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அத்தேவைப்பாட்டை நிறைவேற்றும் செயற்பாடு மந்தகெதியில் இடம்பெற்று வந்தது.

மூடப்பட்ட பாடசாலைகள்

கடந்த 22 வருடங்கள் அளவிலான காலப்பகுதியின் போது வடமேல் மாகாணத்திற்குள் 67 பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. அப்பாடசாலைகளில் 43 பாடசாலைகள் எந்தவொரு ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்தல்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரிக்கப்படாத 05 பதவிகளுக்காக வயம்ப மனித வளங்கள் அபிவிருத்தி அதிகாரசபையினால் 16 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தன. 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதி முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் அந்த உத்தியோகத்தர்களுக்கு மொத்தம் ரூபா 19.57 மில்லியன் சம்பளம் மறற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

அறவிடப்பட வேண்டிய கடன் பணம்

வயம்ப மனித வளங்கள் அபிவிருத்தி அதிகாரசபையினால் பல்வேறு செயற்திட்டங்கள் மூலம் நலனாளலிகளுக்கு கடன் வழங்கப்பட்டு 3 ஆண்டுகள் இறுதியின் போது மீண்டும் அறவிடப்பட வேண்டியருந்தது. எனினும் அவ்வாறு நலனாளிகளுக்கு கடன் வழங்கி 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 03 ஆண்டுகள் கடந்திருந்த நிலுவை கடன் தவணைகளின் கூட்டுத்தொகை ரூபா 21.49 மில்லியனாக இருந்தது.

நிலுவை வருமானம்

வடமேல் மாகாண சபையின் 05 வருமான குறியீடுகளின் கீழ் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 198.77 மில்லியனான வருமானம் நிலுவையாக காணப்பட்டது. அந்நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு மாகாண சபையால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

வார்ட் தொகுதியுடனான கட்டிடங்கள் விளைவற்ற வகையில் காணப்படுதல்

வெளிநாட்டு செயற்திட்டமொன்றின் கீழ் கல்கமுவ ஆதார வைத்தியசாலையில் ரூபா 605 மில்லியன் அளவில் செலவிட்டு வார்ட் தொகுதி ஒன்றுடன் சகல பகுதிகளுடன் கூடிய முழுமையான இரண்டு சிகிச்சை கூடங்கள், அதிதீவிர சிகிச்சை பிரிவு, சிறுநீரக நோயாளர்களுக்கான இரத்தம் வடிகட்டு அலகு, முதிர்ச்சியடையாத ழழைப் பிரிவு, இரத்த வங்கி, என்டஸ்கோப் பிரிவு, மருத்துவ வாயு முறைமை ஆகிய பிரிவுகளை செயற்படுத்துவதற்காக போதியளவு வைத்திய மற்றும் தாதியர் பதவியணியினர் இல்லாமை காரணமாக 2016 ஆம் ஆண்டு முதல் அப்பிரிவு விளைவற்றுக் காணப்பட்டது.

அவ்வாறே 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 15.92 மில்லியன் செலவு செய்யப்பட்டு நிக்கவரட்டிய ஆதார வைத்தியசாலையில் மூன்று மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நோய் உதவி நடவடிக்கைகளுக்காக அக்கட்டிடத்தின் இரண்டு மாடிகளும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

மருத்துவர்கள் மற்றும் தாதியர் பதவியணியினர் பற்றாக்குறை

2016 ஆம் ஆண்டின் போது ஜெய்கா செயற்திட்டத்தின் மூலம் நவீனமயப்படுத்தப்பட்ட கல்கமுவ வைத்தியசாலையின் நோயாளர் சகாய சுகாதாரச் சேவைகளை முழு அளவில் செயற்படுத்துவதற்காக 16 விஷேட வைத்திய நிபுணர்கள், 94 வைத்தியர்கள் 150 தாதிகள் /ஆண் தாதிகள் இணைக்கப்பட வேண்டியிருந்தனர். எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இரண்டு விஷேட வைத்திய நிபுணர்கள், 18 வைத்தியர்கள் 53 தாதிகள் /ஆண் தாதிகள் மாத்திரம்

இணைக்கப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் செயற்திட்டத்திலிருந்து நோயாளர் சகாயச் சேவை முழுமையான மட்டத்தில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

பிரேத அறை விளைவற்றுக் காணப்படுதல்

புத்தளம் வைத்தியசாலையில் ரூபா 12.76 மில்லியன் செலவிப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த முழு வசதிகளுடனான பிரேத அறைக்கு தேவையான நீரைப் பெற்றுக்கொள்ள முடியாமையால் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அது விளைவற்றுக் காணப்பட்டது.

தரமற்று மற்றும் காலாவதியான மருந்துகள்

வடமேல் மாகாண பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவிலும் குருணாகல் மாவட்டத்தின் வைத்தியசாலைகளிலும் ரூபா 55.2 மில்லியன் தரமற்ற மருந்துகளும் ரூபா 2.4 மில்லியன் காலாவதியான மருந்துகளும் 2017 ஆம் ஆண்டின் போது பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தன.

வீதியின் இரு பக்கங்களிலும் அனுமதியற்ற தீர்மானம்

வடமேல் மாகாண சபையின் வீதி அபிவிருத்தி நியதிச்சட்டத்தின் 23(1) மற்றும் 33 (1) பிரிவுகளின் பிரகாரம் வீதியின் இருபக்கங்களில் நிர்மாணம் வரையரைகளை கருத்திற் கொள்ளாமல் வாரியபொல பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தினால் பராமரிக்கப்படும் இரண்டு வீதியில் அனுமதியற்ற நிர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

வீதி அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை

இப்பாகமுவ பிரதேச செயலகப் பிரிவிற்குரிய 5.5 கிலோ மீற்றர் தூரமான கொக்ரல்ல -கந்துலவ வீதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இதனால் வீதியில் இரு பக்கங்களில் வாழ்வோரின் வாழ்க்கை பாதிப்படைந்திருந்ததுடன் பயணிகள் பேருந்து போக்குவரத்தும் ஓராண்டு காலமாக நிறுத்தப்பட்டிருந்தது.

மிகை நூல் இருப்பினைப் பேணுதல்

மாகாண புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 2016 ஆம் ஆண்டில் நூல் பயன்பாடு ரூபா 8.32 மில்லியனாக இருந்ததுடன் அவ்வாண்டின் இறுதி வரையில் நூல் இருப்பின் பெறுமதி ரூபா 28.99 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் வருடாந்த நூல் தேவைப்பாட்டின் இரண்டு மடங்கிலான நூல், இருப்பாக வைக்கப்பட்டிருந்தமையால் இருப்பு கையாளல் செலவினம் மற்றும் இருப்பு சேத சதவீதம் அதிகமாக இருந்ததாக அவதானிக்கப்பட்டது.

அனுமதிக்கப்பட்ட எல்லையை மிகைத்து தடுப்பு விடுதிகளில் பிள்ளைகளை தடுத்துவைத்தல்.

நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தின் மீகஹகொட்டுவ அரசின் மகளிர் தடுப்பு விடுதியில் 45 பிள்ளைகளை தங்கவைப்பதற்கு அனுமதிக்கப்பட்ட அளவாக இருந்தது. எனினும் வதிவிடமாக 70 பிள்ளைகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அவ்வாறே மேலதிகமாக தடுத்து வைக்கப்பட்டவர்களுக்காக தேவையான வசதிகளில் பற்றாக்குறையும் அவதானிக்கப்பட்டது. தடுத்து வைக்கப்பட்ட மகளிர் பாடசாலை கல்வியை நிராகரிக்கும் சந்தர்ப்பத்தில் சமுகமயப்படுத்துவதற்கு முன்னர் முறையான தொழில் கல்வியொன்றை வழங்குதவற்காக முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

முறையற்ற வகையில் குளம் புனரமைத்தல்

வடமேல் மாகாணத்தின் குள புனரமைப்பு வேலைகளுக்காக 2017 ஆம் ஆண்டின் போது மாகாண சபை நிதியத்திலிருந்து ரூபா 32 மில்லியன் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. குளங்களிலிருந்து மண் அகற்றுவது, மண்ணை விடுவித்தல் என்பன ஒப்பந்தக்காரரின் பிரதான நோக்கங்களாக இருந்தமையால் அநேகமான குளங்கள் முறையாக புனர்நிர்மாணம் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறான பல குளங்களின் படம் 13 முதல் 15 வரை படங்கள் மூலம் நிருபணமாகின்றது.

படம் 13 - போகொட குளத்தில் மணல் விடுவித்தலுக்காக முறையற்ற விதத்தில் அகற்றப்பட்டிருந்த முறை

படம் 14 - கிதலவ பூகல்ல குளத்தின் முறையற்ற விதத்தில் புதிர் மண் அகற்றுதல்

படம் - முறையற்ற விதத்தில் கோன்குளம் ஆழமாக்குதல்

வடமத்திய மாகாண சபை

வடமத்திய மாகாண சபையினால் 2077 ஆம் ஆண்டிற்காக கூட்டுமொத்தமாக ரூபா 29,131 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 25,800 மில்லியன் அரசாங்க மானியத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கும் ரூபா 3,551 மில்லியன் தொகையை உள்ளக மூலகங்களிலிருந்து சேகரிப்பதற்கும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 16,692 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 2,914 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 19,606 மில்லியன் தொகையான செலவினம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அரசாங்கத்தின் மானியம் மூலம் ரூபா 19,166 மில்லியன் தொகையும் உள்ளக வழிகளிலிருந்து ரூபா 3,661 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 22,827 மில்லியன் வருமானம் பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 20,586 மில்லியன் மீண்டெழும் செலவினமும், ரூபா 2,497 மில்லியன் தொகையான மூலதனச் செலவினமும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 23,083 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

வடமத்திய மாகாண சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் சுருக்கம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

ஜே.சீ. மா பயிர்ச்செய்கை செயற்திட்டம்

வடமத்திய மாகாணத்தின் கிராமிய மக்களின் வருமானத்தை உழைக்கும் சந்தர்ப்பத்தை உருவாக்குவதற்காக 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை ரூபா 16 மில்லியன் செலவில் 460 ஏக்கர் கிராமிய காணியல் J.C மா பயிர்ச்செய்கையை பரவலாக்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்திலிருந்து நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த 33,158 மாங்கன்றுகளில் 50 சதவீதத்திற்கு அண்ணளவான அளவு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அழிவடைந்திருந்தது.

"ஹொந்தம பாசல லங்கம பாசல" செயற்திட்டம்

"ஹொந்தம பாசல லங்கம பாசல" (நல்ல பாடசாலை அருகாமையிலுள்ள பாடசாலை) செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 6,481 மில்லியன் தொகையும், பாடசாலைகளின் அளவினையும் தரத்தையும் அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 824 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 7,305 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தி அமுல்படுத்தப்பட்டிருந்த பூங்கா அழகுபடுத்தலுக்காக 1,366.99 சதுர மீற்றர் அளவில் புற்பிடி பதிப்பதற்காக செலவிடப்பட்ட பணத்திலிருந்து ரூபா 3.5 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகள்

வடமத்திய மாகாணத்திற்குரிய 814 பாடசாலைகளுக்கான கல்விசார் பதவியணியினர் 16,674 பேர்கள் நியமிக்கப்பட்டு சேவையாற்றிக் கொண்டிருந்ததுடன் கல்வி பயிலுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை 289,971 பேர்களாக இருந்தனர். அதன் பிரகாரம் ஆசிரியர் மாணவர் விகிதம் 1:17 ஆக இருந்தது. மேலும் இந்த ஆசிரியர்களில்

322 பேர் ஆசிரிய ஆலோசகர்களாக இருந்ததுடன் 72 பேர் பாடப் பணிப்பாளர்களாக இருந்தனர். இந்த விடயங்களின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டின் போது கல்வி பெறுபேறுகளை பரீட்சித்த போது க.பொ.த(சா.த) பரீட்சைக்கு தோற்றிய 19,455 மாணவர்களில் 628 மாணவர்கள் சகல பாடங்களிலும் சித்தி பெற்றிருக்கவில்லை. அந்தப் பெறுபேறுகளின் அடிப்படையில் மாகாண ஒப்பீடுகளின் பிரகாரம் வடமத்திய மாகாணம் ஆறாவது இடத்தைப் பெற்றுள்ளது. மேலும் 2017 ஆம் ஆண்டின் க.பொ.த(உ.த) பெறுபேறுகளின் பிரகாரம் பரீட்சைக்கு தோற்றிய 12,130 மாணவர்களில் 1,188 மாணவர்கள் அதாவது 10 சதவீதமானோர் தோற்றிய பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தி பெற்றிருக்கவில்லை. அதன் பிரகாரம் மாகாண பெறுபேறுகளின் பிரகாரம் இந்த மாகாணம் 08 ஆவது இடத்தைப் பெற்றிருந்தது. 2017 ஆம் ஆண்டின் 05 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்காக தோற்றிய 24,836 மாணவர்களில் 7,358 மாணவர்கள் தோற்றிய இரண்டு வினாப்பத்திரங்களுக்கான மொத்தப் புள்ளிகள் 70 ஐ விட குறைவாகக் காணப்பட்டது.

சொத்துக்களின் குறைப்பயன்பாடு மற்றும் விளைவற்று காணப்பட்டமை

மீளாய்வாண்டு வரையில் மாகாணத்தில் 50 பாடசாலைகள் மூடப்பட்டிருந்ததுடன் அதில் 39 பாடசாலைகளில் கட்டிடங்கள் மற்றும் ஏனைய வளங்கள் விளைவற்றுக் காணப்பட்டன. 9 அறைகளையுடைய கெக்கிராவ ஆசிரியர் நிலையத்தில் இரண்டு மாடிக் கட்டிடத்தில் 04 அறைகள் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்தப்படாமல் அகற்றப்பட வேண்டிய பொருட்கள் அதில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், மாகாணத்தில் அமைந்துள்ள அரசாங்கத்தின் 1,491 விடுதிகளில் 830 விடுதிகள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான ரூபா 93.00 மில்லியன் பெறுமதியிலான 10 கட்டிடங்கள், ரூபா 54.00 மில்லியன் பெறுமதியிலான 04 Dialysis Machines மற்றும் ரூபா 1.64 மில்லியன் பெறுமதியான மருந்துகள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்திற்குச் சொந்தமான ரூபா 7.98 மில்லியன் பெறுமதியான கட்டிடமொன்று 2016 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்

வடமத்திய மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்ட சுகாதார வசதிகள் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2017 ஒக்தோபர் 15 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்டு செயற்திட்டம் பாடசாலைகளுக்கு கையளிக்கப்பட வேண்டியிருந்தது. மாகாண சபையினால் இதற்காக ரூபா 265 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்தை அமுல்படுத்தப்பட்ட Type B இன் கீழான 208 பாடசாலைகளில் 78 பாடசாலைகளின் செயன்முன்னேற்றம் 40 சதவீதத்தை விட குறைவாகக் காணப்பட்டது. 88 பாடசாலைகளின் செயன்முன்னேற்றம் 40 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. Type G இன் கீழான 27 பாடசாலைகளில் 25 பாடசாலைகளின் செயன்முன்னேற்றம் 80 சதவீதத்தை விடக் குறைவாகக் காணப்பட்டது.

சேவைக்காலப் பயிற்சி மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

மாகாண சபையின் கீழ் வருகின்ற வலயக் கல்வி அலுவலகங்களில் 33 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் ஊழியர்களுக்கான செயலமர்வுகளை நடாத்துவதற்காக ரூபா 9.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், அதில்

ரூபா 6.1 மில்லியன் சேவைக்கால பயிற்சிகளுக்காக செலவிடப்படாமல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மாகாண சபை நிதிஏற்பாட்டின் கீழ் 64 ஊழியர் செயலமர்வகளை நடாத்துவதற்காக ரூபா 6.2 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும், அந்த மொத்த நிதிஏற்பாடும் பயன்படுத்தப்படவில்லை. மத்திய அரசின் ESPD செயற்திட்டத்தின் கீழ் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 3.4 மில்லியன் பணம் வழங்கப்பட்டிருந்த போதும் அந்தப் பணம் செயற்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பணிகளுக்குச் செலவிடப்படாமல் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுதல்

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மாகாண விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல், கால்நடை சுகாதாரம் மற்றும் மீன்பிடித்துறை அலுவல்கள் அமைச்சினால் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

- 2016 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்ட மஹஇலுப்பள்ளம் குளிரூட்டிக்கூடத்தின் மேவுகைக் கூரையை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 7.7 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதி வரையிலும் அந்த நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால் அந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டிற்கும் நடைமுறை வேலையாக்கப்பட்டிருந்தது.

- 100 பயிர்ச்செய்கை கிணறுகளை மீள் நிர்மாணிப்பதற்காக ரூபா 1 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 59 பயிர்ச்செய்கை கிணறுகள் மாத்திரம் மீள்நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

- மலர்ப் பயிர்ச்செய்கைக்காக மாதிரிக் கூடாரங்களை நிர்மாணிப்பதற்காக 38 நலனாளிகளுக்கு ரூபா 3 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக பங்குபற்ற வேண்டிய 09 நலனாளிகள் செயற்திட்டத்தைக் கைவிட்டிருந்தனர்.

- இறக்குமதி செய்யும் விவசாய பயிர்களை பரவலாக்குவதற்காக 55 நலனாளிகளை இலக்காகக் கொண்டு 27 ஏக்கரில் வாழை பயிரிடுவதற்காக ரூபா 4 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. பின்னர் அந்த செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

- மீளாய்வாண்டின் போது ரூபா 5 மில்லியன் செலவில் 150 அபிவிருத்தி நாற்று மேடைகள் உருவாக்குவதற்கு ரூபா 4.6 மில்லியன் செலவில் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிந்தன. எனினும் அதில் ரூபா 2 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் 2018 சனவரி 29 ஆந் திகதி வரையிலும் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிகருக்கவில்லை.

- இறக்குமதி பயிராக மரவெள்ளி பயிர்ச்செய்கைக்காக 45,000 கிளைத் துண்டங்கள் விவசாயிகளுக்கு பகிந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 20,265 மரவெள்ளி கிளைத் துண்டங்கள் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தாமலும் செயற்திட்டத்தை அமுல்படுத்தாமலும்

மாகாண சுகாதார திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது நிறைவேற்ற வேண்டியதாகக் காணப்பட்ட செயற்திட்டம் அல்லது பணிகள்

நிறைவேற்றப்படாதிருந்த சில சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

- மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட வேண்டிய ரூபா 509.99 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியுடைய 142 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாமல் 2018 ஆம் ஆண்டிற்கு தொடர் வேலையாக்கப்பட்டிருந்தது.
- மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியம் மற்றும் இரண்டாம் நிலை சுகாதாரம் சார்ந்த செயற்திட்டத்தின் கீழ் (SHSDP) ரூபா 1,157.23 மில்லியன் நிதிஏற்பாடுகளிலிருந்து 50 சதவீதத்திற்கு அண்ணளவான அளவு நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.
- இரண்டாம் நிலை சுகாதாரம் சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் (SHSDA) கீழ் 2013 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 566 மில்லியன் நிதிஏற்பாடுகளில் ரூபா 269 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 47 செயற்திட்டங்கள் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.
- மீளாய்வாண்டின் போது தம்முத்தேகம வைத்தியசாலையில் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 56.06 கூட்டுப்பெறுமதியான 03 ஒப்பந்தங்கள் 2018 சனவரி 08 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டு வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

ஊவா மாகாண சபை

ஊவா மாகாண சபையால் 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 22,261 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 18,821 மிலியன் அரசாங்க மானியங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கும் ரூபா 3,440 மில்லியன் உள்ளக மார்க்கமாக பெற்றுக் கொள்வதற்கும் மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது மீண்டெழும் செலவினமாக ரூபா 19,339 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 2,994 மில்லியனாக மொத்தம் ரூபா 22,333 ஆன செலவினம் மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 19,457 மில்லியனும் உள்ளக மார்க்கமாக ரூபா 3,487 மில்லியனுமாக ரூபா 22,944 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது மீண்டெழும் செலவினமாக ரூபா 20,069 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினமாக ரூபா 3,391 மில்லியனுமாக மொத்தம் ரூபா 23,460 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

ஊவா மாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பாக கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

வருமான சேகரித்தலுக்காக தேவையான நியதிச் சட்டத்தினை நிறைவேற்றாமை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தத்தில் மாகாண சபைகளுக்கு கையளிக்கப்பட்டுள்ள விடயங்கள் பட்டியலுக்கு உள்ளடக்கப்பட்ட 13 வருமான விடயங்கள் தொடர்பாக ஊவா மாகாண சபையினால் நியதிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. 06 வருமான விடயங்களின் மீளாய்வாண்டின் நிதி மதிப்பிடுவதற்கு உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் வருடாந்த வருமான மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருந்த 21 வருமான விடயங்களுக்குரிய வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய வருமானம் அனுப்பாமை

மாகாண சபைக்கு நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களாக முறையாக ரூபா 77.59 மில்லியன் மற்றும் ரூபா 74.32 மில்லியன் கிடைத்திருந்தது. அப்பணத்தை உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய சட்டங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம், இரண்டு மாநகர சபைகளுக்கும் நகர

சபைக்கும் 25 பிரதேச சபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அப்பணம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

கைவிரலடையாள இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுக்காமை

2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 2009/09 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண சுகாதார திணைக்களத்திற்குரிய 135 நிறுவனங்களுக்காக ரூபா 7.69 மில்லியன் செலவிடப்பட்டு கைவிரலடையாள இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவ்வியந்திரங்கள் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளியேறல்களை பதிவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

நாய் மலடாக்கல் செயற்திட்டம்

2017 ஏப்ரல் 07 ஆந் திகதிய DDG/PHSI/DA4/R/6/2017 ஆம் இலக்க சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் பிரதிப் பணிப்பாளரின் கடிதத்தின் மூலம் ஊவா மாகாணத்தில் நாய் மலடாக்கல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 21.63 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் ஆரம்பிக்கும் சந்தர்ப்பங்களிலேயே 9000 நாய்களை மலடாக்குவதற்கு ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எதிர்பார்த்த அளவில் 44 சதவீதத்திற்கு குறைந்த அளவிலான நாய்கள் மலடாக்கப்பட்டிருந்தனை. இச்செயற்திட்டத்திற்காக ஊவா மாகாண கால்நடை உற்பத்தி திணைக்களத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

இருதநோய் சிகிச்சை சேவை தடைப்பட்டிருத்தல்

இருதய நோய் தொடர்பாக Total Lung Capacity மற்றும் DLCO ஆகிய பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக ஊவா மாகாணத்திற்காக உள்ள ஒரே Cosmed Quart PFT 4 Lung Function இயந்திரம் 2016 ஆம் ஆண்டு முதல் செயலற்றுக் காணப்பட்டது. அவ்வியந்திரம் 2018 ஏப்ரல் 20 ஆந் திகதி மாகாண சுகாதார திணைக்களத்தினால் திருத்தம் செய்யப்படாமையால் 20 மாதங்களுக்கு அண்மித்த காலமாக நோயாளர் சேவை தடைப்பட்டிருந்தது.

மருத்துவ உபகரணங்கள் திருத்தம் செய்யப்படாமை

மஹியங்கனை ஆதார வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவிற்காக 2014 ஆகஸ்ட் 21 ஆந் திகதி பொருத்தப்பட்டிருந்த Therapeutic Ventilator உபகரணம் Airway Pressure high (Indicated Alarm) பழுதடைந்தமையால் அவ்வவ்போது இயங்காதிருந்தது. 2017 ஆம் ஆண்டில்

06 சந்தர்ப்பங்களிலும் அவ்வியந்திரத்தை திருத்தி தருமாறு வேண்டுகோள் இடப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 07 ஆந் திகதி வரை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

2016 நவம்பர் 28 ஆந் திகதி மஹியங்கனை ஆதார வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவிற்காக ரூபா 4.50 மில்லியன் பெறுமதியான Continuons Renal Replacement Therapy இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வியந்திரத்திற்கு தேவையான பாவனை பொருள் வழங்குனர் நிறுவனமொன்றின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு முடியுமாக இருந்த போதிலும், அதற்காக அந்நிறுவனத்துடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால், 10 வருட காலமாக அவ்வியந்திரத்திற்கு தேவையான பாவனை பொருள் பகுதிகளை பெற்றுக்கொள்ள முடியாமையால் மீளாய்வாண்டில் இயந்திரம் செயற்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

பதவியணியினர் இல்லாமையால் வைத்தியசாலை நடவடிக்கைகளை ஸ்தம்பித்தல்

மஹியங்கனை ஆதார வைத்தியசாலையின் தாதியர் மற்றும் கனிஷ்ட பதவியணியினர் பற்றாக்குறை காரணமாக 03 இரத்த வடிகட்டல் இயந்திரங்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் பதவியணியினர் பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலைக்கு வருகை தரும் சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அதிதீவீர சிகிச்சை வைத்தியர் ஒருவர் இல்லாமையால் மஹியங்கனை ஆதார வைத்தியசாலையின் ENT பிரிவு 04 மாதங்கள் காலமாக முழுமையாக செயற்படாது இருந்தது.

போதியளவில் நீர் வழங்கல் கிடைக்காமை

மஹியங்கனை ஆதார வைத்தியசாலையில் செயற்படுத்தப்படும் 33 பிரிவுகளிலிருந்து அத்தியாவசிய சேவைகளை வழங்கும் பிரிவுகள் GYN, Maternity Labor, ICU மற்றும் PBU போன்ற 04 பிரிவுகளுக்காக நீரை வழங்குவதற்காக 10000 லீற்றர் நீர்த்தாங்கியொன்று மாத்திரம் காணப்பட்டது. இதனால் அந்த பிரிவுகளின் சேவைகளை நிறைவேற்றுவதற்காக போதியளவு நீர் வழங்கல் கிடைத்திருக்கவில்லை.

மருந்து முகாமைத்துவம்

மாகாண சபையின் வைத்தியசாலைகளிலும் மருந்துக் களஞ்சியங்களிலும் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- கிராந்துருகோட்டை பிரதேச வைத்தியசாலை மூலம் கோரப்படாத ரூபா 4.50 மில்லியன் பெறுமதியான 128 மருந்து வகைகள் வழங்கப்பட்டிருந்த

காரணத்தினால் கருத்திற் கொள்ளக்கூடியளவு மருந்துகள் இருப்பொன்று களஞ்சிய வளவில் காணப்பட்டன. அம்மருந்துகளை பயன்படுத்தாமலும் மிகைகள் காணப்பட்டமையாலும் மருந்துகள் காலாவதியாவதற்கான ஆபத்தொன்று காணப்பட்டது.

- கிராந்துருகோட்டை பிரதேச வைத்தியசாலைக்கு ரூபா 2.73 மில்லியன் பெறுமதியான 85 மருந்துகள் வேண்டப்பட்ட அளவினை விட கூடுதலாக வழங்கப்பட்டிருந்தன.

- பதுளை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக களஞ்சியத்தில் 2018 சனவரி 15 ஆந் திகதி வரையிலும் ரூபா 11.82 மில்லியன் பெறுமதியான 48 குறைவாக பயன்படுத்தப்படுகின்ற் மருந்துகள் (Slow moving drugs) உருப்படிகள் காணப்பட்டன. அம்மருந்துகளை தேவைப்படும் வைத்தியசாலைகளை இனங்கண்டு அம்மருந்துகளை வைத்தியசாலைக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையால் குறித்த மருந்து இருப்புக்கள் காலாவதியாவதற்கான ஆபத்தொன்று காணப்பட்டது.

மாகாண பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகள்

2001 இன் 1 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபையின் நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பிரமாணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தயாரிப்பதற்கு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுத்திருக்காமையினால் புதிய வீதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக வெளிப்படையான செயல்படிக் கோவையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே எதிர்வரும் நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் பாதீடு தயாரிக்கப்பட்டு அந்த அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதும் கணக்காய்வு ஆண்டு உட்பட முன்னைய ஆண்டுகளுக்குரிய பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபைக்கான பாதீட்டை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

புடவைக் கைத்தொழில்

ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தில் காணப்படும் 96 கை இயந்திரங்கள் நுட்பவியாளர்கள் இல்லாமை காரணமாக விளைவற்றுக் காணப்பட்டன. புடைவைக் கைத்தொழில் உற்பத்திகள் 08 தவணைகளில் அறவிடப்படும் அடிப்படையில் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 2.84 மில்லியன் நிலுவையாக காணப்பட்டது. அந்நிலுவை மீதியில் ரூபா 2.26 மில்லியன் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட

காலமாக நிலுவையாக இருந்து வரும் மீதிகளாக இருந்தன.

பிரம்புக் கைத்தொழில்

ரதலியத்த பிரம்புக் கைத்தொழில் உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையமொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அதில் எவ்வித உற்பத்தியொன்றும் செய்யப்பட்டிருக்கவில்லை. கைத்தொழில் செயற்படுத்தப்படாமை காரணமாக இந்நிலையத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த பிரம்பு உற்பத்தி மதியுரையாளருக்கும் காவலாளிக்கும் செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் நிலையத்தின் நீருக்காகவும் செலவிடப்பட்ட ரூபா 1.43 மில்லியன் பயனற்றதாக இருந்தது.

சாரதிப் பயிற்சி தொடர்பான தவறான தகவல் சமர்ப்பித்தமை

சாரதிப் பயிற்சிகளை வழங்குவதற்காக செய்யப்பட வேண்டிய கொடுப்பனவில் 50 சதவீதம் பயிற்சி பெறுபவராலும், எஞ்சியவற்றை மாகாண சபையினாலும் செலவிடப்பட்டு பதுளை மாவட்டத்தின் பயிலுனர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்மொன்று செயற்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபையால் 23 பயிலுனர்கள் வெற்றிகரமாகப் பயிற்சியை பூர்த்தி செய்து தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதாக மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தினால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற உறுதிப்படுத்தலின் பிரகாரம் அப்பயிற்சி பெற்ற 14 பயிலுனர்கள் எழுத்து மூல பரீட்சைக்கோ தோன்றியிருக்கவில்லை.

இறக்குமதி பசுக்களை சுகாதார பாதுகாப்பற்ற விதத்தில் வைத்திருத்தல்

பொரலந்த கால்நடை பண்ணைக்கு 2017 திசெம்பர் 24 ஆந் திகதி உயர் தரத்திலான 100 பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. இக்கால்நடைகளுக்காக மாட்டுத் தொழுவமொன்றை அமைப்பதற்காக 2017 நவம்பர் 06 ஆந் திகதி உடன்படிக்கைகளை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் மாட்டுத் தொழுவம் நிர்மாணம் 2018 பெப்ரவரி 03 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், 2018 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் உரிய நிர்மாணம் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் பசுக்கள் சுகாதார பாதுகாப்பற்ற விதத்தில் வைக்கப்பட்டிருந்தன.

சப்ரகமுவ மாகாண சபை

சப்ரகமுவ மாகாண சபையால் 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 21,569 மில்லியன் அரசாங்க மானியத்தினாலும், உள்ளக மார்க்கங்களிலிருந்து ரூபா 4,050 மில்லியனுமாக ரூபா 25,709 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் மீண்டெழும் செலவினமாக ரூபா 23,245 மில்லியனும் மூலதனச் செலவினமாக ரூபா 2,464 மில்லியனாக மொத்தம் ரூபா 25,709 மில்லியனைப் பயன்படுத்துவதற்கு மதிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 23,580 மில்லியனும் உள்ளக மார்க்கங்களிலிருந்து ரூபா 4,241 மில்லியனுமாக ரூபா 27,821 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினமாக ரூபா 22,268 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினமாக ரூபா 6,263 மில்லியனுமாக ரூபா 28,931 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

சப்ரகமுவ மாகாண சபைக்குரிய 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் பிரதிநிதிகளுக்காக சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள் வழங்குதல்

2014 ஆம் ஆண்டின் அரசின் பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் பொதுமக்கள் பிரதிநிதிகளுக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சப்ரகமுவ மாகாணத்திற்குரிய உள்ளூராட்சி மன்றங்களின் 63 பொதுமக்கள் பிரதிநிதிகளால் முதலாவது கட்டத்தின் கீழ் மோட்டார் சைக்கிள்களை பெற்றுக்கொள்வதற்காக திவிநகும அபிவிருத்தி திணைக்களத்தினால் ரூபா 50,000 கடன் தொகை மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. இக்கடன் தொகையில் மீளச் செலுத்தப்படாமல் 2018 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் நிலுவைக் கடன் மீதி ரூபா 873,951 ஆக இருந்தது. அதற்கு மேலதிகமாக ரூபா 50,000 சலுகை கடன் தொகையை ஒரே தடவையில் கொடுப்பனவு செய்யும் அடிப்படையில் மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டிருந்த 37 பொதுமக்கள் பிரதிநிதிகளிடமிருந்து ரூபா 1.85 மில்லியன் கூட்டுத்தொகையான கடனை அறவிடுவதற்கு 2018 பெப்ரவரி மாதம் வரையிலும் திவிநகும அபிவிருத்தி திணைக்களம் தவறியிருந்தது.

வெளிநாட்டு சுற்றுலாவிற்கான செலவினம்

மீளாய்வாண்டின் போது மாகாண சபையால் வெளிநாட்டு சுற்றுலாவிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவினம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

- அழைப்பு விடுக்கப்பட்ட வெளிநாட்டு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட வசதிகள் தொடர்பாக உறுதிப்படுத்தப்படாமல் முதலமைச்சர் மற்றும் தனிப்பட்ட செயலாளர் பங்குபற்றிய 05 வெளிநாட்டு சுற்றுலாக்களுக்காக இணைந்த படிகள் மற்றும் உபசரிப்பு செலவினமாக ரூபா 2.70 மில்லியன் செலவு

செய்யப்பட்டிருந்தது. 04 ஞாபகார்த்த சின்னங்களை எடுத்துச் செல்வதற்காக ரூபா 1.24 மில்லியன் மாகாண சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

- மீளாய்வாண்டின் போது வியாட்நாவில் மேற்கொண்ட சுற்றுலாவொன்றுக்காக 10 உத்தியோகத்தர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த படிகள் பிழையாக கணிப்பிடப்பட்டுள்ளதாக ஏற்றுக்கொண்டிருந்த பணத்தொகையில் மொத்தம் ரூபா 3.23 மில்லியன் மீள கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அச் சுற்றுலாவில் பங்குபற்றியிருந்த முலமைச்சர், பிரத்தியேக செயலாளர் மற்றும் 04 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1.94 மில்லியன் மேலும் அறவிடப்பட்டிருந்தது.

- சூரிய சக்தி மூலம் மின்சாரத்தை பிரபல்யப்படுத்தும் செயற்திட்டமொன்றுக்காக கைத்தொழில் அமைச்சு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர் சிலர் சீனாவில் சுற்றுலாவொன்றை மேற்கொண்டிருந்தனர். இச்சுற்றுலாவிலிருந்து எதிர்ப்பார்க்கப்பட்ட தொழில்நுட்ப இயலுமையை பெற்றுக்கொள்ளல், பயிற்சி வழங்கல், வெளிநாட்டிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்தல் போன்ற விடயங்கள் எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதன் பின்னர் மாகாண கைத்தொழில், சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சின் கீழான 05 நிறுவனங்களின் சூரிய சக்தி தேவைப்பாட்டை உள்நாட்டு நிறுவனமொன்றிலிருந்து பூர்த்தி செய்து கொள்வதற்கு ரூபா 5.83 மில்லியன் செலவு செய்திருந்தது. அதன் பிரகாரம் வெளிநாட்டு சுற்றுலாவிற்காக செலவிடப்பட்ட ரூபா 6.89 மில்லியன் பயனற்ற செலவினமாக இருந்தது.

செயலமர்வுகளை ஹொட்டெல்களில் நடாத்துதல்

2007 பெப்ரவரி 28 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ/1/40 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் அமைச்சுக்கள் திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் தமது கூட்டங்கள், கருத்தரங்குகள், செயமலர்வுகள் என்பவற்றுக்காக ஹொட்டெல் தெரிவு செய்யக்கூடாததுடன் தேசிய சுற்றுலாக்களின் போது உணவு மற்றும் தங்குமிடங்களுக்காக செலுத்த வேண்டிய ஹொட்டெல் கட்டணங்கள் அரசின் பணத்திலிருந்து தீர்வு செய்யக்கூடாது என அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. மாகாண சபையால் அந்த அறிவுறுத்தல்களை கருத்திற் கொள்ளாமல் பின்வரும் செயலரமர்வுகளை ஹொட்டெல்களில் நடாத்தியிருந்தன.

- முதலமைமைச்சு மற்றும் சபை செயலாளர் அலுவலகத்தினால் 2017 ஆம் ஆண்டின் போது மாகாண அமைச்சின் உத்தியோகத்தர்களினதும் மாகாண ஆயுர்வேத வைத்தியர்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மொத்தம் ரூபா 1.11 மில்லியன் தனியார் ஹொட்டல்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- மாகாண சபை செயலாளர் அலுவலகத்தினால் சப்ரகமுவ மாகாண சபையின் அமைச்சர்கள், உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கான இரண்டு நாள் செயலமர்வொன்று தனியார் ஹொட்டல் ஒன்றில் நடாத்தப்பட்டு ரூபா 3.33 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

அச்செயலமர்விற்காக ரூபா 190,000 மேலதிக எரிபொருளுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அறைக்கட்டணங்கள் மற்றும் விரிவுரை மண்டப செலவினத்தில் ரூபா 656,500 விளைவற்றதாக இருந்தது.

கண்காணிப்பு உறுப்பினர்களுக்கு எரிபொருள் படிகள் கூடுதலாக கொடுப்பனவு.

2014 ஒக்தோபர் 15 ஆந் திகதிய நாற்பதாவது அமைச்சரவை கூட்டத்தின் பிரகாரம் மாகாண சபையின் ஒவ்வொரு அமைச்சிற்காக நியமனம் செய்யப்பட்டுள்ள மேற்பார்வை ஊழியர்களுக்கு, அவர்களுக்கு உரித்துடைய உறுப்பினர் எரிபொருள் படிகளுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு ரூபா 10,000 ஆன மேலதிக எரிபொருள் படியொன்று வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதற்கு முரணாக மாதமொன்றுக்கு ரூபா 15,000 மேலதிக எரிபொருள் படிகளாக இரண்டு மாகாண அமைச்சுகளினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2014 ஒக்தோபர் மாதத்திலிருந்து 2017 செப்தெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கு 16 உறுப்பினர்களுக்கு ரூபா 2.30 மில்லியன் கூட்டுத்தொகையான எரிபொருள் படிகள் கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது.

முறைகேடுகள்

மாகாண சபையால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் போது பின்வரும் முறைகேடுகள் கண்டறியப்பட்டன.

- பிரதான அமைச்சு சட்டம் மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி மன்றங்கள், சுகாதாரம், உள்நாட்டு மருத்துவம், மகளிர் விவகாரம், கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஒலிபரப்பு, வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் சமய அலுவல்கள் அமைச்சினால் வெவ்வேறு சமய உற்சவங்களுக்காக விஹாரைகளுக்கு ரூபா 8.34 மில்லியன் நன்கொடைகள் வழங்கப்பட்டிருந்தன. அந்நன்கொடைகளிலிருந்து 20 சதவீதமான மாதிரியொன்றை அதாவது ரூபா 1.70 மில்லியனான நன்கொடைகளை பரிசோதித்த போது ரூபா 1.33 மில்லியன் உரிய விஹாரைகளுக்கு வழங்கப்படவில்லையென கண்டறியப்பட்டன.

- அலுவலக உதவியாளர் ஒருவரால் போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றின் கூரையைத் திருத்தியமைத்தல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கலுக்காக ரூபா 150,000 ஆன காசோலையொன்று பிரதான அமைச்சு சட்டம் மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி மன்றங்கள், சுகாதாரம், உள்நாட்டு மருத்துவம், மகளிர் விவகாரம், கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஒலிபரப்பு, வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் சமய அலுவல்கள் அமைச்சிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

- மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம் அமைச்சினால் அம்பிலிபிட்டிய பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த திம்பொல்கெட்டிய வித்தியாலயத்தின் விளையாட்டரங்கு அபிவிருத்தி செயற்திட்டத்தின் I ஆம் கட்டத்திற்காக விவசாய அமைப்பொன்றுக்கு ரூபா 1.99 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அக் கட்டத்தின்

கீழ் அவ்வாறான செயற்பாடொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம் அமைச்சினால் அம்பிலிபிட்டிய பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த 06 நிர்மாண வேலைகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பெறுமதியை விஞ்சி ரூபா 5.07 மில்லியன் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

எதிர்பார்த்த காலப்பகுதியில் பயணிகள் மேவுகை வழங்கி பொருத்தாமை.

பிரதான அமைச்சு சட்டம் மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி மன்றங்கள், சுகாதாரம், உள்நாட்டு மருத்துவம், மகளிர் விவகாரம், கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஒலிபரப்பு, வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் சமய அலுவல்கள் அமைச்சினால் சப்ரகமுவ மாகாணத்தினுள் தெரிவுசெய்யப்பட்ட 200 இடங்களுக்காக 90 நாட்கள் காலப்பகுதியில் ரூபா 56.70 மில்லியன் பெறுமதிக்கு பயணிகள் மேவுகை வழங்குவதற்காக 2015 திசெம்பர் 30 ஆந் திகதி தனியார் கம்பனியுடன் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. அச் செயற்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த பெறுகை மதிப்பீடு, ஒப்பந்த வழங்கல் மற்றும் நிர்மாணங்களில் இடம் பெற்றிருந்த குறைபாடுகள் காரணமாக மாகாண சபை நிதியத்திற்கு ரூபா 11.01 மில்லியன் கூட்டுத்தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. அவ்வாறே 2018 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் 15 பயணிகள் மேவுகைகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை 2016 யூன் 30 ஆந் திகதியின் பின்னர் முறையான கால நீடிப்பு காலத்திற்காக ரூபா 2.35 மில்லியன் தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

அரச வீடுகளின் வாடகை முறையாக அறவிடப்படாமை.

நிவித்திகல வைத்தியசாலைக்குச் சொந்தமான வைத்தியர் உத்தியோகபூர்வ விடுதி, அம்பிலிபிட்டிய வைத்தியர் உத்தியோகபூர்வ விடுதி மற்றும் அக்காரியாலயங்களுக்குரிய 09 கிராமிய சுகாதார நிலையங்களில் 2009 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை குடியிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து தாபன விதிக்கோவை ஏற்பாடுகளுக்கு முரணாக வீட்டு வாடகை அறவிடப்பட்டதன் காரணமாக ரூபா 2.02 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மாகாண சபையால் இழக்கப்பட்டிருந்தது.

உக்காத கழிவுகளை களஞ்சியப்படுத்துவதற்கு வசதிகள் வழங்கப்படாமை

2016 யூலை 27 ஆந் திகதி சப்ரகமுவ மாகாண விஷேட டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கூட்ட அறிக்கையின் பிரகாரம் உக்காத கழிவுகளை களஞ்சியப்படுத்துவதற்கு வசதிகள் இல்லாத உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு களஞ்சிய வசதிகளை வழங்குவதற்காக கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இடையே 12 நிறுவனங்களுக்காக 2018 மார்ச் 30 ஆந் திகதி வரையிலும் நிரந்தர கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

உத்தியோகத்தர்களின் பயிற்சி மற்றும் இயலுமை அபிவிருத்திக்குரிய நடவடிக்கைகளை எடுக்காமை.

மாகாண விவசாய அமைச்சினால் பயிற்சி மற்றும் இயலுமை அபிவிருத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 22.49 மில்லியன் நிதி ஏற்பாடு அந்த

நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்படாமல் 750 கமநல விற்பனைக் கூடங்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டு 2017 நவெம்பர் 23 ஆந் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாதிருந்த ரூபா 1.23 மில்லியன் கூட்டுத்தொகையான 41 கமநல விற்பனை கூட்டங்கள் கணக்காய்வு பௌதீக பரிசோதனைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. நலனாலிகளை தெரிவு செய்தல் அரச நிறுவனமொன்று அல்லது அரச உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் பேரில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், உரிய நலனாளிகளுக்கு அந்த கமநல விற்பனைக் கூட்டங்கள் நியாயமான அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டமை தொடர்பாக உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

இசைக்கருவிகள் கொள்வனவுப் பகிர்ந்தளித்தலில் குறைபாடுகள்

மாகாண கல்வி அமைச்சினால் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 9.42 மில்லியன் செலவிடப்பட்டு இசைக்கருவி தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதில் ரூபா 1.59 மில்லியன் கூட்டுத்தொகையான 36 இயுபோனியம் கொள்வனவு செய்தற்காக 2016 செப்தெம்பர் மாதத்தின் போது உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் மாதம் வரையில் அப்பொருட்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. 2016 திசெம்பர் மாதத்தில் கிடைத்திருந்த ரூபா 7.82 ஆன எஞ்சிய பொருள் இருப்பு 2018 சனவரி மாதம் வரையிலும் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. பொருட்களின் உத்தரவாதக் காலம் 02 ஆண்டுகளாக இருந்த போதிலும் அவற்றை பயன்படுத்துவதற்கு முன்னர் ஓராண்டு காலம் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. அதற்கு மேலதிகமாக அப்பொருட்களின் தரப் பரிசோதனை அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கு தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு 12 மாத காலமொன்றை எடுத்திருந்தது.

மூடப்பட்ட பாடசாலைகளை தொடர்பான நடவடிக்கைகள்

மாணவர்கள் குறைவு அல்லது ஏனைய இயற்கை அழிவுகள் என்பவற்றின் அடிப்படையில் 1992-2018 காலப்பகுதியில் சப்ரகமுவ மாகாணத்தில் 130 பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. அதில் 57 பாடசாலைகள் பிரதேச செயலகத்திற்கு கையளிக்கப்படாதிருந்ததுடன் 05 பாடசாலைகள் வேறு நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்தன. 17 பாடசாலைகளின் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் எந்தவொரு நிறுவனமொன்றுக்கும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 02 ஆண்டுகள் முதல் 18 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் 42 பாடசாலைகளின் காணியோ கட்டிடங்கள் எவ்வித பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

முன்னால் மாகாண சபை பிரதி நிதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த சொத்துக்களை மீள பெற்றுக்கொள்ளாமை

மாகாண சபை பிரதிநிதிகளுக்கு மாகாண சபையால் வழங்கப்பட்டிருந்த சொத்துக்களை சபை கலைக்கப்பட்டதன் பின்னர் மீள கையளிக்க வேண்டிய போதிலும் முன்னால் முதலமைச்சர் உட்பட மாகாண சபை பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 7.16 மில்லியன் பெறுமதியான 58 உபகரணங்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கு மாகாண சபை தவறியிருந்தது.

கிழக்கு மாகாண சபை

கிழக்கு மாகாண சபையால் 2017 ஆம் ஆண்டிற்காக அரசாங்க மானியங்களிலிருந்தான ரூபா 22,154 மில்லியன் தொகை மற்றும் உள்ளக மார்க்கங்களிலிருந்தான ரூபா 3,475 மில்லியன் தொகை உள்ளடங்கலாக ரூபா 25,629 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்தது. மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 22,154 மில்லியன் மற்றும் மூலதன செலவினத்திற்கான ரூபா 4,141 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 26,295 மில்லியன் கூட்டுமொத்தம் 2017 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்படுவதற்கு மதிப்பிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க, அரசாங்க மானியங்களிலிருந்தான ரூபா 18,668 மில்லியன் மற்றும் உள்ளக மார்க்கங்களிலிருந்தான ரூபா 3,613 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 22,281 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானம் 2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்டிருந்தது.

மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 22,052 மில்லியன் மற்றும் மூலதன செலவினத்திற்கான ரூபா 1,157 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 23,209 மில்லியன் தொகை 2017 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டிருந்தது

கிழக்கு மாகாண சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின்போது மேற்கொள்ளப்பட்ட பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

போக்குவரத்துப் படகு பயன்படுத்தப்படாமை (Transport Ferry)

காத்தான்குடிக்கும் கொக்கட்டிச்சோலைக்கும் இடையே போக்குவரத்து சேவைக்கு பயன்படுத்துவதற்காக ரூபா 323,550 கிரயத்தை செலவிட்டு கிண்ணியாவிற்கும் திருகோணமலைக்கும் இடையே பயணிகள் போக்குவரத்து சேவைக்காக பயன்படுத்தப்பட்ட படகொன்று 2012 இல் காத்தான்குடிக்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் இப்படகை திருத்தம் செய்வதற்காக ரூபா 489,500 தொகையை காத்தான்குடி பிரதேச செயலகம் செலவிட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 யூன் 30 வரை இது விளைவற்றிருந்தது. இதன் விளைவாக, இப்படகை எடுத்துவந்ததற்கான நோக்கம் இழக்கப்பட்டிருந்தது

நான்கு சில்லு உழவு இயந்திரத்தை ஏலமிடுதல்

1992 இல் காத்தான்குடி நகர சபைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட ரூபா 600,000 பெறுமதியான நான்கு சில்லு உழவு இயந்திரம் 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இந்த உழவு இயந்திரத்தை திருத்தம் செய்வதற்காக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 315,203 கூட்டுமொத்த தொகையை சபை செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், 2015 மே 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை கருத்திற்கொள்ளாமல் 2016 யூலை 02 இல் சபையின் செயலாளரால் ரூபா 16,150 தொகைக்கு மாத்திரமே இது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

நூலகக் கட்டிடத்தை வாடகைக்கு விடுதல்

காத்தான்குடி நகர சபையின் நூலகக் கட்டிடத்தின் மாதாந்த வாடகையை ரூபா 125,000 ஆக விலைமதிப்பீட்டுத் திணைக்களம் பெறுமதியிட்டிருந்த போதிலும் சபையானது இக்கட்டிடத்தை 04 ஆண்டு காலப்பகுதிக்கு ரூபா 5,000 மாதாந்த வாடகையில் தனியார் கல்வி நிறுவனமொன்றிற்கு வாடகைக்கு கொடுத்திருந்தது. இதன் விளைவாக, ரூபா 4.75 மில்லியன் வாடகை வருமானத்தை சபை இழந்திருந்தது.

மருத்துவக் கழிவு சுத்திகரிப்பான் (Medical Waste Incinerator) பயன்படுத்தப்படாமை

திருகோணமலை நகர சபையின் வீரநகர் பகுதியிலுள்ள வைத்தியசாலைகளிலிருந்து

அகற்றப்படுகின்ற அபாயகரமான கழிவுகளை எரிக்கும் நோக்கில் சுத்திகரிப்பானின் நிறுவுதல் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. அதற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 4,230,155 தொகையாகும். எவ்வாறாயினும், இச் சுத்திகரிப்பானை செயற்படுத்துவதற்கு மின்சாரம் பெறப்படாததன் காரணமாக தற்போது இது விளைவற்றிருந்தது. இதன் விளைவாக, திருகோணமலை மாவட்டத்திலுள்ள கன்னியா பகுதியின் திறந்த காணியில் அபாயகரமான வைத்தியசாலைக் கழிவுகள் அகற்றப்பட்டுவருகின்றன.

தனியார் துறைக்குக் கையளிக்கப்பட்ட சபைக்குச் சொந்தமான காணிகள்

திருகோணமலை நகர சபைக்குச் சொந்தமான காணிகளை தனியார் துறைக்குக் கையளிப்பதற்கான அதிகாரத்தை தலைவர் கொண்டிருக்காத போதிலும் சபைக்குச் சொந்தமான 3,212 பேர்ச்கள் பரப்பளவான காணிகள் 2008 ஆம் ஆண்டில் முன்னைய தலைவரால் 576 நபர்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இது தொடர்பில் 2018 யூன் 30 வரையிலும் முன்னைய தலைவரிற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

வியாபாரக் கடைகள் செயற்படுத்தப்படாமை

திருகோணமலை நகர சபைக்குச் சொந்தமான 299 கடைகளில் 90 கடைகள் வாடகைக்கு கொடுக்கப்படாமல் 2011 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றிருந்தது. இதன் விளைவாக, ஏறத்தாழ ரூபா 2,000,000 வருமானத்தை சபை இழந்திருந்தது.

திண்மக் கழிவு அகற்றல் கொள்கலன்கள் பயன்படுத்தப்படாமை

ரூபா 1.8 மில்லியன் கிரயத்தில் திருகோணமலை நகர சபையால் கொள்வனவு செய்யப்பட்ட 424 திண்மக் கழிவு அகற்றல் கொள்கலன்கள் உரிய நோக்கங்களிற்குப் பயன்படுத்தப்படாமல் 01 ஆண்டு தொடக்கம் 02 ஆண்டுகள் வரையான காலவீச்சில் விளைவற்றிருந்தன. இதன் விளைவாக, குடியிருப்பாளர்களால் திண்மக் கழிவுகளை தரம்பிரிக்கும் நோக்கம் இழக்கப்பட்டிருந்தது.

நூலகக் கட்டிடம் பூர்த்திசெய்யப்படாமை

ரூபா 195 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ரூபா 74.7 மில்லியன் தொகையானது 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது மட்டக்களப்பு மாநகர சபைக்கான பொது நூலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சபையானது 4 ஆண்டுகளிற்கு மேலாக நிர்மாண வேலையை பூர்த்திசெய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. இதன் விளைவாக, மிகுதி வேலைகளை (80 சதவீதம்) பூர்த்திசெய்வதற்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 195 மில்லியனிலிருந்து ரூபா 207 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது.

மருத்துவ உபகரணம் மற்றும் மருந்துகள் பயன்படுத்தப்படாமை

நிந்தவூர் மற்றும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைகளில் நாள்பட்ட சிறுநீரக பாதிப்பிற்குள்ளான (Chronic Kidney Disease) (CKD) நோயாளர்கள் பற்றாக்குறை காரணமாக இரத்த சுத்திகரிப்பு பிரிவுகள் (Dialysis Units) காணப்படவில்லை. எவ்வாறாயினும், மாகாண சுகாதாரத் திணைக்களம் இவ் வைத்தியசாலைகளிற்காக ரூபா 18.5 மில்லியன் கிரயத்தில் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சைக்கான (dialysis treatment) உபகரணத்தையும் ரூபா 6.15 மில்லியன் தொகையான மருந்துகளையும் தேவைகளை கருத்திற்கொள்ளாமல் கொள்வனவு செய்திருந்தமையால் அவ் உபகரணம் 2017 மார்ச் 22 வரையிலும் விளைவற்றிருந்தது. மேலும், பொத்துவில் மற்றும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைகளிற்கு ரூபா 4.89 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்ட 02 ஊடுகதிர் (x-ray) இயந்திரங்கள் அவற்றை செயற்படுத்துவதற்கான மருந்து சம்பந்தமான தொழிலின் (PSM) பொருத்தமான தொழில்நுட்பவியலாளர்கள் (Suitable Technicians of Profession to Supplement to Medicine) காணப்படாததனால் 01 ஆண்டு தொடக்கம் 05 ஆண்டுகள் வரையான காலவீச்சில் விளைவற்றிருந்தன.

வாகனங்கள் பயன்படுத்தப்படாமை

சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சின் 2018 சனவரி 12 ஆம் திகதிய 01/08 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், திணைக்களத்தின் பயன்படுத்தப்படாத வாகனங்கள் திணைக்களத்தின் அலுவலக வளாகத்தில் வைத்திருக்கப்படக்கூடாத போதிலும் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் 15 வாகனங்கள் 02 மாதங்கள் தொடக்கம் 84 மாதங்கள் வரையான காலவீச்சில் திருகோணமலை பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவின் வளாகத்தில் அவற்றை திருத்துவதற்கோ அல்லது ஏலமிடுவதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் காணப்படுகின்றன.

பதிற்கடமை அதிபர்களின் நியமனம்

கல்வி அமைச்சின் 1998 யூலை 06 ஆம் திகதிய 1998/23 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பிரிவின் பிரகாரம், தகுதிவாய்ந்த அதிபர்கள் நியமிக்கப்படும் வரை பதிற்கடமை அதிபர்கள் நியமிக்கப்பட முடியும். எவ்வாறாயினும், அதிபர் சேவைக்காக 215 உத்தியோகத்தர்கள் புதிதாக நியமிக்கப்பட்டதை கருத்திற்கொள்ளாமல் கிழக்கு மாகாணத்தின் பாடசாலைகளில் இலங்கை ஆசிரியர் சேவையிலுள்ள 255 ஆசிரியர்கள் பதிற்கடமை அதிபர்களாக வேலையிலீடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பாடசாலை ஆசிரியர்களின் பற்றாக்குறை மற்றும் மிகை

கல்முனை, சம்மாந்துறை மற்றும் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகங்களில் 291 ஆசிரியர்கள் மிகையாக காணப்பட்ட அதேநேரம் கிழக்கு மாகாணத்தினுள் அக்கரைப்பற்று, மட்டக்களப்பு மத்தி, மட்டக்களப்பு மேற்கு, கல்குடா, கிண்ணியா, மூதூர் மற்றும் திருகோணமலை வலயக் கல்வி அலுவலகங்களில் பாடசாலை ஆசிரியர்களிற்காக 1237 வெற்றிடங்கள் காணப்பட்டன. மேலும், மட்டக்களப்பு, கல்முனை மற்றும் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகங்களில் ஆரம்ப (பொது) பாடநெறிக்கான 227 ஆசிரியர்கள் மிகையாக காணப்பட்ட அதேநேரம் அக்கரைப்பற்று, மட்டக்களப்பு மத்தி, கல்குடா, கிண்ணியா மற்றும் மூதூர் வலயக் கல்வி அலுவலகங்களில் அதே பாடநெறிக்கான ஆசிரியர்களிற்காக 157 வெற்றிடங்கள் காணப்பட்டன.

பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் இடமாற்றங்கள்

கல்வி அமைச்சின் 2007 திசெம்பர் 13 ஆம் திகதிய 2007/20 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், பாடசாலையொன்றில் 08 ஆண்டுகளிற்கு மேலாக சேவையில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ள ஆசிரியர்களிற்கு இடமாற்றங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் இலங்கை ஆசிரியர் சேவையிலுள்ள 523 ஆசிரியர்கள், 24 அதிபர்கள் 2018 ஏப்ரல் 15 வரையிலும் பொருத்தமான பாடசாலைகளிற்கு இடமாற்றம் செய்யப்படாமல் 10 ஆண்டுகள் தொடக்கம் 18 ஆண்டுகள் வரையான காலவீச்சில் ஒரே பாடசாலையிலேயே காணப்பட்டனர்.

கணனி வள நிலையம் செயற்படாமை

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கணனி வள நிலையம் கணனிகள் காலங்கடந்தமை காரணமாக 2015 ஒக்தோபர் 01 இலிருந்து செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இந்த நிலையத்திலிருந்து ஐரீ கற்கைநெறிகள் மற்றும் பயிற்சி வசதிகளை பூர்த்திசெய்வதற்கான வாய்ப்புக்களை இழந்திருந்ததுடன் இந்நிலையத்தில் கிடைக்கக்கூடிய 32 கணனிகள் மற்றும் உப பாகங்கள், 30 கணனி கதிரைகள், 28 கணனி மேசைகள், 20 விரிவுரை மண்டப கதிரைகள், 03 வளிப்பதனாக்கிகள் மற்றும் 06 மின்விசிறிகள் போன்ற தளபாடம் மற்றும் உபகரணங்கள் நிலையம் செயற்படாததன் காரணமாக 02 ஆண்டுகளிற்கு மேலாக விளைவற்றிருந்தன. இதன் விளைவாக, இக் கணனிகளை பயன்படுத்தக்கூடிய தன்மையானது உத்தரவாதக் காலப்பகுதி முடிவடைந்ததன் காரணமாக ஐயத்திற்கிடமாக உள்ளது.

மடிக் கணனிகள் மற்றும் பக்ஸ் இயந்திரங்களை திருப்பிக் கொடுக்கத் தவறியமை

முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் 2008 தொடக்கம் 2011 வரையான காலப்பகுதியின் போது 37 மடிக்

கணனிகளையும் 37 பக்ஸ் இயந்திரங்களையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், அவற்றில் 21 மடிக் கணனிகளும் 21 பக்ஸ் இயந்திரங்களும் 2018 யூன் 30 வரை திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களின் கடன் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்படாமை

ரூபா 0.9 மில்லியன் கூட்டுத்தொகையான கடன் மீதிகள் 08 ஆண்டுகளிற்கு மேலாக மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களிடமிருந்து அறவிடப்படாதிருந்தன.

வீடமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் வீடுகளை நிர்மாணித்தல்

மாகாண வீடமைப்பு அதிகாரசபையின் வீடமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 2,937 மில்லியன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 6,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் வீடமைப்பு அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து மீளாய்வாண்டின் போது எந்தவொரு வீடும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

தளபாடம் மற்றும் உபகரணங்கள் பயன்படுத்தப்படாமை

கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் செயற்படாமல் பணியகத்தின் பயன்பாட்டிற்காக ரூபா 3.5 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடம் மற்றும் உபகரணங்கள் 01 ஆண்டு தொடக்கம் 03 ஆண்டுகள் வரையான காலவீச்சில் விளைவற்றிருந்தன.

கொரிய மொழி வகுப்புக்களிற்கான முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்படாமை

2008 ஆம் ஆண்டின் போது வேலையற்ற இளைஞர்களிற்காக கொரிய மொழி வகுப்புக்களை நடாத்துவதற்கு முதலமைச்சரின் முன்னாள் செயலாளரிற்கு ரூபா 2 மில்லியன் தொகை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் மேற்குறிப்பிடப்பட்ட வகுப்புக்கள் எதிர்பார்க்கப்பட்டவாறு நடாத்தப்பட்டிராததுடன் செலுத்தப்பட்ட முற்பணம் 2018 யூன் 30 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

குறைவாக பெறுமதியிடப்பட்ட ஆதனங்களிலிருந்து முத்திரைத் தீர்வைகளை சேகரித்தல்

கிழக்கு மாகாணத்திலுள்ள காணிப் பதிவகத்தின் காணிப் பதிவுகளிலிருந்து முத்திரைத் தீர்வையை அறவிடுவது தொடர்பாக மாகாண வருமானத் திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட நடமாடும் சேவையின் பிரகாரம், 93 காணி உரிமையாளர்கள் முத்திரைத் தீர்வையாக குறைந்த தொகை செலுத்துவதற்காக அவர்களின் காணிகளிற்கான பெறுமதியை குறைவாக வெளிப்படுத்தியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. ஆகையால், ரூபா 5.9 மில்லியன் கூட்டுத்தொகையான மேலதிக முத்திரைத் தீர்வை அக் குறைவாக பெறுமதியிடப்பட்ட ஆதனங்களிற்காக விதிக்கப்பட்டிருந்த போதிலும் மாகாண வருமானத் திணைக்களம் விதிக்கப்பட்ட காணி உரிமையாளர்களிடமிருந்து மேற்குறிப்பிட்ட மேலதிக முத்திரைத் தீர்வைகளை அறவிடுவதற்கு 2018 யூன் 30 வரையிலும் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

குத்தகை வருமான நிலுவைகள்

நீண்டகால குத்தகை மீது தனியார் கம்பனிகளால் பயன்படுத்தப்பட்ட அரசாங்க காணிகளிற்கான ரூபா 273 மில்லியன் கூட்டுமொத்தமான குத்தகை வருமானம் 1991 ஆம் ஆண்டிலிருந்து அத்தகைய வருமான நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நிலுவையாகவிருந்தது.